V211,31 N77
N78.2;2
122085

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
## ஆறுவது சட்டமன்றப் பேரவையின்
## முதல் கூட்டத் தொடர்

*77, சூலை, 12 முதல் 15 ஆம் நாள் வரை.*

(தொகுதி II எண்கள் 1 முதல் 4 வரை)

©
*தமிழ் நாடு அரசு*
*1978*

*சட்டமன்றப் பேரவைத் துறை*
புனிதர் ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

விலை ரூ. 1]

Y2ll,31 N77
N78-232
122080

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஆறுவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்

1977, ஜூலை 12 முதல் 15 ஆம் நாள் வரை

(தொகுதி II—எண்கள் 1 முதல் 4 வரை)

### உள்ளடக்கம்

**செவ்வாய்க்கிழமை, 1977 ஜூலை 12**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | I—VI |
| | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | VII |
| | தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப் படி) தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் — | IX—XVI |
| 1. | ஆய்வில் இருக்கும் உரிமைப் பிரச்சினை பற்றிய விவரத்தைப் பேரவைக்கு அறிவிப்பது குறித்து | 1—3 |
| 2. | கவன ஈர்ப்பு— | |
| | கோவையில் சில பஞ்சாலைகள் மூடப்பட்டது குறித்து .. .. | 1, 4—6 |
| 3. | ஒழுங்குப் பிரச்சினைகள் — | |
| | (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப்படாதது குறித்து .. .. | 7 |
| | (ஆ) நடவடிக்கை சுருக்க வெளியீட்டில், பேசிய உறுப்பினர் ஒருவரின் பெயர் விடப்பட்டிருப்பது குறித்து .. .. | 9—10 |
| 4. | தகவல் கோரல்— | |
| | மாயூரத்தில் நடைபெற்ற பேருந்து விபத்து பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து. | 7—8 |
| 5. | ஆளுநர் பேரவைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி .. .. | 10—31, 34—127 |
| 6. | முதலமைச்சர் அறிவிப்பு — | |
| | திரு. காமராஜ் அவர்களின் உருவப் படத்தை சட்டப்பேரவையில் வைப்பது குறித்து. | 31—34 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 128 |

பக்கங்கள்

## புதன்கிழமை 1977 ஜூலை 13


1. அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—

(அ) "மெயில்" நாளேட்டில் எழுதப்பட்டு உள்ள தலையங்கம் குறித்து .. .. 129—131

(ஆ) "முரசொலி" நாளேடு மீது எழுப்பப் பட்ட பிரச்சினை .. .. .. 131—134

(இ) "மாலை முரசு" நாளேடு மீது எழுப்பப் பட்ட பிரச்சினை .. .. 134—136

(ஈ) மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது கொண்டுவரப்பட்ட பிரச்சினை 136—140

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் —

(அ) தஞ்சை சரபோஜி கல்லூரி மூடப் பட்டது குறித்து .. .. .. 140—144

(ஆ) காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர்கள் உதவி பேராசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமையும், அவர்கள் எடுக்க இருக்கும் ஒட்டு மொத்த விடுப்பும், உள்ளிருப்புப் போராட்டமும் .. .. 144—149

(இ) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. எஸ். லட்சுமணனையும், வேறு சிலரையும் கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப் படுத்தியதும் அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து .. .. .. 151—158

3. அறிவிப்பு—

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. 149—150

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத் தின் மீதான விவாதம்—தொடர்ச்சி .. 158—249

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 249


## வியாழக்கிழமை 1977 ஜூலை 14


1. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் —

(அ) வடலூர் சேஷசாயி தொழிற்சங்கத்தில் நடந்த சம்பவத்தில் உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் கைது செய்யப்பட்டு, கை விலங்கு பூட்டப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து. 251—261




பக்கங்கள்

## வியாழக்கிழமை 1977, ஜூலை 14 தொடர்ச்சி


(ஆ) கேரள மாநிலம், கஜானூப்பாறை மற்றும் ராஜாக்காடு பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து .. . .. .. . 261—270

(இ) சென்னை புது வண்ணாரப்பேட்டையில் ஒருவர் போலீஸ் காவலில் இருந்த போது இறந்தது குறித்து .. . 270—280

2. கவன ஈர்ப்பு—

சென்னை நகரில் காலரா நோய் பரவி வருவது குறித்து .. .. .. 280—282

3. ஒழுங்குப் பிரச்சினை—

வினா நேரம் இல்லாதிருப்பது குறித்தும், பல வினாக்கள் திருப்பியனுப்பப்பட்டமை குறித்தும் 282—283

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு, 1977ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு .. .. 283

(ஆ) 1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு .. .. 283—284

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி 284—377

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 378


## வெள்ளிக்கிழமை 1977 ஜூலை 15


1. வினாக்கள்—விடைகள் 379—391

2. அறிவிப்பு—

உரிமைப் பிரச்சினைகள் சிலவற்றின் மீதான தீர்ப்புக்கள் ஒத்திவைக்கப்படுவது குறித்து 391—392

3. அரசினர் தீர்மானம் —

பேரவை விதி 41 (3) ஐத் தளர்த்தல் .. .. 392

4. கவன ஈர்ப்புகள் —

(அ) மூன்றாவது ஊதியக்குழு அமைப்பது குறித்து .. .. . 392—393

(ஆ) துண்டிக்கப்பட்ட இணைப்பை மீண்டும் பெறுவதற்கு வசூலிக்கும் கட்டணத்தை நீக்குவது குறித்து .. .. .. 394—395

௮. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— நகராட்சி, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் திட்டம், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்.

௯. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர் நலன், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலன், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடி மக்கள்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்கு வரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்கு வரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், கா[illegible]ட வளர்ப்பு, இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி உதவி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பொறியியல் சம்பந்தமான பகுதிகள், பால், பால்வள நிறுவனம், பால்வள முனைப்புத் திட்டங்கள்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU PRABHUDAS PATWARI

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption and Industries.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)—Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Mines and Minerals, Iron and Steel Control.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)—Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Minister in-charge of Food, Food Production, Co-operation and Fisheries.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Publicity*)—Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister in-charge of Education including Technical Education, Official Language, Approved Schools, Employment and Training.

8. The Hon. Thiru K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Village Industries, Rural Industries Project and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. The Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister in-charge of Transport, Nationalised Transports, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Vigilance Service, Indians Overseas and Refugees and Evacuees.

13. The Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing. Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn and Handloom.



தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

* திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

@ மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. கே, கே. முத்தையா

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்.

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

சார்புச் செயலாளர்கள்.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்.

திரு. பி. கே. இலக்குமிநாராயணன்

எஸ்டேட் அதிகாரி.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

---

*, 6—7—1977 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
@ 13—7—1977 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

பக்கங்கள்

## வெள்ளிக்கிழமை 1977, ஜூலை 15 தொடர்ச்சி


(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம், முட்டம், குளச்சல் வாய்க்கால்களில் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைக்காமை குறித்து — 395—397

(ஈ) மாயூரம் அருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன் போக்குவரத்துப்பேருந்தில் பயணம் செய்த பயணிகள் விபத்துக்குள்ளானது குறித்து — 397—402

(உ) அம்பத்தூர் டி. ஐ. டைமண்ட் செயின் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது குறித்து — 402—406

5. அரசினர் சட்ட முன்வடிவு—

தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீடிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு — 406—407

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம் — தொடர்ச்சி — 407—498

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் — 498




## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணை (INDEX)

### பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கிய தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்து பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கிய தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்த பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும் 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)', ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்து பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப் படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் அனைத்தும் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர், மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. | : | அறிக்கை |
| அறிவி. | : | அறிவிப்பு |
| அ. வி. | : | அரைமணி விவாதம் |
| கு. வி. | : | குறுகிய கால விவாதம் |

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.) |
| 2 | அப்துல் ரஜாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. .. | பெண்ணாகரம். |
| 5 | அமீர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.) |
| 8 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 10 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி, |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) .. | கோயம்புத்தூர் (மேற்கு) |
| 12 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | அர்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. க. .. | புரசவாக்கம். |
| 16 | அன்பழகன், திரு தி. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. இல. .. .. | திருநாவலூர். |
| 22 | ஆறுமுகம், திரு. மு. .. .. | சேலம்-2. |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |

| | | |
|---|---|---|
| பொ· வி· | : | பொது விவாதம் |
| ஆ· உ· | : | ஆளுநர் உரை |
| உ· பி· | : | உரிமை பிரச்சினை |
| ஒ· பி· | : | ஒழுங்குப் பிரச்சினை |
| க· ஈ· | : | கவன ஈர்ப்புகள் |
| க· ஈ· அ· | : | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச· அ· நி· | : | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச· ஆ· நி· | : | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை — இந்நிலையில், |

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்,

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்

(4) ஆய்வு / கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்,

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம், முதலியன·

| | | |
|---|---|---|
| ச· பிரி· ஆ· | : | சட்ட முன்வடிவு — பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச· பே· | : | சட்டமன்றப் பேரவை |
| ச· மே· | : | சட்டமன்ற மேலவை |
| த· கோ· | : | தகவல் கோரல் |
| த· வி· | : | தன்னிலை விளக்கம் |
| தீ· | : | தீர்மானம் |
| உ· தீ· | : | உரிமைத் தீர்மானம் |
| ஒ· தீ· | : | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த· தீ· | : | தனித் தீர்மானம் |
| து· மா· கோ· | : | துணை மானியக் கோரிக்கை |
| மி· மா· கோ· | : | மிகைச் செலவிற்கான **மானியக்** கோரிக்கை |
| பே· அ· | : | பேரவையின் அலுவல் |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள் பயண அனுமதிச் சீட்டுகள், மது விலக்கு, சுகாதாரம், மருத்துவம், அறக் கட்டளைகள், லஞ்ச ஒழிப்பு, தொழில்கள்.

2. மாண்புமிகு திரு. சி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் தீர்வை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்கு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்— அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், கம்பெனிகளைப் பதிவு செய்தல்.

5. மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீனளம்.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—செய்தி, விளம்பரம், படச் சுருள் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 28 இராமசாமி, திரு. க.ந.க. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.) |
| 31 இராமசாமி, திரு. டி. | இராமநாதபுரம். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 இராமச்சந்திரன், திரு. என். | செஞ்சி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என். | ஹோசூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. | தல்லி. |
| 39 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 41 உக்கிரபாண்டியன், திரு க. | பரமக்குடி (செ.வ.) |
| 42 உச்சி, திரு. கே. | கூடலூர். |
| 43 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 44 உமாநாத், திரு. ரா. | நாகப்பட்டினம். |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) | திருநெல்வேலி. |
| 47 எத்ராஜ், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. | பள்ளிப்பேட். |
| 49 ஐசரி வேலன், திரு. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. | எடப்பாடி. |
| 51 கணேசன், திரு. எஸ். | பூம்புகார். |
| 52 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 53 கந்தசாமி, திரு. கே. | ஆண்டிப்பட்டி. |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு. |
| 55 கபாலி, திரு. டி. கே. | மயிலாப்பூர் |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. | அண்ணாநகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை. | சிதம்பரம். |
| 63 காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 68 கிட்டு, திரு. ப. கோ. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். | பாலக்கோடு |
| 70 கிருஷ்ணன், திரு. செ. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 72 கிருஷ்ணன், திரு. பி. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 74 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு.ப. | ஆண்டிபூர் (செ. வ.) |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி. | முசிறி. |
| 79 கோபாலன், திரு. போ. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 81 கோவிந்தன், புலவர் கா. .. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு |
| 84 சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 85 சண்முகம். திரு. ப. உ. .. | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 87 சண்முகம், திரு. ச. .. | கூத்தகுடி, திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. .. .. | பெரணமல்லூர். |
| 91 சந்திரன், ஜெயபால் திரு, இரா. எ. .. | தியாகராயநகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) .. | திருமங்கலம். |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபநாசம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.). |
| 98 சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.). |
| 102 சின்னசாமி, திரு. வி. கொ. | பவானிசாகர். |
| 103 சின்னய்யா, திரு. வீ. .. | குளத்தூர் (செ. வ.). |
| 104 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 105 சீனிவாசரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 108 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 110 சுப்பராயன், திரு. என். .. | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 114 சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |
| 115 சுப்பிரமணியம், திரு. ஆர். சி. | கடலாடி. |
| 116 சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ. மு. .. | மானாமதுரை (செ. வ.). |
| 118 சுப்பிரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ. வ.). |
| 119 சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, திருமதி .. | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. .. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.). |
| 122 சுவாமிதாஸ், திரு. எ. .. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ. வ.). |
| 126 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர் (செ. வ.). |
| 128 செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ. வ.). |
| 130 சோமசுந்தரம், திரு. ஓ. ப. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்) | கிருஷ்ணராயபுரம் (செ. வ.). |
| 132 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 134 சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு. |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேல், திரு. ர. ச. .. | வால்பாறை (செ. வ.). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 138 தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 திருநாவுக்கரசு, .. மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்) | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கராபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.). |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி.எம். . | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தி.சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு.க. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராம், திரு. சே. | பெரியகுளம். |
| 161 பரமசிவன், திரு. அ. மா. .. | மேலூர். |
| 162 பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ. வ.). |
| 163 பழனிச்சாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிச்சாமி, திரு. சொ. ந. | அவினாசி (செ. வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 பாண்டியன், திரு. .. .. | சேரன்மாதேவி. |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |
| 171 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ. வ.). |
| 172 பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 173 பாலுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 புஸ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ. வ.) |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 178 பெரியசாமி, திரு. டி. பி. மு. | மதுரை மேற்கு. |
| 179 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ. வ.) |
| 180 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 181 பொன்னுசாமி, டாக்டர், ஏ. | பெருந்துறை. |
| 182 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம். |
| 183 பொன்னையன், .. மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) | திருச்செங்கோடு. |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 மணிமுடி, திரு. எஸ், .. | எழும்பூர், சென்னை (செ.வ.) |
| 187 மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 மனோகரன், .. மாண்புமிகு திரு. கி, (அமைச்சர்) | பாளையங்கோட்டை. |
| 189 மாணிக்கம், திரு, சி. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |
| 191 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. | பட்டுக்கோட்டை. |
| 192 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. | வேதாரண்யம். |
| 193 முத்துசாமி, திரு. பா. க. சி. | தர்மபுரி. |
| 194 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 195 முத்துசாமி கரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 196 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 197 முருகேசன், திரு. கூ. ச. | திருவரம்பூர். |
| 198 முனிசாமி, திரு. பொ. | வந்தவாசி (செ.வ.) |
| 199 முனிரத்தினம், திரு. எஸ். | கும்மிடிபூண்டி. |
| 200 முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) | தாம்பரம், சென்னை. |
| 201 மூக்கையா தேவர், திரு. பி.கே. | உசிலம்பட்டி. |
| 202 யூசப், திரு. யா. சை.மு. | ராதாபுரம். |
| 203 ரகுமான்கான், திரு. ஏ. | சேப்பாக்கம், சென்னை. |
| 204 ரகுராமன், திரு. வி. | புவனகிரி. |
| 205 ரகோத்துமன், திரு. கோ. | முகையூர். |
| 206 ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 207 ரசாக், திரு. எம். எம். ஏ. | கடையநல்லூர். |
| 208 ராமசாமி, திரு. கோ. | சிவகாசி. |
| 209 ராமசாமி, திரு. து. | வெள்ளக்கோயில். |
| 210 ராமதாஸ், திரு. பி. | போடிநாயக்கனூர். |
| 211 ராமநாதன், திரு. சி. | விருத்தாசலம். |
| 212 ராமலிங்கம், திரு. இ. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.) |
| 213 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 214 ராஜு, திரு. செ. மெ. | தலைவாசல் (செ. வ.) |
| 215 ராஜு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ. வ.) |
| 216 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 217 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 218 வடிவேலு, திரு. கே. | கரூர். |
| 219 வரதராஜன், திரு. என், | திண்டுக்கல். |
| 220 வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 221 வாசன், திரு. சீ. மு. | வேடசந்தூர். |
| 222 வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 223 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 224 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 225 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 226 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர். |
| 227 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 228 வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஒட்டபிடாரம் (செ. வ.) |
| 229 ஜகதீசன், திரு. ஆனூர் | செங்கல்பட்டு. |
| 230 ஜான் வின்செண்ட், திரு. மு, | நாங்குனேரி. |
| 231 ஜெபமணி திரு. ர. | சாத்தான்குளம். |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஜெயவேலு, திரு. எம். ஏ. | காட்பாடி. |
| 234 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 235 நியமன உறுப்பினர். | வெற்றிடம். |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.

3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

5 திரு. வி. பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளுக்கு அகரவரிசைத் தொகுப்பு
# அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
## ஆறாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்

19 7 ஜூலை, 12 முதல் 15 ஆம் நாள் வரை
(தொகுதி II எண்கள் 1 முதல் 4 வரை)


பக்கங்கள்

அ

அப்புனு கவுண்டர் திரு. கா.
ஆளுநர் உரை (தீ) .. .. .. 78—81

அம்பிகாபதி திரு. மு.
ஆளுநர் உரை (தீ) .. .. .. 169
காமராஜ் உருவப்படம், பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி.) .. .. .. 32
கைதி காவலிலிருந்தபோது சாவு, புதுவண்ணாரப் பேட்டை 275—276
தஞ்சை சரபோஜி கல்லூரி மூடப்பட்டிருத்தல் (ஒ. தீ.) .. .. .. 140—141
பேருந்து விபத்து, மாயூரம் அருகில் சேந்தாங்குடி, (க.ஈ) .. .. 401-402

அரங்கநாதன் திரு. மு.
ஆளுநர் உரை (தீ) .. .. .. 170

அரங்கநாயகம் திரு. செ.
ஆளுநர் உரை (தீ) .. .. .. 183
காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள், போராட்ட நடவடிக்கை (எ. தீ.) .. 148..149
தஞ்சை சரபோஜி கல்லூரி மூடப்பட்டிருத்தல் (ஒ.தீ.) 142—144

அழகர்சாமி திரு. சோ.
ஆளுநர் உரை (தீ) .. .. .. 336—344

அன்பழகன், திரு. க
ஆளுநர் உரை (தீ) .. .. .. 196, 197, 201, 363, 412-413, 427
படி அரிசித் திட்டம், அரசின் கொள்கை (ஒ. பி.) 44—45

பக்கங்கள்

ஆ

ஆதிசாமி, திரு இரா.

தண்ணீர் தட்டுப்பாடு, கன்னியாகுமரி மாவட்ட நிலங்கள் பாதிப்பு (க·ஈ·) .. .. 396-397

இ

இராகவானந்தம், திரு: எஸ்·

அம்பத்தூர் டி· ஐ· டைமண்ட் செயின் தொழிலாளர், உண்ணாவிரதம் (க·ஈ·அ·) .. 403-406

பஞ்சாலைகள் (கோவை) மூடப்பட்டிருத்தல் (க·ஈ·அ·) .. 4—6

இராதா திரு· எஸ்· ஆர்.

''முரசொலி'' நாளேடு மீது (உ· பி·) .. .. 132-133

இராமச்சந்திரன், திரு எம். ஜி.

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 179-180 467-497

''காமராஜ்'' உருவப்படம்· பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி·) .. .. .. 31—32

காலரா, சென்னையில் பரவுதல் (க.ஈ·அ·) .. 281-282

கேரளம் வாழ் தமிழர்கள், தாக்குதல் (ஒ·தீ·) 268-270

கைதி காவலிலிருந்த போது சாவு, புதுவண்ணாரப் பேட்டை (ஒ·தீ·) .. .. .. .. 277-280

கோவிந்தராசன் எம்· எல்· ஏ·, கைது· (ஒ.தீ.) .. 256-260

பஞ்சாலைகள் (கோவை) மூடப்பட்டிருத்தல் (க·ஈ·அ·) .. .. .. .. .. 6

படி அரிசித் திட்டம், அரசின் கொள்கை (ஒ·பி·) 38, 39 40,41

பேருந்துகள், நாட்டுடைமையாக்கல் (த.கோ·) .. 8

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு· டி· எஸ், லட்சுமணன் மற்றும் சிலருக்கெதிரான வழக்கு கூடும் பதாட்ட நிலையும் (ஒ·தீ·) .. .. 154-157

இராமச்சந்திரன் திரு· ச.

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 184 230-231

தண்ணீர் தட்டுப்பாடு கன்னியாகுமரி மாவட்ட நிலங்கள் பாதிப்பு (க·ஈ·அ·) .. .. 396-397

மின்சாரம், தண்டக் கட்டண விகிதம் (க·ஈ·அ·) .. 394,395



பக்கங்கள்

இ—தொடர்ச்சி

இராமசாமி திரு· எஸ். வி·

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 318 333

இராமசாமி திரு· டி·

காமராஜ் உருவப்படம், பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி.) .. .. .. .. 32

இளங்கோவன் திரு· கோ.

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 46—53

உ

உத்திராபதி திரு· பொ·

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 59-62

உமாநாத் திரு. ரா.

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 200—207 208,497

காமராஜ் உருவப்படம், பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி·) .. .. .. .. 33

கோவிந்தராசன், எம்· எல். ஏ., கைது (ஒ·தீ·) .. 252-255 259—260

டி.வி,எஸ். குருப் கம்பெனிகள், கதவடைப்பு .. 379-381

படி அரிசித் திட்டம், அரசின் கொள்கை (ஒ.பி·) 44

பேருந்துகள், நாட்டுடைமையாக்கல் (த·கோ·) .. 8

''மாலை முரசு'' மீது (உ·பி·) .. .. .. 134-136

உரிமைப் பிரச்னை

உள்ளாட்சித் துறை அமைச்சரின் மதுரை செய்தி 136-140

''மாலைமுரசு'' மீது .. .. .. .. 134-136

''முரசொலி'' நாளேடு மீது. .. .. .. 131—134

''மெயில்'' நாளிதழ் மீது .. .. .. .. 129—131

உருவப்படம்

காமராஜ்—சட்ட மன்றத்தில் வைத்தல் (அறிவி·) 31—34

எ

எட்மண்ட் திரு· க· உரொ·

உள்ளாட்சித் துறை அமைச்சரின் மதுரை செய்தி (உ.பி·) .. .. 137-138

பக்கங்கள்

ஏ

**ஏகாம்பர ரெட்டி திரு.**
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 243–246


ஐ

**ஐசரி வேலன் திரு.**
ஆளுநர் உரை (தீ) .. .. 312–318


ஒ

ஒழுங்குப் பிரச்சினைகள்—
நடவடிக்கை சுருக்க வெளியீடு, பிழைகள் .. 9
படி அரிசித் திட்டம், அரசின் கொள்கை (ஒ.பி.) 37–46
மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப் பெறுதது 7
வினாக்கள் அனுமதி மறுப்பு .. .. .. 282-283


க

**கந்தசாமி திரு. கே.**
காமராஜ் உருவப்படம் பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி.) .. .. 33–34
**கபாலி, திரு. டி. கே.**
ஆளுநர் உரை (தீ) .. .. 366-371
**கருணாநிதி திரு. மு.**
ஆளுநர் உரை (தீ) 167, 172, 176, 180, 217, 352, 357, 428-445, 446-463, 464-467, 474
உரிமைப் பிரச்சினை, எடுத்துக்கொள்ளப்பெறாதது (நா. ...) 7
காமராஜ் உருவப் படம், பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி.) .. .. 33
படி அரிசித் திட்டம், அரசின் கொள்கை (ஒ. பி.) .. .. 41–42, 43




பக்கங்கள்

க—தொ.

**கருணாநிதி திரு. தாழை மு.**
ஆளுநர் உரை (தீ) .. .. 117–119
**கருப்பசாமி பாண்டியன் திரு. வி.**
ஆளுநர் உரை (தீ) .. .. 419–422
**கவன ஈர்ப்புகள்—**
அம்பத்தூர் ஆர். டி. ஐ. டைமண்ட் செயின் தொழிலாளர் உண்ணாவிரதம் .. 402–406
காலரா, சென்னையில் பரவுதல் .. 280–282
தண்ணீர் தட்டுப்பாடு, கன்னியாகுமரி மாவட்ட நிலங்கள் பாதிப்பு .. .. 396–397
பஞ்சாலைகள் (கோவை) மூடப்பட்டிருத்தல் .. 4–6
பேருந்து விபத்து, மாயூரம் அருகில் சேந்தங்குடி .. 397–402
மின்சாரம், தண்டக் கட்டண விதிப்பு .. 394–395
மூன்றாவது ஊதியக் குழு, அமைக்காதது .. 392–393
காத்தமுத்து திரு. கி. பெ.
ஆளுநர் உரை (தீ) .. .. 217–220
**காமராஜ் திரு. கு. (முன்னாள் முதல்வர்)**
உருவப்படம் பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி) 31–34
**காளிமுத்து திரு. கா.**
ஆளுநர் உரை (தீ) .. .. 173
ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1977 .. .. 407
கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1977 .. .. .. .. 283–284
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு; 1977 .. 283

பக்கங்கள்

க—தொ.


**கிட்டப்பா திரு. என்—**

- ஆளுநர் உரை (தீ) .. .. 179
- ஓ. தீ. (மாயூரம் பேருந்து விபத்து குறித்து (த. கோ.) 7, 8
- பேருந்து விபத்து, மாயூரம் அருகில் சேந்தங்குடி (க. ஈ.) .. .. .. 397–402
- வினுக்கள், அனுமதி மறுப்பு (ஓ. பி.)

**கிட்டு, திரு. ப. கோ—**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 371–374

**குழுக்கள்—**

- ஊதியக்குழு (மூன்றுவது) அமைக்காதது (க. ஈ.) 392–393

**கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் திரு. பி.**

- ஆளுநர் உரை (தீ) .. .. 407–412, .. .. 416–419

**கோதண்டராமன் திரு. வி. கே.—**

- கோவிந்தராசன், எம். எல் ஏ., கைது, (ஓ. தீ.) .. ஏ. .. .. 251–252, .. .. .. .. 260

**கோபாலன் திரு. போ.—**

- ஆளுநர் உரை, (தீ) .. .. .. 34–37, 46

**கோவிந்தராசன் திரு. சி.**

- ஆளுநர் உரை, (தீ) .. .. .. 53–59
- கைதி காவலிலிருந்தபோது சாவு, புதுவண்ணாரப்பேட்டை (ஓ. தீ.) .. .. 271-272

**கோவிந்தன் புலவர் கா.**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 165-166, 168, 170, 171, 172, 173, 174, 175, 178, 179-180, 185, 180, 491-492




பக்கங்கள்


**சங்கரய்யா திரு. என்.**

- ஆளுநர் உரை (தீ) .. .. . 294-303

**சட்ட முன்வடிவுகள்—**

- ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (ச. அ. நி.) 1977 .. .. 40
- கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன் வடிவு, 1977 : (ச. அ. நி.) .. .. 283-284
- நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்டமுன் வடிவு; 1977 : (ச. அ. நி.) 283

**சண்முகம் திரு. கூத்தகுடி ச.**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 177
- படி அரிசித் திட்டம், அரசின் கொள்கை (ஓ. பி.) .. 45–46

**சண்முகம் திரு. ப. உ.**

- ஆளுநர் உரை (தீ) .. .. . 11–24

**சமரசம் டாக்டர், சே.**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 167, 171, 175, 215, 216

**சவுந்திரராஜன் திரு. ரெ. வீ.**

- ஆளுநர் உரை (தீ) .. .. 374-376

**சாதிக்பாட்சா திரு. எஸ். ஜே.**

- ஆளுநர் உரை (தீ) .. . .. 497
- மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப்பெறுதது (ஓ. பி.) . . 7

**சிகாமணி திரு. பொ.**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 422-424

**சின்னய்யா திரு. வீ.**

- ஆளுநர் உரை (தீ) .. .. . 246-249

**சின்னராசு திரு. க. இரா.**

- ஆளுநர் உரை (தீ) .. . .. 96-100

**சுந்தரராஜ் திரு. நா.**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 26–31

பக்கங்கள்

ச—தொ.

**சுப்பிரமணியம் திரு. ஓ.**

நடவடிக்கைச் சுருக்க வெளியீடு, பிழைகள் (ஒ.பி.) 9

**சுப்பிரமணியம் திரு. டி.**

ஆளுநர் உரை (தி) .. .. .. 377

**சுப்பிரவேலு திரு. கே.**

ஆளுநர் உரை (தி) .. .. .. 208-215, 216

**சுப்பு திரு. க.**

அம்பத்தூர் டி. ஐ. டைமண்ட் செயின் தொழிலாளர், உண்ணாவிரதம் (க. ஈ.) .. 402,404, 405

ஆளுநர் உரை (தீ) .. .. .. 414,415

உரிமைப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப் பெறாதது (கு. கோ.) .. .. .. 1,3

உள்ளாட்சித் துறை அமைச்சரின் மதுரை செய்தி (உ. பி.) .. .. .. 137,138, 139-140

கேரளம் வாழ் தமிழர்கள், தாக்குதல் (ஒ. தி.) .. 261

கைதி காவலிலிருந்தபோது சாவு, புதுவண்ணாரப்பேட்டை (ஒ. தி.) .. .. 273-274

டி.வி.எஸ். குருப் கம்பெனிகள், கதவடைப்பு .. 379,382, 383,385, 386

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. எஸ். லட்சுமணன் மற்றும் சிலருக்கெதிரான வழக்குகளும், பதட்டநிலையும் (ஒ.தி.) 151-154

மூன்றாவது ஊதியக் குழு, அமைக்காதது (க.ஈ.) 392

**செங்கோட்டையன் திரு. கு. அ.—**

ஆளுநர் உரை (தீ) .. .. .. 25-26

**செல்வராஜ் திரு. மு.—**

ஆளுநர் உரை (தீ) .. .. .. 309-312

பக்கங்கள்

ச—தொ.

**சேதுராம் திரு. சே. பண்ணை—**

ஆளுநர் உரை (தீ) .. .. .. 182-217 329-332

**சௌந்தரராசன் திரு. கே.—**

ஆளுநர் உரை (தீ) .. .. .. 232-236

த

தகவல் கோரல்—

உரிமைப் பிரச்சினை, எடுத்துக்கொள்ளப் பெறாதது .. 1-3

ஒ. தீ. (மாயூரம் பேருந்து விபத்து குறித்து), எடுத்துக்கொள்ளப்பெறாதது .. .. .. 7-8

பேருந்துகள், நாட்டுடைமையாக்கல் .. .. 8

தலைவர்—

அறிவிப்புகள்—

உரிமைப் பிரச்சினை, தீர்ப்புகள் குறித்து .. 391-392

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. 149

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

உரிமைப் பிரச்சினை—

உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவரும் உறுப்பினர், பிரச்சினையின் அடிப்படைக்குப் போகாமல், அது எப்படி அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும் .. 130

உரிமைப் பிரச்சினையொன்று ஆய்வில் இருக்கிறது என பேரவைத் தலைவர் அறிவித்ததும், அதைப் பற்றிய விவரங்களை உடனடியாக அறிவிக்குமாறு தலைவரை வற்புறுத்தல் சரியல்ல .. .. 1-3

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது—

சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அரசின் கொள்கை முடிவுகளை முதலில் பேரவைக்கு அறிவிக்காமல், வெளியில் பத்திரிகைகளுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிவித்துள்ளது ஓர் உரிமை மீறல் செயலாகும் என ஓர் உறுப்பினர் 1977, ஜூலை 13ஆம் தேதி ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.

தலைவர் தமது தீர்ப்பை பிறகு வழங்குவதாகக் குறிப்பிட்டார். .. .. .. .. 136-140

தலைவர்—தொ.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

மாலைமுரசு நாளேடு மீது—

அவை நிகழ்ச்சிகளில் ஓரிரு கட்சி உறுப்பினர்கள் பேசுவதை மட்டும், மாலைமுரசு நாளேடு வெளியிடுவதோடு, மற்ற கட்சியினர்கள் பேசுகின்ற பேச்சு முழுமையாக விடப்பெற்று வருகிறது என்றும், இதுபோன்ற இருட்டடிப்பு அவை நிகழ்ச்சிகளை திரித்துக் கூறுவதாகவே கருதப் பெறும் எனப் பாராளுமன்றத் தீர்ப்பு இருப்பதனுல், இது ஓர் உரிமை மீறல் செயலாகும் என ஓர் உறுப்பினர், 1977 ஜூலை 13-ஆம் தேதி ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினர்.

தலைவர் தமது தீர்ப்பை பிறகு வழங்குவதாகக் குறிப்பிட்டார். .. .. .. 134-13

முரசொலி நாளேடு மீது—

முதல்வர் 9-7-77 அன்று பேசிய பேச்சின் ஒருபகுதி வேண்டுமென்றே, 11-7-77 இல் வெளிவந்துள்ள முரசொலி நாளேட்டில் விடப்பெற்றுள்ளதாகவும், இதுபோன்று அவை நடவடிக்கைகளை முழுமையாக வெளியிடாமல் ஒரு கட்சி சார்பாக வெளியிடுவது ஓர் உரிமை மீறல் செயலாகும் என ஓர் உறுப்பினர் 1977, ஜூலை 13-ல் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்.

தலைவர் தமது தீர்ப்பை பிறகு வழங்குவதாகக் குறிப்பிட்டார் .. .. .. .. 131-134

'மெயில்' நாளேட்டில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் குறித்து—

சிறுபான்மை சமுதாயத்தின் சார்பாக தாம் வந்திருப்பதாக அவையில் கூறியது குறித்து எல்லோருடைய வாக்குகளையும் பெற்று வந்திருக்கிற தாம் ஒரு சமுதாயத்திற்காகவே அவையில் செயல்படுவது போல, மக்கள் தவருகப் புரிந்து கொள்ளும் வகையில், 'மெயில்' நாளேடு 7-7-77 தலையங்கத்தில் எழுதியுள்ளது ஓர் உரிமை மீறல் செயலாகும் என ஓர் உறுப்பினர் 1977, ஜூலை 13-ல் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்.

தலைவர் தமது தீர்ப்பை பிறகு வழங்குவதாகக் குறிப்பிட்டார் .. .. .. .. 129-13



தலைவர்—(தொ)

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—(தொ)

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

ஆசிரியர்கள்—

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் தராததால் அவர்கள் போராட்டம் நடத்த அறிவித்துள்ளது குறித்து: ..

கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. .. .. .. 144-149

கல்விக்கூடங்கள்—

தஞ்சை சரபோஜி கல்லூரி, மூடப்பெற்று மாணவர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து: ..

கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. .. .. .. 140-144

காவல்துறை சட்டம் ஒழுங்கு—

கேரள மாநிலம் கஜானுப்பாறை மற்றும் ராஜாக்காடு பகுதிகளில் வாழும் தமிழர்கள் தாக்கப்பெற்று, அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் அபாயம் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு சூழ்நிலை குறித்து:

முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. .. .. .. 261-270

சென்னை புது வண்ணாரப்பேட்டையில் ஒருவர் போலீஸ் காவலில் இருந்தபோது இறந்தது குறித்து.

முதலமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. .. .. 270-280

நாடாளுமன்ற முன்னுள் உறுப்பினர் திரு. டி. எஸ். லட்சுமணனையும், வேறு சிலரையும் கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்படுத்தியுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. .. .. .. 151-158

வடலூர் சேஷசாயி தொழிற் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் கைது செய்யப்பெற்று, கைவிலங்கு பூட்டி அழைத்துச் சென்றதாகக் கூறப்படுவது குறித்து.

தலைவர்—(தொ)

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—(தொ)

ஒ. தி. காவல் துறை சட்டம் ஒழுங்கு—(தொ)

முதலமைச்சர் தம் விளக்கத்தில், மீண்டும் இப் பொருள் குறித்து விசாரணை செய்ய உத்தரவிடப் பெற்றுள்ளது என அறிவித்த பிறகு, இசைவு மறுக்கப்பெற்றது .. .. .. .. 251-261

ஒழுங்குப் பிரச்சினைகள்—

அவையின் நடைமுறை விதிகள் மீறப்படுகிறபோது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். .. .. 38, 216

தேர்தல் கால அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள், வானொலி உரைகள் மீது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பக் கூடாது அவையின் விதிகள் மீறப்பட்டிருந்தால், அதைச் சுட்டிக்காட்ட மட்டுமே ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டும் .. 45

நடவடிக்கை சுருக்க வெளியீட்டில் ஓர் உறுப்பினர் பெயர் விடப்பட்டது குறித்து:

அவையில் உரையாற்றிய ஓர் உறுப்பினரின் பெயர் நடவடிக்கை சுருக்க வெளியீட்டில் விடப்பட்டிருப்பதுபற்றி பேரவைத் தலைவர் கவனத்திற்கு மற்றோர் உறுப்பினர் கொண்டு வந்தபோது, பேரவைத் தலைவர், தவறை திருத்திக்கொள்ளச் சொல்வதாக அறிவித்தார். .. .. 9

மாற்றுத் தலைவர் பட்டியல் அறிவிக்கப்படாதது குறித்து; சட்டமன்றக் கூட்டத் தொடர் துவக்கப் பெற்றுப்பல நாட்களாகியும் மாற்றுத் தலைவர் பட்டியல் அறிவிக்கப்படாதது குறித்து ஓர் உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் "அது பரிசீலனையில் இருக்கிறது விரைவில் அறிவிக்கப்பெறும்" எனஅறிவித்தார் .. .. .. ..

விவாதம்—

பாடுதல் முறைதானா என்பது குறித்து.

ஓர் உறுப்பினர் தம் உரையைத் துவங்கும் முன், ஓர் பாடலைப் பாடியது குறித்து, 1975, ஜூலை 15-ம் நாள், ஓர் உறுப்பினர் அவையிலே பேசுவதற்கு உரிமை உண்டே தவிர, பாடுவதற்கு உரிமை உண்டா என்கிற ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.



தலைவர்—(தொ)

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—(தொ.)

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

கடந்த கால நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும்; பேசுவதுபோல் இதற்கு முன்பும் பாடியிருக்கிறார்கள் எனத் தலைவர் குறிப்பிட்டார். .. 407

உறுப்பினர் இருக்கை—

பேசும்போது உறுப்பினர் தமக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் இருக்க வேண்டும். .. .. 169

வினாக்கள் விடைகள்—

தமது கேள்விகள் பல அனுமதிக்கப் பெறாமல் திருப்பி அனுப்பப் பெற்றுள்ளன என ஓர் உறுப்பினர் 1977, ஜூலை 14–ஆம் தேதி அன்று ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.

கேள்விகளில் எதை அனுமதிக்க வேண்டும், எதை அனுமதிக்கக் கூடாது என்பது பேரவைத் தலைவரின் விருப்பம். காரணம் காட்டித்தான் மறுக்கப் பெற்று பதில் வந்திருக்கும்; அதை அவையில் சொல்லக் கூடாது. அது ஒழுங்குப் பிரச்சினையும் ஆகாது எனத் தலைவர் குறிப்பிட்டார். .. .. .. .. .. 238

கவன ஈர்ப்புகள்—

அமைச்சரின் அறிக்கைக்குப் பின், ஒன்றிரண்டு கேள்விகளைத் தவிர நீண்ட பேச்சுக்கு இடமில்லை. 5

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் கவன ஈர்ப்புக் கொடுத்த உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் கேள்வி கேட்க அனுமதிக்கப்பெற மாட்டார்கள். 6

தகவல் கோரல்—

அவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின்மேல் சந்தேகமிருந்தால் தான் தகவல் கோரலாம். 7-8

தலைவரின் அறையில் தள்ளப் பெற்ற ஒரு பொருள் குறித்து, அவையில் தகவல் கோரக் கூடாது. .. 8

முன்னறிவிப்பின்றி தகவல் கோரினால், அமைச்சர் அதற்குப் பதிலளிக்கத் தயாராக இருக்க இயலாது. 7-8

தலைவர்—(தொ)

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— (தொ)

விவாதம்—

நேரம் ஒதுக்குதல்—

எதிர்க் கட்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென ஓர் உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு:

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படியே ஒவ்வொரு கட்சிக்கும் நேரம் ஒதுக்கப் பெறுவதாக தலைவர் தெரிவித்தார். 309

பேசுவதில் கடைப்பிடிக்க வேண்டிய முறை—

உறுப்பினர்கள் தலைவர் மூலமாகவே தம் கருத்தை வெளியிடல் வேண்டும் .. .. 34

தலைவரின் அனுமதியில்லாமல் பேசக் கூடாது.. 9

மன்ற நடவடிக்கை, முறையாக, ஒழுங்காக, அமைதியாக நடைபெற உறுப்பினர்கள் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும். .. .. 415

முறையாக பாராளுமன்ற முறைப்படி பேசுவதால் மற்ற மரபும், பண்பாடும், காப்பாற்றப்படும். அடிக்கடி நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியத்தை தவிர்த்து ஒழுங்காகவும், பாராளுமன்ற முறைப்படியும் உறுப்பினர்கள் பேசவேண்டும். .. .. .. .. 428

மரபுகள்—

அவை முன்னுள்ள பிரச்சினையைப் பற்றி மட்டுமே உறுப்பினர் பேச வேண்டுமேயன்றி, பேரவைத் தலைவர் அக்கறையற்ற முறையிலே இருப்பதாக குற்றஞ்சாட்டி பேசுதல் தவிர்க்கப்பட வேண்டும். 273

உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பெற்ற இருக்கையில் இருந்து பேசுதல் வேண்டும்.

ஒரே சமயத்தில் பல உறுப்பினர்கள் பேசுவதும், தலைவர் அனுமதியின்றி தாங்களாகவே பேசிக் கொண்டிருப்பதும் மரபுகளுக்கு முரணானது. .. 175

சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த அவையில், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றி, நாடாளுமன்றத்தில் உள்ள கட்சியைப் பற்றிப் பேசுதல் மரபு அல்ல. (ஓர் உறுப்பினர் நாடாளுமன்ற கட்சியைப் பற்றிப் பேசியது நீக்கப் பெற்றது). .. 29









தலைவர்— (தொ)

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொ.

விவாதம்—(தொ.)

பேரவைத் தலைவர் மீது உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல—

பேரவைத் தலைவர் ஒருதலைபட்சமாக நடந்து கொள்கிறார் என்பதுபோன்று அவரை இன்னொருவேட் (உள்நோக்கம் கற்பித்து) செய்து பேசுவது சரியல்ல. .. .. .. .. .. 10

மேற்கோள்கள்—

பத்திரிகையில் செய்தியை மேற்கோள் காட்டுமுன், தலைவரிடம் அதைக் காண்பித்து, முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். .. .. .. 93

வாயில் வந்ததை எல்லாம் பேசுவது சரியல்ல; சட்டமன்ற விதிகளுக்குட்பட்டுப் பேச வேண்டும். .. 138

வினாக்கள் விடைகள்—

துணை வினா

வினாக்கள், சுருக்கமாக இருக்க வேண்டும். . 389

முழு விவரங்கள் அளித்தல்:

ஒரு கேள்விக்கு பதில் அளிக்க வரும்போது, அமைச்சர்கள் அக் கேள்வியை ஒட்டிய எல்லா விவரங்களையும் சேகரித்து துணை வினாக்களுக்கு பதில் அளிக்கக்கூடிய வகையில் தயாராகவே வர வேண்டும் என பேரவைத் தலைவர் குறிப்பிட்டார். 387

தீர்மானங்கள்

ஆளுநர் உரை நன்றி தெரிவித்தல் 11-127, 158-249, 284-377, 407-498

ஒத்திவைப்புத் தீர்மானம்

ஆசிரியர்கள்

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள் போராட்ட நடவடிக்கை 144-6[illegible]

த.தொ. பக்கங்கள்

திர்மானங்கள்— தொ.

கல்லூரிகள்:

தஞ்சை சரபோஜிகல்லூரி முடப்பட்டிருத்தல் 140-144

காவல் சட்டம்-ஒழுங்கு

முன்னாள் நாடாளுமன்ற உறப்பினர் திரு.டி.எஸ்,லட்சுமணன் மற்றும் சிலருக்கெதிரான வழக்குகளும் பதட்டநிலையும் 151–157

கேரளம் வாழ் தமிழர்கள், தாக்குதல் 261-270

கைதி காவலிலிருந்தபோது சாவு, புதுவண்ணரப் பேட்டை 270-280

கோவிந்தராசன், எம்.எல்.ஏ., கைது 251 261

விதி 41 (3) ஐத் தளர்த்தல் 392

துரை கோவிந்தராசன் திரு.—

ஆளுநர் உரை (தீ) 194-200

துரைமுத்துசாமி திரு.—

ஆளுநர் உரை (தீ) 139 -194

துரை முருகன் திரு,—

ஆளுநர் பேருரை (தீ) 84-87

.. .. 89-91,92 93,

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள் போராட்ட நடவடிக்கை (ஒ.தீ) 144-148

காலரா சென்னையில் பரவுதல் (க.ஈ.) 280

படி அரிசித்திட்டம் அரசின் கொள்கை (ஒ.பி,) 37

உண்ணாவிரதம்

அம்பத்தூர் டி.ஐ. டைமண்ட் செயின் தொழிலாளர் (க.ஈ.) 402-406



பக்கங்கள்

த தொடர்ச்சி

தொழிற்தகராறுகள்—

கதவடைப்பு

டி.வி.எஸ். குருப் கம்பெனிகள் 379-391

ந

திரு. நாராயணன், நரா.—

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 72-73

நீக்கம்

28, 29
172, 173
170, 171
168, 169
166, 152
151, 177
178, 179
180, 197
248, 249
255, 256
259, 261
382, 383
384, 385
386, 387
388, 412
413, 418
427

நோய்கள்:

காலரா சென்னையில் பரவுதல் (க.ஈ.) 280-282

பழனிமுத்து, திரு.சி.

ஆளுநர் உரை (தீ) 119-123

பழனியப்பன், திரு. அ.ப.

ஆளுநர் உரை (தீ) 101-106

பழனிவேல், திரு. என்.

ஆளுநர் உரை (தீ) 106-111

பஞ்சாலைகள்

(கோவையில்) மூடப்பட்டிருத்தல் (க.ஈ) 4-6

பக்கங்கள்

ப

பாசனம் :

தண்ணீர்த் தட்டுப்பாடு கன்னியாகுமரி மாவட்ட நிலங்கள் பாதிப்பு. (க.ஈ) 396,397

பாண்டியன், திரு. பி. எச்.

ஆளுநர் உரை (தி) .. .. 303-308

பெரியசாமி, திரு. டி. பி. மு.

ஆளுநர் உரை (தி) .. .. .. 324-328

பெருமாள், திரு. ரா. கு.

ஆளுநர் உரை (தி) .. .. .. 81-83, 376-377

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் : 128, 7, 78,

பொன்னையன், திரு. சி.

பேருந்து விபத்து:

மாயூரம் அருகில் சேந்தங்குடி (க.ஈ.அ) .. 397-402

ம

மணிமாறன், திரு. ஆர்.

ஆளுநர் உரை (தி) .. .. .. 62-70

மணிமாறன், திரு. மா.

மின்சாரம், தண்டக் கட்டண விகிதம் (க. ஈ.) 394, 395

மனோகரன், திரு. கி. ம

ஆளுநர் உரை (தி) .. .. .. .. 168-169, 176-177, 290, 455, 460-461

மூன்றாவது ஊதியக் குழு, அமைக்காதது (க. ஈ. அ) 393

விதி 41 (3) ஐ தளர்த்தல் (தி) .. .. .. 392

மாணிக்கம் திரு. சி.

ஆளுநர் உரை (தி) .. .. .. 241-234





பக்கங்கள்

ம தொடர்ச்சி—

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.

ஆளுநர் உரை (தி) .. .. .. 171, 172, 183, 345, 346

கைதி காவலிலிருந்தபோது சாவு, புது வண்ணாரப்பேட்டை (ஒ. தி) .. 274, 275

மாற்றுத் தலைவர்கள்—

அறிவிப்பு .. .. .. .. 149

பட்டியல் அறிவிக்கப்பெறாதது (ஒ.பி.)

மின்சாரம்

தண்டக் கட்டண விகிதம், சீரமைப்பு (க. ஈ.) 394, 395

ய

யூசுப் திரு. யா. சை. மு.

ஆளுநர் உரை (தி) .. .. 185 189

ர

ரகுமான்கான், திரு. ஏ.

ஆளுநர் உரை (தி) . .. 207-208

கேரளம் வாழ் தமிழர்கள், தாக்குதல் (ஒ.தி). .. 262-264

ரமணி, திரு. கு.

டி.வி.எஸ். குருப் கம்பெனிகள், கதவடைப்பு, .. 379, 388, 389

பஞ்சாலைகள்/கோவை மூடப்பட்டிருந்தல் (க.ஈ) .. 4, 5, 6

ல

லத்தீப் திரு. எம். ஏ.

ஆளுநர் உரை (தி) .. .. .. 177, 220 232

காமராஜ் உருவப்படம், பேரவையில் திறந்து வைத்தல் .. 33 (அறிவி)

கேரளம் வாழ் தமிழர்கள், தாக்குதல் (ஒ.தி.) .. 265-267

'மெயில்' நாளிதழ் மீது (உ. பி.) .. 129-131

பக்கங்கள்

வ

வரதராஜன், திரு. சௌ. வே.

ஆளுநர் உரை (தீ) .. .. .. 332-335

மாயூரம் பேருந்து விபத்துக் குறித்து: (க. ஈ) .. 397-402

வின்சென்ட், திரு. மி.

ஆளுநர் உரை (தீ) .. .. .. 158-165, 238-241

வீரப்பன், திரு. ஆர். எம்.

ஆளுநர் உரை (தீ) .. .. .. 166, 167, 445, 447, 455

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா

ஆளுநர் உரை, (தீ) .. .. .. 123 127

ஜ

ஜெயவேலு, திரு. எம். ஏ.

ஆளுநர் உரை (தீ) .. .. .. 424-428

ஜேம்ஸ், திரு. ஜே.

ஆளுநர் உரை (தீ) .. .. .. 284 294, 346, 347, 463-464

காமராஜ் உருவப்படம், பேரவையில் திறந்து வைத்தல் (அறிவி) .. .. .. 32

கைதி காவலிலிருந்த போது சாவு, புது வண்ணாரப்பேட்டை (ஒ. தீ.) உ .. .. .. 27 [illegible]


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

—

செவ்வாய்க்கிழமை, 1977 ஜூலை 12.

—

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினாக்கள் இன்று இல்லை. அடுத்து, கவன ஈர்ப்பு. பேரவை விதி எண். 41-ன் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை திருவாளர்கள் க. சுப்பு, கு. ரமணி ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

*திரு. க. சுப்பு :* தலைவர் அவர்களே, "கோவையில் சென்ற சில மாதங்களாக லோட்டஸ் மில், பிரகாஷ் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், கானப்பட்டி பத்மா மில் ஆகிய. . . .".

### 1. ஆய்வில் இருக்கும் உரிமைப் பிரச்னை பற்றிய விவரத்தைப் பேரவைக்கு அறிவிப்பது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கொஞ்சம் அமருங்கள், ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டும். இங்கே உரிமை மீறல்பற்றி கிளப்பப்பட்ட உரிமைப் பிரச்னை தலைவருடைய ஆய்விலே இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. க. சுப்பு:* என்ன உரிமைப் பிரச்னை என்றாவது நீங்கள் சொல்ல வேண்டாமா? சும்மா மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆய்விலே இருக்கலாம், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை, ஆனால் உரிமை மீறல் பிரச்னை என்ன என்று சொல்வதில் என்ன தயக்கம்?

[1977 ஜூலை 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இன்னும் குறிப்பிலே உள்ள செய்திகளையும் பத்திரிகையிலே வந்த செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அதிலே இன்னும் உயிர் இருக்கிறது; பயப்படாதீர்கள்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னையே கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிடுங்கள். நாங்கள் கொடுக்கிறோம், இதுவரைக்கும் என்ன சொன்னீர்கள், இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே எல்லாம் இப்படிக் கொடுக்கப்பட்டு இந்த அவையிலே அறிவிக்கப்படவில்லையா, என்ன உரிமைப் பிரச்னை என்றுகூடச் சொல்வதற்கு என்ன தயக்கம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். அந்த உரிமைப்பிரச்னை என்னுடைய ஆய்விலே இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறேன். ஆய்விலே இருக்கிற போது, அதைப்பற்றி ஏன் இங்கே சொல்லக்கூடாது என்று கேட்பதிலே நியாயம் இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** பொதுவாக ஒரு உரிமைப் பிரச்னை கொடுக்கப்படுகிறபோது அது உடனடியாக எடுத்துக்கொள்ளப் படாவிட்டாலும், அந்த உரிமைப் பிரச்னையை யார் கொடுத்திருக்கிறார்கள், அது என்ன உரிமைப் பிரச்னை என்று சொல்வது வழக்கம். இதை நாளைக்கு எடுத்துக்கொண்டாலும் கூட இன்று அது என்ன உரிமைப் பிரச்னை என்பதை அவைக்கு அறிவித்தால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி ஆய்ந்து நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. க. சுப்பு:** தலைவர் இப்படி விடாப்பிடியாக நாளைக்கு எடுத்துக் கொள்வோம் என்று சொல்வது சரியல்ல. முக்கியமான விஷயம்பற்றி உரிமைப் பிரச்னைகளையும் மற்றப் பிரச்னைகளையும் இங்கே கொண்டு வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடாப்பிடியாக நான் இருக்கிறேன் என்று சொல்வது உங்களுக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனால் இங்கே நான் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு அது பெருமையாக இருக்காது. இந்த இடத்தைப்பற்றி இவ்வளவு சொல்கிறீர்கள் என்றால் உறுப்பினராகிய நீங்கள் இன்னும் சரியாகப் பக்குவப்படவில்லையென்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1977 ஜூலை 12]

**திரு. க. சுப்பு:** நான் 'அன்று' பத்திரிகையிலே வந்த செய்தியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நேற்றுக்கூட சட்டசபையிலே சுப்பு கண்டித்தனம் என்று போட்டிருக்கிறார்கள், இப்படிப்பட்ட விஷயங்களை நாங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றி நீங்கள் எழுப்பலாம், ஆனால் ஆய்விலே இருக்கிறது என்று நான் சொன்னபிறகு அதைச் சொல்லுங்கள் என்று சொல்வது சரியல்ல.

**திரு. எஸ். ஆர். இராதா:** தலைவர் அவர்களே, பல பத்திரிகைகளிலே பல செய்திகள் வருகின்றன. அவற்றையெல்லாம்பற்றி இங்கே பேசுவது முறையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமொன்றை விதி 41-ன் கீழ் கொண்டுவருவார்கள்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்கள் ஒவ்வொரு பிரச்னையிலும் இப்படிச் செய்தால் நான் இதைக்கூட விட்டுவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறோம், அவைகளும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. உரிமைப் பிரச்னை முக்கியமான விஷயம்பற்றிக் கொடுத்தால் அதுவும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்றால் என்ன அர்த்தம்? எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சுப்பு அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரையும் வைத்துக்கொண்டு பாதுகாப்பு இல்லை என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. தவறு இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர பாதுகாப்பு இல்லை என்று பொதுவாக சொல்வது சரியல்ல, திரு. சுப்பு.

**திரு. க. சுப்பு:** நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ரமணி.

## 2. கவன ஈர்ப்பு.

### கோவையில் சில பஞ்சாலைகள் மூடப்பட்டது குறித்து

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, கோவையில் சென்ற சில மாதங்களாக லோட்டஸ் மில், பிரகாஷ் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், க்ரானப்பட்டி பத்மா மில் ஆகிய பஞ்சாலைகள் மூடப்பட்டு, அதனால் தொழிலாளர் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் காரியாலயத்தின் முன் மறியல் செய்தும், அதன் தொடர்பாக பெண்கள் உட்பட பல பேர் கைது செய்யப்பட்ட பதட்ட நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலில் நீண்ட நாட்களாக நிலவி வரும் மந்த நிலையின் காரணமாக இம் மாநிலத்தில் பல பஞ்சாலைகள் 1976 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு, ஆகிய ஆண்டுகளில் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளன, அவைகளில் சில இயங்காமல் இருக்கின்றன. மாநில அரசு அளித்த உத்திரவாதம், உதவி மற்றைய காரணங்களினால் அவைகளில் 10 ஆலைகள் மறுபடியும் இயங்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் எழு ஆலைகள் இன்னமும் மூடப்பட்ட நிலையிலேதான் உள்ளன. அவைகளிலே நான்கு ஆலைகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளன.

லோட்டஸ் மில், பிரகாஷ் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், க்ரானப்பட்டி பத்மா மில் ஆகியவற்றைச் சேர்ந்த ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் 4—7—1977 ஆம் தேதியன்று ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன் மறியல் செய்தனர். அவர்கள் கோஷமிட்டுக் கொண்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குள் பணியாளர்களையும் பொதுமக்களையும் நுழையவிடாது மறியல் செய்தனர். நான்காம் தேதி நடைபெற்ற மறியலில் 59 பேர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். இந்த மறியல் 5, 6, 7 ஆகிய தேதிகளிலும் தொடர்ந்து நடைபெற்றது. அதில் 219 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை ஜாமீனில் விடுவிக்க அனுமதிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அதற்கு இணங்காததால் காவலிலே வைக்கப்பட்டனர். எட்டாம் தேதி மறியல் நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்ட எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர்.





இந்த அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் தொழிற் சங்கத் தலைவர்களோடு பேசி, மூடிய ஆலைப் பிரச்சினைபற்றி பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளது. 9 ஆம் தேதி தொழிலாளர் நல அமைச்சரோடும், 11 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சரோடும் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளன. இதுகுறித்து மேலும் ஏற்பட்ட கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் இன்னும் சரியான விளக்கம் தேவைப்படுகிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பஞ்சாலைகளை மூடுகின்ற மூடுவிழாப் பிரச்னை கடந்த 15 ஆண்டுக் காலமாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. அவ்வப்போது 1, 2, 5. 10 ஆலைகள் என்ற அளவிலே மூடப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. ஒரு கட்டத்திலே 1967 ஆம் ஆண்டிலே 20 பஞ்சாலைகள் மூடப்பட்டுக் கிடந்தன. அதில் 10 ஆலைகள் இன்றைக்கு நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனால் தேசியமயமாக்கப்பட்டு நடத்தப்படுகின்றன என்பது உண்மை. ஆனால் மறுபடியும் பஞ்சாலைகள் மூடப்படுகின்றன. இப்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றிரண்டு கேள்விகள் விளக்கம் பெறுவதற்குக் கேட்கலாமே தவிர பெரிய பேச்சாகப் பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** நான் கேள்விதான் கேட்கிறேன், பிரசங்கம் செய்யவில்லை. அமைச்சர் அவர்கள் சொன்னதின் அடிப்படையைக் காட்டவேண்டிய நிலை இருக்கிறது, அதற்காகத்தான் சொல்கிறேன். பஞ்சாலை மூடுவிழா மட்டுமல்ல, மற்றத் தொழில்களிலும் மூடுவிழாக்கள் நடக்கின்றன, ஆனால் பஞ்சாலைத் தொழிலில் மிஸ்மானேஜ்மெண்ட் என்ற முறையிலே மூடப்படுகின்றன. அரசாங்கத்திடம் பணம் கேட்கிறார்கள், கொடுக்கிறார்கள், ஆனால் மறுபடியும் பஞ்சாலைகள் மூடப்படுகின்ற நிலைமைதான் ஏற்படுகிறது. இப்படியே பல ஆண்டுகள் போய்விட்டன. இந்தத் தொழில் இதனால் பாதிக்கப்படுகிறது. தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள், உற்பத்தியும் பாதித்து கைத்தறிக்கு

னாலும், மக்களுக்கு துணியும் கிடைக்க முடியாமல் போகிறது. அதற்கு ஒரு நல்ல முடிவை எடுத்தாக வேண்டும். அதற்கு என்ன வழியென்றால் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன், நிச்சயமாக பஞ்சாலைத் தொழில் உருவாக்கப்பட்டு வளர்ந்து வந்த தொழில், அந்தத் தொழிலிலே மிஸ்மானேஜ்மெண்ட் காரணமாக பிரதான மாக மூடுவிழாக்கள் வருகின்றன.

(முற்பகல் 9.10)

இதைத் தேசிய மயமாக்குவதைத் தவிர வேறு வழி இல்லை. அதை இந்த அரசு உடனே செய்து விட முடியாது. ஆகவே, மூடப்படும் இந்தப் பஞ்சாலைகளை தேசியமயமாக்குவதற்கு தொழிலாளர்களின் ஆதரவையும் பெற்று—நிச்சயமாக அவர்கள் ஆதரவு அளிப்பார்கள்—மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவதற்குத் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்சினை பற்றி கேள்விகள் கேட்டு விளக்கம் பெற விரும்புகிறார் நண்பர் அவர்கள். நேற்றையதினம் என்னை மாண்புமிகு உறுப்பினரும், மற்றத் தொழிற்சங்கத் தலைவர்களும் சந்தித்து அதைப்பற்றி விரிவாக நாங்கள் மனம் விட்டுப் பேசினோம். அதற்குப்பிறகு அதைப்பற்றிச் சிந்தித்து விரைவிலே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எந்தெந்த வகையில் இந்த அரசால் அதற்கு ஆவன செய்ய முடியுமோ அனைத்தும் செய்ய முயற்சிக்கப்படும் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம் என்பதை இங்கே இந்த இடத்திலே கூறிக்கொள்கிறேன். இதுதான் எங்களுடைய பதில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த குறிப்பிட்ட உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் கேள்வி கேட்கக் கூடாது. அடுத்து, ஆளுநர் உனக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்.





3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப்படாதது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். விதிமுறைகளிலே

Rule 6 (1).—At the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the members of the Assembly a panel of not more than six Chairmen.

என்று இருக்கிறது. இந்த செஷன் ஆரம்பித்து பல நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு அவைத் தலைவரவர்களால் 'பேனல் ஆஃப் சேர்மன்' இதுவரை நியமிக்கப்படவில்லை. இதற்கான விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

4. தகவல் கோரல்.

மாயூரத்தில் நடைபெற்ற பேருந்து விபத்துபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து

திரு. என். கிட்டப்பா : பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், சார். மாண்புமிகு முதல்வரவர்கள் மாயூரத்திலே நடைபெற்ற பேருந்து விபத்திலே சிக்கிய நான்கு பேர்களுக்கு தலைக்கு ஆயிரம் ரூபாய் வழங்கியிருப்பதைச் செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்தேன். அதற்காகத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 9—7—1977 அன்று தெற்கு சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து விபத்துக்குள்ளாகி 10 பேர்களுக்கு மேல் இறந்திருப்பதாக நம்பத் தகுந்த முறையில் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே மீதி பேர்களுக்கும் அத்தகைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அடிப்படையில் இது பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் ஆகும்? ஏதாவது பேசியிருந்தால் அதற்குமேல்தான் இன்பர்மேஷன் கேட்பார்கள். விவாதம் ஏதேனும் நடந்து இன்பர்மேஷன் தேவை என்றால்தானே இன்பர்மேஷன் கேட்க முடியும்? எடுத்தவுடனேயே இன்பர்மேஷன் என்று கேட்டால் பதில் சொல்ல அமைச்சர் தயாராக இருக்க வேண்டாமா? நடக்கின்ற விவாதத்திலே உறுப்பினர்கள் பேசுவதிலே சந்தேகம் ஏதாவது இருந்தால் பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் கேட்கலாமே தவிர எடுத்தவுடனேயே இப்படிக்

## 8. மாயூரத்தில் நடைபெற்ற பேருந்து விபத்துபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.



கேட்கலாமா? உங்களுக்கு வேண்டுமானால் இப்பொழுது அனுமதித்துவிடுகிறேன். மறுபடியும் இதைப்போலக் கேட்காதீர்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, ஒரு பேருந்து விபத்தில் 10 பேர்கள் இறக்கக்கூடிய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இன்னும் நான்கைந்து பேர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள், மன்னிக்க வேண்டும், விபத்திலே. இதை ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வர வேண்டும் என்று கொடுத்த நோத்தில் இன்று அன்றாட அலுவலின் கீழ் வருகிறது என்று தள்ளிவிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை நாள் ஒன்றுக்கு 10 பேர் ஆக்ஸிடெண்ட்டிலே இறப்பது அன்றாட அலுவலாக இருக்குமோ என்னவோ . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையிலே தள்ளிய விஷயத்தைப்பற்றி அவையிலே சொல்லக்கூடாது. இன்னும் ஒரு முறை சொல்கிறேன். அறையிலே தள்ளப்பட்ட விஷயத்தைப்பற்றி அவையிலே பேசக்கூடாது என்று விதிகள் சொல்கின்றன.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் இங்கே ரெய்ஸ் பண்ண விரும்புவது என்னவென்றால், ஒரு உறுப்பினர் கால் அட்டென்ஷன் கொடுத்து, கனம் முதலமைச்சரவர்களும் பதில் அளித்தாகிவிட்டது. கால் அட்டென்ஷனில் குறிப்பாக ஒரு ப்ரபோசல் வைக்கப்பட்டிருக்கிறது. நேஷனலைஸ் செய்தல் என்பதைப்பற்றி கனம் முதலமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தேசியவுடைமையாக்குவது என்ற கொள்கையில் இந்த அரசு நிச்சயமாகப் பின்வாங்காது. அதை எந்தெந்த வகையிலே செயல்படுத்த முடியுமோ அதற்கு நாங்கள் முயற்சிப்போம் என்ற வகையில்தான் அந்த விளக்கம் தரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: ஆளுநர் உரையில் முதல் நாள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையில் சொல்கிறீர்களா?



## 3. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

### (ஆ) நடவடிக்கைச் சுருக்க வெளியீட்டில், பேசிய உறுப்பினர் ஒருவரின் பெயர் விடப்பட்டிருப்பது குறித்து.

திரு. ஓ. சுப்பிரமனியன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர்தான். முதல்நாள் பேசிய உறுப்பினர்களின் வரிசையில் திரு. விஜய ரெகுநாத தொண்டமான் பேசியிருக்கிறார். ஆனால் அதில் (சுருக்க வெளியீட்டில்) அவர் பெயர் விடப்பட்டிருக்கிறது. அது வேண்டுமென்றே விடப்பட்டதா அல்லது அகஸ்மாத்தாக விடப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய நினைவுறுத்தலுக்கு நன்றி. தவறுதான். திருத்திக் கொள்ளச் சொல்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். 6—7—1977 ஆம் தேதியன்று மூன்று பொது முக்கியத்துவமும் அவசரமுமான சம்பவங்கள் குறித்து விதி 42-ன் கீழ் தங்களுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே நான் பன்னிப் பன்னிச் சொல்லியாகிவிட்டது. தயவுசெய்து உறுப்பினரவர்கள் அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். சொல்லிவிட்டதையே மறுபடியும் சொல்ல வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி: நான் சொன்னதையே சொல்லவில்லை. நடவடிக்கை குறித்துச் சொல்கிறேன். அருள்கூர்ந்து எனக்கு விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒருசில சம்பவங்கள் பற்றி,

continued strike of workers in the Indian Express.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அனுமதியில்லாமல் இவற்றைப்பற்றிப் பேசக் கூடாது. அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள்.

திரு. கே. கந்தசாமி: ஒருசில நபர்களுக்கு மட்டும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அனுமதிக்க மாட்டேன். வேறு ஏதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால்தான் பேச வேண்டும்.

[1977 ஜூலை 12

**திரு. கே. கந்தசாமி:** மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டு எனக்கு அனுமதி கொடுக்காததைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். பச்சையப்பா கல்லூரிபற்றி மாணவர்களின் கோரிக்கைபற்றிக் கொடுத்திருந்தேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சட்டம் படித்தவர். தலைவர் மேலே 'இன்சுனுவேட்' செய்வது மாதிரி இருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி:** எங்களுக்கு பாதுகாப்பு தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு உண்டு. ஆனால் நீங்கள் நேரடியாக, ஒருதலைப்பட்சமாக தலைவர் நடந்து கொள்கிறார் என்பதுபோல, மற்றவர்களுக்குச் சலுகையும், உங்களுக்குச் சலுகை இல்லை என்பது போலவும் சொல்கிறீர்களே, என்ன அர்த்தம்?

**திரு. கே. கந்தசாமி:** எல்லா உறுப்பினர்களும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்ற உரிமையைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அவ்விதம் நடந்துகொண்டுதான் இருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து இதை இதோடு விட்டுவிடுங்கள். அமருங்கள்.

### 5. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நேற்றைக்கு விடுபட்டுப்போன திருத்தங்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் நேற்று அந்தச் சமயத்தில் இல்லாததால் இப்பொழுது அதனை அனுமதிக்கிறேன். 10-வது திருத்தம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை நான் முன்மொழிகிறேன் :—

(1) வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவது பற்றியும்,

(2) வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட 1,500-க்கும் அதிகமான இளைஞர் அணியில் உள்ளவர்களுக்கு வாழ்வளிப்பது பற்றியும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.



1977 ஜூலை 12] [திரு. ஜெ. ஜேம்ஸ்]

(3) பஞ்சாயத்து, நகரசபைகளுக்கான தேர்தல்களை ஒத்திப் போட்டதுபற்றி குறிப்பிட்டது வருந்தத்தக்கது.

திருத்தங்கள் முறையே வழிமொழியப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களை அவருடைய திருத்தத்தை முன்மொழிய அழைக்கிறேன். அவர் இப்பொழுது இல்லை. ஆகவே, இன்றைக்கு அது தள்ளப்படுகிறது. அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசுவார்கள்.

* **திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாமன்றத்தில் உறுப்பினராக என்னை மீண்டும் தேர்ந்தெடுத்து அனுப்பிய திருவண்ணாமலை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையினைத் துவக்குகிறேன்.

எனது உரையைத் துவக்குவதற்கு முன்பு தங்களைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசலாம் என்று நான் கருதுகிறேன். தவறாகக் கருத மாட்டீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். தாங்கள் இந்த அவையில் தலைவராக வீற்றிருப்பதைக் காணும்பொழுது உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இருபதாண்டுக்காலம் எங்களோடு பழகிய நண்பர் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றிருக்கிறார் என்று நினைக்கும்பொழுது எனக்கு மகிழ்ச்சிதான். கடந்த சில நாட்களாக தாங்கள் அவையை நடத்தி வரும் விதத்தைக் காணும்பொழுது எனக்குக் கொஞ்சம் வருத்தமாகக் கூட இருக்கிறது. நான் வருத்தம் என்று சொல்வதால் தங்களைக் கண்டித்துப் பேசுகிறேன் என்று தயவு செய்து கருத வேண்டாம். என்னுடைய நெஞ்சிலே இருப்பதைச் சொல்வதில் தவறு இல்லை என்றே கருதுகிறேன். இந்த அவையில் அமைச்சர்களாகட்டும், ஆளுங்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களானாலும், எதிர்க் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களானாலும், அவர்கள் ஏதேனும் ஒரு செய்தியைப்பற்றிப் பேசினால், பத்திரிகையிலே வந்த செய்தியை ஆதாரமாகக்கொண்டு பேசக்கூடாது என்ற

(முற்பகல் 9-20)

குறிப்பையும், நமது விதிகளிலே இருக்கின்ற பகுதிகளையும் படித்துக் காட்டி, இருபாலருக்கும் உகந்த தீர்ப்பை அளித்து வந்திருக்கிறீர்கள். நான் இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது இன்னும் ஒன்றை ஞாபகத்திற்குக் கொண்டு வந்து சொல்கிறேன். இந்த அவையில் ஆளுங்கட்சி வரிசையில் அமைச்சரவையிலே இருந்தபொழுது மிகக் கடுமையாக நான் விமர்சிக்கப்பட்டவன், தாக்கப்பட்டவன் என்பதைத் தாங்களே அறிவீர்கள். அப்படி நான் தாக்கப்பட்டபொழுது, விமர்சிக்கப் பட்டபொழுது, தாங்கள் இந்த அவையிலே தலைவராக இல்லாமல் போய்விட்டீர்களே என்பதுதான் எனக்கு ஏற்பட்ட கவலையே தவிர, அப்படி இருந்திருந்தால் எத்தனையோ சம்பவங்களைத் தவிர்த்திருக்கமுடியும் என்ற நம்பிக்கையின் பேரில் நான் இதைச் சொல்ல வந்தேனே தவிர வேறல்ல.

தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரை, அந்த உரையிலே இருக்கிற குறிப்புகள் இவைகளைப்பற்றியெல்லாம் விமர்சிக்கும்போது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், இது இல்லை, அது இல்லையென்று ஏன் சொல்லவேண்டும், எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டிருந்தால் முடியுமா என்று வருத்தப் பட்டார்கள். நான் இல்லாததைப்பற்றி பேசவில்லை. ஆளு நருடைய உரையிலே இருப்பதைப்பற்றி மட்டும் பேசலாம் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, மத்திய-மாநில உறவைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்து, அண்டை மாநிலங்களோடுள்ள உறவைப் பற்றியும் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவிரியைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை மூன்றைப்பற்றி மட்டும் நான் பேசலாம் என்று கருதித்தான் தங்கள் அனுமதி பெற்று பேச எழுந்திருக்கிறேன்.

மத்திய மாநில உறவு சுமுகமாக இருக்கவேண்டும்; இருக்கும். நம் மாநிலத்து முதலமைச்சர் மட்டுமல்ல, பாரதப் பிரதமர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள் கூட தமிழ் நாடு அரசாங்கத்தோடு சுமுகமான உறவு வைத்துக்கொள்வோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த உறவு சுமுகமாக இருக்க வேண்டு மென்பதை நானும் விரும்புகிறேன்; நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் விரும்புகிறது. சுமுகமான உறவு



இருக்கத்தான் வேண்டும். சுமுகமான உறவு இல்லாவிட்டால் ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சிகள் பாதிக்கப்படும் என்பதை ஒன்பது ஆண்டுக்காலம் ஆட்சியிலிருந்த ஒரு கட்சியின் சார்பில் நாங்கள் உணர்ந்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சுமுகமான உறவு இருக்கவேண்டும். ஆனால், இந்த உறவிலே ஒருவருக்கொருவர் சமமாக வாழவேண்டும். அதுதான் உறவுக்கு இருக்கிற இலக்கணமே தவிர வேறொன்றும் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சொல்லப் போகின்ற செய்திகள் சிலருக்கு மகிழ்ச்சியைத் தரலாம்; சிலருக்கு வருத்தத்தைத் தரலாம். இருந்தாலும் நான் சொல்கிறேன், 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31-ந் தேதி மாலை 6 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது மட்டுமல்ல, இந்தச் சட்டமன்றமும் கலைக்கப் பட்டது என்று டெல்லியிலே 20, 25 பேர் ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். பிறகு இந்த அரசு கலைக்கப்பட்ட செய்தி நாடறிந்த ஒன்றாகும். அது 'சரி' என்று வாதாடுபவர்கள் உண்டு, வாதாட அவர்களுக்கு உரிமை உண்டு. வாதிடுவதை நான் அறிவேன். கலைக்கப்பட்டவுடன் இனிப்பு வழங்கியவர்களை நான் அறிவேன். கலைக்கப்பட்டவுடன், சென்னையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கலைக்கப்பட்டதற்கு கோடி, கோடி நன்றி என்று சுவரொட்டி ஒட்டினார்கள். அதையும் நான் அறிவேன். கலைந்த வுடன் கண்ணீர் விட்டவர்கள் இருக்கிறார்கள். அதையும் இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்துவிட்டார்கள் என்கின்ற மகிழ்ச்சி வேண்டுமானால் இருக்கலாமே தவிர, கோபதாபத்தை முதலில் நீக்கிவிட்டு இந்த அரசை கலைத்ததிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், உண்மை புரியும். திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறு செய்தது, ஆகவே, நீக்கியது நியாயம் என்று வாதாடுவார்களானால் என்ன தவறு செய்தது என்று கேட்டு வாதத்தை வளர்த்துக் கொண்டு போக நான் விரும்பவில்லை.

ஆனால், ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை, அப்போதிருந்த மத்திய அரசாங்கம் கலைத்தபொழுது காட்டிய காரணங்கள் வேறு; கலைத்ததற்குப் பிறகு சென்னை கடற்கரையில் பாரதப் பிரதமராக இருந்த மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசிய பேச்சு வேறு. அதற்குப் பிறகு

இந்த அரசாங்கத்தை நடத்திச் சென்றவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வேறு. இந்த வழக்குகளால்தான் அரசாங்கத்தைக் கலைத்தோம் என்று சொன்ன காரணங்கள் வேறு. பிறகு வழக்குகளுக்காக ஜோடிக்கப்பட்ட காரணங்கள் வேறாகும்.

நான் வழக்குக்குள்ளே புகுந்து, இங்கே பாதுகாப்பு தேடிக் கொள்ள விரும்பவில்லை. எனக்கு நன்கு தெரியும், இந்த நான்கு சுவருக்குள் எதைப் பேசினாலும் சட்டம் ஒன்றும் செய்ய முடியாது, எந்த மன்றமும் கேட்கமுடியாது, நீதிமன்றமும் கேட்க முடியாது. அதைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு பேசுகிறேன் என்று தயவு செய்து நீங்களும் கருதமாட்டீர்கள், அரசாங்கமும் கருதாது என்று கருதுகிறேன்.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்: கனம் உறுப்பினர் கவர்னர் உரையின்மீது பேசுகிறாரா அல்லது வேறு பிரச்சினையைப் பேசுகிறாரா என்று தெரியவில்லை.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அங்கத்தினர் எழுந்து பேசும்பொழுது, பாய்ன்ட் ஆஃப் ஆர்டரிலே பேசினாரா அல்லது வேறு விதியிலே பேசினாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவர்னர் உரையின்மீது இந்தப் பிரச்சினைகளையெல்லாம் பேசலாம்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் உரையை மாண்புமிகு உறுப்பினர் சரியாகப் படிக்கவில்லையோ என்று நான் கருதுகிறேன். மத்திய-மாநில உறவைப்பற்றி ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு சொல்லிவிட்டுத்தான் பேசி வந்தேனே தவிர, 'இல்லாததைப் பற்றி பேசவில்லையென்று நான் சொன்னேன்.

என்னுடைய அருமை நண்பர் திரு. முசிறிபுத்தன் அவர்கள் முதலிலேயே என்னுடைய பேச்சைக் கவனித்திருப்பாரானால் இந்தக் கேள்வி கேட்டிருக்க மாட்டார்களென்று நான் கருதுகிறேன்.





இந்த அரசாங்கத்தைக் கலைத்ததைப் பற்றி மகிழ்ச்சி அடைபவர்கள் உண்டு என்று நான் சொன்னேன். இந்த அரசாங்கத்தைக் கலைத்ததில் என்ன நியாயமிருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே வற்புறுத்திப் பேசுவதற்குக் காரணம், அவையினுடைய பதிவேட்டில் அது இருக்கவேண்டும், நாட்டுக்கும் அந்தச் செய்திகள் பரவவேண்டுமென்பதற்காகத் தான்.

திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்துவிட்டார்கள். தலைவரவர்களே, தாங்கள் நகராட்சிமன்றத் தலைவராக இருந்தவர்கள். உங்களுக்கு அனுபவம் உண்டு. ஊராட்சியைக் கலைக்க வேண்டுமென்றாலோ அல்லது நகராட்சியைக் கலைக்க வேண்டுமென்றாலோ, அல்லது அரசாங்கத்தில் பணிபுரிகிற கடைநிலை ஊழியரை வேலையை விட்டு நீக்கவேண்டுமென்றாலோ, அல்லது ஒரு கூட்டுறவுசங்க டைரக்டரை, பதவியை விட்டு நீக்க வேண்டுமென்றாலோ, 'ஷோ காஸ்' நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்பது விதி. அதை மாற்ற முடியாது. ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்காமல் கலைத்ததை, கலைத்தாலும் அது செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியிருக்கிறது. நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். நாலரை கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 234 பேரை உறுப்பினராகக் கொண்ட இந்த அவையை எந்தவித நோட்டீஸும் கொடுக்காமல், நகராட்சிக்கு இருக்கிற உரிமையைக் கூட, பஞ்சாயத்து போர்டுக்கு இருக்கிற உரிமையைக் கூட—பேரவை மன்னித்துக்கொள்ள வேண்டும், தவறாகக் கருதக் கூடாது—அரசாங்கக் கடைநிலை ஊழியருக்குக் கொடுத்திருக்கிற அந்த உரிமையைக் கூட கொடுக்காமல், டெல்லியிலே உட்கார்ந்து கொண்டு 20 பேர் தீர்மானம் போட்டு கலைத்துவிட முடியும் என்று சொன்னால் அது எந்தவகையிலே நியாயம் என்று நான் கேட்கிறேன். கலைத்தது சரி என்று வாதாடுபவர்கள் அதையும் உணரவேண்டும்.

எங்களுக்கு இன்றையதினம் இந்த ஆபத்து ஏற்பட்டது. அதனைச் சந்திக்கவும் தயாராகிவிட்டோம், தயாராகவும் இருக்கிறோம், சந்தித்தும் விட்டோம். ஆனால், இந்த ஆபத்து மாநிலங்களுக்கு வருவது நியாயமா என்ற கேள்வியை உங்கள் மூலம் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். இப்படி கலைக்கின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால்

9 மாநிலங்கள் கலைக்கப்பட்டன. அங்கு தேர்தல் நடத்தப்பட்டது. அப்படி ஒரு அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருப்பதை வைத்துக்கொண்டு . . .

THIRU M. A. LATHEEF : On a point of order, Sir. We are neither subordinate to the Central Government nor Central Cabinet so far as this matter is concerned. This show-cause notice is between employer and employee. We are not employees. That analogy is not therefore correct. We are sovereign, so far as the spheres enumerated for the States in the Constitution, are concerned. So, I submit that the analogy of issue of show-cause notice is irrelevant, that it would not apply to use and as such should not find a place in the records.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, துரதிருஷ்டவசமாக, எதிர் வரிசையில் உட்கார வேண்டிய நிலையிலுள்ள நண்பர் திரு. லத்திப் அவர்கள் இந்த வாதத்தினை எடுத்து வைத்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் ஜாதகக் கோளாறு என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால், அமைச்சரவையிலே 14 பேரோடு உட்கார்ந்திருப்பார்கள். அப்பொழுது பதில் சொல்லியிருந்தால் கூட நான் ஏற்றுக்கொள்ள முடியும்.

நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது அரசியலமைப்புப்படி, பூரண அதிகாரம் கொண்ட ஒரு அவை இது. எனவே இதற்கு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கக் கூடாது, அரசாங்க ஊழியர்களும், அல்லது நிறுவனங்களுக்கும் ஷோ காஸ் நோட்டீஸ் கொடுப்போம். நாம் இருவரும் சமம்; ஆகவே ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்க முடியாது என்ற அந்த வாதத்தை மட்டும் நான் ஒத்துக்கொள்ள முடியாது, ஜீரணித்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். ஷோ காஸ் நோட்டீஸ் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 'ஷோ காஸ்' நோட்டீசு கொடுத்தால் கோர்ட்டுக்குப் போகலாம் என்று விதி. அப்படி இருக்கும்போது ஏன் அரசாங்கம் கோர்ட்டுக்குப் போகக் கூடாது?

திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பித்த கருத்தில் இருந்து உறுப்பினர் அவர்கள் எங்கேயோ இழுத்துச் செல்லுகிறார்கள். நாங்கள் நீதி மன்றத்திற்குச் சென்றோம். செல்லாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதல்ல என் வாதம்.





திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். ஷோ காஸ் நோட்டீஸ் கூடக் கொடுக்கக் கூடாது. மத்திய அரசாங்கம் அப்படிச் செய்யலாமா, அந்தக் காரியத்தை நான் வாதிடுவதாக எண்ணிக் கொண்டு பேசுகிறார்கள். ஷோ காஸ் நோட்டீஸ் ஒரு மேலதிகாரி தன்னுடைய சபார்டினேட்டுக்கு கொடுப்பதாகத்தான் இருக்கிறது. அவர்கள் நமக்கு அதிகாரிகளும் அல்ல. நாம் சபார்டினேட்டும் அல்ல. அவர்களுக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. கண்காணிப்பு அதிகாரம் என்று. அந்த அதிகாரத்தின் கீழ் அவர்கள் நடந்து கொள்ளவில்லை, என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பாரேயானால்—முன்னாள் அமைச்சரவர்கள் சொல்லி இருப்பாரேயானால்—அதை நான் ஏற்றுக் கொள்ளுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்த ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது என்பதைத்தான் வலியுறுத்திச் சொல்லுகிறேன். ஆகவே தயவுசெய்து மேலும் ஒரு அதிகாரத்தைக் கொடுக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயலக் கூடாது என்றுதான் கூறுகிறேனே தவிர வேறு இல்லை.

திரு. அ. கு. அரங்கநாதன்: கோர்ட்டுக்குப் போறோம் என்று சொன்னார்களே, அதன் பிறகு என்ன நடந்தது என்று கேட்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது என்ன பாயிண்ட் ஆப் ஆர்டரா, பாயிண்ட் ஆப் இன்ஃபர்மேஷனா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குப் பதில் தேவையில்லை.

திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஷோ காஸ் நோட்டீஸ் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்பதாகவும் கேட்கத் தகுதி இருப்பதாக நான் வாதாடுவதாகவும் நண்பர் லத்திப் அவர்கள் சொன்னார்கள். அது கிடைக்கவில்லை என்று நான் சொன்னேன். அமைச்சர்கள் மீதோ அல்லது அமைச்சரவை மீதோ கோபம் இருக்கிறது என்பதற்காக 234 உறுப்பினர்களைக் கொண்ட இந்த மாமன்றத்தைக் கலைத்து விட்டார்கள், இது நியாயம் தானா என்றுதான் கேட்டேன். நான் சொல்ல வந்ததை முழுமையாக கேட்காமல், குறுக்கிட்டதால்தான் இந்த நிலைமை, நான் பேசுவதை முழுமையாகக் கேட்டபிறகு அவர்கள் கேட்டால் நான் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1977 ஜூலை 12

அந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிற வரையில் எந்த மாநிலத்திற்கும் பாதுகாப்பு கிடையாது, என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எப்போதாவது ஏதாவது ஒரு சிறு கருத்து மாறுபாடு மாநில அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் ஏற்படுமானால் இதே அதிகாரத்தைப் பயன்படுத்தி, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்தைக் கலைக்க முற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட உரிமைகள் அத்தனையும் இல்லாமல் போய்விடும். இந்த நிலைமை இருக்கலாமா? அரசியல் சட்டத்தை திருத்துவதன் மூலம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் உதவியாக இருக்கப் போகிறோம் என்றும் ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிற காரணத்தால் நான் இதைப்பற்றி பேச வேண்டியிருக்கிறதே தவிர வேறு இல்லை.

நோட்டீஸ் கொடுக்கிறார்கள், கடிதம் எழுதுகிறார்கள். கடிதம் கூட எழுதவில்லை, கலைக்கிறார்கள். இப்போது இருக்கிற ஒரு மாநில அரசாங்கத்தைப் பார்த்து இப்போது இருக்கிற மத்திய அரசாங்கம்—பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கேட்கிறார்கள். ஏன் உங்களைக் கலைக்கக் கூடாது என்பதற்கு எனக்கு சமாதானம் சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் எங்களைக் கேட்கவில்லை. அப்போது இருந்த மத்திய அரசாங்கம் எங்களுக்கு தகுதி இருக்கவில்லை என்று கருதி இருக்கக் கூடும் இப்போது இருக்கிற அரசாங்கம் தகுதி இருக்கிறது என்று கருதக் கூடும். இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற மாநில அரசாங்கத்தின் முதலமைச்சர் பாரத பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். என்னைக் கேட்க நீங்கள் யார்? நான் குற்றம் செய்திருந்தால் என்னுடைய சட்டசபைக்குத்தான் பதில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேனே தவிர, பார்லிமெண்டுக்கோ, பிரதமருக்கோ பதில் சொல்லத் தேவையில்லை என்று எழுதியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இன்றைய மத்திய அரசாங்கம் அந்த 9 மாநிலங்களின் சட்டசபைகளைக் கலைக்க சிபாரிசு செய்கிறீர்களா, அல்லது நாங்களாக கலைத்துவிடட்டுமா என்றுதான் கேட்டார்கள்.

**திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் 9 மாநிலங்களைப் பற்றி பேசி ரொம்ப நேரம் ஆகிவிட்டது. நான் வேறு பொருளுக்கு வந்திருக்கிறேன். அந்த மாநிலத்தின் பெயரை



1977 ஜூலை 12] [திரு. ப. உ. சண்முகம்]

நாகரிகம் இல்லை என்பதால் சொல்லவில்லை. பெயரைச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுகிறேன். ஒரு மாநில அரசாங்கத்தின் முதலமைச்சர் மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினார். மாநில அரசாங்கத்தை நடத்தும் நான் இந்த சபைக்குத்தான் கட்டுப்பட்டவனே தவிர மத்திய அரசாங்கத்திற்கு பதில் சொல்லத் தேவையில்லை என்று எழுதியிருக்கிறார்கள். (மணி அடிக்கப் பட்டது) ஆகவே இப்படி மாநில அரசாங்கத்தைக் கலைக்க மத்திய அரசாங்கத்திற்கு, அதிகாரம் இருப்பதை திருத்தவேண்டும்—முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

234 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சபையைக் கலைத்து விட்டதற்காக எதிர்க்கட்சிகள் மகிழ்ச்சி அடைவது அரசியல் நாகரிகம் ஆகாது என்பதை மட்டும் தெளிவுபடுத்திக் கூற விரும்புகிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் நான் சுருக்கமாக இரண்டைப் பற்றி மட்டும் பேசுகிறேன்.

அண்டை மாநிலங்களில் வைத்துக் கொள்ளும் உறவுகளைப் பற்றி ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு சரியான தகவலை அதிகாரிகள் தரவில்லையோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிற காரணத்தால் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த சில ஆண்டுகளில் அண்டை மாநிலங்களோடு உறவுகள் சரியாக இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள்—குற்றச்சாட்டுகள் என்று இல்லாவிட்டாலும் சந்தேகப்படும் படியான அளவுக்கு குறிப்பிட்டிருப்பதால் அதற்கு விளக்கம் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கேரள மாநில அரசோடு, சிறுவாணி ஒப்பந்தம் செய்ய, நானும் அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்களும் திருவனந்தபுரம் சென்று ஒப்பந்தம் செய்து முடித்து விட்டு வந்தோம். அதே போல பரம்பிக்குளம்—ஆழியாறு ஒப்பந்தம் சுமுகமாகவே ஒத்துக் கொண்டு வந்தோம். கேரள அரசாங்கம் எப்போது உதவி கேட்டாலும் தாராளமாக கொடுத்து வந்தோம். குருவாயூர் கோவிலுக்கு நைவேத்தியம் செய்ய அரிசி இல்லை என்று கேட்ட உடன் கொடுத்தோம். அதே போல பத்மநாபசுவாமி கோவிலுக்கு அரிசி கேட்டபோது கொடுத்தோம். அதே போல கர்நாடக அரசுக்கு 5 ஆயிரம் டன் நெல்லைக் கொடுத்தோம். நமக்கு நெல் கேட்டபோது அவர்களும்

தாராளமாக 5 ஆயிரம் டன் கொடுத்தார்கள், இதை எல்லாம் குறிப்பிட்டுக் கூறக் காரணம் அன்டை மாநிலங்களோடு சகஜமான உறவு வைத்திருந்தோம் என்று சுட்டிக்காட்டத்தான்.

ஆனால் துர்ப்பாக்கியவசமாக காவிரியைப் பொறுத்த மட்டில் சிறு தகராறு ஏற்பட்டது. இந்தப் பிரச்னையைக் கூறி இப்போது இருக்கிற அரசாங்கத்திற்கு சிக்கல் ஏற்படுத்த விரும்பவில்லை. தஞ்சை, திருச்சி, சேலம் ஆகிய பகுதிகளில் காவிரி நீரால் பயன்படும் மக்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று நினைத்துப் பேசவில்லை. அது என்னுடைய நோக்கமும் அல்ல—எங்களுடைய நோக்கமும் அல்ல. ஆனால் காவிரி நீர் பிரச்சினையைப் பற்றிய உண்மையைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

1924 ஆம் ஆண்டில் தமிழக அரசாங்கத்திற்கும்--அப்போதிருந்த சென்னை மாகாண அரசாங்கத்திற்கும் மைசூர் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் ஆகும். அந்த ஒப்பந்தத்தில் கிருஷ்ணராஜசாகரில் போடப்பட்ட ரூல்ஸ் அண்டு ரெகுலேஷனிலே. அதிலே எப்படித் தண்ணீரை திறந்து விடுவது, எப்போது, எவ்வளவு விடுவது என்பதுபற்றி தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். மேலும் சொல்லியிருக்கிறார்கள் 50 ஆண்டுகள் கழித்து காவிரியில் அதிகமாக எவ்வளவு தண்ணீர் இருக்கும் என்று கணக்கிடப்பட்டு யார் யார் எப்படி பிரித்துக் கொள்ளலாம் என்று ஒப்பந்தத்திலே இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. கபினி, ஹேமாவதி, ஹாரங்கி, ஆகிய இடங்களில் அணைக்கட்டுகள் கட்டியிருக்கிறார்கள். கட்டியது பற்றிகூட ஆட்சேபனை இல்லை. ஆனால் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் இன்னும் ஒரு ஷரத்து இருக்கிறது. அப்படி அணைகளைக் கட்டும்போது நம் மாநிலத்தைக் கலந்து விதிமுறைகளைப் போடவேண்டுமென்று இருக்கிறது. ஒருவரையொருவர் கலந்து கொண்டு போடவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். நாங்கள் அது பற்றிக் கேட்டோம். ஒரு முறை டெல்லியிலே பேசியபோது, நாங்கள் விதிமுறைகளைப் போடுவதற்கு உங்களை ஏன் கேட்கவேண்டும். நீங்கள் யார் என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். விதிமுறைகளை விட்டு விடுங்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருபோக சாகுபடியைச் சேர்த்து 28 லட்சம் ஏக்கரா நிலங்கள் பலன் தருகின்றன. அந்த 28 லட்சம் ஏக்கராவுக்கு தண்ணீர் தேவை. உங்களுக்கு வரட்சி





ஏற்படுகிற நேரத்தில் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்கவில்லை. தண்ணீர் இருக்கும் நேரத்தில் எப்படி பங்கு போட்டுக்கொள்வது என்பது தான். 28 லட்சம் ஏக்கருக்கு ஒரு ஏக்கர் குறைந்தால் கூட ஏற்றுக்கொள்ள தமிழ்நாடு அரசு தயாராக இல்லை, என்று தெளிவாகவே கூறியதை கர்நாடக அரசு ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். ஏற்றுக்கொள்ள மறுத்தது மட்டுமல்ல அப்போது மத்திய அரசாங்கத்தில் இருந்த கே. எல். ராவ் அவர்கள் தலைமையில் குழு போட்டார்கள். எவ்வளவு தண்ணீர் காவிரியில் இருக்கிறது. எவ்வளவு நிலம் யார் யார் சாகுபடி செய்கின்றார்கள் என்று கணக்கு பார்க்கவேண்டுமென்று எக்ஸ்பர்ட் குழுவிடம் விட்டார்கள். அந்தக் குழு மூன்று மாநிலங்களுக்கும் சென்று மூன்று ரிப்போர்ட்டை தயார் செய்து கொண்டு வந்தார்கள். அந்த ரிப்போர்ட்டை சரிபார்த்து அளிக்க ஒரு குழு போடப்படவேண்டுமென்று கருநாடக மாநில முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் அவர்கள் கேட்டார்கள். அதற்கும் ஒப்புக்கொண்டு குழு வந்தது. இங்கே இருக்கும் அத்தனை ரிக்கார்டுகளையும் பார்த்தார்கள். அலசி அலசிப் பார்த்தார்கள். அப்படி பார்த்தபிறகு 28 லட்சம் ஏக்கருக்கு இருக்கிறது என்று ஒப்புக் கொண்டு மறுபடியும் போய்ச் சொன்னார்கள். காவிரியில் இருக்கும் தண்ணீர் மூலம் ஏற்கனவே பயன் பெற்று வரும் நிலங்களுக்கு பாதகம் இருக்கக்கூடாது, அது தான் நம்முடைய வாதமே தவிர வேறு வாதம் இல்லை. கருநாடக அரசாங்கத்திற்கு தீங்கு இழைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நமக்கு இருக்கும் லோயர் ரைபேரியன் ரைட்--கடை மடைக்காரர்களுக்குள்ள உரிமையை—தமிழக அரசு விட்டுக் கொடுக்கக்கூடாது. அதற்கு ஒப்புதல் அளிக்கக்கூடாது. இணங்கக்கூடாது. அப்படி இணங்கினால் காவிரி ஆற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தி வரும் தஞ்சை பூமி முழுவதும் பாதிக்கப்பட்டு பாலைவனமாகிவிடும்.

(முற்பகல் 9-40)

டெல்லியிலே இருப்பவர்கள் எங்களுக்கு யோசனை சொன்னார்கள். டெல்லியிலே இருப்பவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், தஞ்சையில் கோதுமை பயிர் வையுங்கள் என்று ஒரு அதிகாரி யோசனை சொன்னார். இன்னொரு அதிகாரி காவிரிக்குப் பக்கத்திலே உள்ள கரையின் இரண்டு பக்கத்திலும் சீப்பேஜ் போய்க்கொண்டு இருக்கிறது. அந்த சீப்பேஜ் போகமால் இருக்க, இரண்டு பக்கத்திலும் வாய்க்கால் வெட்டி, சிமெண்ட் வாய்க்கால் கட்டி காவிரியைக் கொண்டு வாருங்கள் என்று

சொன்னார்கள். இன்னொரு காவிரியை எங்களைக் கட்டச் சொல்கிறீர்களே, அதற்கு உண்டான முழுப்பணத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தயாரா என்று கேட்டோம். கேட்டு விட்டு, அடுத்ததாகச் சொன்னோம். இரண்டு பக்கமும் காவிரியில் தண்ணீர் வீணாவது கிடையாது. இரண்டு கரைகளிலும் உள்ள தண்ணீரை மக்கள் பயன்படுத்திக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஒன்று அரசாங்கத்தின் அனுமதி பெற்று பயன்படுத்தி வருகிறார்கள், அல்லது அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, தண்ணீர் வீணாகவில்லை என்று எடுத்துச் சொன்னோம். தண்ணீர் வீணாகவில்லை பாழாகவில்லை என்று கட்டிக் காட்டினோம்.

நேற்றைக்கு முன்தினம் கருநாடக அரசாங்கத்திற்குச் சென்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி தண்ணீர் கொடுக்கப்படும். தண்ணீருக்கு ஏற்ப மின்சாரத்தைத் தர வேண்டும். நாம் பெறும் தண்ணீருக்கு கைமாறாக மின்சாரத்தை கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தமாக இருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன். முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கை மூலமும் பார்த்தேன். இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கிறபோது, 'இந்து' பத்திரிக்கையில் வந்திருக்கிறது—கருநாடக மாநில முதலமைச்சர் அவர்கள் இரண்டு அவையிலும் பேசியிருக்கிறார்கள். எப்படி ஒப்புக்கொண்டீர்கள் என்று அங்கேயிருக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்போது சொல்லியிருக்கிறார்கள், நான் கிருஷ்ணராஜசாகரிலிருந்து தண்ணீர் திறந்து விடப்போவது இல்லை, கபினியிலிருந்துதான் கொடுக்கப் போகிறேன் என்று சொல்லியதாக பத்திரிக்கையில் பார்த்தேன். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதையும் பத்திரிக்கையில் பார்த்தேன். அதுவும் வந்திருக்கிறது. கிருஷ்ணராஜசாகரிலிருந்து தண்ணீர் விடப்படும் என்று பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தண்ணீர் தானே நமக்கு எங்கே இருந்து வந்தால் என்ன என்று சொல்லியிருக்கலாம். அதை ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் கபினியைப் பொறுத்தவரையில் நான் ஒரு ரகசியத்தைச் சொல்ல விரும்புகிறேன். கபினி அணை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் வாய்க்கால் வெட்டப்படவில்லை, கபினி





அணைக்கட்டை நானே நேரில் சென்று பார்த்து விட்டு வந்திருக்கிறேன். இன்னும் குறைந்தது 5—6 ஆண்டுகள் ஆகலாம் அதற்கு வாய்க்கால் அமைப்பதற்கு. ஆகவே கபினியில் தண்ணீர் அதிகமாக வந்தால் அவர்களால் பயன்படுத்த முடியாது. இப்போது கட்டுப்படாது ஓடிக்கொண்டிருக்கிற தண்ணீரைத்தான் அவர்கள் நமக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். கபினியின் மொத்த கொள்ளளவு 19 டி.எம்.சி. அந்த 19 டி.எம்.சி. முழுமையாக இருக்கிறது. மேலும் தண்ணீர் கபினிக்குள் வந்து கொண்டே இருக்கிறது என்று எனக்குத் தகவல். அதிகமாக வருகிற தண்ணீரைத்தான் அவர்கள் திறந்து விடப்போவதாக எனக்குத் தகவல். மன்னிக்கவும், நான் தவறுதலாகச் சொன்னேன் என்றால், திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மேற்கொண்டு வருகிற தண்ணீரைத்தான். தடுத்து நிறுத்த முடியாத தண்ணீரைத்தான் அவர்கள் நமக்கு விடுவதற்கு ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள், என்பது எனக்குக் கிடைத்த தகவல். அவர்கள் விரும்பினாலும் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாது. அவர்கள் பயன்படுத்த முடியாத அந்த 19 டி.எம்.சி. தண்ணீரையும் தமிழ் நாட்டிற்கு தராமல் பயன்படுத்த முடியுமா என்றால் முடியவே முடியாது. நாங்கள் எத்தனையோ முறை மத்திய அரசாங்கத்திடம் சொல்லி இருக்கிறோம், அவர்களால் பயன்படுத்த முடியாத தண்ணீரைத் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள் என்று சொன்னோம். அதுவும் மூன்று முதலமைச்சர்களும் டெல்லியில் சேர்ந்து பேசும்போது அதைப்பற்றி விவாதித்து, ஒப்புக்கொண்டு, ஒரு ஒப்பந்தம் கூட கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தின்படி காவிரி நீர் தகராறு தீருகிற வரையில் யாரும் தண்ணீரைத் தேக்கி நிறுத்தக் கூடாது என்று ஒப்பந்தம் ஆகி இருக்கிறது.

1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை அப்படியே அமல் நடத்த வேண்டும். ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. அதற்குப் பிறகு கூட நாமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் மிகப் பழகிய நண்பர். மாண்புமிகு தேவராஜ் அர்ஸ் அவர்கள் எனக்கும் கூட நண்பர். மாண்புமிகு தேவராஜ் அர்ஸ் அவர்கள் பேசியதாக பத்திரிக்கையில் பார்த்தேன். இன்றைய தமிழக அரசு நன்றோடு ஒத்துழைத்ததற்கு நன்றி தெரிவித்து இருக்கிறார்கள். பரவாயில்லை, பாராட்டுகிறேன். ஆனால் ஏற்கனவே இருந்த அரசு எனக்கு உதவியாக இல்லை என்று ஒரு

[திரு. ப. உ. சண்முகம்] [1977 ஜூலை 12

குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த அரசு என்று யாரைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இங்கே இருந்த அட்வைசர்ஸ் ஆட்சியைச் சொல்கிறார்களா, அல்லது அதற்கு முன்பு ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சொல்கிறார்களா, அதைத் தெளிவாகச் சொல்லவில்லை. அப்போது ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சொல்லியிருப்பார்களானால், அது தவறான தப்பான வாதம் என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தண்ணீருக்குப் பதிலாக மின்சாரத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். கேரளாவிலிருந்து நாம் பெறும் மின்சாரத்தில் சரி பாதியைக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் மின்சாரத்தை கேரளாவிலிருந்து வாங்குகிறோம், என்ன விலைக்கு வாங்குகிறோம், என்ன விலைக்கு விற்கிறோம் என்று தெரியவில்லை. அதைப்பற்றி தமிழ் நாட்டு முதலமைச்சர் பேசியபோது, அதைப்பற்றி இரண்டு அமைச்சர்களும் பேசுவார்கள் என்று சொன்னார்கள். அது பத்திரிக்கையில் செய்தியாக வந்து இருக்கிறது. அதைப் பற்றிப் பேச்சுவார்த்தை என்று சொன்னால், எனக்குப் புரியவில்லை. தமிழ் நாடு கேரளாவிலிருந்து வாங்குகிற மின்சாரத்தை கருநாடகத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று எந்த நியதியும் இல்லை, நியாயமும் இல்லை. ஆனால் மின்சாரம் கொடுக்கவே கூடாது என்று சொல்லக்கூடிய சின்ன புத்தி படைத்தவனும் அல்ல.

மின்சாரம் கொடுப்பது வேறு, தண்ணீர் வாங்குவது என்பது வேறு. தண்ணீர் நமது உரிமை. மின்சாரம் கொடுப்பது மனிதாபிமானம். அதை நான் தடுக்கவில்லை. ஆனால் நம்முடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். நம்முடைய உரிமையை விற்று, தண்ணீர் வாங்குவது சரி அல்ல என்று நான் சுட்டிக்காட்டிக்கொண்டு, தாங்கள் கடிகாரத்தைக் காட்டிக்கொண்டு இருக்கிறீர்கள், அதற்கு மேல் நான் பேச விரும்பவில்லை, நான் எடுத்துக்கொண்டு பேசவேண்டிய கருத்துக்களை எல்லாம் சொல்ல முடியாமல் போய்விட்டாலும், என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை வைத்து இருக்கிறேன், இதில் ஏதாவது தவறான கருத்துக்கள் இருந்தால் திருத்திக்கொள்கிறேன், ஆகவே, என்னுடைய கருத்தையும் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று கூறி இந்த அளவோடு என் பேச்சை முடித்துக்கொண்டு, அமைகிறேன், வணக்கம் நன்றி.



1977 ஜூலை 12]

* திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணன் இராதா கொண்டு வந்து இருக்கும் தீர்மானத்தை வழி மொழிந்து பேசுகிறவகையில் எனக்கு வாய்ப்பு தந்தமைக்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிக்கும் தக்க வருவாய் கிடைக்கவேண்டும்; அதே நேரத்தில் இடைத்தரகர் லாபம் குறைக்கப்பட்டு, வாங்கி உபயோகிக்கும் பொதுமக்களுக்கும் அவை நியாயமான விலையில் கிடைக்கவேண்டும் என்று கொள்கையினை அறிவித்து இருக்கிறார்கள். இதனால் ஏழை எளிய மக்கள் பயன் அடைவார்கள் என்று நான் நம்புகிறேன். அதன் காரணமாக ஆளுநர் உரையை நான் வரவேற்கிறேன்.

விவசாயிகளுக்கு குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் விடாததால் லோயர் பவானி பாசனத்தில் உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடலைக்கு குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் விடாததால், அவர்கள் கடலை பிடுங்குகிற நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு அங்கே இருக்கிற விவசாயிகள் எல்லாம் கடலை பிடுங்க முடியாமல் நிலைமை ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எங்கள் பகுதியில் உள்ள கடைப்பள்ளி வாய்க்காலில் கீழே உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று முப்பது ஆண்டு காலமாக கேட்டு வருகிறோம். அரசாங்கத்திற்கு அது குறித்து பல மனுக்கள் தந்து இருக்கிறோம். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த வாய்க்கால் சீரமைக்கப்பட்டால் தற்போது பாதிக்கப்பட்டுள்ள 2,000 எக்கர் நிலம் பயன்பெறும். ஆகவே, அரசாங்கம் அந்தக் கோரிக்கையை பரிசீலித்து, போதிய அளவுக்கு தண்ணீர் கிடைக்கும் வகையில் அந்தக் கால்வாயை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் குடிநீர் வசதி செய்து தருவதற்காக திட்டங்கள் தீட்டப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நாங்கள் ஓட்டுக்கேட்கிற நேரத்தில், கிராமப்புறத்தில் உள்ள மக்கள் எல்லாம் நீங்கள் எது செய்தாலும் செய்யாவிட்டாலும் குடிநீர் பிரச்சனையை தீர்த்துத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கிராமப்புறத்தில் இருக்கும் மக்கள் எல்லாம் குடிநீர் கொண்டு வருவதற்காக ஒரு

மைல், இரண்டு மைல் சென்றுதான் எடுத்து வரவேண்டியிருக்கிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நெசவாளர்கள் பிரச்சினை. எங்கள் பகுதி சத்தியமங்கலத்தில் அதிகமான நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நூல் விலை ஏறுகிற நேரத்தில், அவர்கள் நெய்த துணியின் விலை குறைகிறது. இப்படி ஏற்றத்தாழ்வு ஏற்படுகிற நேரத்தில் நெசவாளர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுத்து அந்தத் துணிகளை வாங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும், அரிசன மக்களுக்கும் நல்ல வகையில் நல்ல திட்டங்களை இந்த கவர்னர் உரையில் அறிவித்து இருப்பதை மீண்டும் வரவேற்று, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களால் நாடு நலம் பெறவும், மக்கள் நல் வாழ்வு வாழவும், இந்தத் திட்டங்கள் செம்மையாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டு, அந்த வகையில் கவர்னர் உரைக்கு நான் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 9-50)

*திரு. நா. சுந்தரராஜ்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேதகு ஆளுநர் உரையில் செல்லும் முன்பு, இந்தச் சபையில் வீற்றிருக்கிற முதலமைச்சர் அவர்களையும், ஏனைய உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், பெருந்தலைவர் காமராஜரைத் தன்னுடைய தலைவராகவும், அண்ணா அவர்களை வழிகாட்டியாகவும் கூறிய முதலமைச்சர் அவர்கள் இன்று பதவியேற்றிருக்கிறார்கள். எனவே இந்த அவையில், மதிப்பிற்குரிய தமிழ் மகன், தியாகத் தொண்டர் தலைவர் காமராஜ் அவர்களுடைய திருவுருவப் படத்தை வருகிற 15-ம் தேதி திறந்து வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் இப்போதே உத்தரவாதம் அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் இந்தச் சட்டமன்றத்திற்கு நுழையுமுன் பல நம்பிக்கையில் நுழைந்தேன். ஆனால் இங்கே நான் பார்ப்பது எல்லாம் இந்த அவையில் ஒரு வானொலிக் கச்சேரி நடப்பதுபோலத் தான் காட்சி அளிக்கிறது. அரசியல் ரீதியாக கொள்கை வேறுபாடு இல்லாத—அண்ணா வழியில் செயல்படுகிறோம் என்கிற கச்சேரி ஆளுந்தரப்பிலும், எதிர்த்தரப்பிலும் வீற்றிருக்கிற





காரணத்தினால் ஒன்றும் புரியவில்லை. இரண்டு பேரும் அண்ணாவின் தலைமையை நாங்கள் ஏற்கிறோம் என்கிறார்கள். அண்ணாவின் கொள்கைப்படி அரசு செய்வோம் என்று ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் சொல்கிறார்கள். எதிர்க்கட்சியாக செயல்படக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணாவின் கொள்கைக்கேற்ப நாங்கள் எதிர்க்கட்சியில் பணியாற்றுவோம் என்று சொல்கிறார்கள். இரண்டு பேரும் அண்ணாவின் பெயரைச் சொல்லி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியாக பணியாற்றுகிற காரணத்தினால் மக்கள் மத்தியில் சந்தேகம் வளர்ந்துகொண்டிருக்கிறது. அண்ணாவின் எண்ணப்படி ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் பணியாற்றும் என்பது சற்று விசித்திரமாக எங்களுக்குத் தெரிகிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பெரும்பாலான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற ஒரு கட்சியைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் தரக்குறைவாகப் பேசுகின்றார்கள். அதற்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிப்படி செல்லுகின்ற இரண்டு கட்சிகளில் ஒன்று ஆளுங்கட்சியாகவும், மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் இங்கே இருந்துகொண்டு எப்படி கடமைகளை நிறைவேற்றப் போகிறார்கள் என்று ஐயப்படுவதாகச் சொன்னார்கள். ஐயப்படுகிற உரிமை அவர்களுக்கு உண்டு. அந்த உரிமையில் நான் குறுக்கிடவில்லை. ஆனால் அதைச் சொல்கிறபோது, இங்கே வானொலி நடத்திக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். டெல்லி நாடாளுமன்றத்தில் உத்தமர் காந்தியடிகளை வழிகாட்டியாகக் கொண்ட ஒரு கட்சி ஆளுகிற கட்சியாகவும், மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் அங்கே இருக்கிறது. நான் நினைக்கிறேன்—மாண்புமிகு உறுப்பினர் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் என்று கருதுகிறேன். பாராளுமன்றத்தில் தேசிய காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக இருக்கிறது. தேசிய காங்கிரஸ் கட்சிக்காரர்கள் உத்தமர் காந்தியடிகளை வழிகாட்டியாகக் கொண்டவர்கள். அங்கே ஆளுங்கட்சியாக இருப்பவர்களும் உத்தமர் காந்தியடிகளை வழிகாட்டியாகக் கொண்டவர்கள்தான். அப்படியானால் அங்கே எப்படி ஜனநாயக

அரசு நல்ல முறையில் நடைபெறுகிறது? அல்லது அங்கேயும் லாவணிக் கச்சேரிதான் நடைபெறுகிறது என்று கருதுகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைவர் அவர்களே அதைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார். லாவணி என்றால் என்ன அர்த்தம் என்று சொல்வார்களா? (சிரிப்பு).

**திரு. நா. சுந்தரராஜ்:** கிராமப்புறங்களில் விழா எடுக்கிற போது கரகாட்டம், மயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். அப்போது காமன்—மன்மதன் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று அவர்களே ஒருவருக்கொருவர் புகழ்ந்தும் பேசுவார்; இழித்தும் பேசுவார்கள். லாவணி என்பது ஒரு நுண்கலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அப்போது நீங்கள் பேசலாம்.

**திரு. நா. சுந்தரராஜ்:** மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் டெல்லி பாராளுமன்றத்தில் உத்தமர் காந்தியடிகளைத் தலைவராகக் கொண்டவர்கள் எதிர்க்கட்சியிலும், ஆளுங்கட்சியிலும் இருப்பதாகச் சொன்னார்கள். மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பது ஜனதா கட்சியாகும்.

* * * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆளுநர் உரையில் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,

* * * *

தரக்குறைவாகப் பேசுகின்றார். இதனை நீங்கள் அனுமதித்தால் ஒவ்வொருவரும் இவ்வாறு பேசத் தொடங்குவார்கள். அப்போது இந்தச் சட்டமன்றப் பேரவைக்குள்ள உரிமையில் இருந்து சென்று, நம் கருத்துக்களை வரம்புமீறி, உரிமைமீறி வெளியிடக்கூடிய நிலைக்குப் போய்விடுவோமோ என்று ஐயப்படுகிறேன். ஆகவே தயவுசெய்து தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினருக்கு எச்சரிக்க வேண்டும். இதுபற்றி தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(9.50-10.00 மணிக்குள் சில பகுதிகள்.)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நமது சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப்பற்றி பேசக் கூடாது. இது நாம் கடைப்பிடித்து வருகிற மரபாகும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அவர் பேசிய அந்தப் பகுதியை பதிவேட்டில் இருந்து எடுக்க, உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஓ. சுப்பிரமணியன்:** நாடாளுமன்றம்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதும் நீக்கப்படவேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டது, நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியாக இருக்கிற இரண்டு பேர்களுமே உத்தமர் காந்தியடிகளை தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் என்பதுதான். அதில் எந்தவிதமான குறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

* * * *

உறுப்பினர் குறிப்பிட்டதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல எடுத்துவிடுவது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நாடாளுமன்றத்திலுள்ள கட்சியைப்பற்றி எடுத்துப் பேசியதை, பேரவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநர் அவர்களுடைய உரையில் ஏழை அரிசன மக்களுக்கு இருபது அம்சத் திட்டத்தின் மூலம் ஏற்பட்ட நன்மைகள்பற்றி தெளிவாகக் குறிப்பிடவில்லை. தெளிவாக விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அடுத்து காவிரித் தண்ணீரை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்ததற்காக நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும் இதில் நம்முடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த வகையில் நான் அவர்களைப் பார்த்துச் சொல்லிக்கொள்வது எல்லாம், இன்றைய தினம் தண்ணீர் தருவதாகச் சொல்லிவிட்டு, நடவுக்குப் பிறகு

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (9.55-9.56-க்குள் சில பகுதிகள்.)

தண்ணீர் கொடுக்காமல் தண்ணீரைத் தேக்கிவிட்டால் அப்போது பயிர்கள் எல்லாம் பாழாகிவிடும். அதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, முதலமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அறநிலையத்துறை சம்பந்தமாக தெளிவான குறிப்பு ஆளுநர் உரையில் காணப்படவில்லை. அரசாங்கம் அறநிலையத் துறை சம்பந்தமாக என்ன நிலைமையைப் பின்பற்ற இருக்கிறது, மக்களுக்கு ஏற்றவகையில் அறநிலையத்துறை எப்படி சீர்திருத்தம் செய்யப்படும் என்று தெரிந்தாக வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல.

ஊராட்சி, நகராட்சித் தலைவர்களை நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வகை செய்ய இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களை நேரிடையாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அதில் உள்ள குறைபாடுகள் மறைந்துவிடும் என்று சொல்வதற்கில்லை என்று தெரி

(முற்பகல் 10-00)

வித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், ஏராளமான பிரச்சினைகள், நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்கின்றன. அதோடு, தலைவர் தேர்தலை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதால் இன்னும் பிரச்சினைகள் அதிகமாகும். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குக் கட்டுப்பட மாட்டார். பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களையும் கட்டுப்படுத்த முடியாது. தன்னிச்சையாக எது வேண்டுமானாலும் செய்கின்ற நிலைமை உருவாகும். ஜனநாயக அடிப்படையில், காந்தியார் கண்ட, காமராஜர் கண்ட ஒரு கனவு நனவாகுமா என்ற அச்சம் இருக்கிறது. தேர்தல்தான் முக்கியம். எனவே, அதை எப்படி நடத்துவது என்பதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் காந்தியார் கண்ட, காமராஜர் கண்ட கனவை, நனவாக்கும் முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.



திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டையில் பாலக்குறிச்சி என்ற ஒரு ஊர் இருக்கிறது. தி.மு.க. அரசு இருந்த நேரத்தில் அந்த ஊரை இராமநாதபுரம் மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று தீவிரமாக இருந்தார்கள். திருச்சியிலிருந்த ஒரு அமைச்சர் இராமநாதபுரம் மாவட்டத்தோடு சேர்க்கக் கூடாது என்று தீவிரமாக இருந்தார். அப்படிப்பட்ட நிலையில், அதாவது ஸ்டேடஸ்கோ என்று சொல்லும்படியான, எந்தச் சார்புமற்ற நிலையில், புதுக்கோட்டையில் இருக்கிறதா, இராமநாதபுரத்தில் இருக்கிறதா என்று சந்தேகப்படும்படியான நிலையில் இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம், சிறிய, ஜனத்தொகைக் குறைவான மாவட்டம். இராமநாதபுரம் மாவட்டம் பெரிய மாவட்டம். எனவே, அந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தோடு தொடர்ந்து இருந்தால் அந்த ஊர் நன்மை பெறும். பெரிய வளர்ச்சி அடையாத மாவட்டத்தோடு சேர்ப்பது சரியல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவைப் பார்த்து பாலக்குறிச்சியை புதுக்கோட்டையோடு இணைக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். [illegible] அவசரமாக முடிவெடுக்காமல் நிதானமாகப் போக்கை அனுசரித்து நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் போன்ற காரியங்கள் ஆளுநர் அவர்களுடைய உரையில் இடம் பெறாததற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

## (6) முதலமைச்சர் அறிவிப்பு.

### திரு. காமராஜ் அவர்களின் உருவப் படத்தை சட்டப் பேரவையில் வைப்பது குறித்து.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த அவைக்கு ஒரு செய்தியை நான் சொல்ல வேண்டுமென்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். அந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்வதிலே எல்லோரும் பங்கு கொள்வீர்கள். மகிழ்வீர்கள் என்பதிலே எனக்கு நிச்சயமான நம்பிக்கை உண்டு.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 12

மறைந்த அமரர் பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய உருவப் படத்தினை இந்தச் சட்டமன்றத்திலே வைக்க வேண்டுமென்பதற்காக இப்போது நாடாளுமன்றத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு சஞ்சீவி ரெட்டி அவர்களுக்கு நான் கடிதம் எழுதி இருக்கிறேன். அவர் வந்து திறந்து வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விட்டு பதில் கிடைத்த பிறகு விரைவில் காமராஜ் அவர்களுடைய உருவப் படம் இங்கே திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

**திரு. டி. இராமசாமி:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய படத்தை இங்கே திறந்து வைப்பதாகத் தெரிவித்தமைக்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியிருக்கிறேன். இந்த மன்றத்தில் இப்போதாகிலும் இப்போது அமைந்துள்ள இந்த அரசு முன்வந்து இந்த நல்ல காரியத்தைச் செய்ய முன் வந்தமைக்காக ஜனதா கட்சியின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவர் காமராஜ் அவர்களுடைய திருவுருவப் படத்தினை இங்கே திறப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரரும், நம்முடைய தமிழக முதல்வராக நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றியவருமான காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தினை திறப்பதற்கு முயற்சி எடுப்பதற்கு எங்களுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 ஜூலை 12]

(திரு. நா. சுந்தரராஜ் பேசுவதற்கு எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பில் உங்கள் கட்சித் தலைவர் சொல்லிவிட்டார். ஒரு கட்சிக்கு ஒருவர் தான் பேச வேண்டும். ஆகவே தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. எம். ஏ. லத்திப்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இங்கே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதற்காக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றி செலுத்திக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மறைந்த முதலமைச்சரும், பெருந்தலைவருமான பெருமைக்குரிய காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்திலே திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான தகவலை அறிவித்ததற்காக இந்த மன்றத்திலுள்ள எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சார்பிலும், எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** பேரவைத் தலைவரவர்களே, மறைந்த திரு. காமராஜ் அவர்கள் படத்தை இங்கே திறந்து வைப்பது சம்பந்தமாக எடுத்த முன் முயற்சிக்கும், திறந்து வைப்பதற்காக அழைத்திருக்கக்கூடிய இன்றைய சபாநாயகரும், நாளைய ஜனாதிபதியாக ஆகும்படியான வாய்ப்புள்ளவருமான சரியான நபரைத் தேர்ந்தெடுத்திருப்பதற்கும் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். மறைந்த காமராஜ் அவர்கள் எங்களுடைய கட்சித் தலைவர் தோழர் ராமமூர்த்தியினுடைய நெருங்கிய நண்பராகவும் இருந்திருக்கக் கூடியவர். ஆகவே, என்னுடைய கட்சியின் சார்பில் காமராஜ் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கும்படியான இந்த முயற்சியை வரவேற்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** மறைந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய படத்தை இங்கே திறந்து வைப்பதற்காக பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இங்கே முதலமைச்சராக இருந்தவரும், தேச சேவை செய்தவருமான பி. எஸ். குமாரசாமி ராஜா

[திரு. கே. கந்தசாமி] [1977 ஜூலை 12

போன்றவர்களுடைய படத்தையும் திறந்து வைத்தால் நலமாக இருக்குமென்ற கருத்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

### 5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. போ. கோபாலன்: மரியாதைக்குரிய அவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய நன்றியைத் தெரிவிக்கும் முன்பாக, இந்த மன்றத்தில் மறைந்த தலைவர் காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க முடிவு செய்ததற்காக தமிழக அரசுக்கும், முதலமைச்சர்—புரட்சித் தலைவர் அவர்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்திலே அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர்களாகிய நாங்கள் எங்களுடைய தொகுதிகளிலே மக்களைச் சந்தித்து எந்த அளவுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ அந்த வாக்குறுதிகளை எல்லாம் நல்ல முறையில் இந்த அரசாங்கம் நிறைவேற்றும் என்பதற்கான நம்பிக்கையைத் தெரிவிப்பதாக இந்த ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருக்கிறது என்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்ற முறையில் இந்த அரசு அமைந்திருக்கிறது என்ற நம்பிக்கையையும் இந்த உரை அளித்திருக்கிறது.

1967-ஆம் ஆண்டுக்கு முன்னால், 10, 15 ஆண்டுகளாக, இந்தத் தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக வாலிபர்கள், தங்களுடைய இன்னுயிரை ஈந்து இனிய இல்லற வாழ்க்கையைத் துறந்து அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி மலர வேண்டுமென்ற நோக்கோடு பெரும் போராட்டங்களில் ஈடுபட்டு, சிறைச் சாலைகளை நிரப்பி, அந்த ஆட்சியைப் பெற்றுத் தந்தார்கள்.



1977 ஜூலை 12] [திரு. போ. கோபாலன்]

அந்த ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு மலரும், அண்ணாவின் கனவெல்லாம் நனவாகும் என்ற நம்பிக்கையோடு இருந்த நேரத்தில், இரண்டாண்டுகள் ஆட்சி பீடத்திலிருந்த அண்ணா அவர்கள் மறைந்தார். அதற்குப் பிறகு இந்த நாட்டில் என்னென்ன நடந்தது என்பதை தமிழ்நாட்டு மக்கள் கண்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் நாங்கள் நம்பிக்கை கொடுத்தோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலற்ற நேர்மையான ஒரு ஆட்சி அமையும் என்ற உத்திரவாதத்தை அளித்தோம். அந்த உத்திரவாதத்தை நம்பி லட்சோபலட்ச வாக்காளர்கள் எங்களை ஆதரித்து ஆளுங்கட்சியாக அமர்த்தியிருக்கிறார்கள். இங்கே ஒரு உறுப்பினர், "ஊழலற்ற சர்க்காரை அமைப்போம் என்று சொன்னவர்கள் ஊழல் செய்பவர்களாக இருக்கிறார்கள்" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர முயற்சித்தார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், தேர்தல் நேரத்திலே மக்களை சந்தித்து நெஞ்சு நிமிர்த்திச் சொன்னோம், எங்கள் ஆட்சி வருமானால் ஊழலற்ற நேர்மையான சர்க்காரை அமைத்துத் தருவோம் என்று. ஆனால் அப்படிப்பட்ட வாக்குறுதியை அவர்கள் மக்களைப் பார்த்து, கொடுக்க முடிந்ததா என்றால், நான் நிச்சயமாகச் சொல்வேன், அவர்களால் அப்படிப்பட்ட வாக்குறுதியைக் கொடுக்க முடியவில்லை.

(முற்பகல் 10-10)

அந்த அளவிற்கு அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தாலும் கூட மக்கள் எள்ளி நகையாடுவார்கள் என்பதை தமிழக மக்கள் அறிந்திருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழக அரசு அமைந்திருப்பதை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்திருப்பதை தமிழக மக்கள் பூரிப்போடு வரவேற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கவர்னர் அவர்களது உரையில் அந்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்திருப்பதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும், இந்த அரசு ஜாதி சமயப் பற்றற்ற அரசாக அமையும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஜாதி சமய வேறுபாட்டைக் காட்டி எந்த அரசும் நடக்க முடியாது என்ற

உண்மையை தான் ஒப்புக்கொள்கிறேன். எந்த அரசும் ஜாதி வேறுபாட்டை, இன வேறுபாட்டைக் காட்டி நடந்து கொள்ளக் கூடாது என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் எங்களுடைய தலைவர் அவர்களை, ஜாதியின் பெயரால் தமிழக மக்களிடமிருந்து பிரித்து வைக்க முயன்றார்கள், எங்களுடைய தோழர்களை இனத்தின் பெயரால் தமிழக மக்களிடமிருந்து பிரித்து வைக்கப் பார்த்தார்கள், பெரிய ஊர்வலங்களைக் கூட நடத்திக் காட்டினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவேதான் இந்த கவர்னர் அவர்களது உரையில் இந்த உறுதிமொழி வழங்கப் பட்டிருக்கிறது; எங்களது ஆட்சி நிச்சயமாக ஜாதி வேறுபாட்டிற்கு இடம் அளிப்பதாக இருக்காது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அமரர் பேறிஞர் அண்ணா அவர்கள் படி அரிசித் திட்டத்தை இந்த நாட்டில் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினார்கள். இரண்டு ஆண்டுக் காலம் அதை நிறைவேற்றிவிட்டு மறைந்து போனார்கள். அத்தகைய பெருந்தகை இருந்த இடத்தில், அவர்கள் இருந்த இடத்தில் இவர்களும் இருக்கிறார்களே என்று எண்ணி நான் கண்ணீர் வடித்தேன், அந்தக் கண்ணீரில் விளைந்ததுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டுச் சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை மீண்டும் தர முடியவில்லையே என்று வருத்தப்பட்டு, அண்ணா அவர்கள் இருந்த இடத்தில் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களே என்று வருந்தப்பட்டு, இந்த நாட்டு மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக, இந்த நாட்டு மக்கள் சிரான நிர்வாகத்தைப் பெற வேண்டும் என்பதற்காக, இந்த நாட்டு மக்கள் ஊழலற்ற ஆட்சியைப் பெற வேண்டும் என்பதற்காக, மக்கள் இந்த ஆட்சியை அமைத்திருக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் மக்களின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சி பீடத்தில் ஏறினார்கள். அந்த நம்பிக்கைக்கு மாறுபட்ட வகையில் இப்படிப்பட்டவர்கள் ஆட்சி பீடத்தில் இருக்கிறார்களே என்று அப்போது கண்ணீர் வடித்தேன். காரணம், எவ்வளவோ நம்பிக்கையோடு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சி பீடத்தில் அமர்த்தினார்கள். நாங்கள் அத்தனை பேர்களும்





அந்த ஆட்சி அமைவதற்காக எவ்வளவோ போராட்டங்களில் பங்கு கொண்டுள்ளோம். எங்கள் வாழ்க்கையின் இளம் பருவத்தையெல்லாம் அதற்காக நாங்கள் விரைக்கிவிட்டோம் என்று நான் இந்த அவையில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. துரை முருகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை பேறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்தார்கள். அதையெல்லாம் இவர்கள் எடுத்து விட்டார்களே, அமரர் அண்ணா அவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் இப்படிப்பட்டவர்கள் அமர்ந்திருக்கிறார்களே என்று கண்ணீர் வடித்தேன், அந்தக் கண்ணீரில் தோன்றியதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று எங்கள் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்கள்தான் படி அரிசித் திட்டத்தை எடுத்துவிட்டோம் என்று சொன்னால்—அதற்காக கண்ணீர் வடிக்கிறோம் என்று சொன்னால்—ஐயையோ, அண்ணா அவர்களின் படி அரிசித் திட்டத்தை எடுத்துவிட்டார்களே என்றால், இப்போது இவர்கள் அமரர் அண்ணா அவர்களின் சார்பில் பேசுகிறார்களே, இப்போதாவது முதல் அமைச்சர் அவர்கள் படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்து போடப் போவதாக அறிவிக்கப் போகிறார்களா, ஏன் இந்த அறிக்கையில் அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை, அப்படி இல்லை என்றால் மக்கள் வேறு விதமாக நீங்கள் சிந்திய கண்ணீரை க்ளிஸரின் கண்ணீர் என்று நினைத்து விடுவார்களே, ஆகவே இப்போது கூட அதைப் பற்றிச் சொல்லலாம் அல்லது பட்ஜட் உரையில் வரும் என்று சொல்லலாமே; அதை தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒரு ஒழுங்குப் பிரச்னை அல்லவென்று கூறிக் கொண்டு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேச அனுமதிக்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: இது எப்படி ஒழுங்குப் பிரச்னை அல்ல என்பதை விளக்கினால் நன்றாகயிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் நடைமுறை விதிகளை, சட்ட விதிகளை மீறினால் சொல்லலாம். அவர்களது ஒப்பினியனை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களது கருத்தை சொல்லியிருக்கிறார்கள் ஆகவே இதில் ஒழுங்குப் பிரச்னை எதும் இல்லை.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, படி அரிசித் திட்டத்தை மீண்டும் தருவோம் என்று புரட்சித் தலைவர் சொல்லவில்லை. அவர்களின் அந்தப் பேச்சு ரிக்கார்ட் செய்யப்பட்டு எல்லா இடங்களிலும் ஒலிபரப்பப்பட்டது. உறுப்பினர்கள் அவர்கள் விரும்பினால் கேட்டுக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர். அவர்கள் கூறினார்கள்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டு வானொலியில் பேசியபோது, டி.வி.யில் பேசியபோது, படி அரிசித் திட்டம் தருவோம் என்று சொல்லப்படவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாக எந்தச் செய்தியையும் இங்கே சொல்லாமல் அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : முதல்வர் அவர்கள் அப்படிப் பேசவில்லை என்று சொல்கிறார்கள். "இதய சுத்தியோடு படி அரிசித் திட்டம் படைத்த அமரர் அண்ணா இருந்த அந்த இடத்தில் இப்படிப்பட்டவர்களும் அமர்கின்ற நிலை ஏற்பட்டு விட்டதே என்று எண்ணி கண்ணீர் வடித்தேன். அந்தக் கண்ணீரில் தோன்றியதுதான் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்"—முதல்வர் அவர்களின் பேச்சு. 1—6—77. அண்ணா பத்திரிக்கையில் வந்திருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் படி அரிசித் திட்டத்தைத் தருவோம் என்று சொல்லி அதை நிறைவேற்றினார்கள். இவர்கள் நிறைவேற்றவில்லையே என்று சொல்லி கண்ணீர் வடித்தேன் என்றும் அந்தக் கண்ணீரில் தோன்றியதுதான் அனைத்திந்திய





அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், அந்த படி அரிசித் திட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் துரை முருகன் அவர்கள் கற்பனை செய்து கொள்வார்களேயானால் அவர் கற்பனையில் நான் குறுக்கிடத் தயாராயில்லை. அமரர் அண்ணா அவர்களின் லட்சியம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றார்கள். அதன் அடிப்படையில் இயங்கி இங்கு ஒரு ஊழலற்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையில் எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது என்பதையும், அண்ணாயிஸம் என்று நாங்கள் வெளியிட்டிருப்பதில்கூட படி அரிசித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டு, பேசும்போது, கருத்துக்கள் வெளியிடும்போது பதினைந்து நிமிடங்களுக்குள் பேசியாக வேண்டும் என்ற கட்டாயத்தின் காரணமாக செய்திகள் சொல்லும்போது அல்லது வெளியிடும்போது முன் பின்னாக செய்திகளை வெளியிடாமல், ஆங்காங்கு உள்ள இரண்டொரு வார்த்தைகளை வரிசையாக எடுத்துப் பேசினால் யாருடைய பேச்சையும் திசை திருப்பிவிட முடியும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, தயவு செய்து இந்த வேண்டாத விவகாரங்களை நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். நேரத்தை வீணாக்குவதில் பயன் இல்லை. என்ன செய்ய வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டு. அதை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்கிற நேரமாக இது அமைய வேண்டும் என்று கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன படி. அரிசித் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று இப்போது கூட முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்களின் படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றாத திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் அவர்கள் கூற்றுப்படி, அண்ணாவின் கொள்கைகளை இவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று

பொருள்படுகிறது. ஆகவே அண்ணா அவர்களின் படி அரிசித் திட்டத்தை—அண்ணாவினுடைய உண்மையான வாரிசுகள் என்று சொல்கிறார்களே—இவர்களாவது நிறைவேற்றுவார்களா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தயவு செய்து அந்த முழுப் பேச்சையும் படித்துப் பார்க்க வேண்டும். அதிலே குறிப்பிட்டிருப்பது என்னவென்றால், மக்களுக்கு என்ன சொன்னோமோ அதைச் செய்து காட்டுவேன் என்ற முறையில் அவர்கள் சொன்னதை நிறைவேற்றுவதற்காக இரண்டொரு மாவட்டங்களில் செய்து காண்பித்திருக்கிறார்கள் என்று சொல்லி அது தொடர்ந்திருக்கிறது என்பதை இங்கிருக்கிற எதிர் கட்சித் தலைவர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதை அவர்கள் கவனிக்காமல் இருந்தால் நான் சொல்கிற விளக்கத்தை அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னென்ன சொன்னார்களோ அதைச் செய்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு பயன்படுத்திய ஒரு வார்த்தையின் விளக்கத்தை வைத்து அதன் அடிப்படையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது என்று சொல்லிக் காட்டி, நீங்கள் இப்படியெல்லாம் திசை திருப்ப வேண்டும் என்று எண்ணினால், எங்களை ஏமாற்ற வேண்டும், சிக்க வைக்க வேண்டும் என்று விரும்பினால் அப்படிப்பட்ட ஏமாளிகளாக நாங்கள் இருக்க மாட்டோம். இப்போதுள்ள நிலைமையில் எந்த அளவில் எப்படி அரிசி விற்கப்படுகிறது என்பதும், எந்தளவில் நெருக்கடி இருக்கிறது என்பதும், பற்றாக்குறை இருக்கிற சூழ்நிலையும் டெல்லி மாநகரத்தில் உள்ள மத்திய அரசிடமிருந்து அரிசி வாங்கி விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதையும், எல்லோரும் உணருவார்கள்.

ஒவ்வொருவருக்கும் லட்சியம் இருக்கலாம், ஆசை இருக்கலாம், பேராசை கூட இருக்கலாம். பேராசை என்றால் சுயநலமற்ற பேராசை இருந்தால் பரவாயில்லை. நாங்களும் ஒரு இலட்சியத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். அமரர் அண்ணா அவர்களின் கொள்கைகளைக் கடைப்பிடித்து, நியாயமான நிர்வாகத்தில் குறுக்கிடாது, லஞ்சம் வாங்காது ஊழலற்ற ஒரு நல்லாட்சி அமைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த அடிப்படையில் தமிழக மக்களுக்கு எந்தெந்த வகையில் நன்மை



செய்ய முடியுமோ அவை அனைத்தையும் எங்களால் இயன்றளவு செய்வோம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 15-ஆம் தேதி அன்று நான் பதில் சொல்ல வேண்டியிருப்பதால் இத்தோடு நான் நிறுத்திக் கொள்கிறேன். 15-ஆம் தேதி அன்று நான் பதில் சொல்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. மு. கருணாநிதி :** ஒரு சிறு விளக்கத்தை மட்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரிலிருந்து அரிசியை வாங்கி விநியோகம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். (**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் அப்படி சொல்லவில்லை. நீங்கள் இருந்தபோது வாங்கினீர்கள் என்று தான் சொன்னேன்.) சரி, அதாவது, நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, அதாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கும்போது அரிசி தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் மத்திய சர்க்காரிலிருந்து அரிசி வாங்கி விநியோகம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைப் பற்றிதான் தொடர்ந்து அவர்களது பேச்சில் சொன்னார்கள் என்று கருதுகின்றேன். . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் தான் விரையும், இப்படி விவாதம் போய்க் கொண்டிருப்பதை யாரும் விரும்ப மாட்டார்கள் என்று கருதுகின்றேன். மறுபடியும் சொல்லுகின்றேன். ஒரு செய்தியை, நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆட்சிக்கு வருபவர்கள் மக்களுக்கு என்ன சொல்லுகின்றார்களோ அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நினைப்பது வழக்கம். அந்த அடிப்படையில் தங்கள் கொள்கைகளை மக்களிடம் சொல்லி வாக்கு கேட்கின்ற நேரத்தில் அமரர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு மக்களிடம் சொன்ன காரியத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று விரும்பிய நேரத்தில் எத்தனை கோடி செலவு ஏற்பட்டாலும் சொன்னதை நிறைவேற்ற வேண்டும் என்பதில் எவ்வளவு ஆசைப்பட்டார்கள் என்பதையும், அந்த நேரத்தில் எப்படி படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வருவது என்று ஆலோசித்த நேரத்தில் அதிகாரிகள் இது முடியாது என்று

சொன்னபோது, முடியாது என்று மட்டும் சொல்லாதீர்கள். எப்படி செய்வது என்பதற்கு ஆலோசனை கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள் என்பதைக் கூறியிருக்கிறேன்.

அதுபோன்று குடி தண்ணீர் பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டம், மூடப்பட்ட மில்களை திறக்க வேண்டிய பிரச்னை, ஜாதி வேறுபாடு பிரச்னை, குழப்பங்கள், நிர்வாகத்தில் தலையீடு, ஊழல், லஞ்சம் இவைகளை எல்லாம் நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை மக்கள் முன் வைத்து, அவர்கள் எங்களை இந்தப் பதவிக்கு உட்கார வைத்து இருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பாக, அமைச்சரவையின் சார்பாக எங்கள் வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்து எப்பாடுபட்டாகிலும் இதை நிறைவேற்றுவதற்கு எது தடையாக இருந்தாலும், நிறைவேற்றி வைக்க பாடுபடுவோம், அது முடியாவிட்டால், உடனே மக்களிடம் சென்று, விளக்கங்களைச் சொல்லி மக்கள் எங்களை ராஜிநாமா செய்ய வேண்டும் என்று விரும்பினால் ராஜிநாமா செய்து மீண்டும் தேர்தலுக்கு நிற்போம் என்கின்ற முடிவைச் சொல்வதற்கு இந்த ஆட்சி தயங்காது என்று சொல்லுகின்ற அதே நேரத்தில், மீண்டும் சொல்லுகிறேன்.

படி அரிசித் திட்டத்தைப் பற்றிப் பொதுக் கூட்டங்களிலோ அல்லது வேறு எங்காவது படி அரிசி போடுகிறோம் என்று நாங்கள் சொன்னதாக யாரும் நிரூபிக்க முடியாது என்பதையும், உதாரணமாக அமரர் அண்ணா அவர்கள் சொன்னதை நிறைவேற்றுவதற்கு முன்வந்தார்கள், என்ற எண்ணத்தில் எங்கள் அறிக்கையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** ஒரு சிறு விளக்கம். . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** சபை தலைவர் அவர்களே, வானொலியில் நமது முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சைப் பற்றி எதிர் கட்சி உறுப்பினர் ஒருவர் இங்கே தனது எதிர்ப்பை தெரிவித்து, ஒரு படி அரிசி போடுவேன்



என்று கூறி, அண்ணா அவர்கள் அதை நிறைவேற்றியதற்குப் பிறகு, அதைத் தொடர்ந்து ஆட்சியில் வந்தவர்கள் அதை கைவிட்டு விட்டார்கள் என்பதை நினைத்து வேதனை கண்ணீர் விடுத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பேச்சின் சாரத்தைப் பொறுத்தவரை என்ன கருதுகிறேன் என்றால், அதை மாண்புமிகு மன்றத்திற்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய பேச்சில். . . .
Anna was more qualified than the Opposition was decrying.
என்ற அளவுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, எதிர் கட்சிகளை தரக் குறைவாக பேசுவதற்காக அல்ல என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** அண்ணா அவர்கள் சொன்னதை நிறைவேற்றியதால், அன்று புகழுக்குரியவர் என்பது தான் முதலமைச்சர் அவர்கள் பேச்சின் சாரம் என்று அவர்களுடைய நீண்ட நேர பேச்சின் விளக்கத்திலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது. அண்ணாவின் திட்டத்தை தொடராமல் விட்டுவிட்டது அந்த அரசு. இப்போது வந்திருக்கின்ற அண்ணாவின் உண்மையான அரசு, அண்ணாவின் அரசு நிறைவேற்றிக் கொண்டிருந்த திட்டத்தை மீண்டும் தொடருமா? அண்ணா அவர்கள் படியரிசித் திட்டத்தை கொண்டுவர நினைத்த போது அதிகாரிகள் சொன்ன காரணங்களையும் எடுத்துச் சொல்லி, உணவுப் பற்றாக்குறை இருந்தும் அண்ணா சொன்னதை செய்ய முன்வந்தார்கள். இப்போது கூட கவர்னர் உரையில், 'தமிழ் நாட்டின் உணவு நிலை திருப்திகரமாக இருக்கிறது. அடுத்து வரும் மாதங்களில் பற்றாக்குறை எதும் இராது என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பொது மக்களின் தேவைகளுக்கு ஏற்ப அரிசி கையிருப்பும் போதுமானதாக உள்ளது' என்று சொல்லக்கூடிய—இவ்வளவு வசதியான சூழ்நிலையிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் சொன்னதை நிறைவேற்றி வந்தார்கள். இடையிலே வந்த இந்த பாவிகள் அதை விட்டு விட்டார்கள். அதை இப்போது அண்ணாவின் உண்மையான வாரிசு என்று சொல்லிக் கொள்கின்ற இந்த அரசு படி அரிசித் திட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இதற்கான விளக்கத்தை 15 ஆம் தேதியன்று என் பதிலில் தெரிவிக்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** சபை ஆரம்பத்திலிருந்து நாங்களும் கவனித்துக் கொண்டேயிருக்கிறோம். நாங்களும் சில பேர் இங்கு இருக்கிறோம் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். . . (சிரிப்பு) திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதிலுள்ள ஸ்பிலிட் பற்றியும், அதிலுள்ள கான்ட்ரவர்ஸி பற்றியும் தான் பேச்சு இருக்கிறது. இப்படி முரண்பாடுகள் இருப்பது இயற்கையானது தான். ஆனால் வெளியில் காத்திருக்கின்ற மக்கள் வேறு பிரச்னைகளை அறிந்து கொள்ள விரும்புகிறார்கள். ஆகவே இதற்கு ஒரு லிமிட் வைத்துக் கொள்ளுங்கள். முரண்பாடு இருக்கலாம், இருக்காது என்று சொல்லவில்லை. அதைப் பற்றி பேச வேண்டியதுதான். ஆனால் அதற்கு ஒரு லிமிட் வேண்டும். இங்கே நடக்கின்ற பிரச்னையைப் பார்த்தால் அண்ணா வழியில் இருப்பது நாங்களா அல்லது நீங்களா என்பது தான். இதை நான் ஆட்சேபிக்கவில்லை. . . .
The hon. Members have got every right but . . . . .
மற்ற பிரச்சனைகள் காத்திருக்கும்போது இவற்றுக்கெல்லாம் ஒரு லிமிட் இருக்க வேண்டும். ஒரு டைம் லிமிட்டுக்குள் இருந்தால் நல்லது . . . அந்த முறையில் நீங்கள் சபையை பார்த்துக் கொள்ள வேண்டும்.

**திரு. க. அன்பழகன் :** இந்த அவையில் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய கருத்து, இப்போது சபையில் பேசப்பட்டு வரும் பிரச்னைகள் தேவையில்லாத பிரச்னைகள் என்பதாகும். இங்கே பேசப்பட்ட பிரச்னைகள் மிகவும் முக்கியமான பிரச்னைகள்தான் என்பதை மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்து இருப்பார்கள் என்றே கருதுகிறேன். இங்கே பேசப்பட்டது



உணவுப் பிரச்னையைச் சார்ந்த ஒரு முக்கியமான பிரச்னை. இரண்டாவது, அண்ணா அவர்களுடைய பெயரை இரண்டு தரப்பினரும் அண்ணாவைத் தங்களுக்கு உரியவராக ஆக்கி விட வேண்டும் என்பதற்காக பேசுகிற பேச்சுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது என்றும் சொன்னார்கள். ஆளும் கட்சியில் இருக்கின்றவர்களும் அண்ணா பெயரைச் சொல்லித்தான் இங்கே வந்து ஆட்சியில் அமர்ந்து இருக்கிறார்கள். எதிர்க் கட்சியினராக இடம் பெற்றுள்ளவர்களும் அண்ணா பெயரைச் சொல்லித்தான் இங்கே வந்திருக்கிறார்கள். ஆகவே இருவருமே அண்ணாவைப் பற்றி அதிகமாகப் பேசுவது இயற்கைதான். இந்த நியாயத்தை மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்கள் முறையென ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமே தவிர, குறைபாடாக இதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த அவையிலுள்ள 234 அங்கத்தினர்களில் ஆளும் கட்சியில் 125 பேர்களும், ஒருவர் சபாநாயகராக ஆகிவிட்டதால் . . .125 பேர்களும், எதிர்க் கட்சியில் இருக்கின்ற 48 பேர்களும், ஆக முக்கால் பங்கினர் அண்ணாவின் பெயரால் இங்கே வந்திருப்பதால், அண்ணாவைப் பற்றிக் குறிப்பிடுவது அவர்களது கடமையே தவிர அதில் எவ்வித குறைபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தேர்தலில் உபயோகிக்கப்பட்ட அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள், ரேடியோப் பேச்சின் உரை இவைகளை குறிப்பிட்டு ஒழுங்குப் பிரச்னை கிளப்பக் கூடாது. இங்கே சபையின் விதிகள் மீறப்பட்டிருந்தால் அதைப்பற்றி மட்டும் சுட்டிக்காட்டி ஒழுங்குப் பிரச்னை எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது திரு. கோபால் அவர்கள் தொடர்ந்து பேசலாம். . . .

(திரு. கோபால் அவர்கள் பேசுவதற்கு எழுந்தார். . .)

**திரு. கூத்தகுடி. ச. சண்முகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னது வெளியில் தவறாக வெளி வந்து விடக் கூடாது. இங்கே சபையில் இதற்கு முன்னால், மனிதாபிமானம் என்பதைப் பற்றி 20 நிமிட நேரமும், ஹோகாஸ் பற்றி ஏழு நிமிட நேரமும் விவாதங்கள் எழுப்பப்பட்டன.

சபையிலுள்ள பொறுப்பானவர்கள் இப்படிப்பட்ட விஷயங்களை எடுத்து விவாதித்து நேரத்தை எடுத்துக் கொள்வது சரியல்ல என்பதைத் தான் குறிப்பிட்டார்கள். ஆகவே இதை சபைத் துணைத் தலைவர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. பே. கோபாலன்: கிராமங்கள் தான் இந்த நாட்டின் உயிர்நாடி என்று சொல்வார்கள். அத்தகைய கிராமங்களிலே வாழும் மக்கள் பூராவும் நல்ல முறையிலே வாழக்கூடிய திட்டங்களையெல்லாம் இந்த கவர்னர் அவர்கள் உரையிலே கண்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், மதுவிலக்குக் கொள்கையை நல்ல முறையிலே அமுல்படுத்துவதற்கான உறுதியை இந்த அரசாங்கம் கொண்டிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அரிய வாய்ப்பைத் தந்த மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற இந்த விவாதத்தில் நானும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

உள்ளம் திறந்து சொல்ல வேண்டுமென்றால், இந்த உரை உப்புசப்பற்ற உரையாகத் தான் காணப்படுகின்றது. அதற்காக நான் மெத்த வருத்தப்படுகின்றேன். பள்ளி மாணவன் ஒருவனைப் பார்த்து, 'அசோகர் நாட்டிற்கு என்னென்ன நன்மைகளைச் செய்தார்?' என்று கேட்டால், அந்த மாணவன் சொல்லக்கூடிய பதில், 'சத்திரம் கட்டினார், சாலைகள் அமைத்தார். சாலைகளில் நிழல் தரும் மரங்களை நட்டார், குளங்களை வெட்டினார்', என்று பொதுவாகத்தான்





இருக்கும். அதே மாணவனைப் பார்த்து, 'கலைஞர் நாட்டிற்கு என்னென்ன நன்மைகள் செய்தார்?' என்று கேட்டாலும், அந்த மாணவன் சொல்லக்கூடிய பதில், 'சத்திரங்கள் கட்டினார், சாலைகள் அமைத்தார், சாலைகளில் நிழல் தரும் மரங்களை வைத்தார், குளங்களை வெட்டினார்' என்பதாகத்தான் இருக்கும். அப்படித்தான் இந்த உரைகூட அமைந்திருக்கிறது என்பதை நான் மிக்க வருத்தத்துடன், பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் இந்த அரசு, நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்யும் என்று நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில், குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, ஆளுநர் அவர்கள் உரையிலே, "நமது நாட்டின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் கிராமங்களே உயிர்நாடி. தமிழ்நாட்டில் 70 சதவீத மக்களின் வாழ்க்கையும், உழைப்பும் கிராமப்புறங்களிலேதான் நடைபெறுகின்றன. இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பல முனைகளிலும் முயற்சிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று பொதுவாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குத் தாங்கள் எப்படி முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் போகின்றீர்கள் என்று சொல்லவில்லை. இது எந்தவிதத்திலும் நன்மையைப் பயக்காது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 'வறுமையை ஒழிப்பது', 'வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது' என்று இந்த ஆளுநர் அவர்களுடைய உரையிலே காணப்படுகின்றது. இதே நேரத்தில் நான் இப்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் புதிதாக பல தரப்பிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை. இருந்தாலும், வேலையிலே இருக்கின்றவர்களையாவது, அவர்களது வேலையை நிரந்தரமாக்குவீர்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி வேலை செய்யக்கூடியவர்களுக்கு, அவ்வப்போது சம்பளத்தை ஒழுங்காகத் தருவீர்களா என்றும் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நான் அரசினர் விடுதியில் என் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன், என் அறையை நோக்கி ஓர் கூட்டம் வருகிறது. யார் என்று கேட்கிறேன் மக்கள் தொடர்புத் துறை இலாகாவில் ஐந்தாறு ஆண்டுகளாக பணியாற்றி இருக்கிறோம். இப்போது வேலையின்றி வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். அடுத்து ஒரு கூட்டம் வருகின்றது. யார் என்று கேட்கிறேன். அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். என்ன என்று கேட்டுகிறேன் எங்களுடைய எதிர்காலம் என்னவென்று தெரியாமல் இருக்கின்றது என்று பதில் சொல்கிறார்கள். அதை அடுத்து மற்றொரு கூட்டம் வருகின்றது. யார் என்று கேட்கிறேன் நாங்கள் சேலம்—தர்மபுரி மாவட்டத்து பட்டதாரி ஆசிரியர்கள். 'பி' விங்கில் பணியாற்றுகின்றோம். எங்களுக்கு இன்னும் ஜூன் மாதச் சம்பளம் தரப்படவில்லை என்று சொல்கின்றார்கள் மற்றொரு கூட்டம் வருகின்றது. யார் என்று கேட்கிறேன். தஞ்சை மாவட்டம் என்று சொல்கின்றார்கள். குடந்தை, பாபநாசம் வட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள்; நாங்களும் 'பி' விங்கில் பணியாற்றுகிறோம். மற்றவர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. எங்களுக்கு மட்டும் இன்னும் ஜூன் மாதம் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்கின்றார்கள். மற்றொரு கூட்டம் வருவதைப் பார்க்கின்றேன். யார் என்று கேட்கிறேன். நாங்கள் எல்லாம் பட்டாதாரி ஆசிரியர்கள். எங்களையெல்லாம் பணியிலிருந்து வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்கின்றார்கள்.

ஏன் நான் இவ்வளவையும் குறிப்பிடுகிறேன் என்றால், எங்களுடைய சந்தேகம் எல்லாம், நீங்கள் ஏதோ வேலையைப் புதியதாகத் தருவதாகச் சொல்கின்றீர்கள்; அதுகூட தேவையில்லை. ஏற்கனவே வேலையில் இருந்தவர்களை நிரந்தரமாகச் செய்ய வேண்டும். அவர்களுக்கு எல்லாம் சம்பளத்தை, ஊதியத்தை ஒழுங்காகத் தரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.





அடுத்தப்படியாக, இந்த உரையைப் பார்க்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல திருத்தங்களைத் தரக்கூடிய உரையாகத்தான் அமைந்திருக்கிறது. இந்த உரையின் 3 ஆம் பத்தியில், "தமிழ்நாட்டில் 17 மாத காலம் நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, அச்சமற்ற, நேர்மையான தேர்தல் நடத்தப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இன்று மலர்ந்திருக்கிறது." என்று தொடங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே உரையில் பின்னால், 18 ஆம் பத்தியில், "வாக்காளர் பட்டியலில் குறைகள் இருப்பதாக மக்கள் கருதுவதால், விரைவில் அவற்றைத் திருத்தி, ஒழுங்குபடுத்தி" என்று கண்டிருக்கிறது. எப்படி திருத்தம் வருமோ என்பது அச்சமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வாக்காளர் பட்டியல் வேறு, இந்த வாக்காளர் பட்டியல் வேறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. இளங்கோவன்:** நன்றி இருந்தாலும், இப்போது தேர்தல் நடைபெற்றிருந்த வாக்காளர் பட்டியல் இருக்கிறதே, அதிலே கூட இதுபோன்ற திருத்தங்கள் தேவைப்படுகின்ற நிலைமை உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட ஒரு கருத்து நாட்டிலே இன்றைக்கு நிலவிக்கொண்டு வருகிறது. 18 வயது உடையவர்களையெல்லாம் கூட வாக்காளர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டுமென்கின்ற ஒரு கருத்து இன்றைக்கு நிலவிவருகிறது. ஆர்வம் உள்ள இளைஞர்கள், தங்களுடைய வயதை 21 அல்லது 22 என்று கூடுதலாகச் சொல்லி அவர்கள் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்தப் பேரவை மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, வாக்காளர் பட்டியலைத் திருத்தும்போது, இவற்றையெல்லாம் ஓரளவுக்கு கருத்தில் கொண்டு திருத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்குப் பிறகு மதுரை மாநகராட்சி, ஏனைய நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சென்னை நகராட்சித் தேர்தல் எப்போது என்று பார்க்கின்றபோது, மஸ்டர் ரோல் வழக்கு

காரணம் காட்டப்பட்டு, அது சரியான பிறகுதான் தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லப்படுகின்றது. சென்னை மாவட்டத்தில் 14 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. அதில் 13 சட்டமன்றத் தொகுதிகளில் ஆளும் கட்சியினர் தோல்வியைத் தழுவிக் கொண்டிருப்பதால், அதன் காரணமாகத்தான் இந்தத் தேர்தல் மட்டும் தள்ளிப் போடப்படுகின்றது என்ற ஒரு ஐய உணர்வு மக்களிடம் ஏற்படாமல் இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அடுத்தபடியாக, இந்திய யூனியனின் பொருளாதார அமைப்பை வலுப்படுத்த, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படுவதை வரவேற்கிறோம் என்று பாரதப் பிரதமர் உறுதியளித்திருப்பதை வரவேற்கிறோம் என்று தேர்தல் காலத்திலே இன்றைய பாரதப் பிரதமராக இருக்கும் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சொன்ன கருத்தினை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வாக்குறுதி பரவலாக அவர்கள் இந்தியா பூராவும் தேர்தல் பிரசாரம் செய்த காலத்திலே சொன்ன வாக்குறுதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, வாக்குறுதியை நம்பி நாங்கள் வரவேற்கிறோம் என்று மட்டும் அமையாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது சொன்ன கருத்தை இப்போது நினைவிற்கொள்ள விரும்புகின்றேன்.

Never have I been mad after power nor am I happy being the Chief Minister of our State under a Constitution which, on paper, is Federal but in actual practice tends to get more and more Centralised'. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏட்டிலே கூட்டாட்சி இருந்தால் மட்டும் போதாது. ஆட்சி பீடத்திலே உள்ளவர்கள் அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். இதனை சத்தினைச் சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், 'மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி' என்பதுதான், இதை ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்று ஒப்புக்கொண்டதற்காக நான் மகிழ்ச்சி தெரிவித்து, அதற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த உரையில், 'தமிழ்நாட்டில் 17 மாத காலம் நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று . . . .' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே ஒழிய, இந்த குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில்



என்னென்ன கொடுமைகள், அநீதிகள் இழைக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றதா என்று பார்த்தேன். எதும் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், நெருக்கடி நிலை பற்றி ஏதோ ஒரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கு சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் துருவித் துருவிப் பார்த்த நேரத்தில், 'சமையல் எண்ணெய்களைப் பொறுத்த வரையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை நம் மாநிலத்தை மட்டும் பாதிக்கும் ஒன்றல்ல; இந்தியா முழுவதிலுமே ஏற்பட்டுள்ள இந்த நிலையை அனைத்திந்திய அடிப்படையில் சமாளிக்க வேண்டியது அவசியம்' என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டதே, அதை பற்றி எங்கும் சொல்லப்படவில்லை. இந்த நிலைமையைப் பற்றி எங்கேனும் குறிப்பிட்டிருக்கலாம். அப்படி குறிப்பிட இங்கே அமைச்சர் அவை தவறி இருக்கிறது என்பதை மட்டும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

நெருக்கடி என்பது மக்களுக்கு மட்டும் நெருக்கடி அல்ல. எங்கும் எதிலும் நெருக்கடி என்று சொல்லுகிற அளவுக்கு நெருக்கடி நிலைமை இருந்திருக்கிறது. இங்கு எல்லா வகையிலும் தமிழை வளர்க்க சிறப்பு நாட்டம் செலுத்துவோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் உங்களை ஒன்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆசிரியராக இருக்கிறவர்கள் புலவர் பட்டம் பெற்று முதல்நிலைத் தமிழாசிரியர் தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படி தகுதியைப் பெற்றவர்கள் எங்கு பணியாற்றினாலும், அது தொடக்கப்பள்ளியாக இருந்தாலும் சரி, உயர்தொடக்கப்பள்ளியாக இருந்தாலும் சரி, உயர்நிலைப்பள்ளியாக இருந்தாலும் சரி அவர்களுக்கு முதல்நிலைத் தமிழாசிரியர் ஊதியம் வழங்க இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி சிலவற்றை—பாடப் புத்தகத்தைப் பொறுத்தவரை செய்திருக்கிறார்கள்.—குறிப்பாக தமிழ்ப் பாடப் புத்தகங்களில், முதல் வகுப்புப் பாடப் புத்தகத்தில் சிலவற்றைத் தூக்கி எறிந்திருக்கிறார்கள். 'சிங்கம் முழங்கும்' என்று

இருந்தது எப்படி இருக்க வேண்டுமென்று கேட்டு 'சிங்கம் கர்ஜிக்கும்' என்று போட்டிருக்கிறார்கள். 'முழங்கும்' என்ற வடமொழியை நீக்கி விட்டு 'கர்ஜிக்கும்' என்று தூய தமிழைப் போட்டிருக்கிறார்களா? நான் சொல்வதை நன்றாகக் கவனிக்க வேண்டும். 'முழங்கும்' என்ற வடமொழியை நீக்கிவிட்டு 'கர்ஜிக்கும்' என்ற தூய தமிழைப் போட்டிருக்கிறார்கள் இதிலே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் அரசு என்ன செய்யப் போகிறது என்ற கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்த அரசு முழங்குமே தவிர கர்ஜிக்காது!

திரு. கோ. இளங்கோவன்: மிக்க நன்றி. எனவே 'கர்ஜிக்கும்' என்பதற்குப் பதிலாக உடனடியாக 'முழங்கும்' என்ற தனித் தமிழ்ச் சொல் இடம் பெற அரசு ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

ஆறாவது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் பாவேந்தரின் பாடலான 'இனிமைத் தமிழ் மொழி' என்று தொடங்கும் பாடலை நீக்கியிருக்கிறார்கள். அந்தப் பாடல் அப்படித் தொடங்குவது குற்றமா? குற்றம் என்று கருதி அந்தப் பாடலை மட்டும் நீக்கி யிருக்கிறார்கள். நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கல்வியமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். எடுபட்ட பாடல் இடம் பெறும் சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழாவது வகுப்புப் பாடப் புத்தகத்தில் 'தமிழுக்குத் தலை தந்தவன்' என்ற தலைப்பு போடப்பட்டிருந்தது. 'தமிழுக்குத் தலை தந்தவன்' என்ற தலைப்பு அந்தப் பாடத்திற்கு இருந்தால் தலைமுழுகியா போய் விடும்? 'அது குற்றம் அல்லவா? தூக்கி எறியுங்கள்' என்று எறிந்திருக்கிறார்கள். 'குமண வள்ளல்' என்ற தலைப்பு போட்டுப் போட்டுச் சலித்துப் போன தலைப்பு. அதை மாற்றி 'தமிழுக்குத் தலை தந்தவன்' என்று போட்டது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. தமிழார்வம் மிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றியும் கவனிக்க வேண்டும்.





எட்டாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் பாவேந்தர் பாடல் அனைத்தும் நீக்கப்பட்டிருக்கிறது. 'மறுமலர்ச்சிப் பாடல்கள்' என்ற தலைப்பில் இருந்த பல பாடல்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை மறுமலர்ச்சி தேவையில்லை என்று கருதி அந்தப் பாடல்கள் அவ்வளவும் தூக்கி எறியப்பட்டனவோ என்னவோ தெரியவில்லை. இதுபோன்று பல நெருக்கடி காலக் கொடுமைகள் நடந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குத் தக்க வருவாய் கிடைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் முன்பு, திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசு நிர்ணயித்த விலையோடு 10 ரூபாய் போனசாகக் கொடுத்து வந்தது. ஆனால் மத்திய அரசு தொடர்ந்து அதைத் தர முன்வரவில்லை. இப்போது புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் அரசு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. விவசாயிகளுக்கு உணவுப் பொருள்களுக்கு தகுந்த வருவாய் கிடைக்க வேண்டு மென்றால் விட்டுப் போன போனசை மீண்டும் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டு, அப்படி முயற்சிகள் நடந்து கொண்டிருப்பது பற்றிய குறிப்புகள் ஆளுநர் உரையில் இல்லாத காரணத்தால் ஏமாற்றத்தைத் தருகிறது என்று கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

* திரு சி. கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையில் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் எதும் வெகுவாகக் கூறப்படவில்லை. ஆனால் அந்த அறிக்கையிலே—

> " . . . புதிய அரசு, மாநிலத் திட்டக் குழுவிற்கு கூடிய விரைவில் புத்துயிர் அளித்து, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை விரிவாகவும், விளக்கமாகவும் வகுக்கும் பொறுப்பை அதனிடம் அளிக்கும்."

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்தப் பொருளாதாரத் திட்டத்தைப் போடக்கூடிய திட்டக் குழு அறிக்கையில் நாங்கள் கருதக்கூடிய விஷயங்கள் எல்லாம் வரும் என்று நினைக்கிறோம். குறிப்பாக, சேலம் உருக்காலைத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவது ஆகியவைகள் எல்லாம் அடிக்கடி முன்னே பேசப்பட்டு

வந்தன. இவைகளைத் தேர்தல் கால வாக்குறுதிகளாக மக்கள் நினைக்கக் கூடிய அளவுக்கு ஆக்காமல் புதிய அரசு இவைகளுக்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இந்தத் திட்டங்கள் அனைத்தும் உடனடியாக நிறைவேற்றப்படுவது அவசியம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட வரை இருக்கக்கூடிய தொழில்களில் இந்தத் தொழில்களை நடத்துவதற்கும், தமிழகத்திலே உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அவற்றை நடத்தக் கூடிய பொறுப்புகள் முழுவதும் முதலாளிகளையே சார்ந்திருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. தொழிலாளர்களுடைய ஆதரவையோ, ஒத்துழைப்பையோ கோரக்கூடிய நிலைமை இன்றைக்குக் கிடையாது. அதனுடைய விளைவால் தொழிலில் உற்பத்தி தடைபடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதற்கு சுந்தரம் கிளேட்டன் நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். கடந்த ஒரு மாத காலத்திற்கு மேல் அந்தத் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. ஆனால் அந்த முதலாளி குற்றம் சாட்டினார்—தொழிலாளிகள் வேலை அளவு சரியாகச் செய்யவில்லை என்று. உண்மையில் அங்கு நடந்தது என்ன? உண்மையில், அந்த முதலாளி தொழிலில் எப்படி ஏகபோக உரிமை கொண்டாடுகிறாரோ அதே மாதிரி தொழிற் சங்கமும் தான் நினைக்கக்கூடிய சங்கமாகத்தான் இருக்க வேண்டுமென்று கருதிக்கொண்டு தங்களுடைய விவகாரங்களில் குறுக்கிடக்கூடிய, தொழிலாளர்களுக்கு இழைக்கக்கூடிய அநீதியைக் கேட்கக் கூடிய சங்கம் இருக்கக்கூடாது என்று கருதுகிறார்கள். உண்மையில், இதையெல்லாம் உணர்ந்திருக்கக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய தொழிற்சங்கத்தில் ஏற்கனவே இருந்த தலைவர்களை நீக்கி புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தன் விளைவாகத்தான் இந்த லாக் அவுட் ஏற்பட்டிருக்கிறது; அதுதான் அடிப்படையான காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்கள் தாங்கள் விரும்பக் கூடிய தொழிற்சங்கத் தலைவரை விரும்பக்கூடிய சங்கத்தை அவர்களே நிர்ணயித்துக் கொள்ளக்



கூடிய உரிமை அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். இதனால்தான் இந்தச் சமயத்தில் உற்பத்தித் தடைபட்டு இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம் இதுதான் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். தனியார் துறை தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையிலானாலும் சரி, அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வரையிலானாலும் சரி, தொழில் வளர்ச்சியும் அல்லது தொழில் உற்பத்தியும் நல்ல முறையில் திறம்பட நடத்தப்பட வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அதிருப்தியை ஓரளவாவது தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு இறங்கவேண்டும். லாக்-அவுட் நீக்கப்படவேண்டும்.

இப்போது போனஸ் பிரச்னை எழும்பும் காலகட்டம் வருகிறது. தீபாவளிப் பண்டிகை, பல பண்டிகைகள் வரும்போது போனஸ் பிரச்னை வருகிறது. இதுகுறித்து எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். குறைந்த பட்சம் 8.33 சதவிதம் போனஸைக் கொடுப்பதற்கான சட்டம் விரைவில் வராவிட்டால் தமிழகத்தில் தொழிலில் அமைதியின்மை ஏற்படும் என்பதை அனைத்துத் தொழிலாளர்கள் சார்பாக, அவர்களுடைய உள்ளக் கிடக்கையை அறிந்தவன் என்ற முறையில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் போனஸ் சட்டம் கொண்டு வருவது மத்திய அரசின் கையில் இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். சில மாநில அரசுகள் அதற்கான ஆலோசனைகளை, சிபாரிசுகளை அனுப்பியுள்ளன. நம்முடைய அரசும் விரைவில் அப்படிப்பட்ட சிபாரிசை அழுத்தமாக அனுப்பவேண்டும்; உடனடியாக போனஸ் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று ஆலோசனை கூறவேண்டும்.

அதே மாதிரி கட்டாய சேமிப்புத் திட்டம் சம்பந்தமாகப் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நேற்றைய தினம் பிராவிடன்ட் பண்ட் கமிஷனர் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது—சம்பளம் சம்பந்தப்பட்ட வரை இரண்டாவது இன்ஸ்டால்மென்ட் பிடிக்காமல் கொடுக்கப்படும் என்றும் பஞ்சப்படி சம்பந்தப்பட்டவரை பிராவிடன்ட் பண்டில் சேர்க்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. கட்டாய சேமிப்புத் திட்டத்தை தொழிற்சங்க இயக்கங்கள், முழுமையாக எதிர்த்தன. இன்றைக்குத் திருப்பிக் கொடுக்கும் போது பிராவிடெண்ட் பண்ட் கணக்கில் சேர்த்திருக்கிறார்கள்.

இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் முழுவதையும், பஞ்சப்படியாக இருந்தாலும் சரி, சம்பளமாக இருந்தாலும் சரி, முழுவதும் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும், ரொக்கமாகக் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது. நான் ஒன்று கூறவிரும்புகிறேன். இந்த தமிழகத்தில் இருக்கக் கூடிய பல லட்சக்கணக்கான தனியார், அரசுத்துறை ஊழியர்களை பாதித்துக் கொண்டு இருக்கும் பிரச்னைகள் இரண்டு; ஒன்று போனஸ் சட்டம், இரண்டு கட்டாய சேமிப்புத் திட்டம். இந்த இரண்டு திட்டங்களினால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இது அவர்களுக்கு கிடைக்கவில்லையென்றால் தமிழகத்திலே தொழிலில் இண்டஸ்ட்ரியல் அன்ரஸ்ட் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது, பிறகு அரசு லா அண்ட் ஆர்டர் என்று சொல்லி அதிலே தலையிட்டுப் பயன் இல்லை என்பதை நான் தெரிவித்து முன்னெச்சரிக்கையாக இதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதேபோல் மாநில அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த அவசர கால நிலைமையைப் பயன்படுத்தி தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் பலர் பழிவாங்கப் பட்டிருக்கின்றனர். ஒரு சிலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக் கின்றனர். சுமார் 45 பேர்களுக்கு இன்கிரிமெண்ட் கட் செய்யப் பட்டிருக்கிறது. இதனால் தமிழக அரசு ஊழியர்கள் அதிருப்தி யடைந்திருக்கிறார்கள். அரசு இதையெல்லாம் ரத்து செய்து சுமுகமான நிலைமையை உண்டாக்கினால் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டு அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு நல்ல ஒத்துழைப்பை தரக்கூடிய நிலைமை உண்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தொழிற் சங்க உரிமைகள் சம்பந்தப்பட்ட வரையில் தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளைக் கூறுவதற்கும் ஊர் வலம் நடத்துவதற்கும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் பொதுக்கூட்டங்களை நடத்தவும் போலீஸ் தலையீடு இல்லாத அளவுக்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அண்மையிலே, 4ஆம் தேதியன்று அம்பில் கபே முன்னறிவிப்பு ஏதுமின்றி மூடப்பட்டிருக்கிறது, அந்தத் தொழிலாளர்களுக்கு ஜூன் மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. முன்னறிவிப்பு நோட்டீஸும் கொடுக்கப்படவில்லை. அத்துமீறி போலீஸ் உள்ளே நுழையக்கூடிய நிலைமை ஏற்பட்டது, ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டின் காரணமாக அது நடைபெற வில்லை. அங்கே ஏறத்தாழ 140 தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், இதிலே ஏதாவது ஒரு முடிவைக் காண வேண்டியதாகயிருக்கிறது, அரசாங்கம் இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைக்குள்ளேயே இருந்து தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளை நிலைநாட்ட எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து 10 ஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்ட ஒரு கோர்ட்டின் தீர்ப்பு இந்தப் பிரச்னைக்கு பொருந்தாது என்றும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரம் சம்பந்தப்பட்டவரையில் இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. தண்ணீர் வசதி, பாசன வசதிக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுவது பற்றி இதிலே கூறப் பட்டிருக்கிறது. ஆனால் மின் இணைப்புக் கிடைப்பதிலே மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித் தாக வேண்டும். கிரவுண்ட் வாட்டர் கன்ட்ரோலரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிவரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாய மக்களுக்கு அப்படிப் பட்ட ஓர் அமைப்பு எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிப்பதே சிரமமாக இருக்கிறது.

அது மட்டுமல்ல, டொமஸ்டிக் சர்விஸைப் பொறுத்தவரையில் டெபாசிட் எல்லாம் கட்டியாகிவிட்ட பிறகும்கூட மின் இணைப்புக் கொடுக்காமல் இருக்கிறார்கள், சாமான்கள் இல்லை, பல்வேறு சாதனங்கள் இல்லை, போஸ்ட் இல்லை என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட குறைகளை உடனே போக்கி மின்இணைப்பு உடனடியாகக் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின் இணைப்பு சரியாக இல்லாவிட்டால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது பல இடங்களில் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் இந்த மன்றத்திலே [illegible] ஆம் தேதியன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம்

அவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட நேரத்திலே இந்த சபையிலேயே மின்சாரம் நின்றுவிட்டது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது சம்பந்தமான விரிவான விஷயத்தை நான் பட்ஜெட் வருகிறபோது கூறலாம் என்று நினைக்கிறேன்.

மின்சாரக் கட்டணம் சம்பந்தப்பட்ட வரையில் 50 பைசாவாக இருந்த கட்டணம் டொமஸ்டிக் சர்விஸைப் பொறுத்த வரையில் 2 ரூபாயாக ஆகியிருக்கிறது. விவசாயம் சம்பந்தப்பட்ட வரையில் 2, 3 ரூபாயாகி இப்போது 5 ரூபாயிக்குப் போய் விட்டது. இதனால் மின்சார வாரியத்திற்கு 7 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மீட்டருடைய விலையே 5, 10 ரூபாய் தான் இருக்கும், ஆனால் மீட்டர் கட்டணத்தைப் பார்த்தால் அது உயர்ந்துகொண்டேபோகக்கூடிய நிலைமை இருக்கிறது.

மின் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ரிடையர் ஆனாலும் சரி அல்லது இறந்துவிட்டாலும் சரி தொழிலாளிகளுடைய கணக்கை உடனுக்குடன் முடிப்பதில்லை. அவர்களுடைய குடும்பங்களுக்கு உடனடியாகக் கிடைப்பதில்லை, குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இறந்த பிறகுதான் அவர்களுடைய கணக்குகள் முடிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் போக்கப்பட வேண்டும்.

போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட வரையில் அவர்களுக்கு எல்லாம் ஒரே மாதிரியான ஊதியம் இருக்கவேண்டுமென்ற முறையிலே எல்லா கார்ப்பரேஷன்களையும் ஒரே கார்ப்பரேஷனாக இணைத்து அமைக்கவேண்டுமென்று பல்வேறு தொழிற் சங்கங்கள் கோரிக்கை தந்துள்ளன. முன்பு ஜப்பான் திட்டம் என்ற ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. அது எந்தவிதமான சர்வீஸ் கண்டிஷனையும் பார்க்காமல் தொழிலாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்வதாக இருந்தது. ஆனால் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தியதற்குப் பின்னால் 6 வருஷம் 14 வருஷம் சர்வீஸ் என்று பாகுபாடு செய்யப்பட்டது. இதனால் தொழிலா



ளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையில் 1,000 ரூபாய்க்கு மேல் பிடிக்கப்பட்டது. தொழிற் சங்கங்கள் கிளர்ச்சி செய்ததன் காரணமாக அதிலே 50 சதவிதத்தை திருப்பிக் கொடுக்கப்பட்டது. மீதித் தொகையையும் திருப்பிக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்ஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே உள்ள பணியாளர்கள் நிரந்தரமாக்காமல் இருக்கின்றனர். ரிஜிஸ்திரார் அவர்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறதாகச் சொன்னார்கள், இதைப்பற்றி நான் அமைச்சர் அவர்களிடத்திலே பேச இருக்கிறேன், இருந்தாலும் இந்த அவைக்கு நான் அதை அறிவிக்கிறேன்.

அடுத்து, கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில் கரும்பு உற்பத்திச் செலவு இப்போது அதிகமாகியிருக்கிறது. அவர்களுக்கு 85 அல்லது 100 ரூபாய்தான் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பல கரும்பாலை அதிபர்கள் அவர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுப்பது கிடையாது. ஆலைகளுக்கு அனுப்பக்கூடிய கரும்புக்குக் குறைந்த பட்சம் டன்னுக்கு 150 ரூபாய் வீதம் கிடைக்கக்கூடிய நிலைமையை இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்குன்றம் போன்ற நிலைமைகள் இன்னும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன, காவல் துறையினரில் சிலர் மரியாதை வாரம் என்று சம்பிரதாயத்திற்காகத்தான் கொண்டாடுகிறார்களேதவிர உண்மையாக அல்ல, போலீஸ் அதிகாரிகளின் மனம் மாறவில்லை. ஆகவே செங்குன்றம் போக்கு இன்னும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதைப்பற்றியெல்லாம் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி அறிவிக்கும் தீர்மானத்தின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேச விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே தமிழ்நாட்டில் பல

லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வாழ்க்கையின் கடைக்கோடியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களின் பிரச்னைபற்றி எந்தவிதமான உத்திரவாதமும் அளிக்கப்படவில்லை.

அதுமட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வரப்பட்டும் அது அமுலாவதற்கான உத்திரவாதம் இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு முந்திய அரசு இருந்த காலத்தில் அவர்களுடைய கோரிக்கைகளைப் போராட்டத்தின் மூலமாகப் பெறக்கூடிய நிலைமையில் தஞ்சை மாவட்டத்திற்கு, அதுவும் கிழத் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள், அந்தச் சட்டம் அமுலுக்கு உத்திரவாதம் இன்மையால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல லட்சக் கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்குப் பயன் அளிக்க வில்லை, தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு கூலி சட்டம் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

குடியிருப்பு மனை சம்பந்தமாகக் குறிப்பிடும்பொழுது, கிராமங்களில் இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை எளியவர்கள் ஆகியோருக்கு குடியிருப்பு மனை முந்திய அரசால் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டாக்களிலே ஒரு செண்டும், இரண்டு செண்டும், மூன்று செண்டும் என்று இப்படிக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் ஐந்து பேர்கள் முதல் பத்து பேர்கள் வரையில் இருந்தாலும் அந்த ஒரே வீட்டிலிருந்து கொண்டு பெரும் அவதிக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தப் பட்டா கொடுத்திருப்பதை மறுபரிசீலனை செய்து குடும்பத்திற்குத் தேவையான மனைகளைக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து, அந்த வீடு கட்டும் இடம் சுகாதாரத்திற்குக் கேடான இடத்தில் இல்லாமல் நல்ல இடமாகக் கொடுக்க வேண்டுகிறேன்.

கவர்னர் உரையில் நில உச்சவரம்பு சம்பந்தமாக எந்தவிதமான இடமும் பெறவில்லை. நில உச்சவரம்பு என்று சொல்லும் நேரத்தில் அந்த நில உச்சவரம்பின் மூலமாக மிச்ச நிலம் எடுக்கப்பட்டு நிலத்தை நம்பியிருக்கக்கூடிய அந்த சாதாரண



விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்படியே சிலருக்குக் கிடைத்தாலும் அப்படிக் கிடைக்கின்ற நிலமும்கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. நிலம் கிடைத்ததற்கும் பிறகு சம்பந்தப்பட்ட பெரிய மிராசுதாரர்கள் தாசில்தார் தாசில்தார் அலுவலகத்திற்கும் ஆர்.டி.ஓ. ஆபீசுக்கும் பெட்டி கொடுத்து இன்றைக்கும் பல இலட்சக்கணக்கான வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் பட்டா செய்து கொடுத்தும் அதை அனுபவிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. முந்திய அரசு செய்த நில உச்ச வரம்புச் சட்டத்தில் இருக்கக்கூடிய தவறான காரணத்தால் நிலம் கிடைத்தவர்களும் கூட அந்த நிலத்தை அவர்கள் அனுபவிக்க முடியாமல் உள்ளார்கள். நிலம் கிடைத்த சில விவசாயத் தொழிலாளர்கள் சென்னைக்கு வந்து வழக்கு நடத்த முடியாமல் நிலத்தையும் இழக்கும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமைகளை இந்த அரசு போக்கி மிச்ச நிலத்தை நம்பியிருக்கும் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்படி உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர் தஞ்சை மாவட்டத்திற்கு கிடைக்குமென்று முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டு உள்ளது தஞ்சை மாவட்ட மக்கள் பெரும் மகிழ்ச்சிகரமாக இருந்து கொண்டிருப்பார்கள். தண்ணீர் தொடர்ந்து வர உத்தரவாதம் வேண்டும். அதற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த காவரி நீர்ப் பிரச்னையைப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு ஆண்டிலேயும் ஒரு மாதம் பின் தங்கித் தண்ணீர் வருவது தவிர்க்கப்பட வேண்டும். இன்றைக்கு 12 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்திலிருக்கும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தாசில்தார் அலுவலகத்தில் மகஜர் அளிக்கும் நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலை இல்லாமல் அந்தத் தண்ணீர் இதுவரையில் எப்படி ஒப்பந்தம் இருந்து வந்ததோ அந்த ஒப்பந்தம் நிரந்தரமாகச் செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் தண்ணீர்கிடைக்க உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளை உற்சாகப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 72,000 கிணறுகளைப் போட்டு தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளை விவசாயம் செய்ய உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்னை என்று எடுத்துக்கொண்டால் முந்தைய அரசு அண்டை மாநில மக்களோடு பகைமையை வளர்க்கக்கூடிய தவறான கொள்கையைக் கடைப்பிடித்ததின் காரணமாக நமக்குப் பாரம்பரையாகக் கிடைத்த தண்ணீர் கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டு விட்டது. அந்த வகையில் இல்லாமல் அடுத்த மாநிலங்களோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டு, மத்திய அரசையும் தலையிடச் செய்து இந்தக் காவிரி நீர்ப் பிரச்னையில் முடிவெடுத்து தொடர்ச்சியாகத் தஞ்சை மாவட்ட மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசு வதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* **திரு ஆர். மணிமாறன்:** சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவரவர்களே, இங்கே ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது குடந்தை எஸ். ஆர். இராதா அவர்கள் முன்மொழிந்து கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்ற நிலையிலே நான் நின்று கொண்டிருக்கிறேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்த ஆளுநர் உரையில் புரட்சிகள் கிடையாது, புதுமைகள் கிடையாது, எழுச்சிகளைக் காண முடியவில்லை, ஏற்றங்கள் கிடைப்பதாகத் தெரியவில்லை என்ற குறிப்புகளை அடுக்கடுக்காக அள்ளித் தெளித்த நிலைமையை நான் நன்றாகக் கவனித்திருக்கின்ற அடிப்படையில் ஒருசில வார்த்தைகளை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் பேச எழுந்திருக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய மேலான உரையில் புதுமைகள் இல்லைதான், புரட்சிகள் இல்லைதான். ஆனால் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் எப்படிப்பட்ட புரட்சிகளை எதிர்பார்க் கின்றார்கள், எப்படிப்பட்ட புதுமைகளுக்கு எந்த அளவுகோலை வைத்து அளந்து பார்க்கத் தேடுகிறார்கள் என்பதை என்னால்





ஓரளவுக்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. பெற்ற மகனையே பெற்றெடுத்த தகப்பன், இவன் தன்னுடைய மகன் இல்லை என்று அடையாளம் சொல்லக்கூடிய புரட்சிகள் இந்த ஆட்சியில் நடை பெறாது. அதற்கான காரணங்கள் ஆளுநர் உரையிலே அமைய வில்லை என்பதை நான் மெத்தப் பணிவன்போடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

திருச்சியிலே கிளைவ் ஹாஸ்டலிலே நடந்த, மாணவர்கள்மீது நடந்த வன்முறைத் தாக்குதல்கள் நடைபெற்று முடிந்ததற்குப் பிறகு அன்றைய அரசாங்கத்தினுடைய சார்பில் லேசான பிரம்படி என்ற வார்த்தை ஜாலங்கள் கட்டவிழ்த்து விட்டதைப் போல இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில் அதைப் போன்றவை வடிவமாக்கப்படா என்பதை நான் மெத்தப் பணிவன்போடு எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கொஞ்சம் வேகமாக, துடிப்பாக எடுத்துச் சொன்னார்கள். ஊழலை ஒழிப்போம். இலஞ்சத்தை ஒழிப்போம் என்று கூறுகிறீர்கள், ஆனால் அந்த ஊழலை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள் இலஞ்சத்தை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள் என்ற மார்க்கத்தைக் காட்டத் தவறி விட்டீர்கள் என்று பேசிய அத்தனை பேரும் ஒட்டுமொத்தமான குரலில் கேட்டார்கள். ஊழலை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள், எப்படி ஒழிக்கப் போகிறீர்கள், எந்த வழியைக் கையாளப் போகிறீர்கள் என்று அடுக்கடுக்காகக் கேட்பதைப் பார்த்து ஊழல் எங்கே ஒழிந்து விடப்போகிறதோ என்ற நியாயமான அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை என்னால் உணர முடிகிறது. அப்படிப்பட்ட ஊழலற்ற அரசாங்கத்தை அமைப்போம் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வாதமாகும்.

மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய, திரு. சுப்பு அவர்கள் எடுத்துச் சொல்கிறபோது ஒன்றைக் குறிப் பிட்டார்கள். சொல்ல வேண்டியவற்றையெல்லாம் சொல்லாமல் எதை எதையோ இங்கே சொல்லியிருக்கிறார்கள் என்ற குறிப்பு களை எடுத்துச் சொன்னார்கள். நான் மெத்தப் பணிவன்போடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்ல வேண்டிய வற்றைச் சொல்ல வேண்டியவர்கள் சொல்ல வேண்டிய இடத்

தில், சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நிர்வாகத்திலே தயக்கங்கள் இருக்கக்கூடாது, நிர்வாகத்திலே தலையீடுகள் இருக்கக்கூடாது, அதிகாரிகளைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்கின்ற அடிப்படையிலேதான் நான்காவது பத்தியிலே அச்சத்திற்கும், தாட்சண்யத்திற்கும் ஆட்படாமல் நிர்வாகம் செயல்படவேண்டும் என்பதே எங்கள் கொள்கை என்ற மேலான அறிவிப்பு ஆளுநர் உரையிலே பொதிந்திருப்பதை நீங்கள் நிச்சயமாகப் புரிந்து கொண்டிருக்க முடியும். நிர்வாகத்திலே அரசு தலையிடக்கூடாது, நிர்வாக இயந்திரத்தை முடமாக்குகின்ற பாங்கில் ஈடுபடக்கூடாது என்பதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு தீவிரமாக அழுத்தத்தைக் காட்டியிருக்கிறது என்பதை ஆளுநர் அவர்களின் மேலான உரை தெளிவு படுத்திக் காட்டியிருக்கிறது.

(முற்பகல் 11.10)

முந்தைய அரசிலே நிர்வாகத்தில் குறுக்கீடுகள், நிர்வாகத்தில் தலையீடுகள் அடிப்படையாக இருந்திருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்தச் சென்னை மாநகரத்திலே நடந்த கொலைகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். மலேசியா மகாலிங்கம் என்ற பெயர் படைத்த ஒருவர் கொலை செய்யப்பட்டதை மறந்திருக்க முடியாது. முதலிலே பத்திரிகைக் குறிப்பில் அவர் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் கொஞ்சம் நாட்கள் நகர நகர அது தற்கொலையென்று உறுதிபடுத்தப்பட்டது. அதே போல் இராணி ஆறுமுகம் என்ற ஒரு அழகி கொலை செய்யப்பட்டதையும் நீங்கள் மறைத்துவிட்டீர்கள். அதிலே, ஆரம்பத்தில் கொலை செய்யப்பட்டது என்கின்ற வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டு அதற்குப் பிறகு இது தற்கொலைதான் என்று இங்கே அன்றைக்கிருந்த அரசாங்கத்தார் முடிவு செய்ததையும் இந்த நேரத்திலே நான் நினைவுப்படுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்கு ஒரு நியாயமான



அச்சமிருக்கிறது. நாட்டு மக்கள் இன்றைக்கும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைய அரசாங்கம் இந்த வழக்கில்—இந்த ஒரு கேஸில்—தலையிட்டிருப்பதாக நாட்டு மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான், மரியாதைக்குரிய, முந்தைய அரசிலே இருந்தவர்களை . . . .

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, முந்தைய அரசாங்கத்தைப் பற்றி ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் சாட்டுகிறார். அவருடைய கன்னிப் பேச்சிலே குறுக்கிடக் கூடாது. இருந்தாலும் பயங்கரமான குற்றச்சாட்டு இங்கே சொல்லப்படுகிற நேரத்தில் குறுக்கிடாமலிருந்தால் அதை ஒத்துக்கொண்டதாக அர்த்தம் ஆகிவிடும் என்பதால் உங்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன்.

ஏதோ நடைபெற்ற இரண்டு கொலைகளில் அரசாங்கம் தலையிட்டு அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று சொல்லும்படி செய்தது என்று அவர் குறிப்பிடுவதை நான் மறுத்திடுகிறேன், அது சரியான தகவல் ஆகாது, உண்மைக்கு மாறானது.

திரு. ஆர். மணிமாறன்: நான் இப்பொழுதுள்ள அமைச்சரவையைப் பார்த்து மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கொலை வழக்கு சம்பந்தமான அத்தனை ரெக்கார்டுகளையும் கைப்பற்றி, மீண்டும் அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று. அப்படி அமைச்சரவை மறுபரிசீலனை செய்து எடுக்கின்ற முடிவுக்கும் உத்தரவிற்கும் கட்டுப்பட்டு நடந்துகொள்வேன் என்ற உறுதியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மக்களுக்கு இருக்கிற சந்தேகமெல்லாம் அந்த அழகி கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றுதான், நாட்டு மக்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு இருக்கிற சந்தேகம், மக்களுக்கு இருக்கிற ஐயப்பாடு, அன்றைக்கு ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தவர்களிலே யாரோ ஒருவர் தலையிட்டதாகக் குறிப்பிட்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள்; வெளியே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆர். மணிமாறன்] [1977 ஜூலை 12

நேற்று மதிப்பிற்குரிய திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும் பொழுது குறிப்பிட்டார்கள், வெளியே பேசிக்கொண்டிருக் கிறார்கள், என்று. நீங்கள் ஊழலை எடுக்கப் போகிறீர்களா, ஊழலுக்குத் தடை விதிக்கப் போகிறீர்களா என்று மக்கள் வெளியே பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். நானும் சொல்கிறேன், மக்கள் வெளியே பேசுகிறார்கள். ஒன்றை மதிப் பிற்குரிய திரு. ரகுமான்கான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 'ஊழலைச் செய்தவர்கள் இந்த அமைச்சரவையிலே இருக்கிறார்கள்; எனவே அந்த ஊழலைச் செய்தவர்கள் இந்த அமைச்சரவையிலே இருப்பது நியாயம் தானா' என்று மக்கள் பேசுகிறார்கள் என்று ஆழமாக, பலமாக அழுத்தமாகப் பேசினார்கள். வெளியே யார் பேசிக் கொண்டிருப் பதாகச் சொல்கிறார்களோ அந்த மக்கள்தான் எங்களை உள்ளே அனுப்பியிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, நிர்வாக இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அக்கறை கொண்டிருக்கிறது என்ற அடிப்படையிலேதான் இந்த வாதங்களை நான் எடுத்து வைக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசும்பொழுது போலீசிலே நிர்வாகம் தலையிடாது என்பது பற்றி குறிப்பிட்டுச் சொல்லவில்லை யென்றும் எடுத்துச் சொன்னார்கள். நான் முன்னால் சொன்ன பதிலே இதற்கும் பொருந்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

அதே போல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைக்கப்படும் என்று சொன்னால், தமிழ் மொழி வளருமா, தமிழ் மொழி பாதுகாக்கப்படுமா, தமிழ் மொழி வளர்ச்சி பெறுமா, தமிழுக்கு உயர்வு கிடைக்குமா என்ற வாதங்கள் தேர்தல் காலத்தில் எழுப்பப்பட்டதை நிச்சயமாக மறந்திருக்க முடியாது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத் திலே அராஜகம் ஏற்பட்டதை நாம் மறந்துவிடவில்லை. இரண்டு கேரள இராஜ்யம் ஏற்பட நான் விடமாட்டேன் என்று சங்க நாதம் எழுப்பியவர்கள் கூட இங்கே உட்கார்ந்து கொண்டிருக் கிறார்கள். அதிலே குறிப்பிட்ட ஒரு அம்சத்தை நீங்கள் நிச்சய மாகப் படித்திருப்பீர்கள்.



1977 ஜூலை 12] [திரு. ஆர். மணிமாறன்]

சாதி, சமயமற்ற ஒரு நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்று ஆளுநர் உரையில் மிகப் பலமாக எடுத்துக் கூறப்பட்டிருக் கிறது. அரசாங்கத்தின் சார்பாக இது சொல்லப்பட்டிருக்கிறதே, தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறதே, அப்படியென்றால் அதைச் சொல்ல வேண்டிய அவசியம், கட்டாயம் என்ன என்று கேட் கிறார்கள. சாதியைக் கிளப்பியவர்கள், சாதி மத பேதத்தைத் தண்ணீர் ஊற்றி, வளர்த்து வேடிக்கை பார்த்தவர்கள், இனத் துவேஷத்தைத் தூண்டுவதன் மூலமாக ஒரு விஷமத்தனத்தை, ஒரு மோசமான நிலையை உண்டாக்க நினைக்கும் அரசியலிலே ஈடுபட்டிருப்பவர்களை இந்த நாட்டு மக்கள் அடையாளம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சாதித் துவேஷங்கள் கிளப்பப் பட்டதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் இந்த இலட்சியம் ஆளுநர் உரையில் மிகத் தெளிவாக போடப்பட்டிருக் கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அதேபோல், இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று கூறி யிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் முறையாகத் தீர்ப்பு அளிக்க கால தாமதம் ஏற்படுகிறது. எனவேதான, ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி அளிப்பதன்மூலம் நன்மை தர முடியும் என்று ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், 'சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீல்களின் வாதம் ஒரு ஒளி விளக்கு. ஏழைகளால் அந்த விளக்கின் வெளிச்சத்தை உணர்ந்துகொள்ள காலம் தேவைப் படுகிறது' என்று. அதனை அடிப்படையாக வைத்துத்தான் அண்ணாவினுடைய வழியிலே நின்று கொண்டிருக்கிற எங்களுடைய தானைத் தலைவர்—புரட்சித் தலைவர் அவர் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டுமென்று அக்கறை கொண் டிருக்கிற காரணத்தால்தான் ஆளுநர் உரையில் இது சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதை நீங்கள் நிச்சயமாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

பஞ்சாயத்து தேர்தலையும், முனிசிபாலிட்டி தேர்தலையும் கார்ப்பரேஷன் தேர்தலையும் உடனடியாக நடத்தியாக வேண்டு மென்பது எதிர்க்கட்சியினருடைய பலமான கோரிக்கையாகும் வாதமாகும். நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், 1969-லே அல்லது 1968-லே பஞ்சாயத்து தேர்தல்கள் நடந்ததாக ஞாபகம். ஆனால் இதுவரை 1977-ம் ஆண்டு வரை—மத்தியில் ஒரு வருஷம்

ஆட்சி கலைக்கப்பட்டது; நான் மறக்கவில்லை—தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால், இன்றைக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று ஆர்வப் பெருக்கில் பேசுபவர்கள் 1973-ம் ஆண்டிலேயே நடத்தி இருக்கலாமே, 1972-ம் ஆண்டிலேயே நடத்தியிருக்கலாமே, 1971-ம் ஆண்டில் நடத்தியிருக்கலாமே; நடத்தவில்லை. நடத்தாமலிருப்பதற்கு 8 முறை திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. காரணம் மக்களைப் பார்ப்பதற்கு பயம், அச்சம்; அந்த அளவிற்குத் துணிவில்லை. அந்த பலம் இல்லாத காரணத்தாலே, பலவீனத்தினுடைய உச்ச கட்டத்திலே உட்கார்ந்து கொண்டிருந்த காரணத்தாலே, மக்களை நெருங்க அஞ்சி 8 முறை சட்டத்தைத் திருத்தி, ஜூலையிலே தேர்தல் வரும். ஆகஸ்டிலே தேர்தல் வரும், அடுத்த ஜூலையிலே தேர்தல் வரும் என்றெல்லாம் ஒத்தி வைத்தார்களே—அந்த அளவு பயப்பட்டவர்கள் அவர்கள் என்பதை நிச்சயமாக மறுத்துச் சொல்லவே முடியாது.

இன்றைய அரசு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும், முனிசிபாலிட்டி தலைவர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற சனநாயக முறைக்கு அடிகோல் விடுத்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த அந்த சனநாயக மரபினைக் காப்பாற்ற வேண்டுமென்று, அக்கறை கொண்டிருக்கிற, ஆசை கொண்டிருக்கிற அந்த அடிப்படையிலே தான் ஊராட்சி மன்றத் தலைவரையும் நகராட்சி மன்றத் தலைவரையும், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கூறியிருப்பது சனநாயகத்தின் வடிவாக இந்த அரசு இருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்று பணிவோடு கூற விரும்புகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்தால், தமிழை வளர்க்காது, தமிழிசையைப் பாதுகாக்காது என்ற அத்தனை வாதங்களும், விஷமமான வாதங்களும், பலவீனமான வாதங்களும் கிளப்பப்பட்ட நிலை மாறி, தமிழ்



ஆசிரியர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் இலவச தொகை அளிக்கப்படும் என்ற உத்தரவாதம் ஆளுநர் உரையிலே இருப்பதைக் காண்கிறோம்.

கூன் விழுந்த முதுகும், குழி விழுந்த கண்களும், அழுக்கான கந்தல் சட்டையும், பாட்டைத் தலையுமாக பெருமதிப்பிற்குரிய தமிழ் ஆசிரியர்கள் பலபேர் இன்று வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவில் பலபேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கோவையிலே ஒரு தமிழாசிரியர் ரோடிலே பிச்சை எடுப்பதை என்னுடைய கண்ணாலே பார்த்தேன். ரூபாய் 1 கொடு, 8 அணா கொடு என்று போவோர் வருவோர் அத்தனை பேரிடத்திலும் பிச்சையெடுக்கும் அவல நிலைக்குத் தமிழாசிரியர்கள் ஆட்பட்டிருக்கிறார்கள். இப்படி எத்தனை இடத்தில் எத்தனை பேரோ நமக்குத் தெரியாது அப்படிப்பட்டவர்களை உயர்த்த வேண்டும் என்றுதான் மானியம் கொடுக்க வேண்டும், சலுகை கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது, அப்படிப்பட்டவர்களை வாழ வைக்க வேண்டுமென்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11.20.)

குடிநீர் பற்றுக்குறையைப் பற்றி இங்கே ஆளுநர் உரையில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பச்சை தண்ணீர் கூடக் கிடைக்காமல் ஒவ்வொரு கிராமத்திலேயும் மக்கள் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள், வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயிருக்கிற அரசு குடிநீர் திட்டத்தை இப்படி இப்படி நிறைவேற்ற வேண்டுமென்று நாட்டு மக்களுக்கும் சபை உறுப்பினர்களுக்கும் எடுத்துக் காட்டியிருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது வேடிக்கையான விவாதங்களை கிளப்பினார்கள். அத்தனையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். 7 ஆண்டுகளாக இருந்த அரசு இந்தக் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதில் என்ன நடவடிக்கை எடுத்தது என்று நமக்குப் புரியவில்லை. நாட்டு மக்கள் பச்சைத் தண்ணீர் வேண்டுமென்று பரிதவித்த நேரத்தில் அந்த அரசு பட்டைத் தண்ணீர் கேட்கிறார்கள் என்று நினைத்ததோ என்னவோ?

[திரு. ஆர். மணிமாறன்] [1977 ஜூலை 13

வீதியெங்கும் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்து விட்டு, நாங்கள் காந்தி வழியில் நடக்கிறோம், அண்ணா வழியில் நடக்கிறோம் என்று நாட்டு மக்கள் மத்தியில் உறுதிப் படுத்திக் கொண்டிருந்தார்கள். பச்சைத் தண்ணீர் கேட்டால் பட்டைத் தண்ணீர் ஆக நினைத்து கள்ளுக்கடைகளைத் திறந்து விட்டு, புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானோதயம் வந்தது போல அவர்களுக்கும் ஞானோதயம் உண்டாகி இதுவரை குடித்தது போதும் என்று கள்ளுக்கடைகளையும், சாராயக்கடைகளையும் மூடிவிட்டார்கள்.

அதே நேரத்தில் அண்ணா வழியிலே நடக்கிறோம் என்பவர்களுக்கு சொல்லிக் கொள்வேன். அண்ணா அவர்கள் 'காஞ்சிபுரத்தில் நான் பள்ளியிலே படித்துக் கொண்டிருந்தபோது, திண்ணையிலே படுத்துக் கொண்டிருந்தபோது எதிர் வீட்டுக்காரன் இரவு 12 மணி, ஒரு மணி, இரண்டு மணிக்கு குடித்து விட்டு, அவன் மனைவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து அடிப்பான். அதை நேரில் கண்ட நான் என் உயிர் உள்ளவரையிலும் மதுவை ஆதரிக்கமாட்டேன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கொள்கையை தான் இன்றைக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அமல் படுத்துவதற்கு, வேகப் படுத்துவதற்கு, தீவிரப் படுத்துவதற்கு திட்டம் போடுகிறார் என்று சொல்லி, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மதுவிலக்கு பிரச்சினைப் பற்றி ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற நம்முடைய அன்புக்குரியவர் அன்றைக்குக் கோவை பொதுக் குழுவிலே மதுவிலக்கை ஏன் தற்காலிகமாக ஒத்திவைக்கவேண்டுமென்பதைப் பற்றி பொதுக்குழு உறுப்பினர் அனைவரும் ஒத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு மணி நேரம் அருமையாக உரை ஆற்றினார். அப்போதிருந்த பொதுக்குழுவிற்கு மதுவிலக்கை ஒத்திவைக்க வேண்டிய தீர்மானத்தை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை நான் இந்த அவைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



1977 ஜூலை 12]

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கோவை பொதுக்குழுவைப்பற்றி இங்கே ஞாபகப்படுத்தினார்கள். அந்தப் பொதுக்குழுவிலே நானும் உட்கார்ந்திருந்தவன் என்றவன் என்ற முறையில், இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், மதுவிலக்கைக் கடுமையாக ஆதரித்து அமல் படுத்தவேண்டுமென்ற கருத்திலேதான் பேசினாரே தவிர, அன்றைக்கு ஆளும் கட்சியிலே முதலமைச்சராக இருந்த இன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், பணப் பற்றாக் குறை இருக்கிறது அதனாலே ஒத்துழையுங்கள் என்று கேட்ட பிறகு கடைசியாக இன்றைய முதலமைச்சர் அவர்கள் மனமில்லாமல் பொதுக்குழு முடிவை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொன்னார்கள் என்பது என்னுடைய நினைவில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் இன்ஃபர்மேஷன். அகில இந்திய அண்ணா தி.மு.க. மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்துவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாண்டிச்சேரியில் இவர்கள் நிலைமை இப்படிப்பட்டது தானா?

திரு. ஏ. உமாநாத்: தலைவர் அவர்களே, சபையில் நமது எதிர்க்கட்சித் தலைவர் அருமை நண்பர் கருணாநிதி சீப் மினிஸ்டரை குறிப்பிட்டுச் சொல்லும்போது பெயர் சொல்வது இல்லை. அதே மாதிரி சீப் மினிஸ்டரும் எதிர்கட்சித் தலைவரின் பெயரைச் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். திரு. அன்பழகன் கொஞ்சம் முன்னாலே பேசும்போது ரொம்ப நெருங்கி ஒற்றுமை தான் என்கிற மாதிரி பேசினார்கள். ஆகையால் அவர்கள் இந்த சங்கோஜம் எல்லாம் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு முதல்வரையும், எதிர்கட்சித் தலைவரையும் பெயர் சொல்வது மரபு அல்ல. அதே நேரத்தில் இராதா அவர்கள் சொன்னது சரியான தகவல் அல்ல. இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் பொதுக் குழுவிலே

அதைப்பற்றி இருக்கிற ஒரு நிலைமையை எடுத்துக் கூறியது மட்டுமல்ல அவர் ஆனந்த விகடனில் எழுதிய 'எனது வாழ்க்கைப் பாதை' என்ற கட்டுரையில் இதைப்பற்றி மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். இதைத் தவிர வேறு வழியில்லை என்ற அளவில், ரத்து செய்யப்படவில்லை, ஒத்திவைக்கப்பட்டது.

*திரு. ரா. நாராயணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் சாதாரண சிறு விவசாயிகளுக்குள்ள குறைகளைப் போக்கும் அளவுக்கு திட்டவட்டமாக நிவாரணங்கள் எதுவும் இல்லை என்பதைப் பார்க்கும்போது பெருத்த ஏமாற்றம் அடைகிறேன். விவசாயிகள் அதிகாலை 4 மணிக்கு எழுந்து இரவு 8 மணிவரை உழைக்கிறார்கள். 8 மணிக்கு ½ வயிறு உணவை உண்டு, திருட்டு பயத்திற்காக பயிர்களைக் காக்க, பம்பு செட்டுகளைக் காக்க, கால்நடைகளைக் காக்க, தூங்காமல் தூங்கி விட்டு அதிகாலை மீண்டும் 4 மணிக்கு எழுந்து விவசாய வேலை பார்க்கிறார்கள். அவனுடைய வாழ்க்கை மிகவும் வறுமை மிஞ்சி இருக்கிறது. வறுமைகளைப் போக்கும் முறைகள் ஆளுநர் உரையில் இல்லை என்பதைப் பார்க்கும்போது வருத்தம் ஏற்படுகிறது. கிராமங்களில் விவசாயிகள் மிக பிற்போக்கான நிலைமையில் வசிக்கிறார்கள். குறிப்பாக, சிறு விவசாயிகள், 2 அல்லது 3 ஏக்கரா வைத்துள்ள சிறு விவசாயிகள் என்பது சதவிகிதம் இருக்கிறார்கள். அவர்களுடைய வறுமை மிகவும் கடுமையான முறையிலே அதிகமான அளவிலே இருக்கிறது.

ஏழு, எட்டு ஆண்டுகளாக பருவ மழைப் பொய்த்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடன் தொல்லையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன்கள், சர்க்கார் கடன்கள், நிலவள வங்கிக் கடன்கள், யாவும் மீண்டும் அதை 6 மாதத்திற்கு ஒத்தி வைக்க வேண்டும். வறுமையிலேயும், கஷ்டத்திலேயும் அவதிப்பட்டுக் கொண்டு வாழ்கிற விவசாயிகள், நல்ல முறையிலே இருந்தாலும் கூட கடனைத் திருப்பி கொடுக்க முடியாத அளவில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடனைத் திருப்பி அளிக்க அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு வாழ்வோம் என்ற நம்பிக்கையே போய் விட்டது. மீண்டும் விவசாயம் செய்ய முடியுமா என்ற





பிற்போக்கான நிலையில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கின்ற முறையிலே கடன்களை நீண்டகால அடிப்படையில் வசூலை தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதேபோல கூட்டுறவு கடன்கள் சிறு விவசாயிகள் பெற்றிருக்கிற கடன்கள் அரசாங்கக் கடன்கள் இவைகளை ரத்து செய்து அவர்களுக்கு வாழ்வளிக்க முடியுமா, அவர்களது வறுமையை போக்க முடியுமா என்று பரிசீலிக்க வேண்டும்.

குறிப்பாக சேலம் மாவட்டம், நெசவாளர் நிறைந்த பகுதி. அவர்கள் நிலை இன்று மிகவும் பரிதாபமாக இருக்கின்றது. நூல் விலை விஷம்போல் ஏறுகிறது. நூல் கிடைக்காமல் பாவு கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஜவுளிகள் தேங்கிவிட்டிருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் தலையிட்டு தேங்கி இருக்கின்ற ஜவுளிகளை அரசாங்கமே வாங்கி உடனடியாக அவர்களுடைய வாழ்க்கையை மலரவைக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

தாரமங்கலம் தொகுதி சிறு விவசாயிகள் நிறைந்த பகுதி. கடந்த 6 ஆண்டு காலமாக மழை பெய்யாததால் அங்கு கடும் வறட்சி இருக்கிறது. இன்றுள்ள நிலையிலே மாட்டுத் தீவனம் கூட இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே விவசாயிகள், சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்.

அதேபோல இந்தப் பகுதியிலே குடிநீர்த் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருக்கிறது. மேட்டூரிலேயிருந்து சேலம் நகராட்சிக்குச் செல்லும் குழாய் மூலம் தாரமங்கலத்திற்கு தண்ணீர் சப்ளை செய்வதற்காக ஆறு 'டாப்கள்' (Taps) கொடுத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் தான் தண்ணீர் விடுகிறார்கள். மற்ற நேரங்களில் தண்ணீர் கிடையாது. எனவே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இந்தப் பகுதிக்கு தண்ணீர் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. நாராயணன்] [1977 ஜூலை 12

[முற்பகல் 11-30]

அதேபோல் எங்களுடைய தொகுதியிலே மேச்சேரி நகரப் பஞ்சாயத்து இருக்கிறது. 10 மைல் தூரத்தில் காவிரி இருந்தாலும் அந்த ஊருக்கு குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. அந்தப்பகுதி மக்கள் தண்ணீருக்காக மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கும் தண்ணீர் கஷ்டத்தைப் போக்க தொப்பையாறு ஸ்கிம் போட்டு, அதன் காரணமாக 4-5 பஞ்சாயத்துக்கள் பயன் அடையும் என்று சொன்னார்கள். அதன் காரணமாக சில பஞ்சாயத்துகளும் பணம் கட்டி அங்கு ஆய்வு கூட நடத்தப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எந்த நிலையில் இருக்கிறது, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. தொப்பையாறு அல்லது காவிரித் தண்ணீர் கொடுத்தால், மேச்சேரி, அதைச் சுற்றியுள்ள பஞ்சாயத்துக்கள் பயன் பெறும் என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை உடனடியாக அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு உள்ள குறைகளைப் போக்க கூட்டுறவுக் கடன்கள் 6 மாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அது போதாது. அந்தக் கடன்களை திருப்பித்தர அவர்களுக்கு மேலும் அவகாசம் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள மக்கள் ஆழ்கிணறுகள் வேண்டும் என்று கேட்டு வருகிறார்கள். இதன் காரணமாக குடிநீர் பிரச்னை தண்ணீர் பிரச்னை தீரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் பெரும்பாலான ஊர்களுக்கு அந்த வசதி செய்து தரப்படுவது இல்லை. அனைத்து கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில், அனைத்து கிராமங்களுக்கும் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி ஆழ்குழாய் கிணறுகள் எல்லா கிராமங்களுக்கும் வேண்டும் என்று கேட்கிறபோது அரசாங்கத்தில் பணம் இல்லை, போதிய ஒதுக்கீடு இல்லை என்று கலெக்டர்கள் சொல்கிறார்கள். ஆகவே, ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க அதிகமான நிதி



1977 ஜூலை 12] [திரு. ரா. நாராயணன்]

ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு கிராமப்புறங்களில் இருக்கும் குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஆளுநர் உரையிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தக் குடிநீர் பிரச்னைக்கு முதலிடம் தந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மது விலக்குப் பிரச்னை குறித்து குறிப்பிட விரும்புகிறேன். கிராமப்புறங்களில் மதுவிலக்குக் குற்றங்கள் பரவலாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் இதனால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த மது விலக்கு குற்றத்தால் கிராமத்தில் வசிப்பதற்குக்கூட கஷ்டமாக இருக்கிறது. மது விலக்கு தவறு செய்பவர்களை பற்றி தகவல் கொடுக்கிற விவசாயிகளுக்கு பல தொல்லைகள் அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார்கள். அதைத் தாங்க முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள்.

இப்போது அரசாங்கத்தில் மது விலக்கு தீவிரமாக அமல் நடத்தப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். இந்த மது விலக்குத் திட்டத்தை தீவிரமாக அமல் நடத்துவதன் மூலம் ஏழை மக்கள், விவசாய மக்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்று கூறி, அதற்கு வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு அளிக்கப்படும் பயிர் கடன்கள், கூட்டுறவுக் கடன்கள், மத்திய வங்கியில் கொடுக்கப்படும் கடன்கள் ஆகியவற்றிற்கு அதிக உரம் வாங்கவேண்டும் என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்படுகிற கடனை பணமாகத் தராமல் உரமாகத் தருவதால் அவர்கள் உரத்தை வாங்கி குறைந்த விலைக்கு விற்று பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே கூட்டுறவுக் கடன், பயிர்க் கடன் ஆகியவற்றை கொடுக்கும்போது அவர்களுக்கு முழு கடன் தொகையையும் ரொக்கமாகவே கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். அதுதான் விவசாயிகளுக்கு பெரும் உதவியைச் செய்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ரா. நாராயணன்] [1977 ஜூலை 12

அதே போல் இன்று அவர்கள் தனிப்பட்டவர்களிடமும் கடன் வாங்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் திருமணம், ஈமச்சடங்கு மற்றும் மருத்துவம் போன்றவற்றிற்கு கடன் பெற முடியாத அளவுக்கு இருக்கிறார்கள். பயிர்களுக்கு கடன் அளிப்பது போல், சாதாரண விவசாயிக்கு இப்படிப்பட்ட திருமணம், ஈமச்சடங்கு, மருத்துவம் போன்றவற்றிற்கு பயன் படும் வகையில் கடன் உதவி செய்ய கூட்டுறவு மூலம் வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் தொப்பையாறு அணை கட்டினால், ஓமலூர் தாலுகா மேட்டூர் தாலுகா போன்ற பகுதிகள் பயன்பெறும். இதனை நிறைவேற்ற 15 ஆண்டுகளுக்கு முன் திட்டம் போட்டு இருந்தார்கள். ஏனோ அது நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டு விட்டது. அந்தத் திட்டத்தை மேற்கொண்டால் எங்கள் பகுதி மிகவும் பயன் பெறும். எங்கள் பகுதி மிகவும் மேட்டுப் பகுதி. ஆறு, ஏரி, குளம் எதுவும் கிடையாது. ஆகையால் இந்தத் தொப்பையாறு அணைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

20 ஆண்டு காலத்திற்குமுன் ஒகேனக்கல் பகுதியில் காவிரியில் ஒரு அணை கட்டி, அதன் மூலம் தருமபுரி, சேலம் மாவட்டங் களுக்கு—மேட்டுப்பாங்கான பகுதிகளுக்கு—தண்ணீர் வசதி செய்து தரப்படும் என்று சொன்னார்கள். இப்போது காவிரியில் தண்ணீர் பற்றாக்குறை இருந்தாலும், அந்தத் திட்டத்தை அவசியம் செய்து முடித்தால், சேலம், தருமபுரி மாவட்டங்களில் உள்ள பிற்பட்ட மக்கள் மிகவும் பயன்பெறுவார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டி, முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் உருக்காலை திட்டம் தொடங்கப்பட்டு, அந்தத் திட்டத்தில் வேலை மெதுவாக நடந்து கொண்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால், அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அந்தச் சேலம் உருக்காலை திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 12] [திரு. ரா. நாராயணன்]

சேலம் ஜில்லாவில் மின் கட்டணம் அதிக அளவில் வசூலிக் கிறார்கள், என்ற முறையீட்டின்பேரில், சர்சார்ஜ், மீட்டர் சார்ஜ், லைட் சார்ஜ் அதிகமாக வசூலிக்கிறார்கள் என்று முறையீட்டின் பேரில் மின் கட்டணம் இன்னும் கட்டப்படாமல் இருந்து வருகிறது. ஆறு மாத காலமாக கட்டப்படாமல் இருக்கிறது. அது குறைக்கப்பட வேண்டும் என்று சேலம் மாவட்டத்திலுள்ள விவசாய சங்கம் கோரிக்கை கொடுத்தது. அது அரசாங்கத்தில் பரிசீலனையில் இருக்கிறது பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அதனால் 6 மாத காலமாக அந்தக் கட்டணம் கட்டப்படாமல் இருக்கிறது. ஒரு பெரிய போராட்டத்தையே இதற்காக சேலம் மாவட்ட விவசாயிகள் சங்கம் நடத்தி இருக் கிறார்கள். ஆகவே, இந்த மீட்டர் சார்ஜ், மின் கட்டண சர்சார்ஜ், லைட் சார்ஜ் ஆகியவற்றை குறைத்து, விவசாயிகளுக்கு நன்மை செய்ய அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பெரும் பாலோர் கிராமப்புறங்களில் இருந்து வந்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு எல்லாம் கிராமப்புறத்தில் உள்ள ஏழை மக்கள், விவசாய மக்கள் எந்த அளவுக்கு கஷ்டப்படு கிறார்கள் என்பது தெரியும். ஆகவே, அந்த கிராம மக்கள், ஏழை மக்கள், விவசாய மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு, கிராமத்திலுள்ள அரிசன பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்வதற்கு வகைசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலுள்ள அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தனிப்பட்டவர்கள் கிணறுகளில் தண்ணீர் எடுத்தால் அதை அவர்கள் தடுக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையை போக்க அவர்களுக்கு குடிநீர் வசதியைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே அரிசனங்களுக்கு வீட்டு மனைகள், வீடுகள் ஆகியவை கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தன. அதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. மேலும் உள்ள அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கவும், வீடுகட்டிக் கொடுக்கவும் குடிநீர் வசதி செய்து தரவும் அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. நாராயணன்] [1977 ஜூலை 12

கிராமப்புறங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த இளைஞர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கச் செய்ய, கிராம மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கா. அப்புனு கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு சில கருத்துக்களை நான் சார்ந்து இருக்கும் ஜனதா கட்சியின் சார்பாகக் கூறுவதற்கு விழைகிறேன்.

ஆளுநர் உரையிலே இரண்டாவது பக்கத்திலே "நிர்வாக அமைப்புகளிலும், நீதிமன்றங்களிலும் ஏழை எளிய மக்களுக்கு நியாயம் கிடைப்பதில் தடங்கல்களும், தாமதங்களும் உள்ளன. இந்நிலை மாறி, ஏழைகளுக்கு நியாயம் கிடைக்க இலவச சட்ட உதவி வழங்குவதற்கு இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தும்" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் நீதித் துறையில் எந்த முறையில் தடங்கல்கள் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தேவையான இடங்களில், நிறைய இடங்களில் நீதி மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். தருமபுரி மாவட்டத் தலைநகர் தருமபுரி என்றாலும் அங்கே முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் இல்லை. அதன் காரணமாக பல வழக்குகள் முடிவடையாமல் இருக்கின்றன. நீதிமன்றங்கள் நல்ல முறையில் செயல்பட்டால்தான் மக்களுக்கு நல்ல முறையில் நீதி கிடைக்கும். ஆகவே, இதில் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இலவச சட்ட உதவி செய்வதிலும் போதிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1974-ம் ஆண்டு குற்ற இயல் செயல் முறைச் சட்டம் புதிதாக இயற்றப்பட்ட நேரத்தில் இந்த ஷரத்து சேர்க்கப்பட்டு இருந்தாலும், மூன்றாண்டுகள் ஆகியும் இன்னும் அது நடைமுறைக்கு வராதது வருந்தத் தக்கதாகும். அதை உடனடியாக கவனிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஜூலை 12] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

இரண்டாவதாக, ஆளுநர் அறிக்கையின் 4-ம் பக்கத்திலே, "அண்டை மாநிலங்களுடன் நமது உறவுகள், குறிப்பாக குடி தண்ணீர், பாசன, மின்வசதிகளைப் பொறுத்தவரை, பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில், நல்லவிதமாகத் தொடர்ந்து பேணப்பட வேண்டும்" என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 11.40)

என்னுடைய தொகுதியிலே காவிரி ஆற்றில் ஒகேனக்கல் இருக்கிறது. ஒகேனக்கல் மின்சாரத் திட்டம் மேன்மைதகு காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேயே முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக எடுக்கப்பட்டது. 1967 இல் ஆட்சி மாறிய உடனே அண்டை மாநிலங்களோடு சரியான உறவு இல்லாத காரணத்தால் அந்தத் திட்டம் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வந்தது. ஆற்றின் அக்கரை கர்நாடக மாநிலத்திற்கும் இக்கரை தமிழ்நாட்டிற்கும் சொந்தமானதாக இருந்ததால் அத்திட்டத்தால் கிடைக்கக் கூடிய மின்சாரப் பங்கீட்டில் இரு மாநிலங்களுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்படாத காரணத்தால் அத்திட்டம் இன்று வரை நிறைவேற்றப் படாமலேயே இருக்கிறது.

ஒகேனக்கல் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தமிழ்நாடு மின் துறையில் தன்னிறைவு பெறுவதோடு, அப்பகுதியில் தொழிற் சாலைகள் ஏற்படவும், வேலைவாய்ப்புகள் பெருகவும், சந்தர்ப்பம் அளிக்க உதவும். ஆகவே, நமது முதல்வர் அவர்கள் நேற்று அவையில் அறிவித்தபடி, காவிரி தண்ணீர் வருவதற்கு கர்நாடக முதல்வரைச் சந்தித்து எப்படி ஒப்புதலைப் பெற்றாரோ, அதே முறையில் ஒகேனக்கல் திட்டத்தையும் நிறைவேற்றித் தருவார் என்று கருதுகிறேன். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்த பின்தங்கிய மாவட்டத்தில் தொழிற்சாலைகள் பெருகவும், வேலை வாய்ப்புகள் ஏற்படவும் ஏதுவாக இருக்குமென்ற காரணத்தால், இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கை இந்த அரசு தீவிரமாக செயல்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மதுவிலக்குத் திட்டத்தை காவல் துறையினர் அமுல் படுத்துகிறார்கள். காவல் துறையினருக்கு பல்வேறு தொல்லைகள், சங்கடங்கள் இருக்கின்றன. காவல் துறையினர், மதுவிலக்கில் அதிக கவனம் செலுத்துவதால், அவர்களால் மற்ற நிர்வாகத்தை சரிவர கவனிக்க முடியவில்லை,

மதுவிலக்கிலேயே அதிக கவனம் செலுத்துவதால், மக்கள் எந்தக் குறையைக் கொண்டு போனாலும், எந்த வழக்கைக் கொண்டு போனாலும், அவர்களால் போதிய கவனம் செலுத்த முடியவில்லை. ஏதோ, புள்ளி விவரக் கணக்குகளுக்காக கேஸ்கள் போடுகிறார்களே தவிர மதுவிலக்கையும் சரிவர அமுல் படுத்த முடியவில்லை. மதுவிலக்குச் சட்டத்திலுள்ள ஓட்டைகளை வைத்துக் கொண்டு யார் யாருக்கு உதவி செய்ய முடியுமோ அப்படிச் செய்கிறார்கள். ஆகவே, காவல் துறை நிர்வாகம் சீர்படவும், மதுவிலக்கு சரியான முறையில் தீவிரமாக அமுல் படுத்தப்படவும், மதுவிலக்குத் திட்டம் காவல் துறை அல்லாத வேறொரு அமைப்பிடம் இருந்தால் அதன் மூலம் மதுவிலக்கை தீவிரமாக அமுல் படுத்த முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நியாயவிலைக் கடைகளைப் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போதும் நியாய விலைக் கடைகள் இருந்து வருகின்றன. இப்போது அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை ஆகியவை கட்டுப்பாட்டு விலையில் கொடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையாக, சில இடங்களில் நல்ல முறையில் கொடுக்கப்பட்டாலும், பல இடங்களில் இவை சரியான முறையில் விநியோகிக்கப்படுவதில்லை. நான்கு மூட்டை சர்க்கரை கொடுத்தால், ஒரு மூட்டை சர்க்கரை விநியோகித்து விட்டு, மூன்று மூட்டையை கள்ளச் சந்தையில் விற்றுவிடுகிறார்கள் என்ற பரவலான குறை அதிகாரிகளாலேயே சொல்லப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட குறைகள் நீக்கப்பட்டு எல்லாப் பொருள்களும் நியாய விலைக் கடைகளில் கிடைக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பொதுமக்கள் நன்மை அடைய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் எங்கள் மாவட்டம் பின்னடைந்த ஒரு மாவட்டம். இரண்டே இரண்டு கல்லூரிகள் தான் இருக்கின்றன. படித்த மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல முடியவில்லை. Eligible for College education என்று சர்டிபிகேட்டில், தகுதியின் அடிப்படையில் கல்லூரியில் படிக்க தகுதி பெற்றிருந்தும் அட்மிஷன் கிடைப்பதில்லை. கிராமங்களில் இப்படிப்பட்ட மாணவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, எங்கள்



மாவட்டத்திற்கு மேலும் ஒரு கல்லூரி ஏற்படுத்தித்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் குறிப்பிட்டபடி, பின்தங்கிய எங்கள் மாவட்டத்தில் இரண்டே கல்லூரிகள்தான் இருக்கின்றன. இதனால் மகளிர், கல்லூரி சென்று படிக்க வாய்ப்பு அதிகம் இல்லை. எனவே, பெண்கள் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தரவும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்ட எங்கள் மாவட்டத்தில் தொழில் பயிற்சி நிலையங்கள் சரியான முறையில் அமையவில்லை. தர்மபுரியில் எல்லா வசதிகள் இருந்தும் அங்கே கூட தொழில் பயிற்சி நிலையம் ஒன்றும் இல்லை. ஏற்படுத்துவதற்கான திட்டக் குறிப்பும் ஏதும் காணப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கே ஒரு தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓசூரில் தனியார் தொழில் நிறுவனங்கள் பல ஏற்பட்டு வருகின்றன. வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இத்தகைய நிறுவனங்களை ஏற்படுத்துவதால், அவர்களால் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கே அங்கே அதிக வேலை வாய்ப்பு தரப்படுகிறது. "எங்கள் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் இருக்கின்றன" என்று நாங்கள் பெருமை பேசிக் கொள்ளலாமே தவிர எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிறுவனங்களில் குறைந்தபட்சம் 50 சதவிகிதமானது எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று உத்திரவாதத்தைக் கொடுத்து அதற்கேற்ற முறையில் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆளுநர் உரையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை திரு. எஸ். ஆர். இராதா முன்மொழிந்ததைப் பின்பற்றி எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இயங்கும் நியாய விலைக் கடைகளை விரிவுபடுத்தி, அத்தியாவசியப் பொருட்களை வசதியாகவும் குறைந்த விலையிலும் மக்களுக்கு வழங்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை மிகவும் பாராட்டுகின்றேன்.

குறிப்பாக நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியிலே மொத்தம் 328 கிராமங்கள் உள்ளன. இதில் பஸ் போக்குவரத்துச் செல்லும் சாலையின் பக்கங்களில் உள்ள கிராமங்கள் மொத்தம் 100-ம், நான்கு மேஜர் பஞ்சாயத்துக்களும் உள்ளன. மீதமுள்ள கிராமப் பகுதிகளில் சாலை வசதியில்லாத காரணத்தால், நகரத்திற்குச் சென்று அரிசி, பருப்பு, பலசரக்கு போன்ற அன்றாடத் தேவைப் பொருட்களை வாங்குவதற்காகச் செல்ல இயலாத காரணத்தால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

நம் ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டியுள்ள நியாய விலைக் கடைகள் 16,000 ரெவின்யூ கிராமங்களில் அமைக்கவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, எங்கள் தொகுதிக்கும், பக்கத்திலுள்ள ஓட்டப்பிடாரம், கடலாடி போன்ற பின்தங்கிய பகுதிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதைத் தெரிவித்து அதற்காக நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நமது நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கிராமங்களே உயிர்நாடி. தமிழ் நாட்டில் 70 சதவீத மக்களின் வாழ்க்கையும் உழைப்பும் கிராமப்புறங்களிலேதான் நடைபெறுகின்றன. இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல முனைகளிலும் முயற்சிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இவை விவசாயம், பாசனம், விவசாய அடிப்படையிலும், பிற வகையிலும் உருவாகும் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கிராமப்புற வீட்டு வசதி, வணிகம், போக்குவரத்து வசதி, கிராமப்புற மின்வசதி ஆகிய பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். விவசாய இடுபொருள்களான விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் மக்கள் பெருவாரியாக உபயோகிக்கும் துணிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதிலும் கிராமப்புற மக்களுக்குக் கூடுதலான வேலைவாய்ப்பு, அதிகப்படியான வருவாய் நேரடியாகக் கிடைக்க வேண்டும். அதே நோக்கில், அடிப்படை வாழ்க்கை வசதிகளான குடிநீர்,





கல்வி, எழுத்தறிவு, சுகாதாரம், வீட்டு மனைகள், வீட்டு வசதி, சாலைப் போக்குவரத்து வசதிகள் ஆகிய பலவும் அமைந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கை நலம் பெற விளங்க வேண்டும். கிராமப்புறங்கள் இப்படி பல வகைகளிலும் முழுமையான வளர்ச்சி பெறுவதே இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாக விளங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால், நம் தமிழக முதல்வரவர்கள், முன்பிருந்த மந்திரி சபையிலே இல்லாத ஒரு சில மாற்றங்களை உண்டு பண்ணி அதன் மூலம் ஆக்கபூர்வமான காரியங்கள் உடனடியாக நடைபெறுவதற்காக, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையோடு, போக்குவரத்துத் துறையையும் ஒன்றாக இணைத்து ஓர் அமைச்சருக்குக் கொடுத்துள்ளார்கள். எனவே அந்த மாதிரி கொடுத்ததன் காரணம், ரோடுகள் செப்பனிட்டவுடன் பஸ்கள் உடனே விட ஏற்பாடு செய்யலாம் என்ற காரணத்தால் நம் முதல்வர் அவர்கள் இரண்டு இலாகாவையும் ஒன்றாக இணைத்துக் கொடுத்துள்ளார்கள். அந்த இலாக்காக்களை ஒருங்கிணைத்துக் கொடுத்ததால், பொருளாதார மேம்பாடும், பொது மக்களுக்கு உடனடியான நன்மையும் ஏற்படும் வாய்ப்பினை முதல்வரவர்கள் உருவாக்கியுள்ளார்கள். அதற்காக முதல்வருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

(முற்பகல் 11-50)

ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல அரிசனங்களுக்கு வீட்டு மனைக் குடியிருப்புகள், பனையேறு தொழிலாளர்கள், பீடி சுட்டுத் தொழிலாளர்கள், மீனவத் தொழிலாளர்கள் என்று தனித்தனியே கொடுக்காமல் ஒட்டு மொத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். தனித்தனியாகச் சொல்வது என்றால் இராமாயணம் பாரதம் போல நான்கு காண்டமாகப் பிரித்து நான்கு மாதத்திற்கு மேல் ஆளுநர் உரை மீதே விவாதம் நடத்த வேண்டியதாகிவிடும். எனவே இந்த மன்றத்தை நடத்திச் செல்ல இயலாததாகிவிடும் என்று சொல்ல விரும்புகிறேன். ஆகவே எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக எதிர்க் கட்சியினர் இப்படிச் சொல்ல வேண்டியதில்லை என்று தெரிவித்து என் உரையை முடித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. துரை முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்த மாமன்றத்திலே நடைபெறுகிற விவாதத்தில், நானும் கலந்து கொண்டு, என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகின்றேன். பொதுத் தேர்தல் நடைபெற்று, புதியதோர் கட்சி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கிறது. ஆயிரம் வாக்குறுதிகளை மக்கள் முன்னால் அள்ளி வீசி, வாக்குகளைப் பெற்று, நீங்கள் வந்து இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் வந்தால். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே உறுப்பினர்கள் ' நீங்கள் ' என்று அழைப்பது சபையின் தலைவரையே குறிப்பதாகும். ஆகவே சபைத் தலைவர் மூலமாக மற்றவருக்குக் கூறும்படி, தம்முடைய பேச்சை உறுப்பினர் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன்:** துணைத் தலைவர் புதியவர் என்றாலும், அருமையான கருத்தை வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் அதிகமான வாக்குறுதிகளை அள்ளிக் கொடுத்து, மக்களது வாக்குகளைப் பெற்று இங்கே வந்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று நாட்டு மக்களும் எதிர்பார்ப்பார்கள். நாங்களும் அதற்காக வாதாடுவதற்காகத்தான் எதிர்க் கட்சி வரிசையில் உட்கார்ந்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஓர் ஆளுநர் உரை என்பது நூலுக்குப் பாயிரம் போன்று, அந்த ஆட்சியில் என்ன என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் குறித்து முதலில் எடுத்துக்காட்டுவது போலாகும். ஆனால் இந்தப் பாயிரத்தில் நான் பார்க்கிறேன். இதில் எத்தனையோ புரட்சிகரமான கருத்துகள் மிளிரும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் ஆளுங் கட்சியில் இருக்கின்றவர்களோ, " இதில் எவ்வளவு புரட்சிகரமான கருத்துகள் இருக்கிறது தெரியுமா ? இந்தப் புரட்சி எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லையே, இவர்களுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லையே " என்று சொன்னார்கள்.



தலைவர் அவர்களே, கவர்னர் உரையில் புரட்சிகரமான கருத்துக்கள் இருக்க வேண்டுமென்று சொல்கிறபோது, துப்பறியும் நாவல்களில் வருகிற புரட்சிபோல இருக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. புரட்சி என்ற தலைப்பில் ஒரு சிறுகதையை நான் படித்தேன். அதில் ஒரு கதாநாயகன் ஒரு கதாநாயகி வீட்டிற்குப் போகிறான். அவன் அங்கே போகிறபோது, வேறு ஒரு கதாநாயகன் அந்த வீட்டில் இருக்கிறான். இந்த இரண்டு பேர்கள் கையிலும் துப்பாக்கிகள் இருக்கின்றன. பிறகு கொஞ்ச நாள் ஆகிறது. கதாநாயகியின் தாய் செத்துவிடுகிறாள். இதுதான் கதை. இதில் என்ன புரட்சி இருக்கிறது என்று நான் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். இரண்டு கதாநாயகர்கள் கையிலும் துப்பாக்கிகள் இருந்தும், துப்பாக்கி எதுவும் வெடிக்காமல் கதாநாயகியின் தாய் உயிர் போய் இருக்கிறது. அதுதான் அதில் இருக்கிற புரட்சி. (சிரிப்பு) இதுபோன்ற புரட்சியை நாங்கள் கவர்னர் உரையில் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை.

எனக்கு இருக்கிற எண்ணம் எல்லாம், இவ்வளவு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றியெல்லாம் முழுமையாக என்ன செய்ய இருக்கிறோம் என்பதைப் பற்றிச் சொல்லாவிட்டாலும் கோடிட்டாவது காட்டியிருக்கக் கூடாதா, அதைச் செய்யவில்லையே என்பதுதான், என் வருத்தம்.

எடுத்த எடுப்பில் ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார், தமிழ் நாட்டில் 17 மாத காலம் நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்றது என்று. ஆளுநர் உரையில் ஒரே வரியில் 17 மாத காலம் நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்றது என்று சொல்லிவிட்டார்களே, அந்த நேரத்தில் இந்த நாட்டில் ஒரு அராஜக, கோரத்தாண்டவம் நடைபெற்றதே, அதைப் பற்றி ஒரு வரி கூடச் சொல்லாமல், 17 மாதகாலம் நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்றது என்று மட்டும் சொல்லியிருக்கிறார்களே என்பதை நினைக்கிறபோது நான் வேதனைப் படுகிறேன். ஒருகால் அப்படியும் இருக்கும், ' அந்தக் கோரத் தாண்டவத்திற்கு நாம்தானே பதம் பாடினோம் ' என்று வெட்கப்பட்டு, அந்த நினைப்பில் அதை விட்டிருப்பார்கள் என்று கருதுகிறேனே தவிர வேறு அல்ல.

இன்னொன்றையும் பார்க்கிறேன். ஒரு கொள்கை விளக்கம் போல, கொடுத்த வக்குறுதிகள்பற்றி எதுவும் கோடிட்டுக்கூட காட்டாது மீதியை பட்ஜெட்டில் காணுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பழைய காலத்தில் சினிமாப் பாட்டுப் புத்தகம் அச்சடுவார்கள். கதைச் சுருக்கம் என்று போட்டிருப்பார்கள் முதலில். முடிவில் மகேந்திரவர்மன் மகளை வீரசேனன் மணந்தாரா? அர்ச்சகர் குட்டு அம்பலமாயிற்று? காணாமல் போன இளவரசன் நாடு திரும்பினாரா? என்கிற வினாக்களைப் போட்டு, மற்றவற்றை வெள்ளித்திரையில் காண்க என்று அச்சிட்டிருப்பார்கள். அதைப் போல எல்லாவற்றையும் விட்டு விட்டு, மீதியை பட்ஜெட்டில் காணுங்கள் என்று ஆளுநர் உரையில் முடித்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** அது எந்தக் கதையில், எந்தச் சினிமாவில் என்று சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. மு. கருணாநிதி:** அது பழைய படம் என்று தெரிகிறது. அங்கத்தினர் அதை இப்போது பார்க்கத் தேவையில்லை.

**திரு. துரை முருகன்:** அப்படி வெள்ளித்திரையில் காண்க, என்று சினிமா பாட்டுப் புத்தகத்தில் கதைச் சுருக்கம் கொடுப்பதைப்போல, ஆளுநர் உரையில் மீதியை பட்ஜெட்டில் காணுங்கள் என்று சொல்லவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை என்று நான் அவற்றைக் குறிப்பிட்டேன்.

இன்னொன்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு நிர்வாகத்தில் வீண் விரயம் தலைக்காட்டாவண்ணம் நடந்து கொள்ளும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வீண் விரயம் செய்யாது என்ற அரசின் பதவி ஏற்பிலே எவ்வளவு ஆடம்பரம், வைபவம், பவனி, இத்தியாதி, இத்தியாதி பார்த்தால், "ஊருக்கு உபதேசம், உனக்கு இல்லையடி கண்ணே" என்கிற வகையில்தான் உரையில் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா பேரிலே கட்சி. அறிஞர் அண்ணா அவர்கள் எளிமையை விரும்பினார்; அவருடைய பதவி ஏற்பு எவ்வளவு எளிமையாக இருந்தது. இவர்கள் ஆடம்பரத்தை விரும்பிகிறார்கள், படாடோபத்தை விரும்புகிறார்கள், எவ்வளவு பெரிய ஆடம்பர வைபவத்தோடு பதவி



எடுத்தார்கள். ஜோதி இராமலிங்கவிலாஸ் என்று இருக்கும். உள்ளே கோழி பிரியாணி போடுவான். அது போல அண்ணா அவர்கள் பெயரைச் சொல்லி, இங்கே இத்தனை ஆடம்பரங்களா செய்யவேண்டும் என்பதை நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை, மக்களிடத்தில் அளித்த வாக்குறுதிகளை, தேர்தல் பிரகடனத்தில் சொல்லியிருந்த கொள்கைகளைச் செயலுக்குக் கொண்டுவருவதற்காக, கவர்னர் உரையில் இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதையாவது கோடிட்டுக்காட்ட வேண்டாமா? தேர்தல் மேடையில் நாம் பலவற்றைக் கேட்டிருக்கலாம். அவற்றை எல்லாம் கூட நான் சொல்லவில்லை.

என் தொகுதியில் ஒரு நாள் ஒரு கூட்டம். நான் அந்த வழியில் போகின்றேன். "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தபால் கார்டு விலையைக் குறைப்போம். ரெயில் சார்ஜைக் குறைப்போம்" என்று ஒருவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவை எல்லாம் அப்பாவித்தனமான அரசியல் தெரியாத சில அப்பாவிகள் பேசுகின்ற பேச்சு. அவையெல்லாம் ஆளுநர் உரையில் இடம்பெற வேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை.

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, அவை உறுப்பினரை அரசியல் தெரியாத அப்பாவிகள் என்று சொல்வது முறைதானா? அந்த மேடையில் பேசியவர்கள் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு) எல்லா வரிசையிலும்தான் இருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் தேர்தல் மேடையில் பேசிய பல கட்சி உறுப்பினர்களும் இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கிறார்கள். வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டிருப்பதில் பயன் இல்லை.

**திரு. க. அன்பழகன்:** நண்பர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டது தேர்தல் நேரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் ஒருவர் 'தாம் ஆட்சிக்கு வந்தால் கார்டு விலையைக் குறைப்போம், ரெயில் சார்ஜைக் குறைப்போம்' என்று பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டுக்கொண்டே போனேன், அது அப்பாவித் தனமான பேச்சு, அரசியல் தெரியாத அப்பாவிப் பேச்சு என்பதுதானே தவிர இந்த அவையில் உள்ள யாரையும் அவர் குறிப்பிட்டுக்

[திரு. க. அன்பழகன்] [1977 ஜூலை 12

கூறவில்லை. ஆளுங்கட்சிக் கொறடா அவர்கள்தான் இந்த அவையிலுள்ள நாங்கள் எல்லாம் அப்படித்தான் பேசிவிட்டு வந்தோம் என்று குறிப்பிட்டார்கள். அங்கத்தினர் அப்படிக் குறிப்பிடவில்லை. அதைவிட அப்படிப் பேசிய சிலர் நாடாளுமன்றத் தேர்தலில்கூட இல்லை. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அப்படிப் பேசினார்களே என்பதுதான், முக்கியமாகும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, தேர்தல் காலத்தில் பெயர் குறிப்பிடாமல் யாரோ ஒருவர் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தபால் கார்டுகளின் விலைகளைக் குறைப்போம் என்று பேசியதாக இங்கே குறிப்பிட்டார்கள். யார் அப்படி பேசினார்கள் என்பதையும், அப்படிப் பேசியதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா என்பதையும் இந்த மன்றத்தில் அவர்கள் வைக்க வேண்டும் என அழைப்படுகிறேன். அடிப் படையே இல்லாமல் களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற ஒரே காரணத்தோடு வேண்டுமென்று இட்டுக்கட்டி கற்பனையில் களிநடனம் புரிகின்ற அந்த மெம்பர்கள் தாங்கள் தாங்கியிருக் கின்ற அந்தப் பொறுப்பினை உணர்ந்து, பேச்சுக்களை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

**திரு. மு. கருணாநிதி :** நண்பர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டது என்னவென்றால், அப்படிப் பேசினார்கள். அப்படிப் பேசியது அப்பாவித்தனம், என்று சொன்னார்கள். அவர்கள் வெளியில் உள்ளவர்கள் என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்க கொறடா அவர்கள் அவர்கள் வெளியில் உள்ளவர்கள் அல்ல, சட்டமன்றத்தில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எங்களுக்குள்ள சந்தேகம், தபால் கார்ட் விலையைக் குறைப்போம் என்று சொன்னவர்கள் உள்ளேதான் இருக்கிறார்களா என்பதே அரசாங்கக் கொறடா அவர்கள் அப்படி என் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுக்குள்ள சந்தேகம்.



1977 ஜூலை 12]

**திரு. துரை கோவிந்தராசன் :** அப்படி தபால் கார்டுகளின் விலையைக் குறைக்கிறோம் என்று பேசியவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிறார்கள் என்று நான் குறிப்பிடவில்லை. இங்கு வந்திருக்கிறவர்கள் அத்தனைபேர்களும் பொதுக்கூட்டங் களில் பேசி வாக்காளர்களைச் சந்தித்து வாக்குகளைப் பெற்றுதான் வந்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் தெரிவித்ததே.

**திரு. மு. கருணாநிதி :** தபால் கார்டுகளின் விலையை யார் குறைப்போம் என்று சொன்னார்களோ அவர்கள் அப்பாவிகள் என்று சொன்னார்கள். அதற்கு உங்களுக்குக் கோபம் வரவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. துரை கோவிந்தராசன் :** பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது, அந்தந்தக் கட்சிக் கூட்டங்களில் பேசுகிறபோது அறிவாளிகளும், தேர்ச்சி பெற்றவர்களும் அந்தந்தக் கட்சிகளில் இருக்கிறார்கள். அந்தந்தக் கட்சியின் சார்பாகப் பேசியவர்களும் இங்கு உறுப்பினர்களாக வரக்கூடும் என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆரம்பத்திலேயே உறுப்பினர் அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலில் அல்ல, சட்டமன்றத் தேர்தலில் இப்படிச் சொன்னார்கள் என்று சொல்லி யிருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது. பொதுப் படையாக தேர்தல் என்று சொன்னதால் இது வந்தது. சட்டமன்றத் தேர்தலில் இப்படிச் சொன்னார்கள் என்று சொல்லி யிருந்தால் இந்தப் பிரச்னைக்கே இடம் இருந்திருக்காது. ஆகவே தயவுசெய்து முறையாகப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன்:** இன்னொன்றும் சொல்கிறேன். மதிப்பிற்குரிய ராஜாஜி காலத்திலேயே குற்றப்பரம்பரை மீதுள்ள தடைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தேர்தல் காலத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதைச் செய்வோம் என்று எடுத்துச் சொன்னார்கள். இன்று நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சராக வீற்றிருக்கிறவர்கள், அப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றி எவ்வளவோ ஆண்டுகள் முடிந்த பிறகு கூட நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதைச் செய்வோம்

என்று சொல்வது வியப்புக்குரியது. நல்ல காலம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்போம் என்று சொல்லாமல் விட்டார்களே என்று நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டு மக்களுக்காக நாங்கள் பாடுபடுவோம் ஆட்சிக்கு வந்தால் என்று தேர்தல் காலங்களில் சொல்வது வழக்கம். ஆனால் நம்முடைய முதல் அமைச்சராக வீற்றிருக்கிறவர்கள் 8-6-77 அன்று ரேடியோவில் பேசுகிறார்கள். "விவசாயத் தொழில் பாதிக்கப்பட்டால், மகசூல் காணவிட்டால், பயிர்கள் சாவியாகி விட்டால், விவசாயிகள் கடன் தொல்லையில் அவதிப்பட நேரிடு கிறது. இந்த நிலையில் இருந்து அவர்களுக்கு பாதுகாப்பு தரவே பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். ஆட்சிக்கு வந்ததும் பயிர் பாதுகாப்புக் கழகம் அமைத்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவோம். மகசூல் கிடைக்காத விவசாயிகள் அதன்மூலம் நட்டஈடு பெறலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றியாவது இந்த உரையில் இருக்குமா என்று பார்த்தேன்.

நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளித்து, உற்பத்தி போனஸ் வழங்குவது போன்றவைகளின் அடிப்படையில் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்படுத்தப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள், 2—6—1977 அன்று. அது அன்றை பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆனால் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிப்பது பற்றி இந்த உரையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. இனிமேல்கூட அவர்கள் சொல்வதைப் போல் அடுத்து பட்ஜெட்டில் காண்க என்று சொல்லலாம். நான் ஒன்று கூற விரும்புகிறேன். எனக்கு வேண்டிய நண்பர் ஒருவர் அவரது நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிப்பேன் என்று கூறி தன் மச்சான், தன் அண்ணன், அண்ணியின் சம்பந்தி, மச்சான் தம்பி, அவர் மனைவி இவர்கள் மீதெல்லாம் எழுதி வைத்துவிட்டு அவர்கள் தொழிலாளிகள், அவர்களுக்கும் பங்கு அளித்துள்ளேன் என்று ஒரு மகத்தான புரட்சி செய்திருக்கிறார். அப்படிப்பட்டதொரு நிலைமை இருக்கக்கூடாது. அப்படி யார் செய்திருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் திட்டங்கள் அமைய வேண்டும்.





THE HON. THIRU S. RAGHAVANANDAM : Does the hon. Member mean participation in the Management or in the production or productivity and other things? Will he please explain that?

திரு. துரை முருகன்: நிர்வாகம் பக்கமா, தொழிலாளர்கள் பக்கமா என்ற விவகாரத்திற்குள் நான் போகவில்லை. நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிப்பது என்பது நல்லதொரு திட்டம்.

THE HON. THIRU S. RAGHAVANANDAM : நிர்வாகத்தில் பங்கு என்பது —It is a vague term. I want the hon. Member to be specific and precise. Does he want participation in the runn'ng of Management or production productivity? Let him be specific.

திரு. துரை முருகன்: என் பேச்சைக் கூர்ந்து கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர் வர்க்கத்தின் பக்கமே தவிர முதலாளி களுக்குப் பாதுகாப்பாக இருந்த கட்சி அல்ல. நாங்களும் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். இது நல்லதொரு திட்டம், குறை சொல்லவில்லை. ஆனால் சில பேர்கள் தனக்குத் தெரிந்த வர்கள், மாமன், மச்சான் என்று இவர்கள் பெயர்களைப் போட்டு ஊரை ஏமாற்றி விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்னை. தமிழ்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கிற பிரச்னை. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் பற்றி இந்த உரையில் ஒரு வரி கூடக் காணோம். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், Backward classes என்பதை விட்டு பிற்பட்ட பகுதியில் வசிப்பவர்கள் என்றுதான் இருக்கிறது. பாக்வேர்ட் ஏரியா என்றுதான் இருக்கிறது. பிற்பட்ட வகுப்பினர் பற்றி ஒரு வரி கூட இந்த அறிக்கையில் காணாதது வருந்துதற்குரியது.

இந்நாட்டிலுள்ள முக்கால்வாசிப் பேர்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பிற்பட்ட சமுதாயத்தினரின் வாக்குகளைப் பெற்றுதான் ஆளும் கட்சியாக அவர்கள்கூட வந்திருக்கிறார்கள். ஆனால் பிற்பட்ட சமுதாயத்தினருக்கு ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால் அல்லது அவர்களைப் பற்றி கவலைப்பட்டிருக்கிறார்களா என்றால் ஒன்றையும் காணோம். ஒரு வரியாவது அவர்களைப் பற்றிப் போட்டிருக்க வேண்டாமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது அல்லது அதற்கு முன்னால் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி காலத்தில். . . .

**திரு. இரா. முத்தையா:** பாயிண்ட் ஆப் ஆர்டர். ஆளுநர் உரையில் ". . . . வணிக வங்கிகளின் உதவியைப் பெற்று, கிராமப் புறங்களில் கைத்திறனை அடிப்படையாகக்கொண்டு, சொந்த முயற்சியில் சிறு தொழில்களில் ஈடுபடும் எளிய மக்களுக்குப் பெருவாரியாக வேலை வாய்ப்பு அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படும். நமது சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாக வாய்ப்பற்று, நலிவுற்று நிற்கும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், மகளிர் ஆகியோர்க்கு அரசு குறிப்பாக உதவும்". பிற்பட்ட வகுப்பினர் இந்தப் பட்டியலின்கீழ் சேர்ந்தவர்களா சேராதவர்களா என்று விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரை முருகன்:** உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினர் என்பவர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு தனியாக ஒரு அமைச்சரைப் போட்டு, தனி இலாகா ஒன்று ஒதுக்கியிருந்ததை தாங்கள் அறிவீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு 1969-ல் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பிற்பட்டோர் நலக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் அறிக்கைமீது 1972-ல் ஒரு தனி அமைச்சரையும் நியமித்தார்கள். இன்றையதினம் அந்த அமைச்சர் இல்லை. அதைக் கடலில் கரைத்த பெருங்காயமாக எங்கேயோ கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் அது வேறு ஒரு இலாகாவோடு இணைந்திருந்தது. பிற்பட்டோர் வளம் பெறவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு தனி ஒரு அமைச்சரையும் ஒரு தனி இலாகாவையும் அமைத்தது. பிற்பட்ட வகுப்





பினருக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருப்பதைப் பார்த்தால் 1968-69-ல் ரூபாய் 1 கோடியே 87 லட்சம், 1969-70-ல் 2 கோடியே 40 லட்சம், 1970-71-ல் 3 கோடியே 1 லட்சம், 1971-72-ல் 4 கோடியே 33 லட்சம், 1972-73ல் 4 கோடியே 85 லட்சம், 1973-74-ல் 5 கோடியே 8 லட்சம், 1974-75-ல் 5 கோடியே 63 லட்சம், 1975-76ல் 5 கோடியே 78 லட்சம் என்றும் 49 விழுக்காடு அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கு வழி செய்யப்பட்டிருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தில் அதற்கு மேல் போக முடியாத காரணத்தால் அதோடு நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்பு என்றால், இந்த அரசுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையில் நம்பிக்கையற்ற நிலைதான். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையில் நம்பிக்கையற்ற நிலைதான் இருக்கிறது. தகுதி அடிப்படையில்தான் நியமனம் செய்வோம் என்று அவர்கள்கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலேயே எங்களுக்குத் தெரிய முன்பொரு முறை சொல்லப்பட்டிருக்கிறது. தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுமானால் பிற்பட்ட வகுப்பு மக்கள் மீண்டும் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தில் நம்பிக்கையற்ற ஒரு கட்சியாக இருக்கிறது என்று அதன் தலைவர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். 5—1—1975 ஆம் தேதிய ஆனந்தவிகடனில், அவர்கள் அமெரிக்கா சென்றிருந்த நேரத்தில் நியூயார்க்கில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த நேரத்தில் அவர்கள் கூறியிருக்கிறார்கள், "கல்லூரி அட்மிஷன்கள் . . . . .".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆனந்தவிகடனில் இருக்கிறதா என்று தலைவருக்குத் தெரியுமா? என்னிடம் அதைக் காண்பித்து என் அனுமதி வாங்கவேண்டும்.

**திரு. துரை முருகன்:** மக்கள் அனைவருக்கும், அவர்களது ஜாதி சமயம் எதுவாயிருப்பினும் நியாயமான, நேர்மையான முறையில் பாரபட்சமற்ற விதத்தில் கிடைக்கவேண்டியது கிடைக்கும் என்றால், காலேஜ் அட்மிஷனிலும் அப்படிக் கொண்டு வந்தால். . . .

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வேறு ஒரு சந்தர்ப்பத்தில் இதுபற்றி நல்ல முறையில் ஒருமுறை விவாதம் நடைபெற்றது என்பதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் நானும் பங்கு பெற்றிருக்கிறேன். முன்னாள் முதல் அமைச்சரும், இன்று எதிர்க்கட்சித் தலைவராகவும் வீற்றிருக்கிற கலைஞர் அவர்கள் தலைமையில் ஐந்தாண்டுத் திட்டக்குழு ஒன்று அமைத்து அவர்கள் ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அதிலும் இது சம்பந்தமாக ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுவதற்குக் காரணமே ஜாதி வேறுபாடுகள் என்று இருக்கிறது. ஆகவே இதை அகற்ற வேண்டுமானால் கல்வி நிலையங்களில் இந்த முறையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அன்றைக்கு இதே சபையில் இப்படிப்பட்ட முறையைப் போக்கவேண்டும் என்று விவாதித்தேன். அன்றைக்கு இதைப் பற்றி யாரும் பதில் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் . . . .

**திரு. மு. கருணாநிதி:** இது முக்கியமான ஓர் உயிர் பிரச்சினை. இதை இந்த மன்றத்தில் கூறும்போது, எதையாவது சொல்லி திசை திருப்பி விடக்கூடாது. ஏனென்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சி பொறுப்பில் இருந்த நேரத்தில் கம்யூனல் ஜி. ஓ. வைப்பற்றி அது தேவையில்லை என்று சில உறுப்பினர்கள் அப்போது பேசியிருக்கிறார்கள். அதில் நான் கலந்து கொண்டு விளக்கம் அளித்தபோது, பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் மிகுந்த பாடுபட்டு இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை கொண்டு வந்தார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது என்று நான் அப்போது குறிப்பிட்டேன். அப்போது இன்றைக்கு கல்வி அமைச்சராக இருக்கின்ற அரங்கநாயகம் அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து சில மேற்கோள்களை எடுத்துக் காட்டினார்கள். அப்போது அதற்கு பதில் அளித்தபோது, இந்த முறையைப் பள்ளிகளில் எடுத்துவிட வேண்டும் என்று சொல்லியிருப்பது ஒரு பரிந்துரையாகத்தான் இருக்கிறதே தவிர அதை அரசு ஏற்றுக்கொள்வதாக இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு, அதாவது சில நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, அப்போதுள்ள சூழ்நிலைக்குத் தகுந்தபடி பரிசீலிக்க வேண்டிய பிரச்னை, இப்போதுள்ள சூழ்நிலையில், கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கும், வேலைவாய்ப்புகள்





வழங்குவதற்கும் இது பயனுள்ளதாக இருக்கவேண்டும்; ஆகவே நிலைமைக்கு தகுந்தவாறு இதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்த அரசும் அந்த நிலையிலிருந்து மாறாது என்ற நம்பிக்கையில் இருக்கிறேன்.

**திரு. துரை முருகன்:** இனிமேல் வருங்காலத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமையைக் கவனிக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்ற நேரத்தில், இப்போதுள்ள நிலைமையில் அப்படியே விட்டு விட்டால் இன்னும் கடை நிலைக்குப் போய் விடுமோ என்ற என் அச்சத்தை தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியினர் யாரிடமிருந்து வாக்குகளைப் பெற்று இங்கே ஆட்சிக்கு வந்திருக்கிறார்களோ, அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களை மறந்துவிட்டிருக்கிறார்கள். அவர்களைப் புறக்கணித்திருக்கிறார்கள்; ஏறிய ஏணியை உதைத்துத் தள்ளி விட்டிருக்கிறார்கள். செய்ய வேண்டியதைச் செய்ய மறந்து விட்டிருக்கிறார்கள் என்கின்ற குற்றச் சாட்டை இந்த உரையின் மீது பேசுகின்ற இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிறது. சீக்கிரமாக முடியுங்கள்.

**திரு. துரை முருகன்:** அடுத்ததாக நகராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியத்திலும் தலைவர் தேர்தலை நேரடி தேர்தலாக நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதைப்பற்றி ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த முடிவை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஒரு கட்சிக்காக மட்டுமல்ல. . . . . .

(திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் தனது இருக்கையிலிருந்து எழுந்திருந்தார். . . . . )

(பேசிக்கொண்டிருந்த திரு. துரை முருகன் அவர்கள் தனது இருக்கையில் அமர்ந்தார். . . . . )

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருந்தாலும் "நாட் கல்டிங்", "நாட் கல்டிங்" என்று சொல்லக்கூடிய உறுப்பினர் அவர்கள் இப்போது இன்னொரு உறுப்பினர் வேறு எதற்கோ எழுந்திருந்ததும் உட்கார்ந்துவிட்டார்களே, ஆச்சரியமாக இருக்கிறது. . . . .

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்களும் நண்பர் துரை முருகன் அவர்களும் ஒரே மாவட்டத்துக்காரர்கள். மாவட்டப் பாசம் வந்துவிட்டதால்தான் உட்கார்ந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு)

**திரு. துரை முருகன்:** ஆக கவர்னர் அவர்களுடைய உரை, உப்பு சப்பற்ற உரையாக இருக்கிறது; உரையில் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்களும் குழப்பமாக இருக்கிறது; இவர்களும் மனம் குழம்பியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. முத்தையா:** பாயின்ட் ஆப் ஆர்டர். ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் முறையைப்பற்றி மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது அவருடைய சொந்தக் கருத்தா அல்லது அவர் சார்ந்திருக்கின்ற எதிர்க்கட்சியினுடைய கருத்தா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்

**திரு. மு. கருணாநிதி:** 15-ம் தேதி தெரியும்.....

**திரு. க. இரா. சின்னராசு:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளும் கட்சி சார்பில் அண்ணன் எஸ். ஆர். இராதா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் எல்லாம் இந்த ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆளுநர் அவர்களுடைய உரையில் எல்லாப் பகுதி மக்களுக்கும் வேண்டிய பல திட்டங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் இதை திசை திருப்புவதற்காக வேண்டுமென்றே சிலர் கோடிட்டு வேறு எதையோ பேசி வருகிறார்கள். நான் குறிப்பாகச் சொல்ல



விரும்புவது ஆளுநர் அவர்களுடைய உரையில், 16 ஆயிரம் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று கொடுத்திருக்கும் திட்டம் ஏழை மக்களுக்கு மிகவும் நன்மை புரிகின்ற ஒரு திட்டம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்திலிருந்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கிராம மக்களுக்கு குடும்ப கார்டுகள் மூலம் சர்க்கரை வழங்கப்பட்டது. இருந்தும் அப்போது கொடுக்கப்பட்ட சர்க்கரை கிராம மக்களுக்குப் போய்ச் சேராமல் கள்ளமார்க்கெட்டில் விற்று சிலர் கொள்ளை லாபம் அடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இனிமேல் ஏற்படாமல் இருக்க நியாய விலைக் கடைகள் மூலமாக, கிராம மக்கள் அன்றாடப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற நிலையில், விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பதை நான் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். விவசாயத்திற்கு கடன், உரங்கள் கள்ளமார்க்கெட்டில் வாங்காமல், நியாயமான விலையில் கிடைப்பதற்கு வழி செய்யப்படும் என்பதையும் ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகளின் மேம்பாட்டுக்காக கொடுத்திருக்கின்ற விவரங்களைப் பார்க்கின்ற நேரத்தில் விவசாயிகள் நில-வள வங்கிகள் மூலமாக வாங்கிய கடன்களை, கடந்த மூன்று நான்கு வருடங்களாக மழை இல்லாத காரணத்தால் கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டிய கடனுக்கு வட்டியில்லாமல், இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் கடனை நீண்டகால கடனாக மாற்றிக் கொடுப்பதோடு, வட்டி கொடுக்க வேண்டுமென்றால் அதை மூன்று ஆண்டுகளாக வசூலித்துக்கொள்ளவும் வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக. கவர்னர் அவர்களது உரையில் நிலத்தடி நீரை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நிலத்தடி நீரை அதிகமாக பயன்படுத்தவேண்டுமென்றால் மின்சாரத்தை நாம் அதிகமாக பயன்படுத்தவேண்டும். மின்சாரத்தைப் பெருக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்ப

[திரு. க. இரா. சின்னராசு] [1977 ஜூலை 12

நாக ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீரை எந்த அளவுக்கு அதிகமாக பயன்படுத்தவேண்டுமோ அந்த அளவுக்கு மின்சாரம் நமக்கு அவசியமாகிறது.

பம்பு செட்டுகள மூலமாக இப்போது நிலத்தடி நீரை வெளியே கொண்டு வந்து விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். இதற்கு முன் இருந்த அரசாங்கம் மின்சாரத்திற்கு அதிகமான அளவு வரிகளை விதித்திருந்தார்கள். 16 பைசா என்று உயர்த்தி வசூல் செய்து வந்தார்கள். அதற்குப் பின்னால் கவர்னர் ஆட்சி இருந்த போது 10 ரூபாய் என்று சர்சார்ஜ் விதித்து வசூல் செய்து வருகிறார்கள். இதனால் விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே மின்சார வரியை 12 பைசா என்று குறைத்து, சர்சார்ஜையும் எடுத்து விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஆளுநர் அவர்கள் உரையில், நீர்ப்பாசனத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்கின்ற நேரத்தில், தர்மபுரி மாவட்டத்தில்—எங்கள் கிருஷ்ணகிரி தொகுதியில், வேப்பனைபுரி பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருக்கிறது. அங்கு இரண்டு ஏரிகள் கட்ட திட்டம் வகுத்திருக்கிறார்கள். திம்மம்மன் ஏரி, கங்கைமடகு ஏரி என்ற இந்த இரண்டு ஏரிகளையும் கட்டிக் கொடுத்தால், விவசாயிகள் பயன் அடையக் கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. அரசு இந்த நிலையை யோசனை செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.20)

அதே நேரத்தில், அந்நிய அதாவது அண்டை மாநிலங்களோடு நமது உறவுகள் நல்லவிதமாக இருக்கும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதன்படி, அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தின் நிலத் தகராறுக்கு சுமுகமான தீர்வு கண்டு இந்த திம்மம்மன் ஏரித் திட்டத்தை கூடிய விரைவில் முடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் மூன்று ஏக்கர் நீர் முழுகடை நிலம் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. ஆகவே, இந்த ஏரியைக் கட்டுவதில் ஆந்திர அரசாங்கத்தின் தடை இருக்கின்ற சூழ்நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த மாநில அரசு குறிப்பிட்ட இந்த மூன்று ஏக்கர் நீர்முழுகடை நிலம் சம்பந்தமாக ஆந்திர அரசோடு



1977 ஜூலை 12] [திரு. க. இரா. சின்னராசு]

தொடர்பு கொண்டு, சுமுகமான முறையில் இந்த திம்மம்மன் ஏரியைக் கட்டி முடிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், அதே பகுதியில் கங்கமடகு டாம் சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டும். அதற்கான திட்டங்கள் எல்லாம் அரசாங்கத்தில் தயாராக இருக்கிறது. அதேபோல், கிருஷ்ணகிரிக்குப் பக்கத்தில் படேதலாம் ஏரிக்கு மார்க்கண்டேய நதியின் கால்வாயிலிருந்து தண்ணீர் வருகின்றது. அந்தக் கால்வாயை அகலப்படுத்த வேண்டும். அப்படி அகலப்படுத்தினால், அதிகமான தண்ணீர் வந்து, அந்த ஏரியில் நிரம்பும். அந்த ஏரியிலிருந்து வரும் தண்ணீர் பர்கூர் விவசாயிகளின் பாசன வசதிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் குறைந்தபட்சம் 50 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், ஆளுநர் அவர்களுடைய உரையிலே குடி தண்ணீர் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது, என் தொகுதியிலே பெரும்பாலான கிராமங்களிலே இன்னும் சரியாக குடிதண்ணீர் வசதி சென்ற ஆட்சி நடந்த காலத்திலே செய்து தரப்படாமல் இருக்கின்றது. எனவே, நமது அரசு நடத்துகின்ற இந்த நேரத்திலாவது என் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு நல்ல முறையில் குடி தண்ணீர் வசதி செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இதே நேரத்தில் மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கிருஷ்ணகிரி நகரத்திற்கு நான்கு ஆண்டுகளாக குடிதண்ணீர் வருகின்றது. நகரத்தில் பைப் வசதி செய்யப்பட்டிருந்தும்கூட, வீடுகளுக்கு தண்ணீர் வருகின்றதே தவிர, அந்த தண்ணீர் ஏழை மக்களுக்கு கிடைக்கக்கூடிய விதத்தில் அமையவில்லை. எனவே, இந்த பைப் வசதியை தெருக்களிலும் குழாய்கள் மூலம் தண்ணீர் வசதி செய்து தந்து, அங்குள்ள ஏழை மக்களும் பயனடையக் கூடிய வகையில் பொது பைப் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை விவசாயிகளுக்கு முக்கியத்துவம் தந்து, அந்த வகையிலே இந்த ஆளுநர் அவர்கள் உரை அமைந்திருக்கிறது. எங்கள் பகுதியிலே பெரும் பகுதி மலைப் பகுதியாகும். ஒருபுறம் ஆந்திர மாநிலத்தின் எல்லைப்புறம்; அதேபோல் மற்றொரு புறம் கர்நாடக மாநிலத்தின் எல்லைப்புறம். இந்தச் சூழ்நிலையில் நீண்டகாலமாக அங்குள்ள ஏழை விவசாயிகள் பயிர்த் தொழில் செய்துகொண்டு வருகின்றார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகாலம், நூறு ஆண்டுகாலம் அங்குள்ள ஏழை விவசாயிகள் பயிர்த் தொழில் செய்து கொண்டு வந்தாலும், அவர்களைப்பற்றி இதுவரை முன்பிருந்த அரசாங்கம் ஒன்றும் கவனிக்கவில்லை. இதுவரை பட்டா வழங்கப்படவில்லை; எனவே, அவர்களுக்கு பட்டா வழங்கி உதவும்படி கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகளைக் கேட்டால், ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்தால், பட்டா கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலைமை இன்று இருப்பதால் ஏழை விவசாயிகளுக்கு உடனடியாக பட்டா செய்து கொடுக்கும்படி இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், காட்டிலாகாவை எடுத்துக் கொண்டால், இந்த இலாகாவிற்குத் தேவையற்ற நிலங்கள் நிறைய இருக்கின்றன. எனவே, அந்த இலாகாவிற்குத் தேவையான நிலங்களை வைத்துக்கொண்டு, மற்ற நிலங்களை எடுத்து விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுத்தால், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வதற்கு வழிவகை செய்வதாகும்.

இப்படி பல நல்ல திட்டங்கள் ஆளுநர் அவர்கள் உரையிலே மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சி நண்பர்களும், தலைவர்களும் வேண்டுமென்றே குறை கூற வேண்டுமென்பதற்காக இதுபோன்ற உரையை எதிர்த்துப் பேசுகின்றார்கள். எனவே, இந்த ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்று திரு. எல். ஆர். ரெங்நா அவர்கள் முன்மொழிந்ததை, நான் வழிமொழிந்து, இதிலே நல்ல பல திட்டங்கள், ஏழைகள் மேம்பாட்டிற்கான திட்டங்கள் உள்ளது என்றும், கிருஷ்ணகிரி தொகுதி மக்களின் சார்பாக இதை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7--7--1977 ஆம் தேதியன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், இந்த நாட்டின் நலனுக்கும், இந்த நாட்டு மக்களின் நலனுக்கும் உகந்த பல முக்கியமான கருத்துக்கள் கூறப்படவில்லை என்பதை எனக்கு முன்பு பேசிய பலர் எடுத்துக் காட்டினார்கள். அதை ஒட்டி, இங்கு நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அதற்கு முன்பாக, இன்று இங்கு இந்த நாட்டின், நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைக் குறிப்பிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த நாட்டின் விடுதலைக்காகவும், இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும் 9, 10 ஆண்டுகள் சிறையில் இருந்தும், அதேபோல் ஒன்பது ஆண்டு காலம் இந்த மாமன்றத்தில் முதல்வர் பதவியேற்றும், அவர் ஆட்சி செய்த காலத்தை தமிழ்நாட்டின் பொற்காலம் என்று இந்த நாட்டு மக்களால் போற்றப்பட்ட பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை நான் இந்த மன்றத்திற்கு புதியவன் என்கிற முறையில் வந்து பார்த்தபோது, இங்கு அவருடைய படம் இல்லாததைக் கண்டு மனம் கலங்கினேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியிலே முழுமையாகப் பங்கு கொண்டு, மக்கள் நலனே தன்னுடைய நலன் என்று பாடுபட்ட ஒருவருக்கு இந்த நிலையா என்று நான் வருந்தினேன். அந்தக் குறையைத் தீர்க்கின்ற வகையிலே நமது முதல்வர் அவர்களுடைய அறிவிப்பு இருந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எனக்கு மட்டுமல்ல; இந்தத் தமிழக மக்கள் அனைவரும் இதனை உணர்ந்திருப்பார்கள். ஏனென்றால், அவருடைய ஆட்சிக் காலத்திலே ஏழை எளிய மக்களுக்கு கல்வி வசதி செய்து கொடுத்தார். எல்லா இடங்களிலும் அணைகளைக் கட்டினார். ஏழைகள் குடியிருக்க வீட்டு வசதி செய்து கொடுத்தார். இதைப் போல் இன்னும் பலப்பல நல்ல காரியங்களையெல்லாம் அவர் செய்தார். இந்த நாட்டினுடைய தொழில் வளம் பெருகவும், விவசாயம் பெருகவும், எல்லாப் பகுதிகளுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்து, இந்த நாடு முன்னேறுவதற்குக் காரணமாக

இருந்த ஒருவருக்கு அவரது படத்தை இந்த மாமன்றத்தில் வைப்பது என முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்பை நான் மனதார வரவேற்று, அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன். மதுரை மாவட்டத்திலே வடக்குக் கடைசியிலே என்னுடைய தொகுதி உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்த அன்றைய கோயமுத்தூர் மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியாகவும், பஞ்சப் பிரதேசமாகவும், அதனுடைய தெற்குக் கடைசி எல்லையாகவும் என்னுடைய தொகுதி இருக்கிறது. இந்த நிலைமையிலே, சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக, எங்கள் பகுதியிலே மழையே இல்லை. ஒவ்வொரு வருஷமாக குறைந்து, சென்ற நான்கைந்து ஆண்டுகளாக அங்கே அறவே மழை பொய்த்து விட்டது. இந்த நிலைமையில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத வகையிலே, தங்கள் வாழ்க்கையையும் நடத்திக்கொள்ள முடியாத நிலைமையிலே அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். சமீப காலத்திலே, அந்தப் பகுதியை நிலத்தடி ஆய்வாளர்கள் ஆய்வு செய்ய வந்திருந்தார்கள். அவர்கள் இனி அந்தப் பகுதியிலே நிலத்தடி நீரும் எடுக்க முடியாது. அந்த அளவுக்கு வற்றிப் போய்விட்டது. இனி புதியதாகக் கிணறுகளும் வெட்டுவதில் பிரயோஜனம் இல்லை, ஏற்கெனவே உள்ள பழைய கிணறுகளையும் ஆழப்படுத்த முடியாது என்று அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

அதோடு மட்டுமல்ல. எங்களுடைய பகுதி எந்தவிதமான ஒரு நீர்த்தேக்கமோ, அல்லது நதியோ அல்லது குளத்துப் பாசனமோ வாய்க்கால் பாசனமோ, மற்றவிதப் பாசனமோ இல்லாத நிலையில் இருக்கும் ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற விவசாயிகளுக்கு வேறு எந்தவிதமான அடிப்படைத் தொழிலும் கிடையாது; மழையும் பொய்த்துவிட்டது. எனவே, அந்த இடத்தை விட்டு செழிப்பான இடத்திற்குப் போகலாம் என்று சொன்னால், தங்களுடைய உடைமைகளை எப்படி விட்டு விட்டுப் போவது என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

(பிற்பகல் 12-30)

திரிசங்கு சொர்க்கம்போல் எங்களுடைய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை.





ஜாதி அடிப்படையில் பிற்பட்ட வகுப்பு, மிகவும் பிற்பட்ட வகுப்பு, மிகமிகப் பிற்பட்ட வகுப்பு என்று மூன்று நான்கு விதமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அதேபோன்று பிற்பட்ட பகுதி என்று சொல்லும்போது கூட, பிற்பட்ட பகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி, மிக மிக பின்தங்கிய பகுதி என்று குறிப்பிட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது அந்தப் பகுதிகள் முன்னேறுவதற்கு உதவிகரமாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலைமையில் 1974, 1975, 1976-ம் ஆண்டுகளில் வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்ட சமயத்தில் விவசாயி குறுகிய காலக் கடன் ஆயிரம் ரூபாய் வாங்கியிருக்கிறான். அதையொட்டி மேலும் மத்தியகாலக் கடனாக்கி இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து, அவனை மூவாயிரம் ரூபாய் கடனாளி ஆக்கி, அடுத்த வருஷம் மீண்டும் ஆயிரம் ரூபாய் குறுகிய காலக் கடனாகக் கொடுத்து இப்படியே கடனாளியாகிக் கொண்டிருக்கிறான். இந்தக் கடனை எப்படித் திருப்பிச் செலுத்துவது என்று தெரியவில்லை. திருப்பிச் செலுத்த வேண்டாமென்ற எண்ணத்தில் எந்த விவசாயியும் இல்லை. எப்படியாவது தான் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற எண்ணம் படைத்தவன். ஆனால் அதற்குச் சாதகமான நிலைமை அவனுக்கு இல்லை. கிணற்றில் தண்ணீர் இல்லை; வாய்க்கால் இல்லை; மழையும் பெய்யவில்லை. நிலத்தடி நீர் அறவே இல்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

எங்களுடைய பகுதியில் மழை பெய்கிற காலங்களில் மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்க சிறு சிறு குட்டைகளை அமைத்திட வேண்டும். அதனால் அதைச் சுற்றியுள்ள ஒருசில கிணறுகளுக்காவது உபயோகமாக இருக்கும். அதனால் வருஷத்தில் ஒரு முறையாவது விவசாயம் செய்ய சாதகமாக இருக்கும்.

இப்போது பல திட்டங்களை, கட்டுப்படியாகாத திட்டங்கள் என்று சொல்லி குளம் குட்டைகளைப் புதிதாக அமைப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடங்கள் எல்லாம் மிக முக்கியமான இடங்கள். அப்படிப்பட்ட பகுதிகளில் இப்படி தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலம் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளுக்கு ஊற்று வசதி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

இதுபோன்ற காரியங்களைச் செய்யும்போது சிலர் அரசியலைப் பயன்படுத்தி தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற கண்ணோட்டத்துடன் மேல்மட்டத்தில் சொல்லி கட்டுபடியாகாத திட்டம் என்று சொல்லி தள்ளிவிடச் செய்கிறார்கள். அப்படிப் பட்ட நிலைமை ஏற்படாத வண்ணம், மிக முக்கியமாக எங்கள் பகுதி போன்ற இடங்களுக்கு கட்டுபடியாகும் திட்டம், கட்டுபடி யாகாத திட்டம் என்ற கணக்கை எடுத்துக் கொள்ளாமல் எப்படி யாவது நீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத் தோடு இந்த மாதிரிக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர்ப் பிரச்சினை. எங்கள் பகுதியில் நிலத் தடி நீர் இல்லை. எந்தவிதமாகவும் தண்ணீர் கொடுக்க வாய்ப்பே இடையாது. சண்முகா நதி என்ற ஒரே ஒரு ஆறு பழனி பகுதியில் போகிறது. அந்த ஆற்றிலே கிணறுகள் போட்டு ஒருங்கிணைந்த குடி தண்ணீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர்ப் பிரச் சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியையொட்டி ஆயிரம், இரண் டாயிரம் வீடுகள் உள்ள கிராமங்கள், ஊர்கள் இருக்கின்றன. அவர் களும் பல மகஜர்கள் மூலம் தங்களுக்குக் குடிதண்ணீர் வசதியை அந்த ஆற்றிலிருந்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். அந்த மகஜர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தப் பகுதியிலுள்ளவர்கள் ஒரு மைல், இரண்டு மைல் தூரம் சென்று வண்டி வைத்துக்கொண்டு தண்ணீர் கொண்டு வருகிறார்கள். வசதியுள்ளவர்கள் வண்டி வைத்து தண்ணீர் கொண்டு வர முடியும். வசதியற்றவர்கள் என்ன செய்ய முடியும்? ஆகவே, அந்தத் திட்டத்தை என் பகுதியில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி நிலத்தடி நீரை உபயோகப்படுத்தி விவசாயம் செய்யக்கூடிய பகுதி. இதிலே மின்சாரம் மிக மிகத் தேவை யானது. அந்த மின்சாரக் கட்டணம் இன்று இருக்கக்கூடிய நிலைமையில் ஒரு விவசாயி தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போவது மிகக் கஷ்டமானது. மின்சாரக் கட்டண உயர்வின் காரணமாக மாதந்தோறும் அவன் படுகிற சிரமம் கொஞ்சநஞ்சமல்ல. இன்றைக்கு 15 நிமிஷம் அல்லது 20 நிமிஷம் மோட்டார் ஓடுகிற அளவுக்குத்தான் கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது. மாடு கன்றுகளுக்குத் தண்ணீர் வைக்க மோட்டாரை





இயக்கினால்கூட நாள் ஒன்றுக்கு இரண்டு யூனிட் மின்சாரம் செலவாகிறது. மாதத்திற்கு 60 யூனிட் மின்சாரம் செலவாகிறது. ஐம்பது யூனிட்டுக்கு மேலே போனால் 10 ரூபாய் சர்சார்ஜ். மீட்டர் வாடகை 5 ரூபாய். அதற்குமேல் எப்போதும் இல்லாத ஒரு புதுமையான சார்ஜ் விதிக்கிறார்கள். லைட் வாடகை என்று ஐந்து ரூபாய் வாங்குகிறார்கள்.

இந்த வகையில் அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த ரெவின்யூ அதிகாரி என்ன நினைக்கிறாரோ அதை விதிக்கிறார். சில சமயங் களில் 10 ரூபாய் போடுகிறார்; 15 ரூபாய் போடுகிறார். ஆக, 30 நாளைக்கு 60 யூனிட் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 16 பைசா விதம் 9 ரூபாய் 60 காசு ஆகிறது. ஒரு விவசாயி 30 நாட்களுக்கு மாடு கன்றுகளுக்கு தண்ணீர் ஓட்டிய காரணத்திற்காக ஒன்பது ரூபாய்க்குப் பதிலாக கிட்டத்தட்ட 30 ரூபாய், 35 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளைப் பற்றி யெல்லாம் அரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக் கிறார்கள். பெரிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை காட்டி, விவசாயிகளுக்குக் கூட்டி இருப்பதை மாற்றி, பெரிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி, விவசாயி களுக்கும் வீட்டு உபயோகத்திற்கும் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம் என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால் ஆளுநர் உரையிலே மின்சார அபிவிருத்தி என்ற குறிப்பு இருக்கிறதே தவிர, கட்டணத்தைக் குறைப்போம் என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இன்று விவசாயி சர்சார்ஜ், லைட் சார்ஜ், மீட்டர் வாடகை என்று மாதம் 50 ரூபாய் விதம் வருஷத்திற்கு 600 ரூபாய் கட்ட வேண்டிய நிலையை மாற்ற வேண்டும். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை எல்லாக் கட்சியினரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்த விவசாயிகளின் முதுகெலும்பு முறிந்துவிடாத அளவுக்கு, நிமிர்ந்து அவன் தொழில் செய்ய ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் ரோடு வசதி ரொம்ப மோசமாக இருக்கிறது. பழனியிலிருந்து மூலனூர் வரை பஸ் ஓடுகிறது. அந்த பஸ் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும்போது குடை சாய்ந்து விடுமோ என்ற அளவுக்கு அச்சமாக இருக்கிறது. ஹைவேஸ்

பொறுப்பில் அந்த ரோடு இருக்கிறது. ஹைவேஸ் டிப்பார்ட்மென்டுக்கு அறிவுரை கூறி உடனடியாக இந்த நிலைமைகளை மாற்றியமைக்கும் காரியங்களைச் செய்யவேண்டும். இந்த அரசு பாரபட்சமற்ற முறையில் செயல்படும். தன் கட்சிக்காரர்கள், பிற கட்சிக்காரர்கள் என்ற முறையிலே வேறுபாட்டுடன் செயல்படாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே நானும் நம்பிக்கை கொள்கிறேன். இந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்க இந்த அரசு நல்ல முறையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12.40.)

* திரு. என். பழனிவேல்: பெரு மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிற நேரத்திலே ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே 'வறுமையை ஒழிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது இவையே இந்த அரசாங்கத்தின் தலையாய குறிக்கோள்களாக இருக்கும். இவை இன்று தேசியக் குறிக்கோள்களாகவும் விளங்குகின்றன. நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு திட்டமும், வறுமையைக் குறைக்குமா, வேலை வாய்ப்பைப் பெருக்குமா என்ற அடிப்படையில் பரிசிலனைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்' என்று மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை மனமார ஏற்றுக் கொண்டு பார்க்கவேண்டும்.

நம்முடைய நாட்டிலே இன்றைக்கு உள்ள நிலை என்னவென்றால் வீடு இல்லாமல் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் அங்கேயே குடியமர்த்தவேண்டும், அவர்கள் இப்போது தனியார்களுடைய இடங்களிலும், புறம்போக்கு இடங்களிலும் குடிசைகளைப் போட்டுக்கொண்டு, ஆடு மாடுகள்கூட வசிக்கமுடியாத இடங்களிலே மனிதர்கள் தங்கி வசிக்கக்கூடிய நிலைமை, அதுவும் அரிசன மக்கள் வாழக் கூடிய நிலைமை இருக்கிறது, எனவே உடனடியாக அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டுமனை பட்டா பெற்றவர்கள் வீடு கட்டிக்கொள்ள வசதியில்லாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்



விவசாயக் கூலிகளுக்கு வருடத்திற்கு 3 மாதம் வேலை கிடைப்பதே சிரமமாக இருக்கிறது. அதிலும் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி தரப்படுவது கிடையாது. உரிய கூலி கிடைக்கச் செய்யவேண்டுமென்று அதிகாரிகள் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதில்லை. காரணம் சிக்கல் இருக்கிறது என்று ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும் சொல்கிறார்கள். ஆகவே அந்தச் சிக்கல்களையெல்லாம் போக்கி அவர்களுக்கு கூலி நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசுக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அது பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட தொகை, அதற்குப் பிறகு இன்றைய தினம் விலைவாசி பலமடங்கு ஏறியிருக்கிறது. வாங்குகிற பொருட்களின் விலையெல்லாம் பல மடங்கு உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில் அந்த உதவித் தொகையை வைத்துக்கொண்டு மாணவர்களால் சமாளிக்க முடியவில்லை. எனவே அந்தத் தொகையை இரட்டிப்பாக அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது தவிர மாணவர்கள் தேர்வில் பெயில் ஆகிவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை நிறுத்தப்படுகிறது. அதனால் அவர்கள் தொடர்ந்து தேர்வு எழுதமுடியாமல் போய் விடுகிறது. எனவே பெயில் ஆனாலும்கூட அவர்களுக்கு உதவித் தொகை தொடர்ந்து கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அரிசன மாணவர்களின் விடுதிகளைப் பார்த்தால், அங்கே கொடுக்கப்படுகிற உணவுப் பொருட்களைப் பார்த்தால், ஏதோ சிறைச்சாலையிலே கைதிகளுக்குக் கொடுக்கக் கூடிய உணவைப் போல் மோசமாக இருக்கிறது. இதை நானே நேரில் பார்த்தேன். மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள்கூட சில நாட்களுக்கு முன்னால் விடுதிகளுக்குச் சென்று நேரில் பார்த்ததாக பத்திரிகையில் செய்தி பார்த்தேன். மகிழ்ச்சி அடைந்தேன். இப்படிப்பட்ட நிலைமைதான் எல்லா விடுதிகளிலும் இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து, ஹைஸ்கூல் மாணவர்கள் விடுதிகளைப் பொறுத்த வரையில், ஏதோ மிருகங்களை அடைக்கக்கூடிய இடத்தைப் போல் இருக்கின்றன. அங்கே தங்குவதற்கு எந்த வசதியும் கிடையாது,

படுப்பதற்குப் பாய் கிடையாது, தலையணை கிடையாது, கக்கூஸ் வசதி கிடையாது. ஃப்ளஷ் அவுட் கக்கூஸ் கிடையாது, இப்படி அநாகரிகமான முறையிலே இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இந்த நாட்டிலே சரி பாதிப் பேர்கள் பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய கல்லூரிகள் மிகமிகக் குறைவு. அவர்கள் கல்லூரியில் படிக்கவேண்டுமென்றால் இடம் இல்லை என்று சொல்கிறார்கள். சமபாதி உள்ள பெண்களுக்கு நாம் சமத்துவம் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யோசனை செய்து, தமிழகத்திலே பெண்கள் படிப்பதற்கு கல்லூரி வசதிகள் செய்து, மனு செய்பவர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் பழனி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினரும் அதே தொகுதியில் உள்ள ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். அங்கே, கனம் நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தப் பகுதி மிகவும் வறட்சியான பகுதி, அந்தப் பகுதிக்கு வேண்டியதைச் செய்வேன் என்று அவர்கள் அங்கே உறுதிகொடுத்ததன் காரணமாக அவர்கள் அங்கே வெற்றி பெற்றார்கள். கடந்த பத்து ஆண்டுகளாக அங்கே போதிய மழையில்லாத காரணத்தினாலே வறட்சி இருக்கிறது, அங்கே குடிதண்ணீர் கிடையாது. மக்கள் 1, 2, 3 மைல் தூரம் கால்நடையாக நடந்து சென்று தாய்மார்கள் தண்ணீர் எடுக்கிறார்கள். பக்கத்தில் தண்ணீர் கிடையாது. அந்தக் காரணத்தினால் அங்கே உள்ள தாய்மார்கள் எல்லாம் குழந்தை குட்டிகளோடு தண்ணீர் இருக்கக்கூடிய ஊர்களுக்குச் சென்றுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது.

அங்கே பாப்பம்பட்டி, வேலாயுதம்பாளையம்புதூர் ஆகிய பகுதிகள் மிகவும் வறட்சியான பகுதிகள். அங்கே பச்சையாறு, குதிரையாறு அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறது. அதற்கான ஆய்வு வேலைகள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டன. ஆகவே அதை



நிறைவேற்றுகிற வேலையை வருகிற பட்ஜெட்டிலேயாவது கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அணைகளைக் கட்டி முடித்தால் உடுமலைப்பேட்டையிலே உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களும், பழனித் தொகுதியிலே உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்தப் பகுதிகளில் உள்ள மக்களும் குடிநீர் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே இதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றவேண்டும்.

அந்தப் பகுதியிலே மக்களிடம் வோட்டுக் கேட்ட நேரத்திலே அந்த மக்கள் எல்லாம் இப்போது ஓட்டுக் கேட்கத்தான் வருகிறீர்கள், ஓட்டுப் போட்டுவிட்டால், 5 ஆண்டுகளுக்கு வர மாட்டீர்கள் என்று மிகவும் கேவலமாகப் பேசினார்கள். ஆனால் நாங்கள் சொன்னோம், நீங்கள் ஓட்டுப் போடுவீர்களானால் இந்த முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் அமைச்சரவை பதவியேற்கும், உங்களுக்கு எல்லாம் நிச்சயம் குடிநீர் கிடைக்கும் என்று உறுதியளித்தோம். அந்த உறுதியைக் காப்பாற்றக்கூடிய முறையிலே அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவிலின் பெயரில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அவற்றைச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு அந்த நிலங்களைப் பட்டாப் போட்டுக் கொடுக்க வேண்டும். அதற்காக அவர்களிடமிருந்து ஒரு சிறிய தொகையைப் பெற்றுக்கொண்டு அதிலே அவர்களுக்கு கோவில் நிர்வாகத்துக்கு ஏற்படுகின்ற செலவுகளை அரசாங்கம் கொடுத்துவிட்டு அந்த நிலங்களையெல்லாம் அந்த அந்த குத்தகைதாரர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரோடு வசதிகளை எடுத்துக் கொண்டால் ரோடுகள் எங்கள் தொகுதியில் மிக மிக மோசமான நிலையில் உள்ளன. பழனியிலிருந்து 8, 10 மைல்கள் வரை டவுன் பஸ் செல்கின்றது. அந்தத் தாலுகாவிலுள்ள கிராமங்களுக்கு 16 மைல், 20 மைல் தொலைவிலுள்ள கிராமங்களுக்குப் போகவேண்டியிருக்கிறது. அப்படியானால் 6, 7 மைல் கால்நடையாக நடந்து சென்று டவுன் பஸ் பிடிக்கவேண்டியிருக்கிறது. அதுவும் கோம்புபட்டி. அத்திவலை, வேப்பன் வலசு போன்ற கிராமங்களுக்கு ரோடுகள் சரியாக

இல்லாத நிலை உள்ளது. என்னுடைய தொகுதியில் உள்ள ஆண்டிப்பட்டி என்ற ஒரு கிராமத்திற்குப் போகவேண்டுமென்றால் உடையார்பேட்டைத் தொகுதிக்குள் நுழைந்து அதற்கு அப்பால்—ஆறு மைல்—அங்கே ஒரே ஒரு பஸ்தான் செல்கிறது—ஆறு மைல் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரே ஒரு பஸ்தான் செல்வதால் ஒரு நாள் ஒரு ஊருக்குப் புறப்பட்டால் மறுநாள் தான் திரும்பவேண்டும். இடையிலே உள்ள கொளுவம் என்ற ஊரில்—மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களுடைய ஊர் அது—தங்கவேண்டும். இந்த நிலையில் உள்ள அந்தப் பகுதி மக்களிடம் நாங்கள் எங்களுக்கு வாக்களித்தால் நாங்கள் அதிகமாக பஸ் வசதியும் ரோடு வசதியும் செய்ய ஏற்பாடு செய்வோம் என்று சொன்னோம். அங்கே ஏற்கனவே தார் ரோடு இருக்கிறது, ஆனால் அது குழியும் குண்டுமாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு நாளைக்கு 10 தடவையாவது, ஒரு மணிக்கு ஒரு தடவையாவது பஸ் போக்குவரத்து இருக்கக்கூடிய முறையில் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கனம் உணவு அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னால் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது ஜனதா கடைகள் 2,000 பேர்களுக்கு ஒரு கடை விதம் திறக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள் என்று அறிந்தேன். அதுபற்றி மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அம்மாதிரி ஜனதா கடைகள் திறந்து, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக மக்கள் படும் துன்பங்களைப் போக்க, உடனடியாகத் திறப்பதிலே அரசு மிக முனைப்பாக இருந்து நிறைவேற்றிக் கொடுக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு வணக்கத்தைக் கூறுவதோடு ஒரேயொரு விஷயத்தைக் கூறி முடித்து விடுகிறேன்.

(பிற்பகல் 12-50.)

அரிசனங்களுக்கு சுடுகாடு என்பது மிகவும் பயங்கரமான பிரச்சினையாக இருக்கிறது. அவர்களுக்கு எந்த ஊரிலும் சுடுகாடு கிடையாது. ஒவ்வொரு மதத்திற்கும் சுடுகாடு இருக்கிறது. ஆனால் அரிசனங்களுக்கு என்று தனியாகச் சுடுகாடு கிடையாது. அவர்கள் போவதற்கான பாதையும் கிடையாது. அவர்களிடம் போனால் இதைத்தான் சொல்கிறார்கள். நான்கூடச் சங்கடப் பட்டேன், நாட்டிலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன,



நீங்கள் தினமும் செத்தா போகிறீர்கள், சுடுகாட்டுப் பிரச்சினை சுடுகாட்டுப் பிரச்சினை என்று சொல்கிறீர்களே என்று தமாஷாகக் கூறினேன். ஆனால் உண்மையில் அவர்கள் அங்குள்ள பெரிய தனக்காரர்களின் காட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. அந்தப் பெரியதனக்காரர்களுக்குச் சமுதாயத்தில் என்ன சக்தியிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்களை இங்கே விமர்சனைப் படுத்தக்கூடிய நிலையில் நாம் இல்லை. அவர்களுக்கு, சுடுகாட்டுக்குப் போவதற்கான பாதைகளை உடனடியாக அமைக்க வேண்டும்.

அம்மாதிரியே, இன்றைக்கிருக்கின்ற அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்கள் பெரிய பெருச்சாளிகள், எதையும் நியாய மாகச் செய்யக்கூடிய சூழ்நிலைகளில் இல்லை, எதையாகிலும் எதிர் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். ஆகவே, இந்த நிலையைப் போக்க இங்கேயுள்ள அமைச்சர்கள் அவரவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பொறுப்புகளில் திடீர் திடீர் என்று சோதனை செய்வதன் மூலம் எதை அமல் நடத்த வேண்டுமென்று இருக்கிறதோ அதை நிறைவேற்றிக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. தாழை மு. கருணாநிதி: மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மேல் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

குறிப்பாக, இங்கே பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஏதோ இது புரட்சிகரமான உரை, புரட்சிகரமான உரை என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நிச்சயமாக இந்த உரையினைப் பார்க்கின்றபொழுது அதிலே புரட்சி இல்லை, வறட்சி தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் தஞ்சை மாவட்டம் தமிழகத்தினுடைய நஞ்சை கொழிக்கும் மாவட்டமாக இருக்கிறது, உணவுக் களஞ்சியமாக இருக்கிறது. அந்த உணவுக் களஞ்சியத்தைப் பாதுகாக்கின்ற திட்டம் இந்த உரையில் இருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஏதோ தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக

மைசூர் சென்று முதலமைச்சரைச் சந்தித்து தண்ணீர் பெற்று வந்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். குறிப்பாக நான் கேட்பதெல்லாம், தமிழகத்திற்கு என்று ஒரு உரிமை இருக்கிறது. 1924 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சட்டத்தின்படி உரிமை நமக்கிருக்கிறது. அந்த உரிமைகளைப் பெறுவதற்கான சூழ்நிலையைத்தான் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் ஏற்க வேண்டுமே தவிர, நான் புளியைக் கொடுக்கிறேன், நீங்கள் மிளகாயைக் கொடுங்கள் என்று, பண்டமாற்று முறை என்று அந்தக் காலத்திலேயே இருந்ததாகச் சொல்வார்கள், அப்படிப் பட்ட முறையில் நம்முடைய உரிமையை விட்டுக் கொடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகள் இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டு விடும் என்று சொன்னால் நிச்சயமாகத் தஞ்சை மாவட்டத்து மக்கள் பஞ்சத்தாலும், பசியாலும் வாடுகின்ற கொடுமையான சூழ்நிலை ஏற்பட்டு விடும். விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம், விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்களெல்லாம் நிச்சயமாக மிகமிகக் கேவலமான நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டு விடுவார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையினால் நான் நம்முடைய தலைவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில் திட்டவட்டமாகக் காவிரிப் பிரச்னையில் ஆக்கித் தாருங்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, இங்கே பேசியவர்கள் ஏதோ இதிலே புரட்சி இருக்கிறது, எதிர்க்கட்சிக்காரர்கள் அதை நம்ப மறுக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் பார்க்கிற புரட்சி ஏதோ சினிமாவிலே காண்கிறோமே, பெரிய முதலாளி இருப்பார், அந்த முதலாளி ஏழை எளியவர்களைக் கொடுமைப்படுத்துவார், அப்படிக் கொடுமைப்படுத்தும் காட்சியைப் பார்த்து கதாநாயகன் குதிரையிலே வந்து முதலாளியை அடித்துவிட்டு அங்கே இருக்கின்ற பண்டங்களையெல்லாம் வறுமையிலே வாடும் மக்களுக்கு அள்ளிக்கொடுக்கும் புரட்சியை நாங்கள் எதிர் பார்க்கவில்லை. அதைப்பற்றி இந்த உரையிலே எதிர்பார்க்க





வில்லை. ஆனால் இதற்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் செய்த நன்மைகளையாவது இந்த ஆட்சி நடைமுறைப்படுத்துமா என்பதைத்தான் கேட்கிறோமே தவிர வேறல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காகத் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அரும்பாடுபட்டு வாங்கித் தந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தினுடைய அடிப்படையில் நலிந்த மக்களுக்கு வாழ வசதி ஏற்படுத்தித் தந்தார்களே அந்தக் கொள்கையை இங்கே நடைமுறைப் படுத்தப் போகிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

குறிப்பாக, டாக்டர் கலைஞரவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவிகிதமாக வேலைவாய்ப்புகளும், கல்விச் சலுகைகளும் இருந்தன, கலைஞர் ஆட்சியில் அந்த 16 சதவிகிதத்தை 18 சதவிகிதமாக ஆக்கி தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகத் திட்டங்களைத் தீட்டினார்கள். அதேபோன்று 25 சதவிகிதமாக இருந்த பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வகுப்புவாரி பிரதிநிதித்துவமாக இருந்த முறையை, சட்டம் இடம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால், 49 சதவிகிதத்திற்கு மேல் செல்லக்கூடாது என்று சட்ட வரம்பு இருபபதால், 31 சதவிகிதமாக ஆக்கி பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் இன்றையதினம் இங்கு புதிதாக வந்திருக்கின்ற, அண்ணாவின் வழியிலே வந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த ஆட்சியாளர்கள் தகுதியினுடைய அடிப்படையில் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்பொழுது தாழ்த்தப் பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அடைந்திருக்கின்ற முன்னேற்றங்கள் எல்லாம் இவர்கள் ஆட்சியில் தடைப்படுத்தப் பட்டு விடுமோ, முடக்கி வைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகம் பொதுமக்களிடையே ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. தாழை மு. கருணாநிதி] [1977 ஜூலை 12

அது மட்டுமல்ல, முந்தைய ஆட்சியில் குறைந்தபட்சம் கூலி நிர்ணயச் சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காக சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவும் தங்களுடைய அறிக்கையைக் கொடுத்தது. அது இந்த அவசர காலச் சட்ட நேரத்தில் அமல் படுத்தப்பட்டது. ஆனால் தமிழகம் பூராவும் இந்தக் குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா, தமிழ்நாட்டிலே உள்ள எல்லா தொழிலாள மக்களுக்கும் வருகின்ற முறையிலே உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக அப்படி இல்லை. ஆகையால், இனிமேலாவது இந்த விவசாயத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வில் இந்தக் குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தை எல்லாப் பகுதிகளுக்கும் விரிவாக்கும் முறையில் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, குடியிருப்பு மனையைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மிகவும் அரும்பாடு பட்டு முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வருகின்றபொழுது நில முதலைகளும், பணக்காரர்களும் எப்படிப்பட்ட இன்னல்களையும், இடையூறுகளையும் கொடுத்தார்கள் என்பதைத் தெளிவாக அறிவோம். அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும், எலிகளுக்குக்கூட தங்குவதற்கு இடமிருக்கிறது, குருவிகளுக்குக் கூட கூடு இருக்கிறது, ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்க இடமில்லை, உழைக்கின்ற மக்களுக்கு இருக்க இடமில்லை என்ற காரணத்தினால் அந்தக் குடியிருப்பு மனைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த ஆட்சி சென்றதற்குப் பிறகு அவசரக் காலச் சட்டத்தின் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு அவர்களை வெளி யேற்றும் கொடுமையான நிலைமைகளைப் பார்த்தோம்.



1977 ஜூலை 12] [திரு. தாழை மு. கருணாநிதி]

அதுமட்டுமல்ல, அவர்கள் வசித்து வந்த இடத்தில் அவர்களால் வளர்க்கப்பட்ட தென்னை மரங்கள், மற்ற மரங்கள் இருக்கின்ற பொழுது அந்த மரங்களும் அவர்களுக்குச் சொந்தமில்லை என்று அவர்களை அப்புறப்படுத்தும் கொடுமையான நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் பார்த்து புரட்சி செய்ய வேண்டும், புரட்சி செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் உண்மையான புரட்சியைச் செய்திருக்கிற, முந்தைய ஆட்சி செய்திருக்கிற அந்தச் சட்டங்களின் மூலமாக அந்த மக்களின் நலனில் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏறத்தாழ 4,000 ரூபாய்க்கு அதிக அளவிலே நல்ல வீடுகளை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் கட்டிக் கொடுத்தது. ஆனால் இடையிலே ஏற்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக அந்த வீடு களைக் கட்டிக் கொடுக்கின்ற அந்த நிலைமைகளெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக அந்தத் திட்டம் நிறை வேறத் தக்க அளவிற்கு, மேலும் மேலும் வளர்ச்சி பெறத் தக்க அளவிற்கு அந்த வீடுகளைக் கட்டுகின்ற பணி துரிதப்படுத் தப்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அடுத்து, இங்கே இதை முன்மொழிந்து பேசிய குடந்தை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மாநிலங்களோடு நெருங்கிய உறவுகள் ஏற்பட வேண்டும், அண்டை மாநிலங்களோடு தொடர்பு இருக்க வேண்டும், அப்படி தொடர்பிருக்கவேண்டுமென்று கவர்னர் உரையிலே இருக்கிறது, அந்தக் காரணத்தால் காவிரி நீர் வந்துவிடும் என்றெல்லாம் சொன்னார்கள். அது எவ்வளவு பெரிய தவறான வாதம் என்பதை நாம் இங்கே நிச்சயமாகப் புரிந்து கொள்ளவேண்டும். அண்டை மாநிலங்களோடு உறவு மட்டும் வைத்துக்கொள்வதால் மற்றமற்ற காரியங்களைச் செய்வோ மென்றால் நிச்சயமாக முடியாது. அதற்கு ஒரு உதாரணம்

சொல்ல வேண்டுமென்றால், இன்றையதினம் கேரள அரசாங்கத்தோடும் அல்லது கேரள மக்களோடும் நாம் எவ்வளவு நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறோம் என்பதெல்லாம் தமிழகத்து மக்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட நெருங்கிய உறவு வைத்திருக்கிற நம்மைத்தான் நம்முடைய தொழிலாளி மக்கள் எல்லையிலே வேலை செய்யச் செல்கின்ற பொழுது, அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள், துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள், அங்கே இருந்து துரத்தப்பட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய கொடுமையான நிகழ்ச்சி என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மைவிட கேரள மக்களுக்கு மதிப்பு கொடுப்பவர்கள், நம்மைவிட கேரள மக்களோடு தொடர்பு கொண்டிருப்பவர்கள், நம்மைவிட மற்ற மாநில மக்களோடு சுமுகமான சூழ்நிலை கொண்டுள்ளவர்கள் நிச்சயமாக யாரும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமையிருந்தும்கூட இன்றைய தினம் தமிழகத்து மக்கள், தமிழ்ப் பெருங்குடிமக்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: நாம் கேரள மாநிலத்தோடும், மைசூர் மாநிலத்தோடும் சுமுகமான உறவு இருக்க வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், கனம் உறுப்பினர் அவர்கள் கேரள மாநிலத்து சர்க்கார் அங்குள்ள தமிழர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறது, சிரமம் கொடுத்து வருகிறது என்ற கருத்து படும்படியாகப் பேசுகிறார் என்று நான் கருதுகிறேன். இது முறைதானா என்று கேட்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இங்கே குறிப்பிட்டுப் பேசியது கேரளத்து அரசாங்கத்தைப் பற்றியல்ல. கேரளப் பகுதியில் தமிழக எல்லை ஓரத்தில், அங்கே இருக்கிற



தொழிலாளிகள் தொல்லைக்குள்ளானார்கள் என்ற செய்தியைத்தான் சொன்னாரே தவிர, கேரளத்து அரசாங்கம் அதைச் செய்தது என்று தாழை மு. கருணாநிதி அவர்கள் இங்கே பேசவில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: கனம் உறுப்பினர் தாழை மு. கருணாநிதி, தஞ்சை மாவட்டத்தில் அரிசன மக்கள் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படுவதாகத் தகவல் சொன்னார்கள். எனக்கு தஞ்சையிலிருந்து தகவல் வந்துள்ளது. அது எப்படியென்றால், ஏற்கனவே இருந்த அரசு மூன்று சென்ட்க்குத்தான் குடியிருப்பு என்று சட்டம் போட்டதனாலே, குடியிருப்பு நிலத்தில் 10 சென்ட் அளவில் வைத்திருந்தவர்களும் அந்தச் சட்டத்தின் காரணமாக வெளியேற்றப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது. அவர் தவறான தகவல் கொடுக்கிறார். அது சரியா என்று நான் தங்களைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. தாழை மு. கருணாநிதி: இப்பொழுது பேசிய உறுப்பினர்தான் தவறான தகவலை இந்த மன்றத்திற்குக் கொடுத்தாரே தவிர, நான் கொடுக்கவில்லையென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டபொழுது குறைந்தபட்சம் மூன்று சென்ட்டிற்கு குறைவாக இருக்கக் கூடாது என்று தான் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எந்த அளவு நிலத்தில் குடியிருக்கிறார்களோ, அந்த அளவை நிச்சயமாகப் பட்டா செய்து கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் எந்த அளவிற்கு அல்லல் படுகிறார்கள் என்பதை நாம் நிச்சயமாகப் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழகத்திற்கே உணவு அளிக்கின்ற அந்தப் பெருந்தகையாளர்கள் தங்களுடைய தொழிலின் காரணமாகப் படுகின்ற தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஏனென்றால்,

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர் காவிரியிலே தண்ணீர் இல்லையென்பதால், தாளடிப் பயிரை நடக் கூடாது என்ற ஒரு கோரிக்கையை விட்டிருக்கிறார். அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு விவசாயப் பெருங்குடிமக்கள் தாளடிப் பயிரை நடவில்லை. ஆனால், இன்றையதினம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடம் ஆகியிருக்கிறது. நாளை உங்கள் கட்சிக்குக் கொடுத்திருக்கிற நேரத்தில் கழித்துக் கொள்ளலாம் என்றால் பேசலாம். இல்லையென்றால் நிறுத்திக் கொள்ளுங்கள்.

**திரு. தாழை மு. கருணாநிதி:** இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். தாளடிப் பயிரை நடாத அந்த விவசாயப் பெருங்குடி மக்கள்கூட இன்றையதினம் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்ற மிக மோசமான நிலைமையிலே நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக, அனாவாரி சான்றிதழ் கொடுத்து விடுபவருக்கு அந்தக் கடன் வசூல் ஒத்திவைக்கப்படுகிறது. ஆனால், பக்கத்திலேயிருக்கிற மற்ற வட்டங்களில் அனாவாரி சான்றிதழைக் கர்ணம் கொடுக்கவில்லையென்றாலோ, கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது என்றாலோ கூட அவர்கள் கடனை வசூலிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் அதை நிச்சயமாக நன்கு கவனித்து எல்லா நியாயமான விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கடன் வசூலை ஒத்திவைத்துச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான திருவாரூரிலும் பூம்புகாரிலும் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க வேண்டுமென்று முந்தைய அரசாங்கம் ஆக்கபூர்வமான காரியங்களை எல்லாம் செய்தது. ஏன் என்றால் தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிக மிகப் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்திலே தொழிற்சாலைகள் உருவாகவேண்டுமென்பதற்காக முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை



உருவாக்கித் தந்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்தத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசாங்கம் பரிசீலித்து திருவாரூரிலும் பூம்புகாரிலும் தொழிற்பேட்டை அமைப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன், நன்றி, வணக்கம்.

* **திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் ஏழை எளியவர் மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் எந்தவிதமான உறுதியும் அளிக்கப்படவில்லை. லஞ்சத்தை ஒழிப்போம் என்று கூறியது மிகவும் வரவேற்கத் தக்கது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரிகள் மற்றும் அரசியலில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும், முழுமையான ஒத்துழைப்புக் கொடுத்தால் லஞ்சத்தை ஒழிக்க இயலும். காந்திய வழியிலும் அண்ணா வழியிலும் ஆட்சி புரிவோம் என்று கூறியதை வரவேற்கிறேன்.

அண்ணா அவர்கள் ஏழை எளிய பாமர மக்களுக்காக படியரிசித் திட்டத்தை அமல் படுத்தவேண்டுமென்று கூறி அமல் படுத்தினார்கள். அப்போது பட்டணத்தில் படியரிசி போட்டுவிட்டு கிராமத்தில் படியரிசி போடவில்லை. ஆகவே இப்போதாவது படியரிசித் திட்டத்தை கிராமங்களில் அமல் படுத்தவேண்டுமென்று விழைகிறேன்.

என்னுடைய ஆத்தூர் தொகுதியைப் பொறுத்தவரையிலும் கடந்த 5 ஆண்டுகாலமாக மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டு விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் கூட மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மழையின்மையால் பயிர் செய்யமுடியவில்லை. கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பு. கிராம மக்களின் ஏழ்மையையும், வறுமையையும் சொல்லித் தீரமுடியாது. கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட அப்பகுதி நிலங்கள் தரிசாக உள்ளன. பிழைப்பதற்காக அங்குள்ள ஏழை எளிய மக்கள் சென்னை, பம்பாய் போன்ற நகரங்களுக்குச் சென்றுள்ளார்கள். கிராமங்

களில் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுடைய வேலையில்லா நிலையைப் போக்க எந்தவிதமான திட்டமும் இல்லை. கிராமங்களில் வேலை கிடைக்கவில்லை. கூலி விவசாயிகளுக்கு என்று எந்தவித நன்மையும் செய்யப்படவில்லை. விவசாயிகளிடம் ஒற்றுமையில்லாத காரணத்தால் விவசாயிகளின் பிரச்சினை தீரவில்லை. கெட்டும் பட்டணம் போ என்று கிராமப் புறத்திலே பழமொழி கூறுவது போல் எங்கள் தொகுதியிலே இருக்கிற மக்களில் 25 சதவிகிதம் சென்னைக்கு பிழைக்க வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த நிலை மாற குடிநீர் பிரச்சினையையும் மற்றும் வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும்.

கடந்த காலத்தில், 5—7—1972-ல் விவசாயிகளுடைய துன்பத்தையும், கஷ்டத்தையும் போக்க தமிழகம் முழுவதும் ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது பெத்து நாய்க்கன்பாளையம் என்ற கிராமத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெற்று 8 பேர் இறந்தார்கள். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்றும், விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வேண்டுமென்றும் அப்போது போராட்டம் நடத்தினோம். அப்போதிருந்த அரசு விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்காமல் ஒன்பது பேர்களைக் கொன்றார்கள். ஆகவே, ஏழை விவசாயிகள்பால் தனிக்கவனம் செலுத்தவேண்டும். மின்சாரக் கட்டணம் 10 பைசாவாக இருந்ததை 9 பைசாவாகக் குறைக்க அன்று வாதாடினோம். ஆகவே, இந்த அரசு ஏழை, எளிய விவசாயிகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும், கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்றும் கூறிக் கொள்கிறேன். ஆனால், இப்போதும் 16 பைசாவாக உள்ளது. எச்.பி. பவருக்கு 1¼ ரூபாயும், மின்சார மோட்டாருக்கு 10 ரூபாய் என்றும், மீட்டருக்கு 5 ரூபாய் வீதமும் விதித்து விவசாயிகளை கடுமையான தொல்லைக்கு உள்ளாக்கி இருக்கிறார்கள்.





குடிநீர்ப் பஞ்சம் எங்கும் நிலவியிருக்கிறது அதைத் தீர்ப்பது நமது அரசின் தலையாய கடமையாகும். பெத்துநாய்க்கன் பாளையம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க 1972-ம் ஆண்டு 10 ஆயிரம் ரூபாய் ஆய்வுத் தொகை செலுத்தி 5 ஆண்டுகள் ஆகியும் இன்னும் எந்தவிதமான வேலையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இந்த அரசு குடிநீர்ப் பிரச்சினையை அங்கு போக்க முன்வரவேண்டும்.

(பிற்பகல் 1-10)

ஆத்தூர் நகரம் பர்ஸ்ட் கிரேடு முனிசிபாலிடி ஆகும். அந்த முனிசிபாலிடிக்கு குடிநீர் வழங்க 1971 ஆம் ஆண்டு எல்.ஐ.சி.-யிடம் லோன் வாங்கி 31.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட அந்தக் குடிநீர்த் திட்டத்திற்குச் செலவிடப்பட்ட தொகை 26.75 லட்சம் ஆகும். இதில் செலவுபோக 4.75 லட்சம் ரூபாய் மீதி ஆகியுள்ளது. ஆத்தூருக்கு குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 40 எச்.பி. கொண்ட இரண்டு மோட்டார்கள் வாங்கி பொருத்தலாம் என்று இருந்தது. ஆனால், அதிகாரிகள் அதை விலைக்கு விற்றுவிட்டார்கள். விற்ற பிறகு 40 எச்.பி.-க்கு பதிலாக 10 எச்.பி. மோட்டார் வைத்து ஆத்தூர் நகரத்திற்குத் தண்ணீர் கொண்டு வந்தார்கள். ஐம்பது ஆயிரம் மக்களுக்குமேல் உள்ள அந்த நகராட்சிக்கு அந்தத் தண்ணீர் திட்டத்தால் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க இயலவில்லை. அங்கு தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு எந்தத் திட்டமும் இல்லை. ஆகவே இப்போது மீதமுள்ள 4.75 லட்சம் ரூபாயையும் உபயோகித்து ஆத்தூர் நகராட்சியில் நிலவுகிற தண்ணீர் பஞ்சத்தைப் போக்க கல்ராயன் மலையில் இருந்து தண்ணீர் கொண்டுவர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பொறியாளர் அவர்களும் 6.57 லட்சத்தில் திட்டம் தீட்டினார்கள். அந்தத் திட்டமானது தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டது. தலைமைப் பொறியாளர் அவர்கள் அதை 15.91 லட்சம் என்று முறைப்படுத்தியுள்ளார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை அப்போதிருந்த சி.இ. அவர்கள் வறட்சி நிவாரண வேலையிலே நிறைவேற்றலாம் என்று சொன்னார்கள். புதிய திட்டம் நிறை

[திரு. சி. பழனிமுத்து] [1977 ஜூலை 12

வேற்றப்படாததால் மக்கள் படும் அவதி கொஞ்ச நஞ்சம் அல்ல. குடிநீர் வடிகால் திட்டம் வேலை துவங்கும் முன்பே, அப் போதிருந்த அதிகாரிகளுக்கும் பொறியாளர் அவர்களுக்கும் திட்டம் முழு அளவு வெற்றிபெறாது என்று தெரியும். எனவே, இந்த அரசு புதியதாகத் திட்டம் போட வேண்டுமென்று இல்லாது, அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற தனிக் கவனம் செலுத்தி கஷ்டத்தைப் போக்க முயலவேண்டும். பேரூராட்சி களில் ஆழ் துளைக் கிணறுகள், மின்சார மோட்டாரைப் பொருத்திக் கட்டணம் வசூலிக்கிறார்கள். குறிப்பிட்ட அளவுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தினால் அதிகமாகப் பயன் படுத்திய மின்சாரத்திற்கு 2, 3 மடங்கு கட்டணம் வசூலிப்பதால் அந்தக் கிராமமும், ஊராட்சியும், பேரூராட்சியும் கட்ட முடியாத அளவுக்கு—ஆளாகியிருக்கிறது. ஆகவே அதிக அளவிற்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து வசூலிக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகமாக விதித் துள்ள கட்டணத்தை ரத்து செய்யும்படியும் கேட்டுக் கொள்ளு கிறேன்.

மின்சாரத் திருட்டுக்கள் ஏராளமாக நடக்கின்றன. இந்த அரசு அதைத் தடுக்க தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்களை ஜப்தி செய்யாமல் இருக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டும்.

பெத்துநாய்க்கன் பாளையத்தில் ரெட்டியணை என்ற திட்டத்தை நிறைவேற்றும்படி நாங்கள் அரசை வற்புறுத்தி வருகிறோம். அந்தத் திட்டம் இப்போது செயலாகும் அளவிற்கு வந்திருக்கிறது. அந்த ரெட்டியணை திட்டத்தை உடனடியாக செயல்படுத்தினால் ஏழை எளிய விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



1977 ஜூலை 12] [திரு. சி. பழனிமுத்து]

கூட்டுறவு வங்கியில் பெறுகிற நீண்ட கால கடனை (3 வருஷம், 5 வருஷம் ஒவ்வொரு வருடமும் திருப்பிக் கட்டவேண்டும். நிலஅடமான வங்கிக்கும் கூட்டுறவு வங்கிக்கும் வேறுபாடு இருக்கிறது. கூட்டுறவு வங்கியிலே ஓராண்டு முடிந்த கடனை கட்டவில்லையானால் உடனே 5 ஆண்டு கடனையும் பூரா தொகையையும் திரும்பப் பெற டிகிரி செய்கிறார்கள். ஆனால் நிலவள வங்கியிலே ஓராண்டு முடிந்து கட்டவில்லையானால் ஒரு ஆண்டு மட்டும் டிகிரி செய்கிறார்கள். கூட்டுறவு வங்கியிலும் அதே போன்ற விதியை அமல் படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் இரும்பாலை திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வறட்சியாக இருக்கிறது. அந்த ஆத்தூர் பகுதியை வறட்சி பகுதியாக அறிவித்து ரூரல் ரோடு ஒர்க்ஸ்—சாலைகள் போன்ற பணிகளை மேற்கொள்ளவேண்டும். இந்த ஆண்டே அந்த வேலைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

பெத்துநாய்க்கன் பாளையத்தில் உள்ள 34 கிராமங்களிலே 17 கிராமங்களுக்குமேல் பஸ் போக்குவரத்து இல்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் உடனடியாக அந்த பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : கனம் சபாநாயகர் அவர்களே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே ஒரு சில விஷயங்களை கவர்னருடைய உரையின் மீது தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளிலே கிணற்று நீர்ப் பாசனத்தை நம்பி விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுடைய எண்ணிக்கை கணிசமானது என்பது அனைவருக்கும் தெரியும். சமீப ஆண்டுகாலமாக மின்சாரக் கட்டணத்தின் உயர்வின் காரணமாக கிராமப் புறத்திலே செயல் படக் கூடிய இவ் விவசாயிகள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பு 9 பைசாவாக இருந்து அதற்குபின்னர் அது 11 பைசாவாக உயர்ந்து இப்போது 16 பைசாவாக உயர்ந்திருக்கிறது. இந்தக் கட்டணம் மேலும் உயருமோ என்று விவசாயிகள் மத்தியில் ஒரு ஐயப்பாடு இருக்கிறது.

அது தவிர மீட்டர் ரெண்ட், டெப்பாசிட் என்ற அடிப்படையிலும் இதுபோன்ற பல அம்சங்களிலும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த மின் கட்டணத்தை கிராமப்புற விவசாயிகள் கட்டுவது என்பது சாத்தியம் அல்ல. இந்த நேரத்தில் ஒன்றைக் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மின் கட்டண உயர்வு காரணமாக, இப்படி தமிழகத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்திலே மாவட்டங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளையும், குறிப்பாக, கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிலைமையையும் கவனத்திலே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1-20)

தென்னாற்காடு மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் 5 எச். பி. மோட்டார் வைத்து விவசாயம் செய்யும் விவசாயி, அதே விவசாயத்தை கோவை மாவட்டத்திலே செய்ய வேண்டுமானால் 15 எச்.பி. மோட்டார் வைத்தால் தான் சரியான முறையில் விவசாயம் செய்ய முடியும். இது தான் யதார்த்தமான நிலைமை. இப்படி இருக்கும் நிலை வேறு இதர மாவட்டங்கள் எங்கிலும் தமிழ் நாட்டில் கிடையாது. இதனால் கோவை மாவட்டத்தில் இருக்கும் விவசாயி 15 எச்.பி. மோட்டார் வைத்திருப்பதால் மற்ற மாவட்டங்களில் இருக்கும் விவசாயியை விட மூன்று பங்கு மின்சாரக்கட்டணம் கட்டவேண்டியிருக்கிறது. மற்ற மாவட்டத்தில் 16 பைசா கட்டுகிறான் என்றால், இங்கே 48 பைசா கட்ட வேண்டும். இப்படி அதிகமான அளவுக்கு மின்சாரக் கட்டணம் கட்டுவது யதார்த்தமான நிலையாக கோவை மாவட்டத்தில் இருக்கிறது என்பதை கணக்கில் கொண்டு, கோவை மாவட்டத்திலுள்ள விவசாயிகள், குறிப்பாக, பல்லடம், அவிநாசி, கோவை தாலுகா ஆகிய மூன்று தாலுகாக்களிலும் உள்ள விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம் அளிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பொறுத்தவரையிலும், நகரப் பகுதியாக இருந்தாலும் சரி, கிராமப் பகுதியாக இருந்தாலும் சரி விசேஷ கவனத்தை அரசு செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கோவை நகராட்சியானாலும் சரி, திருப்பூர் நகராட்சியானாலும் சரி, மற்றும் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு நகராட்சிகளிலும் வசிக்கும் மக்களுக்கு குறிப்பாக குடிநீர் வசதி





கிடைக்கச் செய்யவேண்டும். பல இடங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் தான் குடிநீர் வசதி செய்து தரப்பட்டு இருக்கிறது. மற்ற இடங்களில் கிடையாது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், ஏழை எளிய அரிசன மக்கள் வாழும் பகுதிகளில், அன்றாடம் உழைத்துச் சம்பாதிக்கும் நிலையில் உள்ள மக்கள் வசிக்கும் பகுதிகளில், தெருஓரப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இருக்கும் பகுதியிலும் அது தொழிலாளியாக இருந்தாலும் சரி, விவசாயியாக இருந்தாலும் சரி, அவர்கள் வசிக்கும் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கிடைக்கவில்லை என்பது தான் இன்றைக்கும் இருக்கும் நிலைமை. இந்த அவல நிலைமையைச் சுட்டிக் காட்ட ஒரு இடத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில்—சிங்காநல்லூர்—தொழிலாளர்கள் கணிசமாக வாழ்ந்து வருகிறார்கள். 2½ இலட்சம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியில் 1 லட்சம் மக்களுக்குத்தான் தண்ணீர் இன்றைக்குத் தரப்படுகிறது. மீதமுள்ள மக்கள் தண்ணீருக்காக 5 மைல் 4 மைல் சென்று தான் எடுத்துக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. அல்லது அவர்கள் மாட்டு வண்டி மூலம் எடுத்துவரப்படும் தண்ணீரை ஒரு குடம் தண்ணீர் 8 அணா என்று கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது.

ஆயிரக்கணக்கான பஞ்சுத் தொழிலாளர்கள் ஒரு வாரத்திற்கு ஒரு முறை தான் குளிக்கும் அநாகரீகம் சிங்காநல்லூர் பகுதியில் இருக்கிறது.

அது மட்டுமல்ல, நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்களில் குறிப்பாக புளியந்தோப்பு பகுதியில் இருக்கிற மக்கள் வாழும் இடத்தில், லைட் வசதி கிடையாது, தண்ணீர் வசதி கிடையாது, ஒரு போர்வெல் கூட அங்கே கிடையாது என்ற நிலைமையில்தான் இன்றைக்கு அங்கே இருக்கும் மக்கள் வாழ்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த மாதிரி நிலைமை நகரப்பகுதியில் இருந்தால் கிராமப் பகுதியில் இருக்கிற நிலைமை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பல்வேறு கிராமங்களில் 3—4 மைல்கள் சென்று கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள்.

குறிப்பாக, எங்கள் பகுதியில் சின்னவாரம்பட்டி என்ற கிராமத்தில் 3000 பேர்களுக்கு மேல் வசிக்கும் நிலைமை இருந்தும் அவர்கள் குடிநீர் வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த கிராமத்திலுள்ள மக்கள் தினமும் ஐந்து மைல், இரண்டு மைல் தூரம் சென்று தண்ணீர் எடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை பல்வேறு கிராமங்களில் இருக்கிறது. இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தின் பிரதான பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை, ரோடு பிரச்சினை மட்டுமல்ல, வேறு பிரச்சினைகளும் உள்ளன. அங்கே உள்ள விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினை, குறிப்பாக, கோவை, பல்லடம், அவினாசி போன்ற தாலூக்காக் களிலுள்ள விவசாயிகளின் அடிப்படை பிரச்சினை; சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் ஏதுமில்லாமைதான். அவற்றை சரிவர நிறைவேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற 15 ஆண்டுகளுக்கு முன்னால் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டம் குந்தா நீர்ப்பாசன திட்டம், மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம், மாநில அரசால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு திட்டம். அன்றைக்கிருந்த முதலமைச்சர் காமராஜ் அவர்கள் காலத்திலேயே சர்வே செய்யப் பட்டும் அதனுடைய தொடர்பாக முதலமைச்சர் அண்ணாதுரை இருந்த நேரத்திலும் சர்வே வேலை மற்றும் பல்வேறு வேலைகள் நடைபெற்றன. அந்த குந்தா நீர்ப்பாசனத் திட்டத்தை அமுல் செய்தால் கோவை, பல்லடம், அவினாசி போன்ற தாலூக்காக்களில் இருக்கும் விவசாயிகளுக்கு பெரிதும் பயன்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்பிருந்த மத்திய நீர்ப்பாசன அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள்கூட 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, தன்னுடைய அறிக்கையில் இத்திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



இவ்வளவு நாள் அத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்தாலும்கூட அந்த மூன்று தாலூகா மக்களின் நலன்கள் இனியாவது ஓரளவுக்கு பாதுகாக்கப்பட வேண்டும், மேலும் பாதிக்கப்படாமல் பாசன வசதி பெறவேண்டுமென்ற அடிப்படையில் அத்திட்டத்தை உடனடியாக அமுல் நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த குந்தா நீர்ப் பாசனத் திட்டத்தை நிறைவேற்று வதில் அரசு விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, மாநகராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றுக்கு தலைவர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டுள்ள அம்சம் மிகவும் வரவேற்கப்பட்ட வேண்டிய அம்சமாகும். இப்படி இருக்கும் நேரத்தில் ஆளுநர் அறிக்கையில் மதுரை மாநகராட்சிகளுக்கும் ஏனைய நகராட்சிகளுக்கும்தான் தேர்தல் வருமென்று குறிப்பிட்டி ருக்கிறார்கள். கோவை மாநகராட்சி என்று வரவில்லை. ஆனால் ஏற்கனவே கோவை நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்து அதற்கான ஆய்வு வேலைகள் எல்லாம் நடந்து முடிந்து இறுதியாக அது மாநகராட்சி என்ற அளவுக்கு அங்கீகரித்து அதற்கான ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்த வேண்டியதுதான், இந்த அம்சத்தைக் கருத்திற்கொண்டு கோவை நகரம், அந்த நகரத்தைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளையும் சேர்த்து தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக கோவை ஒரு பெரிய மாநகராட்சியாக, 10, 12 லட்சம் மக்கள் வாழும் பகுதியாக கொண்ட மாநகராட்சியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rule and Orders.*

Nil.

### B. *Reports, Notifications and other papers.*

@ 3. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance 1 of 1977).

@ 4. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance 2 of 1977).

---

@ Despatched to Members on 2nd July 1977.

---

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1977 ஜூலை 13

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வினாக்கள் ஒன்றும் இல்லை.

## 1. அவை உரிமை மீறல் குறித்த பிரச்னைகள்.

### (அ) 'மெயில்' நாளேட்டில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற விதி 184-ன் கீழ் திரு. லத்தீப் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார். கடந்த 4—7—1977 அன்று பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது பேசிய பேச்சை திரித்துக் கூறியும், பொது மக்களும், தொகுதி மக்களும் தன்னைப் பற்றி தவறாகப் புரிந்துகொள்ளும் வகையில் மேற்கொண்டு இந்த அவையில் அக்கறையுடன் பணியினை செவ்வனே செய்வதற்குத் தயக்கம் ஏற்படும் வகையில் 7—7—1977 அன்று வெளியான 'மெயில்' பத்திரிக்கை தலையங்கம் எழுதியிருப்பதின் வாயிலாக மன்ற உறுப்பினர் என்ற முறையில் தன்னுடைய உரிமையில் தலையிட்டிருப்பதாகவும், எனவே அந்தப் பத்திரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து, இது எந்த முறையில் உரிமை மீறலாகும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர்களே, 4—7—1977 அன்று பேரவைத் தலைவர் தேர்தல் ஒருமனதாக நடைபெற்றதைத் தொடர்ந்து மற்றக் கட்சித் தலைவர்களும், நானும்

1977 ஜூலை 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையின் அடிப் படைக்குப் போகாமல், இது எப்படி அவை உரிமை மீறிய செயல் என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தங்களைப் பற்றிப் பேசும்போது எனக்கு, கட்சியின் சார்பாக ஒருவனாக இருக்கின்ற எனக்கு, நியாயமான முறையில் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு கருத்தைச் சொன்னேன். சிறுபான்மைச் சமுதாயத்தின் சார்பாக நான் ஒருவன் வந்திருக்கிறேன் என்று சொன்னேனே தவிர, சிறுபான்மைச் சமுதாயத்திற்காக நான் வந்திருக்கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால், 'மெயில்' பத்திரிகை தன்னுடைய தலையங்கத்தில், எல்லோருடைய வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்று வந்த பிறகு "முஸ்லிம் சமுதாயத்திற்கு மட்டும் பிரதிநிதியாக நான் வந்திருக்கிறேன்" என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்பதை மட்டும் கூட சொல்லாமல், ஏதோ, கடந்த கால—நாற்பது ஆண்டுக் கால முஸ்லிம் வரலாற்றைச் சொல்லி, பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் எப்படி இந்த நாட்டு மக்கள் பிரிக்கப்பெற்று, இந்த நாட்டிலே ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு அவர்கள் ஒரு நடைமுறையைக் கடை பிடித்தார்களோ, அந்த நடைமுறையின் அடிப்படையில் உருவாகிய ஒரு மக்கள் சாரார்களுடைய கடைசி உறுப்பினராக லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள்;

'He must be made to understand' என்று சொல்வதற்குப் பதிலாக, 'He must be helped to understand' என்று சொல்லி என்னுடைய தொகுதி மக்களும், இந்த மாநிலத்தில் இருக்கின்ற மற்ற மக்களும் நான் ஏதோ ஒரு சாராருக்காக வாதாட வந்திருப்பதாகவும், அதுவும், தேர்தலில் மற்றவர் களுடைய வாக்குகளையும் வாங்கி, முறை மீறிப் பேசியதாகவும் ஒரு கற்பனையான ஒன்றைச் சொல்வதின் வாயிலாக என்னுடைய தொகுதி மக்களிடையேயும் தமிழ்நாட்டு மக்களிடையேயும் ஒரு தவறான கருத்தை என்னைப் பற்றியும், என்னுடைய கட்சியைப் பற்றியும், அதுவும், பிரிவினைக்கு முன்னால் நாட்டில் நிலவிய நிலைமைகளோடு எங்களை ஒப்பிட்டு, ஒரு கற்பனையான வாதத்தை வெளியிட்டதன் மூலம் என்னுடைய உரிமையைப் பாதிக்கும் வகையில், அதுவும் குறிப்பாக, ஒரு உறுப்பினர் என்ற முறையில்,



1977 ஜூலை 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

நான் மேற்கொண்டு சுதந்திரமாக, பயமின்றி, தயக்கமின்றி பணியாற்றுவதற்குத் தடங்கல் ஏற்படுத்தும் வகையிலே, 'மெயில்' பத்திரிக்கை வேண்டுமென்றே உள்நோக்கம் கொண்டு இதை எழுதியிருப்பதாக நான் கருதுகிறேன். இது, நிச்சயமாக, அவையின் உரிமையை, குறிப்பாக, உறுப்பினர் என்ற முறையில், நான் பணியாற்ற வேண்டிய உரிமையை மீறியதாக அமைந்திருக் கிறது என்ற காரணத்தினால் இதை உரிமைப் பிரச்னையாக இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

பத்திரிக்கைகள். "ஃபேர் காமென்ட்" என்று சொல்வார்களே, அந்த அடிப்படையில் இங்கே 'காமென்ட்' செய்ய உரிமை படைத்தவர்கள். அதை என்றும் நான் ஒப்புக்கொள்கிறேன். பத்திரிக்கைகளுக்கு அதற்கு சுதந்திரம் இருக்கிறது. அதற்கு பதிலாக, உள்நோக்கம் கொண்டு எழுதுவது என்று சொன்னால், கற்பனை செய்து கொண்டு எழுதுவது என்று சொன்னால் அதன் வாயிலாக உறுப்பினருடைய உரிமையை மீறியதாக ஆகும். அவர்களுடைய சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய முறையில் எழுதுவது. பொதுமக்களிடையேயும் உறுப்பினருடைய தொகுதி யிலே இருக்கின்ற மக்களிடையேயும் தவறான கருத்து ஏற்படும் வகையில் எழுதுவது malicious and motivated. என்ற பார்டருக்கு உட்பட்டு வரும் வகையில் தன்னுடைய கற்பனையான கருத்தை எழுதுவது, பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கும், பத்திரிக்கா-தர்மத்திற்கும் உட்பட்டு வராது என்ற காரணத்தினால் இதை உரிமைப் பிரச்சினையாக்கி அவை முன் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, இதை உரிமைக் குழுவிற்கு. பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி நியாயம் வழங்க வேண்டுமென்று தங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன்.

(ஆ) 'முரசொலி' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் முரசொலிப் பத்திரிக்கையின் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்துள்ளார். இந்த அவையில் 9—7—1977 அன்று மாண்புமிகு முதல்வரவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை விட்டுவிட்டுப்

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 13

[illegible] இல்லை என்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்ட [illegible] என்றும், [illegible] உறுப்பினர்களின் பேச்சுக்கள் [illegible] வெளியிடப்படவில்லை என்றும், மற்றவர்களின் பேச்சு வெளியிடப்படவில்லை என்றும், இப்படிப் பேரவையின் நடவடிக்கைகளை முறையாக வெளியிடாமல் [illegible] தவறாக வெளியிடுவது அவை உரிமையை மீறிய செயலாகும் என்றும் குறிப்பிடுகின்றார்கள். இது குறித்து இது எப்படி அவை உரிமை மீறல் பிரச்சினை ஆகும் என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையில் அவையில் நடைபெறுகின்ற நடவடிக்கைகளை மாற்றுதல் இல்லாமல் தெளிவாக, முறையாக வெளியிடுவது என்பது பத்திரிகைகள் பின்பற்ற வேண்டிய ஒன்று என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொண்டு, பேரவையின் 184-ஆவது விதியின் கீழ் அவை மீறல் குறித்து, கீழ்க்கண்ட பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்ப தங்கள் அனுமதியை வேண்டியிருக்கிறேன்.

வெளியூர் 11-7-1977 'முரசொலி' பத்திரிகையில் முதல் பக்கத்தில் சட்டமன்ற நடவடிக்கைகள்--தேர்தலில் ஆதித்தனாரை தி.மு.க. ஆதரிக்கவில்லை என் [illegible], கலைஞர் எழுப்பிய கேள்விக்கு எம். ஜி. ஆர். தந்த பதில் என்று தலைப்பிட்டு, 9-7-1977 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சி பற்றி வெளியிடப்பட்டுள்ளது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சின் ஒரு பகுதி விடப்பட்டிருக்கின்றது. பிரசுரிக்கப்பட்டிருப்பது, கீழ்க்கண்டவாறு இருக்கிறது:

"முதல்வர் எம்.ஜி.யார்: நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் எங்களுக்கு எதிராகப் போட்டியிட்டவர்களே என்னுடைய படத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். எல்லோருக்கும் [illegible] தெரிவித்தால் என்னுடைய நேரம் என்ன ஆவது? என்னுடைய படத்தைப் போட்டு விளம்பரப்படுத்தக் கூடாது என்று அந்தந்தவருக்கு எழுதிய கடிதத்தின் பிரதி என்னிடம்



1977 ஜூலை 13] [திரு. எஸ். ஆர். இராதா]

இருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, நாட்டுக்கு எது தேவையோ, அதுபற்றி இந்த அவையில் விவாதிப்பது நல்லது."

என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல் தேர்தலில்... அவருடைய படத்தைப் போட்டு இருப்பதைப் பற்றி விளக்கம் எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பத்திரிக்கையைப் பற்றி என்ன உரிமை மீறல் என்பதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: அந்தப் பத்திரிக்கையில் அன்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்தில், எந்தப் பகுதி அடிப்படையாக இருக்கிறதோ, அந்தப் பகுதியை மட்டும் மறைத்து விட்டு, அவர்களுக்கு எது சாதகமாக இருக்கிறதோ அந்தப் பகுதியை மட்டும் போட்டதின் மூலமாக இந்த அவையின் உரிமை பாதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். திண்டுக்கல் தேர்தலில் அவருடைய படத்தைப் போட்டு, உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டிருப்பதைக் கூட அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக அந்தச் செய்தியைப் போடவேண்டுமென்பதற்காக, அவர்கள், திண்டுக்கல்லில், எதிராகப் போடப்பட்ட அந்த விளம்பரத்தைப் போடாமல் ஆதித்தனாரை ஆதரித்ததாக ஒரு விளம்பரப் போஸ்டர் இன்று பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படி வெளியிடுகிற நேரத்தில், வெளியில் பொது மக்கள் அந்தக் கருத்தை மட்டும் பார்த்தால், ஏதோ ஆதித்தனார் தான் அந்தச் செய்திருக்கிறார் என்று தெரியுமே தவிர, மற்றவர்கள் அப்படிச் செய்யவில்லை என்று அர்த்தமாகிற நிலைமை உண்டாகிறது. அதற்கு அடிப்படையைச் சொல்கிறேன். ஆதித்தனார் [illegible], அன்று ஆதித்தனாருக்கு [illegible] இருப்பவர், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற பழைய முதலமைச்சரா என்பதைத்தான் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1977 ஜூலை 13

எனவே, இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் எனது தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன்.

**(இ) 'மாலை முரசு' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்சினை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 'மாலை முரசு' பத்திரிக்கையின் மீது ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் பேச்சுகள் மட்டும் அந்தப் பத்திரிக்கையில் போடப்படுவதாகவும் மற்றவர்களின் பேச்சுகள் வெளியிடப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி இது அவை உரிமை மீறல் பிரச்சினையாகும் என்பது குறித்து சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைகள் வந்ததிலிருந்து உண்மையில் இது சம்பந்தமாக நல்லதொரு முடிவை தாங்கள் கொடுத்தால் இந்த ஹவுஸில் உள்ள உறுப்பினர்களின் உரிமையை மட்டுமல்லாமல், இந்த ஹவுஸ் ப்ரொஸீடிங்க்ஸ்-ஐ பாதுகாக்கக் கூடியளவிற்கு அது உதவியாக இருக்கும். இங்கு சம்பந்தப்பட்ட 'மாலை முரசு' உட்பட எல்லாப் பத்திரிகைகளின் 'அக்ரெடிட்டட் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ்'-ம் உங்கள் அனுமதியோடு இங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஹவுஸின் ப்ரொஸீடிங்க்ஸை ரிப்போர்ட் பண்ணுவதற்காக அவர்களுக்கு பெர்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பத்திரிகைகளில் கொடுக்கக்கூடிய சித்திரமானது, நான் 'கார்ட்டாக' சொல்கிறேன், It must be fairly realistic picture of the proceedings of the House. ப்ரஸ்க்கு ப்ரீடம் இருக்க வேண்டியதுதான், அவர்களுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. இங்கு 'அக்ரெடிட்டெட் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ்' வந்து உட்கார்ந்து ரிப்போர்ட் செய்யும்



1977 ஜூலை 13] [திரு. ஆர். உமாநாத்]

போது அவர்கள் Their sole job is to report in such a way that it would be fairly a reproduction of the real proceedings of the House.

அவர்கள் 'புல் டெக்ஸ்ட்' போடவேண்டுமென்று நான் சொல்ல வில்லை. அவர்கள் 'கட்' செய்யலாம், ஆட்சேபணையில்லை. feature) என்னுடைய ஸ்பீச்சை கட் செய்யலாம், இன்னொருவர் ஸ்பீச்சை ஃபீச்சர்' ( feature ) செய்யலாம். அது அவர்களது உரிமை. அதற்கு அவர்களுக்கு டிஸ்க்ரிஷன் இருக்கிறது. ஆனால் ஒரு ஹவுஸில் நடந்ததை, ஒரு செக்ஷன் பூராவையும் ப்ளாக் அவுட் செய்வது என்பதைப்பற்றித்தான் சொல்கிறேன். அப்படி ப்ளாக் அவுட் செய்வதன் காரணமாக அந்த பத்திரிகை மட்டுமே படிப்பவர்களுக்கு என்ன நினைப்பு ஏற்படும் என்றால், அன்று இந்த ஹவுஸ் ப்ரொஸீடிங்க்ஸில் ஒரு செக்ஷன் பங்கு எடுக்கவில்லை என்றுதான் நினைப்பார்கள், யாரை ப்ளாக் அவுட் செய்கிறார் களோ அவர்கள், அந்த செக்ஷன் விவாதத்தில் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றுதான் நினைப்பார்கள், அதை படிப்பவர்கள். A distorted picture will be presented and not a fair picture will be presented. அப்படி வருவதைத்தான் அவை உரிமை மீறல் என்று நான் சொல்கிறேன்.

எட்டாம் தேதி மாலை முரசில், கவர்னர் அவர்கள் உரையின் மீது நடந்திருக்கக்கூடிய முதல் நாள் விவாதத்தில், டி.எம்.கே. மெம்பர்கள் பேச்சுக்களைப் போட்டிருக்கிறார்கள், ஆட்சேபணையில்லை. சுப்புவின் பிரச்சினை—அவர்களுக்கு க்ரிவன்ஸ் இருந்தது—இரண்டு பேஜ் புல் டெக்ஸ்ட் போட்டிருக்கிறார்கள். டி.எம்.கே. மெம்பர்கள் ஸ்பீச் முதல் பேஜில் போடப்பட்டிருக்கிறது. ராதாவின் பேச்சு கொஞ்சம் ஒரு இடத்தில் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அன்று பேசிய உறுப்பினர்களின் பேச்சு—ஸி.பி.எம். உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள், ஸி.பி.ஐ. உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள், ஜனதா உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள், இந்தியன் நாஷனல் காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள்.

It is not a party affair. It relates to the protection of the House and its liberty.

அவர்கள் பேச்சுக்கள் ப்ளாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று கூட இல்லை. அது மாலை எடிஷன் ஆனதால் 'ஏர்லியராகக் கவர்' செய்திருப்பார்களோ,

[திரு. ஆர். உமாநாத்] [1977 ஜூலை 13

என்னவோ. ஆகவே முதலில் பேசியவர்கள் பேச்சுக்களைப் போட்டிருப்பார்களோ என்றால், ரிக்கார்டட் ப்ரொஸீடிங்ஸைப் பார்க்கிறபோது பின்னால் பேசியவர்களின் பிரசங்கங்கள் முன்னால் வந்திருக்கின்றன. முன்னால் பேசியவர்களது பேச்சுக்கள் வரவே இல்லை. எல்லாம் ப்ளாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. இதுமாதிரி ஒரு இஷ்யூ லோக் சபாவில் வந்தது. அது, எ.ஐ.ஆர். பற்றியும், ப்ரஸ் பற்றியும் வந்தது. அப்போது ஒரு ரூலிங் கொடுக்கப் பட்டது. அது, பெரிதாகப் போடுவதா, சிறிதாகப் போடுவதா, எந்த பாயின்ட்டைப் போடுவது என்பதில்,

“Complete black-out is a distoration of the proceedings of the House”

என்று ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ‘மாலை முரசு’ பத்திரிகை என்று மட்டும் அல்ல—அதன் காப்பி என்னிடம் இருக்கிறது—மொத்தத்தில் இந்த குறிப்பிட்ட இஷ்யூவில் ‘ஜெனரல் கைட்லைன்ஸ் பார் தி ப்ரஸ்’, இந்த அஸெம்பளி ப்ரொஸீடிங்க்ஸ் எப்படி ‘ரிப்ளக்ட்’ செய்யப்பட வேண்டும் என்று அவர்களது உரிமையும் பாதுகாக்கப்பட்டு, எங்களது உரிமையும் பாதுகாக்கப்பட்டு ஒரு முடிவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஈ) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது கொண்டு வழங்குகிறேன்.

## (ஈ) மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது கொண்டு வரப்பட்ட பிரச்னை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சுப்பு அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்துள்ளார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்த சில கருத்துக்கள் பேரவை கூடியிருக்கும்போது அதுபற்றி வெளியில் கூறியிருப்பது அவை உரிமை மீறலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி அது அவை உரிமை மீறலாகும் என்பதுபற்றி சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஜூலை 13]

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை உரிமை மீறல் பிரச்னை மீது நான் கருத்து தெரிவிப்பதற்கு முன்பாக பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே ‘அன்று’ பத்திரிக்கை மீது உரிமைப் பிரச்னை கொண்டுவந்தபோது அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. இன்று உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் . . . .

THE HON. THIRU G. R. EDMUND: The hon. Member is not entitled to say all these things.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் குறுக்கிட்டால் எனக்குப் பேசுவதற்கு இடம் அளிப்பதில்லை, அப்படி இப்படி என்றெல்லாம் சொல்கிறீர்கள். நீங்கள் எப்படி இதைப் பேசலாம்? எப்படி இதைச் சொல்லலாம்? நான் தீர்ப்பு கொடுத்து அது முடிந்துவிட்ட விஷயம். நான் அறையில் கொடுத்த முடிவை அவையில் சொல்லலாமா?

**திரு. க. சுப்பு :** நான் தீர்ப்புபற்றி, அந்தப் பிரச்னைக்குள்ளே போகவில்லை. நான் சொல்ல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அறையில் தள்ளியதைப் பற்றி இங்கே பேசக்கூடாது. இது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இது வேண்டுமென்றே எடுத்துக் கொள்ளப் படுகிற வாதம், விஷயம் என்பதற்காக நான் மெத்த வருத்தப் படுகிறேன். தயவுசெய்து அவையை கட்டுப்படுத்தும் அளவிற்கு ஒத்துழைக்கவேண்டும்.

**திரு. க. சுப்பு :** இந்த உரிமை மீறல் பிரச்னை பற்றி விவாதிப் பதற்கு தலைவர் அவர்கள் அனுமதி தந்திருப்பதற்கு நன்றி தெரிவிக்கிறேன். போன தடவை கொடுக்கப்படாத வாய்ப்பு இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காகத் தங்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது 'உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறேன். நான் முதலிலேயே கொடுத்திருக்கிறேன் என்றாலும், இரண்டு மூன்று

[திரு. க. சுப்பு] [1977 ஜூலை 13

பேர்களுடைய உரிமைப் பிரச்னைகளைக் கொண்டு வந்து, பேப்பர்கள் மீது இரண்டு உரிமைப் பிரச்னைகள் கொடுங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறார்களோ, தெரியவில்லை, மூன்றாவதாக என்னுடையதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையை ஒழுங்கான முறையில் நடத்தவேண்டும் என்று வந்திருக்கிறீர்களா, அல்லது ஏதாவது தகராறு செய்து குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று வந்திருக்கிறீர்களா ? நிச்சயமாக இப்படியெல்லாம் செய்வதை நான் அனுமதிக்க முடியாது. உங்கள் வாயில் வந்ததை எல்லாம் பேசுவது என்று நினைத்து பேசுவது சரியல்ல. இந்த சட்டமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டு பேசவேண்டும். உங்களுக்குத்தான் பேசத் தெரியும் என்று ஆரம்பித்துவிட்டால் இந்த மன்றம் என்னவாகும் ? ஆகவே, தயவுசெய்து சட்டமன்ற விதிகளுக்கு உட்பட்டு பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** நான் விதிகளை மீறிவிட்டேன் என்று. . .

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** இந்த அவையை நடத்திச் செல்வதற்கு என்று விதிமுறைகள் இருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்கள் எந்தக் கருத்தைச் சொன்னாலும், எந்தத் தீர்ப்பை வழங்கினாலும் நீங்களாகவே சுயமாக முடிவு செய்து தீர்ப்பளிக்கிறீர்கள். ஆனால் உரிமை மீறல் பிரச்னைமீது கருத்து தெரிவிக்காமல், அமைச்சர் ஏதோ இரண்டு உறுப்பினர்களிடம் சொல்லி உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்துள்ளதாகவும் அதன் பேரில் தாங்கள் ஏதோ கருத்து தெரிவிப்பதாகவும் சொல்வது அமைச்சரை குற்றஞ்சாட்டுகிறாரா அல்லது பேரவைத் தலைவர் அவர்களை அவமானப்படுத்துகிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேசும் போது, ஏதோ அமைச்சர் அவர்கள் கொண்டுவரச் சொல்லி, ஏதோ கொடுத்ததை வைத்து அவைத் தலைவர் சொல்கிறார் என்பதுபோன்ற, ஒரு அக்கறையற்ற முறையில் இருப்பதாக



1977 ஜூலை 13] [பேரவைத் தலைவர்]

இந்த மன்றத்தில் கருத்துக்களை, அவைத் தலைவர் பற்றிப் பேசுவது நல்லதல்ல. ஆகவே, உரிமை மீறல் பிரச்னைபற்றி மட்டும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** அதற்கு மேல் நான் போகவில்லை.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 9-7-1977 அன்று மதுரையில் போய் இறங்கி சர்க்யூட் ஹௌஸில் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். போறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட பிரனித் திட்டம் மீண்டும் செயல் படுத்தப்படும் என்பது அந்த அறிவிப்பு. அதில் பைறன்றியல் இம்ப்ளிகேஷன்ஸ் இருக்கின்றன. அதுபற்றிய அறிவிப்பு சர்க்யூட் ஹௌஸில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதோடு கம்பல்ஸரி ரிட்டயர்மெண்ட், மற்றப் பிரச்னைகள், மதுரையில் மாநகராட்சி ரோடுகளுக்காக 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் கொடுத் திருக்கிறார்கள். அது 'தினகரன்' பத்திரிக்கையில். மதுரையில் 10-ம் தேதி என்று போட்டு வெளிவந்திருக்கிறது.

பிரனித் திட்டம் மீண்டும் வரும் என்று தினகரனில் வெளி யிடப்பட்டிருக்கிறது. பேரவை கூடி விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது—ஞாயிற்றுக்கிழமை கூட அல்ல—அவை பற்றி இங்கு சொல்லாமல், அவைக்கு வந்து சொல்வதற்குப் பதிலாக, அவை நடந்து கொண்டிருக்கும்போது, அதை ஸர்க்யூட் ஹௌஸில் சொல்லியிருக்கிறார்கள் என்றால் இந்த அவையின் உரிமை மீறப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திற்கு என்று ஒரு மரியாதை இருக்கிறது. இது ஒரு ஸபாவின் பாடி. நான்கு சுவர் களுக்குள் என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்று வைத்திருக் கிறோம். மக்களின் பிரதிநிதிகள் வந்து இந்த மன்றத்தில் பிரச்னைகள் குறித்து விவாதிக்கும்போது அதுபற்றி விவகாரங்களை, கொள்கை முடிவுகளை இந்தப் பேரவையில் இருக்கிற உறுப்பினர்கள் தெரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கே தான் முதலில் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கு பல தீர்ப்புகள் இருக்கின்றன. இங்கே முதலில் சொல்லுவது தான்

[திரு. க. சுப்பு] [1977 ஜூலை 13

(முற்பகல் 9-20)

மரபுகளாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இந்த சபைக்குத் தெரியாமல், இந்த சபைக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்காமல் சர்க்யூட் ஹவுஸில் போய் சொல்ல வேண்டிய காரணம் என்ன? சர்க்யூட் ஹவுஸுக்கு கொடுக்கும் மரியாதையை இந்த சபைக்குக் கொடுத்திருக்கக்கூடாதா? முக்கியமான விவாதங்களில் எல்லாம் அங்கத்தினர்கள் பங்கு எடுத்துக் கொண்டிருக்கும்போது, அதே தினத்தில் சபைக்கு அமைச்சர் அவர்கள் வராமல் வெளியே போய் சிரணி, கம்பல்ஸரி ரிட்டயர்மென்ட், ரோடு அலக்கேஷன் இந்த விவரங்களை எல்லாம் அங்கே போய் சொல்லுகிறார்கள் என்றால் இந்த அவைக்கு இருக்கக்கூடிய உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பதை சொல்லு கின்ற நேரத்தில், இந்த நேரத்தில், நாங்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அமைச்சர் அவர்கள் இங்கு இருந்திருக்க வேண்டும். இங்கே பதில் சொல்லாமல் வெளியே போய் சொல்லியிருப்பது இந்த அவையினுடைய உரிமையை மீறுவதாகும். இது என்னுடைய பிரச்னே அல்ல. இந்த அவை யினுடைய பிரச்னே. எனவே தான் இத்தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறேன். எனவே இதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Ruling reserved.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) தஞ்சை சரபோஜி கல்லூரி மூடப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள், தஞ்சை சரபோஜி கல்லூரி 6—7—1977 முதல் மூடப்பட்டு 2,500 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது சம்பந்தமாக விவாதிக்க—என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் எந்த வகையில் இது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைப்பற்றி சுருக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

* திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை சரபோஜி கல்லூரியில் 6-7-1977 முதல் அடையாள வேலைநிறுத்தம் நடக்கிறது. 110 பேர்களுடைய பிரச்னே,



1977 ஜூலை 13] [திரு. மு. அம்பிகாபதி]

2,500 மாணவர்களை பாதிக்கின்ற பிரச்னேயாக மாறியிருக்கிறது. பொதுவாக கல்லூரி மூடியிருப்பது, அந்த மாணவர்களின் கல்விக்குப் பாதுகாப்பாக இராது. அதே நேரத்தில் கல்வித்துறை யிலும் தேவையான முன்னேற்றம் இருக்காது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். குறிப்பாக இந்த சரபோஜி கல்லூரியினுடைய நிர்வாகம் 1975, 1976, ஆகிய ஆண்டுகளில் அங்கிருந்த துணைவிடுதியில் தங்கியிருந்த திருப்பதி, துரை, சண்முகம் இவர்களுக்கு வேண்டுமென்றே இந்த ஆண்டு இடம் அளிக்க மறுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இவர்கள் வார்டன் வைத்தியநாதன் அவர்கள் ஊழலைக் கண்டித்திருக்கிறார்கள். இதைப்பற்றி நிர்வாகிகளுக்கும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படி சுட்டிக் காட்டியதற்கும் சரியான நடவடிக்கை இல்லை. பின்னர் 6—7—1977 இரவு ஏழு மணிக்கு ஆஸ்டலைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று மாணவர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். இரவு வேளையில் அவர்கள் எங்கே செல்ல முடியும்? இருந்தும், வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டிருக் கிறார்கள்.

இன்றைக்கு அந்தக் கல்லூரி மூடப்பட்டு 2,500 மாணவர்கள் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். பிரின்ஸிபால், துணை பிரின்சி பால், வார்டன் எல்லோரும் லீவு எடுத்திருக்கிறார்கள். நியூ காலேஜ் ஆகட்டும், சரபோஜி காலேஜ் ஆகட்டும், இப்படிப்பட்ட நிலை கல்வித்துறையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக மாணவர்களிடையே கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த சரபோஜி கல்லூரியின் முதல்வர், கோயம்புத்தூர் மில் உரிமையாளர் ஒருவரின் மகன் என்று கேள்விப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: ஆகவே இப்படிப்பட்ட பிரச்னேயில், இந்த மாணவர்களுடைய பிரச்னேயில் எப்படி அணுகுவது என்பதை விவாதிக்கின்ற முறையில், இந்திய கம்யூனிஸ்டு கட்சி தனது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குகின்ற முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே இதை அனுமதித்து அவையை ஒத்திவைக்க கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை சரபோஜி கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக அங்கேயிருக்கின்ற கலெக்டர் அவர்கள் துணை பிரின்ஸிபால் அவர்களோடு தொடர்பு கொண்டு மாணவர் பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு பிரச்னையைப்பற்றி பேசியிருக்கிறார்கள். அதில் துரை என்கின்ற மாணவரை அங்கேயிருக்கிற ஆஸ்டலில் சேர்த்துக்கொள்வது என்றும், அவர் ஒழுங்காக நடப்பதாக வாக்குறுதி அளித்திருப்பதின் பேரில் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு முன்னாலிருந்த டெப்டி வார்டன் என். எஸ். டிரெயினிங்-க்கு போயிருக்கிறார். திரும்பி வந்ததும், அவர் துணை பிரின்ஸிபாலாக இருப்பார் என்றும், துணை வார்டனாக இருக்க மாட்டார் என்றும், இப்போதுள்ள டெப்டி வார்டனே தொடர்ந்து இருப்பார் என்றும் கூறிக்கொள்கிறேன். சண்முகம், திருப்பதி ஆகிய இரு மாணவர்கள் ஒழுங்கு மீறி நடந்ததாக குற்றச்சாட்டு இருப்பதாக சொல்லப்படுவதால், அதைப்பற்றி விசாரிக்க, அதோடு இதற்கு காரணம் துணை வார்டன் என்று சொல்லப்படுவதாலும், அதைப்பற்றி விசாரிப்பதற்கும் இங்கேயிருக்கின்ற கல்லூரி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு அதிகாரி அங்கு சென்று விசாரிப்பதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவரையிலும் இரண்டு மாணவர்களையும் பிற்பட்ட மாணவர்களுடைய விடுதியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். வைஸ் பிரின்ஸிபால் அவர்களிடம், வேலைநிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட மாணவர்களை பழிவாங்கக் கூடாது என்று சொல்லப்பட்டு அவரும் அதற்கு உறுதியும் வழங்கியிருக்கிறார்கள்.

மாணவப் பிரதிநிதிகள், வைஸ் பிரின்ஸிபால், மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்கள் கூடியிருந்து சமரசமாகப் பேசி, கல்லூரி வேலை நிறுத்தம் வேண்டாம் என்று முடிவு செய்திருப்பதையும், கல்லூரி தொடர்ந்து வேலை செய்யத் துவங்கும் என்பதையும் இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாணவர்கள் வேலைநிறுத்தம் இருக்கக்கூடாது என்பதை உணருகின்றோம். அதற்குக் காரணமாகக் கொண்டு வருகின்ற **கோரிக்கைகளில்**, நியாயங்கள் இருக்கலாம், நியாயங்கள்





இருக்கின்றன. இதை நிறைவேற்றுவதற்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபடாமலேயே அதிகாரிகளோடு அல்லது எங்களோடு சந்தித்துப் பேசி, பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதின் மூலம் அவர்களுடைய கல்வி கெடுகிறது என்பதை நாங்கள் உணருகிறோம். எங்களை சந்திக்கின்ற வாய்ப்பு உள்ளவர்கள் சந்தித்து, அல்லது வரும்போது அவர்கள் கொண்டு வருகின்ற பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம், இங்கே வந்துதான் தீர்க்கவேண்டும் என்பதல்ல.

கல்லூரிகளில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகிக்கொண்டு வருவதை கல்வித்துறை ஆழ்ந்து கவனித்துக் கொண்டு வருகிறது. ஆகவே மாமன்ற உறுப்பினர்கள், கல்வித்துறையில் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது, படிக்கின்ற ஆர்வத்தைக் கெடுத்து விடுகிறது என்பதை, மாணவர்களுக்காகப் போராடுகின்ற இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக்கொள்வது, மாணவர் உலகில், இதுபோன்ற வேலை நிறுத்தத்தைக் குறைப்பதற்கு, அறவே இல்லாமல் போக்குவதற்கு உதவிசெய்ய வேண்டும். அதோடு நிச்சயமாக கல்வித்துறை இதில் ஈடுபடும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வேலைநிறுத்தம் எந்த அளவுக்கு மாணவர்களுடைய படிப்பை பாழாக்குகிறது என்பதற்கு ஏதாவது புள்ளிவிவரம் தேவைப் படுமானால் இதற்காக நான் ஒன்றை குறிப்பிடுவேன். அவசரகால, நெருக்கடிகால நிலைமை இருந்தபோது கல்லூரிகளில் மாணவர்களின் வேலைநிறுத்தம் கிடையாது. அதன் பலனை அவர்களும் உணருவார்கள். பல்கலைக்கழக தேர்வுகளில் மார்க்குகளை பார்க்கின்ற பொழுது, பல மாணவர்கள் பிற்பட்ட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் குறிப்பாக 95, 98 என்று மார்க்குகள் வாங்கியிருக்கிறார்கள். வேலைநிறுத்தம் என்பது வரும்போது உயர்ந்த ஜாதி மாணவர்களை பாதிப்பதை விட தாழ்த்தப்பட்ட மாணவர்களை அதிகம் பாதிக்கிறது என்பதை என்னால் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள முடியும்.

எனவே, இதுபோன்ற வேலைநிறுத்தங்களைத் தடுப்பதற்கு அனைவரும் ஈடுபடவேண்டும் என்பதை எடுத்துச்சொல்லி, இதற்கான முயற்சிகளை எடுக்க கல்வித்துறை ஈடுபடும் என்பதை

தெரிவித்துக் கொண்டு, இதைப்பற்றி இங்கு விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்று கூறி, இதை அனுமதிக்கவேண்டிய தேவையில்லை என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்ற இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

**(ஆ) காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமையும் அவர்கள் எடுக்க இருக்கும் ஒட்டு மொத்த விடுப்பும், உள்ளிருப்புப் போராட்டமும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், பச்சையப்பன் கல்லூரி அறநிலையக் குழுவின் சார்பில் நடைபெறும் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், ஆகியோர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சம்பளம் தராததால் அந்த ஆசிரியப் பெருமக்கள் 11—7—1977 முதல் ஒட்டு மொத்த விடுப்பு எடுப்பது என்றும் அதைத் தொடர்ந்து உள்ளிருப்புப் போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளதை குறித்து விவாதிக்க ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு எப்படிப் பொருந்தும் என்பதை சுருக்கமாக விளக்கும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

* **திரு. துரை முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். சென்னையிலே இருக்கிற கல்வி அறநிலையங்களில் மிகப் பழமையானது பச்சையப்பன் கல்லூரி அறக்கட்டளையாகும். பச்சையப்ப முதலியார் அவர்களால் கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து அதற்குப் பணம் வந்துகொண்டிருந்தது. பிறகு நார்ட்டன் துரை அவர்களால் ஒரு அறக்கட்டளை உருவாக்கப்பட்டு,



அதன் மூலமாக பல கல்லூரிகள் நிறுவப்பட்டு, நடந்துகொண்டு வருகின்றன. இந்த பச்சையப்பன் டிரஸ்ட் போர்டு மூலம் தற்போது ஆறு கல்லூரிகள் நடக்கின்றன. சென்னையிலே ஆண்களுக்கான பச்சையப்பன் கல்லூரி அதேபோல் காஞ்சிபுரத்திலே ஆண்களுக்கான ஒரு பச்சையப்பன் கல்லூரி, அங்கேயே பெண்களுக்கான ஒரு பச்சையப்பன் கல்லூரி, அதேபோல் சென்னையிலே செல்லம்மாள் பெண்கள் கல்லூரி, மற்றும் சென்னையிலே ஆண்களுக்கான கந்தசாமி நாயுடு கல்லூரி, அதேபோல் கடலூரிலே பெண்களுக்கான கந்தசாமி நாயுடு கல்லூரி என்று ஆறு கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. அதேபோல் பல பள்ளிகள்—தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதிலே ஒன்றுதான் காஞ்சிபுரத்திலே இருக்கும் பச்சையப்பன் கல்லூரி. அங்கேயுள்ள கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டத்தட்ட கடந்த 5 மாதங்களாக சம்பளம் தரப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம்?

முன்பெல்லாம் இந்த டிரஸ்ட் போர்டில் அந்தக் கல்லூரியிலேயே படித்த பழைய மாணவர்கள், அந்தக் கல்லூரி மேல் அக்கறை உள்ளவர்கள் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருந்தவர்களை இன்றைக்கு நாட்டிலே குடியரசுத் தலைவர் ஆட்சி வந்தபின்னர், பலரைத் திட்டமிட்டு மிசாவைக் காட்டி மிரட்டி, தாங்களாகவே ராஜினாமா செய்யும்படியும், சிலரை வற்புறுத்தி ராஜினாமா செய்யும்படியும் செய்திருக்கிறார்கள். அதன்மீது இன்றைக்கு ஹைகோர்டிலே வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அது வேறு விஷயம்; விவகாரம்.

இப்படி இன்றைக்கு நெருக்கடி நிலைமை இருக்கின்ற நேரத்திலே, சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியிலே கடந்த 5, 6 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாமல், கடந்த 4-ம் தேதி தான் சம்பளம் தந்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு காஞ்சிபுரத்திலே உள்ள பச்சையப்பன் ஆண்கள் கல்லூரிக்கு கடந்த 5 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதேபோல தான் காஞ்சிபுரத்திலே உள்ள பச்சையப்பன் பெண்கள்

கல்லூரிக்கும் 4, 5 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதேபோல் கடலூரிலே உள்ள கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரிக்கு கடந்த 3 மாதங்களாகச் சம்பளம் தரப்படவில்லை. இப்படி ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு கல்லூரிக்கும் 4, 5 மாதங்களாகச் சம்பளம் தராவிட்டால் அதிலே பணியாற்றும் ஆசிரியர்களுடைய நிலைமை என்னவாகும்? இன்றைக்கு விற்கின்ற விலைவாசியில் அவர்களால் 5 மாதங்களாகச் சம்பளம் இல்லாமல் எப்படி குடும்பத்தை நடத்த முடியும்? இந்த நிலையில் அவர்களால் எப்படி படிப்புச் சொல்லி தரமுடியும்? இதனால் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படாதா? இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி 5 மாத காலமாக அங்குள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாததால், அவர்கள் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து இப்போது போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். சாதாரணமாக ஆங்காங்கே மாணவர்கள் தகராறுகள் தான் இருக்கும். ஆனால், இன்றைக்கு ஆசிரியர்களே இவ்வாறு நடந்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டால், கல்வியின் நிலை என்னவாகும்?

பச்சையப்பன் கல்லூரி டிரஸ்ட் போர்டு சார்பாக உள்ள எல்லாக் கல்லூரிகளிலும் கிட்டத்தட்ட 12 ஆயிரம்—மாணவ—மாணவியர் படிக்கின்றனர். ஒரு கல்லூரியிலே எடுக்கப்படும் முடிவு, மற்றக் கல்லூரிகளுக்கும் பரவினால் இந்த 12 ஆயிரம் மாணவர்களின் கதி என்னவாகும்? ஒட்டுமொத்தமாக எல்லாக் கல்லூரிகளும் மூட வேண்டிய நிலையை உருவாக்கக்கூடிய அளவுக்கு இந்த டிரஸ்ட் போர்டு ஏழ்மையாக இல்லை. இதற்கு 12 கோடி ரூபாய் சொத்துள்ளது. வங்கியிலேயும் பணம் இருக்கிறது. 4—7—77 வரையில் வங்கியில் ஆறு லட்சம் ரூபாய் இருக்கிறது. அதுமட்டுமல்ல, அப்படி அவர்கள் வங்கியிலிருந்து பணத்தை எடுக்க மாட்டேன் என்று சொன்னாலும், கல்லூரித் துறை கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து 20—6—1977 அன்று இந்தக் கல்லூரி மானேஜ்மெண்டாருக்கு, 2,88,000 ரூபாய் பணம் தயாராக இருக்கிறது, வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று





கடிதம் வந்திருக்கிறது. ஆனால் அவர்களோ அந்தப் பக்கமே திரும்பவில்லை. கடைசியாக, அவர்களே 30-ம் தேதி ஒரு ஸ்பெஷல் மெசஞ்சரை அனுப்பி, பணத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, டெல்லியிலே கடந்த மே 10-ம் தேதியன்று நடந்த meeting of the Parliamentary Consultative Committee on the Tamil Nadu Legislation. கூட்டத்திலேகூட, இப்படி ஐந்து மாத காலமாக ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கும் நிலைமை பரிசீலிக்கப்பட்டு, 5,30,100 ரூபாய் பணம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு, இந்த டிரஸ்ட் ஆசிரியர்களுக்குப் பணம் தரவில்லை.

என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்த்தால், இவர்கள் வேண்டுமென்றே ஒரு ஆர்டிபிஷியல் ஸ்கேர்சிடி அதாவது செயற்கைப் பஞ்சத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். இப்படி ஒரு செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கி, ஆசிரியர்களை வேலையை விட்டுப் போங்கள் என்று 78 ஆசிரியர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதிலே 28 பேர்கள் வேலையை விட்டே போய் விட்டார்கள். மீதி கொஞ்சம் பேர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இது தற்போதுள்ள கல்லூரி நிர்வாகத்தினரால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கைப் பஞ்சம். வேண்டுமென்றே கல்லூரியிலே பணமில்லை என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் கல்லூரி பேரறிஞர் அண்ணா போன்ற பல பேர்களை உருவாக்கியுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த கல்லூரியை, 'படிக்கட்டும் கவிபாடும் பைந்தமிழ் பச்சையப்பன் கல்லூரி' என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிறுவனம் இன்று மூடப்படும் நிலைமையை உருவாக்கியிருக்கிறது. அப்படி மூடப்பட்டால், அதிலே பணியாற்றும் ஆசிரியர்கள் நிலைமை என்னவது? அதிலே படிக்கின்ற மாணவர்களின் நிலைமை என்னவது? அப்படி மாணவர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களைப் பெற்ற பெற்றோர்கள் பாதிக்கப்பட மாட்டார்களா?

[திரு. துரை முருகன்] [1977 ஜூலை 13

இந்தப் பிரச்சினைகளை யெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டு தான், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது இந்தச் சபையை ஒத்தி வைத்து, இதர அலுவல்களை யெல்லாம் ஒத்தி வைத்து, விவாதித்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை செல்லம்மாள் பெண்கள் கல்லூரி, காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி, மற்றும் பச்சையப்பன் பெண்கள் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், மற்றும் அலுவலர்களுக்கு ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து தரப்பட வேண்டிய ஊதியத்தை வழங்க எவ்வளவு தொகை தேவைப்படும் என்று தெரிவிக்குமாறு கல்லூரி அறக்கட்டளையின் செயலாளர் கல்லூரிக் கல்வி இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டார். இந்தத் தகவல் இயக்குநர் அலுவலகத்தில் 14—6—1977-க்குள் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும் என்று அதன் அறக் கட்டளையினர் கோரப்பட்டனர். குறித்த காலத்திற்குள் தகவல் கிடைக்காததால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தினரே அந்த மூன்று கல்லூரிகளுக்குரிய மானியத் தொகையை தோராயமாகக் கணக்கிட்டு ரூ. 1,66,063 ஜூன் மாதம் 27-ம் நாள் அறக்கட்டளை கல்லூரி செயலருக்கு அனுப்பப்பட்டது. இந்தத் தொகையை பட்டுவாடா செய்யாமல் அறக்கட்டளையின் நிருவாகத்தினர் இருந்தனர். இதற்குக் காரணம் ஜூன் மாதத்திற்கு முன்னதாக மூன்று மாதங்களுக்குரிய சம்பளம், (மார்ச், ஏப்ரல், மே 1977) பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி, காஞ்சிபுரத்திலும், மற்றும் இரண்டு மாதங்களுக்குரிய சம்பளம் (ஏப்ரல், மே 1977) செல்லம்மாள் பெண்கள் கல்லூரி, சென்னை மற்றும் காஞ்சீபுரம் பச்சையப்பன் பெண்கள் கல்லூரியிலும் நிலுவை இருந்ததே ஆகும்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் 11—7—1977 அன்று பச்சையப்பன் கல்லூரி அறக்கட்டளை செயலருடன் தொடர்பு கொண்டதில், ஜூன் மாதம் சம்பளமும், பிப்ரவரி மாதம் சம்பளமும் மேற் குறிப்பிட்டுள்ள மூன்று கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டு



1977 ஜூலை 13] [திரு. செ. அரங்கநாயகம்]

விட்டது என்று கூறினர். மீதமுள்ள மாதங்களுக்கான ஊதிய நிலுவையை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யக் கோரி நிர்வாகத்தினர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினையில் மேலும் சம்பளம் தரப்படாவிட்டால், அதிலே பணிபுரிகின்ற ஆசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் அரிசி வாங்க, புளி வாங்க, உப்பு வாங்க, துணி வாங்க என்ன செய்வார்கள் என்பதை மனதிலே எண்ணி, இந்த 1 ஆம் தேதியிலிருந்து இதுவரையிலும் தந்து வந்த 80 சதவிகித கிரான்டை 100 சதவிகிதமாக உயர்த்தி, அதை அவர்களுக்கு நேரடியாகவே வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் இனி கல்லூரி மூடப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படாது என்பதைக் கூறி, இதற்காக இந்தச் சபை ஒத்தி வைக்கப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பின், இப்பிரச்சினை குறித்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால், இந்த நேரத்திலே இந்தச் சபையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 3. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சபைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 6(1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பானல் ஆப் சேர்மன்) நான் நியமிக்கின்றேன்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்,
2. திரு. ஆர். முத்தையா,
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா,
4. திரு. கே. கே. முத்தையா,

அடுத்து, ஆளுநர் அவர்களின் உரைமீது விவாதம் தொடரலாம்.

**திரு. க. சுப்பு:** பாயிண்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக தாங்கள் அறையிலே சொன்னீர்களே, அது எடுத்துக் கொள்ளப்பட வில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறையிலேயே வந்து கேளுங்கள்; பதில் சொல்கிறேன்.

**திரு. க. சுப்பு:** விரைவாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். மறந்து விட்டீர்களோ என்பதற்காகத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படித்தான் மறந்து விட்டேன் என்று நினைத்துக்கொண்டு உட்காருங்களேன். ஏற்கனவே தங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன், இந்தச் சபையின் மரபைக் காக்க வேண்டுமென்று.

**திரு. க. சுப்பு:** நீங்கள்தானே, விரைவாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். அதற்காகத்தான் சொன்னேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுபற்றிக் கருத்துக் கூறட்டும்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நானே விளக்கம் தரவேண்டுமென்று தாங்கள் என்னை அனுமதித்த காரணத்தால் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலுள்ள சிக்கலைப் பற்றி இங்கே நானும் முதல்வர் அவர்களும் பேசினோம். அதற்குப் பிறகு எந்த அளவிற்கு அதைப் பற்றிப் பேசுவது என்று நண்பர் சுப்பு அவர்களிடத்தில் எடுத்து விளக்கினேன். அவையினுடைய செயலாளர் அவர்களும் உடன் இருந்தார்கள். அந்த அளவுக்குப் பேசி முடிக்கிறேன் என்று சுப்பு அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். அதனால்தான் சுப்பு மாத்திரமல்ல, நான் கூட அந்த ஒத்திவைப்புத்





தீர்மானம் வரும் என்று எதிர்பார்த்தேன். அது வராது என்று முன்கூட்டியே அறிவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். வரும் என்று எதிர்பார்த்து, எந்த அளவுக்குப் பேசுவது என்று முடிவு எடுத்தபிறகு வராது என்பது ஏமாற்றத்தை அளிப்பதாக இருப்பதால் உள்ளபடியே வருந்தத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மன்றம் இன்னும் மூன்று நாட்கள் நடைபெறப் போகிறது. முதலமைச்சர் அவர்கள் முறையாகப் பதில் தர வாய்ப்பு இருக்கும்.

உறுப்பினர் சுப்பு அவர்கள் அவருடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறலாம்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒன்றும் அவசரம் இல்லை. நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளுகிறீர்கள். இன்றைக்கு இந்தத் தீர்மானம் வருகிறது என்று அறையில் கேட்டபோது சொன்னீர்கள். இன்றைக்கு சந்தர்ப்பம் இல்லையென்றால் இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. முதலமைச்சர் அவர்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கருதினால் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

**(இ) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. எஸ். லட்சுமணனையும் வேறு சிலரையும் கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்படுத்தியதும் அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் அவருடைய ஒத்தி வைப்புத் தீர்மானம் எப்படி அவசர முக்கியத்துவமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் படிக்கிறேன்—

the serious situation arising out of the tension and scare created by the Police by falsely implicating a former member of the Parliament, Thiru T. S. Lakshmanan, and the others in a serious criminal charge." * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்த தீர்மானத்தில் உள்ள சிலவற்றை எக்ஸ்பஞ்ச் பண்ணியிருக்கிறேன். நீங்களே கூட 'எக்ஸ்ட்ரா' பண்ணியிருக்கிறீர்கள். அதையும் சேர்த்து தாங்கள் இங்கே படித்திருக்கிறீர்கள்.

* * *

என்பதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

**திரு. க. சுப்பு:** அதைத்தான் சொல்ல வந்தேன். * * * * பிரச்சினைக்கு வருகிறேன். பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. லட்சுமணன் சம்பந்தப்பட்டிருக்கிறார். சட்ட மன்றத் தேர்தலில் அகில இந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த திரு. கிருஷ்ணனிடம் அவர் தோற்றுப் போனார். ஏற்கனவே அந்த வேதனையில் அவர் இருக்கிறார். அவரைப் போய் அந்தக் கட்சியில் இருக்கக் கூடியவர்—உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது; முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்—போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்த புகாரின் பேரில் விசாரிக்க அழைத்து காவலில் வைத்ததாகவும், ஜாமீனில் விடமுடியாத செக்ஷன்படி கேஸ் போடப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது எல்லாம் உண்மையா அல்லவா என்று நாங்கள் சொல்லுவதைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை குறிப்பை மட்டும் வைத்துச் சொல்லாமல் நன்றாக விசாரித்தறிந்து சொல்ல வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர், சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டவர், முக்கியமான ஆள், தற்கொலைக் கேசில் போய் கொலை பண்ணினார் என்று சேர்த்திருப்பது கடுமையான குற்றச்சாட்டாகும். அங்கு ஒரு பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தவறாக, வேண்டுமென்றே, அரசியல் உள்நோக்கோடு வழக்குகளைக் காவல் துறையினர் தொடுக்கின்றனர். நீங்கள் சொல்லித் தொடுக்கிறார்கள் என்று சொல்லவில்லை. சாயபுரம் போலீஸ் ஸ்டேஷனில் என்ன நடந்தது? ஆளும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது



கட்சியைக் குறை சொல்லுகிறேன் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது, காவல் துறையினர் சில நேரங்களில் இப்படிச் செய்வது உண்டு. அதனால் உங்களைப் பற்றிக் கூறவேண்டிய நிலைமை ஏற்படும். இதிலே உங்களைச் சம்பந்தப்படுத்த விரும்பவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** பாயிண்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்கள் நாஞ்சில் வின்சென்டை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசக் கூப்பிட்டார். அவரைப் பேச அழைத்த பிறகு எந்த விதியின்கீழ் திரு. சுப்பு அவர்கள் பேசுகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவர் அனுமதியின் பேரில்தான் பேசுகிறார்.

**திரு. க. சுப்பு:** தவறாக வேண்டுமென்றே அவருடைய பெயரைச் சேர்த்துவிட்டார்கள் என்பதைப் பற்றிப் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்காக ஒரு கூட்டம் போட்டு, பல்லாவரத்தில் ஒரு கண்டனக் கூட்டம் போட்டு அரசியல் உள் நோக்கத்தோடு பொய் வழக்குகள் போடுகிறார்கள் என்பதைக் கண்டித்து 13-ம் தேதியன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டம் போடுவதற்காக 11-ம் தேதியன்றே கடிதம் எழுதிவிட்டோம். கூட்டத்திற்கு அனுமதி கொடுப்பதற்குப் பதிலாக மோதலை இரண்டு கட்சிகளுக்கும் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து கூட்டம் போட அனுமதி கேட்டது போன்ற நிகழ்ச்சிகளைப் பற்றி இப்போது கூறிக் கொண்டிருக்க வேண்டாம். அதெல்லாம் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு உட்பட்டதல்ல. சிக்கலை வளர்க்காதீர்கள். சுருக்கமாக நிலையை எடுத்துச் சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும்.

**திரு. க. சுப்பு:** பதட்ட நிலைமை இருக்கிறது என்பதற்காக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரையும் கூப்பிட்டு நீங்களும் அன்று அந்த இடத்தில் கூட்டம் போட அனுமதி கேட்டுக் கடிதம் கொடுங்கள் என்று கேட்டுப் பெற்று, இரண்டு

பெரும் கூட்டம்போட அனுமதி கேட்டிருப்பதால் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூறி கூட்டம்போட அனுமதி கொடுக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள். அனுமதி கிடைக்கா விட்டால் வேறு வழியில் கூட்டத்தை நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்று. . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மேல் மட்டும் பேச வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. க. சுப்பு:** பதட்டமான நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும். இதிலே, காவல்துறை குறிப்புகளின்படி 41-வது விதியின்கீழ் உள்ள ஒரு அறிக்கையாகக் கொடுத்து விடாமல் 42-வது விதியின்கீழ் மாண்புமிகு முதல்வர் விளக்கங்களைக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருமுடிவாக்கம் கிராமத்தில் 500 அரிசனக் குடும்பங்கள் உள்ளன. இக்கிராமத்தில் வசிக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. சு. லட்சுமணனும் (தி.மு.க.), சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணனும் (அகில இந்திய அண்ணா தி.மு.க.) நடைபெற்ற தமிழக சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்டனர். இதில் திரு. கிருஷ்ணன் வெற்றி பெற்றார். இவ்விருவர்களைச் சார்ந்த ஆதரவாளர்களுக்குள் நீண்ட நாட்களாக அரசியல் விரோதம் இருந்து வருகிறது.

9—7—1977 ஆம் நாளன்று பகல் 12-40 மணிக்கு திரு. லட்சுமணனின் சகோதரி திருமதி முனியம்மாளுக்கும் திரு. கிருஷ்ணன், எம்.எல்.ஏ.-வின் தூரத்து உறவினர் திரு. தனசேகரனுக்கும்



சட்ட மன்ற உறுப்பினரின் வீட்டிற்கு அருகாமையில் வாய்ச் சண்டை மூண்டது. இதுபற்றி திருமதி முனியம்மாள் தனது சகோதரர் திரு. லட்சுமணனிடம் முறையிட்டார். இதுபற்றி விசாரிக்கையில் திரு. லட்சுமணன் திரு. கிருஷ்ணனுக்கு தூரத்து உறவினரான செல்வி லலிதா என்கின்ற பணியாளை உதைத்திருக்கிறார். இதன் காரணமாக கிராமத்தில் பதட்ட நிலை ஏற்பட்டது. திருவாளர்கள் லட்சுமணன் மற்றும் கிருஷ்ணனுடைய ஆதரவாளர்களுக்குள் மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினரும் கற்களை வீசிக் கொண்டனர். இதன் காரணமாக அகில இந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த 8 நபர்களுக்கும், தி.மு.க.-வைச் சேர்ந்த 5 நபர்களுக்கும், காங்கிரசைச் சேர்ந்த இருவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. செய்தி கிடைத்தவுடன், பல்லாவரம் துணைக் காவல் ஆய்வாளர் கிராமத்திற்குக் காவல் படையுடன் விரைந்து சென்று அமைதியை நிலை நாட்டினர். பகல் 3.00 மணிக்கு பரங்கிமலை துணைக் காவல் கண்காணிப்பாளர் கிராமத்திற்குச் சென்று மீண்டும் கலவரம் ஏற்படா வண்ணம் தடுப்பதற்குத் தேவையான காவல் ஏற்பாடுகளைச் செய்தார். காயமடைந்த 15 நபர்களில் அகில இந்திய அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த சந்திரன் சிகிச்சைக்காக தாம்பரம் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். மற்றவர்கள் புற நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றனர்.

தி.மு.க.வைச் சேர்ந்த திரு. மணவாளன் என்பவர் காங்கிரசைச் சேர்ந்த திரு. கோபால் என்பவர் தன்னைக் கத்தியால் குத்தியதாகவும் மற்றும் தையூரைச் சேர்ந்த ஒருவர் கல்லால் அடித்ததாகவும் கொடுத்த புகாரின் பேரில் இ.பி.கோ. 324 மற்றும் 336 ஆகிய பிரிவுகளின்கீழ் குன்றத்தூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. திரு. கோபால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். குற்றஞ்சாட்டப்பட்ட மற்றொருவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

திரு. சந்திரன் மற்றும் 5 பேர்கள் மீது (அகில இந்திய அண்ணா தி.மு.க.) திரு. லட்சுமணன் கொடுத்த புகாரின் மீது இ.பி.கோ. 147, 323 ஆகிய பிரிவுகளின்கீழ் குன்றத்தூர் காவல் நிலையத்தில் மற்றொரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. திரு. லட்சுமணன் தன்னை திரு. சீனுவாசன் என்பவர் இடது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 13

(முற்பகல் 9-50)

கன்னத்தில் முட்டியால் தாக்கினார் என்றும் திரு. துளசி என்பவர் வயிற்றில் உதைத்ததாகவும் தனது புகாரில் கூறியுள்ளார். மருத்துவ உதவியை மறுத்ததின் காரணமாக திரு. லட்சுமணன் மருத்துவ மனைக்கு அனுப்பப்படவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக திரு. மணி (அ.இ.அ.தி.மு.க.) கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள திரு. சந்திரனும் (அ.இ.அ.தி.மு.க.) கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட மற்ற நால்வர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

திரு. மணவாளன் (தி.மு.க.) கொடுத்த புகாரில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள திரு. கோபால் (காங்கிரஸ்) கொடுத்தப் புகாரின் மீது இ.பி.கோ. 147, 148, 336, 323 மற்றும் 307 பிரிவுகளின்கீழ் திரு. லட்சுமணன் மற்றும் சில நபர்களின் மீது (தி.மு.க.) வழக்கு ஒன்று குன்றத்தூர் காவல் நிலயத்தில் பதிவு செய்யப்பட்டது. இப்புகாரில் திரு. கோபால் தன்னையும் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த ஒன்பது பேர்களையும் திரு. லட்சுமணனும், அவரது ஆட்களும் பட்டாக்கத்தி, சைக்கிள் செயின் போன்ற பயங்கர ஆயுதங்களால் தாக்கியதாக தனது புகாரில் கூறியுள்ளார். இவ்வழக்கு சம்பந்தமாக திரு. லட்சுமணன் மற்றும் ஐந்து பேர்கள் (தி.மு.க.) கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் 11 பேர்கள் கைது செய்யப் படவில்லை. ஆக இந்தக் கலவரத்தையொட்டி மொத்தம் மூன்று வழக்குகள் மேற்சொன்னபடி குன்றத்தூர் போலீஸ் நிலயத்தில் பதிவு செய்யப்பட்டன.

திரு. கிருஷ்ணன், எம்.எல்.ஏ.வுக்கு தூரத்து உறவினரான திரு. வாசு என்பவர், 9—7—1977 அன்று நடைபெற்ற கலவரத்தின் போது தன்னுடைய பதினாறு வயது நிரம்பிய திருமணமாகாத மகள் சத்தியவாணியை வீட்டிலும், கிராமத்திலும் காணப்பட வில்லை என்றும், அன்று நள்ளிரவில், தான் வீடு திரும்பியபோது வீட்டிற்கு முன் அவள் பிணமாகக் கிடந்தாள் என்றும், தன் மகளை திரு. லட்சுமணன் பகைமை காரணமாகக் கற்பழித்து



1977 ஜூலை 13] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கொலை செய்ததாகச் சந்தேகப்படுவதாகவும் புகார் ஒன்றை 10—7—1977 அன்று காலை 8.45 மணிக்குக் கொடுத்ததின்பேரில் "சந்தேக மரண" வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பல்லாவரம் துணைக் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை நடத்தி பிரேதத்தைப் பரிசோதனைக்காக சென்னை அரசு பொது மருத்துவ மனைக்கு, இறந்ததற்கான உண்மையான காரணத்தை அறியும் பொருட்டு அனுப்பினர். பிரேத பரிசோதனையின் முடிவு இன்னும் தெரியவில்லை.

1977 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று திருமுடி வாக்கத்தில் நடந்த சம்பவங்களின்போது திரு. லட்சுமணன் சம்பவங்கள் நடந்த இடங்களில் இருந்து கொண்டு அவர்மீது சாற்றப்பட்டுள்ள குற்றங்களைப் புரிந்ததற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று நடந்த சம்பவங்களின்மீது பதிவு செய்யப்பட்ட நான்கு வழக்குகளும் புலனாய்வில் உள்ளன. காவல் துறையினர் தங்களது கடமையினைச் செவ்வனே ஆற்றியுள்ளனர். கட்சிபேதமின்றி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கைது செய்துள்ளனர். ஆகவே அரசியல் மற்றும் தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக, ஆளுங் கட்சியினரின் தூண்டுதலின் பேரில் திரு. லட்சுமணன் கைது செய்யப்படவில்லை. திருமுடிவாக்கம் கிராமத்திலோ அல்லது குன்றத்தூர், பல்லாவரம் பகுதிகளிலோ எந்தவிதமான பதட்ட நிலைமையும் இல்லை. எனவே இது அன்றாட சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்னைதான். இது ஒன்றும் ஒத்திவைப்புப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளதுபோல பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியல்ல. ஆகவே, இதனை விவாதிப்பதற்காக இப் பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறி இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திரு. நாஞ்சில் வின்சென்ட்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நான் 8-ம் தேதி இந்த அவையில் விவாதிக்க வேண்டுமென்பதற்காக கேரளாவில் தமிழர்களின் வீடுகள் சூறையாடப்படுகின்றன, அதைப் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதைக் கொடுத்து 4, 5 நாட்கள் ஆகின்றன, இன்னும் எடுத்துக்கொள்ளப் படவில்லை, எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் அந்த அரசிடமிருந்து தகவல் வரவில்லை, வந்தவுடன் அதுபற்றி பார்க்கலாம்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** எவ்வளவு நாட்களுக்குள் வரும் என்று எதிர்பார்க்கலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திரு. நாஞ்சில் வின்சென்ட் பேசுவார்.

## (4) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையை வரவேற்று அவ்வுரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பாராட்டுவதற்கு, பாராட்டுகின்ற மனவளத்தைப் பெற்றிருக்கின்ற நான், பாராட்டும் முகமாக நின்றுகொண்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரை முழுமையும், நாங்கள் வாக்காளர்களைச் சந்தித்த நேரத்திலே வாக்காளர்கள் எந்த எந்தக் குறைகளை எடுத்து வைத்தார்களோ அந்தக் குறைகளை தீர்க்கும் வண்ணம் நாங்கள் கொடுத்த உறுதிமொழிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்ற காரணத்தால் ஆளுநர் உரையை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஆளுநர் உரையின்மீது இங்கே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் ஆளுநர் உரையிலே ஏன் அவசர கால நிலையைப்பற்றிக் குறிப்பிடவில்லை, அந்தக் கொடுமைகளைப் பற்றியெல்லாம் ஏன் சொல்லவில்லை, இது மிகவும் வேதனையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட கொடுமையான, கொடூரமான செயல்களை அவசரகாலத்தில் நடைபெற்றதைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமானால் இதற்கு முன்னால் ஜனநாயகம் மலர்ந்திருக்கிறது என்று சொல்லி அப்போது ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தார்களே, அந்த நேரத்திலே நடந்த கொடுமைகளையும் கொடூரங்களையும் நாங்கள் சொல்ல வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் உதைக்கப்பட்ட நேரத்திலே உதயகுமார் என்ற மாணவன் உரிமை கேட்கிறான்; அந்த மாணவன், உரிமை கேட்ட மாணவன் தாமிரபரணி ஆற்றிலே பிணமாக மிதந்தான்.

அதேபோல் உரிமை கேட்ட சிதம்பரம் பாலசுந்தரம் கொடுவாளால் அறுக்கப்பட்டு அவனுடைய உடம்பிலுள்ள ரத்தம் ஆறாக ஓடி ரத்தக் காட்சி ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, உரிமை கேட்ட கிளைவ் ஹாஸ்டல் மாணவர்கள் அடிக்கப்பட்டு அவர்கள் உடல் பாளம்பாளமாக ஆக்கப்பட்டு உடலிலே இருந்து ரத்தம் கசிந்து ஓடியது, அந்த மாணவர்களின் ரத்தத்தைப் பார்த்து ஆட்டின் ரத்தம் என்று குறிப்பிடக்கூடிய அளவிற்கு மாணவர்கள் எதையும் தாங்கும் இதயத்தோடு இருந்தும் அவர்களுக்கு சொல்லொணாக் கொடுமைகள் இழைக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல, பூலாவரி சுகுமாரன் துப்பாக்கியால் சுடப்பட்டார், இறந்தார்; அவர் இறந்ததற்குப் பிறகு கூட கொலை வெறியில் ரத்த தாகத்தைத் தீர்த்துக்கொள்ள எண்ணியவர்கள் அவனுடைய கண்களைப் பிடுங்கி எறியக்கூடிய நிலைமை ஏற்படக் கூடிய அளவிற்கு அவர்களுடைய தாகம் இருந்திருக்கிறது.

**திரு. க. சுப்பு :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நேற்றே கூட நான் ஒரு உறுப்பினர் பேசும்போது எழுப்பலாம் என்று இருந்தேன்,

இன்றைக்கு எழுப்புகிறேன். வழக்கு மன்றத்திலே, நீதி மன்றத்திலே விசாரணையில் இருந்து வருகின்ற ஒரு செய்தியைப் பற்றி—அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—அதைப்பற்றி இங்கே பேசலாமா?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: It is the Hon. Member's maiden speech. He is a undoing labour leader. He should not be interrupted in his speech. That is the convention.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை நானும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்கள் வழக்கில் நுழையவில்லை, நடந்த நிகழ்ச்சிகளைத்தான் சொல்கிறார்.

திரு. மி. வின்சென்ட்: நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்வதற்கு உறுப்பினர் என்ற முறையிலே நான் அங்கீகாரம் பெற்றிருக்கிறேன்.

அவசரகால நிலையைப்பற்றி ஏன் இதில் எடுத்துச் சொல்லவில்லை என்று கேட்கிற நேரத்திலே, ஜனநாயகம் உருவெடுக்கிறது என்று பறைசாற்றிக் கொண்டார்கள் அவர்கள் ஆட்சி செய்த நேரத்திலே. கொலைவெறியில் எத்தனை கொடூரங்கள், கொலைகள் நடைபெற்றன என்பதையெல்லாம் சொல்கின்ற நிலைமை ஏற்பட்டு அவையெல்லாம் இங்கே விவாதப் பொருள்களாக வருமானால் என்ன ஆகும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தோளிலே துண்டைப் போட்டுக்கொண்டிருப்பவர்கள் தலையிலே போடக்கூடிய சூழ்நிலை உருவாகாதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆட்சி என்ற ஒன்று அமைந்தால் அது திமிரோடு நடக்கக் கூடாது, ஆட்சியிலே உள்ளவர்கள் மக்களுக்கு நல்ல திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்ற முறையிலே செயல்பட வேண்டுமே தவிர திமிரைக் காட்டுவதற்காக ஆட்சியைப் பயன்படுத்தக்கூடாது என்பதையெல்லாம் ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள், இந்த உரையை நான் பாராட்டுகிறேன். இங்கே இருக்கின்ற கட்சிகள், குறிப்பாக அனைத்துக் கட்சிகளும் 2, 3 ஆகப் பிரிந்து இருக்கின்றன. காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்



திருக்கிறது. சோஷலிஸ்ட் கட்சி இரண்டாகப் பிரிந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிரிந்திருக்கிறது, பார்வர்ட் பிளாக் கட்சி இரண்டாகப் பிரிந்திருக்கிறது. அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்திருக்கிறது. பிறந்த நிலையிலே நன்றாக வளர்ந்தோம். மக்கள் எங்களை ஏற்றுக்கொண்டார்கள், எங்கள் தானைத் தளபதியாக இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களை மக்கள் தங்களுடைய தளபதியாக ஏற்றுக்கொண்டார்கள். மக்கள்

(முற்பகல் 10.00)

தங்களுடைய ஏகோபித்த ஆதரவை எங்களுக்குக் கொடுத்துள்ளார்கள். 25,000-க்கும் மேற்பட்ட பொய் வழக்குகள் எங்கள் மேல் பிறப்பிக்கப்பட்டன. எத்தனைமுறை என்னைப்போன்ற மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள்? எத்தனை முறை நாங்கள் தாக்குதலுக்கு ஆளானோம். இவ்வளவு தாக்குதல்களும் எங்களைப் போன்ற மாணவர்களின்மீது மட்டும்தானா? எங்கெல்லாம் நடைபெற்றன?

பெரியாரின் இறுதி ஊர்வல நிகழ்ச்சி நடக்கிறது. எங்களுடைய தங்கத் தளபதி புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே தாக்குதலுக்கு ஆளாக்கப்படுகிறார். எவ்வளவு மரியாதையோடு நடக்க வேண்டிய நிகழ்ச்சி! அப்படிப்பட்ட இடத்தில் இறுதி மரியாதை செலுத்துவதற்காகச் செல்லக்கூடிய இடத்தில் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் தாக்குதலுக்கு ஆளானது போன்ற பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சுட்டிக்காட்டிய நேரங்களிலே சம்பந்தப்பட்டவர்கள் அன்றைக்கு அதற்காக நடவடிக்கை எடுத்தார்களா? இல்லை. அதிகாரத் திமிர் அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களிடம் எத்தகைய ரூபத்தில் படம் பிடித்து ஆடியது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்றவர்கள் எத்தகைய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறும் வகையில் மக்களின் நலன்களைப் பேணுவதாக அமையும் என்று ஆளுநர் அவர்களின் உரையில் கூறப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்களைப்பற்றி இன்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மிகவும் ஆழமாகப் பேசுகிறார்கள். மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லும் அளவில் இன்றைக்கு இங்கே பேசுகிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் மாணவர்கள்மேல் அக்கறை

[திரு. மி. வின்சென்ட்] [1977 ஜூலை 13

உள்ளவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன், அன்றையதினம் கேரளத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ராஜன் என்ற மாணவனைக் காணவில்லை. அதற்காக அன்றையதினம் போலீஸ் பொறுப்பிலேயிருந்த கருணாகரன் அவர்கள் முதலமைச்சரான பிறகுகூட அந்தப் பீடத்திலேயிருந்து இறங்குவதற்குத் தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டார்கள். ஆனால் அங்கே எப்படி ராஜனைக் காண வில்லையோ அதைப்போல உதயகுமார் என்ற மாணவனை இங்கே காணவில்லை. ராஜனைக் காணவில்லை என்று அன்றையதினம் எப்படி மாணவர்கள் குரலெழுப்பினார்களோ அதைப்போல உதயகுமாரைக் காணவில்லை என்று நாங்கள் குரலெழுப்பினோம். ராஜனைக் காணவில்லை என்று குரலெழுப்பிய நேரத்தில் கருணாகரன் அவர்கள் தன்னைத் தாழ்த்திக்கொண்டார்கள், தன்னைப் பதவியிலிருந்து இறக்கிக்கொண்டார்கள். ஆனால் உதயகுமாரைக் காணவில்லையே என்று நாங்கள் சொல்லும் நேரத்தில் சம்பந்தப் பட்டவர்கள் அதற்கான பதிலைத் தராமல், அதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் தராமலிருப்பது விடுபடக்கூடியதா? நாட்டிலே நேர்மையைக் கடமையாகக் கொண்டு நடக்கவிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நெறிமுறையிலிருந்து தவறாது. உதயகுமார் காணவில்லை, அவரைக் கண்டெடுத்து பெற்றோரிடம் கொடுக்க வேண்டியது கடமை யாதலால் அதைப்பற்றிய நடவடிக்கைகளை இந்த ஆட்சி செய்யும் என்று நான் நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, குடிநீர்ப் பிரச்னையைப் பற்றி எடுத்துக் கொண்டால், ஏழாண்டுக் காலம் ஆட்சி புரிந்து விட்டு, ஏழை எளியவர்களுக்குப் போதுமான குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியாமல் இன்றைக்கு எதையெதையோ பேசுகிறார்கள்.

வீராணம் திட்டம் என்று சொல்லி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் பாராட்டுதற்குரிய திட்டம்தான். ஆனால் குரங்கின் கையில் கிடைத்த ஷேவிங் செட் எப்படிப் பலன் இல்லாமல் போகுமோ அதைப்போல வீராணம் திட்டத்தால் பலனில்லாமற் போனது. வீராணம் திட்டத்தை வைத்து விரயம் ஆக்கிய செயல் என்று இன்று தெருவெங்கும் மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் பத்திரிகைகளைப் புரட்டி நாம் படித்தால் அந்தப் பத்திரிகைகளிலேயெல்லாம் வீராணம்



1977 ஜூலை 13] [திரு. மி. வின்சென்ட்]

திட்டத்தால் எத்தனை கோடிகள் இந்த நாட்டிற்கு இழப்பு, ஒரு குடிமகன்கூட அந்தத் திட்டத்தால் குடிநீர் வசதி பெறவில்லை என்று நாம் அறிகின்ற நேரத்தில் அந்தத் திட்டம் எத்தனை கோடிகளை விழுங்கிய திட்டம், நாம் எவ்வளவு அவதிப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்? குழாய்களை வைத்தார்களே, அவைகள் ஒன்றுக்கொன்று இணைய மறுக்கின்றனவாம்.

இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றையதினம் வீராணம் திட்டத்தில் இருக்கின்ற நேரத்தில் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தைச் செயற்படுத்த விரைந்து நடவடிக்கை எடுப்போம் என்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியது. போற்றுதற்குரியது என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்ல, நாங்கள் எங்கள் ஆட்சிக் காலத்தில் கிராமம் கிராமமாக, ஊர் ஊராக மின் விளக்கு வசதி செய்து தருவோம் என்று சொன்னவர்கள், மின் விளக்குகளைச் சென்னையிலே போட்டு திருப்திப்பட்டுக் கொண்டார்கள். இன்று நாங்கள் வாக்காளர் களைச் சந்திக்கச் சென்றால் எங்கள் தெருவிலே இருளாகக் கிடக்கிறது, இரவு நேரத்திலே வீட்டிற்கு ஒழுங்காக வர முடிய வில்லை என்று சொல்லுகின்ற மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தொகுதியிலும் ஏராளம் ஏராளம். அதுமட்டுமல்ல, மின் விளக்கு வசதிகள் செய்து கொடுக்காமல் இருந்திருக்கலாம், ஆனால் வெறும் கம்பங்களை மட்டும் நாட்டியிருக்கிறார்கள். இரவு நேரங்களிலே வீட்டிற்கு வருபவர்கள் மின் விளக்கு இல்லாத காரணத்தால் கம்பங்களில் மோதிக் கீழே விழுகிறார்களாம். அந்த நிலையை இன்றைக்குப் போக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும், அனைத்து கிராமங்களுக்கும், ஊர்களுக்கும் மின் விளக்கு வசதி செய்து கொடுப்போம் என்று ஆளுநர் உரை நிகழ்த்தியிருப்பது பாராட்டுதற்குரியது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஒன்றை நான் உன்னிப்பாகவும், குறிப்பாகவும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரித் தண்ணீரைப் புரட்சித் தலைவர்கள் வாங்கி வந்திருக்கிறார்கள். அந்தத் தண்ணீரைப் பெற்று வந்ததற்காகப் பாராட்டிப் போக வேண்டியவர்கள் பாராட்டினார்கள். ஆனால் பாராட்டுவதற்கான பக்குவத்தைக் கூடகளவும் பெறாதவர்கள் இங்கே பேசிய நேரத்தில்

[திரு. மி. வின்சென்ட்] [1977 ஜூலை 13

காவிரி நீர் எஞ்சிக் கிடந்தது என்றும், உபரித் தண்ணீரைத் தாங்களே வெளியே விட வாய்ப்புகளைத் தேடிய நேரத்தில் அந்தத் தண்ணீரை இன்றைக்குத் தமிழகத்திற்கு விடுவதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்றும் கூறுகின்ற அளவிற்கு, இன்றைக்குப் பாராட்டுகின்ற பக்குவத்தை நம்முடைய உறுப்பினர்கள் இழந்திருப்பது என்னைப் போன்ற இளைஞர்களுக்கு வேதனையைத் தருகிறது.

நிறையைக் குறையாகச் சொல்லுகின்ற நிலை உறுப்பினர்களிடமிருந்து போக்கப்பட வேண்டுமென்பதை நான் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். சொல்ல வேண்டியவர்கள் சொல்ல வேண்டிய இடத்தில் எத்தகைய ரீதியில் அணுக வேண்டுமோ அந்த முறையில் அணுகினால் கிடைக்க வேண்டியது கிடைக்கும் என்ற முறையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காவிரி நீர் பெற்றுத் தந்தது அமைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் தெள்ளத் தெளிவாகச் சொல்லி அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்றையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மாநகராட்சித் தேர்தல் ஏன் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள். மாநகராட்சித் தேர்தலை எத்தனை முறை தள்ளி வைத்தார்கள், எத்தனை ஆண்டுக்காலம் கடத்தினார்கள், எத்தனை நேரங்களில் ஆதாரங்கள் தரப்பட்டன என்று கேட்டால் ஒழுங்கான ஆதாரங்கள் தரப்படவில்லை. ஆனால் இன்று ஏன் மாநகராட்சித் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆளுநர் அவர்களின் உரை ஆதாரத்தைத் தந்திருக்கிறது. "குறித்த காலத்தில் நடத்தப்பட வேண்டிய மாநகராட்சி மன்ற, நகராட்சி மன்ற, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் இதுவரை நடத்தப்படாமல் இருந்திருக்கின்றன. மஸ்டர் ரோல் வழக்கு முடிந்தவுடன் சென்னை மாநகராட்சிக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தப்படும்" என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது.

மஸ்டர் ரோல் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள், ஒருவேளை மஸ்டர் ரோல் வழக்கிற்கு முன்னால் மாநகராட்சித் தேர்தலை நடத்தினால் அந்தத் தேர்தலிலே மஸ்டர் ரோல் வழக்கில் சம்பந்தப் பட்டவர்களும் நிற்கக்கூடும். நாளையதினம் மஸ்டர் ரோல்



1977 ஜூலை 13] [திரு. மி. வின்சென்ட்]

வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்ட பிறகு அந்த வழக்கில் சம்பந்தப் பட்டவர்களின் தேர்தல் செல்லுபடி ஆகாது என்ற தீர்ப்பு ஒருவேளை வரக்கூடும். அப்படி வரும் நேரத்தில் திரும்பவும் அந்த இடத்தில் நாம் தேர்தலை வைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அப்படிப்பட்ட நிலைமை உருவானால் பொருளாதார சீர்குலைவு உருவாகும். அத்தகைய அடிப்படையில் மாநகராட்சித் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே உறுப்பினர்களுக்குச் சொல்லி, ஆளுநர் அவர்களின் அனைத்து உரையும் பாராட்டுதற்குரியது, போற்றுதற்குரியது என்று சொல்வதற்குத் திறந்த உள்ளம் வேண்டும், அந்தத் திறந்த உள்ளத்தோடு நான் பாராட்டி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பெரியவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள்.

*** புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றம் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது தன்னுடைய விவாதத்தைத் தொடங்கி இருக்கிறது.

இந்த மன்றம் ஆறாவது சட்டமன்றமாகும். ஆறாவது சட்ட மன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை இரண்டு அவைகளும் கூடிய முதல் கூட்டத்திலே அளிக்கப்பட்ட உரையாகும். தமிழகத்தில் ஜனநாயகம் கொலை செய்யப்படாமல் அரசியல் சாசன முறைப்படி உரிய காலத்திலே தேர்தல் நடைபெற்றிருக்குமேயானால், ஆளுநர் அவர்களுடைய உரை இரண்டாவது உரையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டினுடைய நிலையில் ஒரு ஆண்டு ஆளுநர் அவர்களின் உரை இழப்பு ஏற்பட்டு இப்பொழுது நடைபெற்றிருப்பது வருந்தத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

(முற்பகல் 10-10)

ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் 17 மாத குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, மக்களாட்சி மலர்ந்திருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். மக்களாட்சி மலர மகிழ்ச்சி தெரிவித்திருக்கிற ஆளுநர் அவர்கள் 17 மாத கால குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றதற்குக் கண்டனம் தெரிவித்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் தெரிவிக்கவில்லை. தமிழகத்தில் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 4½ கோடி தமிழ் மக்க

ளால், 2½ கோடி வாக்காளப்பெருமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு சட்ட மன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. 234 சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அவையில் 170 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட வலுவுள்ள ஒரு அரசு அகற்றப்பட்டு விட்டது. அகற்றப்பட்டது தமிழகத்தினுடைய அரசு. அகற்றி யவர்கள் டெல்லியிலே இருக்கின்றவர்கள். இருக்கின்றவர்கள் என்று பன்மையிலே சொல்வது கூட சரியல்ல. * * அகற்றப் பட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசுதானே, நமக்கு என்ன கவலை, அதிலே நாம் மகிழ்ச்சி கொள்வோம் என்று யாரும் எண்ணத் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 17 மாத காலம் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றதற்கு, அரசைக் கவிழ்த்த தற்கு, சட்ட மன்றத்தைக் கலைப்பதற்கு ஆளுநர் உரையிலே வருத்தம் தெரிவிக்கப்படவில்லை, கண்டனம் தெரிவிக்கபடவில்லை என்று அவர்கள் தன்னுடைய வருத்தத்தை இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம். அவர்கள் அன்றைக்கு இந்த அவைக்குத் தலைவராக இருந்தார்கள். அவர்கள் கருதுகிற ஜனநாயக விரோதச் செயல் நடைபெற்றபோது எந்த முறையிலே கண்டனம் தெரிவித்து தன்னுடைய பதவியை உதறி விட்டு வந்தார்கள் என்பதை இந்த மன்றம் உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறது.

**புலவர் கா. கோவிந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் அந்தப் பதவியை கண்டதும் தெரிவித்து உதறித் தள்ளிவிட்டு போயிருக்க வேண்டும், அப்படித் தள்ளாதது கண்டனத்திற்குரியதல்லவா? என்ற வாதத்தை எழுப்பியிருக்கிறார்கள். இந்தப் பதவி அரசியல் சாசன முறைப்படி ஏற்பட்டது. ஆட்சியைக் கவிழ்த் தவர்கள் அரசியல் சாசன முறைக்கு மாறாகக் கவிழ்த்திருந்தாலும் அரசியல் சாசனத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதற்காகத் தான் அந்தப் பதவியிலே இருந்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. [(முற்பகல் 10-10)—10-20-ல் சில பகுதிகள்.]





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட ஒரு உரையை ஆளுநர் அவர்கள் நிகழ்த்தியிருக்கிற பொழுது அரசியல் சாசனத் திற்கு உட்பட்ட நடவடிக்கை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக் கொள்ளுகிற ஒரு நடவடிக்கையை எப்படி கண்டிக்க இயலும் என்பதை இந்த மன்றம் தெரிந்து கொள்ள விரும்பு கிறது.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் சபாநாயகர் பதவியைக் கூட உதறிவிட லாமா என்று கூட யோசிக்கப்பட்டது. ஆனால் அரசியல் சாசனத்திலே ஒரு அவை கலைக்கப்பட்டாலும் சபாநாயகருடைய பதவி நீடிக்கலாம் என்ற நிலை இருக்கிற காரணத்தால் அது தேவை யில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. அதுமாத்திரம் அல்ல. இந்தக் கோட்டையில் முழுவதும் டெல்லி வட்டாரமே குடி புகுந் திருந்த நேரத்தில் நம்மவர் ஒருவராவது அங்கு இருக்கவேண்டு மென்று அந்த முறை அப்போது கடைப்பிடிக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இந்த கோட்டையில் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் டெல்லி யிலிருந்து குடி புகுந்தவர்கள் அல்ல. இந்தத் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் டெல்லி வட் டாரம் என்று குறிப்பிட்டது, டெல்லி வட்டாரத்தினுடைய ஆதிக் கத்தை.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது, அவர்கள் ஏற்கனவே சபாநாயகராக இருந்த காரணத்தினால் அவர் இந்தக் கேள்வியை எழுப்புகிறாரே என்ற அச்சமே தவிர, அந்தக் கேள்வியை மற்றவர்கள் எழுப்பி இருந் தால் நாம் சந்தேகப்பட்டிருக்க முடியாது.

**திரு. மு. கருணாநிதி:** பேசியவர் பெயர் சமரசம். . சமரசமாக ஒரு கருத்தைச் சொன்னார். நன்றி.

**புலவர் கா. கோவிந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட உரை என்று ஏற்றுக்கொண்டு தான் அதிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்து, சொல்லாமல் விடப்பட்டிருக்கின்ற கருத்து என்று நான் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். 4½ கோடி தமிழ் மக்களாலே 2½ கோடி வாக்காளப் பெருமக்களாலே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை, வலுவான ஒரு அரசைக் கலைத்திருக்கிறார்கள். * கலைக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசுதானே, நமக்கு என்ன, என்று எண்ணியிருப்பதோ . . . .

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, * *

**புலவர் கா. கோவிந்தன்:** அவர்களே தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தெரியவில்லை என்று சொன்னால் நான் சொல்லுகிறேன்.

இந்த நிலை—கலைக்கப்பட்டது தமிழ்நாடு சட்டமன்றம், தமிழக அரசு. கலைத்தவர்கள் யார்?—ஏற்படலாமா? இதற்கு இடம் தரலாமா? என்பதை. . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் நீண்ட காலம் இருந்து பழக்கப்பட்டவரும், சபாநாயகராக பொறுப்போடு பணியாற்றியவரும், இன்றைக்கு எதிர்க்கட்சியிலே உட்கார்ந்து கருத்துக்களை வழங்கிக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், * என்று குறிப்பிடுவது எந்த வகையில் ஜனநாயகத்திற்கு ஏற்புடைத்தான கருத்து என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவர் அவர்களே, எடுக்கப்பட்ட முடிவு மந்திரி சபையால். மந்திரி சபை என்பது 'கலெக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிடி' என்பது புலவருக்குப் புரியாதது அல்ல. அமைச்சரவை கூடி எடுத்த முடிவு நிறைவேற்றப்பட்டதே தவிர, * * அதுமட்டுமல்ல, இந்த அமைச்சரவையைக் கலைத்தது ஜனாதிபதி அவர்கள். கலைப்பதற்கான ஆதாரங்களை அடுக்கடுக்காக எடுத்து வைத்தார்கள். அந்த ஆதாரங்கள் டெல்லியிலே இருக்கிற அமைச்சரவை அவருக்கு

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-10—10-20-ல் சில பகுதிகள்)



வழங்கிற்று. அந்த அடிப்படையில் சட்ட ரீதியாக அவர் இயங்கினாரே தவிர சட்டத்திற்கு மாறுபட்ட முறையிலே இயங்கினார் என்றும், * அந்தக் காரியத்தை செய்தார் என்றும் திருப்பித் திருப்பி இங்கே கூறிக்கொண்டிருப்பது புலவர் கோவிந்தன் அவர்கள் வகித்த சபாநாயகர் பதவிக்கு எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்பதை அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் * என்று கூறுகின்றார். எந்த உத்தரவையும் ஜனாதிபதிதான் போடுவது வழக்கம். ஜனாதிபதி அவர்களைத் தான் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஜனாதிபதி அவர்களைப் பற்றியோ கவர்னரைப் பற்றியோ இழிவாகச் சபையில் விவாதிக்கக் கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. அரசியல் சட்டம் கூறியிருக்கிறது. ஆகவே, அவற்றை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படியும் திரும்பவும் அம்மாதிரியாக உறுப்பினரவர்கள் பேசாதிருக்கும்படியும் தாங்கள் உறுப்பினரவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. மு. அம்பிகாபதி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் புலவர் அவர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் பேசுகிற இடம் உங்கள் இடம்தானா?

(உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் தன் இருக்கைக்கு வந்தார்).

**திரு. மு. அம்பிகாபதி:** புலவர் அவர்கள் * என்றும் * குறிப்பிட்டார்கள். அது சரிதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மறைந்த ஜனாதிபதி திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களை இப்படிச் சொல்லுவது சரியல்ல என்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-10—10-20-ல் சில பகுதிகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * அவர் யார் என்ற விளக்கத்தைத் தந்தால் அதை வைத்து நான் தீர்ப்பு சொல்ல முடியும்.

**புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது யாரை என்பது இந்த மன்றத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் தெரியாதவர்களைப் போல் . . . (கூச்சல், குழப்பம்).

**திரு. மு. அரங்கநாதன் :** * * * முன்னாலே ஆளை போனவர்களாக இருந்த காரணத்தால் அதைத் தெரிந்து கொண்டும் தெரியாதவர்கள் போல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே ஒழுங்குப் பிரச்சினை என்ன இருக்கிறது? உங்களுடைய ஆத்திரத்தைக் கொட்டிக் கொள்ள இது உதவுமே தவிர வேறு என்ன?

**புலவர் கா. கோவிந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தரவு குடியரசுத் தலைவர் பெயரால் வருகிறது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் குடியரசுத் தலைவர் அமைச்சருடைய ஆலோசனையை ஏற்று அதைச் செய்கிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** அமைச்சரா? அமைச்சர்களா?

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர்கள். அமைச்சரவையிலே எடுக்கப்பட்ட முடிவு அது என்பதை நான் இந்த மன்றத்திற்கு தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியப் பிரதமரோடு கடைசி காலம் வரையிலே இருந்து விட்டு வெளியேறிய மதிப்பிற்குரிய மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர்கள், இந்த நிகழ்ச்சிகள் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டனவே தவிர, எங்களைக் கேட்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் * * என்று சொன்னேனே தவிர குடியரசுத் தலைவரையோ, மற்றவர்களையோ இழுத்து ஆதாரம் இல்லாமல் பேசுகிறேன் என்று . . . .

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-10—10-20-ல் சில பகுதிகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்கு விளக்கம் தேவை. ஜகஜீவன்ராம் சொன்னதுபற்றிக் குறிப்பிட்டீர்கள். அரசியல் சாசனத்தின்படி * *

* என்ற நியதியை நீங்கள் சுட்டிக் காட்ட முடியுமா? எங்களுக்கு அந்த அம்மையார் சொன்னார், எங்களைக் கலக்கவில்லை என்று ஜகஜீவன்ராம் சொல்வதும், அந்த அம்மையார் அதை மறுப்பதும் விவாதத்திற்குத் தேவையில்லை * *

**புலவர் கா. கோவிந்தன்:** நான் அதைத்தான் சொல்லுகிறேன். மாண்புமிகு 'ஜகஜீவன்ராம் அவர்கள், எடுக்கப்பட்ட முடிவு எங்களைக் கலக்காமல், மந்திரிசபை கூடி ஆலோசனை செய்யாமல்—எடுக்கப்பட்ட முடிவு—எங்களுக்கு அறிவிக்கப்பட்டது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்தத் தேதி வரையிலும் மறுக்கப்படவில்லை.

**திரு. எ. ஆர். மாரிமுத்து :** கனம் உறுப்பினர் அவர்கள் மதிப்பிற்குரிய ஜகஜீவன்ராம் அவர்கள் கூறியதைக் குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர்கள் கட்சியிலே இருக்கிறபோது கூறுவதை, அமைச்சரவையை விட்டு வெளியே வந்த பிறகு கூறியதை—காங்கிரஸ் கட்சி பேரிலே இருக்கிற * * குரோதத்தின் பேரிலே கூறியதை—எப்படி ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியும் என்று நான் கேட்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் ஜனாதிபதி செய்ததாக நான் சொல்லவில்லை. * * என்று சொல்லுகிறார். அதுவே தவறு. இந்தச் சட்டத்தைப் போட்டது ஜனாதிபதி. இந்தச் சட்டம் அவர் பெயரால் வந்தது. அவர் பெயரால் வந்ததை இன்னொருவர் செய்தார் என்று சொல்வது அவ்வளவு நல்லது அல்ல—சட்டமன்றத்திற்கு கூறக்கூடிய கருத்தாக அது அமையாது என்று நான் கருதுகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-20—10-30-ல் சில பகுதிகள்.)

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் கூறிய கருத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆளும் கட்சியை விட்டு வெளியேறிய பிறகு, வெளியேறியவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை எல்லாம் அப்படியே நேர்மையானதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் புலவர் அவர்கள் * என்று அவரும் திருத்திப் பேச வேண்டுமென நானும் அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, நான் சொல்லிய கருத்தினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ தனக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு சொல்லியிருக்கிறார்கள். ஆளும் கட்சியை விட்டு வெளியேறி வந்தவர்கள் சொல்வது எல்லாம் தவறு என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் பேரிலே * * இருந்த குரோதத்தின் காரணமாக சொல்லியிருக்கிறார்களே தவிர, உள்ளே இருந்தபோது ஏன் சொல்லவில்லை?

**திரு. மு. கருணாநிதி:** திரு. மாரிமுத்து அவர்கள் என்னுடைய வாதத்திற்கு மீண்டும் வலிவேற்றுகிறார்கள். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், * * என்று பேசிய அந்தப் பேச்சினையும் இதையொட்டிய மற்ற பகுதிகளையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்றம் கலைக்கப்பட்டதற்கான உத்தரவு குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டது என்பதை யாரும் மறந்திட முடியாது. அது சட்டப்படி செய்யப்பட்டது என்றாலும் நடைமுறையிலே என்ன நடந்தது என்பதை இந்த மன்றத்திலே இருக்கிறவர்கள் மறுத்தாலும் நாட்டிலே இருக்கிறவர்கள் மறக்க மாட்டார்கள். ஆகவே, யார் நடத்தினாலும், டெல்லியிலே இருக்கிற

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





பிரதமர் நடத்தினாலும் அவருடைய அமைச்சரவை நடத்தினாலும் அந்த அமைச்சர்களுடைய ஆலோசனைகளை ஏற்று குடியரசுத் தலைவர் பணியாற்றினாலும் கலைத்தது டெல்லி அரசு. கலைக்கப் பட்டது, முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது அநீதி என்பதற்கான காரணங்களை புலவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க. ஆளுகையின் கீழ் இருந்த மதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டதே, அது எந்த நியதியின் அடிப்படையில் நடந்திருக்கிறது என்று கேட்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** அதுபற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கை வரும்போது இங்கே உறுப்பினர்கள் விரிவாகப் பேசுவார்கள்.

கலைக்கப்பட்டது தமிழக அரசு. எனக்கு முன்னாலே வாதாடிய ஆளும் கட்சி உறுப்பினர்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் நான் கேட்கிறேன், கலைஞருடைய தலைமையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுதானே கலைக்கப்பட்டது என்று எண்ண வேண்டாம். கலைப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. கலைக்கின்ற அதிகாரம் வடக்கே இருக்கிற டெல்லியிலே இருக்கிறது. அந்த அதிகாரம் இருக்கலாமா? 4½ கோடி தமிழ் மக்களிலே 2½ கோடி மக்கள் வாக்களித்து முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை, ஒரு அமைச்சரவையைக் கலைப்பதற்கு இடம் கொடுக்கலாமா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்கிறேன். இந்த நிலைமை இப்போது பொறுப்பேற்றிருக்கின்ற அகில இந்திய அ.தி.மு.க. அரசுக்கு நேராது என்பதற்கு என்ன உத்தரவாதம். கலைஞர் அவர்களுக்கும் பாரத பிரதமர் இந்திரா காந்தி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒதுக்கியிருப்பது 36 நிமிடம். காலையில் 10-10க்கு ஆரம்பித்தீர்கள். இடையிலே இன்டரப்ஷன் இருந்திருக்கலாம்.

சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள். அல்லது உங்கள் கட்சிக்கு ஒதுக்கியிருக்கிற நேரத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்.

புலவர் கா. கோவிந்தன்: இந்தப் பேரவையிலே அந்த இடத்திலே உட்கார்ந்து கொண்டு நேரத்தை ஒதுக்குகின்ற பொறுப்பை ஏற்றவன் என்ற முறையிலே, ஒரு கருத்தைச் சொல்லு கிறேன். கட்சிகளுக்கு என்று நேரம் ஒதுக்கியிருந்தாலும், சில கருத்துக்களைச் சொல்லுகின்ற நேரத்திலே அதைப் பொறுத்து நேரத்தை கூட்டிக் கொடுப்பது இந்த அவையிலே நடந்திருக் கிறது என்பதைப் பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

கலைக்கப்பட்ட அரசுக்கு தலைமை வகித்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், கலைத்த அரசுக்குத் தலைமை வகித்த இந்திரா காந்தி அம்மையாருக்கும் எப்படிப்பட்ட உறவு இருந்தது என்பதை நாடு நன்றாக அறியும்.

பெருந்தலைவர் காமராஜ் அவர்களும், மொரார்ஜி போன்றவர் களும், ஒரு அணியிலே இருந்து, அந்த அம்மையாரை தனித்து நிறுத்திப் போர்க்கொடி எழுப்பிய நேரத்தில், அந்த அம்மையார் நிறுத்திய மாண்புமிகு வி.வி. கிரி அவர்கள் வெற்றி பெற, துணை புரிந்தவர்—அந்த அம்மையாருக்குப் பாதுகாப்பு அளித்தவர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்டவர் என்பதாலே, 1971 தேர்தல் முடிந்து முதலமைச்சர் மாநாட்டில் கலந்துகொள்ள சென்ற கலைஞர் அவர்களை அவருடைய குடும்பத்தோடு தன்னு டைய வீட்டுக்கு அழைத்துச்சென்று அவருக்குத் தன்னுடைய கையாலேயே உணவளித்து மகிழ்ந்து, அந்த இனிய காட்சியைப் படமாக எடுத்து தன்னுடைய அறையிலே மாட்டி மகிழ்ந்தவர்

(முற்பகல் 10-30)

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் என்ன? 184 சட்டமன்ற உறுப் பினர்கள், 23 பேர் மக்களவையிலே, மாநிலங்கள் அவையிலே 6 பேர் ஆக, குடியரசுத் தலைவருக்கு வாக்களிப்பது என்று





சொன்னால் அவர்களுடைய மதிப்புப் படி 52,700 புள்ளி மதிப்புள்ள வாக்குகளை அளிக்கக்கூடிய வலிவுள்ள நிலையில் இருந்தார்கள் கலைஞர் அவர்கள். உறவும் நன்றாக இருந்தது. வலிவும் இருந்தது. * *

காரணம் என்ன. இந்தியப் பெரு நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இப்போது இந்திய பிரதமராக இருக்கும் மொரார்ஜி தேசாய் போன்ற பெரும் தலைவர்களை எல்லாம் சிறை பிடித்தது கொடுமை என்று ஒரு குரலெழுப்பிய காரணத்திற்காக இந்தியப் பெருநாட்டில் உள்ள எல்லாத் தலைவர் களும் தம்முடைய சொற்படி கேட்கிற நேரத்தில் தென்னகத்தின் கோடியிலிருந்து தனக்கு எதிராகக் குரலெழுப்புகிறார் என்ற ஒரே காரணத்திற்காக, அந்த ஆட்சி கலைக்கப்பட்டது என்று சொன்னேன். இப்போது இந்தத் தமிழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அரசு கொஞ்சம் கருத்து மாறுபாடு கொண்டிருந் தாலும் கலைப்பதற்கு எவ்வளவு நேரமாகும்?

டாக்டர் கே. சாமசம்: பேரவைத் தலைவரவர்களே, மாடிவீட்டு மகாலட்சுமி மதி நிறைந்தவள் என்று சொன்னால், கோடிவீட்டு கோமளவள்ளி கோணல்புத்திக்காரி என்று எடுத்துக்கொள் வானேன்?

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அவர் எப்படி எழுந்து பேசலாம்?

(பல உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்து குரலெழுப்பினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்தனர்.)

நான் உட்கார்ந்து கொண்டே இருக்கிறேன். நீங்கள் பேசிக் கொண்டே இருங்கள். இந்த மன்றத்தின் நல்ல மரபுகளுக்கு மதிப்பளிக்கிற வகையில் நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். நீங்களாகவே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-30—10-31-ல் சில சொற்றொடர்)

திரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுகிற நேரத்தில் அமைச்சர்கள் திடுமென எழுந்து அவரவர்களுடைய கருத்துக்களைக் கூறுவது இந்த மன்ற மரபாக இருந்து வருகிறது. அமைச்சர் அவர்கள் எழுகின்ற நேரத்தில் மரியாதையோடு அமர்ந்து அமைச்சர்களுக்கு வழி விட்டு அவர்கள் பேசுகிற கருத்தைக் கேட்டுப் பிறகு பதில் சொல்வது இயல்பாக இருக்கிறது. மாண்புமிகு புலவர் கோவிந்தன் பேசுகிற நேரத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற தலைப்பைக் கூட வெளியிடாமல் அடிக்கடி அமைச்சர்கள் போல் எழுந்து பேசுவதால் தான் இந்த அலங்கோலம் ஏற்பட்டது என்பதை தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகளைப் பற்றி நான் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. சீனியர் உறுப்பினராக இங்கே புலவர் கோவிந்தன் பேசிக் கொண்டிருக்கிறபோது தேவைப்பட்ட நேரத்தில் அமைச்சர்கள் இடைமறிப்பதும், மற்றைய நேரங்களில் உங்களது அனுமதியைப் பெற்று உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிப்பதும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்று என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆனால் மெத்தப் பணிவன்போடு உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இதை இதற்கு முன்னும் இந்த அவையில் தெரிவித்திருக்கிறேன் — நினைத்த நேரத்தில், நினைத்தபடி நினைத்த கருத்துக்களை ஒரு முறை இல்லாமல் வரம்பு இல்லாமல் உங்களது அதிகாரத்தையும் மீறிக்கொண்டு பேச முற்படுவது ஒரு ஆரோக்கியமான அரசியலுக்கு அடிகோலாது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டுக் கொண்டு பேச வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தை நான் வரவேற்கிறேன். அது ஒரு கட்சிக்கு மட்டுமில்லாமல் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் சேர்த்தே தான் சொன்னார் என்ற நம்பிக்கையிலே தான் நான் அந்தக் கருத்தை வரவேற்கிறேன் என்பதை தெரிவித்து, இனிமேலாவது இந்த



முறைகளை ஒழுங்காக பயன்படுத்துவதற்கு உறுப்பினர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இருக்க வேண்டிய அளவுக்கு தலைவர்களும் உறுப்பினர்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* * *

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் ஒழுக்க விதிகளைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்ட பிறகு, ஒழுங்கு விதிகளுக்கும், மரபுகளுக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு நடப்பதற்கு முன் மரபுகளை அனுசரிக்க வேண்டியவர்கள் ஏற்கனவே பழக்கப்பட்ட உறுப்பினர்கள் தான். ஆகவே, மரபுகளை அவர்கள் பின்பற்றுவது மாத்திரமல்ல, ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுங்கு விதிகளுக்கும், மரபுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்பதைப் புரிந்து கொள்வது எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, மன்ற மரபுகள் என்ன, ஒழுங்கு விதிகள் என்ன என்பதை தயவுசெய்து தலைவர் அவர்கள் விளக்க வேண்டும். மரபுகளை பின்பற்றும் முறையை ஏற்கனவே மன்ற உறுப்பினர்களாக இருந்து பழக்கப்பட்டவர்கள் காப்பாற்ற வேண்டும், மதிப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இங்கே பழைய அனுபவம் உள்ள உறுப்பினர்களும் இருக்கிறார்கள். புதிதாக வந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நம்முடைய மன்றத்தில் புதிதாக வருகிற உறுப்பினர்களுக்கு இந்த மன்ற நெறிமுறைகள், மரபுகள் காப்பாற்றக்கூடிய வழிமுறைகள் இவைகளைப்பற்றி எல்லாம் விளக்கப் புத்தகங்கள் மற்ற சட்ட மன்றங்களில் சட்ட மன்றம் தொடங்கியவுடன் தருகிறார்கள். இந்த மன்றத்தில் கூட அப்படி கொடுத்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து அப்படிப்பட்ட விளக்கப் புத்தகத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-30—10-50-ல் சில பகுதிகள்)

பேரவைத் தலைவர் எழுந்து நின்றால், மற்றவர்கள் நிற்கக் கூடாது. அது மரபு. அந்த மரபு காப்பாற்றப்பட வேண்டும். அதைத் தெரிந்து வைத்து இருக்கிறார்களா என்று தெரியவில்லை. இதையெல்லாம் கவனத்தில் வைத்துக் கொண்டு, விளக்கப் புத்தகங்களை கொடுப்பதற்கு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கப் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன. இன்னும் ஓரிரு நாட்களில் நிச்சயம் தரப்படும். புலவர் கோவிந்தன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** என்னுடைய பேச்சைத் தொடங்கும் முன், ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதி தர வேண்டும். * * *
இப்படிப்பட்ட கருத்து வழங்கப்பட்டு இருப்பதையும், அது பத்திரிகையில், அவைக் குறிப்பில் ஏறுவதும் முறைதானா என்பதை சிந்தித்துப் பார்த்து, அதற்கு நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்; இல்லையென்றால், அவை முன்னவர் எழுந்து அப்படிப்பட்ட கருத்தை சொன்னதிலிருந்து அது தொடர்பான விவாதங்கள் பகுதி வரையிலும் நீக்குவதற்கு தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவரும், எதிர்க் கட்சித் தலைவரும் அவர்களுக்குள்ளே இருக்கும் வருத்தங்களைப் பரிமாறிக்கொண்டு, நீக்க வேண்டுமென்று சொன்னார்களே தவிர, பாராளுமன்ற முறைகளுக்கு, மரபுகளுக்கு முரணான எந்த வார்த்தையையும் பேசவில்லை; அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

35 நிமிடங்கள் ஆகியிருக்கிறது. 5 நிமிடத்திற்குள் பேசி முடித்துவிடுங்கள். மற்ற உறுப்பினர்களும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-45)



**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேச எழுகிற நேரத்தில் இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 36 நிமிடங்கள் இருக்கின்றன என்று அறிவித்தீர்கள். ஆனால் இப்போது 35 நிமிடம் முடிந்து விட்டது என்று கூறுகிறீர்கள். இந்த 35 நிமிடத்தில் ஒரு 5 நிமிடம் கூட மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் பேசி இருக்க மாட்டார்கள். எனவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளிக்கப்பட்டு இருக்கிற நேரத்தில் இம்மாதிரி வேண்டுமென்றே குறுக்கீடுகள் செய்து, பேச்சில் இடையமிந்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசும் வாய்ப்பை குறைத்து விட முயற்சிகளை எடுக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் குறுக்கீடுகளைத் தவிர்க்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கு நேரம் போதாமல் இருக்கிறது என்பதையும், பலர் இங்கே குறுக்கிட்டதன் விளைவாக பேச விரும்பிய மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் முழுமையாக பேசவில்லை என்று கருத்தைச் சொன்னார்கள். நான் பொறுப்பிலே இருக்கிற உணர்வோடு தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு அந்த நேரத்தை நீட்டித்துக் கொடுத்து பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சிக்கு காலம் கொடுத்ததற்கு நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். அந்தத் தீர்ப்புக்கு எதிர் வார்த்தை சொல்ல நான் கருதவில்லை. பாராளுமன்ற மரபுகளுக்கு விரோதமான வார்த்தைகள் வழங்கப்படவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். * * *

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-40—10-50-ல் சில பகுதிகள்)

பத்திரிகையில் ஏறும். நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறும் என்று சொன்னால், அது இந்த அவையின் கண்ணியத்தையும் மரபையும் காப்பாற்றியதாக இருக்காது. அதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டேன். அது அப்படியே இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இந்த அவையிலே பேசுகிறவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இருக்காது என்று நம்புகிற காரணத்தால் என்னுடைய பேச்சைத் தொடர நான் விரும்பவில்லை என்று கூறி, அமர்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. * * * அது குறிப்பேட்டிலிருந்து நீக்கப்படாத வரையில் நாங்கள் இந்த அவையில் இருந்து, இந்த அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள இன்றைக்கு விரும்பவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவைத் தலைவரவர்களே, எந்தக் காரணத்தைக் கொண்டும் யாருடைய மனமும் புண்படக் கூடாது என்பது நான் எங்கள் நோக்கம் என்பதை நான் பல தடவை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள் முடிவை மாற்றிக் கொண்டு அந்தப் பகுதியை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் ஒத்துப்போன காரணத்தால், * * * என்ற வாக்கியமும் அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தையும் இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவு இடுகிறேன்.

(முற்பகல் 10-50)

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, கலைக்கப்பட்டது தமிழக அரசு. கலைத்தது டெல்லிப் பேரரசு என்ற நிலையிலே இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-40—10-50-ல் சில பகுதிகள்)





"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவன் குறள்படி, பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்காமல் நடந்திருக்கிற நிகழ்ச்சி எப்படிப்பட்டது என்று எண்ணிப் பார்த்து உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வரலாறு படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். பிரதிவிராஜ், ஜெயசந்திரன் ஒருவரை அழிக்க ஒருவர் துணையை நாடினர். அவர் அழிந்ததும் இவரும் அழிந்து போனார். அப்படிப்பட்ட நிலை தமிழகத்திற்கு வரக் கூடாது என்பதில் உறுப்பினர்கள் அத்தனை பேரும் கருத்துச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல வலுவுள்ள கட்சியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அவர்கள் வலு எந்த அளவு குறைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் தமிழ் நாடு சட்ட மன்றத்திற்குள் நாளும் நாளும் வளர்ந்து வருகிற நிலையில் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1957-இல் அண்ணா அவர்கள் தலைமையில் தமிழக சட்ட மன்றத்திற்குள் திராவிட முன்னேற்றக் கழகம் நுழைந்தபோது அதன் எண்ணிக்கை 15. 1962-லே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களை எதிர்க் கட்சித் தலைவராகக் கொண்டு சட்ட மன்றத்திற்குள் நுழைந்தபோது 50. 1967-லே அண்ணா அவர்களுடைய தலைமையில் தமிழ்நாடு சட்ட மன்றத்திற்குள் நுழைந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் எண்ணிக்கை 134. பிறகு 1971-இல் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்த மன்றத்திற்குள் திராவிட முன்னேற்றக் கழகம் நுழைந்தபோது அவர்களது எண்ணிக்கை 184. இப்போது என்ன என்று கேட்கத் தோன்றும்—நான் சொல்லுகின்றேன். திண்டுக்கல்லைப் பாருங்கள், கோவையைப் பாருங்கள், பாண்டிச்சேரியைப் பாருங்கள் . .

**திரு. கே. பண்ணை சேதுராம்:** சார், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மாண்புமிகு உறுப்பினர் இங்கே திண்டுக்கல்லைப் பற்றியும், மற்ற தேர்தல்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பேசுகின்ற பேச்சு பொது மேடையில் பேசுகின்ற பேச்சாக இருக்கிறது. அவர் இப்போது பொதுக் கூட்டத்தில் பேசுகின்றாரா? சட்ட மன்றத்தில் பேசுகின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** தம்முடைய பேரவைத் தலைவர் அவர்களே என்னைப் பேச அழைக்கின்ற நேரத்தில் மூத்த தலைவர் என்று சொன்னார்கள். இரண்டு கட்சிகளிலுமே வயதில் மூத்தவனாக நான் தான் இருப்பேன் என்று நினைக்கிறேன். ஆகவே என்னுடைய கூற்று இருவர்களுக்கும் பயன்படக் கூடிய அமையும், அதற்கிடையில் பொறுத்து இருந்து கேட்க வேண்டிக் கொள்கிறேன்.

திண்டுக்கல்லிலே, கோவையிலே, பாண்டிச்சேரியிலே மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே நிமிர்ந்த நடை போட்டது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைக் காணலாம். அதைப் போலவே திண்டுக்கல்லில், கோவையில், பாண்டியில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே தலையிறக்கத்தை அடைந்த திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத் தேர்தலிலே தலையிறக்கம் தேவையில்லை யென்றாயிற்று. எண்ணிக்கையைப் பாருங்கள். 39 ஆக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் கூட்டணியும் 35 இடங்களைப் பெற்றிருக்கிறது. ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 6 சட்ட மன்றத் தொகுதிகள் என்றால் அது 210 சட்ட மன்றத் தொகுதிகளைப் பெற்றிருக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஒரே ஒரு இடத்தைத்தான் பெற்றது. அதாவது 6 சட்ட மன்றத் தொகுதிகள். இப்போது அந்த 6 48 ஆக உயர்ந்திருக்கிறது. 210 எந்த அளவிற்குக் குறைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பதவிக்காக மாறல் என்று செல்கிற நேரத்தில் 9 தான். அந்த 9 என்பது நல்ல எண் இல்லை. நவக்கிரகம். ஓரிடத்தில் இருக்காது. இடம்





பெயர்ந்து கொண்டே இருக்கும். இடம் பெயர்ந்துவிட்டால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பட்ட நிலையில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற வரைக்கும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புலவர் அவர்களுக்கு இந்த நவக்கிரகம், ராசி பலனில் நம்பிக்கை உண்டா? (சிரிப்பு)

**திரு. எ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் ஆளுங்கட்சிக்கு கூட்டிப் பார்த்து நவக்கிரகம் என்றார்களா? அதில் நம்பிக்கை வைத்தார்களா? ஆளுங்கட்சிக்குச் சொன்னதுபோல எங்களுக்கும் 27 என்கிற போது கூட்டி 9 என்ற எண்ணைச் சொல்கிறாரா? இந்த எண் எந்த ராசியைச் சேர்ந்தது என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஒன்பது என்கிற வித்தியாசம் ஒன்று அதிகமானால் எத்தகைய பாதகமான நிலையும் ஏற்படாது அல்லவா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** நான் கூறுவது இருந்த இடம் மாறக் கூடாது என்பதற்காகத்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பொது மக்களுடைய ஆதரவு உங்களுக்குப் போய்விட்டது. ஆகவே சட்டமன்றப் பதவியை ராஜிநாமாச் செய்யுங்கள் என்று கேட்பது முறையற்றது இந்தக் கட்சியில் இருந்து பேசுகின்ற நேரத்தில், பதவியைக் கவிழ்ப்பதற்காக இப்படி கட்சி மாறக் கூடாது, கட்சி மாறுவதானால் உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு செய்ய வேண்டும் என்ற முறையில் சட்டம் ஏற்படுத்த வேண்டும். அப்படி இல்லாது நடைமுறையில் இப்படி கட்சி மாறுகிற காரணத்தினால் இப்படிப் பட்ட சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலை உங்களுக்குக் கொடுத்திருக்கிற சந்தர்ப்பத்தில் நீங்கள் நல்லதைச் செய்யுங்கள். எங்களை நம்பி, எதை எதையோ செய்வீர்கள் என்ற எண்ணத்திலே மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். வாக்களித்த பெருமக்களுக்கு வாயாற எதை எதையோ செய்வோம் என்று கூறி வந்திருக்கிறார்கள். அவற்றில் ஒரு கூற்றையாவது செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்கிற வண்ணம் சொல்லியவற்றைச் செயலாற்ற முற்படுகிற போதுதான் எப்படி எல்லாம் வாக்குக் கொடுத்துவிட்டு வந்து விட்டோம் என்று தோன்றும், அப்படிப்பட்ட நிலையில்லாமல் சொன்ன காரியத்தை ஆற்றுங்கள்.

இங்கே ஆளுநர் உரை ஆங்கிலத்திலும் கொடுக்கப் பட்டிருக்கிறது. தமிழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்லியிருப்பதற்கு கொடுத்திருக்கிற உரிமைக்கு மாறாக தமிழில் இருக்கிறது. உற்பத்தியாளர்கள், உபயோகிப்பவர்கள் ஆகிய இரண்டு தரப்பின் நிலையை எடுத்துச் சுட்டிக்காட்டுகிற ஒரு பகுதி

The objective of the Government will be to ensure a remunerative price for the grower and a reasonable price for the consumer by eliminating the scope for exploitation by middle men.

இதற்குத் தமிழில் "உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிக்கும் தக்க வருவாய் கிடைக்க வேண்டும். அதே நேரத்தில் இடைத்தரகர் லாபம் குறைக்கப்பட்டு வாங்கி உபயோகிக்கும் பொது மக்களுக்கும் அவை நியாயமான விலையில் கிடைக்க வேண்டும்" என்பதாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஆங்கில முறையில் 'எலிமினேஷன்' என்றால் அகற்றுவது தானே தவிர அவர்களது லாபத்தைக் குறைப்பது என்றாகாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** "எலிமினேடிங் தி ஸ்கோப் ஆப் எக்ஸ்ப்ளாய்டேஷன்" என்றுதான் ஆங்கிலத்தில் இருக்கிறது. (Exploitation is different from elimination.)

**புலவர் கா. கோவிந்தன்:** 'எலிமினேடிங்' என்பதற்கு அகற்றுவது, நீக்குவது என்றுதான் பொருள். இடைத்தரகர் லாபம் குறைக்கப்பட்டு என்பதற்கு என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் புரியவில்லை.

The policy which will be followed by this Government will neither be purely producer-oriented nor consumer-oriented but essentially people-oriented and will aim at reconciling the interests of the producer and the consumer.

ஆனால், தமிழில் 'இக்கொள்கையைக் கடைப்பிடிப்பதில் உற்பத்தியாளருடைய அல்லது உபயோகிப்பவர்களுடைய நன்மையை மட்டும் ஒருதலைப்பட்சமாகக் கருதாமல் பொதுமக்களின்





(முற்பகல் 11.00)

ஒருங்கிணைந்த நன்மையை அடிப்படையாகக் கொண்டு அரசு செயல்படும்' என்று இருக்கிறது. ஆங்கிலத்தில் இருப்பதை நான் புரிந்துகொண்ட மட்டில், உற்பத்தியாளரின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டோ அல்லது உபயோகிப்போரின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டோ செயல்படும் என்றிருக்கிறது. உற்பத்தியாளர், உபயோகிப்போர் ஆகிய பொது மக்கள் நலன் கருதி என்று நான் பொருள்கொள்கிறேன். ஆனால் அந்தப் பொருள் இந்த மொழிபெயர்ப்பில் இருக்கிறதா என்றால் இல்லை. 'இக்கொள்கையைக் கடைப்பிடிப்பதில் உற்பத்தியாளருடைய அல்லது உபயோகிப்பவர்களுடைய நன்மையை மட்டும் ஒருதலைப்பட்சமாகக் கருதாமல், பொதுமக்களின் ஒருங்கிணைந்த நன்மையை அடிப்படையாகக் கொண்டு அரசு செயல்படும்' என்று இருக்கிறது. உற்பத்தியாளர், உபயோகிப்போர் தவிர வேறு ஏதோ பொதுமக்கள் இருப்பதைப் போன்றிருக்கிறது இந்த மொழிபெயர்ப்பைப் பார்க்கிறபோது. எனவே, கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி கருத்துக்கள் கூற காலம் போதாது என்ற காரணத்தால் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆளுநர் அவர்களது உரையில், நேர்மையான, திறமையான, லஞ்சமற்ற, சிக்கனமான, பாரபட்சமற்ற ஆட்சி அமைக்கப் படுவதற்கு உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள். இதை, பேரறிஞர் அண்ணா அவர்கள் போதித்ததின் காரணமாக, அவர்கள் காலத்தில் இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டதன் காரணமாக, நாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி வந்தவர்கள் என்ற காரணத்திற்காக இந்தக் கருத்தினை ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கூட பொறுக்க முடியாத மாற்றுக் கட்சி நண்பர்கள், பேரறிஞர் அண்ணா வழி வந்தவர்கள் தமிழ் நாட்டில் ஆட்சி செய்ய முடியாது. எனவே, இது உரையில் சேர்க்கப்பட்டுள்ளது என்று கூறி ஒரு பெருன்மையை ஒப்புக்

[திரு. யா. சை. மு. யூசப்] [1977 ஜூலை 13

கொண்டு அவர்கள் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் ஏன் சென்றார்கள் என்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருக்கிறார்கள் இங்கே.

தமிழ் நாட்டின் அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், மொழி, தமிழ் நாட்டின் நலன் பேணுதல் ஆகியவற்றின் அடிப்படையில் நமது கவர்னர் அவர்களது உரையில் இரு மொழிக் கொள்கையை வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்கள். அத்துடன் வறுமையில் வாடுகிற தமிழ் அறிஞர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குவதாகவும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு ஆளுநர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஒரு விஷயத்தை சொல்லியாக வேண்டியிருக்கிறது. பாடப் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்ட ஒரு சில விஷயங்களைப் பற்றி ஆராய வேண்டும் என்று மாற்றுக் கட்சியினரிடமிருந்து கோரிக்கை வந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அதில் நடவடிக்கை எடுத்துவிட்டார்கள் என்ற உண்மையை அறிந்தபோது மகிழ்ச்சி அடைந்தேன்.

அதேநேரத்தில் நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். சென்னை பல்கலைக் கழக பட்டப் படிப்பிற்காக பேரறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட 'வேலைக்காரி' என்ற புத்தகத்தைப் பரிந்துரை செய்த நேரத்தில் அதன் பிரதி கிடைக்கவில்லை, அதன் பதிப்பு கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக அந்த 'வேலைக்காரி' புத்தகத்தை நீக்கிவிட்டு அந்த இடத்தில் 'வெள்ளிக்கிழமை' என்ற புத்தகம் வைக்கப்பட்டது. அதற்குரிய உண்மையான காரணத்தை ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, பாமர மக்கள் பயன் அடையக் கூடிய வகையில் ஆளுநர் அவர்களது உரையில் நிறைய வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உர உற்பத்தி பற்றியும், கிராம மக்களுக்கு சலுகைகள் கிடைக்கக் கூடிய வகையிலும் பல சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதை பெருமையுடன் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். உணவு உற்பத்தி பற்றியும் உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது.



1977 ஜூலை 13] [திரு. யா. சை. மு. யூசப்]

என்னெய் நெருக்கடி பற்றி சொல்லப்பட்ட நேரத்தில் அங்கிருந்து தங்களுடைய நெருக்கடி பற்றித்தான் சிந்தித்துப் பார்த்தார்கள். 17 மாதக் கொடுமை பற்றி இங்கே எடுத்துரைக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தமிழக மக்களைப் பொறுத்தமட்டில் கொடுமைகள் இழைக்கப்பட்ட காலம் 17 மாதங்கள் அல்ல, 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி முதல் தமிழக மக்களுக்கு கொடுமைகள் துவங்கப்பட்டு விட்டன என்ற காரணத்தால், கொடுமைகள் பற்றி இங்கே எடுத்துரைக்க வேண்டுமென்றால் பக்கம் பக்கமாக எழுத வேண்டுமென்ற காரணத்தால் அந்தக் கொடுமைகள் பற்றி எடுத்துரைக்கப்படவில்லை.

அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்ட பிறகு, இங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தென்னகம் பத்திரிக்கை, மக்கள் குரல் பத்திரிக்கை இவைகள் பறிமுதல் செய்யப்பட்டன. எவ்வளவோ பத்திரிக்கை செய்திகள் இருட்டடிப்பு செய்யப்பட்டன. அத்துடன் நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்த ஜே. பி. ஆர். அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, எந்த மிசா பற்றிச் சொல்கிறார்களோ அந்த மிசாவின் கீழ் கைது செய்யப்பட்டு உள்ளே அடைக்கப்பட்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் சொல்லியாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, இந்த நாட்டின் குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக வாக்குறுதி வழங்கியிருப்பதை நாடு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறது. எவ்வளவோ லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்தும் கூட சென்னை மாநகரத்திற்கு குடி நீர் வழங்க இயலாத நிலையில் இருந்தவர்கள் இன்றைய தினம் நாம் வழங்கியிருக்கிற திட்டம் நிறைவேற்றப்படுமானால் தங்களுடைய கதி என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கிற காரணத்தால் ஆளுநர் அவர்களது உரையில் எந்தவிதமான புதுமையும் இல்லை என்று சொல்கிறார்கள். என் தொகுதியில் மீனவ சமுதாயத்தினரும், வேளாண்மை செய்பவர்களும், பனை ஏறும் தொழிலாளர்களும் நிறைய இருக்கிறார்கள். இந்த பாமர மக்களுக்காக நல்ல பல காரியங்களை, அவர்களுக்குத் தேவையான

[திரு. யா. சை. மு. யூசுப்] [1977 ஜூலை 13

தொழில் வழங்குதல், வீடுகள் கட்டித் தருதல் போன்ற வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கும் விதத்தில் என் தொகுதியாகிய இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் கூடன்குளத்திலுள்ள பெரம்பு என்ற பகுதியில் மைக்கா படிவங்கள் இருக்கின்றன; என் தொகுதியில் உள்ள பணகுடியிலும் மைக்கா படிவங்கள் இருக்கின்றன. கிராபைட் படிவங்களும் இருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து அந்தப் பகுதியில் நல்லதொரு தொழிற்சாலையை ஏற்படுத்த தமிழக அரசு முன்வரும் என்று நான் நம்புகிறேன். இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியை எடுத்துக் கொண்டால் தொடர்ந்து வறட்சி காரணமாக, நிரந்தரமான எந்த வசதியையும் இதுவரையிலும் செய்து கொடுக்காத காரணத்தால் புதிய அரசு இவற்றைக் கருத்தில் கொண்டு நல்ல பல திட்டங்களை அங்கு வழங்க முன்வரும் என்று நம்புகிறேன். இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கிற ஏழை விவசாயிகளுக்கு இதுவரையிலும் எந்தவிதமான நீர்ப்பாசனத் திட்டமும் இல்லை. ஆலந்துறை ஆறு நீர்ப் பாசனத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அது திறக்கும் தருவாயில் இருக்கிறது. அதை விரைவாக இந்த புதிய அரசு திறக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அத்துடன் நாங்குனேரி சட்டமன்றத் தொகுதியில் இருக்கிற கொடுமுடி ஆறு நீர்ப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் இராதாபுரம் தொகுதியும் சேர்ந்து பயன் அடையும். நாங்குநேரி தாலுகாவிற்கும் பயன் ஏற்படும் என்பதால் கொடுமுடி ஆறு நீர்ப் பாசனத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அத்துடன் கடற்கரை பகுதி மக்கள் பயன் அடைகிற வகையில் கூட்டப்புளி முதல் பெரியதாழை வரை கடலோரப் பகுதியாகும். இப்போது அங்கு கிடைக்கிற இறால் மீன் கேரளாவிற்கு அனுப்பப்பட்டு பதப்படுத்தப்பட்டு இடிந்தகரையிலும் பிடிக்கப்படுகிற இறால் மீன்கள் கேரளாவிற்கு அனுப்பப்பட்டு, பதப்படுத்தப்பட்டு அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுத்து தமிழகத்தில் இடிந்தகரையிலேயே அதைப் பதப்படுத்துகிற தொழிற்சாலை



[திரு. யா. சை. மு. யூசுப்] [1977 ஜூலை 13

உருவாக்கினால் அங்குள்ள மக்களுக்கு நல்லதொரு வேலை வாய்ப்பினை உருவாக்க முடியும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது போல், மீனவர்கள் நிறைந்த எங்கள் பகுதியில் அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மேலும் குடிதண்ணீர் கஷ்டம் எங்கள் பகுதியில் அதிகமாக இருந்து கொண்டிருப்பதன் காரணமாக அந்த கஷ்டத்தைப் போக்க நிரந்தரமாக குடிதண்ணீர் திட்டம் கொண்டு வந்தால் அவர்களுடைய கஷ்டம் நீங்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

எங்கள் பகுதி கடலுக்கு அருகாமையில் இருக்கின்ற காரணத்தால் நல்ல குடி தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே தமிழக அரசு குடி தண்ணீர் திட்டங்களை கொண்டுவர முயற்சி எடுத்திருப்பதைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உறுதியை அளித்திருக்கின்ற மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஏற்கனவே திட்டமிட்டிருக்கிற, பணகுடி குடிநீர்த் திட்டத்தையும், திசையன்விளையில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் போடப்பட்டிருக்கிற குடி தண்ணீர் திட்டத்தையும், நிறைவேற்றுகின்ற வகையில், இந்தத் திட்டங்களுக்கு புத்துயிர் அளிக்கின்ற வகையில் அமைந்திருக்கின்ற இந்த கவர்னர் உரையை வரவேற்கின்றேன். மாநில திட்டக் கமிஷனை உயிரூட்டி புத்துணர்ச்சியை உண்டாக்குவதாகவும் மேதகு ஆளுநர் அவர்கள் உரை அமைந்துள்ளது. அதற்காக என்னுடைய உறுதியான ஆதரவையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த சங்கராபுரம் தொகுதியில் உட்பட்ட கல்வராயன்மலையில் வாழ்கின்ற மக்களைப்பற்றி ஒரு வரிகூட இங்கே குறிப்பிடப்படவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மக்கள் சுமார் 700 ஆண்டு காலமாக ஜாகிர்தார்களால் அவர்கள் ஆட்சியில் கொடுமைப்படுத்தப்பட்டு, நமக்கு சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்கள் எந்தவிதமான விடுதலையும் இல்லாமல் அவர்கள் அடிமைகளாக வாழ்ந்து கொண்டு இருந்தார்கள்.

அப்படிப்பட்ட மக்களுடைய நல்வாழ்வுக்காக, பாரதப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்த 20 அம்சத் திட்டத்தின் மூலமாக கொத்தடிமை ஒழிப்புத் திட்டத்தை செயலுக்குக் கொண்டு வந்து அதன்மூலமாக, 58 லட்சம் ரூபாய் செலவு செய்து சாலை வசதி செய்யப்பட்டது. மற்றும் பல கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன. மேலும், பள்ளிக் கூடங்கள், போஸ்ட் ஆபீஸ் இவைகள் எல்லாம் திறப்பதற்காக திட்டமிடப்பட்டு, பல வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அப்படிப்பட்ட நேரத்தில், பாரதத்தில் வேறு ஆட்சி வந்தது. அதையொட்டி தமிழகத்திலும் புதிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. பிறகு அதிலும் குறிப்பாக மலைவாழ் மக்களைப் பற்றியோ அல்லது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பற்றியோ, எந்தவிதமான அவர்களது எதிர்காலத் திட்டத்தையும் அறிவிக்காமல் இருப்பதைப்பார்த்து அங்குள்ள மக்கள் மிகவும் வேதனையோடு இருப்பதோடு, தங்களுடைய எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற அச்சத்தோடு அவர்கள் மிகவும் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் ஆறுதலோடு வாழ்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே சபையில் முடிவில் ஆறுதலான வார்த்தைகளை தெரிவிக்கின்ற முறையில், ஏதாவது திட்டத்தை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, கல்வராயன் மலைப் பகுதிக்கு போக்குவரத்து வசதி எதுவும் இல்லாமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இருபது, முப்பது மைல்கள் எந்தவிதமான சாலைப் போக்குவரத்து வசதியும்



இல்லாமல் இருக்கிறது. அவசர கேஸ்கள் வரும்போது, ஆசுபத்திரி வசதியும் இல்லாமல், போக்குவரத்து வசதியும் இல்லாமல் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கு ஒரு ஆசுபத்திரியை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், அங்குள்ள மக்களிடையே ஒளிமயமான எதிர்காலம் ஏற்படுவதற்கு மின்சார வசதி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வராயன் மலையில் கிடைக்கின்ற கடுக்காய் அதிக அளவில் கல்கத்தாவுக்கு ஏற்றிச் செல்லப்படுகிறது. இதிலிருந்து எண்ணெய் எடுப்பதாக தெரிகிறது; சங்கராபுரம் தொகுதியிலுள்ள பல பகுதிகளில் தேவைப்படுகின்ற தண்ணீர் வசதியிருக்கிறது. ஆகவே இந்த கடுக்காயிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற தொழிலை இங்கேயே ஏற்படுத்தலாம். இதற்கு பட்ஜெட் வரும்போது நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் புதுப்பாலப்பட்டு என்கின்ற இடத்தின் அருகே மணிநதி என்ற நதி ஓடுகிறது. இதில் ஓர் அணை கட்டினால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு தண்ணீர் பாயும். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் அடைவார்கள். ஆகவே இதில் ஒரு அணைக்கட்டு கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கவர்னர் ஆட்சி காலத்தில் லக்கநாயக்கன்பட்டி என்ற இடத்தின் அருகே முசுகுந்தா என்ற ஒரு நதி ஓடுகிறது. இதில் ஒரு அணை கட்டுவதற்காக மதிப்பீடு செய்து திட்டமிடப்பட்டு அதற்காக டெண்டர் போடப்பட்டு, பின்னால் டெண்டர் நிறுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது நிறுத்தப்பட்ட இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன். இதற்காக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யும்படியும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடன் நிவாரணச் சட்டத்தில் விவசாயிகள் அனைவரிடமும் கடன் வசூலிப்பது நிறுத்தப்பட்டு சலுகை அளிக்கின்ற வகையில், சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், தீர்ப்பான தொகையும், தீர்ப்பு செலவுத் தொகையும்

சேர்த்து வசூலிக்காமல் இருக்குமாறு திருத்தம் செய்து விவசாயி களுக்கு நிவாரணம் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன். Execution of decree and execution of decree for costs may also be என்கின்ற வகையில் தீர்ப்பானதும் கோர்ட்டு செலவுத் தொகையையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கராபுரம் தொகுதிக்கு அருகில் உள்ள கள்ளக்குறிச்சி பேரூராட்சி ஒன்றியத்தில் 20 ஆயிரம் மக்கள் தொகை இருக் கிறது. ஐந்து லட்சத்திற்கு மேற்பட்டு, வருட வருமானம் இருக் கிறது, இவ்வளவு இருந்தும் இன்னும் இது நகராட்சியாக்கப் படவில்லை. ஆகவே இதை நகராட்சியாக ஆக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சி பேரூராட்சியில் 20 ஆயிரத் துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் எல்.ஐ.சி.யிலிருந்து 13 லட்சம் ரூபாய் கடன் பெற்று மேல்நிலை தண்ணீர் தொட்டி ஒன்று கட்டியிருக்கிறார்கள். இதிலிருந்து தினம் அரை மணி நேரம் கூட குடிதண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே குடிதண்ணீர் கிடைக்காமல் அங்குள்ள மக்கள் அவதிப் படுகிறார்கள். ஆகவே அங்குள்ள மக்களின் குடிதண்ணீர் பற்றாக் குறையைப் போக்குவதற்கு, கள்ளக்குறிச்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வீரசோழபுரம் கிராமத்தின் அருகி லுள்ள மணிமுக்தா நதியின் அருகாமையில் மேல்நிலைதண்ணீர்த் தொட்டி ஒன்று கட்டி பைப்பு மூலம் சப்ளை செய்தால் அங்குள்ள குடிதண்ணீர் பற்றாக்குறை தீரும். ஆகவே இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கள்ளக்குறிச்சியையொட்டி திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை தாலுகாக்கள் இருக்கின்றன. இதில் எந்த தாலுகாவிலும் ஒரு கல்லூரி கிடையாது. கல்லூரிக்குப் போக வேண்டுமென்றால், கடலூருக்குத்தான் போக வேண்டும். அல்லது விழுப்புரம், விருத்தாசலம் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இங்குள்ள மாணவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க கள்ளக்குறிச்சியில் ஒரு கல்லூரி அமைத்துக்கொடுத்தால், அங்குள்ள மாணவர்கள் நன்மை அடைய முடியும். கல்வி அமைச்சர் அவர்கள் அன்மையில் விடுத்த செய்தியைப் பார்க்கும் போது, அதாவது இந்த வருடத்தில் புதிதாக எந்தக் கல்லூரி களும் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்



பார்த்தால் கல்லூரி எதுவும் வராதோ என்று அச்சமாக உள்ளது. அதைப்போக்குகின்ற முறையில் கள்ளக்குறிச்சியில் புதிதாக கல்லூரி ஒன்று ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா காந்தி அவர்கள் பாரதப் பிரதமராக இருந்த காலத் தில், நிலப்பட்டா, மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன, சிறு தொழில் செய்கின்றவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் மூலமாகக் கடன் உதவி வழங்கப்பட்டது. இப்போது நிலப் பட்டா வேண்டும், மனைப்பட்டா வேண்டும் என்று தாலுகா அலுவலகத்தில் சென்று கேட்டால், அந்தத் திட்டங்கள் எல்லாம் இப்போது இல்லை என்று சொல்வதைக் கேட்டு, மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று சொன்னால் எல்லோருக்கும் நிலப்பட்டா, மனைப்பட்டா இனிமேல் கொடுக்கமாட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன். உண்டென்று சொன்னால், ஏழை மக்களுக்கு நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா இவைகளை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு கூலி நிர்ணயம் செய்திருக்கின்றோம் என்று சொல்லும்போது, ஆண் தொழிலாளர் களுக்கு இவ்வளவு கூலி, பெண் தொழிலாளர்களுக்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயம் செய்திருந்த போதிலும் பெரும்பாலான நிலச்சுவான்தார்கள் கிராமங்களில் நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுப்பதில்லை என்ற குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. இதைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். ஏழை விவசாய ஜனங்கள் குறிப்பிட்ட அளவு கூலி கிடைப்பதில்லை என்று சொல்லுகின்ற இடங்களில் எல்லாம் இந்த குறைபாட்டை சொல்லுகிறார்கள். அதற்கு அரசு ஏதாவது பரிகாரம் தேடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் பொதுநிதியில் 40 இலட்சம் ரூபாய் தேங்கிக் கிடக்கிறது. அதே நேரத்தில் ஒன்றியத்தில் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும் இப்படி பல திட்டங்களுக்கு, 14½ இலட்சம் ரூபாய் அளவுக்கு திட்டங்கள் போடப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கி றார்கள். அதற்கு அரசாங்கத்திலிருந்து இன்னும் அனுமதி வழங்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத் திலுடைய நிதி போதுமானதாக இல்லை என்று சொன்னாலும்,

[திரு. துரை முத்துசாமி] [1977 ஜூலை 13

ஒன்றியத்திலிருந்து பொது உபரி நிதியிலிருந்து நிதி எடுத்து கிராமத்திற்கு பயன்படுகின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் உடனே அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து திரு. ராதா அவர்கள் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தை வரவேற்று, வாழ்த்தி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பாக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயத்தை, தமிழகத்தின் எண்ணங்களைச் சுருக்கமாக பிரதிபலிப்பதாக இருக்கிறது என்பதை முன்மொழிந்த திரு. ராதா அவர்கள் சொன்னார்கள். அதேபோல், இதற்கு முன்னால் முதல் அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் ஏற்கனவேயே இந்த ஆளுநர் அவர்கள் உரையானது பெரிய புத்தகமாக அமையாது என்றும், ரயில்வே டயரியைப் போல் இருக்காது என்றும், டெலிபோன் டைரக்டரியைப் போல் அமையாது என்றும், அப்படி அது அமைந்தால் அது நீண்ட புத்தகமாக ஆகி, ஆளுநர் அவர்கள் உரையைப் படிப்பதற்கே நீண்ட நேரமாகி விடும், எனவேதான் சுருக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே தெளிவுபட கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னாலே, இந்த மன்றத்திலே எதிர்த் தரப்பிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் காய்தல், உவத்தல் இல்லாமல் இந்த உரையைப் பார்த்திருப்பார்களே யானால், இந்த ஆளுநர் அவர்கள் உரையில் எந்தவிதக் குறையும் அவர்கள் கண்டிருக்க முடியாது. எதிர்த் தரப்பிலே நாங்கள் இருக்கின்றோம் என்ற காரணத்தால்தான், ஏதாவது குறைகள் சொல்லியாக வேண்டுமென்பதற்காக சிலவற்றை ஆங்காங்கே கோடிட்டுக் காட்டி வருகின்றார்கள்.



1977 ஜூலை 13] [திரு. துரை கோவிந்தராசன்]

ஆளுநர் அவர்களுடைய உரையைப் பார்க்கிற நேரத்திலே, எங்கள் கட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரையிலே கிராம மக்களுக்கு கிடைக்காத அளவிற்கு பலன்கள் கிட்டும் என்கின்ற அடிப்படையிலே இதிலே பலவற்றைச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை வள்ளுவர் கூறும்,

‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்று எல்லாம்
தொழுது உண்டு பின்செல்பவர்’

என்கின்ற அடிப்படையிலே, அந்த நிலைக்கு ஏற்றவாறு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிலே வழிவகை செய்திருப்பதை என்னால் பாராட்டாமல் இருப்பதற்கில்லை.

அதை விட்டுவிட்டு, குறிப்பாகப் பார்த்தால் நேற்றைய தினம் பேசிய உறுப்பினர்கள் கதையைக் கவிதையாகப் பாடியிருக்கிறார்கள். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்களின் வழிவந்தவன் என்கின்ற அடிப்படையிலே, காவிரி நீர் சோழ நாட்டிலே ஓடுகின்றது என்கின்ற அடிப்படையிலே இந்த காவிரி நீர்ப் பிரச்சினையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முன்னாள் மாண்புமிகு முதலமைச்சராகவும், இன்றைய எதிர்க் கட்சித் தலைவராகவும் இருக்கும் கலைஞர் அவர்கள் இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையில் கோடிட்டு காட்டுகிறபோது, இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக உள்ள பிரச்சினை, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்றும், மின்சாரத்தை வழங்கத் தண்ணீரைப் பெறுவது என்றும், அப்படிப்பட்ட நிலைமை சரியில்லை என்றும் சொன்னார்கள்.

ஆனால் தஞ்சை மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்கள், இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், சுப்ரீம் கோர்ட்டு செல்ல வேண்டுமென்று நிதி வழங்கப்பட்டு, அந்த நிதிகள் எல்லாம் ஒன்றாகத் திரட்டப்பட்டு, இதிலே ஒரு தீர்வினைக் காண்பதற்காக தஞ்சை மாவட்டத்து அனைத்துக் கட்சியினரும் ஒன்றாக சேர்ந்து, உயர்நீதி மன்றத்தில் வழக்கைத் தொடர்ந்த நேரத்தில், அதற்குப் பின்னாலே அன்றைய மாண்புமிகு முதல்வரும், இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற கலைஞர் அவர்கள், அப்படித் தொடர்ந்த வழக்கை என்னவோ தெரியவில்லை, மற்றக் கட்சியினருக்கு எல்லாம்கூட தெரிவிக்காமல்,

அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*** திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'என்னவோ தெரியவில்லை' என்றுதான் சொன்னார்கள். அவர் அப்படிச் சொன்னாலுங்கூட, எனக்குத் தெரிந்ததை இங்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்குப் பாரதப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதற்கு ஒரு சமாதானத் தீர்வு காண முயற்சிப்பதாகத் தெரிவித்த ஒரு கருத்தினுக்கு ஒப்ப இந்த வழக்கைக் கைவிடுங்கள் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, சட்டப் பேரவையில் இருந்த மற்ற கட்சியினருக்கும் சொல்லப்பட்டு, அதன் அடிப்படையிலேயே இந்த வழக்குத் திரும்பப் பெறப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு, பிப்ரவரி 6 ஆம் நாள் இந்த அவையிலே ஆளுநர் அவர்களுடைய உரைமீது தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற போது, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்கள் ஒன்றாக இணைந்து, நீர்வளத்தையும், மின்சாரத்தையும் பயன்படுத்திக் கொள்வது பற்றி திட்டமிட்டு, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுக் கழகம் என்று ஒரு கழகம் அமைய இருக்கிறது என்று கலைஞர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதன்படி 4 மாநிலங்களும் ஒன்றாக இணைந்து, அப்படிப்பட்ட ஒரு மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்கி, தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அதற்குப் பின்னாலே 1974 வரையிலே எந்தவிதமான ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொள்ளாமல், அதற்குப் பின்னாலே அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அன்றைய அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே குற்றச்சாட்டாக கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இதைப்பற்றி தற்போது ஆளும் கட்சியிலே உள்ள ஓரிரு அமைச்சர்கள் கூட அறிவார்கள். அவர்களுக்கும் தெரிந்த உண்மைதான் இது. இது முதல் முயற்சியாக எடுத்துச் சொல்லப்பட்ட கருத்தாகும். அதற்குப் பின்னாலே மத்திய அரசு எடுத்துக்கொண்ட முயற்சி



பற்றியும் மற்ற மாநிலங்கள் சம்மதித்த விவரமும் தெரியவில்லை. எனவே, இதிலே எவ்வித ஒப்பந்தமும் இல்லை; அப்படி அது கைவிடப்படவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே இந்த மன்றத்திலே நீண்ட அனுபவம் பெற்ற, செல்வாக்கு வாய்ந்த, இந்த சபையிலே வீற்றிருந்த மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த மன்றத்திலே தன்னுடைய கருத்தைச் சொல்கின்ற நேரத்திலே, 17 மாத குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இங்கே ஜனநாயகம் பாதுகாக்கப் படவில்லை, * * உறுப்பினர் அவர்கள் பொது மேடைகளில் பேசுவதுபோல், இப்படி அனுபவம் பெற்றவரே பேசியிருக்கிறார்கள். இவ்வளவு அனுபவம் வாய்ந்தவர், 'யாரோ, என்னவோ' என்று பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதையெல்லாம் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கச் சொல்லி ஏற்கனவே முடிவாகி விட்டது. எனவே, அதை விட்டுவிட்டு வேறு பேசுங்கள்.

**திரு. துரை கோவிந்தராசன் :** 17 மாத கால குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சியிலே ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். 4½ கோடி மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக பல தொகுதிகளிலிருந்து சட்ட மன்ற உறுப்பினர்களாக நம்மை மக்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

இப்போது எனக்கு பழைய நினைவு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. உண்மையான ஜனநாயகப் படுகொலை, இந்த 17 மாத கால ஆட்சிக்கு முன்தான் நடைபெற்றிருக்கிறது. அந்த ஜனநாயக படுகொலையை நேரிடையாக பார்த்தவன் என்கின்ற அடிப்படையில், அதாவது இரண்டு சபாநாயகர்களை வைத்து இந்த அவையை நடத்திய பெருமை, முன்னர் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தவிர, இந்த நாட்டு, உலக வரலாற்றிலேயே இடம் பெற்றிருக்காது என்று நினைக்கிறேன். அதே நேரத்திலே, அன்றைக்கு இந்த தேர்தலைக்

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

குறித்து இன்றைய தினம் முதல் அமைச்சராக வீற்றிருக்கும் எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் 1½ மணி நேரம் இந்த மாமன்றத்திலே பேசிய பேச்சு, நிகழ்ச்சிக் குறிப்பில் இடம் பெறவில்லை. அப்பேர்ப்பட்ட ஜனநாயகப் படுகொலையை இந்தக் கட்சியின் சொந்தக்காரர்கள் செய்து விட்டு, நேற்றையத் தினம் கவிதைகள் பாடி, ஆளுநர் அவர்களுடைய உரை ஏதோ சினிமா வசனத்திலே இருப்பதைப்போல் இருக்கிறது என்று கவிதை பாடியிருக்கிறார்கள்.

அந்தக் கவிதைகளை எல்லாம் பார்க்கின்றபோது, எனக்கு பழைய கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 'வாழ முடியாதவன் கதை' என்று ஒரு கதை இருக்கிறது. அதன் ஆசிரியர் மிகப் பெரிய ஆசிரியர்; அனுபவம் மிக்கவர். அந்தக் கதையை அவர் எழுதுகின்ற நேரத்தில், காவல் துறையைச் சேர்ந்த ஒரு காவலாளி, தன்னுடைய மகளைக் கல்லூரியில் படிக்க வைக்கின்றான். அப்படி அவன் படிக்க வைக்க முயற்சிக்கும்போது, அவனது மனைவி இறந்து விடுகின்றாள். மிகவும் சிரமப்பட்டு படிக்க வைத்து, தன் பெண்ணுக்கு வேலை தேடுகின்றான். கிடைக்கவில்லை. வாழ்க்கையை நடத்த முடியாத அளவுக்கு வறுமையால் கவ்வப்பட்டு, பெற்ற தந்தை தன் மகளையே மணந்து கொள்கின்ற நிலை உருவாகும் அளவுக்கு அந்த 'வாழ முடியாதவன்' கதை எழுதுகின்ற அளவுக்கு இந்த ஆளுநர் அவர்களுடைய உரையிலே கதை இடம் பெறவில்லை என்பதற்காகத்தான் இந்தக் கதையை நான் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

ஆனால் அந்தக் கதையை எழுதியவர்கள் அன்றைக்கு அனுபவம் உள்ளவர்களாகத்தான் எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி நீரைப் பொறுத்தமட்டும் தஞ்சையிலே இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் உள்ளபடியே இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கதைகள் எப்படி இருந்தாலும் கருத்துக்கள் முக்கியமாகும்.



ஆனால் தஞ்சைக்குத் தண்ணீர் வருகிறது என்ற செய்தி அறிந்தவுடன், ஒரு பிள்ளை இல்லாத குடும்பத்தில் நீண்ட நெடு நாளைக்குப் பின்னால் ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குடும்பத்தில் எந்த அளவுக்கு மகிழ்ச்சி வருமோ, கண் தெரியாத குருடனுக்கு நீண்ட நாளைக்குப் பின்னர் கண் தெரிகிறது என்றால் அந்தக் குடும்பத்தினருக்கு எந்த அளவுக்கு உற்சாகமும், மகிழ்ச்சியும் ஏற்படுமோ, வாழ்க்கைக்காகச் சேர்த்து வைக்கப்பட்ட பணம் காணாமல் போய், பிறகு அது கிடைத்துவிட்டது என்ற செய்தி வந்தவுடன் அந்தக் குடும்பத்திற்கு அது எப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தருமோ அதே போல் இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலே, குறிப்பாக சோழ மண்டலத்திலே இருக்கிறவர்கள் அந்த மகிழ்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள்.

அந்த மகிழ்ச்சியைப் பெற்றிருக்கிற மக்கள், இந்த அரசையும், இந்த அரசை நடத்திச் செல்லுகிற புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். வாழ்த்துவது என்னும்போது கம்ப ராமாயணத்திலுள்ள முறையில் வாழ்த்த வேண்டுமானால் -- சீதையை இராவணன் இலங்கைக்குத் தூக்கிச் சென்ற நேரத்தில் அனுமன் சீதையைத் தேடிச் சென்றவுடன் அனுமனைப் பார்த்து சீதையானவள் வாழ்த்துகிறாள் —

'பாழிய பணைத்தோள் வீர! துணைஇலேன் பரிவு தீர்க்க
வாழிய வள்ளலே: யான் மறுஇலா மனத்தேன் என்னின்,
ஊழி ஓர்பகலாய் ஓதும் யாண்டு எலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும், இன்று என இருத்தி'

என்று வாழ்த்துகிறோம்.

ஈரேழு பதினான்கு லோகங்கள் அழிந்து போனாலும் இன்று போல் என்றும் வாழ்வாயாக என்ற வாழ்த்துக்களை நான் வாழ்த்தவில்லை என்றாலும், இந்தத் தமிழகம் உள்ளவரை பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகள் உள்ளவரை வாழ்க, வாழ்க என்று புரட்சித் தலைவரை, மாண்புமிகு முதல்வர் அவர்களை தஞ்சை மாவட்டத்திலே, குறிப்பாக சோழ மண்டலத்திலே இருக்கிறவர்கள் இன்றைக்குக் காவிரி நீரால் வளம் பெறவேண்டியவர்கள் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1977 ஜூலை 13

'நீர்இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்றி அமையாது ஒழுக்கு'

என்று வள்ளுவர் நீரின் இன்றியமையாமையைப் பற்றிக் கூறியிருக்கிறார். உலகத்திலே தண்ணீர் இல்லையென்று சொன்னால் அது எந்த அளவுக்கு ஊரையும், நாட்டையும், உலகத்தையும் கொண்டுபோய்விடும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலகம் வாழ தண்ணீர் மிகவும் முக்கியம். இன்றைக்குத் தமிழகம் தன்னிறைவைப் பெறும் அளவுக்கு உணவை வழங்கக்கூடிய தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீரைத் திறந்துவிட்ட முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் ஆளுநர் உரையில் பல அம்சங்களைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நடைபெற இருக்கிற நகராட்சி மன்றத் தேர்தல்கள், கூட்டுமன்றத் தேர்தல்களில் தலைவரை நேரடியாகப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே இருந்தே சொல்லிக் கொண்டு வந்தது, கனவாய் எண்ணிக் கொண்டிருந்தது, இன்றைக்கு அவருடைய வழியில் நடந்து கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நினைவாக்கிக் காட்டியிருப்பதற்காக மக்கள் சார்பாகவும், என்னுடைய தொகுதியின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சைக்குப் பக்கத்தில் இருக்கிற குருங்குளம் சர்க்கரை ஆலை பேரறிஞர் அண்ணா பெயரால் திறக்கப்பட்டு, இடையில் அண்ணா பெயர் நீக்கப்பட்டு, இன்று மறுபடியும் அண்ணாவின் பெயரை வைக்கிற அளவுக்கு இன்றைக்கு உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்ததற்குப் பின்னாலே அண்ணாவின் வழியில் நடந்து கொண்டிருக்கும் இந்த அரசுக்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும் — அந்தப் பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிற காரணத்தால் தொகுதி மக்களுடைய சார்பாகவும் பாராட்டி ஆளுநர் உரையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். உமாநாத்: துணைச் சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையில் பல அம்சங்கள் வரவேற்கத்தக்கதும், சில அம்சங்கள் ஆக்கபூர்வமான யோசனைகளாகக் கொடுக்கப்பட



1977 ஜூலை 13] [திரு. ஆர். உமாநாத்

வேண்டிய அப்படிப்பட்ட அம்சங்களும் உண்டு என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை — திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பலர் பேசும்போது 'இதில் ஒன்றும் இல்லை . . . ஒன்றும் இல்லை . . . ஒன்றும் இல்லை' என்று ஒரே பாட்டாகப் பாடியதைக் கவனித்தேன். அவர்கள் அரசாங்கத்தில் இருந்தபோது கவர்னர் உரை நிகழ்த்தப்பட்டு அந்தக் கவர்னர் உரையில் தேனும் பாலும் ஒழுகிக் கொண்டிருந்ததா என்று நான் கேட்கிறேன். (ஆரவாரம்)

திரு. க. அன்பழகன்: அப்போது அந்த உரையிலே தேனும் பாலும் ஒழுகிக் கொண்டிருக்கவில்லை என்று உறுப்பினர் கூறுகிறார். அந்த உரைகளையும் அப்போதிருந்த எதிர்க் கட்சியினர் கண்டித்துப் பேசினார்களே தவிர, பாராட்டிடவில்லை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. ஆர். உமாநாத்: நான் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் நிலை பற்றிப் பேசுகிறேன். மற்றக் கட்சிகள் நிலை என்ன என்று எனக்குத் தெரியாது. அன்றைக்கும் எதிர்த்தோம். இன்றைக்கும் எதிர்த்து விமர்சனம் பண்ணுகிறோம்.

மிகவும் குறுகிய அதிகாரங்களைக் கொண்டு ஒரு குறுகிய கட்டுக்கோப்புக்குள் அடக்கப்பட்ட ஒரு மாநில அரசு — அப்படிப்பட்ட சர்க்காரிடமிருந்து என்ன எதிர்பார்க்க முடியும்? அதற்கு லிமிட்டேஷன்ஸ் உண்டு. அதைத் தற்போது இந்த சைடில் இருப்பவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த சைடுக்கு மாறியிருப்பதால் அதை மறுக்க முடியுமா? ஆகவே, ஏன் எதிர்க்கிறார்கள்?

200 ஆண்டுக்காலம் காலனி ஆதிக்கம், 30 ஆண்டுக் காலம் காங்கிரஸ் ஆதிக்கத்தில் சிக்கிய நாடு—வறுமையை ஒழித்து அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் ஆகியிருக்கிறார்கள் என்பது உண்மை. தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள்

[திரு. ஆர். உமாநாத்] [1977 ஜூலை 13

57 சதவிகிதம் என்று சொன்னார்கள். அது மத்திய சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரம். அதை நம்பக்கூடாது என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் 75 சதவிகிதத்தினர் பாவர்டி லைனுக்குக் கீழே இருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதோடு ஊழலும் மலிந்து விட்டது; நாடு பூராவும் மலிந்து விட்டது. ஏகபோக முதலாளித்துவத்தை, நிலக் குவியலை, வெளிநாட்டு மூலதனத்தை ஒழித்தால்தான், வறுமையை ஒழிக்க முடியும். வேலையின்மையை ஒழிக்க முடியும். விலைவாசியைக் கணிசமாகக் குறைக்க முடியும், லஞ்ச ஊழலைப் பூர்ணமாக ஒழிக்க முடியும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. ஒரு மாநில அரசு இவற்றைப் பூரணமாக ஒழிக்க முடியுமா என்றால்— because of the limited powers லிமிடெட் பவர்சை வைத்துக் கொண்டு பூரணமாக ஒழிக்க முடியாது.

மத்திய அரசின் கொள்கைகள்படி அதிகாரக் குவியல் அங்கே இருக்கிறது. அந்தக் குவியலைக் குறைப்பதன் மூலந்தான் வறுமையைப் பூரணமாக ஒழிக்க முடியும். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் — இந்த யதார்த்த உண்மையை முதலமைச்சர் இந்தச் சபைக்கு மட்டுமல்ல, சபை மூலமாக தமிழ்நாட்டு மக்களிடம் பகிரங்கமாகத் தெளிவுபடுத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

மாநில அரசைப் பொறுத்தவரை தங்களுடைய வரம்புக்கு உட்பட்டு இந்தச் சுரண்டல் கும்பல்களை எதிர்த்துப் போராடத் தயாரா என்பதுதான் கேள்வி. இவற்றை எதிர்க்கும் சக்திகளுக்கு உதவியும், ஊக்கமும் அளிக்க மாநில சர்க்கார் தயாரா என்பதுதான் பிரச்சினை. இவற்றைப் பற்றி ஸ்தூலமான யோசனைகளையும், கொள்கைகளையும் மத்திய அரசிடம் வற்புறுத்த இந்தச் சர்க்கார் தயாரா? இது இந்த வறுமை, வேலையின்மை, லஞ்ச ஊழல் போன்றவற்றை எதிர்க்கும் போராட்டத்திற்கு மாநில அரசு தன்னுடைய 'சப்ஸ்டான்ஷியல்' காணிக்கையாக, சான்றிப்புரையாக இருக்கும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெற ஸ்தூலமான யோசனைகளை வைக்க விரும்பு



1977 ஜூலை 13] [திரு. ஆர். உமாநாத்]

(முற்பகல் 11-40)

கிறேன். இங்கே இருக்கக்கூடிய சர்க்கார் முன்முயற்சி எடுத்து மேற்கு வங்க அரசு, காஷ்மீர் அரசு, கோவா அரசு இதற்குத் தயாரான நிலையில் உள்ள மற்ற மாநில ஜனதா அரசுகளோடு ஒரு மாநாடு கூட்டி அதிக அதிகாரங்கள் என்ன என்ன தேவை என்பதைப்பற்றிப் பேசி ஒரு முடிவை எடுத்து அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து வற்புறுத்த வேண்டும். அதிகாரங்கள் அதிகமாக மாநிலங்களுக்குத் தரப்படும் என்று ஜனதா கட்சியின் தேர்தல் பிரகடனத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த யோசனைகளைச் சொல்லவேண்டும், சொன்னால் மத்தியிலே இருக்கிற அரசு இதைத் தட்டிக் கழிக்கமுடியாது. அவர்கள் ஏற்கனவே இதிலே கமிட் பண்ணியிருக்கிறார்கள். ஆகவே இதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ரியாக்ஷன் என்ன என்பதை நான் அவர்களுடைய பதிலில் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நாகப்பட்டிணம் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பதால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் சீரியஸாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதை ஒரு மேஜர் போர்ட் ஆக மாற்ற இந்த அரசாங்கம் சீரியசாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மத்திய அரசிற்கு அதை சிபாரிசு செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நாகூர் ஒரு சர்வதேச பில்கிரிமேஜ் சென்டர். அங்கே ஆண்டு தோறும் 20 லட்சம் மக்கள் வந்துபோகிறார்கள். ஆனால் அங்கே சுகாதார வசதிகள் கிடையாது. இது விசேஷமாகக் கவனிக்கப் படவேண்டும். அங்கே 30 ஆண்டு காலமாக டிரெய்னேஜ் வசதியே கிடையாது. நாகூர் முனிசிபாலிட்டியை ஒரு தனி முனிசிபாலிட்டியாக்கி அங்கே சுகாதார வசதிகளைப் பெருக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆளுநர் உரையிலே சென்னைக்குக் குடிநீர் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நாகூரைப் போன்ற மைனர் முனிசிபாலிட்டிகளையும் இந்த அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. அங்கே என்ன குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அங்கே இருக்கிற ஸ்பெஷல் ஆபீசரைக் கேட்டால் பொருளாதாரம் இல்லை என்கிறார்கள்,

அரசினுடைய கான்சிகுவன்ஸ் என்ன என்றால் உலகம் முடிவாகிற வரைக்கும் அந்த மக்களுக்கு தண்ணீர் இல்லை என்பதுதான். ஆகவே சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர என்ன முக்கியத்துவம் தரப்படுகிறதோ அதைப்போன்று ஸ்மால் முனிசிபாலிட்டி களுக்கும், குறிப்பாக நாகூர் முனிசிபாலிட்டிக்கும் டாப் ப்ரையாரிடி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே மீனவ மக்கள் வாழ்கிறார்கள். ஒரு பக்கத்தில் எல்லையோரத்தில் மீனவர்கள் வாழ்கிறார்கள். அது தஞ்சை மாவட்ட எல்லைக்குள் வருகிறது. இன்னொரு பக்கம் மீனவர்கள் வாழ்கிறார்கள். அது முனிசிபல் எல்லைக்குள் வருகிறது, அவர்கள் மிகவும் வசதியற்று வாழ்கிறார்கள். அவர் களுடைய சாப்பாட்டிற்கு மீன் தான். அப்படிப்பட்ட நிலையில் உள்ள மீனவர்களைப் பொறுத்தவரையில் எப்படி நீங்கள் அரிசன நலத்துறை என்று வைத்திருக்கிறீர்களோ அதைப்போன்று தமிழ் நாட்டிலே எல்லையோரப் பிரதேசங்கள் ஏராளம், அந்தப் பிரதேசங்களிலே உள்ள அந்த மக்களுக்கு என்று ஒரு பிரத்தியேக மான ஏஜன்ஸி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இந்த அரசினிடம் ஆளும் கட்சியின் சுயநலத்திற்காக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். அங்கே உள்ளவர்கள் எல்லாம் உங்கள் பக்தர்கள் தான். அவர்கள் உங்களைப் பாராட்டு வார்கள், ஆகவே அவர்களுக்கு என்று பிரத்யேக ஏஜன்சி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வலை பின்னிக் கொள்வதற்காக கொடுக்கப்பட்டு வந்த சப்ஸிடி நிறுத்தப் பட்டிருக்கிறது. அதை மீண்டும் ரெஸ்யூம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று நாகையைத் தலைநகராகக்கொண்டு கீழ்த்தஞ்சை மாவட்டம் தனியாக அமைக்கப்படவேண்டும். நான் எலக்‌ஷன் காம்பெய்ன் செய்கிறபோது அங்கே உள்ள மக்கள் எல்லாம் சொன்னார்கள். இதைச் செய்துகொடுக்கச் செய்தால் நீங்கள்தான் இந்தத் தொகுதியின் நிரந்தர எம்.எல்.ஏ. என்று சொன்னார்கள். எனக்கே அந்த மந்திரி என்றால் உங்களுக்கு நிரந்தரமாக ஆட்சியைத் தருவார்கள் என்று சொல்லி நீங்கள் உங்களுடைய தனித்தன்மையை இதில் காட்டவேண்டுமென்றும் மாற்று சர்க்கார்களைவிட இந்த சர்க்கார் எப்படிச் செயல்படுகிறது என்பதை இதில் நீங்கள் காட்ட வேண்டும்.



இங்கே பேசிய தி.மு.க. உறுப்பினர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் நெய்வேலியிலும் . . . .

திரு. எ. ரகுமான்கான்: ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர் மேஷன் . . . . .

திரு. ஆர். உமாநாத்: பாய்ன்ட் ஆப் இன்பர்மேஷன் என்றால் நான் நிறுத்த தயாராக இல்லை.

திரு. எ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

திரு. ஆர். உமாநாத்: முதலிலே பாயின்ட் ஆப் இன்பர்மேஷனாக இருந்தது இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகிவிடுகிறது. துப்பாக்கிச் சூடு எதற்கு என்று தி.மு.க. உறுப்பினர்கள் கேட்கிறார்கள், ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நெய்வேலியிலும், செயின்ட் ஜோசப் கல்லூரியிலும் நாங்கள் துப்பாக்கியால் சுட்டோம் என்பதை ஒப்புக் கொண்டு நாங்கள் செய்தது தப்பு நீங்கள் செய்யாதீர்கள் என்று சொன்னால் ஒத்துக் கொள்ளலாம். (ஆரவாரம்).

சிராளன் இறந்தது பற்றி விசாரணை வைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், கேட்கட்டும், சிராளன் என்பவர் எங்கள் கட்சியின் வட ஆர்க்காடு மகளிர் பகுதியினுடைய தலைவராக இருப்பவரின் மகன், அதனால்தான் நாங்கள் உரிமையோடு கேட்கிறோம். நீங்கள் கேட்கிறீர்கள், ஆனால் நாங்கள், அப்புவை போலீஸ் கொன்றதைப் பற்றி விசாரணை செய்யாதது தவறு என்று ஒத்துக் கொண்டு அந்தத் தவறை நீங்கள் செய்யாதீர்கள் என்று சொன்னால் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

நக்ஸலைட்களையும் மற்ற அரசியல் கைதிகளையும் ரிலீஸ் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள், ஆனால் கேட்பதற்கு முன்னால் நாங்கள் கோதண்டராமன் போன்றவர்களை தண்டித்தது தவறு என்று ஒப்புக் கொண்டு அதற்குப் பிறகு விடுதலை செய்யுங்கள் என்று கேட்டால் நியாயமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). கொஞ்சம் டைம் கொடுங்கள், முதலமைச்சர் அவர்கள் கூட வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் அரசாங்கத்திற்கு பெரக் கூடாது என்று தடுக்கக் கூடிய சில சக்திகள் இன்றைக்கு தமிழர் மலையாளிப் பிரச்னையைக் கிளப்பிவிடுகின்றன. கஜானாப் பாறையில் மலையாளிகள்

[திரு. ஆர். உமாநாத்] [1977 ஜூலை 13

தமிழர்களைத் தாக்கினார்கள் என்று தினத்தந்தி செய்தி போட்டிருக்கிறது. உண்மையான நிலைமை என்னவென்றால், அங்கே பெரும்பாலும் தமிழர்கள்தான் இருக்கிறார்கள். அங்கேயுள்ள ஏலக்காய்த் தோட்ட முதலாளிகள் தமிழ் முதலாளிகள்தான். அவர்களுக்கிடையே 1975 ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. முதலாளிகள் அதில் கையெழுத்துப் போட்டார்கள். ஆனால் அந்த ஒப்பந்தத்தை அவர்கள் அமல் நடத்த மறுத்துவிட்டார்கள். அந்த தமிழ்நாட்டு முதலாளிகள் தமிழ் நாட்டிலிருந்து சில ஆட்களை கொண்டு போய் அங்கே கருங்காலிகளாகப் பயன்படுத்த ஏற்பாடு போட்டிருந்தார்கள். மறுநாள் கன்சீலியேஷனுக்கு வைக்கலாம் என்று முடிவு செய்து கொண்டிருந்தபோது இங்கேயிருந்து கொண்டு போன ஆட்களை வைத்து—அங்கே உள்ள தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்தான், ஒன்றிரண்டு பேர்கள் தான் மலையாளிகள். நான் என் கட்சி ஆட்களிடம் சொல்லி விசாரித்து இந்த பேக்டை இங்கே வைக்கிறேன்—அந்தத் தொழிலாளர்கள் ஊர்வலம் போனார்கள். அவர்கள் தமிழர்கள் தான், அவர்களுக்கு விரோதமாக தமிழ் முதலாளிகள் இங்கே இருந்து கொண்டுபோன ரௌடிகளை வைத்து கருங்காலிகளாகப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் அந்த தமிழ் தொழிலாளர்கள் சொல்லிவிட்டார்கள், இங்கே வந்தால் கணக்குத் தீர்ப்போம் என்று சொன்னார்கள், அதேபோல் கணக்கைத் தீர்த்து விட்டார்கள், அவர்களை விரட்டியடித்தார்கள். இங்கே தமிழ் நாட்டின் முதலமைச்சராக வந்திருப்பவர் முன்பு இதை ஒரு பிரச்னையாக்கலாம் என்ற முறையிலே அவர்கள் இந்தச் செய்தியை போட்டிருக்கிறார்கள். அது உண்மைக்கு மாறானது. இது ஒரு முக்கியமான விஷயம், இதை சீரியஸாக நினைக்க வேண்டும், பிட்வின் டு ஸ்டேட்ஸ், பிட்வின் டு பீபிள்ஸ், பிட்வின் மெஜாரிட்டி அண்ட் மைனாரிட்டி, இப்படிப்பட்ட நிலைமைகளை அந்தப் பத்திரிகை செய்து கொண்டு அதன் மூலம் சில நிலைமைகளை ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறது. அங்கே உள்ள தமிழர் தொழிலாளர்கள் எல்லாம் ஒரு மலையாளியைத்தான் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இங்கே இருந்து ரௌடிகளைக் கொண்டு போய் கலவரம் செய்யப் பார்த்தார்கள். ஆனால் அங்கே உள்ள தமிழர் தொழிலாளர்களை பாதுகாத்த



1977 ஜூலை 13] [திரு. ஆர். உமாநாத்]

பெருமை கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சி.ஐ.டி.யு.விக்கும் தான் உண்டு. ஆனால் இங்கே இருக்கிற முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கக் கூடிய பெருமை தான் தினத்தந்திக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதுமட்டுமல்ல, கேரள அரசாங்கம் முயற்சிகளைத் தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காமல் புகைபோல ஏற்றிவிட்டார்கள். தினத்தந்தி செய்கிற வேலையால், கேரள சர்க்கார் தகவல் அனுப்புவதில் டிலேபடுத்துகிறது, கதையை எப்படி ஜோடிக்கலாம் என்று. காங்கிரஸ் சர்க்காருக்கு வக்காலத்து வாங்குகிறது தினத்தந்தி என்று சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியானது மாநிலத்திலும், மத்தியிலும் தோல்வியடைந்துவிட்டதால் அது செத்த பாம்பாகி விட்டது என்று நினைக்க வேண்டாம். அது அடிபட்ட பாம்பாகத்தான் இருக்கிறது. அதற்குத் தலைவர் இந்திராகாந்தியின் ஆள்தான், பிரம்மானந்த ரெட்டிதான் இருக்கிறார். பணப்பை இந்திராகாந்தியின் கையில்தான் இருக்கிறது. அது எந்த நேரத்திலும் தலை தூக்காது என்று சொல்ல முடியாது. காங்கிரஸ் என்பது நச்சுப்பாம்பு. அருமை நண்பர் அண்ணாதுரை அவர்கள் காங்கிரஸ் என்பது ஒரு நச்சுப்பாம்பு, அதை அடிப்பதற்கு எந்தத் தடி கொண்டும் பயன்படுத்தத் தயாராக இருப்பேன், அது பச்சைத் தடியாக இருந்தாலும் சிகப்புத் தடியாக இருந்தாலும் பயன்படுத்துவேன் என்று சொன்னார்கள். அந்தப் பாம்பு சாகவில்லை, அது தலைதூக்க முடியாமல் செய்ய வேண்டிய கடமை நமக்கு உண்டு. அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்று, அரசாங்கத்தைச் சேர்ந்திருக்கின்ற கட்சி முன் வர வேண்டுமென்று சொல்லி, எனக்கு டைம் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ரகுமான்கான்:** ஒரு பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சண்டையை எதிர்த்து தான் சார்ந்திருக்கின்ற கட்சி முழுமையாகப் போராடும், விலைவாசியை, வறுமையை எதிர்த்துப் போராடும்

என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தச் சமுதாயத்தில் சுரண்டலுக்கும், வறுமைக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், விலைவாசி உயர்வுக்கும் காரணமாக இருக்கின்ற கறுப்புப் பணக்காரர்கள் நாட்டிலே இருக்கின்றார்கள். பகிரங்கமாக நான் கறுப்புப் பணம் வாங்குகிறேன் என்று சொல்பவர்களை எதிர்த்து பாராளுமன்ற ஜனநாயகத்தை ஒரு கருவியாகக் கருதுகின்ற மார்க்சிஸ்ட் கட்சி அந்தப் பிரச்சினையை மையமாக வைத்துப் போராடுவார்களா?

திரு. ஆர். உமாநாத்: The source of black money is these business people—75 families irrespective of their nationality
அந்த சோர்ஸைப்பற்றி முன்னால் அமைச்சர் திரு. கணேஷ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கறுப்புப் பணம் புரொடக்ஷன் சென்டரிலேதான் உருவாகிறது. 100 கெஜங்கள் உற்பத்தி செய்கின்ற நேரத்தில் 50 கெஜங்களை மறைத்துவிட்டு, 50 கெஜங்களை மட்டும் ஓப்பன் மார்க்கெட்டிலே விற்று, மீதி 50 கெஜங்களை கறுப்பு மார்க்கெட்டிலே விற்று கறுப்புப் பணமாக மாற்றுகிறார்கள். அங்கேதான் போக வேண்டும் என்று கணேஷ் அவர்கள் சொன்னார்கள். அந்த பெரிய பிசினஸ் பீப்பிள்தான், டாட்டா, பிர்லா போன்ற 75 குடும்பங்கள்தான் இதிலே மையமாக இருக்கிறார்கள். அவற்றை எதிர்ப்பதிலே கம்யூனிஸ்ட் கட்சி பிறந்ததிலேயிருந்து இன்றுவரையில் முன்னால் நிற்பது மட்டுமல்ல, உயிரையும் கொடுத்திருக்கிறது. ஆகவே, கறுப்புப் பணம் பற்றி எங்களிடத்தில் அஷ்யூரன்ஸ் கேட்க வேண்டாம், நீங்கள்தான் அஷ்யூரன்ஸ் கொடுக்க வேண்டுமே தவிர நாங்கள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்களின் விளக்கத்திற்குப் பின்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரவேலு அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

* திரு. கே. சுப்பிரவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களெல்லாம் அதை ஆதரித்து அதிலே உலக மகா புரட்சி இருக்கிறது என்பதையெல்லாம் மிக வேகமாக இங்கே பேசியிருக்கிறார்கள். அதையும் ஆதரித்து மார்க்சிஸ்ட்





கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் நீண்ட நாட்கள் பாராளுமன்றத்திலே அனுபவம் பெற்றவர்கள், இங்கே மிக நீளமாக ஆதரித்து உங்களுடைய உரையிலே, நீங்கள் ஆட்சி நடத்தியபொழுது உங்களுடைய உரையிலே தேனும் பாலுமா ஓடியது என்று பழைய காலத்திற்கே போனார்கள். இந்த உரையிலே மட்டும் தேனும் பாலுமா ஓடுகிறது என்று கேட்கிறேன். இப்பொழுது அவர்கள் சொல்லியதைப்பற்றி கொஞ்ச நாட்கள் கழித்து, இராஜ்ய சபா தேர்தல் முடிந்தபிறகு அதைப்பற்றி விளக்கமாகப் பேசுவார்கள் என்று கருதுகிறேன்.

இங்கே இந்த உரையைப் பொறுத்தவரையில் என்னுடைய கருத்து, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசு ஒரு நீண்ட 17 மாத ஜனநாயகப் படுகொலைக்குப் பிறகு, அதுவும் சாதாரண மக்களுடைய வாக்குகளைப் பெற்று பொறுப்பேற்று வந்திருக்கின்றார்கள். இப்படிப் பொறுப்பேற்று வந்திருக்கின்றவர்கள், ஜனநாயகத்தைக் கொலை செய்து, பொதுமக்களிலே பெரும்பாலானவர்களை, அரசியல் வாதிகளைக் கைது செய்தது கூட அல்ல, அரசியல்வாதிகளைச் சிறையிலே அடைத்ததைப்பற்றிக் கூட வருத்தம் தெரிவிக்க வில்லை, ஆனால் வீதிகளிலே சைக்கிளிலே சென்றவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள், கடைத் தெருவிலே சைக்கிள்களிலே சென்றவர்கள் லைட் இல்லாமல் சென்று விட்டார்கள் என்று சொல்லி 500, 600 பேரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, ஒவ்வொரு சைக்கிளுக்கும் என்ன ரேட் என்று வைத்து பிறகு திருப்பித் தரப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே வாய்க்காலிலே குளிப்பவர்களிடத்தில் சென்று, இங்கே என்ன கும்பல் என்று சொல்லி குளித்துக் கொண்டிருந்தவர்களை போலீஸ் அடித்து விரட்டி, கல்லால்கூட ஓடுகின்றவர்களைத் தாக்குகின்ற நிகழ்ச்சி கிராமங்களிலே நடைபெற்றிருக்கிறது. இப்படி நீட்டிக்கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொன்னால் ஜனநாயகம் கொலை செய்யப்பட்ட பிறகு நாட்டிலே இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. ஆனால் அதைப் பற்றி வருத்தம் தெரிவிக்காமல், இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அரசு அதற்கு எந்தவிதமான வருத்தத்தையும் தெரிவிக்கவில்லை.

[திரு. கே. சுப்பிரவேலு] [1977 ஜூலை 13

மாண்புமிகு ஆளுங்கட்சியின் கொறடா அவர்கள் பேசும்பொழுது டெலிபோன் டைரக்டரி மாதிரி இருக்காது என்றெல்லாம் விளக்கம் சொன்னார்கள். ஆனால் கோடிட்டாவது காட்ட வேண்டாமா? அதைத்தான் நான் கேட்கிறேன். இந்த நீண்ட அராஜகத்தைக் கோடிட்டுக் காட்ட வேண்டாமா?

ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். நடைபெற்ற கொடுமைகளைப்பற்றி விசாரிப்பதற்கு ஏற்பட்டிருக்கின்ற விசாரணைக் கமிஷனுக்குத் தகவல்களை விரைவாகத் தயாரித்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நீண்ட கதையாக எழுத வேண்டியதில்லை, அதற்கு வேலை பிடிக்கும், ஆனால் கோடிட்டுக் காட்ட வேண்டாமா? இவைகளையெல்லாம் இந்த உரையிலே நாங்கள் எதிர்பார்க்கிறோமே தவிர வேறொன்றும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்போலவே ஒரு சர்க்கார் மத்தியிலே ஜனதா அரசு பொறுப்பேற்றிருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, அவர்கள் தந்த தேர்தல் வாக்குறுதிகளை மிகத் தெளிவாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பிலே, மத்தியிலே ஆட்சியிலே இருந்தவர்கள் யார் யாரை நெருக்கடி நிலை காலத்தில் மிசாவைப் பயன்படுத்தி மிரட்டி சித்திரவதை செய்தார்களோ அதையெல்லாம் பற்றி இன்றைக்கு விசாரணைக் கமிஷன் பேரிலே அதற்கு நிவாரணம் தேட முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

வேலையிழந்தவர்கள், கட்டாயமாக வேலை நீக்கப்பட்டவர்கள் ஆகிய அவர்களையெல்லாம் மீண்டும் எடுத்து அவர்களுடைய குடும்பங்களிலே விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி அடுக்கடுக்காக விவரங்களை எழுதாவிட்டாலும் கோடிட்டுக் காட்டியிருக்க வேண்டாமா, அதைத்தான் நான் கேட்கிறேன். கவர்னர் உரையிலே நாங்கள் அதிகமாக எதிர்பார்க்கவில்லை. தமிழ்நாட்டிலே முன்னாலேயிருந்த கழக ஆட்சி இங்கே வேலை யற்றவர்களுக்கு, பூரணமான தகுதியான வேலை கிடைக்கின்ற



1977 ஜூலை 13] [திரு. கே. சுப்பிரவேலு]

வரையில் இளைஞர் அணி என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் குறைந்த பட்ச ஊதியம் என்று சொல்லி பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் இதயங்களிலேயிருந்து வடிகின்ற கண்ணீரைத் துடைக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்தது. அவர்கள் நெருக்கடி நிலைக் காலத்தில் வீட்டுக்கு அனுப்பப்படும் நிலைமை ஏற்பட்டது. அது இப்பொழுதும் தொடர்ந்து ஏற்படுவதாகவும் கன்னியாகுமரி பகுதி, நாகர்கோவில் பகுதிகளில் 10 பேரைக் கைது செய்திருக்கிறார்கள் என்றும் செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி இப்படிப்பட்ட காரியங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும், அவைகளுக்கெல்லாம் தீர்வு காணப்படும் என்று கோடிட்டுக் காட்ட வேண்டாமா? இதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோமே தவிர அதிகமாக எதிர்பார்க்கவில்லை.

இதைச் சொன்னால் ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள், எதிர்க் கட்சியிலே இருக்கின்ற காரணத்தால் எதிர்த்துப் பேச வேண்டுமென்று முறை எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதைத்தான் நான் திருப்பிச் சொல்லும் நேரத்தில், ஆளுங்கட்சியிலே இருப்பதால் அதை ஆதரித்துப் பேச வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு ஒன்றுமில்லாத கவர்னர் உரையை வேகமாக ஆதரிக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நெருக்கடி நிலை காலத்தில் கஷ்டப்பட்ட அவர்களுக்கு வசதிகளைச் செய்வோம் என்று சொல்லாவிட்டாலும் அவர்களுக்கு ஆறுதலான, மனநிறைவு ஏற்படும் அளவில் அதிலே வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதிலே நெருக்கடி நிலை பற்றி எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை.

(நண்பகல் 12.00)

தஞ்சை மாவட்டத்திலே காவிரி நீர் வருவதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், காவிரி நீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாகும். அது மிகப் பெரிய விவாதத்திற்குரிய பொருளாகும். அதைப் பற்றி நீண்ட நெடுங்காலமாக, கடந்த கால காங்கிரஸ் ஆட்சியிலிருந்து கழக ஆட்சி வரையிலே இருந்து வருகிற நெடுங்கதையாக மாறிக்கொண்டு வருகிற, தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்வை நிர்ணயிக்கின்ற பெரிய பிரச்சினை. அது தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் பயன் தருகிறதென்பதல்ல;

தஞ்சை மாவட்ட பிரச்சினை அல்ல. தமிழகத்திற்கு உணவு அளிக்கக்கூடிய பெரிய பிரச்சினை. அதுபற்றி விவரமாக பட்ஜெட்டிலே சொல்வதுபோல் சொல்ல வேண்டாம்---கோடிட்டுக் காட்ட வேண்டாமா? அதைத்தான் நாங்கள் கவர்னர் உரையிலே எதிர்பார்க்கிறோமே தவிர, ஏதோ விளக்கமாக, கதை, கதையாகச் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை.

தஞ்சையிலே இன்றைக்கிருக்கிற நிலைமை என்ன? குடி தண்ணீர் இல்லையென்கிறார்கள். நாங்களும் அறிகிறோம், குடி தண்ணீர் அளிப்பதில் சிரமமிருக்கிறது என்பதை. ஆனால், கழக ஆட்சியிலேதான் குடி நீர் வாரியம் அமைக்கப்பட்டது. அரசு, சுமை காரணமாக நேரடியாகக் கவனம் செலுத்த முடியாது, குடி நீர் பிரச்சினை கவனிக்கப்படாமல் போய்விடும் என்ற எண்ணத்தில், அதற்காக தனி வாரியம் அமைத்து, தனிக் கவனம் செலுத்தியது.

இந்திய வரலாற்றிலேயே முதன்முதலில் கழக ஆட்சியில் குடிநீருக்காகத் தனியாக வாரியம் அமைத்துக் கொடுத்து, திட்டங்களையெல்லாம் வேகமாக நடைமுறைப்படுத்தியது. அன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்டு, கிராமங்களிலெல்லாம் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் உருவாக்கப்பட்டிருக்கிற காரணத்தால்தான், இன்றைக்குத் தமிழகத்திலே அம்மை நோய், காலரா நோய் இல்லாமலிருப்பதை நாம் காண முடிகிறது. இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திலும் இல்லாத வகையில்---அங்கெல்லாம் வெளிநாடு சென்று பட்டம் பெற்றவர்களெல்லாம் முதலமைச்சர்களாக இருந்தார்கள்—இப் பிரச்சினையைத் தனிமைப்படுத்தி, இதற்கென தனி வாரியம் அமைத்த ஆட்சி, கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான் என்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நெருக்கடி நிலைமையில் எல்லாவற்றிற்கும் நெருக்கடி ஏற்படுத்தி, கட்டப்பட்டிருக்கிற மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளையும் நெருக்கடிக்கு ஆளாக்கி, அதிகாரிகளால் சீர்குலைக்கப்பட்டிருக்கின்றன. சீரான மின் இணைப்பு கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. பம்ப் செட்டுகளை ஓவர்ஹால் பண்ணவேண்டிய வேலைகள் தொடர்ந்து நடைபெற வேண்டிய காரணத்தால் இன்றைக்குப் பல நீர்த் தேக்கத் தொட்டிகளிலுள்ள பம்ப் செட்கள் வேலை செய்யாமல் முடங்கிக் கிடக்கிற பிரச்சினை உருவாக்கப்



பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பதவியிலிருந்து தூக்கி எறிந்த காரணத்தால், ஒரே வரியிலே தூக்கி எறிந்த காரணத்தால், ஒன்றிய நிதியை இப்பிரச்சினையைத் தீர்க்க ஒதுக்காமல், இருந்த காரணத்தால், ஒன்றியங்கள் சரியாக இயங்கவில்லை. அதனால், கிராம மக்களிடத்தில் இந்தக் குடி நீர் பிரச்சினை தலைதூக்கியிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே ஆளுங் கட்சியிலே இருக்கிறவர்கள், நாங்கள் ஆளுங் கட்சியிலே உள்ளவர்களாக—பொறுப்புள்ளவர்களாகப் பேசுவதாக எனக்குத் தெரியவில்லை. எப்படி எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் குறைகளைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதேபோல் ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் ஆற்ற இருக்கிற காரியங்களுக்காக நேரத்தைப் பயன்படுத்தாமல், அவர்களும் போட்டி போட்டுக்கொண்டு குறை சொல்வதில் நேரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பழைய கழக ஆட்சியைப் பற்றி குறை கூறினார்கள். மார்க்சிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் குறை கூறினார்கள், தேனும் பாலும் ஓடவில்லையென்று. நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறேன், தேனும் பாலும் ஓடிய செய்தியை. பழைய கழக ஆட்சியில் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தைப் போட்டு—தீர்மானத்தைப் போட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பி, 3 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அது தேனாக இனிக்கிற செய்தி இல்லையா? அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எந்தக் கட்சிக்காரர்கள் பாராளுமன்றத்தில் கேட்டார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தாரைத் தவிர? உழைக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு—உழுபவனுக்கு ஒரு பெரிய சாசனம் கொடுக்கக்கூடிய அளவிலே, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அந்தத் திட்டம்பற்றி அது நடைமுறைப்படுத்தப்படுமா என்று ஆளுநர் உரையிலே இருக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் எதிர்பார்ப்பதிலே என்ன தவறு இருக்கப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இதையெல்லாம் குறிப்பிட்டு கேட்கிற நோக்கில் அவர்கள் பழைய சம்பவங்களைக் களைப்படுத்துகிறார்கள். பேசுகிற ஆற்றலிருக்கிறது என்று வேண்டுமானால் கருதிக் கொள்ளலாமே தவிர, ஆற்றப் போகிற காரியங்களை, நடவடிக்கைகளை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் புலவர் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதை நான் வேறுவிதமாகக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். உற்பத்தி செய்வோர், உபயோகிப்போர் இவர்களுடைய நன்மையை மட்டும் ஒருதலைப்பட்சமாகக் கருதாமல், பொதுமக்களின் ஒருங்கிணைந்த தன்மையை அடிப்படையாகக் கொண்டு, அந்தக் கொள்கை பின்பற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், உற்பத்தி செய்வோர் ஒரு பகுதி. மற்ற பகுதியிலே இருக்கிற அத்தனை பேரும் வாங்கி உபயோகிப்போர். அந்த இரண்டு பேருக்கும் இலாப நோக்கோடு செய்தால் அதிலே என்ன தவறு ஏற்படும். உற்பத்தி செய்பவர்கள் ஒருபுறமென்றால், உற்பத்தி செய்பவர்கள் அல்லாத அத்தனை பேரும் வாங்கி உபயோகிப்பவர்கள். அந்த இரண்டு பேருக்கும் நன்மை பயக்கச் செய்வதுதான் அரசினுடைய உண்மையான உறுதியை வெளிப்படுத்துகிற, பிரதிபலிக்கச் செய்கிற காரியமாகும்.

ஆனால், ஆளுநர் உரையில் என்ன சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேருக்கும் இல்லாமல் பொதுமக்களுக்கு நன்மை என்ற அடிப்படையிலே நாங்கள் செயல்படுவோமென்று சொல்வது எப்படி இருக்கிறதென்றால், எங்களுடைய கொள்கை—காப்பிடலிஸம், கம்யூனிஸம், சோஷலிஸம் இவை மூன்றும் சேர்ந்தது தான்—அண்ணாயிஸம் என்று ஏமாற்றப்படுகிறதே, அதைப் போல் தான். இதிலே திட்டவட்டமாக இடைத்தரகர்களை நீக்கவேண்டுமென்று குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறதா? அவர்களுடைய இலாபத்தைக் குறைக்கப் போகிறார்களாம். இதற்கு முன்னால் ஆண்டவர்கள் எல்லாம் குறைக்க முயற்சித்துப் பார்த்து விட்டார்கள். முடிய வில்லை. பிரச்சினையிலிருந்து நழுவிப் போகிற நிலைதான் உரையிலே காணப்படுகிறது. இதைக் குறை சொல்லக்கூடாதா? எதிர்க்கட்சியினுடைய நோக்கமே விடப்பட்டிருப்பதை, நழுவிப் போயிருப்பதை, செய்ய மறந்ததை சுட்டிக்காட்டுவதுதான். எதிர்க் கட்சியினுடைய கடமையே அது தான். அவர்கள் நம்மை பேசப் பேச பொறுப்புணர்வுடன் நடந்து கொள்கிறோம் என்று நல்ல சர்ட்டிஃபிகேட் கொடுப்பதாக நான் எடுத்துக்கொள்கிறேனே தவிர, நாங்கள் பேசத்தான் வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 நிமிடம் ஆகி விட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.





திரு. கே. சுப்பிரவேலு: ஆளுங்கட்சி உறுப்பினர் ஒன்றைப் பற்றி பேசினார். 'உறவுக்குக் கரம் கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று எங்களுடைய தலைவர்கள் மத்திய சர்க்காரைப் பார்த்து, மாநிலத்தினுடைய உரிமைகளைப் பெறுவதற்காக, ஆணித்தரமாக, மனம் புண்படுமே என்று பார்க்காமல், அவர்களுடைய நயனிற்காக ஐயப்பா சரணம் என்று சொல்லி விடாமல், உறவுக்குக் கரம் கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று தெளிவான, உண்மையான உறுதியைக் காட்டினார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் எப்படியாவது நிலைமைகளை சரிப்படுத்திக் கொள்ள நல்லவனாக நடிக்க முயற்சி செய்யவில்லை. தெளிவாகச் சொன்னார், உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கரம் கொடுப்போம் என்று. அதை மறந்து விட்டு, ஆளுங்கட்சி உறுப்பினர் பேசும்போது . . .

டாக்டர் கே. சமாசம்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினரவர்கள் நான் பேசிய பேச்சைக் குறிப்பிட்டுத்தான் சொல்லியிருக்கிறார் என்று திடமாக நம்புகிறேன். உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்பது மாண்புமிகு இன்றைய எதிர்க் கட்சித் தலைவர்—முன்னாள் முதல்வர்—கருத்து என்பதை நான் அறிவேன். நானும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே 22 ஆண்டுகளாக பொறுப் பேற்றிருந்தவன். நான் சொன்னதெல்லாம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்பதை உரிமைக்கு உயிர் கொடுப்போம் என்றும் உறவுக்குக் கை கொடுப்போம் என்ற அவரது கருத்தை, உறவுக்குத் துணை இருப்போம் என்றும் மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். உரிமை என்பது என்ன என்பதைப் பற்றி தமிழறிந்த அனைவரும் அறிவீர்கள். குரல் கொடுப்பது என்பதைவிட உயிர் கொடுப்பது என்பது சிறந்தது, தியாக மானது, பொன்னானது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமாசம் அவர்கள் அன்றைக்குப் பேசும்போதே கவனித்தேன். அவருடைய பேச்சை அன்றைக்குக் கவனித்தேன், அதனால்தான் சொல்கிறேன். 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்கின்ற வாட்டுவாத தத்துவத்திற்கு

மாறுக' என்ற இதே வார்த்தையைப் பயன்படுத்தினார். நேற்றல்ல, நேற்றைய முன்தினம் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பிரமணியம் பேசும்பொழுது, உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று அந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அதை வரவேற்கிறேன் என்று கூறினார். ஆகவே, டாக்டர் சமரசம் பேசியதை ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்களே ஏற்றுக் கொள்ளவில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தை மட்டும் வலியுறுத்தினேனே தவிர மற்றவர்களுடைய கருத்திலே குறுக்கிட விரும்பவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சமரசத்தின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வரும்போது இந்த சபை நடவடிக்கையின் விதிமுறைகளுக்கு மாறுபாடு இருக்குமானால் அதைப்பற்றி மட்டும் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தொடர்ந்து மாண்புமிகு சுப்பிரவேலு அவர்களை ஒரே நிமிடத்தில் முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. சுப்பிரவேலு:** தலைவர் அவர்களே, நான் பேச வந்ததற்கே காரணம், மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் வரட்டு வேதாந்தம் என்று சொன்னார்கள். அதைத்தான் குறிப்பிட வந்தேன். என்னுடைய தலைவர் அவர்களே அதைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டார்கள். எங்கள் தலைவர் அவர்கள் பேசுகிற ஒவ்வொரு வரியும் சாகா வரம் பெற்ற வார்த்தைகள் என்று சொல்லி அந்த அளவிலே இந்த உரையிலே எந்தவிதமான புதுமையும் இல்லை புரட்சியும் இல்லை என்று சொல்வதிலே எந்த விதமான தவறும் இல்லை என்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.





**திரு. கே. பண்ணை சேதுராம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்ஃபர்மேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது வெளிநாட்டில் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் முதலமைச்சர் ஆக இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்சி கூட கலைஞர் அவர்கள் ஆட்சி மாதிரி இல்லை என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டம் பெற்று இங்கே முதலமைச்சராக இருந்திருக்கிறார். அவருடைய பெருமையையும் குறைக்கின்ற வகையிலேதான் கலைஞர் ஆட்சி மாதிரி பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று சபாநாயகர் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பிரவேலு அவர்கள் பேசும்போது வேறு மாநிலங்களோடு தான் நம்முடைய மாநிலத்தை ஒப்பிட்டார்களேதவிர, அறிஞர் அண்ணாவோடு ஒப்பிடவில்லை. அண்ணாவைக் குறித்துத்தான் பேசினார் என்று வேண்டுமென்றே கற்பனை செய்து, ஒரு கூற்றினை வெளியிடுவது நல்லதல்ல. அதுமாத்திரம் அல்ல. அண்ணா அவர்கள் யேல் பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டம் பெறவில்லை என்பதையும் நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது டாக்டர் பட்டம் அல்ல; சப் ஃபெலோஷிப் என்கின்ற ஒரு நிலை.

* **திரு. கே. பி. காத்தமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எங்கள் கட்சி உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் முன்மொழிந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து பேச முற்படுகிறேன்.

நமது நாட்டில் தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினையே அழித்து விடுவோம் என்று சொன்ன பாரதி வாழ்ந்த நாட்டில், சுதந்திரம் பெற்று 30 ஆண்டுக் காலத்தில், இரண்டு அரசாங்கங்கள் ஆட்சி நடத்திய பிறகும் கூட இங்கே இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியவில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்கான திட்டத்தை நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன்.

[திரு. கே. பி. காந்தமுத்து] [1977 ஜூலை 13

கிராமப் பகுதிகளிலே 70 சதவிகித மக்கள் வாழ்கிறார்கள். இந்த 30 ஆண்டுக் காலத்தில் அவர்களுக்கு குடிநீர் கூட கிடைக்க வில்லை. தேர்தல் காலங்களில் கிராமங்களுக்குச் செல்லுகின்ற போது அந்த மக்கள் எல்லாம் இரண்டு மைல் மூன்று மைல் நடந்து கேணிகளில் தண்ணீர் எடுத்து வந்ததை, அந்த அளவு அல்லல் பட்டதை நாங்கள் பார்த்தபோது இந்த நாட்டிலே நீங்கள் எங்களுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம். நீங்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன், முதலில் எங்களுக்குக் குடிதண்ணீர் வழங்குங்கள் என்றுதான் கேட்டார்கள்.

என்னுடைய மாபெரும் புனிதத் தலைவர், புரட்சித் தலைவர், டெல்லி மாநகரிலே பிரதமர் அவர்களைச் சந்தித்து விட்டு வந்த பிறகு, உங்களுடைய அரசு என்ன செய்யப்போகிறது என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள். அப்போது குடிநீர் பிரச்சினை தீரவேண்டும் என்பதுதான் எங்களுடைய முதல் கடமை என்று சொன்னார்கள். அதைக் குறிப்பாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள், குடிநீர் வடிகால் வாரியத்தை முதன் முதலில் தங்கள் அரசுதான் அமைத்தது என்று சொன்னார்கள். அதை மக்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை நாட்டு மக்கள் தேர்தல் மூலமாக விளக்கிக் காட்டிவிட்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை முதன்மையாக நம்முடைய கவர்னர் உரையிலே கோடிட்டுக் காட்டியமைக்குப் புரட்சித் தலைவர் அவர்களையும், கவர்னர் அவர்களையும் உளமார வாழ்த்துகிறேன்.

இங்கே லஞ்ச ஊழலற்ற அரசு அமைப்போம் என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரன்புமிக்க புரட்சித் தலைவர் லஞ்ச ஊழலற்ற அரசு அமைப்பேன் என்று சொன்னது வரவேற்கத்தக்கது. கிராமங்களிலே ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. எங்கே சென்றாலும் ஒரே லஞ்சமாக இருக்கிறது. தாலுகா அலுவலகத்திலே லஞ்சமாக இருக்கிறது. மற்ற அலுவலகங்களிலும் லஞ்சம் இருக்கிறது. அதை ஒழிப்பதற்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டுகிறேன்.



1977 ஜூலை 13] [திரு. கே. பி. காந்தமுத்து]

பாசனத் திட்டத்திற்கு முதன்மை அளித்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், பஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்றால் சிறு பாசனத் திட்டம் தான் முக்கியம். சிறு பாசனத் திட்டம் என்று சொல்லும்போது, கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற திட்டத்திலே, நாகை நல்லூர் வாய்க்கால் திட்டத்தையும் சேர்த்துச் செய்து கொடுப் பார் என்று நம்புகிறேன். என்னுடைய தொகுதியிலே கொல்லி மலை அணைக்கட்டுத் திட்டத்தை இதற்கு முன்பிருந்த அரசு திட்டி அது ஏட்டளவிலேயே இருக்கிறது. பாசனத்திற்கு முன்னுரிமை கொடுக்க முன்வந்துள்ள புரட்சித் தலைவர் அவர்கள் கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டத்தையும், நாகை நல்லூர் வாய்க்கால் திட்டத்தையும் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையில் கவர்னர் உரையில் சிறு பாசன திட்டங்களுக்கு முன் உரிமை கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கிராமக் கைத்தொழில்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் வாழ்கின்ற ஏழை எளிய விவசாய மக்கள் வருஷத் திலே 2, 3 மாதங்கள்தான் உழவடை செய்கிறார்கள். அவர் களுக்கு மாற்றுத் திட்டமாக, குடிசைத் தொழில் அமைத்துக் கொடுத்து, சிறு தொழில் அமைத்துக் கொடுத்து ஆவன செய்யப் படும் என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் நான் முழு மனதுடன் வரவேற்கிறேன்.

அடுத்து உர உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். தற்போது வாங்குகின்ற விலைக்கும் விற்கின்ற விலைக்கும் கட்டுப்படியாகவில்லை. உரத்தை தாமே தயாரித்து, உர உற்பத்தியைப் பெருக்கிக் குறைந்த விலையில் விவசாயி களுக்குக் கொடுக்கப் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதையும் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

அடுத்து, சுகாதாரத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் வரவேற்கிறேன். வீட்டுமனைப் பட்டா கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதற்கு முன் இருந்த அரசெல்லாம் நாங்கள் வீட்டுமனைப் பட்டா கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் பாதிப்பேருக்கு மேல் பட்டா கொடுக்கப்படாமலே இருக்கிறது.

[திரு. கே. பி. காந்தமுத்து] [1977 ஜூலை 13

அங்கே சட்டப்பிரச்சினை உருவாகி கோர்ட்டுகளிலே இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் பட்டாக்கள் கொடுக்கப் போவதாக கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

மதுவிலக்கைப் பற்றி தீவிரமாக அமல் நடத்தப்போவதாக கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். மக்களிடத்திலே நாங்கள் ஓட்டுக்கேட்கச் சென்றபோது எல்லா மக்களும் கண்ணீர் வடித்தார்கள். அங்கே தண்ணீருக்குப் பதிலாக சாராயத் தண்ணீர் தான் கிடைக்கிறது என்று பொதுமக்கள், ஏழை எளிய மக்கள், குறிப்பாக தாய்மார்கள் எங்களிடத்திலே நாங்கள் ஓட்டுக் கேட்கச் செல்லும்போது சொன்னார்கள். அப்படிப்பட்ட மது விலக்குத் திட்டத்தை தீவிரமாக அமல் நடத்தப் போவதாக கவர்னர் உரையில் கூறியிருக்கிற காரணத்தால், அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிற மாண்புமிகு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வரும் காலத்தில் என்னென்ன திட்டங்களை, எந்தெந்தக் கொள்கை அடிப்படையில், எந்தெந்த வகையில், எந்தெந்த காலவரையறைக்குட்பட்டு நிறைவேற்றும் என்பதற்கான ஒரு முன் முடிவை ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதிலே மிக முக்கியமாகச் செய்வோம் என்று குறிப்பிடுவது, தூய்மையான, திறமையான ஆட்சியை அமைப்பது எங்களுடைய ஆட்சியின் முதல் குறிக்கோளாக இருக்கும் என்று ஆளுநர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆட்சி தூய்மையாக இருக்கவேண்டுமானால், ஆட்சியை நடத்துபவர்களிடத்திலே திறமை இருக்கவேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்



1977 ஜூலை 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

கூடிய ஒரு உண்மையாகும். ஆகவே, அந்தத் தூய்மையான ஆட்சியை நடத்துவதற்கு ஆட்சியை நடத்தக் கூடியவர்கள், ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருப்பவர்கள் திறமையாகச் செயல்பட வேண்டும். திறமையாக இருக்கவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. அந்தக் கருத்தினை நான் வரவேற்கிறேன். அந்தத் திறமையைக் கொண்டு தான் நாம் ஆட்சியிலே தூய்மையைக் கொண்டு வரமுடியும் லஞ்சத்தை ஒழிக்க முடியும், பாரபட்சமுள்ள போக்குகளை ஒழிக்க முடியும் என்பது கவர்னர் கூறியிருக்கிற கருத்திலிருந்து நமக்குத் தெரிய வருகிறது.

இந்தத் திறமையைப் பயன்படுத்துவதன் மூலம் ஊழலை ஒழிக்க வேண்டுமென்று சொல்லும்போது அந்த ஊழல் ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்திலே தான் இருக்கிறது என்ற கருத்துக்கு இடம் தராமல் அது எந்த இடத்திலும் இருக்கலாம், எல்லா இடத்திலும் இருக்கலாம், இருக்கிறது என்ற ஒரு எண்ணத்தை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருப்பவர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த 17 மாதங்களாக தமிழ் நாட்டில் மக்களாட்சி இல்லை. குடியரசுத் தலைவர் ஆட்சி நடந்து கொண்டு இருந்தது. குடியரசுத் தலைவர் ஆட்சி என்று சொன்னால் அது அதிகாரிகளின் ஆட்சி. ஃபார் ஆல் பிராக்டிகல் பர்பசஸ், அது அதிகாரிகளின் ஆட்சி. அந்த அதிகாரிகளுடைய ஆட்சியிலே எந்த அளவுக்கு நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன, லஞ்சத்திற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஊழலுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் கூட கணக்கில் கொண்டு ஏதோ ஊழல் என்று சொல்லப்படுவது அமைச்சர்களுக்கோ, சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, சட்ட மேலவை உறுப்பினர்களுக்கோ மட்டும் என்பதை நம் கவனத்திற்கொண்டு கருதக்கூடிய ஒரு பொருளாக இல்லாமல் அது அதிகாரிகளிடத்திலும் இருக்கும் என்பதை நினைவில் வைத்துப் பார்க்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன். இதைக் கவனத்தில் வைத்து கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும் உள்ள நிர்வாகச் சீர்கேடுகளை, பாரபட்சமற்ற முறையில், ஊழல்கள், லஞ்சம் வாங்கும் நிலைமைகள் ஆகியவற்றை ஒழிப்

பதற்கு "காம்பெடன்ஸ்" என்று சொல்வார்களே, அத் திறமையைப் பயன்படுத்தி தூய்மையான ஆட்சி—க்ளீன் அட்மினிஸ்ட்ரேஷனை—ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, "சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஷிப்" பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய, மாநில உறவு முறைகளைப் பற்றி இங்கே சொல்லி இருக்கிறார்கள். இது வரவேற்கக் கூடிய ஒன்று. ஆட்சியில் யார் இருந்தாலும் அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்வது எங்களுடைய நிலைமை என்பதை எல்லோரும் அறிவார்கள். அதை இன்றுதான் ஆதரிக்கிறோம் என்பதல்ல, கடந்த காலங்களிலும் மிகவும் தீவிரமாக அந்தக் கருத்தை ஆதரித்துக்கொண்டு இருக்கிறோம், இப்போதும் ஆதரிக்கிறோம். ஆகையால் அந்தக் கருத்து இந்த கவர்னர் உரையில் வலியுறுத்திச் சொன்னதற்கு நான் இந்த ஆட்சியைப் பாராட்டி, கவர்னர் உரைக்கு என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஷிப் என்று வரும்போது மத்திய மாநில உறவு முறைகளிலே இந்த மன்றத்திற்கு இருக்கும் அதிகாரங்களையும் இந்த ஆட்சிக்கு இருக்கும் அதிகாரங்களையும் எந்த வகையிலும் பயமின்றி அபாயமின்றி நிலைநாட்டுவதற்கு இந்த அரசாங்கம் முழுமுயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதிலே அரசியல் இருக்கக் கூடாது. அரசியல் காரணங்களுக்காக சில நேரங்களில் நெளிவு சுளிவுகளை எல்லாம் காட்டுகிறார்கள். மத்திய அரசாங்கம் ஏதாவது வரையறைமீறி நடந்தால் அதை எப்படித் தட்டிக்கேட்பது என்ற அரசியல் சூழ்நிலை இப்படி இருக்கிறதே என்ற நிலைகள் எல்லாம் இல்லாமல், மத்திய அரசு வரையறையை மீறுமானால் நம்முடைய வரைமுறையை அவர்களுக்கு உணர்த்துவதற்கு நாம் எப்போதுமே தயங்கக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நல்ல மறுமலர்ச்சி நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலும் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே மத்தியிலே ஆட்சி செய்கிற ஜனதா ஆட்சி இல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பாண்டிச்சேரியிலும் இதே கட்சியினுடைய ஆட்சி தான்.



இது மாத்திரமல்ல, இன்றைக்கு மகாராட்டிர-வாடி கோமண்டக் கட்சியின் ஆட்சி கோவாவிலே ஏற்பட்டிருக்கிறது. திரிபுராவிலே கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. கேரளாவிலும் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது.

அது மாத்திரமல்ல, அண்மையில் நடந்த ஒரு மிகப் பெரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் காஷ்மீரில் நடந்தது. இதுவரையிலும் முறையாக அங்கு தேர்தல் நடைபெறவில்லை என்று பத்திரிகையிலும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். காஷ்மீரத்திற்குள் இருக்கும்—ஆட்சிகள் 370-ஆவது பிரிவின்படியான விசேஷ அதிகாரம் தொடர்ந்து இருக்க வேண்டுமா வேண்டாமா என்ற அடிப்படையில் நடந்த தேர்தல் அது. அந்த விசேஷ அதிகாரம் நீடிக்க வேண்டும் என்று அந்த மாநிலத்து மக்கள் ஓட்டளித்திருக்கிறார்கள்.

காஷ்மீர் மாநிலத்திற்கு என்று தனிப்பட்ட விசேஷ அதிகாரங்களை அரசியல் சட்டம் வரையறுத்துத் தந்து சமஷ்டிக்கு உட்பட்ட சுயநிலையிலே இயங்கக்கூடிய அதிகாரம் நீடிக்கப்பட வேண்டுமென்று அம்மாநில மக்கள் ஓட்டளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புக்குப் பிறகு மத்தியிலே இருக்கிற பாரதத்தின் பிரதம அமைச்சர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்களும் உள்துறை அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு சரண்சிங் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது "மோர் ஆர் லெஸ், எ பிளபிசைட்". இந்தப் பிரச்சினையின்மீது நடைபெற்ற தேர்தலாகவே இது கவனிக்கப்பட்டு இருக்கிறது என்று பத்திரிக்கையில் எழுதுகின்ற இந்த நேரத்தில் நாம் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று இந்த ஆட்சியின் மூலம் கேட்பது நியாயமான ஒன்றாகும்.

இந்த நிலையை வலியுறுத்திச் சொல்வதற்கு எப்போதும் நாம் தயங்கக் கூடாது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிற அதே நேரத்தில் நம்முடைய மேற்கு வங்காள நிதி அமைச்சர் மாண்புமிகு அசோக் மித்ரா அவர்கள் நேற்றைக்கு முன்தினம் மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் பேசும் போது ஒரு முக்கியமான பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார்கள். "ஃபைனான்சியல் அலோகேஷன்" பிட்வின் சென்டர் அண்ட்

ஸ்டேட்". இன்றைக்கு மாநிலத்திலுள்ள சர்க்காரின் நிலைமை என்ன என்று சொன்னார்கள். ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்ப பைனான்ஸ் கமிஷன்களை நியமித்து அந்த கமிஷன்கள் மூலமாகப் பரிந்துரை செய்யப்படும் அடிப்படையில் மத்திய அரசு சேர்க்கிற நிதியை மாநிலங்களுக்கு பங்கிட்டுத் தரும் நிலை இருக்கிறது என்பதையும் இந்த நிலைமையில் அடிப்படையான மாறுதல்கள் தேவை, அந்த மாறுதல்கள் கொண்டு வரப்படுமானால் நாட்டிலே இருக்கும் மாநில அரசுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்தமான கருத்துக்களை உருவாக்குவதற்கு இதுதான் தருணம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அந்தக் கருத்தின் அடிப்படையிலே நாம் எந்த அடிப் படையில் இந்த மாநிலத்தின் நிதிநிலையை செம்மைப்படுத்த வேண்டும், எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிகமான வருமானங்களுக்கு இருக்கிற நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும், அப்படி நிதி ஆதாரங்களைப் பெருக்குவதின் வாயிலாக மத்திய அரசாங்கத்தின் வளர்ச்சிக்காகச் சேர்க்கப்படும் நிதி யிலிருந்து நாம் எவ்வளவு அதிகமான பங்கைப் பெறவேண்டும் என்று திட்டமிட்டு முடிவான கருத்தை உருவாக்க ஃபைனான்ஸ் கமிஷன் இப்போது ஏற்பட இருக்கிறது, அந்த ஃபைனான்ஸ் கமிஷன் ஏற்படுவதற்கு முந்தியே ஒரு நிலைத்த கருத்தை உருவாக்கி, அதை வலியுறுத்தி, மாநிலங்களுக்கு அதிகமான நிதியைப் பெறுவதற்கும் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதே நேரத்தில் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். மத்திய மாநில அரசுகளுடைய தொடர்புகள்—உறவுகளைப் பற்றிச் சொல்லும்போது—இன்னொன்றையும் சொல்ல ஆசைப் படுகிறேன்.

சேல்ஸ் டாக்ஸ் அப்புறப்படுத்தப்பட்டு, எக்சைஸ் ட்யூட்டியைக் கொண்டு வரலாம் என்று மத்திய அரசாங்கம் யோசித்துக் கொண்டிருப்பதாக நமக்கு இன்றைக்குத் தெரிய வருகிறது.



அதைப் பற்றி இந்த அரசாங்கம் இதுவரையில் என்ன கருத்தைத் தெரிவித்திருக்கிறது? இதை எதிர்த்து மத்திய அரசுக்கு தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்களா? ஏனென்றால், எல்லோருக்கும் தெரியும், சேல்ஸ் டாக்ஸ்—விற்பனை வரியைக் கொண்டு வந்த மாமேதை ராஜாஜி அவர்கள் இதை ஒரு காமதேனு என்று வருணித்ததும், அந்தக் காமதேனுவை விட்டு விட்டு—எப்போது எவ்வளவு நமக்குத் தேவையோ அவ்வளவு வரியை, நிதி ஆதாரத்தைப் பெற்றுத் தருகிற காமதேனுவை விட்டு விட்டு—அதாவது மத்திய அரசு அந்தக் காமதேனுவை மாநில அரசிடமிருந்து பிடுங்கிக்கொண்டு சென்ட்ரல் கவர்ன் மெண்டே 'கலெக்ட்' செய்து கொடுக்கின்ற முறைகள்—அதற்காக எக்சைஸ் ட்யூட்டிகளை சப்ஸ்டிட்யூட் செய்கின்ற நிலைமைகளும், மாநில நிதி அடிப்படையில் மிகப் பெரிய ஆபத்தை உருவாக்கும். அதற்கான எதிர்ப்புகளை இந்த அரசு ஏற்கெனவே தெரிவித் திருக்க வேண்டும். தெரிவித்திருந்தால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அல்லது தொடர்புள்ள அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அதற்கான அறிக்கை கொடுப்பது நன்றாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதே நேரத்தில் 42-வது அமெண்ட்மெண்ட் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படும்போது கல்வி என்பது கன்கரன்ட் லிஸ்டிலே கொண்டு செல்லப்பட்டது. இப்போது மத்திய கல்வி அமைச்சர் சொல்கிறார், கன்கரண்ட் லிஸ்டுக்கு எடுத்துச் சென்ற அந்த கல்வித் துறை—42-ஆவது திருத்தம்—அமெண்ட்மென்ட் செய்ய தற்போது மத்திய அரசின் கவனத்தில் இருக்கிறது. அந்தக் கல்வித் துறை மீண்டும் மாநிலங் களுக்கு அளிக்கப்படுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இது விஷயமாக அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் கேட்டிருக்கிறார்களா, அப்படி இருந்தால் என்ன விளக்கத்தைத் தந்து இருக்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் இந்த அவைக்கு, இது அவசரமான ஒரு விஷயமாகக் கருதி, அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதுவும், மத்திய மாநிலங்களுடைய உறவு நிலையைப் பற்றி அரசு உடனடியாக கவனிக்க வேண்டிய விஷயம். இதை அரசு கவனிக்கும் என்று நான் நம்புகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 13

அப்படி இந்த அரசு எடுக்கின்ற எல்லா முடிவுகளுக்கும், எல்லாத் தீர்மானங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் இந்த மன்றத்தின் இறையாண்மையை இந்த மாநிலத்தின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இந்த அரசாங்கம் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் நானும் என்னுடைய கட்சியும் நிச்சயமாக முழு அளவில் ஆதரவு கொடுப்போம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் அரசியல் சட்டத்தை உருவாக்கிய 'பவுண்டிங் பாதர்ஸ் ஆப் தி கான்ஸ்டிட்யூஷன்' அரசியல் அமைப்புத் தந்தைகளில் ஒருவராக எங்களுடைய கட்சியின் தலைவர் மாமேதை கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்—மாநிலங்களுக்கு எவ்வளவு அதிகாரங்கள் வேண்டும் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதே கருத்தைத்தான் நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு வருகிறோம். (மணியடிக்கப்பட்டது) திரு. மூக்கையாத் தேவர் அவர்களும் தன்னுடைய நேரத்தை எனக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இதை சபாநாயகர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்போது முக்கியமான பிரச்னைகளைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறேன். முடித்து விடுகிறேன். என்ன செய்வது, பெரிய பெரிய பிரச்னைகளை இங்கே வைத்து இருக்கிறார்கள். ஆகவே, இதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, டு லாங்குவேஜ் பார்முலா பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது அண்ணாவின் கருத்து. அண்ணாவிற்குப் பிறகு ஆட்சி செய்தவர்களுடைய கருத்து. இன்றைக்கு இருக்கும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகவும் இருக்கிறது. இந்த நேரத்தில் அண்ணாவின் கருத்தே இந்த அவையில் மேலோங்கி இருப்பதற்காக நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

நேற்றுப் பேசிய நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைத் தலைவர் மன்றத்தின் தன்மை அண்ணா எந்தக் கொள்கை ஏற்றுக்கொண்டு இருந்தார்களோ அந்த அண்ணாவின் தத்துவத்திற்குத்தான் பெரும்பான்மை இருக்கிறது என்பதையும்



1977 ஜூலை 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

வலியுறுத்திச் சொன்னார்கள். அந்த அண்ணாவின் தத்துவத்தைப் பொறுத்தவரையிலும் நாம் எல்லாம் ஒன்றாக இருக்கிறோம் என்ற கருத்து உருவாகி இருப்பது என்னைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அந்தக் கருத்து எப்போதும் இருக்க வேண்டும். அந்தக் கருத்து பரவவேண்டும். அண்ணாவின் தத்துவம் நிலைத்து இருப்பதற்கு நிலையான எண்ணங்கள் உருவாக வேண்டும். அந்தக் கருத்து இங்கே உருவானால், அண்ணாவின் தம்பிகள் எல்லாம் எங்கேயிருந்தாலும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தக் கருத்து நிலைக்கட்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

இந்த இரண்டு மொழிக் கொள்கையை நீங்கள் அமல் படுத்துகிற நேரத்தில், 'லிங்குவிஸ்டிக் மைனாரிட்டிகளுக்கு' சிறுபான்மை மொழியினரைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்த மாநிலத்தில் உருதுமொழி பேசுபவர்கள் கணிசமாக இருக்கிறார்கள். உருதுபேசும் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்ற குறை இருக்கிறது. கல்லூரியில் படிக்கும் மாணவர்களாக இருந்தாலும் சரி, உருது ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. அவர்களுக்குப் போதிய வசதிகள் செய்யப்படவில்லை. ஆகவே, இந்த சிறுபான்மை மொழியினருக்கும் பாதுகாப்புத் தரப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அப்படிப் பட்ட பாதுகாப்புத் தரப்படும் என்று இந்த கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்குமானால் அது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்து இருக்கும். இருந்தாலும் அரசில் இருப்பவர்கள் இந்தப் பிரச்னையில் தனிக் கவனம் செலுத்தித் தீர்வு காணும் முறையில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

நாட்டிலே அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலே முக்கியமானது எடிபிள் ஆயில். நாம் சாப்பாட்டிற்கு உபயோகிக்கும் எண்ணெய் வகைகளில் கடலை எண்ணெய் வானத்தில் பறந்து கொண்டு இருக்கிறது. வாரத்திற்கு ஒரு முறை குளிக்கலாம் என்றால்—வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு என்பது பழைய பழமொழி—அந்த நல்லெண்ணெய் விலையும்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 13

நல்ல நிலையில்லாமல் மார்க்கெட்டில் இருக்கிறது. இப்படி எல்லா வகையிலும் கஷ்டமாக இருக்கிறது. இது என்னை விட பெண்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் தினமும் இப்படி விலை ஏறுகிறதே என்று முணுமுணுத்துக் கொண்டே இருக்கிறார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதைத் தடுக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். ஆனால், நம்முடைய மத்திய வணிகத் துறை அமைச்சர் மோகன் தாரியா அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

எடிபிள் ஆயிலைப் பற்றி, எடிபிள் ஆயில் லைசென்சை துஷ்பிரயோகம் செய்ததாக 13 வழக்குகளை சி.பி.ஐ. இலாக்காவினர் போட்டிருக்கிறார்கள். இந்த வழக்குகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் யார் யார்—அல்லது அவர்களுடைய பேரைக் கூட சொல்ல வேண்டாம், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்று தெரிவிக்க வேண்டும். அதேபோல, சி.பி.ஐ. இலாக்காவினர், 2,143 நபர்களைப் பற்றி விசாரணை—டிபார்ட்மெண்டல் ஆக்ஷன்—எடுத்திருப்பதாக ஒரு குறிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள், என்ன காரணத்திற்காக அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அதன் விளைவுகள் என்ன என்பதைப் பற்றி தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி—அதே நேரத்தில் அதைப் பற்றி ஒரு கார்ப்பரேஷன் அமைக்க வேண்டுமென்ற சிந்தனையில் இருக்கிறார் என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படி அத்தகைய கார்ப்பரேஷனை அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்பதைக் கேட்டு இங்கே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, 3,675 நபர்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேருக்கு அப்படிப்பட்ட லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் தெரிந்தால், அந்த லைசென்சை எப்படிப் பயன்படுத்துகிறார்கள், சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால் உணவுத் துறை என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை எல்லாம் தெரிந்து



1977 ஜூலை 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

கொள்ளலாம். ஆகவே, தயவுசெய்து அமைச்சரவர்கள் அந்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு, இதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை எந்த அரசு செய்தாலும் பாராட்டுவேன். இதிலே இந்த அரசு குறிப்பாக எடுத்திருக்கிற தீவிரமான நிலையைப் பாராட்டுகிறேன், மனதாரப் பாராட்டுகிறேன். இந்தக் கொள்கையை எவ்வளவுதூரம் நடத்திக் காட்டுகிறீர்களோ, எவ்வளவுதூரம் தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறீர்களோ, அந்த அளவுக்கு, மனிதர்களுடைய, மனிதாபிமானமுள்ள அத்தனை மனிதர்களுடைய நல்லெண்ணமும் இந்த அரசுக்கு இருக்கும் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பாரத பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கூட, நேற்றைய முன்தினம் பேசும்போது, இதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தை சமாளிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார். அவ்வளவு வருமானத்தை இழந்தாலும் பரவாயில்லை என்று அண்ணா அவர்கள் சொன்னதைப் போலவே மொரார்ஜி தேசாய் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். 'வருமானத்தை இழந்தாலும் பரவாயில்லை. ஆனால் நாடு முழுவதும் ப்ரொகிபிஷனை அமல் செய்வது நல்லது' என்பதாக எவ்வளவு சரியான நிலையை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். 25 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்; தயவுசெய்து முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் இருவர் சார்பாகப் பேசுகின்றேன். எனினும் சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்குத் திட்டத்தை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'தண்ணீர் கிடைப்பதில்லை, ஆனால் 'அது' கிடைக்கிறது என்று மக்கள் குறிப்பிடுகிறார்கள்' என்று சொன்னார். இது உண்மை. இதை மறைத்துப் பயன் இல்லை.

தேர்தல் காலத்தில் என்ன என்ன வேண்டுமென்று கேட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். இதில் ஒளிவு மறைவு இல்லை என்றாலும் வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. சில விஷயங்கள் சொல்லித்தான் புரியவேண்டும். சில விஷயங்களை உணர்ந்துகொண்டுதான் புரிந்துகொள்ள வேண்டும். கள்ளச் சாராயம் அவ்வளவு தாராளமாகக் கிடைக்கிறது. ஓர் உண்மையை நான் இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். கள்ளச்சாராயம் விற்பதற்கு போலீஸ் ஸ்டேஷன்களில் வைத்தே பொதுக் குத்தகைக்கு விடுகிற நிலை இன்றைக்கு இருக்கிறது. இது தவறாக இருக்குமானால் நான் ராஜிநாமா செய்துவிடுகிறேன். வாரத்திற்கு 300 ரூபாய், வாரத்திற்கு 400 ரூபாய் என்று போலீஸ் அதிகாரிகளே உட்கார்ந்துகொண்டு பொதுக்குத்தகை விடுகிறார்கள்.

THE HON. THIRU S. RAMACHANDRAN: I would request the hon. Member to be specific.

திரு. எம். ஏ. லத்திப்: ஸ்பெசிபிக் என்றால் ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றிச் சொல்வது. என்னைப் பொறுத்தவரையில் இது மாநிலம் முழுவதும் நடந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிப்பட்ட, குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றி இருந்தால் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஒத்துவரும். பொதுவாக அப்படிச் சொல்வது அரசாங்கத்திற்கு உதவுவதாக ஆகாது என்றே சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்திப்: வேண்டுமானால் சில குறிப்புகளை, எழுத்து மூலமாக, இரகசியமாக நான் தருகிறேன். சில விஷயங்களை வெளிப்படையாகச் சொல்லிவிட்டால் திருடர்கள் உஷாராகிவிடுவார்கள். அவர்களை உஷார்படுத்த நான் விரும்பவில்லை. நான் சொல்வதில் உண்மை இருக்கிறது. தயவுசெய்து நடவடிக்கை எடுங்கள். மாநிலம் முழுவதும் அங்கங்கே உள்ள போலீஸ் அதிகாரிகளை டிரான்ஸ்பர் செய்யுங்கள். ஒரே இடத்தில் இருந்து கொண்டிருப்பதால் அவர்கள் அப்படி நடக்கிறார்கள். அதில் நல்லவர்களும் இருக்கிறார்கள். சிலபேர் தவறான முறையில் பழக்கப்பட்டு விட்டார்கள். அவர்களை அதே இடத்தில் வைத்துக்கொண்டு இந்த நிலையை மாற்ற முடியாது. நாடு பூராவிலும் உள்ளவர்களை மாற்ற வேண்டும். இன்றைக்கு



போலீஸ் ஸ்டேஷன்களிலேயே கள்ளச் சாராயத்தை காய்ச்சுவதற்கு, விற்பதற்கு பகிரங்கமாகக் குத்தகை விடப்படுகிறது. இது உண்மை, உண்மை, உண்மை. இந்தச் செய்தி தவறானால் நான் ராஜிநாமா செய்யத் தயாராய் இருக்கிறேன். அதற்கு மேலும் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று விரும்பவில்லை. தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்றுதான் எங்களைப் பொறுத்தவரையில் விரும்புகிறோம். அவர்களிடத்தில் தகவல்கள் இருக்குமானால் இது போன்ற குற்றச்சாட்டுகளை, விவரங்களைச் சொல்கிறபோது, அவைத் தலைவர் அவர்களிடத்தில் கூறலாம். 'என்னிடத்தில் இருக்கிறது, இரகசியமாகத் தருகிறேன்' என்று சொல்வது பொருத்தம் என்று தெரியவில்லை. தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: உதாரணத்திற்கு ஒன்றை வேண்டுமானால் சொல்கிறேன். இன்றைக்கு வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி தொகுதியில் மாதகடப்பா, வெதகனிமானிடப்பா என்ற மலைப்பகுதியில் ஒரு வாரத்திற்கு ஒரு லட்சம் லிட்டருக்கு மேல் பட்டைச் சாராயம் காய்ச்சப்படுகிறது. அதனை அந்தப் பகுதி பூராவும், விநியோகம் செய்கின்ற, விற்பனை செய்கின்ற உரிமை குத்தகைக்கு விடுவதை போலீஸ் ஸ்டேஷனில் வைத்துச் செய்கிறார்கள். இந்த உண்மையைச் சொல்லிவிட்டேன். அதை வைத்து அரசாங்கம் எவ்வளவுதூரம் இதில் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவுதூரம் செய்யவேண்டும். நான் என்னுடைய கருத்துக்கு வலிமையூட்டுவதற்காக நானே ராஜிநாமா செய்கிறேன் என்று சொன்னேனே தவிர, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொல்ல மாட்டேன்.

ஏழை எளியவர்கள், அன்றாடம் தொழில் செய்து ஜீவனம் நடத்துகின்றவர்கள் பகல் முழுவதும் வேலை செய்து, கூலி வாங்கி, வீட்டிற்குக் கொண்டுவராமல் இரவில் குடித்துவிட்டு வந்துவிடுகிறார்கள். அதனால் அவர்களது பொருளாதாரம்

நசித்துப்போகிறது, ஆகவே மதுவிலக்கை அமல் செய்வதாக இருந்தால் அதில் உறுதியாக இருந்து நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கு நேரடியாகத் தேர்தலை நடத்த இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கக் கூடியதாக இருந்தாலும், சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கும் என்று சொல்கிறார்கள். ஒருவர் நேரடியாக சார்மென் என்று வந்துவிட்டால், அவர் தவறாக நடந்து கொள்ளும்போது அவரை நீக்குவது எப்படி என்பதை எல்லாம் பில் கொண்டு வரும்போது நன்கு யோசித்து, நடைமுறைச் சிக்கல்களுக்கு இடமில்லாத வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக கவர்னர் உரையில் நாம் விரும்புகிற பல நல்ல திட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு மைனாரிடி கமிஷன் அமைக்கப்படும் என்ற குறிப்பைச் சொல்லியிருப்பார்களேயானால் நன்றாக இருக்கும்.

வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்திற்கு ஆட்சிப் பொறுப்பில் இடமில்லை என்று இருப்பது ஒரு குறை. அமைச்சரவையில் வடாற்காடு மாவட்டத்திற்கும் பிரதிநிதித்துவம் இருந்திருந்தால் நான் பெரு மகிழ்ச்சி அடைந்திருப்பேன். அந்த மாவட்டக்காரன் என்கிற காரணத்திற்காகச் சொல்கிறேன். வேறு காரணம் இருக்க முடியாது. நான் நினைத்தாலும் அமைச்சராக முடியாது. வடாற்காடு மாவட்ட பிரதிநிதி ஒருவர் இந்த அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தால் எங்களைப் போன்ற அந்த மாவட்டக்காரர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்று தெரிவித்துக் கொண்டு, பல நல்ல திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள கவர்னர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு நாட்களாக இந்த மாமன்றத்தில் கவர்னர் பெருமானுடைய உரையின் மீது பல்வேறு அங்கத்தினர்கள் இங்கே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.





அந்த வகையில் நானும் மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் ஆளுநர் உரைக்கு முன்மொழிந்துள்ள நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை உங்கள் முன்னால் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்களும், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் வந்தவர்கள் என்பதை இங்கே இருக்கிற யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் அண்ணா அவர்களது கொள்கைகளையும், லட்சியங்களையும் இந்த நாட்டில் பரப்ப வேண்டும், அண்ணா அவர்கள் கொள்கை வழியில் இந்த அரசு அமைந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம் அண்ணா அவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு இதற்கு முன்னால் இங்கே ஆளும் பொறுப்பில் இருந்தவர்கள் செய்திருக்கக்கூடிய தவறுகளை இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதற்கு முன்னால் கவர்னர் பெருமான் உரையில் அண்ணா அவர்களது கொள்கை அடிப்படையில் திட்டங்கள் எதுவும் இல்லையா என்பதை விளக்க விரும்புகிறேன்.

அதில் என்ன இல்லை என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர், அரசாங்கக் கொறடா அவர்கள் பேசுகிறபோது டைரெக்டரியைப் போலவா இது இருக்கும், கொள்கைகள் அங்கங்கே கோடிட்டுத்தான் காட்டப்படும் என்று சொன்னார்கள். அந்த உரையைப் படித்து, வடித்துப் பார்க்கிறபோது, லஞ்ச ஊழலற்ற அரசு இருக்கவேண்டும், நிர்வாகம் நாணயமாக இருக்கவேண்டும் என்று இருக்கிறது. இருமொழிக் கொள்கையே இந்த அரசின் உறுதியான கொள்கை என்று தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு வெளிமாநிலங்களில் ஊக்குவிக்க இந்த அரசு தயாராய் இருக்கிறது என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று கவர்னர் உரையில் இருக்கிறது.

[திரு. கே. சௌந்தரராசன்] [1977 ஜூலை 13

(பிற்பகல் 12-50)

வறுமையை ஒழிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது, கிராமங்கள்தோறும் நியாயவிலைக் கடைகளை உருவாக்குவது, கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவது, கிராமங்களில் குடிநீர், கல்வி, சுகாதாரம், வீட்டு மனைகள் வழங்குவது, சாலை வசதி, மின்வசதி போன்றவை அளிப்பதுபற்றி ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அடுத்து வ_ப காலங்களில் மக்களுக்கு பாசன வசதி செய்து தரும் திட்டங்களும் இந்த உரையில் உள்ளன.

மதுவிலக்கை உறுதியாகப் பின்பற்றுவது என்பதுபற்றியும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் விட்டுப்போனவை ஏதாவது இருக்கலாமா என்று பார்த்தால் இருக்கிறது என்று எதிர்முகாமில் உள்ளவர்கள் சொல்வார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்த உரையின் 12-வது பாராவில் தெளிவாக, அடுத்த கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் கொண்டு வரப்படும். புதிய அரசின் திட்டங்களையும் திட்டப் பணிகளையும் விரிவாக ஆராய அப்போது உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே கவர்னர் அவர்கள் உரையில் ஏதாவது இல்லை என்று சொல்பவர்களுக்கு இந்த 12-வது பாரா வழிவகுக்கும் என்பதை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பேசுகிறவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். குறிப்பாக நல்ல திட்டங்கள் எல்லாம் விடுபட்டுப் போயிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை கவனப்படுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தில் இருந்த ஆட்சி மாற வேண்டியதற்கான சூழ்நிலை உருவாவதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டில் லஞ்ச லாவண்யமற்ற சர்க்கார், ஊழலற்ற சர்க்கார், நேர்மையான சர்க்கார், அதிகார துஷ்பிரயோகம் செய்யாத சர்க்கார் இருக்கவில்லை என்ற கருத்து இந்த நாட்டில் உள்ள மக்கள் மனதில் இருந்தது. அதன் விளைவாகத்தான் இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பின்னால் லஞ்சம்



1977 ஜூலை 13] [திரு. கே. சௌந்தரராசன்]

இங்கே கொலுவீற்றிருந்தது. ஊழல் இங்கே மலிந்து கிடந்தது. அதிகார துஷ்பிரயோகம் எங்கு பார்த்தாலும் நர்த்தனம் ஆடிக் கொண்டிருந்த நிலையைக் கண்டிருக்கிறோம்.

லஞ்சத்திற்கு எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றையதினம் பூச்சி மருந்து ஊழலை எடுத்துக் கொள்வோமேயானால் அதில் எந்த அளவிற்கு நாட்டிலிருக்கிற விவசாய மக்களுடைய பணம் விரயமாக்கப்பட்டிருக்கிறது, லஞ்சமாகப் பெறப்பட்டது என்பதெல்லாம் இன்றையதினம் சர்க்காரியா கமிஷன் முன்னால் வந்திருக்கிறது. அதைப் பார்க்கிறபோது எந்தளவிற்கு இந்த நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் பணம் லஞ்சமாக வாங்கப்பட்டிருக்கிறது என்பதை அந்த பூச்சி மருந்து ஊழலிலிருந்து நாம் காண முடியும்.

அடுத்து, வீராணம் திட்டத்தை எடுத்துக் கொண்டால் அதிலே 20 கோடி ரூபாய்க்கு திட்டம் இடப்பட்டு முப்பது கோடி ரூபாயில் முடிந்தாலும் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இன்னும் அறுபது கோடி ரூபாய் இருந்தால்தான் அத்திட்டத்தை முடிக்கமுடியும் என்று சொல்கிறார்கள். அப்படி 60 கோடி ரூபாய் செலவு செய்தாலும் அந்தத் திட்டம் நல்லதொரு திட்டமாக, முன்னேற்றம் அடையக்கூடிய திட்டமாக, வலுவடையக்கூடிய திட்டமாக இருக்குமா என்றால் அதற்கு உத்தரவாதம் கிடையாது. காரணம், காவிரித் தண்ணீர் கொள்ளிடம் வாய்க்காலுக்கு வந்து கொள்ளிடம் வாய்க்காலிலிருந்து வீராணம் ஏரிக்கு வந்து அங்கிருந்து சென்னை நகருக்கு அந்தத் தண்ணீர் குழாய்கள் மூலம் வரவேண்டும். அப்படி அமைக்கப்படுகிற குழாய்கள் மூலம் வருகிற தண்ணீர் அங்கு பம்ப் செய்யப்பட்டு தண்ணீர் வரும் நேரத்தில் ஒரு இடத்தில் பழுது ஏற்பட்டுவிட்டால் அதை நிறுத்திவிட்டு பழுது பார்ப்பதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டம் ஒரு தோல்வி அடைந்த திட்டம். இந்த சர்க்கார் அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்கிற நேரத்தில் அதன் பழைய கோப்புகளை எல்லாம் எடுத்துப் பார்த்து ஆரம்பத்தில் இருந்து

அதில் நடைபெற்ற ஊழல்களையும் அதிலுள்ள லஞ்சலாவண்யங்களையும் கண்டுபிடித்து, என்ன இடத்தில் என்ன தவறு நடைபெற்றது என்று கண்டுபிடித்து, அந்தத் திட்டம் நல்லதொரு திட்டமாக, எதிர்காலத்தில் பயன்தரக்கூடிய திட்டமாக அமைவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, அதிகார துஷ்பிரயோகம் கடந்த காலத்தில் எந்தளவிற்கு நடைபெற்றது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. காரணம், திருச்சி நகரில் பத்து பதினைந்து வயது பாலகர்கள் இருந்த திருச்சி க்ளைவ் ஹாஸ்டலில் மாணவர்கள் வெறித்தனமாக, வேண்டுமென்றே, திட்டமிடப்பட்டு, அங்கு நான்கு சுவர்களுக்குள்ளாக அடைக்கப்பட்டு அடித்து நொறுக்கப்பட்ட காட்சி 1972-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் அந்த மாணவர்கள் மீது பழி சுமத்தி, அதற்குப் பின்னால் மதிப்பிற்குரிய நீதிபதி திரு. குப்பண்ணன் அவர்கள் விசாரணையில் நீதிபதி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள். "கிளைவ் இல்லத்துக்குள் காவலர்கள் நுழைந்ததற்கு நியாயம் ஏதுமில்லை, மாணவர்களை காவலர்கள் அடித்திருக்க வேண்டியதில்லை; அரசு கூறியதுபோல், லேசான பிரம்படி நடக்கவில்லை; மாணவர்களைக் காவலர்கள்தான் தடி கொண்டு அடித்துள்ளனர், கையாண்ட வன்முறை மிகையானது." என்று கூறியுள்ளார்கள். திரு. குப்பண்ணன் அவர்கள் தீர்ப்பை தெளிவாக வழங்கியிருக்கிறார்கள்.

ஆனால் இங்கிருக்கிறவர்கள் 17 மாத கால ஆட்சியை வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். 17 மாத காலத்தில் எவ்வளவோ காட்டு தர்பார் நடைபெற்றது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புவது, 17 மாத கால நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அதோடு 1972-ல் இருந்து நடைபெற்ற வன்முறைகளையும், அதற்குக் காரணமானவர்களையும், இந்த நாட்டில் நடைபெற்ற கொலைகளையும், படுகொலைகளையும் எடுத்துக்கொண்டு அதற்கேற்ற வகையில் நல்லதொரு முடிவினை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.





இதைச் சொல்கிறபோது எதிர்முகாமில் இருப்பவர்கள் அந்த 17 மாத காலத்தில் நடந்தவைகளுக்கு விசாரணை வைத்திருக்கிறார்களா என்று சொல்லக்கூடும். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீதி விசாரணை அடிப்படையில் இந்த மன்றத்தில் உதயகுமார் மறைந்த நேரத்தில், அவரது பிணம் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிதந்த நேரத்தில் இங்கு அப்போது முதல் அமைச்சராக இருந்தவர் அன்றையதினம் இந்த மன்றத்தில் கூறியதெல்லாம், மறைந்தவர் உதயகுமார் அல்ல, அப்படி அவர் உதயகுமார் என்று நிரூபிக்கப்படுமானால் நான் பதவியை ராஜிநாமா செய்கிறேன் என்று தெளிவாகச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் அந்தத் தீர்ப்பு வந்த நேரத்தில் அதைப் பற்றி ஏதுமே சொல்லவில்லை.

இன்றையதினம் நாம் பார்க்கிறோம். அண்டையில் இருக்கிற கேரளா மாநிலத்தில் அங்கு முதல் அமைச்சராக இருந்த திரு. கருணாகரன் அவர்கள், அவர்கள் முதல் அமைச்சராக ஆவதற்கு முன்னால் அங்கு உள்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் ராஜன் என்ற மாணவர் காணாமல் போன விவகாரத்தில் அவர் பதவி ஏற்ற பத்து நாட்களில் பதவியை தூக்கி எறிந்து விட்டார்கள். ஆனால் இங்கே சொல்கிறபோது, நாங்கள் எல்லாம் மானமுள்ள மறவர்கள், தமிழ் மரபைக் காக்கக் கூடியவர்கள், மனு நீதிச் சோழன் பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்று சொல்கிறவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நீதிபதியின் தீர்ப்பில் குறிப்பிட்ட பின்னாலும் அந்தப் பதவியைத் தூக்கி எறிந்தார்களா என்று பார்த்தால் கிடையாது.

இந்த நிலையில் ஆட்சி நடத்தியவர்கள்தான் இன்றையதினம் இந்த ஆட்சியைப் பார்த்து, கவர்னர் அவர்கள் உரையைப் பார்த்து இதில் குறைகள் ஏராளம் இருக்கின்றன, எங்களுக்கு உத்தரவாதம் கிடையாது என்றெல்லாம் கூறுகின்றனர். நம்முடைய கவர்னர் அவர்கள் உரையில் நல்லபல காரியங்கள் அடங்கியிருக்கின்றன. 12-வது பாராவை, நான் முன்னர் குறிப்பிட்டதுபோல், கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் நல்ல பல திட்டங்கள் எதிர்காலத்தில் நிதிநிலை அறிக்கையில் வர இருக்கின்றன என்பதைக் காணலாம். நல்ல திட்டங்கள் பல வர வாய்ப்பு

யிருக்கிறது. எனக்கு பேச வாய்ப்பளித்த மாமன்றத்தாருக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறி, மதிப்பிற்குரிய இராதா அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேச விருப்பம் தெரிவித்து இடம் பெற்றிருக்கிற பெயர்கள் இன்னும் 12 பேர்கள் இருக்கின்றனர். இருக்கிற நேரம் அரை மணி நேரம். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஐந்து நிமிட நேரத்திற்குள் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நான் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

சிறுபாசனத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நல்ல பல திட்டங்களை அளிப்பதாகக் கூறியுள்ளார்கள். ஆனால் 1975-ல் நாங்குநேரித் தொகுதியில் தென் பகுதியில் ஒரு அணைக்கட்டு ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக பத்து லட்சம் ரூபாய் சாங்க்ஷன் செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரோடுகள் போடப் பட்டு, பல கருவிகளையெல்லாம் கொண்டு வந்து சேர்த்தார்கள். பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகள் சேகரிக்கும்போது உங்கள் வாக்குகளைப் பெற்று நாங்கள் வெற்றி பெற்றால் நிச்சய மாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற பெயரில் மீண்டும் 25 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அந்தத் திட்ட வேலை நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டு வந்தது. அங்கு வேலை பார்க்கும் அலுவலர்களுக்கு மாதம் நாற்பதாயிரக் கணக்கில் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. ஜி.ஓ. ஆர்டி. 1316] பி.டப்ள்யூ.டி./30—6—1977 படி அந்தத் திட்டத்தை கைவிட வேண்டும் என்ற வந்ததின் பேரில், சர்வகட்சியினரும் சேர்ந்து அரசுக்குத் தெரியப்படுத்தி அப்படி முடிவு எடுத்தால் 5,600 ஏக்கர் நிலம் பாழாகிவிடும் என்றும் ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று கோரி மூன்று மாத அவகாசம் கொடுக்கப்பட்டது.





(பிற்பகல் 1-00)

ஆனால், இதில் 5,600 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் என்பதோடு மட்டுமல்லாமல், 60 கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்களும் குடிதண்ணீர் வசதி பெறுவார்கள். ஆகவே, இதில் அரசு தலையிட்டு உடனடியாக இதற்கு வொர்க் ஆர்டர் கொடுத்து இந்த அணையைக் கட்டுவதற்குத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான்குநேரியின் மத்திய பகுதியில் 1975-ல் பச்சையாறு அணைக்கட்டு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி யிருந்தார்கள். 17 மாத ஜனாதிபதி ஆட்சி காலத்தில் இது எடுத்துக் கொள்ளப்படவில்லை. பின்னால் தேர்தல் வந்தது, இப்போது இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விடுமோ என்று அஞ்சிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. கொடுமுடியாற்றிலிருந்து தண்ணீர் வராத நிலையிருப்பதை உணர்ந்து பச்சையாறு திட்டம் வந்தால்தான் விவசாயத்திற்குப் பயன்படும் என்பதையும் உணர்ந்து இதை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் முக்கியமாகப் பின் தங்கிய இடங்கள் தான் அதிகமாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று, இட்டமொழி வட்டாரத்தைச் சேர்ந்த பெருமனை என்ற இடத்தில் நல்ல தண்ணீர் கிடைக்காமல். பக்கத்தில் மூன்று மைல் தூரம் சென்று குடிதண்ணீர் கொண்டு வரவேண்டிய அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குகின்ற அளவில் பக்கத்து ஊரில் உடனடியாக குடிநீர்வாரியத்தின் மூலமாக ஒரு ஓவர் ஹெட் டாங்கு கட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு, விவசாயிகளின் அரசு என்கின்ற முறையில் விவசாயப் பயிர் பாதுகாப்பு மூலமாக, பற்றாக்குறை ஏற்பட்ட இடங்களில், களக்காடு வட்டாரத்தில் பல இடங்களில் ஆடு மாடுகள் மலையில் மேய்ந்து வந்தது. இதை வன இலாகா அதிகாரிகள் அந்த இடங்களில் ஆடு மாடுகளை மேய்க்கக்கூடாது என்று கட்டாயப்படுத்தியதின் காரணமாக பல ஆடு மாடுகளை

விற்று விட்டார்கள். இதில் அரசு தலையிட்டு ஏழை விவசாயிகள் தங்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதற்குத் தகுந்த இடத்தை மலையில் ஒதுக்கி கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மலை அடிவாரத்தில் மேயும் கன்று காலிகளையும் அங்கு விடக் கூடாது என்று வன இலாகா அதிகாரிகள் கட்டாயப்படுத்துகிறார்கள். இதன் மூலம் கேஸ்களை போட்டு, போலீசாரின் தொந்தரவுகளுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. பன்றிகள், விவசாய உற்பத்தியை அழிவு செய்கின்றன. இதை நல்ல முறையில் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பின் தங்கிய மக்கள் வகுப்பினராகிய கிருஸ்துவ மக்கள் நெல்லை மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்படாமல் இருப்பதன் காரணமாக வேலைவாய்ப்பும், கல்விக்கும் போக முடியாத அளவுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவர்களைப் பிற்பட்டோர் வகுப்பில் சேர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மிகவும் மின்சாரப் பற்றுக்குறை இருந்து கொண்டிருக்கிறது. பகல் 6 மணி நேரமும் இரவு 10 மணி நேரமும் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால் விவசாயம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. பகலில் 6 மணி நேரம் என்றிருப்பது புஞ்சைப் பயிருக்கு போதாது. இதை அதிகப்படுத்த வேண்டும். இதே போன்று இரவு 10 மணி நேரம் என்றிருப்பதையும் மாற்றி 12 மணி நேரம் என்று கொடுக்க வேண்டும். அதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் மதுவிலக்கு எவ்வளவு முக்கியமோ அதேபோல் சூதையும் எடுத்துக் கொள்ள வேண்டும். மது எந்த விதம் ஆளைக் கெடுக்குமோ அதைப் போன்று சூதும் கெடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. குற்றாலம் சீசன் விழா என்று கூறி டிக்கட்டுகளை அச்சடித்து, ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் 20 ரூபாய் டிக்கட்டுகளை எடுக்க வேண்டும், பள்ளிக்கூடங்கள் இத்தனை டிக்கட்டுகள் எடுக்க வேண்டும், ஒவ்வொரு ஆசிரியரும் ஐந்து ரூபாய் டிக்கட்டுகள் எடுக்க வேண்டும் என்று அங்குள்ள



அதிகாரிகள் கூறி வருகிறார்கள். இது அரசுக்குத் தெரிந்து நடத்தப்படுகிறதா அல்லது 'சீட்' ( cheat ) செய்கிறார்களா என்பதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம மக்களுக்கு அரிசி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. விலையும் அதிகமாக இருக்கிறது. 1.60, 2.10, 2.30 என்று விற்று வருகிறார்கள். ஏழை மக்களுக்கு அரிசி வாங்க காசு இல்லாது கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, 1.60 என்றிருப்பதை 1.50 ஆகவும், 1.80 என்றிருப்பதை 1.70 ஆகவும், 2.00 என்றிருப்பதை 1.90 ஆகவும் குறைத்துக் கொடுத்தால் ஏழை விவசாயிகள் பெரிதும் பலன் பெறுவார்கள். இதை அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரோடு வசதிகளைப் பொறுத்தளவில், ரோடுகள் வசதியிருந்தாலும் பஸ்கள் ஓடுவதில்லை. ரோடுகள் சரியாக இருக்கிறது என்று சொன்னாலும் கட்டபொம்மன் போக்குவரத்து அதிகாரிகள் பஸ் விடுவதில்லை. தனியார் பஸ்களையும் விட அனுமதிப்பதில்லை. ஆகவே, இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். ஆர்.ஆர். ஸ்கீம் என்று எடுத்து சர்க்காருக்குப் பாத்தியதையாக இருக்கின்ற இடத்தில் உள்ள ரோடுகளை எடுத்து செப்பனிட்டு, அவற்றில் பஸ்களை விடுவதற்கும், வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பின் தங்கிய தொகுதியாக இருக்கின்ற நாங்குநேரி மக்களுக்கு இப்படிப்பட்ட பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு தங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. மாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில், தமிழ்நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு நமது அரசு எடுக்க வேண்டிய சிறப்பான வழிமுறைகளையும், திட்டங்களையும் சொல்லியிருப்பது மிகவும் போற்றுதலுக்குரியது. இருந்தாலும் நமது ஜனநாயக ஆட்சியில் நமது தமிழ்நாட்டிலுள்ள கிராமவாசிகளின் நலன்களைச் சரிவர கவனிக்காமல் புறக்கணிக்கப்பட்டிருப்பதை இந்த உரை எடுத்துக் காட்டுகிறது. தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான கிராமங்களிலுள்ள ஜனங்கள் தாங்கள் அன்றாடம் குடியிருக்கக்கூட சரியான வீடுகள் இல்லாது வெட்டவெளியில்

[திரு. சி. மாணிக்கம்]

படுத்து உறங்குகின்றனர். பொதுவாக கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் கேவலமான நிலையிலிருப்பதை நாம் எல்லோரும் கண் கூடாகக் காண்கின்றோம். இந்த நிலைமையை மாற்றியமைத்து இந்த ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்கே நமது பெரும் தலைவர்கள் காந்தி அடிகள், அமரர் அண்ணா அவர்களும் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்தார்கள். அமரர் அண்ணா அவர்களின் கனவுகளை நினைவாக்கக் கூடிய பல நல்ல திட்டங்கள் நமது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையில் அமைந்திருப்பது இந்த நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கக்கூடிய விஷயமாகும்.

எனது தொகுதியாகிய திருச்சி நகர் மாநகராட்சியாக்குவதற்குரிய தகுதிகள் உள்ளன. ஆகவே, விரைவில் திருச்சியினை மாநகராட்சியாக்குவதற்குரிய நடவடிக்கைகளை இக்கழக அரசு நிறைவேற்றுமென நம்புகிறேன்.

திருச்சி நகர் பாலக்கரையில் மருத்துவமனை கட்டுவதற்காக மறைந்த முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். ஏறத்தாழ 4, 5 ஆண்டுகள் ஆகியும் நகராட்சி தேவையான நடவடிக்கை எடுக்க வில்லை. மருத்துவ உதவியின்றி வாடும் மக்களது பிரச்சனையைத் தீர்க்க, மருத்துவமனை அமைக்குமாறு அண்ணாவின் வழி நடக்கும் இவ்வரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய அரசானது 'பட்ஜெட்' தாக்கல் செய்தபொழுது பீடிக்கு அதிகத்தீர்வை விதித்திருக்கிறது. அதன் காரணமாக பீடித்தொழில் பெரும் அளவில் பாதிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக் கிறது. எனது தொகுதியில் முஸ்லீம் இன மக்கள், குறிப்பாக முஸ்லீம் பெண்கள் அதிலும் ஏழை எளியவர்கள் பீடி சுற்றும் தொழிலை நம்பியே குடும்பம் நடத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். பெரும்பாலும் கல்வி அதிகம் பயிலாத, வெளியில் சென்று வேறு வேலை பார்க்க இயலாத முஸ்லீம் பெண்கள் பீடிக்கு அதிகத் தீர்வை (லெவி) விதித்ததன் காரணமாக மிகவும் அல்லலுறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது விஷயத்தில் மத்திய அரசினிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தி தீர்வையைக் குறைக்க ஆவன செய்து ஏழை மக்களைக் காப்பதன் மூலம் அண்ணாவின் நல் அரசை நிலை நிறுத்த வேண்டுமென வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 13] [திரு. சி. மாணிக்கம்]

புது தொழிற்சாலை அமைக்க, நிதி உதவி அளிக்கும் தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் நிறுவனங்கள் நிதி உதவி பற்றாக்குறையினாலும் கஷ்டப்படும் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிக்கும் வகையில் தகுந்த விதிமுறைகளைக் கொண்டு வரவேண்டும்.

எனது தொகுதி திருச்சி நகரில் காவேரி ஆறு இருந்தும் தண்ணீர் பற்றாக் குறையினால் நகர மக்கள் குடிநீர் இன்றி அவதிப் படுகிறார்கள். இப்பிரச்னை தீர்வதற்கு காவிரி ஆற்றில் இரண்டு கிணறுகள் தோண்டி குடிநீர்ப் பற்றாக் குறையைத் தீர்க்க இந்த அரசு ஆவன செய்யும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.

எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம். வாழ்க தமிழ்.

(பிற்பகல் 1-10)

* THIRU EKAMBARA REDDY: Mr. Deputy Speaker, Sir, I may be permitted to speak in English.

Before I speak on the Governor's Address, I have great pleasure in congratulating our Hon. Chief Minister, on his having consented to adorn the portrait of Thiru Kamaraj, our great leader of the masses in our Assembly Chamber. It is more befitting to note that our dynamic Chief Minister has invited Thiru N. Sanjeeva Reddy, present Speaker of the Lok Sabha and would—be President of the Republic of India a contemporary and a close colleague of the late Kamaraj and also one of the great leaders of our nation. All our appreciations are due to our Hon. Chief Minister at this moment.

While coming to the Governor's Address, I would like to say that the Governor's Address now before us is a unique one. It is one presented after 17 months of President's Rule. I would request the Government to take early action to restore normalcy in the administration.

I am extremely happy to note that the present task of the new Government is to provide a clean and competent Government and to root out corruption at all levels. It is a welcome measure.

I would like to suggest to the Government to take early steps to constitute effective institutions at State level, on the lines of Lok Pal to be introduced by the Centre. In view of the urgency, I hope the State Government would introduce legislation during the Budget session in view of the urgency for this measure.

It is encouraging to note that the Government is going to introduce remunerative prices for the grower and reasonable price for the consumers. It is a welcome measure for both the sections. Recently, though the procurement price for wheat has been enhanced as per the recommendations of the Agricultural Prices Commission, the procurement price for paddy has not been increased. It is unfortunate to note that the procurement price for paddy has not been enhanced. If the recommendations of the Agricultural Prices Commission are not forthcoming, I would like to request the Government to introduce at least 10 rupees bonus per quintal. It will to some extent please the ryots and encourage them to produce more so as to meet the needs of the consumers as well as to keep some surplus stocks to be added on to the buffer stock of the Government. I would like the present Government to maintain that our State should always be a surplus State in the committee of States of our country. The consumers are not in a position to get their commodities at reasonable prices. Commodities at subsidised rates may be given to the consumers so as to enable them to purchase the commodities.

I am also happy to note that the Government is going to take steps to ensure equitable distribution of essential commodities at reasonable prices. It is a most welcome measure. At the same time, I would like to congratulate the Government for providing a fair price shop for each Revenue village. Here I would like to suggest that the Government should not be content with opening of fair price shops but it should also see that poor needy people belonging to weaker sections such as Harijans, agricultural landless labourers and handloom weavers, etc., are supplied with their requirements of essential commodities at subsidised with their requirements of essential commodities at subsidised rates at all times. It is my humble request.

In regard to protected water supply and provision of roads no doubt, provision had been made by Panchayat Unions and water has been provided in most of the villages. In some of the



villages, water could not be tapped because the area is rocky. In such places, the water could be taken through pipe lines from places where water is available, instead of wasting thousands of rupees in places where water is not at all available in the wells.

In most of the Harijan colonies the approach roads and interconnecting roads could not be formed for the reason that the landowners are not willing to part with their lands. I, therefore, request the Government to bring in a legislation to compulsorily acquire such lands for forming roads for the Harijan colonies.

Government should also take steps to acquire lands for the formation of interlinking roads for connecting villages with the towns.

In my constituency, the construction of sub-mergible bridge across Kusasthali river near Pallipat is pending for a long time. It was also referred to the Central Government and a token provision of Rs. 27 lakhs has been provided under Central Road Fund Scheme. It is a matter of inter-State importance. Lakhs of people are coming through this way to Madras from Karnataka and Andhra States. The entire people of Pallipat are put to much hardship during rainy season. I, therefore, request the Government to get the approval of the Central Government and execute the scheme during this year so as to relieve the inconvenience caused to thousands of people.

As regards the programme for providing substantial employment in rural areas in the off-season for unskilled labourers, I would like to request the Government to move the Government of India for implementing the cash scheme for rural employment in the blocks with the required finacial assistance and also R.M.P. Scheme so as to provide employment for agricultural labourers and others. The scheme should be taken in such a way that it should be labour-*cum*-production oriented scheme. It should be the policy of the new Government to provide employment in rural areas.

As regards Prohibition, the policy of the new Government is most welcome. I take this opportunity to congratulate our Governor and our Chief Minister for the happy announcement in this regard and also for stating that measures will be brought for

the strict enforcement of prohibition. I would like to suggest to the Government that for the strict enforcement of prohibition, Committees should be constituted at the basic level of our villages and the Committees should be above party lines, so that if there is any violation in the implementation, it could be effectively rectified. As a true follower of Gandhian principle, I would like to congratulate the Government for having brought this prohibition policy.

With regard to direct election to Panchayat Union and Municipalities as in the case of Panchayats, I am glad that a significant reform with regard to Panchayat Unions and Municipalities based on principles of democracy has been envisaged. In this connection, I would like to say that safeguard should however be provided in this arrangement for the Chairman of Panchayat Unions and Municipalities not to go away with the idea that they were elected by the people and not answerable to Panchayat Unions and Municipalities. Provision should be made for the election of Vice-Chairman by their respective Panchayat Presidents and Municipal Councillors.

Let me conclude with the assurance of fullest co-operation with the Government in the successful implementation of the above objectives and thanks for having given me this opportuity to participate in the discussion.

(பிற்பகல் 1-20)

**திரு. வி. சின்னய்யா:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்பேரில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கவர்னர் உரை சம்பிரதாயமாக முறைப்படி ஆண்டுதோறும் வருவது போல்தான் இருக்கிறதே தவிர, புதிதாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. நமது காலஞ்சென்ற பெருந்தலைவர் படத்தை இந்த மாமன்றத்திலே வைப்பதற்காக மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் குடுமியாமலையில் அன்று விவசாயப் பண்ணை இருக்கிறது; கால்நடைப் பண்ணையும் இருக்கிறது. அவை நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால் அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று கோருகிறேன். அங்குள்ள பண்ணையில் 300 விவசாயிகள் வேலை செய்கிறார்கள். அன்றாடக் கூலிகளாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு



ஆண்களாக இருந்தால் 3 ரூபாயும், பெண்களாக இருந்தால் 1½ ரூபாயுந்தான் கொடுக்கப்படுகிறது. இது சட்டத்திற்கு மாறுபட்டு இருக்கிறது. சர்க்கார் பண்ணையிலேயே இந்த நிலைமை என்றால் மற்றவர்கள் என்ன கூலி கொடுப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசினர் பெண்கள் கல்லூரி இருக்கிறது. அங்கு பி.காம். படிக்க வசதி இல்லை. அதற்கு மேல் பட்டப் படிப்புகள் படிக்கவும் வசதி இல்லை. அந்த வசதிகளை அந்தக் கல்லூரிக்குச் செய்து தரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி நகர் மில் தொழிலாளர்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இரண்டு வருடகாலமாக மூடப்பட்டிருந்தது. 20 அம்சத் திட்டத்தின்கீழ் திறக்கப்பட்டு அரசாங்கம் எடுத்து நடத்தி வருகிறது. 1,500 தொழிலாளர்கள் வேலை செய்த இடத்தில் 500 பேர்தான் வேலை செய்கிறார்கள். மீதிப் பேர் சும்மா இருக்கிறார்கள். இருப்பவர்களுக்கும் மாதத்திற்குப் 10 நாள்தான் வேலை கிடைக்கிறது. வேலை இல்லாதவர்கள் குடும்பம் பிச்சை எடுக்கும் சூழ்நிலையில் இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புக் கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இருபது அம்சத் திட்டத்தின்கீழ் கொத்தடிமைத் திட்டம் ஒழிக்கப்பட்டது. குளத்தூர் தொகுதியில் இலுப்பூர் கல்பட்டறை தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். கொத்தடிமை முறை நீக்கப்பட்ட பிறகு அவர்கள் தொழில் செய்ய எந்த விதப் பொருள் வசதியும் இல்லை. தேசிய பாங்குகள் பணம் கொடுக்க முன்வரவில்லை. அந்த வங்கிகள் பொருளுதவி செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்னவாசல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஆக்சிடெண்ட் ஏற்பட்டால் பிணத்தை போஸ்ட்மார்ட்டம் செய்ய புதுக்கோட்டைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிக் கொண்டு போக அங்கே எந்தவிதமான வாகன வசதியும் கிடையாது. இதிலே அரசாங்கம் முழு கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. வி. சின்னய்யா] [1977 ஜூலை 13

எங்களுடைய பகுதியில் குடிக்கத் தண்ணீர் கூடக் கிடையாது. என்னுடைய தொகுதியிலிருந்து நான்கு மைலுக்கு அப்பால் சென்று சேறுடன் கூடிய தண்ணீரை எடுத்து வந்து தெளிய வைத்துச் சாப்பிடும் நிலைமை இருக்கிறது. அங்கு அடி-பைப் போட்டுக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், எங்கள் பகுதி ஐந்தாண்டு காலமாக வறண்டு கிடக்கிறது. அதன் காரணமாக பெரும்பாலான விவசாயிகள் பஞ்சு விவசாயத்தைச் செய்து வருகிறார்கள். விராலிமலை, குளத்தூரில் அதிகப்படியாக பஞ்சு விவசாயம் நடைபெறுகிறது. அங்கே ஒரு நூற்பாலை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

எங்கள் பகுதியில் ரோடு வசதி கிடையாது. அமைச்சர்கள் டூர் வந்தால் ரோடு வசதி இருக்கிற இடமாகப் பார்த்துச் சென்று விடுகிறார்கள். காங்கிரஸ் காலத்திலிருந்து எங்கள் ஊரில் ஒத்தையடிப் பாதைதான் இருந்து வருகிறது. கட்டை வண்டி கூடப் போகமுடியாத நிலைமை இருக்கிறது. * * * முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும். குக்கிராமங்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும். இதனால் நடந்த பொதுத் தேர்தலில் கூட பொதுமக்கள் ஓட்டுப் போட வர முடியவில்லை. 100-க்கு 70 சதவிகிதம் கூட ஓட்டுப் போட வரவில்லை. யாருக்கு ஓட்டுப் போட்டு என்ன பயன். ரோடு வசதி இல்லை குடிதண்ணீர் வசதி இல்லை என்று ஓட்டுப்போட முன்வரவில்லை. இந்த நிலைமையை மாற்றியமைக்க கிராமங்கள்தோறும் ரோடு வசதி செய்து கொடுக்க அரசு முழு கவனம் செலுத்த வேண்டும்.

தீண்டாமை இன்னும் இந்த நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. தீண்டாமையை ஒழிக்க இந்த அரசு சட்டம் தீட்ட வேண்டும். உழைப்பவனுக்கே நிலம் என்ற ஒரு திட்டத்தைப் * * * புரட்சிகரமாகக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வருவார்களானால் என் போன்றவர்கள் எல்லாம் முதலமைச்சருக்கு ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். விவசாயிகளுக்கு 60—40 வாரம் இருக்கிறது. அதனால் பயன் இல்லாமல் இருக்கிறது. அதை 75--25 என்று மாற்ற வேண்டும்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1977 ஜூலை 13] [திரு. வி. சின்னய்யா]

அப்படி மாற்றினால்தான் உழுகின்ற விவசாயிகளின் செலவுக்குக் கட்டுபடியாகும் என்று தெரிவித்துக் கொண்டு எனது நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * * என்ற வார்த்தையைச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் என்று சொல்லுங்கள் அல்லது முதலமைச்சர் என்று சொல்லுங்கள். * * * என்ற வார்த்தைகளை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிட உத்தரவிடுகிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை (14-7-1977) 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை 1-28 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

**5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

இல்லை.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

## வியாழக்கிழமை, 1977, ஜூலை 14.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினாக்கள் ஒன்றும் இல்லை. அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### 1. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**(அ) வடலூர் சேஷசாயி தொழிற்சங்கத்தில் நடந்த சம்பவத்தில் உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் கைதுசெய்யப்பட்டு கை விலங்கு பூட்டப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். உமாநாத் அவர்களும், திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். அதை முதலிலே நான் தள்ளிவிட்டேன். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் மீண்டும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டு வருவதற்கு அனுமதிக்கிறேன். "அண்மையில் 27—6—1977 அன்று வடலூரிலுள்ள சேஷசாயி தொழிற்சங்கத்தில் நடைபெற்ற சம்பவத்தில் இந்தச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள திரு. சி. கோவிந்தராஜனை போலீசார் கைது செய்து அவர்மீது கொலை செய்ய முயற்சித்த வழக்கு போட்டதோடல்லாமல் அவருக்கு கைவிலங்கு பூட்டிய அத்துமீறிய நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து" என்று அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 14

இரண்டு பேர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி நான் மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ள இரு உறுப்பினர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் இதைப்பற்றி திரு உமாநாத் அவர்களோ அல்லது திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களோ இருவரில் ஒருவர் மட்டும் விளக்கிச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன். அது தான் மரபு.

திரு. ரா. உமாநாத்: கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. தொழிற் சங்கத் தலைவர் திரு. கோவிந்தராஜன் பிரச்சினையாக மட்டும் இதைக் கருதக் கூடாது. இதனுடைய விளைவு இந்த மாநிலத்திலேயுள்ள சகல பிரஜைகளுக்கும் ஏற்படும். தொழிற் சங்கப் பணிகளுக்குள் போலீஸ் தலையிடு, ஒருதலைப்பட்சமாக போலீஸ் நடந்து கொள்வது, ஒரு பொறுப்பு உள்ள பிரஜைக்கு கைவிலங்கு போடுவது, அவமானப் படுத்துவது இவைகளைக்குறித்த பிரச்னையாக இருக்கிறது. இந்த சம்பவம், இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னதாகவே 3 நாட்களுக்கு முன்னதாகவே நடைபெற்ற சம்பவம், ஆகவே ஒன்றை நான் முதலிலேயே தெளிவாகச் சொல்லிவிட விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தை அந்த சம்பவத்திற்கு நான் குற்றப் படுத்த விரும்பவில்லை. இந்த அரசாங்கம் இப்போது வந்திருப்பதால் அதை செட் ரைட் பண்ணுவதற்காக நான் இதைக் கொண்டுவருகிறேன். கடந்த 15 ஆண்டுகளாக வடலூரிலுள்ள சேஷசாயி தொழிற்சாலையில், தோழர், என்னுயைட பார்டி ஆள் அவர், அதனால் தோழர், தோழர் என்று வருகிறது. அவர் பிரஸிடெண்ட்டாக இருந்து இருக்கிறார். இப்போதும் அதனுடைய தலைவராக அவர்தான் இருக்கிறார். சிதம்பரம் என்பவர் அதனுடைய காரியதரிசியாக இருக்கிறார். அவரும் அந்த சங்கத்திலே இருந்தவர், அவர் பிறகு இந்த ஒற்றுமையிலிருந்து பிரிந்து தனியாக நடத்திவருகிறார்.



1977 ஜூலை 14] [திரு. ரா. உமாநாத்]

4-7-77 ஆம் தேதி தேர்தல் நடக்கும் என்று பிரகடனப்படுத்தப் பட்டது. சிதம்பரம் ஜெனரல் செகரட்டரியாக இருப்பதால் அவர்களுக்கு எதிராக இருப்பவர்கள் வரக்கூடாது என்று நினைத்து அவர்களுடைய மனுக்களை நிராகரித்துவிட்டார்கள். இவர் அங்கே ஒரு கூட்டத்திலே பேசி பிறகு ஊருக்குப் போவதற்காக பஸ் ஸ்டாண்டிற்குப் போய் இருந்தபோது அவருக்குத் தகவல் வந்தது, மனு நிராகரிக்கப்பட்டதாகத் தகவல் வந்தது, உடனே அவர் பஸ் ஸ்டாண்டிலிருந்து அங்கே சென்று அவர்களை சமாதானப்படுத்தி வைப்பதற்காகச் சென்றார். அப்போது அங்கே ஹபீஸ் என்ற சப்-இன்ஸ்பெக்டரும் போலீஸாரும் இருந்தனர், அவர்கள் பார்த்துக் கொண்டு இருந்தனர். இவர்கள் அடிக்கப்பட்ட போது அங்கே இருந்த போலீஸார் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் அங்கே போனவுடன், சிதம்பரம் நேராக இவர்களைப் பார்த்து கத்தியுடன் ஓடி வந்தார். கத்தியால் குத்தவந்தார். இன்னொருவர் பாலகிருஷ்ணன் என்பவர் குறுக்கே வந்ததால் இவர்கள் பாதிக்கப் படவில்லை. இன்றைக்கு அந்த பாலகிருஷ்ணன் என்பவர் ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த சம்பவத்திலே போலீஸ் அப்ஸர்வ் தான் பண்ணிக் கொண்டிருந்திருக்கிறார்கள். பிறகு அந்தத் தொழிலாளர்களை யெல்லாம் ஆபிஸுக்குள்ளே கொண்டு போனார்கள். அந்தக் கும்பல் கல்லால் அடித்து அந்த ஆபிஸைத் தூள் தூளாக ஆக்கி விட்டார்கள். நெய்வேலியில் டி.எஸ்.பி.யாக இருந்தவர் பொன்னுசாமிதான். விருத்தாசலத்தில் இருந்தவர் கிருபால். அவர் அடிஷனலாக வந்திருந்தார். இதற்கு மெயின் ரெஸ்பான்ஸிபிலிட்டியாக இருந்தது பொன்னுசாமிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்கு மன்றத்திற்குப் போகக்கூடிய வழக்காகக்கூட இருக்கலாம். ஆகவே, குறிப்பாக எப்படி இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வரும் என்று சுருக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. ரா. உமாநாத்: நான் வழக்கிற்குள் போகவில்லை. நேற்று ஒரு வழக்கு சம்பந்தமான ரெஃபரென்ஸ் வந்தது, அப்பொழுது எப்படி பேசப்பட்டதோ அதை மனத்திற்கொண்டு பேசிக்கொண்

டிருக்கிறேன். முதலில் டி.எஸ்.பி., கோவிந்தராஜனைக் கைது செய்யவில்லை. கலகக்காரர்கள் டி.எஸ்.பி.-யிடம் அவரைக் கைது செய் என்று சொன்னவுடன் டி.எஸ்.பி. பொன்னுசாமி அவரைக் கைது செய்திருக்கிறார். பிறகு போலீஸ் லாக்கப்பிற்குக் கொண்டு போய் இருக்கிறார். அங்கே போய் கைவிலங்கு போட்டு இருக்கிறார்கள். இப்படிக் கலகக்காரர்கள் கேட்கிறார்கள். கலகக்காரர்களைக் கைது செய்வதற்குப் பதிலாக போலீஸ் கோவிந்தராஜனைக் கைது செய்திருக்கிறது. This is most irresponsible thing. It is serious. அந்தமாதிரி நடக்கிறது. ஒருவர் போலீஸ் கம்ப்ளெயின்ட் அந்தமாதிரி நடக்கிறது. ஒருவர் போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுத்த பிறகு, இன்வெஸ்டிகேட் செய்து போலீஸ் நடவடிக்கை வேண்டும். ஆனால் இங்கு எவ்வளவு சீக்கிரம் கோவிந்தராஜனைக் கைது செய்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

மேலும் கலகம் என்று சொன்னால் ஒரு கையைத் தட்டினால் சப்தம் வராது, இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டினால்தான் சப்தம் கேட்கும். ரயட்டிங் என்றால் இரண்டு சைடு இருக்க வேண்டும், ஒரு சைடு மாத்திரம் இருக்க முடியாது. ஆனால் இந்தப் போலீஸ் அதிகாரிகள் கலகக்காரர்களோடு கூட்டு சேர்ந்து நின்றிருக்கிறார்கள்.

மறுபக்கத்தில் பார்ப்போமானால், 27-ஆம் தேதியே கோவிந்தராஜன் அவர்கள் ஒரு கம்ப்ளெயின்ட் கொடுத்திருக்கிறார். இந்தச் சம்பவத்தில் கலகக்காரர்கள் கம்ப்ளெயின்ட் கொடுத்த சாயந்தரமாகவே கைது செய்த போலீஸ்காரர்கள், கோவிந்தராஜன் 27-ஆம் தேதியே கம்ப்ளெயின்ட் கொடுத்திருந்தாலும் பொன்னுசாமி அவர்கள் அன்றைக்கே ஆக்ட் செய்யவில்லை. இரண்டு நாட்கள் கழித்து, ஜாமீன் கொடுக்க வழி செய்து கொள்ள டைம் கொடுத்து, அதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து செய்திருக்கிறார்கள். இப்படிப் பாரபட்சமாக நடந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

அவர்கள் 38 வருஷக் காலமாகத் தொழிற் சங்கத் தொடர்பு கொண்டவர்கள், சி.ஐ.டி.யூ., செகரட்டரி 67-ஆம் ஆண்டு இந்த மன்றத்தில் அங்கத்தினராக இருந்தவர், இந்தச் சம்பவம் நடந்த பொழுது அவர்கள் டிக்ளேர்ட் எலக்டட் என்ற சர்டிபிகேட்டை வாங்கியவர். அப்படியிருக்கும்பொழுது இப்படிப்பட்ட நிலைமைகள்





நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் அவருக்கு மட்டுமல்ல, எந்தப் பிரஜைக்கும் ஏற்படக்கூடாது. வேண்டுமென்றே அவமானப்படுத்தும் நிலைமை இருக்கக்கூடாது. நான் போலீஸ் அதிகாரிகளுக்கு அரசியல் கருத்துக்கள் இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை, அந்தக் கருத்து இருக்கலாம், ஏனென்றால் அவர்களும் பிரஜைகள், அவர்களும் ஓட்டுப் போடக் கூடியவர்கள். ஆனால் அவர்கள் டிஸ்சார்ஜ் ஆஃப் ட்யூட்டி என்று வருகின்ற பொழுது தங்களுடைய கருத்தை வைத்துக்கொண்டு நடந்தால் அது Will be dangerous. அதனால்தான் கலகத்தைத் தொடக்கியவர்களுக்கு ஆதரவாக பாரபட்சம் காட்டியதற்காக, கைவிலங்கு போட்டதற்காக இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது மட்டுமல்ல, எல்லாப் போலீஸ் அஃபிஷியல்ஸ்க்கும் ஒரு ஜெனரல் வார்னிங் அனுப்பி அரசியல் பாரபட்சமோ மற்ற பாரபட்சமோ காட்டக்கூடாது என்ற முறையில் விஷயங்கள் விவாதிக்கப்பட வேண்டியிருப்பதால் அதை டிஸ்கஸ் செய்ய வேண்டும். அதோடு இன்னொரு விஷயம். Please bear with me for some minutes.

இன்றைக்கு முதலமைச்சரிடம் போலீஸ் துறை வந்திருக்கிறது. அவர்களைச் சரிப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இலேசான காரியம் இல்லை. * *

To straighten out things is a difficult job. I do understand that. அந்த ஜாபை, அந்தக் கடமையை, எப்படி இருக்கக்கூடிய நிலைமைகளைச் சவாலாக ஏற்றுக்கொண்டு அவர்கள் வந்திருக்கிறார்களோ, அதைப்போல இந்தக் கடமையையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற சவாலையும் ஏற்றுக்கொண்டு, இதில் இவ்வளவு பிரச்னைகள் இருப்பதால் இதைப்பற்றி டிஸ்கஸ் செய்தால் எல்லாப் பிரஜைகளுக்கும் பாதுகாப்பு, அங்கத்தினர்களுக்கும் பாதுகாப்பு என்று வரும் என்பதால்தான் இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு அங்கத்தினர் திரு. உமாநாத் அவர்கள் கூறியவற்றில் பல செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதை இந்த

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 9-05—9-10-ல் சில பகுதிகள்)

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஜூலை 14

மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மை என்னவென்றால் சுப்ரமணியம் என்ற நபர், சி.ஐ.டி.யூ. தோழர்களால். . .

திரு. ரா. உமாநாத்: இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. அவர்கள் வேண்டுமென்றால் இன்னொரு நோட்டீஸ் கொடுத்து மூவ் பண்ண வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்பொழுது * * என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக இது விவாதத்திற்குரிய பிரச்னையாக ஆகிவிட்டது. எனவே இதைப்பற்றி ஒத்தி வைத்துப் பேசுவது தான் முறை என்று நானும் அதை ஆதரிக்கிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம் வடஆரிலுள்ள சேஷசாயி தொழில் நிறுவனத்தில் 300 தற்காலிக ஊழியர்களையும் சேர்த்து மொத்தம் 1,170 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். எஸ்.ஐ.எல். எம்ப்ளாயீஸ் யூனியன் மட்டும், மற்ற சங்கங்களைவிட வலிமை வாய்ந்தது. இந்த யூனியன், சி.ஐ.டி.யு.-வின் கீழ் இயங்கி வந்தது. அப்பொழுது, திரு. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., எக்ஸ்-அபிஷியோ தலைவராகவும் திரு. சிதம்பரம் பொதுச் செயலாளராகவும் இருந்து வந்தனர்.

17—7—1976 ஆம் நாள் திரு. சிதம்பரம், யூனியன் எதிர்ப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்ததின் காரணமாக சி.ஐ.டி.யூ. விலிருந்து, தற்காலிகமாக நீக்கப்பட்டார். இருந்த போதிலும், பெருவாரி

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 9-05—9-10-இல் சில பகுதிகள்)



1977 ஜூலை 14] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

யான தொழிலாளர்களின் ஆதரவின்பேரில், அவர் 3—9—1976 ஆம் நாளிலிருந்து கட்சி சார்பற்ற எஸ்.ஐ.எல். எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற பெயரில் ஒரு யூனியனை ஆரம்பித்து அதன் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இந்த யூனியன்தான் போனஸ் மற்றும் தொழிலாளர் சம்பந்தப் பட்ட பிரச்னைகளைப்பற்றி நிர்வாகத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்திருக்கிறது. இந்த யூனியனுக்காக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க 4—7—1977 அன்று தேர்தல் நடத்துவதற்காக, யூனியன் செயலாளரான திரு. சுப்ரமணியம் மற்றும் இருவர் கொண்ட குழு ஒன்று வேட்பு மனுக்களை பரிசீலிக்க அமைக்கப் பட்டது. போட்டியிடுபவர்கள் யூனியனின் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்றும், பிரேரேப்பவர்களும், வழிமொழிபவர் களும் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களாக இருக்க வேண்டு மென்றும் விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

தாக்கல் செய்யப்பட்ட 29 வேட்பு மனுக்களில் 7 மனுக்கள் பரிசீலனைக் குழுவினால் நிராகரிக்கப்பட்டன. இவைகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இருவரின் மனுக் களும் உள்ளடங்கும்.

இந்நிலையில், 26—6—1977 அன்று வடஆரில் திரு. பி. கோவிந்த ராஜன், எம்.எல்.ஏ. அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடை பெற்றது. அக்கூட்டத்தில் பேசும்போது அவர், எஸ்.ஐ.எல். எம்ப்ளாயீஸ் யூனியன் பொதுச் செயலாளர் திரு. சிதம்பரம், கையாடல் செய்ததாகக் கூறி அவருடைய தீய செயல்களை வெளிப் படுத்துவேன் என்று கூறினார்.

மறுநாள் (27—6—1977) காலை சுமார் 9 மணிக்கு திருவாளர்கள் சிதம்பரமும், செயலாளர் சுப்ரமணியமும், யூனியன் அலுவலகத்தில் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தபொழுது திரு. கோவிந்தராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட நபர்களுடன் அங்கு சென்று தலைவரான தன்னைக் கலக்காமல் எப்படி யூனியன் தேர்தலை நடத்தலாமென்று வினவிவிட்டு, திரு. சுப்ரமணியத்தை, இரும்புத் தடியால் தாக்கியிருக்கிறார். அவருடன் சென்றிருந்தவர்கள் அங்கிருந்த மற்றவர்களைத் தாக்கியதால் அவர்களும், திரும்பித் தாக்கியிருக்கிறார்கள்.

இச்சம்பவம் பற்றிய செய்தி அறிந்தவுடன் வடலூர் உதவிக் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திலிருந்து காவலர்களுடன் விரைந்தார். நிலைமையைத் தன்னால் சமாளிக்க இயலாது என அறிந்து, உயர் அதிகாரிகளுக்கு வானொலிச் செய்தி மூலம், உதவி கோரியிருக்கின்றார். செய்தி கிடைக்கப்பெற்று, நெய்வேலி மற்றும் விருத்தாசலம் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் தேவையான ஆயுதக் காவல் படையுடன் வடலூர் சென்று நிலைமையைச் சமாளித்து அமைதியை நிலை நாட்டினர். இரு தரப்பிலும் காயமடைந்த 16 பேர்களுக்கு உடனடியாக சிகிச்சையளிக்கப்பட்டது. இவர்களில் 5 பேர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

திரு. சுப்ரமணியம் கொடுத்த புகாரின் பேரில் திரு. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., மற்றும் 17 பேர்கள்மீது இ.பி.கோ. 147, 148, 324, 326 மற்றும் 307 பிரிவுகளின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. கோவிந்தராஜன் உட்பட 11 பேர்கள் கைது செய்யப்பட்டனர். மற்ற 7 பேர்கள் கோர்ட்டில் சரணடைந்தனர். திரு. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., உட்பட 10 பேர்கள் வடலூர் காவல்நிலைய எல்லைக்குள் மறு உத்தரவு வரை நுழையக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மற்ற 8 பேர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திரு. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ. கொடுத்த புகாரின் மீது திரு. சுப்ரமணியம் மற்றும் 10 பேர்கள்மீது இ.பி.கோ. 147, 148, 324, 326 மற்றும் 379 பிரிவுகளின்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 10 பேர்கள் கைது செய்யப்பட்டனர். ஒருவர் கோர்ட்டில் சரணடைந்தார். எல்லாரும் வடலூர் காவல் நிலைய எல்லைக்குள், மறு உத்தரவு வரை நுழையக் கூடாது என்ற நிபந்தனையின்பேரில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இரு வழக்குகளும் புலனாய்வில் உள்ளன. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் வடலூர் சென்று வழக்குகளைத் தீவிரமாகப் புலனாய்வு செய்யும்படி நெய்வேலி துணைக் காவல் கண்காணிப்பாளரைப் பணித்துள்ளார்.



மேற்சொன்ன விபரங்களிலிருந்து எஸ்.ஐ.எல். எம்ப்ளாயீஸ் யூனியனை, யார் கைப்பற்றுவது என்பதில் இரு கோஷ்டியினருக்கும் போட்டியேற்பட்டதின் விளைவாக இந்நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. காவல் துறையினர் இரு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஒத்திவைப்புப் பிரேரணையில் கூறியுள்ளபடி திரு. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ. அவர்களுக்குக் கைவிலங்கு பூட்டப்படவில்லை. அவர் காவல் துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் "வெளியே இருந்த போலீஸ் எடுத்துக் கொண்ட பாதுகாப்பு முயற்சியினால் நாங்கள் பாதுகாக்கப்பட்டோம்" என்று கூறியிருக்கிறார்.

யூனியன் தேர்தலும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நிலைமையும், அமைதியாக உள்ளது. எனவே, இச்சம்பவங்கள் குறித்து சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். * * * * * * என்று இந்தப் பேச்சிற்கு இடையிலே மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆதாரத்தோடு பேச வேண்டுமென்றால் பின்னால் பேசட்டும்—பதில் சொல்லிக் கொள்ளட்டும்.

திரு. ரா. உமாநாத்: ஆன் எ பாயின்ட் ஆப் இன்ஃபர்மேஷன்—கிளாரிபிகேஷன். போலீஸ் ரிப்போர்ட்டை முதலமைச்சர் படித்திருக்கிறார். ரொட்டீன் ஆக இங்கே படித்தார். அது நிச்சயமாக ஒன்-சைடட். ஆனால் இங்கே சபையினுடைய அங்கத்தினர் தான் உங்கள் முன்னாலே இதை வைத்திருக்கிறார். அவர் இந்த சபையின் உறுப்பினர். சீரியஸ் ரெஸ்பான்சிபிலிடி இருக்கக் கூடிய இந்த சபையின் ஒரு பார்ட். கைவிலங்கு போடப்படவில்லை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 9-15—9-20-ல் சில பகுதிகள்)

என்று போலீஸ் சொல்லும்போது, சபையில் இருக்கிற அங்கத்தினர் கைவிலங்கு போட்டதாகச் சொல்லுகிறார். ஆக, இதை எப்படி சால்வ் பண்ணுவது என்பதற்குத் தாங்கள் ஒரு கைடன்ஸ் கொடுங்கள். நாளைக்கு எனக்கே கைவிலங்கு மாட்டி போலீஸ் இல்லை என்று சொல்லுவார்கள். அப்போது எங்கள் நிலைமை என்னவாகும்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி மீண்டும் விசாரணை செய்ய உத்தரவிடப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நிச்சயமாக உண்மை தெரிய வரும். சந்தேகம் இருந்தால் அப்போது அதை உறுப்பினர் அவர்கள் விவாதித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பதற்கும், இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்கவேண்டாமென்ற நிலைக்கு வருகிற சூழ்நிலைக்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், ஆதாரத்தோடு பேசவேண்டும், சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள், போலீஸ் இலாகாவை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் தலைவர் சொன்னதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அதற்கு மேல் ஒவ்வொருவரும் சொன்னால், விவாதம் ஆகிவிடும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இன்னொரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். ஆதாரத்தோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் மேற்கொண்டு விசாரணை செய்ய இருப்பதாலே, இன்னும் பல உண்மைகள் வரலாம். அதுவரைக்கும் உறுப்பினர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்பிளநேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அருமையான பேரவை பாதிக்கப்பட்ட உறுப்பினராக இருக்கிற நீங்கள் பேசாமல் இருப்பது நல்லது.



மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகிற போது * * * என்ற கருத்தைச் சொன்னது அவ்வளவு உசிதமாகத் தெரிய வில்லை. ஆகவே நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்தக் கருத்துக்களை அகற்றிவிடவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இப்பொருள் குறித்து மேலும் விவாதிக்கத் தேவை இல்லை என்று கூறி இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) கேரள மாநிலம், கஜானுப்பாறை மற்றும் ராஜாக்காடு பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திருவாளர்கள் எ. ரகுமான்கான், க. சுப்பு ஆகியோர் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். "கேரள மாநிலம், கஜானுப்பாறை மற்றும் ராஜாக்காடு காவல் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு, அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் உருவாகியுள்ள கொந்தளிப்பு சூழ்நிலை குறித்து."

அதே பொருள் குறித்து, திரு. ஆர். எ. வத்திப் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள் :

"மதுரை மாவட்டம், கம்பம் பட்ட கூடலூரை அடுத்துள்ள கேரள மாநிலப் பகுதிகளில் கஜானுப்பாறை, சாந்தாம்பாறை, ராஜாக்காடு முதலிய தமிழர்களுக்கு கணிசமான காப்பித் தோட்டங்களும் ஏலக்காய்த் தோட்டங்களும் உள்ளன. இத் தோட்டங்களில் ஏராளமான தமிழர்கள் வேலை செய்கிறார்கள். கடந்த இரண்டு வாரங்களாக தோட்டச் சொந்தக்காரர்களும் தமிழக தொழிலாளர்களும் பலாத்காரமாக வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இதனால் கம்பம் பகுதியில் அசாதாரண மான சூழ்நிலை உருவாகியுள்ளது. அவசர முக்கியத்துவம் வாய்ந்த இதன் விளைவுகளை விவாதிக்க மன்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென கோருகிறேன்."

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது. (முற்பகல் 9-15—9-20-ல் சில பகுதிகள்)

ஆகவே சுருக்கமாக நமது அண்டை மாநிலத்திற்கும், நம் மாநிலத்திற்கும் இடையூறு ஏற்படுத்தாதவாறு பேசுமாறு மாண்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக்கொள்கிறேன்

(முற்பகல் 9-20)

**திரு. எ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலத்தோடு சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் எப்படிப் பேசவேண்டுமென்று பேரவைத் தலைவர் குறிப்பிட்டதற்கு நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது நம் இரு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினை என்பதை நான் நன்கு அறிவேன். இந்தப் பிரச்சினையில் மலையாளிகள், தமிழர்கள் என்ற கண்ணோட்டத்தோடு அணுக மாட்டேன் என்கிற உத்தரவாதத்தை நான் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரள மாநில எல்லையோரத்தில், மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கம்பம், கோம்பை, தேவாரம் போன்ற பகுதிகளில் ஏலக்காய்த் தோட்டங்கள் பல இருக்கின்றன. அந்த ஏலக்காய்த் தோட்டங்களில் அதன் உரிமையாளர்களாக மட்டுமல்ல, அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய பலரும் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் இருந்தும் கூட பல்வேறு மக்கள் காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக அந்தப் பகுதியில் தோட்டத் தொழிலாளர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு நாட்களாக, பல்லாண்டுகாலமாக அங்கு ஏதேனும் பிரச்சினை உண்டா என்று கேட்டால், மிக மிகச் சாதாரண பிரச்சினைகள் அங்கு இருந்தது உண்டு. அந்தச் சாதாரண பிரச்சினைகளையும் கூட அவ்வப்போது அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களும், முதலாளிமார்களும் கலந்துபேசி தீர்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போதுள்ள சூழ்நிலை என்னவென்று கேட்டால் கேரளாவில் இடுக்கி கோட்டாறு, சாந்தான்பாறை, ராஜங்கோடு, சதுரப்பாறை போன்ற பெரும்பான்மையான இடங்களில் உள்ள கேரளத்தைச் சேர்ந்த தோழர்கள். அங்கு இருக்கக் கூடிய தமிழ்த் தோழர்களை, நீங்கள் உங்கள் பாண்டிய நாட்டுக்குப் போய்



விடுங்கள், தமிழகத்திற்கு போய்விடுங்கள் என்று பயமுறுத்தி வெளிப்படையாகக் கோஷங்கள் போடுகிறார்கள். இது ஒரு வகையான பிரச்சினையாக இருக்கிறது.

இன்னொன்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் இதை ஒரு தொழில் பிரச்சினையாக வைத்துப் பேசுகிறார்கள். மொத்தத்தில் இந்த இரண்டுவிதமான கண்ணோட்டம் இருக்கிறது. சிலரைப் பொறுத்தமட்டில் தமிழர்கள் அங்கே இருக்கக்கூடாது. அவர்களை உங்கள் மாநிலத்திற்குப் போய் விடுங்கள் என்று கோஷிக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதை முதலாளி, தொழிலாளி பிரச்சினையாக அணுகுகிறார்கள்.

இப்போது என்ன நிலைமை இருக்கிறது என்று கேட்டால் அங்கு இருக்கக்கூடிய ஏலக்காய்த் தோட்ட முதலாளிகளும், தொழிலாளர்களும் அங்கு நிரந்தரமாக இருக்க முடியவில்லை. அவர்களுக்கு ஏராளமான ஆபத்து வர இருக்கிறது. ஓரளவுக்கு ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது.

நமது அரசியல் சட்டம் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் யார் வேண்டுமானாலும் தொழில் நடத்தலாம், சொத்துக்கள் வைத்துக்கொள்ளலாம் என்ற உரிமையைத் தந்திருக்கிறது. பண்டமண்டல் ரைட்ஸ் என்று அந்த உரிமை சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் கேரளாவில் இன்று வாழக்கூடிய தமிழர்கள், சொத்துகள் வைத்திருக்கக்கூடிய தமிழர்கள், தோட்டத் தொழிலாளர்கள் நிலைமை என்னவென்று கேட்டால், அவர்கள் அனைவரும் வெளியேற வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. இதை அங்கே இருக்கக்கூடியவர்கள் கார்டமம் பிளாண்டேஷன் அசோசியேஷன் மூலமாகச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவை குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

30—6—1977 அன்று ஓடினுப்பாறை போன்ற பகுதிகளில் உள்ள தமிழர்களை வெளியேற வேண்டுமென்று சொல்லி ஆயிரக் கணக்கானவர்கள் ஒன்று சேர்ந்து அங்கிருந்த தமிழர்களின்

விடுகளுக்குத் தீ வைத்திருக்கிறார்கள். சொத்துக்களைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். இரவுக்குள் இரவாக வெளியேறிவிடுங்கள், இல்லாவிட்டால் உங்களையே கொளுத்திவிடுவோம் என்று பய முறுத்தியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் சாத்தாம்பாறை, கஜானுப்பாறை, சதுரங்கப்பாறை போன்ற இடங்களில் பதட்ட மான நிலை உள்ளது. மூணாறு பகுதியில் எனக்கே பர்சனல் எக்ஸ்பீரியன்ஸ் உண்டு. என்னுடைய உறவுக்காரருக்கு அந்தப் பகுதியில் சொந்த ஏலக்காய்த் தோட்டங்கள் இருக்கின்றன. நான் மதுரை மாவட்டம் அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்பதால் எனக்கும் சொந்தப் பிரச்சினை, அனுபவம் இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் இன்றைக்குக் கம்பம் பக்கத்தில் நிறைய தமிழர் கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இப்போது அங்கே இருக்கக் கூடியவர்கள் அங்கே இருப்பவற்றை விட்டு விட்டு ஓடி வரவேண்டுமென்ற அளவுக்கு அங்கே நிலை இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் கம்பம் என்ற மதுரை மாவட்டத் திலுள்ள ஊர் கேரளாவிலிருந்து 15 மைல் தொலைவில்தான் இருக்கிறது. கேரளாவிலிருந்து பலர் வந்து கொண்டு இருக் கிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் ஒரு பதட்ட நிலை இருக் கிறது. எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். அதனால் பிரச்சினை வேறு விதமாகப் போய் விடலாம். இதைச் சரிப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று தம்முடைய முதலமைச்சர் அவர்களை—தமிழ்ச் சமுதாயத்தின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள் நமக்கு இப்போது வந்திருக்கிறார்கள். அந்தத் தமிழ் மக்கள் படும் அவதியைப் போக்க, இதனை தமிழ்-மலையாளி பிரச்சினை யாக்காமல் நடவடிக்கைகளை எடுக்க ஈடுபடுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்தச் சம்பவம் 30—6—1977 அன்றைக்கு நடந்து இருக் கிறது. கஜானுபாறை போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கூட செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தச் சம்பவம் குறித்து விவாதிக்க, இது பப்ளிக் இம்பார்ட்டென்ஸ் அண்டு அர்ஜன்ட் மேட்டராக இருப்பதால் இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவரவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை வலியுறுத்தி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நடைபெற்று இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட கம்பத்திற்கு மேற்கே இருக்கும் குமுளி பகுதியில் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று அன்று கூட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு, அதன் அடிப்படையில் கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு உதவிகரமாக இருந்தது.

ஆனால், இப்போது மீண்டும் போடி பகுதிக்கு மேற்கே கஜானுபாறை, சாந்தம்பாறை, ராஜாபாறை போன்ற இடங்களில் மிகவும் பயங்கரமான ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆயிரக் கணக்கான தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்படுகிறார்கள். இது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்கிறது என்பதை நன்றாக உணரவேண்டும்.

இந்தப் பிரச்சினையில் நாம் தெளிவு சுளிவு இன்றி இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கக்கூடிய பிரச்சினையாக இதை எடுத்துக்கொள்ளாமல், ஏதோ கேரள மாநிலத்திலே உள்ளவர்கள் எல்லாம் தமிழர்களுக்கு விரோதமாக இருப்பவர்கள் என்றோ, தமிழ் நாட்டிலே இருப்பவர்கள் எல்லாம் கேரள மாநிலத்தவருக்கு விரோதமாக இருப்பவர்கள் என்றோ அல்ல. இது தொழிலாளர் களிடையே ஏற்பட்டு இருக்கிற ஒரு பிரச்சினை. அங்கே இருக்கும் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள் விரட்டப்படுவார்களானால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகப்படும் என்ற நிலைமையில் இது நடைபெற்று இருக்கலாம். அதே போல் கேரளாவிலிருந்து வந்தவர்களை தமிழ் நாட்டிலே இருந்து விரட்டினால் இங்கே வேலை வாய்ப்பு தமிழர்களுக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று அந்த மாதிரி செய்யலாம். அந்த முறையில்தான் நாம் இதை எடுத்துக் கொள்ளவேண்டும். வேறு எந்த அடிப்படையிலும் அவர்கள் செய்வதாக நான் நினைக்கவில்லை.

ஆனால், இது எப்படியிருந்தபோதிலும் ஒரு பிரச்னையாக உருவாகியிருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு அவர்கள் இந்தப் பிரச்னையில் தலையிட்டு அங்கே இருக்கும் தொழிலாளர் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பாக சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு கேரள அரசாங்கத்தின் பிரதிநிதிகளோடு தொடர்பு கொண்டு பேசுவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஏனெனில், சில ஆண்டுகளுக்கு முன்பு கூடலூர் பகுதியி... நீலகிரி கூடலூர் பகுதியில்—மலையாளிகளுக்கு விரோதம... மலையாளித் தொழிலாளர்களை விரட்டுகிறார்கள் என்று கே... சட்டமன்றத்தில் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தது. அத... அடிப்படையில் கேரள மாநில அரசாங்கத்தின் சார்பி... திரு. ஈ. அகமது என்ற உறுப்பினர் இங்கே தமிழ் நாட்டு அரசாங்கத்தை சந்தித்துப் பேசி வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டி இங்கே அனுப்பி வைக்கப்பட்டார்கள். அதன் அடிப்படையில் இங்கே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அங்கே சுமுக சூழ்நிலை ஏற்பட்டது. அதற்கு தமிழக அரசும் உதவி புரிந்தது.

அதே அடிப்படையில் இது ஒரு இன்டர்-ஸ்டேட் பிராப்ளமாக இருக்கிறது. இங்கே ஏற்பட்டால் அங்கே ஏற்படும் நிலை இருக்கிறது. அங்கே ஏற்பட்டால் இங்கே ஏற்படும் நிலை இருக்கிறது. இதனால் தொழிலாளர்களின் நலன் பாதிக்கப்படுகிறது. தொழிலாளர்களுடைய உரிமை, உடமை பாதிக்கப்படுகிறது. மேலும் அவர்கள் மேற்கொண்டு விரட்டப்படுவது தடுக்கப்படவேண்டும். அதற்காக அரசாங்கம் உடனடியாக கேரள அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குக் கூட கேரள அரசாங்கத்திலுள்ள அமைச்சரோடு தொடர்பு உண்டு. இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கு அந்த அரசாங்கத்தோடு தொடர்பு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒத்தி வைப்புத் தீர்மானம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குக் கவனமூட்டுகிறேன். இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க ஏன் ஒத்தி வைக்க வேண்டும் என்பது தான் பேசப்படவேண்டும்.



(முற்பகல் 9-30)

**திரு. எம். ஏ. லத்தீப் :** இதை அடிக்கடி சொல்கிறீர்கள். நானும் கூட விளக்கம் கொடுத்துக்கொண்டே இருக்கிறேன். சரி, இருக்கட்டும், பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்காக எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வீர்கள்? உறுப்பினர் மிகவும் சாமர்த்தியமாக, சுருக்கமாகச் சொல்வார் என்று நினைக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், இது ஒரு மரபு. இதற்காக அவையை ஒத்தி வைக்கப் போவதில்லை. (சிரிப்பு) என்ன பதில் வரும் என்பதும் தெரியும். இது எங்களுக்கு ஒரு வாய்ப்பு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் பொறுப்போடு பேச வேண்டும். முடிவு எப்படி இருக்கும் என்பது உறுப்பினருக்கு எப்படித் தெரியும்? அப்படித் தெரியும் என்றால், உறுப்பினர் ஏன் இந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும்? (ஆரவாரம்)

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஆகவே நான், கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

அரசாங்கம் பெரிய மனது வைத்து விவகாரத்தை விவாதித்தால் நன்றி உடையவனாக இருப்பேன். இதில் முதலமைச்சர் அவர்கள் கூட அக்கறை எடுத்து நடவடிக்கைகள் எடுப்பார் என்று கருதுகிறேன்.

இது இரண்டு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினையாக இருக்கிறது. வேறு உணர்வுகளுக்கு இடமில்லை. இது தொழிலாளர்கள் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை. ஆகவே இதற்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்கு கேரள அரசோடு முறையாகத் தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதில் மன்ற உறுப்பினர்கள்—மற்றவர்கள் கருத்தைத் தெரிவித்தால் கூட அவர்களோடு பேசுவதற்கு முதலமைச்சருக்கு உதவிகரமாக இருக்கும். மிகவும் முக்கியமான பிரச்சினை. இதைத் தெரிந்து கொள்வது மற்ற உறுப்பினர்களுக்கும் உதவியாக, வாய்ப்பாக இருக்கும் என்ற அளவிலே, மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, இது சம்பந்தமாக கேரள அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற செய்தியின் சாராம்சம் :

உடுமஞ்சோலை வட்டம், கஜானுப்பாறையில், வி. ஆர். எஸ்டேட் என்ற பெயரில் 22 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு ஏலக்காய் எஸ்டேட் திரு. ரெங்கசாமி செட்டியார் என்பவருக்குச் சொந்தமானது. இதில் 18 தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களில் 9 பேர் சி.ஐ.டி.யு.-வைச் சேர்ந்தவர்கள், ஒன்பது பேர் ஐ.என்.டி.யு.சி.-யைச் சேர்ந்தவர்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களுக்கு போனஸ் தரப்படவில்லை.

சி.ஐ.டி.யூ. தொழிலாளர்கள் போனஸ் கேட்டனர். நிர்வாகிகள் கொடுக்கவில்லை. எனவே, சி.ஐ.டி.யூ. தொழிலாளர்கள் ஜூன் மாதத்திலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் ஐ.என்.டி.யூ.சி.-யைச் சேர்ந்த தொழிலாளர்கள் நிர்வாகத்தை ஆதரித்து வேலை செய்யத் தயாராயிருந்தனர்.

29—6—1977 அன்று தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஐ.என்.டி.யூ.சி. தொழிலாளர்கள், சி.ஐ.டி.யூ. தொழிலாளர்களால் தடுக்கப்பட்டனர். இதனால் இரண்டு தரப்பினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. தோட்ட நிர்வாகியும் அவருடைய இரண்டு மகன்களும் காயமடைந்தனர். காவல் துறையினர் சி.ஐ.டி.யூ. தொழிலாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர். சில சி.ஐ.டி.யூ. தொழிலாளர்களும் காயமடைந்ததால் நிர்வாகம் மற்றும் ஐ.என்.டி.யூ.சி. தொழிலாளர்களுக்கு எதிராக மற்றொரு வழக்கையும் காவல் துறையினர் பதிவு செய்தனர்.

அடுத்த நாள், அதாவது 30—6—1977 அன்று கஜானுப்பாறையிலுள்ள சி.ஐ.டி.யூ. அலுவலகத்தை, ஐ.என்.டி.யூ.சி. தொழிலாளர்கள் தாக்கினர். அலுவலகம் பாதிக்கப்பட்டது. அலுவலக நிர்வாகிகளும் சொற்ப காயமடைந்தனர். காவல் துறையினர் இதன் தொடர்பாகவும், ஐ.என்.டி.யூ.சி. தொழிலாளர்கள் மீது ஒரு வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மறுபடியும், 1—7—1977 அன்று கஜானுப்பாறையின் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து சி.ஐ.டி.யூ. தொழிலாளர்கள் கஜானுப்பாறைக்கு வந்து போராட்டம் நடத்தினர். நிர்வாகத்



தினரின் ஒரு கிடங்கையும் தாக்கினர். காவல் துறையினர், சி.ஐ.டி.யூ. தொழிலாளர்கள் மீது இதன் தொடர்பாக ஒரு வழக்கு தொடர்ந்தனர். காவல் துறை உயர் அதிகாரிகள் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டனர். தொழிலாளர் தலைவர்களையும், தோட்டச் சொந்தக்காரர்களையும் சந்தித்துப் பேசினர். அமைதிக்குக் குந்தகம் வராமலிருக்கும் வழிமுறைகளை வகுத்தனர்.

3—7—1977 அன்று சமரசப் பேச்சு நடந்தது. சிக்கல் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டது. நிர்வாகம் இரண்டு தவணைகளில் தொழிலாளர்களுக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான போனசாக, ரூ. 420 தர ஒப்புக்கொண்டது. 4—7—1977 அன்று எஸ்டேட்டில் மறுபடியும் வேலைகள் தொடங்கிவிட்டன. சிக்கலேதுமில்லை.

இது சி.ஐ.டி.யூ. தொழிலாளர்களுக்கும், ஐ.என்.டி.யூ.சி. தொழிலாளர்களுக்குமிடையே நடந்த சண்டையேயன்றி தமிழர்கள்—மலையாளிகள் போராட்டமில்லை.

மதுரை கலெக்டர், இந்த நிகழ்ச்சிகளில் தாக்கப்பட்ட, தேனிக்கருகேயுள்ள பழனிச்செட்டிப்பட்டியைச் சேர்ந்த இருவரை விசாரித்தும், வீரபாண்டி கிராம அதிகாரியை விசாரித்தும் ஒரு அறிக்கை அனுப்பியுள்ளார். பிரச்சினை போனஸ் தருவதில்தான் ஏற்பட்டது என்றும், இது தொழிலாளர் பிரச்சினைதான் என்றும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும் அறிக்கை அனுப்பியுள்ளார்.

பழனிச்செட்டிப்பட்டியைச் சேர்ந்தவர்களிடமிருந்து கஜானுப்பாறையில் போலீஸ் காவல் உள்ளது என்றும், நிலைமை சாதாரண நிலைக்குத் திரும்பிவிட்டது என்றும், பழனிச்செட்டிப்பட்டியைச் சேர்ந்தவர்கள் மீண்டும் கஜானுப்பாறைப் பகுதிகளுக்குத் திரும்புகின்றனர் என்றும் அறியப்படுகிறது.

இது இரண்டு மாநிலங்களுக்கும் இடையே உள்ள பிரச்சினையாதலாலும், இரண்டு மாநிலங்களுக்கும் இடையே உள்ள சுமுகமான உறவை எண்ணி இந்தப் பிரச்சினையை எச்சரிக்கையுடன் அணுகவேண்டியுள்ளது என்பதைக் கருதியும், இந்தப் பிரச்சினையை மேற்கொண்டு சட்டமன்றத்தில் விவாதிப்பது உசிதமில்லை என்று கருதப்படுகிறது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 14

கேரள அரசைக் கலந்துகொண்டு உரிய நடவடிக்கை, உரிய நேரத்தில் அரசு எடுக்கும் என்ற உத்தரவாதத்துடன் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை நீங்கள் வற்புறுத்த வேண்டாம் என்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக அவையை ஒத்திவைத்து சபையினுடைய நிகழ்ச்சிகளை தள்ளி வைக்கவேண்டாம் என்று பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவை இல்லை என்ற காரணத்தால் இத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (இ) சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் ஒருவர் போலீஸ் காவலில் இருந்தபோது இறந்தது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, இப்போது கொண்டு வருகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் முதலில் நான் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க மறுபடியும் இதை எடுத்துக் கொள்கிறேன். சென்னையில் புதுவண்ணாரப் பேட்டையில் இருபான் என்பவர் போலீஸ் காவலில் இருக்கும் போது இறந்து விட்டதால் ஏற்பட்டுள்ள நிலைபற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. கோவிந்தராசன், திரு. க. சுப்பு, திரு. என். சுந்தரராஜ், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. எம். அம்பிகாபதி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரமும் போதிய முக்கியத்துவமும் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நிறையப் பேர்கள் தீர்மானம் கொடுத்திருப்பதால் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் திரு. சுந்தரராஜ் அவர்களும், திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் திரு. மாரிமுத்து அவர்கள்மட்டும் பேசினால் போதும் என்று கூறி இப்போது திரு. சி. கோவிந்தராசன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.



1977 ஜூலை 14]

**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் 8-ம் தேதி நடைபெற்றது. பகல் சுமார் 1 மணி அளவில் புதுவண்ணாரப்பேட்டையில் உள்ள பூங்காவன குப்பத்தைச் சேர்ந்த இருபான் என்பவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இரண்டு மணி நேரத்தில் சுமார் 3 மணி அளவில் அவர் லாக்கப்பில் மரணம் அடைந்து விட்டார் என்ற செய்தி அந்தப் பிராந்தியம் பூராவும் பரவியது. அதனால் மக்களிடத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதைக்கண்ட போலீஸார் அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய முக்கியமான வர்கள் யாரையும் அவர் இறந்தது உண்மைதானா என்பதைத் தெரிந்து கொள்வதற்குக் கூட உள்ளே அனுமதிக்காமல் காவல் நிலையத்தின் உள்வாசலில் தாழ்ப்பாள் இடப்பட்டது.

அதற்கு முன்னதாக ஏற்கனவே லாக்கப்பில் இருந்த கைதி களுக்கு அன்று விடுதலை கொடுக்கப்பட்டு துரத்திவிடப் பட்டார்கள். காரணம் அவர்கள்மூலம் செய்தி வெளிவந்து விடுமோ என்று.

பிறகு அந்தச் சடலம் ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஸ்டான்லி மருத்துவ மனையிலிருந்து 9-ம் தேதி காசிமேடு இடுகாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு அது அடக்கம் செய்யப்பட்டது. அவரது உறவினர்களுக்குக் கூட பிரேதத்தைக் கொடுக்கவில்லை.

ஆனால் அவர்கள் சொல்லக்கூடிய காரணம் என்னவென்றால், கிரஸினை தன்மீது அவர் ஊற்றிக்கொண்டு, கொளுத்திக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டதாக போலீஸாரால் கொடுக்கப்பட்ட தகவல் வந்திருக்கிறது. கைது செய்யப்பட்டதொரு கைதிக்கு லாக்கப்பிற்குள் எப்படி கிரஸின் கிடைக்கும் என்பது சந்தேகத்திற் குரிய பிரச்னை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அது அவருக்கு கிடைப்பதற்கு இல்லை. கைது செய்யப்பட்டபோது அவர் தன் கையில் கிரஸின் டின்னை அல்லது கிரஸின் பாட்டிலை கொண்டு வந்தாரா? அல்லது லாக்கப்பிற்குள் கிரஸின் இருந்ததா? என்பது ஒரு விஷயம்.

போலீஸார் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு காரியத்தைச் செய்து விட்டு அதிலிருந்து தப்பித்துக் கொள்ள பலவிதமான உபாயங்களைக் கையாண்டு, பல கற்பனை, கட்டுக்கதைகளை

ஜோடிக்கிறார்கள். இந்தமாதிரி சம்பவங்கள் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. வடஇர் சம்பவமும் அப்படித்தான். உண்மையில் அந்தச் சம்பவத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. நான்கூட போலீஸாரைக் கேட்டேன், ஏன் என் பெயரில் 307-வது செக்ஷன்படி வழக்கு போட்டிருக்கிறீர்கள் என்று. அவர்கள் சொன்னார்கள், இப்போது நிலைமையைச் சமாளிப்பதற்காகப் போட்டிருக்கிறோம், பின்னர் அதை ரெபர் . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதைப்பற்றி ஒத்திவைக்க வேண்டும் என்று பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. உங்கள் பிரச்னைக்குப் போக வேண்டாம்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தாங்கள் செய்த காரியம் உண்மை, சரியானது என்பதை நிரூபிப்பதற்காக பல்வேறு விதத்தில் கேஸ் ஜோடனை செய்கிறார்கள்.

(முற்பகல் 9.40)

எனவே அங்கு கெரோஸின் ஆயில் கிடைப்பதற்கு வழியில்லை. ஆகவே, இருபான் போலீஸ் லாக்அப்பில்தான் கொலை செய்யப் பட்டிருக்கிறான் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான காரணமும் இருக்கமுடியாது.

பொதுவாக குற்றம் செய்யப்பட்டு சிறை பிடிக்கப்பட்டாலும் குற்றம் செய்யாமல் சிறை பிடிக்கப்பட்டாலும் இப்படிப்பட்ட நிலைமைதான் நடந்து கொண்டிருக்கிறது. போலீசாருடைய கையில் சிக்கினால் அவர்களுடைய உயிர் போலீசாருடைய கையில் தான் அடங்கியிருக்கிறது என்ற அபாயகரமான நிலை இருந்து கொண்டிருக்கிறது.

இது போன்ற நிலைமை நாடெங்கும் இருந்து கொண்டிருக்கிறது என்பதற்குப் பல சம்பவங்களைக் கூற முடியும். ஆகவே இது ஒரு முக்கியமான விஷயம். இப்படிப்பட்ட போலீசாருடைய நடவடிக்கையைப் பற்றி புதுவண்ணையில் மக்களிடையே பரபரப்பும், பதட்ட நிலையும் ஏற்பட்டு இருக்கிறது. இதற்கான காரணங்களையும் இது சம்பந்தமான விவரங்களையும் தெரிந்து கொள்வதற்காக பொதுவாக இந்த நிலைமையிருப்பதால், இந்த அவையை ஒத்தி வைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய உரிமைக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுத்து, சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டிய போலீசார் நேர்மாறாக நடந்து கொண்டிருப்பதின் காரணமாக அங்கு பதட்டமான நிலை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் என்னுடைய தீர்மானத்தில் . . .

"the serious situation arising out of the mysterious death of Iruban, aged 27 years in the Police lock up at New Washermanpet Police Station on 9th July 1977 and the obvious failure of the Government to ensure safety to the lives of the people at the hands of the arrogant and irresponsible police officials".

என்று கொடுத்திருக்கிறேன்.

எல்லா போலீஸ் அபிஸியல்ஸ்-ம் இப்படித்தான் என்று நான் சொல்லவில்லை. பல இடங்களிலும் இவ்விதம் நடந்து கொண்டிருக்கிறது. சென்னையில் இன்னொரு இடத்தில்கூட போலீசார் நடத்தை காரணமாக ஒருவர் இறந்து போனதற்காக விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது போன்று ஸ்ரீவைகுண்டத்தில் கான்ஸ்டபிள் ஒருவரின் நடத்தைபற்றியும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

மேட்டூரில் லாக்அப்பில் இருந்த ஒருவர் இறந்து போயிருக்கிறார் என்றும் செய்தி வந்திருக்கிறது.

போலீஸ் நிலையத்திற்கு ஒருவன் அழைத்துச் செல்லப்பட்டால் அவனுடைய உயிருக்கு ஆபத்து என்கின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு தர வேண்டிய போலீசார் அதற்கு நேர்மாறாக நடந்து கொள்ளக் கூடிய ஒரு நிலைமைதான் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது. இதை போலீஸ்துறை மிகவும் கவனிக்க வேண்டும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போலீஸ்காரர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று இப்போது அறிவுரை கூற வேண்டிய தேவையில்லை. எதற்காக இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டும் என்பதைப்பற்றி மட்டும் இப்போது பேச வேண்டும். தமிழ்நாட்டில் நடந்ததை எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும்.

திரு. க. சுப்பு: இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் லாக்கப்பில் இந்த மரணம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக லாக்கப்பில் போகும்போது அரைஞாண்கயிறுகூட இருக்க விடுவதில்லை. இப்படியிருக்கும்போது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக்கொண்டு செத்துப்போனான் என்று சொல்வது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. இதுபற்றி எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து ஒன்று கூடி இதில் என்ன நடந்தது, செத்துப் போகின்ற அளவிற்கு என்ன நடந்தது, அங்குள்ள மக்கள் எல்லாம் வேறுவிதமாக பேசுகிறார்கள், எந்தவிதத்தில் இந்த மரணம் ஏற்பட்டது என்பதை பகிரங்கமாக நீதி விசாரணை செய்ய வேண்டும் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்டிருக்கிறார்கள். இதன் மூலம்தான் நிலைமை என்ன என்று புரிந்து கொள்ள முடியுமே தவிர, சட்டசபையில் இதுபற்றி தெளிவாக விவாதிக்கவேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லாத் தரப்பினரும் சேர்ந்து சொல்லியிருக்கிறார்கள். இதற்கு நீதி விசாரணை தேவையில்லை, பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று இந்தப் பிரச்னையை ஒதுக்கிவிடாமல் நீதிவிசாரணை செய்வதற்கு முதலமைச்சர் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமையைப் பற்றி விவாதிக்காமல் வேறு எந்தப் பிரச்னையை விவாதிப்பதற்காக இங்கு வந்திருக்கிறோம் என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லா இடங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், பல விவரங்களையும் இதற்கான விவாதம் வரும்போது விவாதிக்கலாம், அதைப்பற்றி எல்லாம் விளக்கமாகச் சொல்லலாம்; அதுமட்டுமல்ல, எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு, அதைப்பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கொடுக்கப்பட்டுள்ள விஷயம் பற்றி உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். ஒருவர் கைது செய்யப்பட்டு, கைதி



யாக போன இடத்தில் போலீஸ் லாக்கப்பில் இறந்துவிட்டிருக்கிறார். மண்ணெண்ணெய் விட்டு எரித்துக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்று காரணம் சொல்லப்படுகிறது. மண்ணெண்ணெய் அங்கு எப்படிக் கிடைத்தது? அவர் எப்படி இறந்திருக்க முடியும்?

பொதுவாக போலீசாரால் கைது செய்யப்பட்டவர்கள் பல இடங்களில் துன்புறுத்தப்படுகிறார்கள் என்கிற செய்தி வந்து கொண்டிருப்பதை நாம் அறிகிறோம். துன்புறுத்தல் மிக அதிகமாக நடந்துதான் இதில் இறந்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று நாம் எண்ண முடிகிறது.

இதற்கு ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, அவன் லாக்கப்பில் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு இறந்துவிட்டான் என்பது நம்பத் தகுந்த ஒன்றல்ல. இப்படிப்பட்ட சம்பவங்கள் நாட்டிலே நடந்தால், பின்பு யாருக்கும் பாதுகாப்பு இருக்க முடியாது. ஆகவே, இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறாமல் பார்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆகவே, இந்த மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசனை செய்வதற்கு, விவாதிப்பதற்கு இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து, விவாதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆம் தேதி பகல் 1¼ மணிக்கு இருபான் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறான். அப்படி அழைத்துச் செல்லப்பட்டவன் அடிக்கப்பட்டு சப்-ஜெயிலிலே போடப்பட்டிருக்கிறான். சப்-ஜெயிலில் போடப் பட்டிருந்தவன், மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு லாக்கப்பில் இறந்துவிட்டான் என்று சொல்லப்படுகிறது. அப்படி இறந்தவன் உடலை 9 ஆம் தேதி போஸ்ட்மார்ட்டத்திற்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். அவனை போலீஸ் லாக்கப்பிலே போடுவதற்கு முன்னாலே மண்ணெண்ணெய் வாங்கிக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப் பட்டதா?

போலீசார் ஒரு சாதாரண மனிதனை அழைத்துச் சென்று விசாரிப்பதற்குப் பதில், அவனை சித்திரவதை செய்து, அடித்து கொன்று விட்டு, அதற்குப் பிறகு கொளுத்தி விட்டு, தற்கொலை செய்து கொண்டான் என்று போலீஸ் தரப்பிலே சொல்லப் படுகின்றது. இதிலே எது உண்மை? உண்மை என்ன என்பதை

விவாதிக்க நாம் தயங்கக் கூடாது. ஒரு சாதாரண மனிதனை இழுத்துச் செல்லலாம், உதைக்கலாம், அடிக்கலாம், லாக்கப்பில் போடலாம், கொளுத்தலாம் அல்லது ஒரு துணியால் அவன் கழுத்தை இறுக்கி தூக்குப் போட்டுக் கொண்டான், தற்கொலை செய்து கொண்டான் என்று கூறலாம் என்ற நிலைமை இந்த நாட்டிலே இருக்கக் கூடாது.

இன்றைக்கு தமிழகத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடக்கின்றபோது, தலைநகரிலேயே இந்த அவல நிலை இருக்கக் கூடாது. இப்படி ஒரு சாதாரண மனிதனுக்கு இந்த நிலைமைகள் ஏற்பட்டு இருக்கிற காரணத்தினாலே, இந்தச் சபையை ஒத்திவைத்து விவாதிக்க நாம் தயங்கக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பிலே நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இங்கே விவாதிக்கப்படுகின்ற நிகழ்ச்சியானது, சென்னை நகரில், அதிலும் மக்கள் ஆட்சி நடைபெறும் இந்த மாநிலத்தின் தலைநகரமான சென்னையில், அதிலும் குறிப்பாக 14 அமைச்சர்கள் வீற்றிருக்கின்ற இந்தப் பட்டணத்தில் நடைபெறுகின்றது என்று சொன்னால், இது போன்ற நிகழ்ச்சிகள் கிராமப்புறங்களில், நமக்கு செய்திகள் வந்து சேருவதற்கே நேரம் ஆகக்கூடிய பகுதிகளில் எவ்வாறு நிலைமை இருக்கும் என்பதை யூகித்து அறிந்துகொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்குமென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சாதாரணமாக, லாக்கப்பில் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் சில வேளைகளில் நடைபெறுகின்றன. இன்னும் சில வேளைகளில் மண்ணெண்ணெய் ஊற்றி கொள்வதற்குப் பதிலாக, துணியைக் கழுத்தில் இறுக்கி தூக்கிட்டு செத்து விட்டதாகவும் காரணங்கள் காட்டி, போலீஸ் தரப்பிலே தப்பித்துக் கொள்வது சகஜமாக இருக்கிறது. ஆக, இந்த அளவுக்கு மக்களாட்சி நடைபெறுவது இன்றைக்கு உண்மையாக இருக்குமானால், மக்களுக்கு நாம் அளித்த வாக்குறுதி அதாவது சட்டம், ஒழுங்கு அல்லது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு என்று சொன்னது எந்த அளவுக்கு முடியுமென்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



இந்த நிகழ்ச்சி நடைபெறுகின்றபோது, அந்த லாக்கப்பில் இருந்த மற்றக் கைதிகளையெல்லாம் அங்குள்ள போலீசார்கள் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி இருக்கிறார்கள் என்ற செய்தி கூட வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எந்த அளவுக்கு கலக்கம் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். காரணம், இன்றைக்கு இந்த நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி போய் மக்களாட்சி நடைபெறுகின்றது.

நமது அண்டை மாநிலமான கேரளத்தில் ராஜன் என்ற மாணவன் சிறையில், லாக்கப்பில் செத்திருக்கும் செய்தி சாதாரணமாக இருந்தாலும், அதற்குப் பின் நமக்குக் கிடைத்த செய்திகளிலிருந்து, லாக்கப்பில் எந்த அளவுக்கு சித்திரவதை செய்யப்பட்டுச் செத்தான் என்பதை நாம் கேள்விப்படுகிறோம்.

(முற்பகல் 9.50)

ஆக, இதுபோல் லாக்கப்பில் நடைபெறும் மரணம் மட்டுமல்ல, அங்கே நடைபெறக்கூடிய மற்ற நிகழ்ச்சிகளையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு பெரிய முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்னையைப் பற்றி விவாதிக்க இம் மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 8—7—1977 ஆம் நாளன்று காலை சுமார் 11-30 மணிக்கு பூங்காவனம் குப்பத்தைச் சேர்ந்த அஜூர் சயது பாஷா என்பவர் புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்திற்கு வந்து ஹாபின் என்பவரின் மகன் இருபான் அவர் திருடிய சைக்கிளுடன் செரியன் நகரில் பிடிபட்டுள்ளதாகக் கூறினார்.

அத்தகவலின் பேரில் காவலர்கள் வித்யாதரன், கோபால், ஆகியோர் செரியன் நகருக்குச் சென்று இருபானை அவர் திருடிய சைக்கிளுடன் சுமார் 12.00 மணிக்கு அழைத்து வந்தனர். அப்போது துப்பறியும் துணை ஆய்வாளர் அரிகோபன்றாவும் காவல் நிலையத்தில் இருந்தார். இருபான், துணை ஆய்வாளர் அறையில் மேற்கொண்டு விசாரணை செய்வதற்காக காவலில் வைக்கப்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.] [1977 ஜூலை 14

பட்டார். துணை ஆய்வாளர் 11-30 மணிக்கு, நீதிமன்ற வேலை நிமித்தம் செல்வதாகப் பதிவு செய்திருந்தார். ஆனால் அவர் 12-15 மணி வரை காவல் நிலையத்தில் இருந்துவிட்டு அதன்பிறகு நீதிமன்ற வேலையைக் கவனிப்பதற்காகச் சென்றார்.

பிற்பகல் 3-00 மணிக்கு இருபான், உடையில் தீப்பற்றி எரியும் நிலையில் கூக்குரலிட்டு அறையைவிட்டு வெளியே ஓடிவந்தார். அதைப்பார்த்து தலைமைக் காவலர் செல்வராஜ் மற்றும் காவலர்கள் பலராமன், சுந்தரம், கண்ணன், குப்பை கூட்டும் பணியாளராகிய ராணி ஆகியோர் இருபான் மீதுள்ள உடைகளைக் களைந்து அவருக்குக் குடிப்பதற்கு தண்ணீர் அளித்தனர். இதற்குள் காவல் நிலையத்திற்கு திரும்பி வந்த துப்பறியும் துணை ஆய்வாளர், தீக் காயமடைந்த இருபானை அவசர நோயாளி வண்டியில் (ஆம்புலன்ஸ்) ஸ்டான்லி மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றார். தீவிர சிகிச்சை அளித்த பிறகு மாலை 6-50 மணி அளவில் இருபான் காலமானார்.

இருபான் காவலில் வைக்கப்பட்டிருந்த துணை ஆய்வாளர் அறையில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு மின்சாரம் இல்லாது போகின்ற நேரத்தில் உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருந்தது. அந்த விளக்கிலிருந்து மண்ணெண்ணெய்யை இருபான் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்துடன் தீ வைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. செய்தி அறிந்ததும், மாநகர வடக்கு துணைக் காவல் துறை ஆணையர், புது வண்ணாரப் பேட்டைக் காவல் நிலையத்திற்கு விரைந்து சென்று அசம்பா விதம் எதுவும் நடக்காமல் இருக்க ஏற்பாடுகள் செய்தார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியா ளருக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. அவர் 9—7—1977 அன்று பிரேத விசாரணையை பஞ்சாயத்தார் முன்னிலையில் நடத்தினார். பஞ்சாயத்தார், உடலில் தீப்பிடித்ததினால் இறந்திருக்கலாம் என்றும் சந்தேகத்துக்குரிய நிலைகள் எதுவுமில்லை என்றும் கூறி னார்கள். அதன் பின்பு பிரேதம் பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டது. அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர், இந்த மரணத்தின் காரணம் குறித்து விசாரணையைத் துவக்கியுள்ளார்.



1977 ஜூலை 14] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.]

இச்சம்பவத்திற்கு முன்னதாக இருபான், முனுசாமி என்பவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி முனுசாமியையும், அவர் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஜூலை 5 ஆம் நாளன்று தாம்பரத்தில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தார். ஜூலை 6 ஆம் நாள் முனுசாமியை சென்னைக்கு அனுப்பிவிட்டு அவர் மனைவியை அழைத்துக் கொண்டு பாண்டிச்சேரிக்குச் சென்றார். முனுசாமி யின் மனைவி, இருபானின் நடத்தையில் சந்தேகம் கொண்டு ஜூலை 7 ஆம் நாள் சென்னை திரும்பி பின்பு திருவள்ளூர் சென்று விட்டார். இச்சம்பவத்திற்குப் பின்பு ஜூலை 8 ஆம் நாள் இருபான் சென்னையில் போலீசாரால் பிடிக்கப்பட்டார்.

துப்பறியும் துணை ஆய்வாளர் திரு. அரிகோபண்ணு, இருபான் கைது செய்யப்பட்டது குறித்து பதிவேட்டில் குறிப்பு எழுதா மைக்காகவும், இருபானை சோதனை செய்யாமலும் தகுந்த பாது காப்பில்லாமலும் காவலில் வைத்திருந்தமைக்காகவும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தலைமைக் காவலர் செல்வராஜ், காவலர்கள் பலராமன், கண்ணன் மற்றும் சுந்தரம் ஆகியோரும் கடமையைச் சரிவர செய்யவில்லை என்ற காரணத்தின்பேரில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இந் நிகழ்ச்சி குறித்து விவாதிக்க, பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்ல விரும்பு கிறேன்.

அதோடு இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் சொல்ல விரும்புகிறேன்—அந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிற நிலையில் ஒரு உறுதிமொழியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகளை மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும், அவர்கள் தந்திருக்கிற அறிக் கையைப் படித்து அதோடு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிகழ்ச்சி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கருத வில்லை என்பதையும், இதுபோன்றவைகள் மிக மோசமான நிலைமை கள் என்பதையும், இப்படிப்பட்டவர்கள் நாட்டிலே இருக்கும்

படியான அளவிற்கு விட்டு வைக்கக்கூடாது என்பதிலும் மிக அக்கறையுள்ளவன் என்ற வகையில் கண்டிப்பாக, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாத வண்ணம், தடுக்க வேறு குறிப்பிட்ட வகையில் இதற்கென்று நடவடிக்கைகள் எடுக்க, திட்டம் தீட்ட நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கமே போதும், நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் கிளாரிபிகேஷன் அனுமதிக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு பின் அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியமில்லை என்ற நிலைமையிலே இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

## 2. கவன ஈர்ப்பு.

### சென்னை நகரில் காலரா நோய் பரவி வருவது குறித்து

**மாண்மிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக் குறித்து கவன ஈர்ப்பு கொண்டு வருவார்கள்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, "சென்னை நகரத்தில் காலரா நோய் பரவி வருவதன் காரணமாக மக்களிடையே மிகுந்த பீதி ஏற்பட்டுள்ளதால் அதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து" என்ற பொருள்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்மிபுகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரில், கடந்த இரண்டாண்டுகளில் காலரா நோயால் பாதிக்கப்பட்டோர், இறந்தோர் எண்ணிக்கை பின் வருமாறு :—

| | பாதிக்கப்பட்டோர். | இறந்தோர். |
|---|---|---|
| 1975 | 1,389 | 27 |
| 1976 | 302 | 11 |
| 1977 (ஜூன் முடிய) | 166 | 4 |

1975 ஆம் ஆண்டில் காலரா நோயால் பாதிக்கப்பட்டோர், மற்றும் இறந்தோர் ஆகியவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்பொழுது 1976 ஆம் ஆண்டிலும், 1977 ஆம் ஆண்டிலும் (ஜூன் திங்கள் முடிய) பாதிக்கப்பட்டோர், மற்றும் இறந்தோர் ஆகியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது புலப்படும். சென்னை மாநகரின் 30 இலட்சம் மக்கள் தொகையுடன் கணக்கிடும்போது, 1977 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதும் நன்கு விளங்கும். மேற்படி நோய் பரவாமல் இருப்பதற்கு மாநகராட்சி மேற்கொண்டுள்ள கடும் தடுப்பு நடவடிக்கைகளாவன : (1) பாதிக்கப்பட்ட இடங்களில் காலராத் தடுப்பு ஊசி குத்துதல், (2) குடி தண்ணீரில் குளோரின் செலுத்தி சுத்தப்படுத்துதல், (3) கிணறுகளில் குளோரின் மருந்து கலத்தல், (4) வழங்கப்படும் குடிநீரில் தங்கியுள்ள குளோரின் பொருளின் அளவைச் சோதித்தல், (5) ஈக்களை ஒழிக்கும் நடவடிக்கைகள், (6) சுற்றுப்புறச் சுகாதாரத் தூய்மையைக் காத்தல், முதலியன 1977-ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து ஜூன் மாதம் முடிய, 37,053 தடுப்பு ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன நடவடிக்கைகளின் விளைவால்தான், காலரா நோய் எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் ஏற்படவில்லை; மாறாக, மாநகரின் ஒரு சில பகுதிகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் கண்டுள்ளது. ஆகவே, சென்னை நகர மக்கள் இந்நோயைப்பற்றி பீதியடையத் தேவையில்லை.

**திரு. துரை முருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கத்தை நான் கேட்டேன். இந்த மாநகராட்சியின் ஒரு பிரிவுதான் இந்த காலரா நோய்த் தடுப்பதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதாக அறிகிறேன்.

[திரு. துரை முருகன்] [1977 ஜூலை 14

அந்தப் பிரிவில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தாலே அவர்கள் சரிவர இந்தத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இந்த காலரா நோய் ஓரிருவருக்கு வந்தால் உடனடியாக வேகமாகப் பரவக் கூடியதாகும். ஆகவே பணம் இல்லாத நிலையில் அந்தப் பிரிவு சரியாகச் செயல்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதிகமான பணத்தை அவர்களுக்குக் கொடுத்து அந்த நடவடிக் கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் வரவேற்கிறேன். எந்த வகையில் அதை நிறைவேற்ற வேண்டுமோ அதற்கு ஏற்ப நிச்சயம் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

## (3) ஒழுங்குப் பிரச்னை.

### வினா நேரம் இல்லாதிருப்பது குறித்தும் பல வினாக்கள் திருப்பி யனுப்பப்பட்டமை குறித்தும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதைப்பற்றிக் கேட்கிறீர்கள்?

**திரு. என். கிட்டப்பா:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவர வர்களே, இந்தப் பேரவையில் வழக்கமாக காலை 9 மணி முதல் 10 மணி வரையில் கேள்வி நேரம் ஒதுக்கப்படுவது உண்டு. ஆனால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைத் தந்திருந்தும், குறிப்பாக என்னைப் பொறுத்தவரையில் இதுவரையில் 300 கேள்விகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் முதல் நாளே அதைப்பற்றிச் சொல்லியாகிவிட்டது. நீங்கள் சொல்லப் போவதைச் சொல்லுங்கள். அதைத்தான் சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறோம், ஒன்றுகூட வரவில்லை என்று சொல்கிறீர்கள்.

**திரு. என். கிட்டப்பா:** இந்தக் கேள்விகள் வராதது மட்டுமல்ல, பல கேள்விகள் வேண்டுமென்றே திருப்பி அனுப்பப் படுகின்றன என்பதை, . . .



1977 ஜூலை 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நான் சொல்வதில் அர்த்தமில்லை. கேள்விகளில் எதை அனுமதிக்க வேண்டும், எதை அனுமதிக்கக் கூடாது என்பது பேரவைத் தலைவரின் விருப்பம். காரணம் காட்டித்தான் மறுக்கப்பட்டு பதில் வந்திருக்கும். அதை அவையிலே சொல்லக் கூடாது. அந்தப் பிரச்னைக்கே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (ஆ) 1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

**(5) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.**

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உங்களுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்**: தலைவரவர்களே, எங்கள் கட்சிக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே 30 நிமிடங்கள் தான் நாங்கள் எடுத்திருக்கிறோம் என்று எண்ணுகிறேன். ஆகவே, எனக்கு அரை மணி நேரம் பேச உரிமையிருக்கிறது. அதையா வது கொடுக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உறுப்பினர் பேரவைத் தலைவரைப்பற்றித் தவறாக நினைத்து விடக்கூடாது. உங்களுக்கு 11 நிமிடங்கள்தான் இருக்கின்றன. நானாகப் பார்த்து 9 நிமிடங் களை அதிகரித்து 20 நிமிடங்கள் கொடுத்துள்ளேன். ஆகவே, 20 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் பெருவாரியான வெற்றியைப் பெற்று இங்கே ஒரு மக்களாட்சி நடைபெறுகின்றதை நினைக்கும்பொழுது உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதுமட்டுமல்ல, இந்த அவையில் கடந்த சட்டசபையில் என்னோடு எதிர்க்கட்சி வரிசையிலிருந்த பல நண்பர்கள் இந்த மக்களாட்சியில் அமைச்சர் களாகப் பார்க்கின்றபொழுதும் அதைவிட நான் மகிழ்ச்சியடை கிறேன் என்பதை முதற்கண் நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





கடந்த 21 மாத காலத்தில் இந்த நாட்டில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சியின் பொழுது மீண்டும் இந்த நாட்டில் ஜனநாயகம் பிழைக்குமா என்ற ஐயப்பாடு என் போன்றவர்கள் மனத்திலெல்லாம் தோன்றாமல் இல்லை. அதற்குக் காரணம், தேவையற்ற ஒரு நெருக்கடி நிலைமையை அன்றையதினம் இந்த நாட்டை ஆட்சிபுரிந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரகடனம் செய்து, தனது சொந்த தற்காப்புக்காக எமர்ஜென்சி நிலை இங்கே அறிவிக்கப்பட்டு, மிசா சட்டத்தின்கீழ் இந்தத் தேசத்திலிருந்த தேசியத் தலைவர்கள், இன்றையதினம் பாரதப் பிரதமராக இருக்கின்ற மொரார்ஜி தேசாய் முதல், ஜெயப்பிரகாஷ் நாராயணன் முதல், பல தேசியத் தலைவர்களையும், பல தொண்டர் களையும், என் அருமைத் தாய்க்குலத்தவர்களையும் சிறையில் அடைத்து இந்த நாட்டில் ஏற்கனவே நாம் அனுபவித்துக் கொண்டிருந்த சுதந்திரத்தைக்கூடப் பறித்தெடுத்த சூழ்நிலையில் மீண்டும் இந்த நாட்டில் ஜனநாயகம் பிழைக்காது என்றுதான் நாங்கள் எண்ணியிருந்தோம். அப்பொழுதெல்லாம் நமக்கிருந்த பேச்சுரிமை பத்திரிகையுரிமை போன்ற சுதந்திரம் அத்தனையும் பறிக்கப்பட்டு ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது என்பதனை நாம் எண்ணுகின்றபொழுது இந்த நாட்டில் ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட அரசுகள் கூட கலைக்கப்பட்ட நிகழ்ச்சியை எண்ணுகின்றபொழுது நிச்சயமாக இது போன்ற அரசு மீண்டும் இங்கே அமைகின்ற வாய்ப்பு இருக்காது என்றுதான் நாங்கள் எண்ணியிருந்தோம்.

ஆனால், அதற்கு மாறாக, தெய்வாதீனமாக, பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடந்தது. கிடைத்த வாய்ப் பினை, நல்ல முறையில் இந்த நாட்டு மக்கள் பயன்படுத்தியதை, சுதந்திரம் தேவை, ஜனநாயகம் படுகொலை செய்வதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்ற உணர்ச்சியோடு செயல்பட்டதை நாம் மட்டுமல்ல, அகில உலக மக்களும் பாராட்டினார்கள் என்பதனை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

அந்தச் சூழ்நிலையில் ஜனதா கட்சியானது சிறையில் உருவாகி, இந்த நாட்டு மக்களையும், இந்த நாட்டில் ஜனநாயகத்தையும் காப்பாற்றி, சுதந்திரத்தை மீண்டும் நமக்கு அளித்திருக்கிறது என்பதைக் காணும்போது இந்த அரசை அமைப்பதற்கு வாய்ப் பளித்து, வழி வகுத்துத் தந்த, மத்தியில் இன்று ஆட்சி புரிகின்ற ஜனதா கட்சி அரசுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் நன்றி கூறி

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஜூலை 14

ஆரம்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அது அவர்களுடைய உரையில் இல்லையென்று காணும்போதுதான் நான் வருத்தப்படுகிறேன்.

ஆங்கிலத்தில் கூறுவார்கள்—

'No Government is a substitute for People's Government'

என்று. ஆக ஜனநாயகத்தைக் காப்பாற்றி இங்கே அமைந்திருக்கிற, அமைக்கப்பட்டிருக்கிற மக்களாட்சியை உருவாக்குவதற்கு ஜனதா கட்சி அரசு வாய்ப்பளித்தமைக்கு நான் எனது நன்றியை மத்தியில் அமைந்துள்ள ஜனதா அரசுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, இந்த மாமன்றத்தில், அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் நமது முதலமைச்சரவர்கள், தேசத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து, இந்த மாநிலத்தில் 9 ஆண்டுக்காலம் பொற்காலம் எனச் சொல்லக்கூடிய அளவுக்கு முதலமைச்சராக இருந்து பணியாற்றிய மறைந்த தலைவர் திரு. காமராஜர் அவர்களுடைய திருவுருவப் படத்தை இங்கே திறந்து வைப்பதற்கு இசைந்துள்ளமைக்கு, நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் படத்தைத் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்பது யார் என்று கூட எண்ணிப் பார்க்காமல், கேட்க அவர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது என்று கூடச் சிந்திக்காமல், தலைவர் காமராஜரிடம் நமது முதலமைச்சருக்கு இருக்கிற பாசத்தால், பரிவால், அக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டமைக்காக அவருக்கு என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, கடந்த கால நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்து, செய்த பாவத்தைத் தீர்த்துக்கொள்ள, அதற்காகப் பரிகாரம் தேடிக் கொள்ளவேண்டுமென்று எண்ணியோ என்னவோ எனது அருமை நண்பர், காங்கிரஸ் உறுப்பினர், இந்த மன்றத்தில் பெருந்தலைவர் காமராஜர் படத்தை திறந்து வைக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்பியமைக்காக, அவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் காமராஜர் உயிரோடு இருந்தபொழுது, அன்றைய தினம் ஆட்சிப் பீடத்திலே இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், காமராஜருக்கு இழைத்த இன்னல்களை நாணுகிற பொழுது, செய்த பாவத்தைத் தீர்ப்பதற்கு, இப்படிப்பட்ட நல்ல காரியம் செய்ய வேண்டுமென்றுதான் நான் எண்ணுகிறேன்.



1977 ஜூலை 14]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் காமராஜர் அவர்களுக்கு பெரிய நிமைகள் எல்லாம் செய்ததாகச் சொன்னார்கள். என்ன நிமைகளை அவருக்குச் செய்தார்கள் என்று கேட்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: என்னுடைய அருமைத் தலைவருக்கு நன்றி கூறுகிறேன். நான் ஒவ்வொன்றாகக் கூறி வருகிறேன். அதற்கு முன்னதாகவே அவர் கேட்டதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன்.

எமர்ஜன்ஸி அறிவிக்கப்பட்டவுடன், எமர்ஜன்ஸி தேவையில்லை, சிறையில் அடைத்த தலைவர்களையெல்லாம் உடனே விடுவிக்க வேண்டும் என்றும் தான் நியமித்த தலைவர் இப்படி ஜனநாயக விரோதமாக நடந்து கொள்ளக் கூடாது என்றும், பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையாரைத் தலைவர் காமராஜர் கேட்டுக் கொண்டார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இவர் யார் கேட்பது என்று அவரைப் பார்த்துத் திருப்பிக் கேட்டு, எமர்ஜன்ஸி அறிவித்த 100-வது நாள் மனம் நொந்து பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இறந்தார். இதுபற்றி இதற்கு முன்னால் காங்கிரஸ் தலைவர் அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதுமட்டும் போதாது.

(முற்பகல் 10-10)

அடுத்து மறைந்த தலைவர் காமராஜ் அவர்களுக்கு நினைவாலயம் கட்ட நாங்கள் எண்ணினோம். அவர் ஸ்தாபன காங்கிரஸ் தலைவராக இருந்ததால், தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் ஒரு நினைவாலயம் கட்டுவதற்காக, அன்றிருந்த காங்கிரஸ் தலைவர் திரு. அசோக்மேத்தாவை வரவழைத்து கல்நாட்டுவிழா நடத்த முயற்சி செய்யப்பட்டது. ஒருவேளை இங்கே இருக்கிறவர்களுக்கு அதிக பொறுப்பு இல்லை என்று சொன்னாலும், இவர் யார் அவருக்கு நினைவாலயம் கட்ட என்ற கேள்வி எழுப்பி அவர்கள் தடுத்தால் நன்றாக இருக்காது என்று எண்ணி, சென்னை உயர்நீதி மன்றத்தில் முறையிட்டு தடை செய்யக்கூடிய பெரிய காரியத்தை செய்தார்கள் இந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

காமராஜ் அவர்கள் இறந்து விட்டார்கள். அவர் இந்த நாட்டுக்குச் செய்த பெரிய சேவையை, அன்றிருந்த தி.மு.க. அரசு அவருடைய சமாதியில் ஒரு மண்டபத்தை எழுப்பி

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஜூலை 14

அங்கே ராட்டைச் சின்னத்தைப் பொருத்தி இருந்தார்கள். எமர்ஜென்சி காலத்தில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சென்னை வந்தபோது காமராஜ் மண்டபத்தில் ராட்டைச் சின்னம் எழுப்புவதற்கு அவர் அவ்வளவு பெரியவரா? என்ற கேள்வி எழுப்பி அந்த ராட்டைச் சின்னத்தை மறைத்த நிகழ்ச்சியை இந்த நாட்டுமக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆகவே, இந்த அளவுக்கு பெரிய கைங்கர்யம் செய்த காங்கிரஸ் நண்பர்கள், செய்த பாவம் தீர இந்தக் கோரிக்கையை எழுப்பினார்கள் என்றால், இதிலே நிச்சயமாக ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஆகவே அவர்களுக்கு நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையைப் பார்க்கிறபோது இங்கே புதிதாக வந்திருக்கிற அரசு எதுவும் பெரிய அளவுக்குத் திட்டங்களைக் குறித்து வரிசையாக காட்ட வில்லை என்று சொன்னாலும் தனது கொள்கை என்ன என்று நாட்டு மக்களுக்கு அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறது.

தேர்தல் காலங்களில் மேடைகளில் எல்லாம் மலிவான வாக்குறுதிகளை அளித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இந்த மன்றம் கூடிய முதல் கூட்டத்தில் கவர்னர் உரையின் வாயிலாக அரசுத் திட்டங்களை மக்களுக்கு அளிக்க கடமைப்பட்டிருக் கிறார்கள். ஆனால், இந்த அறிக்கையில் ஒன்றும் காணவில்லை. ஆகவே மக்கள் ஏமாற்றம் அடைந்து விட்டார்கள் என்று நான் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தேர்தலைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். தேர்தல் நன்றாக நடந்து முடிந்தது உண்மைதான். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒன்றை கொண்டு வரவிரும்புகிறேன். கேரளத்தோடு ஒட்டி இருக்கிற நமது பிரதேசம், கேரளத்தைச் சார்ந்த மக்கள் அதிகமான அளவில் தேர்தல் நேரங்களில் கள்ள ஓட்டுக்கள் அளிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. அந்த மாதிரி சூழ்நிலையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.



1977 ஜூலை 14] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்தபடியாக, லஞ்ச ஊழலை ஒழிக்க பல திட்டங்கள் பின்னாலே தருவோம் என்று எல்லாம் இங்கே கூறப்பட்டது. என்னைப் பொறுத்தமட்டில் அதற்கு முன்னதாக இருந்த அரசு பற்றிய லஞ்ச ஊழல் நிறைந்த அரசு என்று பல பட்டியல்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற காரணத்தினால் கூட முன்னாலே இருந்த அரசும் இந்த அரசும் எங்களைப் பார்வைக்கு ஒரே தாயின் வயிற்றில் பிறந்த 2 குழந்தைகள் என்று நான் கருதுகிறேன். இரண்டு கட்சித் தலைவர்களும் ஒரே மாதிரிதான் உரை ஆற்று கிறார்கள். ஆகவே முன்னால் இருந்த அரசு எந்த வழியில் சென்றதோ அந்த வழியில் இந்த அரசும் செல்ல வாய்ப்பு இருக்கிறது. அவற்றையெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் குறை கூற விரும்பவில்லை. அவற்றை தவிர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

மத்திய மாநில அரசு உறவு பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இன்றையதினம் பார்க்கிறபோது, ஏற்கனவே மத்திய அரசுக்கும் இந்த மாநில அரசுக்கும் நல்ல உறவு ஏற்பட்டு இருக்கிறது. மத்திய அரசானது—ஒரு வேளை மாற்றுக் கட்சியின் தலைமையில் அரசு இங்கே அமைந்து இருந்தாலும் இந்த அரசைப் பற்றியும் இந்த மாநிலத்தைப்பற்றியும் அனுதாபத்தோடு கவனித்து பல திட்டங்களுக்கு ஏராளமாக பணம் ஒதுக்கி இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

குறிப்பாக ஏற்கனவே மத்தியில் ஆண்டு கொண்டு இருந்த அரசு புறக்கணித்த பல திட்டங்களுக்கு, குறிப்பாக குமரி-நெல்லை-திருவனந்தபுரம் ரயில் பாதை, தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம், கல்பாக்கம் அணு மின் திட்டம், நெய்வேலி போன்ற திட்டங்களுக்கு எல்லாம் அதிகப்பணம் ஒதுக்கி இருப்பதாக கேள்விப்படுகிறேன். ஆக இப்போது ஏற்பட்டு இருக்கும் நல்ல உறவைப் பயன்படுத்தி மேலும் மக்களுக்கு அதிக வாய்ப்பையும் வளத்தையும் தமிழக மக்களுக்குப் பெருக்கிக் கொடுக்கவேண்டு மென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்னை பற்றி கூறி இருக்கிறார்கள். ஏற்கனவே இந்தப் பிரச்னை தீர்ந்து போய்விட்டது. இனிமேல் அரசியல் லாபத்திற்காக இந்தியை யாரோ திணிக்கிறார்கள். அதை உயிரைக் கொடுத்தும் தடுப்போம் என்று அரசியல் லாபத்திற்காக வீண்வம்பை இழுக்க வேண்டாம் என்று இந்த அரசை நான்

கேட்டுக்கொள்கிறேன். இன்று இருக்கும் சூழ்நிலையில் பிரச்னை தீர்ந்து விட்டது. பாரதப் பிரதம அமைச்சர் அவர்கள் பல முறை உறுதி மொழி அளித்து இருக்கிறார்கள். இன்றைய தினம் கூட பத்திரிக்கையில் பார்க்கிறபோது மீண்டும் மீண்டும் மத்திய அரசும், அந்தப் பொறுப்பில் இருக்கிறவர்களும் உறுதியாகக் கூறுகிறபோது, இங்கே இருந்து அந்தப் பிரச்னையை நாம் கிளப்புவது முறையாகாது என்று நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. மனோகரன் :** துணைச் சபாநாயகர் அவர்களே, அறிஞர் அண்ணாவின் காலத்திலிருந்து இரு மொழித் திட்டத்தை இந்த சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. கனம் உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது இது முடிந்து போன பிரச்னை, ஆகவே இதை அரசியல் லாபத்திற்காக இழுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். நன்றி. நாம் எடுத்துக் கொண்ட ஏகோபித்த இரு மொழித் திட்டத்திற்கு மாறாக மும்மொழித் திட்டத்தை ஒரு வேளை—நடக்காது என்று நம்புகிறேன்—மத்திய சர்க்கார் திணிக்குமானால் அதை எதிர்த்துப் போராடு வதற்கு ஜேம்ஸ் அவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, நடக்காது என்று நம்புகிறார்கள். இருந்தாலும் என் அந்தச் சந்தேகம் வருகிறது என்று தெரியவில்லை. அன்று திராவிட முன்னேற்றக் கழகம் உருவாவதற்கு முன்னதாகவே இதற்கு ஆதரவு தந்து, இந்தி மொழியை இங்கே திணிக்கக் கூடாது என்ற வாதத்தை எங்கள் கட்சி முன்னவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. மனோகரன் :** நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, மீறி மும்மொழித் திட்டம் பலாத்காரமாக அமல் செய்யப்பட வேண்டுமென்று தாக்கீது வருமானால், அதை எதிர்த்து நிற்பதற்கு ஜேம்ஸ் அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதை தெளிவாக சபைக்கு தெரிவிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, வலுக்கட்டாயமாகத் திணிக்கும் பிரச்னை இல்லை. இருந்தாலும் கூட திணித்தால், அந்த நிலை ஏற்படும் என்று சொன்னால் நான் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள ஜனதா கட்சி நிச்சயமாக அதற்காக அனைத்து சக்தியுடன் போராடும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மதுவிலக்கைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மதுவிலக்கைப் பொறுத்தவரையில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே இந்த அரசு மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று எண்ணினார்கள் என்றால், முதன் முதலில் அரசியல் தலைவர்களும், அரசில் இருக்கிற ஊழியர்களும் அந்தத் திட்டத்தை உறுதியாக நம்பி கைக்கொள்ள வேண்டும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசியல் தலைவர்கள் இந்தச் சட்டத்தை மீறுகிறபோது அல்லது அரசு நிர்வாகத்தில் இருக்கிற ஊழியர்கள் அந்தச் சட்டத்தை மீறுகிறபோது, ஏழை பாட்டாளி மக்கள் மீது வழக்குகளைப் போட்டு அல்லது அவர்கள்தான் இந்த மதுவிலக்கை கைக்கொள்ள வேண்டுமென்று எண்ணுவது நிச்சயமாக முறையாகாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக் கொள்கிறேன்.

சாதாரணமாக இப்போது நிர்வாகத்தில் இருக்கிற போலீஸ் அதிகாரிகளை வைத்து மதுவிலக்குத் திட்டத்தை நாம் அமல்படுத்த முடியாது என்பது தான் என்னுடைய நம்பிக்கை. ஏனெனில் மதுவிலக்குக் கொள்கையை நம்புகின்ற போலீஸ் அதிகாரிகள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பார்கள். மதுவை அருந்திவிட்டுத்தான் பலரும் இப்போது மது ரெய்ட் செய்யச் செல்கிறார்கள். வேண்டாதவர்கள் மீது பொய் வழக்குப் போடுகின்ற நிகழ்ச்சி சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஏழை மக்களை மதுவிலக்கு வழக்குகளில் கைது செய்து அவர்களை ஜாமீனில், பெயிலில் விட வேண்டுமானால் பணம் வசூல் செய்கின்ற நிலையைப் பார்க்கும்போது, ஏழை மக்கள் வழக்குகளில் மாட்டிக் கொள்வதோடு, லஞ்சமும் கொடுக்கின்ற கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். நூறு ரூபாய் கொடுத்தால் தான் பெயில் என்ற

நிலைமை எல்லாம் காணப்படுகிறது. இந்த அரசு மதுவிலக்கை ஆதரிக்கின்றது. வரவேற்கிறேன். அப்படிப்பட்ட நம்பிக்கை இருக்குமானால், அரசில் இருக்கின்ற தலைவர்களும், அரசு உத்யோகஸ்தர்களும் இத்திட்டம் வெற்றி பெற நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

உணவுத் துறையில் பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர் அவர்கள் எங்கள் ஊருக்குச் சென்று அரிசி விலையைக் குறைத்திருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால் நான் அங்கே சென்றிருந்தபோது அரிசி விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டு தான் வருகிறதே தவிர விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

அது மட்டுமல்ல. எங்கள் பகுதியில் வழங்கப்படும் அரிசி மற்றும் ரேஷன் பொருட்களின் தரம் மிகக் குறைவாக இருக்கிறது. அங்கே கொடுக்கப்படுகின்ற தரக் குறைவான அரிசி, கோதுமை ஆகியவற்றை பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சரிடம் காட்டினேன். நிச்சயமாக இந்த நிலைமையை மாற்றுவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

மேலும், இப்போது இரண்டு விதமான அரிசி ரேஷன் கடைகளில் கொடுக்கப்படுகிறது. ஒன்று, ரூ. 1.80 ரகம், மற்றொன்று ரூ. 1.60 ரகம். இந்த 1.60 ரகத்தை ஏழை மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் வழங்க முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தமட்டில், இப்போது ஆங்காங்கே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும்.

அடுத்து, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நன்கொடை வசூலிப்பதைக் கட்டாயம் நிறுத்தியாக வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பயிற்சிக் கல்லூரிகளில் 2 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் வரை கொடுத்தால் தான் அட்மிஷன் என்ற நிலை காணப்படுகிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.





அடுத்து, தனியார் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்கு முறையான சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. 4, 5 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற நிலையெல்லாம் இருக்கிறது. உதாரணமாக, எங்கள் மாவட்டத்தில், லட்சுமிபுரம் கல்லூரியில் ஆசிரியர்களுக்கு 13 மாத காலமாக அங்கே உள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. இம்மாதிரி முறைகேடுகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் பள்ளிக் கட்டிடங்கள் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. கடந்த சில நாட்களுக்கு முன்பு, குலசேகரப்பட்டினம் உயர்நிலைப் பள்ளியில் கட்டிடம் விழுந்து ஒரு சிறுமி காயமடைந்தாள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியானது. எனவே, இங்கே அமர்ந்திருக்கிற நிதி அமைச்சர் அவர்கள், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதில் பெருமை அடைகிறேன். அமைச்சர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவராக மட்டும் இருந்தால் போதாது, நிதியும் எங்களுக்குக் கிடைக்க வேண்டும், எங்கள் மாவட்டத்திற்கு நியாயமான பங்கு கிடைக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நெசவாளர்கள் பிரச்சினை பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். பல்வேறு பகுதிகளிலிருந்தும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நெசவாளர்கள் படும் துயரைப் பற்றி ஆங்காங்கே இருக்கின்ற நண்பர்கள் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நமது முதல்வரைத் தேர்ந்தெடுத்த தொகுதியிலிருந்தும் எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. 20 ஆயிரம் நெசவாளர்கள் பட்டினியால் வாடுகின்றார்கள். அவர்களுக்குப் பிழைக்க வழியில்லை என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இதில் முதலமைச்சர் அவர்கள் பிரத்தியேகக் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, கவர்னர் உரையில் மகளிரைப் பற்றி அதிகம் கூறியிருக்கிறார்கள். "விடோ பென்ஷன்" கொடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை இருக்கிறதே தவிர பென்ஷனுக்காகக் கொடுக்கப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு பென்ஷன் வழங்கப்பட

வில்லை. என்ற நிலை தான் காணப்படுகிறது. இந்த நிலையை மாற்றி, விதவைகளுக்குத் தாராளமாக பென்ஷன் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விதவைகள் பென்ஷன் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட வயதை—அதாவது 45 வயது என்ற வயதை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்த வயது வரம்பைத் தளர்த்தி, விதவைகள் எல்லோருக்கும் விடோ பென்ஷன் அளிக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கவர்னர் உரையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று ஆளுநர் உரை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஏற்கனவே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை யொட்டி, இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில், அதனுடைய தலைவர் என்ற முறையில், இந்தக் கொள்கை அறிக்கை பற்றி, எங்கள் கருத்துக்களை நான் மீண்டும் ஒருமித்துக் கூற விரும்புகிறேன்.

இன்று இந்த அரசு ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைக்கு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், ஏனைய தோழமைக் கட்சிகளும் செய்து கொண்ட தேர்தல் உடன்பாடுதான் என்பதைத் தமிழகம் நன்றாக அறியும். இந்தச் சூழ்நிலையில் ஏற்கனவே ஏற்பட்ட நட்புறவு முறையில் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நாங்கள் பார்க்கிறோம். இந்தக் கொள்கை விளக்க அறிக்கையை நாங்கள் பார்க்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். வேறு எந்தக் காரணங்களையும் ஒட்டிய கண்ணோட்டம் இல்லை. இன்றைய சூழ்நிலையில் இந்த மாநில அரசு இப்படி அமைவது தான் தமிழகத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்ற அரசியல் அடிப்படையில் எங்கள் கட்சி எடுத்த முடிவினையொட்டிய கொள்கை இது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி பார்த்தால் இந்த அரசு இன்னும் தங்கள் கொள்கைகளை நிறைவேற்ற அவகாசம் வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.





அதே நேரத்தில் இந்தக் கொள்கை அறிக்கையில் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பிரச்சினைகளை நாங்கள் ஆதரிக்க விரும்புகிறோம். அதாவது லஞ்ச ஊழலற்ற ஆட்சியை ஏற்படுத்த இருப்பதையும், கொள்கையாக 16 ஆயிரம் கிராமங்களில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த இருப்பதையும், அதேபோல பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு, நகராட்சிகளுக்கான தலைவர் தேர்தலை நேரிடையாக நடத்த இருப்பதையும், கிராமங்களிலுள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வசதியினைச் செய்து தரும் திட்டத்திற்கு முதலிடம் தரப்படும் என்று கூறப்பட்டிருப்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறோம். அவற்றை நடைமுறையில் நிறைவேற்ற அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஆளுநர் அறிக்கையின் மீது, சிலவற்றைக் கொள்கைப் பிரச்சினையாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கே கடந்த 18 மாத காலமாக ஜனாதிபதி ஆட்சி நடந்து வந்தது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஜனாதிபதி ஆட்சி அமுலுக்கு வந்தவுடன் என்ன நிலைமை ஏற்பட்டது, ஜனாதிபதி ஆட்சியை அறிவித்த அந்த நாளே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பேர்கள் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டு, அவர்கள் இரண்டு மாத காலம் எவ்விதமான விசாரணையும் இன்றி சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டார்கள்.

அந்தக் கட்சியின் தலைவர்கள் பல பேர்கள் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். பல பேர்கள் மீது பிடி வாரண்டுகள் போடப்பட்டிருக்கின்றன. அவ்வாறு சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்தவர்களும், கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டவர்களும் அனுபவித்த துன்பங்களுக்குக் காரணம் அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதுதான். ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு, நமது அரசியல் சட்ட உரிமைகள் பறிக்கப்பட்டதற்கு போராட்டம் நடத்த வேண்டுமென்ற அடிப்படையில் எங்கள் கட்சித் தலைவர்கள் பல பேர்கள் பிடி வாரண்டுகளுக்கு அகப்படாமல் தலைமறைவாக

இருந்து, மக்கள் மத்தியிலே அந்தக் காலத்திலும் சேவை செய்தோம் என்பதை நான் முற்றிலும் பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தமது மக்கள் நடத்திய மாபெரும் போராட்டத்தின் விளைவாக இன்றைக்கு அந்த அவசர கால நிலைமை நீக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக வேறு ஒரு ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆட்சி முன்பு இருந்த அரசோடு மற்றக் கொள்கைகளில் அதிகம் வேறுபடவில்லை என்றாலும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும், அரசியல் சட்டம் மதிக்கப்பட வேண்டும் என்கிற தன்மையில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிற காரணத்தினால் நாங்கள் அவர்களது நடவடிக்கையை வரவேற்கிறோம்.

உதாரணமாக, நேற்றையதினம் மத்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அவர்கள் அரசியல் சட்டத்திலேயே சேர்க்கப்பட்ட 352-வது பிரிவினை நீக்க வேண்டும் என்பது குறித்துப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியுள்ளார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியும் அதை வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறது. அந்த ஒரு பிரச்சனையில் நமது இந்திய ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும், நமது அரசியல் சட்ட உணர்வுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு நமது மாநில அரசும் அந்த அரசியல் சட்டத் திருத்தத்தினை நீக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு சிபார்சு செய்து, இதுபோல மற்ற மாநில அரசாங்கங்களும் சிபார்சு செய்வதற்கு நாம் முன்னணியில் இருந்து உதவி செய்து பெருமையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

அதேபோல மிசாச் சட்டம். இங்கே உள்ள கட்சிகளில் மிசாச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவைகள் இருக்கின்றன. ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம். அடுத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி. அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்பது நான் அறிந்த உண்மை.





(முற்பகல் 10,30)

எந்தக் கட்சி பாதிக்கப்பட்டிருந்தாலும்—காவல் சட்டம் என்பது இந்திய ஜனநாயகத்திற்கு விரோதமானது. ஒரு மனிதன் குற்றம் செய்திருந்தால், விசாரணை செய்து அவனுக்குச் சிறை தண்டனை அளிக்கலாம். எவ்வித விசாரணையும் இல்லாது சிறையில் வைப்பது முற்றிலும் பாதகமானது.

ஆகவே மிசா சட்டம், தடுப்புக் காவல் சட்டம் இவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று இந்த உரையில் இந்த அரசாங்கம் சிபார்சுகளை மேற்கொண்டிருந்தால் நாங்கள் அதிகப்படியாக சந்தோஷப்பட்டிருப்போம்.

இதேபோல் இன்று இந்தியாவிலுள்ள மக்களை அதிகக் கடுமையாகப் பாதிக்கிற பிரச்னை, குறைந்தபட்ச போனஸ் சட்டத்தை முந்திய மத்திய அரசு ரத்து செய்திருப்பது. 8.33% போனஸ் என்பது இந்தியாவிலுள்ள உழைப்பாளி மக்கள் போராடிப் பெற்ற உரிமை. அந்தச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும் அல்லது ஏற்படவேண்டும் என்பதற்காக மாநில அரசு ஆளுநர் உரை வாயிலாக மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்க வேண்டும் என்பது எங்கள் அபிப்பிராயமாகும். இன்னும்கூட, இந்த உரையின் மூலம் முடியாவிட்டாலும் அடுத்து வரும் காலத்தில் அப்படி ஒரு தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வர இந்த அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்று அரசாங்க அதிகாரங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்று ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய கட்சியும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டும் என்பதற்காகவும், அப்படி அதிகாரங்கள் அதிகப்படி இருந்தால்தான் தமிழகத்தில் உள்ள நாலரைக் கோடி மக்களுக்கு உருப்படியான சேவை செய்ய முடியும் என்று கருதுகிறது. ஆகவே மாநில அரசுகளுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் இன்றியமையாத தேவையாகிறது. ஆகவே அதற்காக தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்காக இந்த மாநில அவையில் அதற்கான ஒரு தீர்மானத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1977 ஜூலை 14

அடுத்து, கட்டாய சேமிப்பு என்பது இந்த நாட்டிலுள்ள தொழிலாளர்களை மிகவும் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை. இந்த நாட்டிலுள்ள வேறு சில மாநிலங்கள் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருப்பதைப்போல் கட்டாய சேமிப்புத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் இரண்டாவது தவணையை ரொக்கமாக உழைப்பாளி மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மொழிப் பிரச்னையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெள்ளத்தெளிவாக ஒரு கொள்கையைக் கொண்டிருக்கிறது. இந்நாட்டிலுள்ள அவ்வளவு மொழிகளுக்கும். மொழிகள் அனைத்திற்கும் சமமான உரிமை கொடுக்கப்பட வேண்டும். [illegible] எந்த ஒரு மொழிக்கும் இந்தியாவில் தனி உரிமை இருத்தல் கூடாது.

இந்த நாட்டில் மத்திய அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கைகள் அத்தனையும் இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிகள் அவ்வளவிலும் வெளிவர வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை. இந்தியாவில் உள்ள அத்தனை மொழிகளுக்கும் சமமான உரிமை இருத்தல் வேண்டும். அது இந்திய மொழியாக இருந்தாலும் சரி பிற மொழியாக இருந்தாலும் சரி, தென் மாநிலங்களுக்கு, அதாவது இந்தி பேசாத மாநிலங்களுக்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொடுத்த உறுதிமொழி, இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற காலம் வரையில் ஆங்கிலம் நிர்வாக மொழியாக இருக்கும் என்பதற்கு சட்ட வடிவம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தால் அதற்கு எங்களது பூர்ண ஆதரவைத் தர நாங்கள் தயாராயிருக்கிறோம்.

எங்கள் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, நம் மாநிலத்தில் நக்ஸலைட்ஸ் என்று சொல்லக்கூடிய அரசியல் கைதிகள் விஷயத்தில் அரசு கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எந்த ஒரு இயக்கமும் ஏற்படும் போது அல்லது மக்கள் இயக்கம் ஒன்று ஏற்படும்போது சில சம்பவங்கள் ஏற்படுவது உண்டு. 1965-ல் அன்று இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து தமிழகத்தில் கிளர்ச்சி ஏற்பட்டபோது பல வழக்குகள் போடப்பட்டன. ஆனால் திராவிட முன்னேற்றக்



1977 ஜூலை 14] [திரு. என். சங்கரய்யா]

கழகம் நிர்வாகத்திற்கு வந்தவுடன் இந்தி மொழி கிளர்ச்சி சம்பந்தப்பட்ட எந்தவிதமான வழக்குகளாக இருந்தாலும் எந்தவிதமான குற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தாலும் அந்த வழக்குகள் எந்த நிலையில் இருந்தாலும் அவை அத்தனையும் ஒரே அடியாக ரத்து செய்யப்படவேண்டும் என்று முடிவு செய்தார்கள். அன்று நாங்கள் அதை ஆதரித்தோம்.

அதேபோல் இன்று பல்வேறு மாநிலங்களில் நக்ஸலைட்ஸ் என்ற அரசியல்வாதிகளை கைது செய்திருக்கிறார்கள், மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி நக்ஸலைட்ஸின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை எதிர்த்துப் போராடியிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியினரையே அவர்கள் தாக்கியிருக்கிறார்கள். ஆனால் ஒரு மனிதன் என்ற முறையில் ஒரு அரசியல் கட்சி உழைப்பாளன் என்ற முறையில் பார்க்கவேண்டும்.

கோதண்டராமன் என்ற வக்கீலும் அவர்களது நண்பர்களும் பல்வேறு வழக்குகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் அவர்கள் மிஸா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். காவலில் வைக்கப்பட்டிருக்கிற அவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், அவர்கள் மக்கள் மத்தியில் அவர்கள் கொள்கைகளைச் சொல்லட்டும் மக்கள் அதை நிராகரித்துவிட்டால் அவர்கள் நிலைமை தெளிவுபடும். ஆகவே இப்பிரச்சினையில் அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அடுத்து, ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தியதற்காக 50 பேர்களுக்குள்ளாக என்.ஜி.ஓ.க்களுக்கு பல்வேறுவிதமான தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பல பேர்களுக்கு இன்க்ரிமெண்ட் கட் என்ற தண்டனை சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த ஊழியர்களின் பிரச்சினைகளைக் கவனித்து இந்த அரசு இந்த சிறு தண்டனைகளை ரத்து செய்ய முன்வந்தால், அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்று சொன்னால்; ஏழு லட்சம் ஊழியர்களின் நல்லெண்ணம் இந்த அரசுக்கு கிடைக்கும்.

அதேபோல் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க மேலும் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உதாரணமாக, சட்டசபை விதிகளின்கீழ் ஸ்பீக்கர் அவர்களிடம் பெட்டிஷன் கொடுக்க மக்க

ளுக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந் நிலையில் இன்று சட்டசபை நடக்கிற காலங்களில் மக்கள் வந்து தங்களுடைய கோரிக்கைகளை ஸ்பீக்கரிடம் கொடுத்து அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு அவர்களுக்கு அந்த பிரஜா உரிமை வழங்கப்படுதல் வேண்டும். ஒரேயடியாக யாரும் பெட்டிஷன் கொடுக்க வரக்கூடாது என்று தடை விதிக்கப்படு மானால், அது சாதாரண மக்களின் உரிமையை தடுக்கக்கூடிய நிலை தான் ஏற்படும் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, நடைமுறைக்கு சாதகமாக, இந்த மாநிலத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் மக்களுடைய பிரதிநிதிகள் இந்த மன் றத்திற்கு வந்து, சபாநாயகர் மூலமாக தன்து குறைகளை அரசாங் கத்திற்கு சமர்ப்பிப்பதற்கு உரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரதானமாக நான் இங்கே வற்புறுத்த விரும்புவது, ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, ஒன்று வேலையின்மையை தீர்ப்பது, இன்னொன்று வறுமையை ஒழிப்பது; இந்த இரண்டு நோக்கங் களையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். தமிழகத்தில் இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் எப்படி இதைச் செய்ய முடியும்?

ஐம்பத்தொன்பது சதவிகித மக்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் 70 சதவீத மக்கள் கிரா மங்களில் வாழ்கிறார்கள். நில உடைமைக்கு உச்சவரம்பு ஏற்படுத்தி யும் பெரிய நில பிரபுக்கள் எல்லாம் தங்கள் நிலங்களை அரசாங்கத் திற்கு கொடுக்காமல் பிரித்து வைத்துக்கொண்டார்கள். இந்த நிலையில் கிராம மக்களுக்கு எங்கிருந்து வேலை கொடுக்க முடியும்? உலகிலுள்ள எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், வேலையில்லாத நிலைமையை மாற்றுவதற்கு வேலையில்லாத கிராம மக்களை தொழிற் சாலைகளில் வேலை கொடுத்து, வேலையின்மையை தீர்த்ததாக எந்த அரசாங்கமும் கூறவில்லை. நாம் 15 ஸ்டான்டர்டு ஏக்கரா என்று நிர்ணயித்தபோது பெரிய நிலபிரபுக்கள் தங்களுடைய சொத்துக் களை எல்லாம் பிரித்து வேறு பெயர்களில் எழுதிக் கொடுத்துவிட்டு, 15 ஏக்கர்களுக்கு குறைவாக கணக்கை காட்டி விட்டார்கள். உபரியாக எந்த நிலமும் அரசாங்கத்திற்கு வரவேயில்லை. ஆகவே பினாமிகளின் பெயரில் இருக்கின்ற நிலத்தை அரசாங்கம் கண்டு பிடித்து எடுத்து ஏழை மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு விநி யோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.





அதுமட்டுமல்ல, கோயில் சொத்து பப்ளிக் டிரஸ்ட் என்றும், பிரைவேட் டிரஸ்ட் என்றும் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இவைகளை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டும். இதைப்பற்றி பெரியவர் பக்தவத்சலம் அவர்களும் கருத்து தெரிவித்து இருக் கிறார்கள். இதை அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கோயில்கள் பக்திக்காக இருக்கவேண்டியதுதான். அதே நேரத்தில், இப்படிப்பட்ட டிரஸ்டுகளிடம் இருக்கும் நிலங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்ற கருத்தை மார்க் ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஏற்கனவே சொல்லி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலங்களை எடுத்து அதிலிருக்கின்ற விவசாயி களுக்கு நிலங்களைக் கொடுக்கவேண்டும், இடைத்தரகர்கள் இருக்கி றார்கள். அவர்களுக்கு நிலங்கள் கொடுக்க வேண்டியதில்லை. உண்மையான விவசாயிகள் யார் என்று பார்த்து, நிலங்களைக் கொடுக்க வேண்டும்.

கேரளாவில், நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்தபோது, பொது டிரஸ்டுகளின் சொத்தை அரசாங்கமே எடுத்து டிரஸ்டுகளின் பராமரிப்பை அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற ஏற்பாட்டை செய்து கொண்டது. இதன் மூலமாக உண்மையான விவசாயிகள் நிலங்கள் பெறவும் டிரஸ்டுகள் சரியான முறையில் பராமரிக்கப் படவும் வகை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன். இதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமாக இருக்கின்ற பிரச்னை காவேரி பிரச்சினை. தமிழக மக்கள் காவிரி பிரச்னையில் மிகவும் கவலைப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் இந்திய அரசாங்கம் இரண்டு கமிட்டிகளை நியமித்திருக்கிறது. இந்த மாதத்திலேயே இந்தக் கமிட்டிகளின் கூட்டம் நடைபெறுவதாக கூறியிருக்கிறார்கள். இந்தக் கமிட்டிகளின் முடிவுகளை அறிவிக்கின்ற நேரத்தில், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களை கலந்து கொண்டு முடிவு களை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 16 ஆயிரம் கிராமப்புறக் கடைகளை திறக்கப் போவதாக சொல்லியிருப்பதை மிகவும் வரவேற்கிறோம். இந்த கடைகளுக்கெல்லாம் மலிவுப் பொருட்களை அரசாங்கம் ஸ்டேட் டிரேடிங் மூலமாகத்தான் கொடுக்க முடியும் என்பதை அரசாங்கம்

ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அந்த விதத்தில் நியாயமான விலையில் பொருட்களை கொள்முதல் செய்து தேவைக்குத் தகுந்தபடி தேக்கி வைத்திருந்தால், தேவைப்படும் நேரத்தில் இந்தக் கிராமக் கடைகளுக்கு பொருட்களை வழங்க முடியும். இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றிரண்டு பிரச்சினைகளை மட்டும் கூற விரும்புகிறேன். இன்றைக்கு குடியிருப்பு மனைகளை ஏழை மக்களுக்கு வழங்கவேண்டும் என்று சொல்லுகிறோம். மதுரையில் என்.எம்.ஆர். நகர், காமராஜ் நகர் போன்ற இடங்களில், ஏழை மக்கள் பல இடங்களில் குடிசைகளை அமைத்து அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இந்த இடங்களுக்காக இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. இதுபோன்ற பல இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கெல்லாம் இந்த இடங்களுக்கான பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக மதுரையில் ஆயிரக்கணக்கான பேர்கள், காமராஜ் நகர், என்.எம்.ஆர். நகர் போன்ற இடங்களில், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடியிருக்கும் இடங்களைப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

வேலையில்லாத நிலைமையை போக்குகின்ற அளவில், முக்கியமாக கைத்தறி நெசவாளர்களுக்கு சில குறிப்பிட்ட ரகங்களை ஒதுக்கித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் தேவை. இன்றைக்கு இந்த செயற்கைப் பட்டு. நூல், சாயம் போன்றவற்றிற்கு எல்லாம் ஒரு விலை நிர்ணயம் செய்து, நெசவாளர்களுக்கு அடையாள கார்டுகள் மூலம் கொடுத்தால். அவர்கள் பிரச்னை சுமுகமாகத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றைமட்டும் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். ஏதோ இந்த அரசாங்கம் ஊழல்களையெல்லாம் தடுக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மதுரையிலே,



தெற்கு வாசலிலே ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் இருக்கின்றது. அதற்கு அரசாங்கத்திலிருந்து அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 27,000-ஐ தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறிய ஆசிரியர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அந்த ஆசிரியர் பெயர் அழகுராஜ். அவருக்கு மூன்று குழந்தைகள். அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

அதேபோல், மற்றொருவர் தமிழ்ப் பெரும் புலவர். பெயர் ராஜா மொய்தீன். அவரை வேலையிலிருந்து ஏன் நீக்கம் செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் கேட்கப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அங்குள்ள அதிகாரிகளும், டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் அதிகாரிகளும் அந்தப் பள்ளிக்கூட மானேஜ்மென்டார்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பது. இந்த நிலையை எதிர்த்து பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒத்த அபிப்பிராயத்தில், நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள்.

இந்த மாநில அரசு ஊழல்களை ஒழிக்கப் போவதாகச் சொல்வதால், உதாரணத்திற்கு இந்த ஒன்றை இங்கே குறிப்பிடுகின்றேன். உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். எனவே, அவர்களைக் காரணம் இல்லாமல் ஏன் வேலைநீக்கம் செய்தார்கள் என்பதற்கு விசாரணை செய்யவேண்டும். அதற்கு உடந்தையாக இருந்த இந்த டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் அதிகாரிகள். மற்ற அதிகாரிகள் மீது விசாரணை செய்யப்பட வேண்டும். அப்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு தயங்கக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, இந்தச் சபையிலே இன்றைக்குப் பேச வாய்ப்பு அளித்த சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பி. எச். பாண்டியன்: சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது வரவேற்றுப் பாராட்டுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக ஆளுநர் அவர்கள் ஏழை எளிய பாட்டாளி மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும், தொழிலாளிகளுக்காகவும் அவர்களுடைய உரையில் நல்லதொரு திட்டங்களையும், அவர்களுக்கான

கோட்பாடுகளையும் உரையிலே ஆற்றியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களுடைய உரையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏழை எளிய விவசாய மக்களை மனதிலே கொண்டு, அவர்கள் உரையாற்றி இருக்கிறார்கள். அவர்களுக்காக இந்த அரசாங்கம் செய்ய இருக்கின்ற கொள்கைகளை விளக்கியிருக்கிறார்கள்.

ஏழைகளுக்கு இலவசமாக சட்ட உதவி என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் அரசு, கான்ஸ்டிட்யூட் செய்யப்பட்ட லீகல் எய்ட் போர்டு இலவச சட்ட இப்படி இலவசமாக சட்ட உதவி செய்யவேண்டுமென்று, அதன் பேரில் ஒரு லீகல் எய்ட் போர்டு கான்ஸ்டிட்யூட் செய்தது. இப்படி உதவியை ஏழை எளிய மக்களுக்குச் செய்ததா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடந்த ஆறு மாத காலமாக இந்த இலவச சட்ட உதவி போர்டு, ஏழை எளிய மக்களுக்கு மக்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது.

மத்திய அரசு உச்ச நீதி மன்ற நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு இலவச சட்ட உதவி போர்டு நியமிக்கப்பட்டது. அவ்வாறு நியமிக்கப்பட்ட அந்த போர்டில், தலைவரும் உறுப்பினர்களும்தான் இருக்கிறார்களே ஒழிய, மக்களுக்கு எந்தவிதமான உதவி செய்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், அந்த போர்டு மூலம் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை.

அதேபோல், முன்னாள் மாநில உயர்நீதி மன்றத் தலைவரும், தற்போது உச்சநீதி மன்றத்திலே நீதிபதியாக இருக்கும் திரு கைலாசம் அவர்கள் தலைமையில் ஒரு இலவச சட்ட உதவி போர்டு நியமிக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட போர்டிலும், தலைவர். உப தலைவர், உறுப்பினர்கள் என்று பெயரளவிற்கு இருக்கிறார்களே தவிர, ஏழை எளிய மக்களுக்கு அவர்களால் எந்த விதமான உதவியும் செய்யவில்லை.

சும்மா அவர்கள் விளம்பரத்திற்காகத்தான் இருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழக ஆளுநர் அவர்கள், ஏழை எளிய மக்களுக்கு இலவச சட்ட உதவி செய்ய வேண்டுமென்கின்ற காரணத்தினாலே, இந்த நேரத்திலாவது இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு நேரடி-



யாக உதவி செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக சொல்லப்போனால் பெண்களுக்கான ஜீவனாம்ச வழக்குகளில் இந்தச் சூழ்நிலையில் குற்ற நீதிமன்றங்களில் அவதிப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழை எளிய மக்கள் விபத்துக்குள்ளானால் அவர்கள் பிணத்தைப் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை எளிய மக்கள் வழக்குகளுக்காக உண்டான ஸ்டாம்ப் கட்டணத்தைச் செலுத்த முடியாமலும், வழக்கறிஞர்களை அமர்த்த முடியாமலும் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் இந்த அரசு கவனித்து ஏழை எளிய மக்களுக்கு இலவச சட்ட உதவி கொடுக்க வேண்டுமென்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அந்த ஏழை எளிய மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேரவேண்டிய முறையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சித் தேர்தலைத் தள்ளி போட்டது அதைக் காலதாமதப்படுத்துவதற்காகத்தான் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். அந்த மாநகராட்சி வழக்கை தனி வழக்குமன்றம் இப்போது விசாரித்துக் கொண்டிருக்கிறது. சுமார் பாதிக்குமேல் சாட்சியங்களை விசாரித்து விட்டார்கள். அதிலே குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பல பேர்களில் சிலருக்கு நான் ஆஜராகிற காரணத்தால் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாநகராட்சி வழக்கு எந்தச் சூழ்நிலையிலும் இன்னும் ஆறு மாத காலத்திற்குள் முடிந்து விடும் என்று நீதிபதியும், அரசாங்கத் தரப்பில் ஆஜராகும் பப்ளிக் பிராசிகியூட்டரும் கூறினார்கள். ஆகவே, இந்த மாநகராட்சித் தேர்தலை எந்த உள்நோக்கோடும் தள்ளிப்போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கு மன்றங்களில் நாலைந்து ஆண்டு காலம் வழக்குகளை நடத்த முடியாமல் ஏழை எளிய மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஊர்களில் நீதிமன்றங்கள் கிடையாது. அப்படியே இருந்தாலும் ஒரே ஒரு வழக்குமன்றம் அத்தனை வழக்குகளையும் விசாரித்துக் கொண்டிருக்கும். ஆகவே, நீதி மன்றங்கள் இல்லாத ஊர்களிலே நீதிமன்றங்களை அமைத்து—

[திரு. பி. எச். பாண்டியன்] 1977 ஜூலை 14]

இருக்கின்ற நீதிமன்றங்களிலே வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் சேரன்மாதேவி தொகுதியிலிருந்து வந்திருக்கிறேன். அது பிற்பட்ட தொகுதி ஆகும். இதற்கு முன்னால் அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 1962 வந்தவர் சபாநாயகராகிவிட்டார். அதனால் மக்களால் அணுகவோ அல்லது அவர் தன்னுடைய கருத்தை அப்போது இருந்த அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறவோ, அந்தத் தொகுதியின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவோ அவரால் முடியாமல் போய்விட்டது. அதற்குப் பின்னாலே வந்தவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல.

ஆக, இந்தச் சூழ்நிலையில் கடந்த 35 ஆண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட அந்தச் சேரன்மாதேவி தொகுதியில் விவசாயிகளும், தொழிலாளர்களும் எந்தச் சூழ்நிலையில் கஷ்டப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கு சாலைகளானாலும் ஏரிகளானாலும் பழுதுபார்க்கப் படாமலே இருக்கின்றன. அந்த நிலை கடந்த 25 ஆண்டு காலமாக அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. நான் பிறந்தது முதல் அதே நிலையில்தான் அது இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பிற்பட்ட தொகுதியின் மக்களுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டி நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்கள் சுமுகமாக நடைபெற்றன என்று கூறியுள்ளார்கள். அதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளைப் பயமின்றி அளித்தார்கள். அந்த நேரத்தில் மக்களுக்கு எந்தவித அசம்பாவிதமோ, கஷ்டநஷ்டங்களோ இல்லாமல் நடந்தது என்று ஆளுநர் அவர்கள் கூறியதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளும், நெசவாளர்களும் எந்த அளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



1977 ஜூலை 14] [திரு. பி. எச். பாண்டியன்]

(முற்பகல் 10-50)

குறிப்பாக என்னுடைய தொகுதியில் நெசவாளர்கள் தங்களுக்கென பாவுகள் கிடைக்காமல் அவைகள் நேரடியாக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் அவர்கள் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நெசவாளர்களுக்கு என, தேர்தல் நேரத்தில் நாம் மக்களுக்குச் சொன்னதுபோல் நெசவாளர் கழகம் போல் இந்த அரசு ஒரு அமைப்பை ஏற்படுத்தி அவர்களுக்கு எல்லாம் நேரடியாகப் பாவுகளை விநியோகிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்கள் 20-வது பத்தியிலே, நடைபெற்று முடிந்த தேர்தலில் ஏற்பட்ட வெப்பங்களிலிருந்தும் சர்ச்சைகளிலிருந்தும் விடுபட்டு பணியாற்ற வேண்டுமென்று இந்த உரையிலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாம் இப்போது இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கென நன்மைகளைச் செய்வதற்கு, அவர்களுக்காக வாதிடுவதற்காக நாம் இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறோம். இங்கே நாம் சொந்த காழ்ப் புணர்ச்சியையும் அரசியல் சர்ச்சையையும் தீர்த்துக்கொள்ளக்கூடிய முறையில் பணியாற்றாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மைகளைச் செய்யக்கூடிய முறையிலே அதைக் கருப்பொருளாக ஏற்றுக்கொண்டு விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தேர்ந்தெடுத்த மக்களுக்காக ஆற்றவேண்டிய பணியைக் குறித்து ஆளுநர் அவர்கள் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதிகளுக்கும், குறிப்பாக நாட்டு மக்களுக்கும் ஆற்றவேண்டிய பணியை ஆளுநர் அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் நாட்டில் உள்ள பல பிரச்னைகளை நாம் அணுகியாகவேண்டும், இருக்கின்ற பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டு போகவேண்டுமேபொழிய பிரச்னைகளை வளர்த்துக்கொண்டு போகிற சூழ்நிலையை விட்டு, மக்களுடைய நன்மைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய கஷ்டநஷ்டங்களைப் போக்கக்கூடிய வழிமுறைகளைக் காணுவதிலே இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் பணியாற்றவேண்டுமென்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி. எச். பாண்டியன்] [1977 ஜூலை 14

விவசாயிகளுக்கு நன்மைசெய்யக்கூடிய முறையில் அவர்கள் பெறக்கூடிய கடன்களுக்கு நல்ல வழிவகை செய்யக்கூடிய முறையில் நல்ல பல கருத்துக்கள் இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் விவசாயிகள் ஒரு பம்புசெட் வாங்குவதற்கு கடன் வாங்கவேண்டுமென்றால் அவர்கள் 6 மாத காலம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள். அலைந்த பிறகு கிடைத்த பணத்தில் அவர்கள் பம்புசெட் வாங்க முடியவில்லை. காரணம் பம்புசெட்டின் விலை உயர்ந்துவிடுகிறது. இல்லாவிட்டால் அவர்கள் வாங்குகிற பணத்தைப் பெறுவதற்கு பல இடைத் தரகர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் போய்விடுகிறது.

இந்த நிலைமையைப் போக்க, பிளாக் டெவலப்மென்ட் ஆபிசரே நேரடியாகக் கடன் விநியோகம் செய்து, ரெட் டேப்பிஸம் என்று சொல்வார்களே, இது இல்லாமல் அவர்களுக்கு கடன்களைக் கொடுப்பதற்கு வழிவகை செய்தால் விவசாயிகள் நம்முடைய அரசின் மீது நல்ல ஆதரவையும் நம்பிக்கையும் வைப்பார்கள், இந்த அரசை எப்போதும் ஆதரிப்பார்கள்.

விவசாயிகள் இந்த நாட்டின் உயிர்நாடி என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் தான் இந்த நாட்டின் போஷகர்கள் அவர்களுக்கு இந்த அரசு நன்மைகளைச் செய்யும் என்று எதிர்பார்த்து ஆளுநர் உரையிலே அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள், இந்த உரையிலே குறிப்பிடப்பெற்ற நல்ல திட்டங்களைத் துரிதப்படுத்தி ஏழை எளிய மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கட்சிவாரியாக ஒதுக்கப்பட்ட நேரப்படி, பேச விருப்பம் தெரிவித்திருக்கின்ற உறுப்பினர் அனைவரும் பேச வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினாலே, ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடம் விதமும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒவ்வொருவரும் 5 நிமிடம் வீதமும் எடுத்துக்கொண்டு உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டு, உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களைப் பேச அழைக்கிறேன்.



1977 ஜூலை 14]

**திரு. மு. செல்வராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பேரவையிலே எதிர்க்கட்சிகளுக்குத்தான் அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆளும்கட்சியிலே உறுப்பினர்கள் அதிகமாக இருப்பார்கள். ஆகவே எங்களுக்கு கொஞ்சம் நேரத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த ஆளுநர் உரையின்மீது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் என்று அலாட் செய்யப்பட்டு டிசைட் பண்ணப்பட்டிருக்கிறது, அந்த அடிப்படையிலேதான் நேரம் ஒதுக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. செல்வராஜ் :** இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்த குறிஞ்சிப்பாடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எங்களுடைய தானைத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவரவர்களே, இங்கே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் மிகக் குறுகிய காலமாக இருக்கிறது. இந்த அவையிலே நம்முடைய மேதகு ஆளுநர் கொடுத்திருக்கின்ற உரையிலே குறிப்பாக பாராட்டுதற்குரிய அம்சங்கள் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த உரை இந்த அரசாங்கத்தின் சார்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்ற உரை. எனவே, பொதுவாக இந்த நாட்டில் நெருக்கடி காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி, அந்த நெருக்கடி காலத்தில் ஏற்பட்ட தொல்லைகள், சங்கடங்களைப்பற்றியெல்லாம் இந்த உரையிலே குறிக்கப்படவில்லை. நெருக்கடி காலத்திலே ஓராண்டுக்காலம் மிசாக் கைதியாக இருந்தவர்களில் நானும் ஒருவன். நெருக்கடி காலத்தில் அந்த மிசாக் கைதிகள் துன்புறுத்தப்பட்டதைப்பற்றியெல்லாம் கமிஷன் என்ற பெயராலே அறிவித்திருக்கின்ற காரணத்தாலே நான் அதற்குள்ளே போகாமல் இங்கே நெருக்கடி காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளை உங்கள் முன்பு தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. மு. செல்வராஜ்] [1977 ஜூலை 14

10—12—76-ஆம் தேதியன்று 'இந்து' பத்திரிகையிலே ஒரு விளம்பரம் வந்திருக்கிறது.

In continuation of the Commission's Notification, dated 30th January 1976 inviting applications for direct recruitment to 204 appointments of Assistant Professors and 257 appointments of Tutors and Demonstrators in Government Arts Colleges as mentioned in the Table below, applications are invited up to 5 p.m. on 4th January 1977 for such appointments from Candidates (Not belonging to Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes).

*Note IV* :

Candidates belonging to Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes are not eligible to apply with reference to this Notification.

நெருக்கடிநிலை காலத்திலே இப்படிப்பட்ட ஒரு அக்கிரமம் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்த அரசு பின்தங்கியவர்களுக்காக, ஏழை எளியவர்களுக்காக நாங்களெல்லாம் இருக்கின்றோம் என்று சொல்பவர்கள். இங்கே இப்படிப் பின்தங்கியவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். இது பப்ளிக் சர்விஸ் கமிஷனால் அறிவிக்கப்பட்டு, இதற்குப்பிறகு அப்பாயின்ட்மெண்ட் நடத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபொழுது ஒரு பைசா மின் கட்டணத்தை உயர்த்தியதற்காக தமிழ்நாட்டில் பெரிய போராட்டம் நடந்திருக்கிறது. நெருக்கடிநிலைக் காலத்தில் 4 பைசா உயர்த்தியிருக்கிறார்கள். அதைக் குறைப்பதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி. ஓ. க்களுக்கு மூன்றுவது பே கமிஷன் அறிவிக்க வேண்டும். அதை இங்கே இல்லாவிட்டாலும் நிதிநிலை அறிக்கையிலாவது அறிவிக்க வேண்டும். என். ஜி. ஓக்களுக்கு ஏற்கனவே இருந்த அரசு . . .



1977 ஜூலை 14]

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கல்லூரி ஆசிரியர்களைப்பற்றி அப்பொழுது வந்த விளம்பரத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். அப்பொழுது இந்த ஆட்சி அமையவில்லை. எனவே, அதற்கு இந்த ஆட்சி பொறுப்பு ஆகாது.

திரு. மு. செல்வராஜ் : திரு. ஜெயவேலு அவர்கள் வழக்கறிஞர். நெருக்கடிநிலைக் காலத்தில் ஏற்பட்ட அக்கிரமம் என்று சொன்னேனே தவிர, இந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது என்று சொல்லவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் நெருக்கடி நிலைக் காலத்தில் நடந்த தவறுகளைச் சொல்லி, வந்திருக்கின்ற, புதிதாக வந்திருக்கின்ற அரசு அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. மு. செல்வராஜ் : துணைத் தலைவரவர்களே, இந்தக் குறுக்கீடுகளையெல்லாம் எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் தயவு செய்து சேர்த்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்.ஜி.ஓக்களுக்கு ஏற்கனவே இருந்த அரசு, சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீரென்று இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்கியது. அவர்கள் ரிடையராகிச் செல்கின்ற காலத்தில், இருக்கின்ற பணத்தையெல்லாம் கடனாகப் பெற்றுவிட்டு, நடைப்பிணமாகச் செல்கிறார்கள். எனவே, இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் ரிடையராகின்றவர்களுக்கு அவர்கள் ரிடையராகிச் செல்கின்ற நேரத்தில் 10,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்க வேண்டிய நிலைமை இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

[திரு. மு. செல்வராஜ்] [1977 ஜூலை 14

அடுத்து, என்னுடைய தொகுதி சம்பந்தமாகச் சொல்லி ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். குறிஞ்சிப்பாடியில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அது ஒன்றரை ஆண்டுக்காலமாக இடிந்திருக்கிறது. அதை அரசாங்க மருத்துவமனையாக எடுக்க வேண்டும்.

அடுத்து நெய்வேலியிலே சிலோனிலிருந்து வந்திருக்கின்ற தமிழ் அகதிகள் 1,500 குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்குப் பல சௌகரியங்களைக் கொடுப்பதாகச் சொல்லி அங்கே இருக்கின்ற நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிலிருந்து சுமார் 80 இலட்சம் ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அங்கிருக்கின்ற விவசாயிகள் கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களைக் கவனிக்க வேண்டுமென்று இங்கேயிருக்கின்ற விவசாய அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

ஒரே ஒரு பிரச்னையை மாத்திரம் சொல்லி முடித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆலப்பாக்கம் ரெயில்வே கேட்டிலிருந்து திருச்சோபுரம் வழியாக, பெரியகுப்பம் வரை, அங்குள்ள மீனவர்களுக்குப் பாலம் கட்ட ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அது கிடப்பிலேயிருக்கிறது. அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டுகின்ற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலியிலே சயனைட் தொழிலாளர்கள் கடந்த 10 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். பெண்கள் கூட அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுபற்றி தொழிலாளர் அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். எனவே, இது சம்பந்தமாக அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

* திரு. ஐசரி வேலன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநருடைய உரையின்மீது, அவர் ஏறக்குறைய 17 நிமிடங்கள் ஆற்றிய உரையின்மீது, கடந்த 7 தினங்களாக நாம் விவாதம் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்த விவாதத்தை இத்தனை தினங்களாக உற்று நோக்கி வரும்போது, ஆளும்கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் நடைபெறுகின்ற விவாதமா அல்லது வாக்குவாதமா என்கின்ற ஐயப்பாடு எனக்கே தோன்றுகிறது. இந்த கவர்னர் உரையிலே தமிழகத்



1977 ஜூலை 14] [திரு. ஐசரி வேலன்]

தினுடைய வளர்ச்சிக்காக, ஆக்கப் பணிகளுக்காக, அருமையான திட்டங்களையெல்லாம் இந்த ஆட்சியின் சார்பாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மது விலக்கை இந்த ஆட்சி தீவிரமாக அமுல்படுத்தும் என்பதை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதே நேரத்திலே ஏழை மக்களுடைய துயரைத் துடைக்கவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடவும் ஏழை மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களையும் கவர்னர் அறிக்கையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அந்த அறிக்கையிலே புரட்சியில்லை, புதுமை இல்லையென்று வாதாடுபவர்களை நான் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சொன்னார், ஆளுநருடைய உரையிலே உண்மையிலே புரட்சி இல்லை, புதுமை இல்லை, என்று. அது எப்படிப்பட்ட புரட்சியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதற்கு உதாரணமாக ஒரு சின்ன குட்டிக் கதையையும் சொன்னார். அந்தக் குட்டிக் கதையிலே ஏதோ ஒரு கதாநாயகியை வரவழைத்தார். அந்தப் பெரிய கதாநாயகியோடு, ஒரு சிறு கதாநாயகியை உருவகம் செய்து கொண்டார். ஒரு தாயாரையும் உருவகப் படுத்தி, அந்தத் தாயார் இறந்து விட்டார், கதாநாயகன் கையிலே இருந்த துப்பாக்கி வெடிக்காமலே இறந்து விட்டார், இதுவல்லவா புரட்சி, புதுமை என்று சொன்னார்.

அதைவிட புரட்சிகரமான கதைகள் எல்லாம் தமிழகத்திலே இருந்திருக்கின்றன; நானும் படித்திருக்கிறேன். அந்த உறுப்பினருக்கு ஒரு புரட்சிகரமான கதையைச் சொல்ல வேண்டுமென்று நான் தேடித் துருவிப் பார்த்ததிலே, மிகப் பெரிய எழுத்தாளர் கதையில், இலக்கிய சர்ச்சையில் வல்லவர் எழுதிய அந்த கதையில், ஒரு கதாநாயகன் வருகிறார். வாழ முடியாத அந்தக் கதாநாயகன் ஒரு போலீஸ்காரர். அந்தப் போலீஸ்காரர் மனைவியை இழந்தவர். மனைவியை இழந்த அந்தப் போலீஸ்காரருக்கு ஒரு அழகிய மகள் உண்டு. அவர் வறுமையிலே வாடிக்கொண்டிருந்த காவல்காரராக இருந்த காரணத்தாலே, பெண்ணை நல்ல இடத்திலே திருமணம் செய்து கொடுக்க முடியவில்லை, அவரும் மறுமணம் செய்துகொள்ள முடியவில்லை. முடிவிலே புரட்சி செய்து தான் பெற்ற மகளை, அவரே, மணந்து கொண்டதாக, இலக்கிய சர்ச்சையிலே வல்லவரான, மிகப் பெரிய எழுத்தாளர், அந்த கதையை முடித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்

புரட்சிக் கதையைச் சொல்லியபொழுது, இந்தக் கதையைச் சொல்லி இருக்கலாமே என்று கூடச் சிந்தனை செய்து பார்த்தேன். இப்படிப்பட்ட புரட்சியைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் போலும்.

மதுவிலக்கை இந்த அரசு தீவிரமாக அமுல்படுத்தும் என்று சொன்னதை அந்தக் கட்சியிலே இருப்பவர்களும் ஆதரித்தார்கள். அப்படி ஆதரித்தவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். மதுவிலக்கு ஒத்தி வைக்கப்படும் என்று சொன்ன நேரத்திலே ஆதரித்தவர்கள் அவர்கள் தான். மதுவிலக்கு தீவிரமாக அமுல்படுத்தப்படும் என்று சொல்கின்ற நேரத்தில் அதற்கு நன்றி தெரிவிப்பவர்களும் அவர்களாகத்தானிருக்கிறார்கள்.

அதே நேரத்திலே, புரட்சித் தலைவர் அவர்கள் கோவைப் பொதுக் குழுவிலே—திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவிலே, மதுவிலக்கு ஒத்திவைக்கப்படுவதை ஆதரித்தார் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுவிலக்கை அன்றைய ஆளுங் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒத்தி வைக்கவேண்டும் என்று அறிவித்ததற்குப் பின்னாலே, தன்னுடைய ஆயிரக்கணக்கான நண்பர்களோடு, உடன் பிறப்புக்களோடு உயிர்த் துடிப்புகளோடு, அண்ணா சிலையிலேயிருந்து நடந்தே போய் அண்ணாவின் சமாதியின் முன்பாக, ஆயிரக்கணக்கான தோழர்களையும் ரத்தத்தின் ரத்தங்களையும் அழைத்துச் சென்று "தாயின் மீது ஆணை, தமிழின் மீது ஆணை, பேரறிஞர் அண்ணாவின் மீது ஆணை, இனிமேல் மதுவைத் தொடமாட்டோம், மது குடிக்கின்ற வழக்கத்திற்கு நாங்கள் அடிமையாக மாட்டோம், மற்றவர்களையும் மதுவைத் தொடவிடமாட்டோம்" என்று சத்தியப் பிரமாணம் செய்த உத்தமத் தலைவர், சத்தியத் தலைவர்தான் எங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

இந்த ஆட்சி கொண்டுவருகிற நல்ல திட்டங்களை நீங்கள் ஆதரிக்கும்போது நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் எதிர்க்கிறீர்கள் என்று சொன்னால், நியாயமான வழிமுறைகளைச் சொல்லுங்கள். அது நேர்மையானதாக இருந்தால் ஏற்றுக்கொள்ள காத்துக் கொண்டிருக்கிறோம்.





அடுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது அவசர கால சட்டத்தை அவர்கள் தமிழகத்திலே பிறப்பித்தபோது, இங்கே 17 மாத கால நீண்ட ஜனாதிபதி ஆட்சியிலே நடைபெற்ற கொடுமைகளைப் பற்றி எல்லாம் விசாரிக்கவேண்டுமென்று கேட்டார்கள். அதை நான் வரவேற்பதற்கு முன்னாலே, ஏறக்குறைய 7½ ஆண்டு காலம், குறிப்பாக 5 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்ட ஆட்சி—அது நீண்ட, நீண்ட ஆட்சி. 17 மாத காலம் ஏதோ நீண்ட ஆட்சி என்று சொன்னார்கள். இந்த 7½ ஆண்டு நீண்ட, நீண்ட நீண்ட கால ஆட்சியிலே நடைபெற்ற கொடுமைகளுக்கு எல்லாம் விசாரணை வேண்டுமென்று குறிப்பிடவில்லை.

கவர்னர் உரை என்பது இது ஒரு ரூட். இந்த நாட்டிலே இந்த அரசு போகிறது என்பதைத்தான் அது சுட்டிக்காட்டுகிறது. அந்த ரூட் எந்தெந்த பாதையிலே போகும் என்பதை அரசு பின்னாலே அறிவிக்கும். அது மண் ரோடா. கல் ரோடா, தார் ரோடா, சிமெண்ட் ரோடா—எது என்பதை கொஞ்சம் பொறுத்திருந்து பார்த்துத் தீர்வு காண வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலே நீங்கள் மிக மிக அவசரப்பட்டு இந்தச் சபையின் காலத்தை வீணாக்குகிறீர்கள் என்ற எண்ணம் மற்றவர்களைப்போல எனக்கும் இருக்கிறது.

இந்த மன்றத்தினுடைய முன்னாள் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது, இந்த ஆட்சியின்பால் மிக மிக அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை அவர் பேச்சிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. அவர் மிக மிக வருத்தப்பட்டார்கள். அந்த 17 மாத ஜனாதிபதி ஆட்சியின் காரணமாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தார்கள். அதேபோல இந்த ஆட்சியையும் கலைக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்டார். அப்படி அவர் கேட்டதிலிருந்து எனக்கு ஒரு சந்தேகம். அவர் தி.மு.க. ஆட்சியைக் கலைத்தது பற்றி சங்கடப்படுகிறாரா, அல்லது இந்த ஆட்சியையும் கலைக்க வேண்டுமென்று சாபம் கொடுக்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

நான் உறுதியாக அவருக்கு சொல்லிக் கொள்வேன். இது அண்ணாவின் கொள்கைத் திட்டங்களைக் கட்டிக் காக்கின்ற அரசு. தமிழக மக்களின் இதயக்கனியாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை

முதலமைச்சராகக் கொண்ட அரசு. இந்த அரசை யாரும் கவிழ்க்க முடியாது. அசைக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அரசு பதவி ஏற்ற சில தினங்களுக்கு உள்ளாகவே, அது ஆற்றி வருகிற சேவைகளை பணிகளை நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். நீங்களும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

நான் வாழ்கிற டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் ஒரு அரசாங்க அச்சகத் தொழிற்சாலை இருக்கிறது. அங்கே 52 தொழிலாளர்களை கட்டாய வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள்—கம்பல்சரி ரிட்டையர்மெண்டு என்று ஆர்டர் போட்டிருக்கிறார்கள். அது எங்கே போடப்பட்டது? எப்போது போடப்பட்டது? 1975-ம் ஆண்டு ஆக்ட் நம்பர் 56 (டி). அந்த 56-டி சட்டத்தை ஜனாதிபதி ஆட்சியில் போடப்பட்ட—அந்தச் சட்டத்தை வைத்து என்றைக்கு 52 பேர்களை வேலை நீக்கம் செய்தார்கள் என்றால் சென்ற மாதம் 28 ஆம் தேதி.

(முற்பகல் 11-10)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பதவி ஏற்றது 30-ம் தேதி. அவர்கள் கம்பல்சரி ரிடையர்மெண்ட் என்று சொல்லி 52 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தது 28-ம் தேதி. ஆக இந்த ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று இதற்கு முன்னாலே இருந்த அரசாங்க அதிகாரிகள் இன்னமும் இங்கே வேலை செய்கிறார்கள். இதற்கு எல்லாம் மக்கள் மத்தியில் பதில் சொல்லக் காத்துக்கொண்டு இருக்கிறோம்.

அந்தச் செய்தி கிடைத்த உடனே எங்களுடைய அரிசன அமைச்சர் மாண்புமிகு மதிப்பிற்குரிய அருமை அண்ணன் சௌந்தரபாண்டியன் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு அந்தத் தொழிற் கூடத்திற்குச் சென்று குறைந்தது 5 முதல் 5½ மணி நேரம் அந்தத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்து அங்கே பணிசெய்து வாழ்ந்து கொண்டு இருக்கிற தொழிலாளர்களை சந்தித்து அவர்கள் குறைகளைக் கேட்டு அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அரசின் மீது களங்கம் கற்பிக்க யார் முயற்சி செய்தாலும் அந்தக் களங்கத்தை மக்கள் முன் வைத்து மக்கள் தீர்ப்பு வழங்கு



வதற்கான வகையில் இந்த அரசு நல்லாட்சி நடத்தும் என்று கூறிக்கொள்கிறேன். அந்த வகையில் இந்த அரசு நல்லாட்சி நடத்தும் என்பதை கவர்னர் உரையில் மிக நன்றாகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

வடசென்னை என்பது ஒரு தொழிற்பேட்டை என்பதை இந்த மன்றத்தில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள். அந்த வடசென்னைப் பகுதியிலே தொழிற்சாலைகள் அதிகமாக நிறைந்து இருக்கும் என்பதும் தெரியும். அந்தப் பகுதியிலே 21-வது வட்டத்தில் 36 நகர்கள் இருக்கின்றன. அந்த 36 நகர்களும் 30 ஆண்டு காலத்திற்கு முன்பு தோன்றியது.

இந்த சென்னை 'ஏ' சிடி என்று சொல்லப்படுகிறது. அப்படி 'ஏ' சிடி என்று சொல்லப்படுகிற இந்த மாநகராட்சியில் 36 நகர்களில் இன்று வரையில் மின்சாரம் கிடையாது. குடிநீர் வசதி கிடையாது. மின்சாரத்தை அவர்கள் வசிக்கிற பகுதியில் பார்த்தது கூட கிடையாது. 30 ஆண்டுக் காலமாக தமிழகத்தின் தலைநகரமாகவும், 'ஏ' சிடியாகவும் உள்ள சென்னை மாநகரத்தில் 36 நகர்கள் இருக்கின்றன. அங்குள்ள 50,000 மக்கள் மின்சாரத்தைப் பார்த்தது கூட இல்லை என்று சொல்கிறார்கள். இந்த அளவுக்கு முன்னால் ஆட்சி செய்தவர்கள் ஆட்சி செய்துவிட்டு எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். நீங்கள் ஏன் இந்த கவர்னர் அறிக்கையில் அதைச் சொல்லவில்லை, இதைச் சொல்லவில்லை என்று கேட்கிறார்கள். நீங்கள் செய்தது எல்லாம் அப்படி இருக்க, நாங்கள் ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்பது என்ன நியாயம்?

பல்லுக்கும் நாக்குக்கும் ஒரு தடவை சண்டை வந்ததாம். பல் சொல்லியதாம், நாக்கே, நாக்கே, நான் தான் உனக்கு வேண்டியதை எல்லாம் மென்று, மென்று அனுப்புகிறேன் என்று. நாக்கு சொல்லியதாம், நான்தான் நன்றாக ருசித்து வேண்டியதை எல்லாம் உள்ளே தள்ளுகிறேன், என்று. அதற்குப் பல் சொல்லியதாம், நாக்கே, நீ சும்மா இல்லாமல் எதையாவது சொல்லி வைக்கிறாய் கண்டபடி தவறாக பேசுகிறான் அதற்கு எல்லோரும் என்னை உடைப்பேன் என்கிறார்களே—பல்லை உடைப்பேன், பல்லை உடைப்பேன் என்று என்னை உடைப்பதாக ஏன் சொல்கிறார்கள்? ஆகவே, நீ உன் நாக்கை வைத்துக் கொண்டு சும்மா இரு. எதையாவது தப்பும் தவறுமாய் பேசி வைக்காதே என்று சொல்லியதாம்.

அதைப்போல், நீங்கள் செய்துவிட்டுச் சென்ற, முன்னாலிருந்த ஆட்சி செய்துவிட்ட தவறுகளுக்கெல்லாம், எங்களைப் பார்த்துக் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து குறைகள் கூறுவதை நிறுத்திக்கொண்டு இந்த ஆட்சியிலே நாங்கள் நடத்திக் காட்டுகிற நிறைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மனதார வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி மக்களாட்சி ; மக்களாட்சித் தத்துவத்தின் சமுதாய சமதர்மத்தின் அடிப்படையில் அமைந்த ஆட்சி. ஜாதி வேறுபாடற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்க பாடுபடுகிறது இந்த ஆட்சி—அப்படிப்பட்ட இந்த ஆட்சியின் பல நல்ல திட்டங்களை கவர்னர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்று முடிக்கிறேன். நன்றி.

திரு. எஸ். வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்களாலே வைக்கப்பட்ட உரையைப் பற்றி, அதற்கு நன்றி கூறிப் பேசுவதில் நான் உவப்புக் கொள்கின்றேன்.

இந்த ஆளுநர் உரை ஏழை எளிய பாட்டாளி மக்களது ஏக்கப் பெருமூச்சை, எண்ணங்களை, ஈடேறச் செய்வதற்கு நல்லதோர் நம்பிக்கை நாதமாக, ஏழை எளிய மக்களின் இதயத் தாகத்தைப் போக்குகின்ற இதய கீதமாக அமைந்திருந்தது என்பதைக் கண்ணுற்று உண்மையிலேயே மகிழ்ச்சி கொள்கின்றேன்.

இந்த உரையைப் பற்றி எதிர்க்கட்சி நண்பர்கள் இதிலே எதுவுமே சொல்லப்படவில்லை என்றெல்லாம் குறையினைக் கூறினார்கள். இந்த உரையில் நாட்டு மக்கள் எல்லாம் எப்படி புரட்சித் தலைவரை தங்களுடைய தலைவராக, நம்பிக்கை நாயகனை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம், சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல அமைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் என் அருமை நண்பர்கள் அதைக் கேலி செய்து சித்தரித்து இதிலே சத்து இல்லை உப்பு இல்லை இது ஒரு புதிதான காட்சியாக இருக்கிறது, புரட்சி இல்லை என்று எல்லாம் கூறினார்கள். நண்பர் ஐசரி வேலன் கூறியதைப்போல கதாநாயகன் கதாநாயகியைக் காண்பித்து—அதற்கு முன்னால் திரைப்படக்





காட்சியைக் காண்பிப்பதற்கு முன்னால் மற்றவற்றை திரையில் காண்க என்று புத்தகத்தில் இருப்பது போல என்று கூறியிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் இருக்கும் மக்கள் எல்லாம் இந்த உரையை உண்மையிலேயே ஒரு போர் வாளாகக் கருதுகிறார்கள். ஓரவஞ்சனையை ஒரு சார்புடைய அரசாக இருந்ததை சஞ்சலமற்ற மக்களிடையே சார்புடைய ஒரு சில மக்கள் ஆண்டு கொண்டு இருந்த ஓரவஞ்சனையை இந்த ஆட்சி மாற்றியிருக்கிறது. இந்தப் போர் வாள் ஒரு பெரு வீரனுடைய கையில் இருக்கின்றது. அத்தகைய வீரனால்தான் இந்தக் குறைகள் களையப்படும். ஆகவே ஓரவஞ்சனையைக் களைந்து ஒரு சாராருக்குமட்டும் என்று இருந்த உரிமைகளை மாற்றி நல்லாட்சி மலரவும், அத்தகைய நல்லாட்சி உருவாவதற்கும் நம்பிக்கை அளிக்கும் வகையில் இந்த உரை ஒரு உரைகல்லாக அமைந்து இருக்கிறது என்பதை நம்மால் காணமுடிகிறது.

லஞ்ச ஊழலைக் களைவதையே தனது தலையாய கடமையாக இந்த அரசு கொண்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காண்பித்து எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏதோ கூறினார்கள். கடந்த வரலாற்றைக் காண்பவர்கள் இதை ஒரு தலையாயக் கடமையாகக் கொண்டு இருப்பதை வரவேற்று இந்தக் கருத்து தான் தமிழ் நாட்டின் தலைவிதியை நிர்ணயித்து எங்களை இந்த மன்றத்திலே அமர வைத்து இந்த அரசு அமைத்து இருக்கிறது. ஆகவே லஞ்ச ஊழலை ஒழிப்பது என்ற கருத்து உண்மையிலேயே ஒரு தலையாய கருத்தாகும். லஞ்ச ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு எந்த இடத்திலே என்ன நடக்கிறது என்று ஆராயவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்த உரையிலே கண்டு இருப்பது ஒரு உரைகல்லாக அமைந்து இருக்கிறது. இந்தக் கருத்து தமிழ்நாட்டு மக்களிடையே ஒரு நல்ல நம்பிக்கையை இன்றைக்கு பிறப்பிக்க வைத்து இருக்கிறது.

(முற்பகல் 11.20)

அடுத்து, அருமை நண்பர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி மலர்ந்திருக்கிறது. ஆயினும் கடந்த 17 மாத கால குடியரசுத் தலைவர் ஆட்சியிலே தமிழகத்தில் நடந்த வரலாறுகள், கொடுமைகள், கொலைகள், சித்திரவதைகள் எதுவும் இந்த

ஆளுநர் உரையிலே சித்தரிக்கப்பட வில்லையே என்று கூறினார்கள். இன்றைக்கு நமது மாநிலத்திலே நாட்டுமக்களால் Government of the people, by the people and for the people என்று ஆப்ரகாம் லிங்கன் செட்டிஸ்பர்க்கில் நிகழ்த்திய வீர உரையின் அடிப்படையில் இனிய மக்களாட்சி மலர்ந்திருக்கிற சூழ்நிலையில், இந்த இனிய உணர்வினை மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி மகிழ்வினையூட்டாமல், கடந்தகால கொடுமை வரலாறு களை, பெரிய புராணத்தைப்போல கூறப்படவில்லையே என்றார்கள்.

அருமை நண்பர் திரு. துரைமுருகன் கூறியதுபோல அது ஒரு பாயிரமாக - கடந்தகால வரலாற்றினைச் சொல்லிவிட்டால் காலமே போதாது, அது ஒரு பெரிய புராணமாகத்தான் இருக்கும், அதைவிடுத்து மக்களாட்சியின் இனிய உணர்வுகளை எடுத்துச் சொல்லி, இன்னின்ன செய்ய இருக்கிறோம் என்பதை ஆளுநர் எடுத்துக்கூறினமைக்கு நாம் மகிழ்வினைத் தெரிவித்து, மெத்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து, மொழிக்கொள்கையை எடுத்துக்கொண்டால், உண்மையில் நான் மகிழ்ச்சிகொள்வது எல்லாம் இருமொழி கொள்கையே இந்த மாநிலத்தில் வற்புறுத்தப்படும் என்பது தான். இந்த நாட்டு மக்களின் ரத்தத்திலே, இந்த நாட்டு மக்களின் உணர்விலே காலம் காலமாக இருந்துவருகிற உணர்ச்சி இந்தித் திணிப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ப தாகும். இந்த உணர்வினை மதித்து அவை முன்னவரவர்கள் இன்றைக்கு திட்டவட்டமாகக் கூறினதை நான் பாராட்டுகிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது, அவைமுன்னவர் இந்தி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டால் எத்தகைய நடவடிக் கையும் எடுக்க இந்த அரசு தயங்காது நம்முடைய இருமொழிக் கொள்கைக்கு மாறுபட்ட அதை எதிர்க்கும் என்பதாக உறுதியாக இருமொழிக்கொள்கை பின்பற்றப்படும் என்று தெரிவித்திருப்பதற்கு என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை நண்பர் திரு. லத்திப் அவர்கள் கல்லூரியில் நான் படிக்கும்போது எனக்கு முதல் வகுப்பில் படித்தவர்கள். திரு. துரைமுருகன் அவர்கள் என்னுடன் இணைந்து படித்தவர். என்





னோடு போராட்டத்தில் இணைந்து ஈடுபட்டவர். அத்தகைய உணர்வில் இருப்பவர்கள், இந்தி எந்தப் பக்கமாகத் திணிக்கப்பட் டாலும் அதை எதிர்ப்பதிலே ஒன்றாய் நின்று தமிழகத்தின் உணர் விலே ஊறி நிற்கிற கொள்கையினை, நமது உயிருக்குயிரான கொள்கையினை, அன்று அவர்கள் நமக்குத் தந்த கொள்கையினை என்றென்றும் காப்பாற்றுவோம், எத்தகைய போராட்டத்திலும் கலந்துகொள்வோம் என்று அறிவித்திருப்பது, அவைமுன்னவர் அதை திட்டவட்டமாக இன்று அறிவித்திருப்பது மகிழ்வதற்கு, பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். அவை முன்னவர் அவர்கள் கூறியதை எண்ணி எண்ணி புளகாங்கிதம் அடைகிறோம். அதனை எண்ணிப் பாராட்டுகிறோம்.

அடுத்து, இந்த உரையில் காணப்படுவது எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய நலன்கள் செய்யப்படும் என்ப தாகும். ஏழை எளிய மக்களால் உருவாக்கப்பட்ட அரசு இது. அமைச்சரவை இது. பல்லாண்டு காலமாக அவர்கள் கேட்டு வந்திருப்பது எல்லாம் குடிதண்ணீர் வசதி கொடுங்கள், பாதை வசதி கொடுங்கள் என்பதுதான். அவைகளை எடுத்துக்கொண்டால் உண்மையிலே கடந்தகால அரசு செய்தது என்ன என்று பார்க்கிறபோது விம்மி விம்மி அழவேண்டிய நிலையில்தான் இருக்கிறோம்.

நாங்கள் தேர்தலுக்காக அங்கங்கே சென்றபோது அருமை நண்பர்கள் தங்கள் தங்கள் அனுபவங்களை எல்லாம் எடுத்து வைத் தார்கள். அங்கங்கே உள்ள ஏழை எளிய மக்கள் தங்களுக்குப் பொன்வேண்டும் என்று கேட்கவில்லை. பொருள் வேண்டுமென்று கேட்கவில்லை. குடிக்கத் தண்ணீர் தாருங்கள் என்றுதான் கேட்கிறார்கள். நடக்கப் பாதை வசதி செய்துதாருங்கள் என்றுதான் கேட்கிறார்கள்.

தேர்தல் காலத்தில் ஒரு கிராமத்திற்கு நான் இரவு 11 மணிக்குச் சென்றிருந்தேன். முஸ்லிம் மக்கள் வாழ்கிற பகுதி அது. விஸ்வக்குடி, அன்னமங்கலம் பகுதிக்குச் சென்றிருந்த போது அங்கிருந்த மக்களின் மன உறுதியைப் பார்த்தேன். அவர்களது உள்ளத் துணிவைப் பார்த்தேன். எனினும் வாழ்க்கையில் நம்பிக்கையற்று இருந்த நிலையையும் கண்டேன்.

[திரு. எஸ். வி. இராமசாமி] [1977 ஜூலை 14

அவர்கள் பகுதியிலே கூட்டம்போட்டு, என்னையும் அழைத்து சென்று ஒரே ஒரு கருத்தைத்தான் சொன்னார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற எங்களுக்கு இந்த ஒன்றையாவது செய்துகொடுங்கள் என்றார்கள். அதாவது அன்னமங்கலம் ஏரி, அதைச் செப்பனிட்டு பாசனத்திற்கு வசதியுள்ளதாகச் செய்துதாருங்கள் என்றார்கள்.

அதுபோல கல்பாடி என்ற ஊருக்குச் சென்றிருந்தேன். தேர்தலுக்கு இரண்டு நாட்கள் முன்பாக. அங்குள்ளவர்கள் நாங்கள் யாருக்குமே ஓட்டுப்போடமாட்டோம் என்று சொல்லி விட்டதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் வந்து சொன்னார்கள். அவர்களிடம் சென்று நான் கேட்டபோது, நாங்கள் பலகாலமாக ஒரு கோரிக்கையை வைத்து வலியுறுத்தி வந்தும் எங்கள் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. சாதாரண பாதைப் பிரச்சினை, குடிதண்ணீர் பிரச்சினை கூடக் கவனிக்கப்படவில்லை என்று மிக வருத்தத்தோடு சொன்னார்கள். இத்தகைய சாதாரண, குடிதண்ணீர் பிரச்சினைக்கு இது சாதாரண குடிதண்ணீர் பிரச்சினைதானே என்று விடாமல் இந்த அரசு அதில் முதல் கவனம் செலுத்தும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அங்கே புளிந்தலை என்ற ஊர் இருக்கிறது. அது சிறிய ஊராக இருந்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்லும்போது மிகவும் மகிழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள். அங்கே ஒரு அணைக்கட்டு திட்டத்தினை அமைக்க சர்வே செய்யப்பட்டு, ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டு, அதை நிறைவேற்ற வேண்டுமென்கிற கோரிக்கை வலியுறுத்தப்பட்டும் அந்தத் திட்டம் கிடப்பில் கிடப்பதாக அறிகிறேன்.

ஆறாயிரம் ஏக்கர் பகுதி நிலத்தை நல்ல முறையில் சாகுபடி செய்வதற்கு அது மிகவும் அருமையான திட்டமாகும். அது அண்ணா அவர்களால் உவந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமாகும். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற முறையில் இந்த ஆளுநர் உரையில் அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.



1977 ஜூலை 14] [திரு. எஸ். வி. இராமசாமி]

வழக்கறிஞர் என்ற காரணத்தால், திரு. லத்தீப் அவர்கள் கூறியதுபோல 'டெட் ரிலிப் ஆக்ட்' என்பது ஒரு தொடர் கதையாக இருந்து வருகிறது. சட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு சட்டவடிவம் தரும்போது மூன்று திங்களுக்கு நாங்கள் நீட்டிக்கலாம் என்று இருந்தோம் என்றார்கள். ஆனால் அதற்கு ஒரு முடிவு காணவேண்டும்.

கடன் கொடுத்தவர்களும் வாங்கியவர்களும் உண்மையிலேயே சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 'புவர் க்ரெடிட்டர்ஸ்'-ம் இருக்கிறார்கள். எனது கட்சிக்காரர், ஒரு மூதாட்டி தன்னிடமிருந்த ரூ. 4,000-யையும் கொடுத்துவிட்டு இன்று ஒரு காசுகூட இல்லாமல், சாப்பிட சோறு இல்லாமல் அவதியுற்று ஒரு இல்லத்தில் இன்று வேலைக்காரியாக வேலை செய்து வருகிறார்கள். ஆகவே அதன் 'டோட்டல் இம்பாக்டை'க் கண்டுபிடித்து அதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். இந்தப் பிரச்சினை குறித்து பல வழக்கறிஞர்களும் வக்கீல் குமாஸ்தாக்களும் என்னிடம் கூறியுள்ளார்கள். இந்த அரசு இதன் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, என் தொகுதியில் (மணியடிக்கப்பட்டது) ஒரு கல்லூரிகூட கிடையாது. நாற்பது மைல்களுக்கு அப்பால்தான் ஒரு கல்லூரி இருக்கிறது. ஆகவே பெரம்பலூரில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும்.

ஐம்பது கல் கடந்துதான் எங்கள் பகுதியில் இருந்து நீதிமன்றத்திற்கு துறையூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. டெட் ரிலிப் ஆக்டின் தத்துவமே கிராம மக்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்கிற செலவைக் குறைக்க வேண்டும் என்பதுதான். ஆகவே எங்கள் பகுதியில் ஒரு கோர்ட் அமைத்துத்தர வேண்டும்.

மதுவிலக்குத் திட்டத்தின் பேரால் போலீஸ் நிலையங்களில் பெயில் கொடுப்பதன்பேரில் பணம் பெறுகிறார்கள். இந்த நிலை போக்கப்படவேண்டும். (மணியடிக்கப்பட்டது) இந்த உரை மக்களின் குறைகளையெல்லாம் களையும் முறையில் இனித்த உரையாக நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது மக்களுக்கு மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது. நான் இந்த உரையைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

திரு. டி. பி. மு. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துவிடவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

திரு. டி. பி. மு. பெரியசாமி: நான் இந்த மன்றத்திற்குப் புதியவன் என்ற முறையில் மேலும் ஐந்து நிமிடங்கள் எனக்கு ஒதுக்கி தரவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களது ஆங்கில உரையை தமிழில் வடித்துத் தந்து சபாநாயகர் அவர்கள் மூலம் இந்த மன்றத்திற்கு அளித்ததற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த உரையினை ஆங்கிலத்தில் ஆற்றியதற்காக ஆளுநர் அவர்களுக்கும் இந்திய தேசிய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாக நன்றியும் பாராட்டும் உரித்தாகுக.

நாலரை ஆண்டு காலமாக புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திய தர்ம யுத்தத்தின் பயன்தான் இந்தத் தமிழ் உரையை சபையில் படிக்க நேரிட்டது என்பதை சபை நன்கு அறியும்.

ஆளுநர் அவர்கள் உரையில் ஊராட்சி மன்றத் தேர்தலிலும், நகராட்சி மன்றத் தேர்தலிலும் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நடந்து முடிந்த சட்டமன்றத்தேர்தலில் மக்கள் ஆட்சித் தத்துவம் நடைமுறைப்படுத்தப்படும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் கூறியதை அப்படியே வடித்து எடுத்து கொடுக்கக் கூடிய முறையில் நகராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது; நன்றி கூறத் தக்கது.

இப்படி பலவிதமான அறிவிப்புகள் ஆளுநர் அவர்களது உரையில் இருந்தாலும்கூட எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஆளுநர் அவர்களது உரையில் ஒன்றுமே இல்லை, எந்தவிதமான புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன்.





இந்த சட்டமன்றத்தை நாம் ஒரு வழக்குமன்றமாக வைத்துக் கொள்ளாமல், நாட்டு மக்களுக்காக நல்ல பணி ஆற்ற வந்திருக்கிற சபை என்று கருதி பணியாற்றினால், காலம் பொன் போன்றது என்ற கருத்தை மனதில் கொண்டு பணியாற்றினால், எல்லோருடைய கருத்துக்களை வெளியிடவும் நல்லதொரு பணியினை ஆற்றவும் முடியும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்

(முற்பகல் 11.30)

கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சியை மாற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அமைக்க—மக்கள் ஆட்சியை அமைக்க நான் பாடுபடுவேன் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மக்கள் ஆட்சி இந்த நாட்டில் அமைவதற்கு புரட்சித் தலைவர்தான் அடிகோலி விட்டார் என்பதை இப்போது நடந்து கொண்டிருக்கின்ற சட்டமன்ற அலுவல்களை பார்க்கின்றபோது நாம் புரிந்துகொள்ளலாம்.

மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சி தலைவர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு எந்த வகையில் அனுமதி கொடுத்து, அதற்கு எந்த முறையில் பதிலை வைக்கிறார் என்பதைப் பார்க்கும்போது, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நல்ல வாய்ப்பினை நல்கி, மக்களாட்சி தத்துவத்தை எந்த முறையில் நடத்துகிறார் என்பதைப் பார்க்கும்போது நாம் பெருமைப்படுகிறோம்.

ஆளுநர் அவர்களின் உரையில் கூறுகிற படி, நிர்வாக சீரமைப்பில், லஞ்சத்தையும் லாவண்யத்தையும் ஒழித்தாகவேண்டும் என்ற உத்திரவாதம் தரப்பட்டிருக்கிறது. லஞ்சத்தையும் லாவண்யத்தையும் ஒழிப்பதற்கு பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வந்த போதிலும், அதிலும் உடனடியாக பயன்படாமல் போனாலும், புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கின்ற அரசானது நிர்வாக மட்டத்திலாவது உடனடியாக லஞ்சத்தையும் லாவண்யத்தையும் ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய தேசிய பார்வர்டு பிளாக் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கிராம மக்களின் அவல நிலை பற்றி ஆளுநர் அவர்களின் உரையில் கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாக குடி தண்ணீர் பிரச்சினை பின்தங்கிய மக்களுக்கு மிக முக்கியமான பிரச்சினை

யாக இருக்கிறது. கிராமப்புற மக்கள் மட்டுமல்லாது நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற மதுரையில் குடிதண்ணீர் பிரச்சினை மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது என்பதை இந்த சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதன் முதலாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஒரு காலக்கெடு நிர்ணயித்து குடிதண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு கங்கணம் கட்டி, இந்த குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உணவு இல்லாமல் ஒரு மனிதன் ஒரு வாரம்கூட காலத்தள்ள முடியும். ஆனால் குடிக்க தண்ணீர் இல்லாமல் மனிதன் ஒரு நாள்கூட வாழ முடியாது என்பதை நாம் கருத்தில் கொண்டு, நல்ல நோக்கத்தோடு, குடிதண்ணீர் பிரச்சினையை நாம் முதலில் அணுகவேண்டும் என்று இந்த அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி மாநகராட்சி பகுதியாக இருந்தாலும்கூட, மாநகராட்சியில் இருக்கிறோமா அல்லது கடலோரப் பகுதியில் இருக்கிறோமா என்கிற வகையில் மேற்குத் தொகுதி அமைந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மேற்குத் தொகுதி பகுதியானது வைகை ஆற்றுக்கு இரு கரைகளிலும் அமைந்திருக்கிறது. மதுரை வடகரையில், சலவைத் தொழிலாளர்களும், நெசவுத் தொழிலாளர்களும், இன்னொரு கரையில் ஆலைத் தொழிலாளர்களும், ஏழை எளிய மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆலையில் வேலை செய்யக்கூடியவர்கள் காலை 8 மணிக்கு வேலைக்குச் சென்றால்தான் சிறிய ஊதியத்தைப் பெற்று ஓரளவு தம் வாழ்க்கையை நடத்த முடியும். அப்படியிருக்கும்போது, 10 மணிக்கும் தண்ணீர் வர முடியாத நிலைமையில் மதுரை மேற்குத் தொகுதியிலுள்ள மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் கொடுமையும் கொடூரமானதும்கூட என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அவல நிலையைப் போக்குவதற்கு இந்த அமைச்சரவை முன் வந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எடுத்துக்கொள்கின்ற முயற்சிக்கு நான் எதிர் கட்சி வரிசையில் இருந்தாலும், தோழமை உணர்வோடு நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமன்ற



விவாதங்களில் அனைத்து எதிர்கட்சிகளும் தாங்கள் எதிர்க்கட்சிகள் என்று நினைத்துக்கொள்ளாமல், உண்மையான எதிர்க்கட்சியாக நாட்டு மக்களுக்கு நல்லதை செய்ய பாடுபட வேண்டும், அந்த வகையில் எங்கள் கட்சி பாடுபடும் என்பதை நான் தோழமை உணர்வோடு, இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் எங்கு பார்த்தாலும், நெசவாளர்கள் காலனி, அரிஜன் காலனி என்று பல காலனிகள் இருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய குடியிருப்புகள் மிக மோசமாக இருக்கின்றன. என்பதை இந்த அமைச்சரவையில் இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும். அப்படி இருக்கக்கூடிய காலனிகளை மீண்டும் பழுது பார்த்து, அங்குள்ளவர்கள் நல்லமுறையில் வாழக்கூடிய வசதி செய்து கொடுக்குமாறு பொறுப்பளித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரிஜன் காலனி, நெசவாளர்கள் காலனி அமைப்புகளைப் போன்று, சலவைத் தொழிலாளர்களுக்கும் ஒரு காலனி அமைத்துத் தரவேண்டும். மதுரை சலவைத் தொழிலாளர்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதி. அதிலும் வைகை நதியின் இரு புறங்களிலும் அவர்கள் தற்போது வசித்துக்கொண்டு வருகிறார்கள். அந்த வைகை நதியில் வெள்ளப் பெருக்கெடுக்கும் காலங்களில் அவர்கள் எந்த அளவுக்கு அவதிக்கு உள்ளாகிறார்கள் என்பது இங்குள்ளவர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும்கூட, அவர்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரம் காணாததால், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மதுரை மாநகரிலே சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு காலனி அமைத்துத் தருமாறு மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை நகர் ஒரு மாநகராகும். அங்கே ஒரு உயர்நீதி மன்றம் அமைக்க வேண்டுமென்பது தென்பாண்டிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகவும் இருக்கிறது. இந்த அமைச்சர் அவை நிதி நிலை பற்றாக்குறை என்று காரணங்காட்டி அங்கு உயர்நீதி மன்றம் அமைக்காமல் இருந்துவிடக்கூடாது. இன்றைக்கு அங்குள்ள மக்கள் சென்னைக்கு வரவேண்டியுள்ளது; அப்படி வரும்போது பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை எடுத்துக்

கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, மதுரையில் ஒரு உயர்நீதி மன்றம் அமைப்பதற்கு இந்த அமைச்சரவை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகர் 7 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டது. அவ்வளவு மக்கள் வாழக்கூடிய பகுதியில், அரசாங்கத்தின் சார்பாக ஒரே ஒரு பெண்கள் கல்லூரிதான் இருக்கின்றது. இது எவ்வாறு போதுமென்பதை இந்த அமைச்சர் அவை உணர வேண்டும். எனவே, கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், நிதித் துறை அமைச்சர் அவர்களையும் அங்கு மேலும் ஒரு பெண்கள் கல்லூரி திறக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

என்னைத் தேர்ந்தெடுத்த மேற்குத் தொகுதியில், கரும்பாலை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அதேபோல் இந்திராணி நகர் என்ற மற்றொரு பகுதி இருக்கிறது. அங்கு வாழக்கூடிய மக்கள் அனைவரும் ஏழை எளியவர்கள். சுமார் 500 குடும்பங்கள் அங்கு வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்த நேரத்தில் அப்புறப்படுத்தப்படுவோமோ என்ற ஒரு பயம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், இதுவரை அப்புறப்படுத்தப்படவில்லை. ஆனால் எந்த நேரத்திலும் அப்புறப்படுத்தப்படலாம் என்ற பயத்தில், அங்குள்ளவர்கள் தினமும் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண இந்த அமைச்சர் அவை முன்வரவேண்டும்.

இந்தக் கரும்பாலைப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் துப்புறவு மற்றும் சலவைத் தொழிலாளர்களும், நெசவாளர்களும் ஆக இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலத்தை ஜாரி செய்து கொடுத்து, அவர்களின் துயரத்தைப் போக்க இந்த அமைச்சர் அவை முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும். ஏழு ஏழு நிமிடங்கள் எடுத்துக்கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னை சேதுராம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.





***திரு. கே. பன்னை சேதுராம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் இங்கே ஆற்றிய உரையின்மீது நன்றி சொல்கின்ற தீர்மானத்தை ஆதரித்து, நானும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

கடந்த 6 தினங்களாக ஆளுநர் அவர்களின் உரைமீது எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். விமர்சனம் செய்தார்கள்.

(முற்பகல் 11.40)

அந்த உரையிலே எதுவுமே இல்லையென்று குறை சாடினார்கள். ஆளுநர் உரையிலே இப்படிக் குறை சாடியதற்கு காரணம் ஜனநாயகத்திலே ஏற்பட்டுள்ள மாற்றம் என்பதை நாம் எல்லோரும் மிக நன்றாக உணர்ந்துள்ளோம். ஜனநாயகத்திலே ஆளும் கட்சியாக இருக்கின்ற கட்சி எதிர்க்கட்சியாகவும், எதிர்க் கட்சியாக இருக்கின்ற கட்சி ஆளும் கட்சியாகவும் வருகின்ற தன்மை இயற்கையாகும். இங்கே ஆளும் கட்சி எதிர்க்கட்சியான காரணத்தால் கவர்னர் உரையிலே எதுவுமே இல்லை என்று சாடி வருவதைக் கடந்த ஆறு தினங்களிலே நாம் எல்லாம் உணர்ந்தோம்.

கவர்னர் அவர்களுடைய உரையிலே நீதிமன்றங்களில் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கு இலவச சட்ட உதவி கொடுக்க இந்த அரசு முன் வந்திருக்கிறது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கடந்த அரசும், அதற்கு முன்னாலே இருந்த அரசுகளும் அதைச் செய்யத் தவறியது. ஏழை எளியவர்களுக்கு மருத்துவத் துறையிலே எந்த அளவுக்கு உதவி இருக்கின்றதோ அதைப் போல் சட்டத் துறையிலும், நீதி மன்றங்களிலே ஏழை எளியவர்களுக்கு இலவச உதவி இல்லாத காரணத்தால் ஆயிரக்கணக்கான லட்சக் கணக்கான ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் மீது பொய் வழக்குகள் போடுகின்ற நேரத்திலே பண வசதி இல்லாத காரணத்தால் ஏழை எளிய மக்கள் அந்த வழக்குகளின் மீது நீதிமன்றங்களில் எதிர்த்து வாதிட முடியாத காரணத்தால் அந்தக் குற்றங்களை ஒப்புக் கொண்டு சிறைச்

சாலைக் கம்பிகளை என்னைக்கூடிய அளவுக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே நல்ல நிலைமை ஏற்பட வேண்டு மென்பதற்காக இலவச சட்ட உதவி கொடுக்க அரசு முன் வந்திருப்பது குறித்து ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இங்கே பேசிய எதிர்க்கட்சி மாண்புமிகு உறுப் பினர்கள் அத்தனை பேரும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகளுக்கு மானியம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எந்த ஒரு திட்டமும் எந்த வரிசையில் இருந்து வந்தாலும் நல்ல திட்டமாக இருந்தால் ஆதரிக்க வேண்டியது கடமையாகும். பேரறிஞர் அண்ணா அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். "மாற்றான்தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்று.

நான் மெத்தப் பணிவோடு ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்ட வீரர்களுக்கு மானியம் கொடுக்கவில்லை என்று பேசுகின்ற அந்த உறுப்பினர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே உயிரைப் பணயமாக வைத்து, தன் தேக்குமரத் தேகங்களைத் தீக்கிரை யாக்கிய சிங்கத் தமிழன் சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன், வீரப்பன், முத்து போன்ற அந்த வீரர்களுக்கெல்லாம் இதுவரை ஆண்டு முடிந்த அரசு ஒரு சிறிய நினைவுச் சின்னம் கூட எழுப்ப வில்லை என்பதை அவர்கள் மனதில் வைத்துப் பேச வேண்டு மென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் இப்படிப்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்ற நேரத்தில் நடை பெற்று முடிந்த ஆட்சியை நடத்திய எதிர்க்கட்சித் தலைவர் களிடத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுவதெல்லாம், இங்கே அவர்கள் டாக்டர் கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி, கருணாநிதி கலையரங்கம், கருணாநிதி அங்காடி, கருணாநிதி விளையாட்டு மைதா னங்கள், கருணா நெல் என்று தன்னுடைய சொந்தப் பெயரையே விளம்பரப்படுத்துகிற அளவில் சர்க்கார் கட்டடங்கள், சர்க்கா ருடைய மாளிகைகளில் அவருடைய பெயரை வைத்திருக்கி றார்கள். இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே உயிர்விட்ட தியாகிகளின் பெயர்களை வைத் திருக்கலாம்.





அதை விட்டுவிட்டு இப்படியெல்லாம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயருக்கு நல்ல பெயர் எடுத்துக் கொடுக்கின்ற வகையில், அறிஞர் அண்ணாவை மறக்காத வகையில் நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்து, தங்களுடைய பெயர் களுக்குப் பதிலாக பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயர்களை கல்லூரிகளுக்கும், கலையரங்கங்களுக்கும், சர்க்கார் மாளிகை, கட்டடங்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் வைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. கே. கபாலி: உறுப்பினர் பேசும்போது, இந்திக்காக உயிர்விட்டவர்களுடைய பெயர்கள் எங்கேயும் வைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய பெயர்கள் சென்னையிலும் மற்ற இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தனிப்பட்டவர்களுடைய பெயர்கள் சர்க்காருடைய அலுவலகங்களிலும், மாளிகைகளிலும் கட்டடங்களிலும் இருக்கக்கூடியதில் கருணாநிதி என்ற பெயரை எதிர்க்கட்சித் தலைவரே ஒப்புக்கொண்டு அந்தப் பெயர்களை நீக்கி விட்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை வைக்கும் என்னுடைய கருத்துக்கு ஒப்புதல் அளிப்பார்கள் என்று நம்பு கிறேன்.

எங்களுடைய தொகுதியிலே கொடைக்கானல் வட்டமும், பெரியகுளத்தில் பாதியும் சேர்ந்து இருக்கிறது. கொடைக்கானல் கிட்டத்தட்ட 7 ஆயிரம் அடிகளுக்கு மேலே உள்ள பகுதியாகும். அங்கே 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர் இந்த நாட்டிற்கு வந்த நேரத்திலே தார் ரோடு போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் இரண்டு நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம்: சென்ற முறை அமைச்சர் களாக இருந்தவர்கள் எல்லாம் கொடைக்கானலுக்கு வந்தால் அங்கேயுள்ள கோகினூர் மாளிகைக்குச் சென்று விடுவார்கள், ஆனால் அந்தப் பகுதிக்குப் பக்கத்தில் உள்ள 5, 6 மைல் தூரத்தில் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்றது கிடையாது,

[திரு. கே. பண்ணை சேதுராம்] [1977 ஜூலை 14

அந்தப் பகுதிகளிலே நல்ல ரோடு வசதிகள் கிடையாது, குடிநீர் வசதி கிடையாது என்பதைச் சொல்லி அங்கே சாலை வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அங்கே சிறிய சிறிய நீர்த் தேக்கங்களையும் Minor Irrigatiou Scheme அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இங்கே வைக்கப்பட்டுள்ள ஆளுநர் உரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம். நன்றி.

* திரு. சௌ. வே. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ள இருமொழிக் கொள்கை பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. அதற்காக நான் ஆளுநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகளுக்கு வேலையில்லாத நாட்களிலே மாற்றுவேலை கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது அதையும் நான் வரவேற்கிறேன். அதுவும் அண்ணாவின் ஆட்சி தொடர்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

அதைப்போலவே ஊராட்சி மன்றங்களிலே உள்ள தலைவர்கள், நகரசபைத் தலைவர்கள், ஒன்றியங்களின் தலைவர்கள் ஆகியவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கிற முறை கொண்டு வரப்படும் என்று சொல்லியிருப்பது இங்கே அண்ணாவின் ஆட்சி மீண்டும் அமைந்திருக்கிறது என்பதையும் அண்ணாவின் கனவு நனவாக்கப் பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

நெசவாளர்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் இந்த மாமன்றத்திலே ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் பாதி நாட்கள் வேலைவாய்ப்பு இருக்கிறது, வேலையில்லாத நாட்களில் அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு புரட்சித் தலைவர் அவர்களின் இந்த அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்ற கருத்தை நான் நெசவாளர்களின் பிரதிநிதி என்ற முறையிலே இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.50)



1977 ஜூலை 14] [திரு. சௌ. வே. வரதராஜன்]

அடுத்து, தற்பொழுது செயற்கைப் பட்டு நூல் ஆகியவற்றின் விநியோக முறையிலுள்ள குறைபாட்டால் நெசவாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் செயற்கைப் பட்டு நூல் சரியாகக் கிடைப்பதில்லை. வெளிமார்க்கெட்டில் விற்கும் விலைக்கு வாங்கி உற்பத்தி செய்தால் அதிகப்படியான விலை கொடுக்க வேண்டியிருப்பதால் நஷ்டம்தான் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் விநியோக முறையிலுள்ள குறைகளேயாகும்.

இங்கு இப்பொழுது செயற்கைப் பட்டு விநியோகத்திற்கென்று 'தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி' என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். அது விநியோகிக்கும் முறையிலே மிகப்பெரிய மோசடி நடைபெறுவதாக அறிகிறேன். நெசவுக்கும் தங்களுக்கும் சம்பந்தமே இல்லாத பேர்வழிகள் சிலபேர் இந்த அமைப்புகளின் மூலம் நூலையும், பட்டையும் பெற்று வெளிமார்க் கெட்டிலே அதிக விலைக்கு விற்றுக் கொள்ளையடிக்கிறார்கள் இதனால் உண்மையான நெசவாளர்கள் அதை வாங்கிப் பயன் படுத்த முடியாத நிலைமையிருக்கிறது. 'ஜெனியுன் யூசருக்கு', உண்மையாகப் பயன்படுத்துகின்றவர்களுக்குத் தேவையான பட்டு நூல் கிடைப்பதில்லை. காரணம், அந்தக் கமிட்டியின் தலைவர் ஒரு டீலர். உண்மையாகப் பயன்படுத்துகின்ற நெசவாளி இல்லை. அதிகமான பட்டு நூல் பல சங்கங்களின் மூலம் ஒருசிலர் தங்களுக்கிடையில் பங்கிட்டுக்கொண்டு அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதித்து வருகிறார்கள். இதனால் உண்மையான நெசவாளிகள் உபயோகிப்பதற்கு முடியவில்லை. இதற்குச் சான்று ஒன்றைக் கூற முடியும்.

இப்படிச் சம்பாதித்த ஒருவர் வருமான வரி அதிகாரிகளால் சோதனையிடப்பட்ட பொழுது அந்த அதிகாரிகளிடத்தில் கொடுத்த வாக்குமூலமே சான்று. தான் இந்த முறையிலே சம்பாதித்தேன் என்ற வாக்குமூலத்தையே வருமான வரி அதிகாரிகளிடத்தில் கொடுத்ததாக அறிகிறேன். இந்த விநியோக முறை பதிவேடுகளைப் பரிசிலனை செய்தால் கண்டிப்பாக அவர்கள் நடத்தியுள்ள இந்த அட்டூழியங்கள் மிக நன்கு தெரிய வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. செள. வே. வரதராஜன்] [1977 ஜூலை 14

மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கு 60, 75, 100 என்ற நூல் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால் உண்மையாகவே அதை உபயோகிப்பவர்களுக்கு அது கிடைப்பதில்லை. 120, 200, 500 என்று இப்படிப்பட்ட நூல்களைக் கொடுத்து, அதை அவர்கள் பயன்படுத்தாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது.

இப்படி வெளி மார்க்கெட்டிலே விற்று கள்ள மார்க்கெட் ஏற்படுத்தும் நிலைமைகளை உருவாக்கி வருகிறார்கள். அவர்கள் உபயோகமில்லாத பல சங்கங்களை வைத்துக்கொண்டு, 60, 75, 100 நூல்களைக் குறைந்த விலைக்குத் தங்களுக்கு, பல சங்கங்களுக்கு எடுத்துக்கொண்டு கள்ள மார்க்கெட் மூலம் விற்று நிறையப் பணம் சம்பாதித்து வருவதாகத் தெரிகிறது.

ஆகவே, இந்தக் குறைகளை இதற்கு முன்னால் ஆட்சியிலிருந்து இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவரது ஆட்சியில் இது சம்பந்தமாகப் பல புகார்கள் கூறப்பட்டதாகத் தெரிகிறது. அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி கூறியதாகவும் அறிகிறேன். ஆனால் யாருடைய நலன்களைக் கருதி இந்தப் பிரச்சினையில் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இதன் மூலம் பல பெரிய மனிதர்கள் எப்படிச் சம்பாதித்தார்கள் என்று சேலம் மாவட்டத்து மக்களை விசாரித்தால் நன்கு தெரியவரும். யார் யார் எவ்வளவு இலாபம் அடைந்தார்கள் என்பதையும், அந்த விநியோகக் கமிட்டியை எப்படித் தக்க வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதையும் நன்றாக அறிய முடியும்.

அப்படி, இந்த அப்பாவிகள் பூனைகள் ஆப்பத்தைப் பங்கிடுவதற்காக குரங்கினிடத்தில் சென்று நியாயம் கேட்கப் போய் ஆப்பத்தையே இழந்ததைப்போல, குரங்கு தின்றுவிட்டு ஏப்பம் விட்டதைப்போல, இன்றைக்கு நெசவாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் ஒன்றும் கிடைக்காமல் ரீஜினல் கமிட்டி என்று இவர்கள் ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற குறையை இந்த மாமன்றத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

முந்தைய அரசு நெசவாளர்களிடம் வாய்ஜாலம் பேசியதே தவிர வேறு எதையும் செய்யவில்லை. இந்தமாதிரியான நடவடிக்கைகளைக் கொண்ட இந்தக் கமிட்டியைக் கலைத்துவிட்டு



1977 ஜூலை 14] [திரு. செள. வே. வரதராஜன்]

உண்மையான உபயோகிப்பாளர்களின் தலைமையின்கீழ் கமிட்டியை அமைத்தோ அல்லது அரசின் நேரடிப் பார்வையின் மூலமோ செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செயற்கைப்பட்டு விநியோகம் சம்பந்தமாக சென்ட்ரல் கமிட்டியைத் தமிழ்நாட்டிற்கு என்று கையெழுத்து வாங்கியோ அல்லது மத்திய அரசாங்கத்திடம் வாதாடியோ பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று நெசவாளர் பிரதிநிதி என்ற முறையில் இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதல்வர், நமது புரட்சித் தலைவர், தொழிலாளர் துயர் துடைக்க, நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க, வாங்கி உபயோகிப்போருக்கும் நியாயம் கிடைக்க நிச்சயமாக வழி செய்வார் என நம்புகிறேன்.

கவர்னர் உரையிலே குடி நீர் பிரச்சினையைத் தீர்க்க முன்னுரிமை கொடுத்திருப்பதை வரவேற்கிறோம். சேலம் மாவட்டத்திற்குக் குடிநீர் அளிக்க ரூ. 1½ கோடி ஒதுக்கியிருப்பதை வரவேற்று, சேலம் மக்களின் துயர் தீர்க்க வகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்தில் பெருமாபாளையம் காட்டேரி என்ற ஏரி இருக்கிறது. சென்னைக்குப் புழலேரி இருப்பதைப் போல், சேலம் நகருக்குக் குடி நீர் பிரச்சினையைத் தீர்க்க அந்த ஏரி உதவும். அதுபற்றி முந்தைய அரசிடம் எவ்வளவோ தெரிவிக்கப்பட்டது. ஆனால், அங்குள்ள பெரிய மனிதர்களின் தலையீட்டினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. ஆகையால், புரட்சித் தலைவர் அவர்களின்கீழ் அமைந்துள்ள இந்த அரசானது யாருடைய தயவுக்கும் தலை சாய்க்காமல் கண்டிப்பாக அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூரிலிருந்து இரண்டாவது பைப் லைன் போடப்பட்டும் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை. அதையும் இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாநகரிலே வீட்டு வரி அதிகமாக உள்ளது. உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மதுரை மாநகரிலே வீட்டு வரி அதிகம் உள்ளதை மறு பரிசீலனை செய்யப் போவதாகக்

கூறியிருக்கிறார்கள். இங்கே சேலத்திலுள்ள நெசவாளப் பெருமக்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் வீட்டு வரியைக் குறைத்து நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின்கீழ் அமைந்துள்ள இந்த அரசு எத்தனையோ நல்ல திட்டங்களைக் கொண்டு வந்ததனால் தமிழகம் தழைத்தோங்கும் என்று உறுதி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி அறிவிப்பு தீர்மானத்திற்கு எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்த திருத்தங்களை ஆதரித்து ஒரு சில சொல்ல ஆசைப்படுகிறேன்.

இலஞ்ச ஊழலை ஒழிப்பது சம்பந்தமாகவும், நியாய விலைக் கடைகள் திறப்பது சம்பந்தமாகவும் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க அங்கங்கு கிராமப் பகுதிகளிலே தொழில்களை ஆரம்பிக்க திட்டங்கள் போடுவதாக சொன்னதையும் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படும் என்று சொன்னதையும் நீண்ட நெடுநாட்களாக மக்கள் சொல்லி வந்த ஊராட்சி, ஒன்றிய, நகராட்சித் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டு வந்தமைக்கும் நான் என்னுடைய வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரையிலே சொல்லாமல் விடப்பட்ட விஷயங்களைத் தங்கள் மூலமாக சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய குடியரசுத் தலைவருடைய ஆட்சியின் பொழுது—அவசர நிலைப் பிரகடனத்தால்—தமிழ் மக்களுக்குக் கிடைத்த சில பலன்கள் கூறப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசாட்சியிலே இருந்தது. அந்த ஆட்சி அவசர நிலைப் பிரகடனத்தைத் தங்களுக்குச் சாதகமாக எப்படியெல்லாம் பயன்படுத்தினார்கள் என்பது இப்பொழுது ஆளுங்கட்சியிலே இருப்பவர்களுக்கும் தெரியும், நமக்கும் தெரியும். அவசர நிலையைப் பயன்படுத்தி, எப்படி தங்களுக்கு





விரோதமானவர்கள் மீதெல்லாம் வழக்குகள் பதிவு செய்தார்கள் என்பதும் தெரியும். தங்கள் கோரிக்கைகளை முன் வைத்துப் போராடிய தொழிலாளர்கள் மீதும், மாணவர்கள் மீதும், விவசாயிகள் மீதும் பொது மக்கள் மீதும் எந்தவிதமான அடக்குமுறை துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்தார்கள் என்பதையும், மக்களை பாதிக்கக் கூடிய முறையிலே எப்படி நடத்தினார்கள் என்பதையும் இந்த நாடு நன்கு அறியும். அவர்கள் ஆட்சியிலிருந்த பொழுது, 7 மாத அவசர கால ஆட்சியிலே இந்த மாதிரி பல காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டதன் காரணமாக, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக, ஏழை எளிய மக்களுக்கு விரோதமாக நடந்து கொண்டதன் காரணமாக, தமிழகத்திலே உள்ள மக்கள் எல்லாம் இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டுமென்று கருதியது அனைவருக்கும் தெரியும். அவசர காலத்தில், ஜனாதிபதியினுடைய ஆட்சியை அமுல்படுத்தி, இந்த தி.மு.க. அரசை நீக்கியதை மக்களெல்லாம் வரவேற்றார்கள். நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் வெளியிட்ட தெளிவான அந்த முடிவுகளை நாம் அறிவோம். இந்த மாதிரி

(நண்பகல் 12.00)

நிலைமைகள் எல்லாம் ஏற்படுகிற நேரத்தில் அந்த நிலைகள் எல்லாம் மாறுகின்ற வகையில் அவசர கால பலன்கள் சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கிடைத்தது. படியரிசி 5 ரூபாய் 6 ரூபாய் என உயர்ந்த காலத்திலே எல்லா மக்களுக்கும் நியாயமான விலையில் கிராமத்திலே உள்ள அத்தனை குடும்பங்களுக்கும் 30 கிலோ அரிசி மாதா மாதம் கிடைக்கின்ற அளவு நடவடிக்கை இருந்தது நமக்குத் தெரியும். கொள்ளை லாபக்காரர்களையும் கள்ள மார்க்கெட்டுக்காரர்களையும் அந்த நேரத்தில் கைது செய்ததும் நமக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, அது சாதாரண ஏழை எளிய மக்களுக்குப் பலன் ஏற்பட்டதும் நமக்குத் தெரியும்.

முன்னாலே கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் சரியாக இயங்காமல் ஆளும் கட்சியினுடைய ஸ்தாபனமாக ஆக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும். அறநிலைய அமைப்புகள் பூராவும் ஊழல் மன்றங்களாக ஆக்கப்பட்டது எல்லாம் உங்களுக்குத் தெரியும். இதை எல்லாம் நீக்க வேண்டுமென்பதற்காக ஒரு

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஜூலை 14

சீரான நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக அப்போது நாங்களும் சொன்னோம், இப்போது ஆளுங்கட்சியிலே இருக்கக் கூடியவர்களும் சொன்னார்கள்.

குடியரசுத் தலைவர் ஆட்சி அன்று மக்களுக்குப் பல உரிமைகள் கொடுத்தது. மீண்டும் அந்தப் பலன்கள் கிடைக்க வழி செய்ய வேண்டும். விலை உயர்வு காரணமாக கள்ள மார்க்கட்டுக்காரர்களும் கொள்ளை லாபக்காரர்களும் மீண்டும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விலையை உயர்த்துகின்ற போராபத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதை இந்த சபைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த மார்ச்சு மாதம் அரிசி குவிண்டால் 180 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 250 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. பருப்பு 240 லிருந்து 340 ஆக உயர்ந்திருக்கிறது. துவரம் பருப்பு 225 ரூபாயிலிருந்து 340 ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி விலைவாசி உயர்ந்து கொண்டே வருகிறது.

விலைவாசியைக் குறைக்க நியாய விலைக் கடைகளை திறக்கப் போகிறோம் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறது. அத்தனை கிராமங்களுக்கும் அரிசி மட்டுமல்ல, கோதுமை மட்டுமல்ல, அத்தியாவசியமான பொருள்களை வினியோகம் செய்யப் போகிறோம் என்று சொல்லக் கூடிய அதே நேரத்தில் இடைத் தரகர்கள் லாபத்தைக் குறைக்கப் போகிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இடைத் தரகர்கள் எதற்காகத் தேவை என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். அத்தியாவசிய பொருள்களின் மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று கீழே வினியோகிக்கின்ற முறையிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வினியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்போது பல இடங்களில் விவசாயிகள் வாங்கிய கடன்களைத் திரும்பப் பெற ஜப்தி போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. முதலமைச்சர் கூறும்போது சொன்னார்கள் ஜப்தி நடைபெறாது என்று. நேற்றைய முன்தினம் கூட ஜப்தி நடந்திருக்கிறது. தந்தி வந்திருக்கிறது. குறிஞ்சாகுளம் கிராமம்,



1977 ஜூலை 14] [திரு. சோ. அழகர்சாமி]

சிங்கம்புணரி வட்டாரம் ஆகிய இடங்களில் ஜப்தி என்ற பேரால் அதிகாரிகள் தாறுமாறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் கொடுமைப்படுத்தப்படக் கூடிய அளவுக்கு காரியங்கள் நடைபெற்றன. அதை எல்லாம் தடுத்து நிறுத்தக் கூடிய வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடிநீர் சம்மந்தப்பட்ட மட்டில் அவசர நிலைக் காலத்தில் 100-க்கும் அதிகமான ஆழ் குழாய் துளைக் கருவிகள் மூலம் குழாய்க் கிணறுகள் தோண்டி பல கிராமங்களுக்கு வசதிகள் செய்யப்பட்டன. நீண்ட நெடுங்காலமாக தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்ட பகுதிகளில் தண்ணீர் சீராகக் கிடைத்தது. ஆனால் இன்னும் பல கிராமங்களுக்கு அந்த வசதி செய்யப்படாமல் இருக்கிறது. யுத்த கால நடவடிக்கை எடுத்தது போல இந்தப் பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து மிக அவசரமாக செய்ய வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதைச் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி இந்த உரையிலே குறிப்பிடாமல் பல விஷயங்கள் இருக்கின்றன. என்.ஜி.ஓ.க்களுக்கு 3 ஆவது சம்பளக் கமிஷன் அமைப்பது பற்றி கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. குறிப்பிட்டிருக்க வேண்டும். என்.ஜி.ஓ. இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இறக்காமல் இருந்தாலும் ரிட்டையர் ஆகும்போது அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். ரிட்டையர் ஆவதற்கு 4, 5 நாட்களுக்கு முன்னாலே கூட மனைவி கணவனைக் கொலை செய்தாள், தற்கொலை செய்து கொண்டார்கள் என்றெல்லாம் செய்தி வருகிறது. 10 ஆயிரம் ரூபாய்க்காக இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடந்திருக்கிறது. ஓய்வு பெறுகிற நேரத்திலே அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற வகையில் அந்த சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1386 ஆம் பசலி முந்தைய குத்தகை பாக்கி இருந்தால் அதற்காக நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. வறட்சியாக, தண்ணீர் வடிக்கப்படாமலும்,

தண்ணீர் இல்லாமலே பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் இருக்கின்றன. அவர்களால் குத்தகை செலுத்த முடியவில்லை. அதைக் காரணமாக வைத்து ரெவின்யூ கோர்ட்டுகளிலும் பல இடங்களிலும் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

திருத்துறைப்பூண்டி, திருச்சி, நெல்லையிலே திருச்செந்தூர் அதேமாதிரி புதுக்கோட்டையில் பல பகுதிகளில் இருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றன. குத்தகை பாக்கி இருந்தால் எந்தக் காரணத்தைக் கொண்டும் நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று சட்டம் இருக்க வேண்டும். ஆனால் குத்தகை பாக்கிக்காக வெளியேற்றுகிறார்கள்.

கிராமத்திலுள்ள மக்கள் நல்வாழ்வு காண வேண்டும் என்ற அடிப்படையில்—நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் 100-க்கு 70 சதவிகித மக்கள் கிராமத்தில் வாழ்கிறார்கள் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு நிம்மதி அளிக்க வேண்டுமானால் இந்த நிலவெளியேற்றத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்திலுள்ள மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமானால், கிராமத்திலுள்ள மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால், உண்மையாக இன்றைக்கு இருக்கும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்று சொன்னால், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நில உச்ச வரம்புச் சட்டத்தை—ஒரு குடும்பத்திற்கு 15 எக்கர் தான் என்று சட்டத்தை சரியான முறையில் அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் செய்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிக அளவில் கிடைக்கும். அவர்கள் வாழ்க்கைத் தரமும் மேம்படுவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றாத வரையில் நாம் சரியான வேலைவாய்ப்பை அவர்களுக்கு கொடுக்க முடியாது. உண்மையான ஜனநாயக முறையை அமைக்க முடியாது என்பதைத் தெரிவித்து, இந்த நில உச்சவரம்புச் சட்டத்தை சரியான முறையில் அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்த விநியோகத்தை மக்கள் கமிட்டி மூலம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கேரளா போன்ற மாநிலங்களில்





செய்துள்ள முறையும் அதுதான். வங்காளத்திலும் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அந்த முறையில் தமிழ்நாடு அரசும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரியாக கடன் நிவாரணம் சம்பந்தமாக பல சட்டங்கள் சென்ற காலத்திலே கொண்டு வரப்பட்டு இருந்தாலும் சரியான முறையில் நிவாரணம் கிடைக்கவில்லை. சில இடங்களில் அடகு கொடுத்த பாத்திரங்களை 1-க்கு ½ கொடுத்து வாங்கி யிருக்கிறார்கள். சில இடங்களில் இன்றைக்கு லேவாதேவிக்காரர்கள் மறுபடியும் புத்துயிர் பெற்று அவர்கள் பெற்ற கடனுக்கு வட்டி மேல் வட்டி போட்டு வசூலிக்கிற முறையில் முயற்சிகள் நடந்து வருகிறது. அந்த முறையில் லேவாதேவிக்காரர்கள் நடந்து வருகிறார்கள். இந்த நிலைமையைத் தவிர்க்க ஒரு முழுமையான கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி இன்றைக்கு நம்முடைய கிராமப்புறங்களில் கடன் சம்பந்தப்பட்ட மட்டில் இன்று தொடர்ந்து நிவாரணம் சரியான முறையில் நியாயமான முறையில் கிடைக்கவில்லை. எத்தனை சட்டம் வந்தாலும் அதே நிலைதான் இருக்கிறது. ஆகவே, இருக்கின்ற சட்டங்களைத் திருத்தி ஒரு முழுமையான சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களிலே வரி விதிப்பு முறைகளிலே பல விதிக்கக் கூடாத முறைகளிலே வரி விதிப்பு செய்து இருக்கிறார்கள். பெரியார் நீர்ப்பாசன எக்ஸ்டென்சன் ஏரியாவில் திருப்பத்தூர், சிவகெங்கை போன்ற இடங்களில் 6,000 எக்கருக்கு நீர்ப்பாசனம் தண்ணீர் விடாமலேயே எக்கருக்கு ரூ. 50 என்று வரி விதிப்பு செய்து இருக்கிறார்கள். அதை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. ஆகவே, அதைத் தடுக்க அரசு உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 13,000 பேர் இன்றைக்கு வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள். நான் இரண்டு நாளைக்கு முன் நெல்லைக்குச் சென்று இருந்தேன். அங்கே அந்த ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருந்தார்கள்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஜூலை 14

அவர்களைச் சந்தித்து விஷயத்தை அறிந்து, அவர்களிடத்தில் கூறினேன். அரசாங்கத்திடம் இதைச் சொல்லி அவர்களுக்கு வேண்டிய நிவாரணத்தை அளிக்க நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன் என்று கூறி வந்தேன்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு பயிற்சி பெற்றவர்களுக்கு இன்னமும் வேலை கிடைக்காமல் இருக்கிறது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பயிற்சி பெற்றவர்கள் எப்படியோ சிபார்சு பெற்று வேலை பெற்று விடுகிறார்கள். ஆகவே, இந்த வேலை கொடுக்கிற முறையில் மாறுதல் தேவை. அது மாத்திரமல்லாமல், ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரம் 1:20 என்ற அடிப்படையில் மாற்றி அமைக்கப்படவேண்டும்; அந்த முறையில் மாற்றி அமைத்தால் பல பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சமீப காலத்தில் சில ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் மூடிவிட்டார்கள். ஆகவே புதிதாக வருகிறவர்களுக்கு பிரச்னை இல்லை. பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கும் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் இளைஞர் அணி என்று அமைக்கப்பட்டது. ஆனால் அது இன்றைக்கு கலைக்கப்பட்டு விட்டது. அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும். அவர்கள் வேலை கிடைத்து விட்டது என்று சொல்லி திருமணம் செய்து கொண்டு குடும்பம் என்று ஆனபிறகு இன்றைக்கு வேலை இல்லாமல் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை கிடைக்கத் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரித்துறை போன்ற பல துறைகளில் இருக்கும் ஊழியர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அவர்கள் அப்படி ஈராண்டு ஓராண்டு என்று வேலை பார்த்து இருக்கிறார்கள். அவர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 14] [திரு. சோ. அழகர்சாமி]

இந்த நாட்டிலே வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் முறையில் புதிதாக பலதொழில்களை ஆரம்பிக்கும் நிலை இன்றைக்கு இருப்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை பின்தங்கிய மாவட்டமாக விளங்கும் நெல்லை மாவட்டத்தில், சங்கரன்கோவில், கோவில்பட்டி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் போன்ற இடங்களில்—அவைகள் எல்லாம் பஞ்சப் பிரதேசம்—ஒரு ஆண்டு மழை பெய்தால் மூன்றாண்டுகள் மழை இருக்காது. அந்த ஒரு வருஷ மழையை வைத்துத்தான் பிழைப்பு நடத்த வேண்டும்—ஆரம்பித்தால் அந்தப் பகுதிகள் முன்னேற்றம் அடையவும், அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் வாழவும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் வேலை இல்லாத நேரங்களில் மாற்று வேலை கொடுக்கக் கூடிய முறையில் தொழிற்சாலைகள் போன்ற சிறு திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த மாதிரித் திட்டங்களை, பின் தங்கிய பகுதிகளான, கோயில்பட்டி, சங்கரன்கோயில், ஒட்டப்பிடாரம் ஆகிய தாலுகாக்களில் உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதிகமான நெசவாளர்கள் எங்கள் வட்டாரத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 7 மணி வரை தறியில் வேலை செய்து விட்டு இறங்கினால் ரூ. 3 சம்பளம் கிடைப்பது கூட கஷ்டமாக இருக்கிறது. அதுவும் மாதத்திற்கு 25 நாட்களுக்குக் கூட வேலை கிடைப்பதில்லை. இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுவது, கைத்தறித் துணித் தேக்கம். ரூ. 25 கோடி அளவுக்கு துணிகள் தேங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதையெல்லாம் அரசாங்கமே வாங்கி விற்பனை செய்ய வேண்டும். அரசாங்கமோ, மாநிலச் சங்கமோ, அல்லது வேறொரு நிர்வாகமோ, மானியம் கொடுத்தோ, நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற முறையில், நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில், அவற்றை வாங்கி விற்பனை செய்து, தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவும் நியாயமான கூலி கிடைக்கவும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஜுலை 14

போனசைப் பொறுத்தவரையில், இதில் மத்திய சர்க்கார் தான் முடிவு எடுக்க வேண்டுமென்றாலும், 8.33 சதவிதம் போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறை வேற்றினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை. மேற்கு வங்க அரசு இத்தகைய கைதிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். அரசியல் கைதிகள், தங்கள் சொந்த நலன்களுக்காக சிறை சென்றவர்கள் அல்ல. அரசியல் காரணங்களுக்காக சிறை சென்ற இவர்களை, சிறையில் அடைத்து பழி வாங்கக் கூடிய போக்கை கைவிட்டு, இவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்காகப் போகக்கூடிய தண்ணீரைத் திருப்பி விட்டால், இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற வறட்சிப் பிரதேசங்கள் நல்ல செழிப்பான பகுதிகளாக மாறும். கடந்த காலத்தில், இரு மாநிலங்களுக்கிடையே சுமுக மான உறவு இல்லாத காரணத்தால் இதில் போதுமான அளவு கவனம் செலுத்தப்படவில்லை. இப்போது அமைந்துள்ள அரசு இதில் கவனம் செலுத்தி, பேச்சுவார்த்தைகள் நடத்தி, இதில் நல்லதோர் முடிவு கண்டால், மேற்கண்ட மாநிலங்கள் செழிப் படையும் என்பதோடு அங்கே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பும், வேலை கிடைக்காத காரணத்தால், வேலைக்காக தஞ்சை போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலையில் மாற்றமும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, பிரியாறு பம்பையாறு திட்டம் போன்ற திட்டங்களை எடுத்து நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உரையில் கண்டுள்ள மற்ற நல்ல அம்சங்களை அமல்படுத்து வதிலும், குறிப்பாக, நிலச்சீர்திருத்தச் சட்டம், நியாயவிலைக் கடைகளில் எல்லாப் பொருட்களும் குறைந்த விலையில் கிடைக்க வழிவகை செய்வது—இதைக் குறிப்பிடும்போது தற்போதுள்ள நிலையில், விலைகள் குறையவில்லை. உயர்ந்து கொண்டே போகிறது—எனவே, விலைகள் கட்டுப்பாட்டிற்குள் இருக்க தக்க நடவடிக் கைகள் எடுக்க வேண்டுமென்று கூறி—நல்ல திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.



1977 ஜுலை 14]

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்புக்குரிய துணைத் தலைவ ரவர்களே, இந்த மாநிலத்திலே புதிதாகத் தேர்தல்கள் நடந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவையை அமைத்திருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவைக்கு முதலில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையை அமைப்பதற்கு தமிழகத்திலிருக் கின்ற, கீழ்நிலையில் இருக்கின்ற சாதாரண மக்கள் பெரும் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலே அவர்கள் இந்த அரசிடமிருந்து பெரும் நன்மையை எதிர்பார்க்கிறார்கள். வெகு நீண்ட காலமாக சமுதாயத்தின் அடித்தட்டில் கிடந்து உழல்கின்ற மக்கள் எதிர் பார்ப்பதைப் பூர்த்தி செய்வதற்கான வகையில், வேகமான முறையில் அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கான நட வடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் உருவப் படத்தைத் திறந்து வைப்பதற்கு முதல்வர் அவர்கள் இசைவு அளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

கடந்த நான்கு தினங்களாக இந்தப் பேரவையிலே பல்வேறு விதமான கருத்துக்கள் பேசப்பட்டு வருகிறது. அதிலே மிகக் குறிப்பான கருத்து காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டது, இந்த மாநில அரசைக் கலைத்தது. இதன் மூலம் ஜனநாயகத்தைப் படுகொலை செய்து விட்டார்கள் என்ற கருத்து பலமாகப் பேசப்பட்டது. அந்தக் கருத்திற்குப் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்ற முறையில் உண்மையான சில கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது என்பதுதான் உண்மை. அவசர நிலைமை பிரகடனம் செய்ததற்கு முன்னாலே இந்த நாட்டில் நிலைமை எப்படி இருந்தது? உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஒரு அராஜகமான நிலைமை இருந்தது. எதையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை இருந்தது. எதிர்தரப்பில் இருக்கிற அரசியல் கட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங் களைக் கவிழ்ப்பதற்கு முயற்சிகளைச் செய்தார்கள். எங்கு பார்த் தாலும் பலாத்கார சம்பவங்கள் நடந்தன. இந்த அவையிலேயே

அவை பற்றி எல்லாம் விவாதிக்கப் பட்டிருக்கிறது. அதை விரிவாக நான் இங்கே சொல்லத் தேவையில்லை. அந்த நிலையில் அவசர நிலையைப் பிரகடனம் செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது. அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டதனால் பலாத்கார நடவடிக்கைகள் தடுக்கப்பட்டு, திரும்பத் தேர்தல் கொண்டு வரப்பட்டது.

முன்னாலே பேசிய ஜனதா கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார்கள். தெய்வாதீனமாகத் தேர்தல் வந்தது என்று. தெய்வாதீனமாகத் தேர்தல் வரவில்லை. மத்தியில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் தேர்தலை வைத்து மக்கள் கருத்து எப்படி இருக்கிறது என்பதை உணர்ந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதற்காகத் தேர்தலை வைத்ததே தவிர வேறு ஒன்றும் இல்லை. தேர்தலை வைத்து திரும்ப ஆட்சியிலே மக்களுடைய கருத்துக்கு மாறாக உட்காருவதற்கு அல்ல.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மத்தியில் இருந்த ஆட்சி அவசர நிலை பிரகடனம் செய்தது தவறு என்பதை, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மூலமாக மக்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏற்றுக் கொள்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நாங்கள் கருதுவது--அவசர நிலைப் பிரகடனம் செய்ததை மக்கள் தப்பு என்பதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவசரநிலைப் பிரகடனத்திற்குப் பின்னாலே கொள்கைகளை அமல்படுத்துவதில் தவறு ஏற்பட்டிருக்கிறது. அது மக்களைக் கோபப்படுத்திவிட்டது என்று தான் கருதுகிறேன். அப்படி இருந்தால் தென்னகத்திலுள்ள மக்கள் அவசர நிலையை ஆதரித்தா வாக்களித்தார்கள்? தென்னகத்திலே நடந்த பாராளுமன்றத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சி, அதனோடு சேர்ந்த கூட்டணிக்கு வாக்களித்திருக்கிறார்களே. குறிப்பாக எடுத்துக் கொள்வோம். அவசர நிலையைப் பிரகடனம் செய்தது தப்பு, திராவிட முன்னேற்றக் கட்சி அமைச்சரவையைக் கலைத்து ஜனநாயகத்தைக் கொலை செய்துவிட்டார்கள், காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்கக்கூடாது என்று எல்லாம் பேசினார்கள் என்றாலும் பாராளுமன்றத் தேர்தலிலே நான்கு இடங்களைத்தானே அவர்களால் பிடிக்க முடிந்தது. 35 இடங்கள் அவசரகால நிலையை ஆதரித்த கட்சிக்குத்தானே கிடைத்தது. திராவிட



முன்னேற்றக் கழக அரசை அகற்றியதற்கு ஆதரவாகத்தானே வாக்களித்தார்கள். ஆகவே மக்கள் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ததை எதிர்த்தார்கள் என்று நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முந்திய பாரதப் பிரதமர் அவர்களையும், அவர்களது மகன் சஞ்சய் காந்தி அவர்களையும் மக்கள் எதிர்த்து, தேர்தலிலே அவர்கள் வெற்றிபெறாது செய்தார்களே. மக்கள் அளித்த தீர்ப்பு எதைக்காட்டுகிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது கேள்வி பதில் நேரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து பேசலாம். தயவுசெய்து யாரும் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ரே பரேலி தொகுதியில் இந்திரா காந்தி அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள் என்றால் இன்றைய தினம் அந்தத் தொகுதியில் ஐந்து இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது. அன்று அவர்கள் எப்படி தோற்கடிக்கப் பட்டார்கள் என்றால் வாக்குச்சாவடிகளுக்கு வாக்காளர்கள் போக முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். 10 சதவிகிதம் தான் அந்தத் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகள் பதிவானது. ஆகவே, இந்த நிலைகளை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது வட மாநிலங்களில் திட்டங்களை நிறைவேற்றும் முறையில் அணுகிய முறை மக்களுக்கு கோபத்தை ஊட்டியது. ஆகவே வட மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப் பட்டிருக்கிறது.

ஜனநாயக அமைப்பில் பற்றுக்கொண்டவர்கள் நாம். இன்று இங்கு ஆட்சிக்கு வந்திருக்கிற கட்சியும் ஒன்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஒரு திட்டத்தை நல்லதொரு திட்டம் என்று நாம் கருதினாலும் மக்கள் தலைமீது அதைத் திணிக்காமல் அதை மக்கள் ஏற்றுக்கொள்ளவைப்பது ஜனநாயக பூர்வமான ஆட்சியின் கடமை; இல்லை என்றால் மக்கள் கோபித்துக் கொள்வார்கள் என்பதைத்தான் இது நமக்கு உணர்த்துகிறது. அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்டதற்குப் பிறகு தென் மாநிலங்களில் அதை ஏற்றுக்கொண்டு இருபது அம்சத் திட்டத்தை நல்ல

முறையில் நிறைவேற்றியதன் காரணமாக பல நன்மைகள் மக்களுக்கு ஏற்பட்டுள்ளன என்ற உண்மையை யாரும் மறுத்து விடமுடியாது. கீழ் நிலையில் உள்ள மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் சாமான்கள் நல்ல முறையில் கிடைத்தன என்பதை யாரும் மறுத்துவிடுவதற்கில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தது ஜனநாயக படுகொலை என்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆத்திரம் இருக்கத்தான் செய்யும். ஆட்சியில் இருக்கும் கட்சியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து அகற்றும்போது அவர்களுக்கு ஆத்திரம் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதிலுள்ள நியாயத்தை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அவசர கால நிலை பிரகடனம் செய்தவுடன் திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்படவில்லை. அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்டு ஏழு மாதங்களுக்குப் பிறகுதான் அது கலைக்கப் பட்டது. அவசரநிலை பிரகடனத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தலைவர்கள் எல்லாம் எதிர்த்தார்கள். அப்படி எதிர்த்தவுடன் அந்த அரசைக் கலைப்பதற்கு மத்திய அரசு எண்ணவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டதற்கு பல காரணங்கள் உள்ளன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது குற்றச்சாட்டுக்கள் கொடுக்கப்பட்டன. குற்றச்சாட்டுக்கள் கொடுக்கப்பட்டவுடனே ஒரு அரசின் பேரில் நடவடிக்கை எடுக்கமுடியாது என்ற சம்பிரதாயத்தின் காரணமாக அந்தக் குற்றச்சாட்டுக்களில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பதுப் பற்றி விசாரிக்கப் பட்டு, அவை விசாரிக்கப்படுவதற்கு தகுதியானவை என்ற நிலை ஏற்பட்டபோது சட்டசபையின் ஆயுள் ஒரு மாதம் ஒன்றரை மாத காலம்தான் இருந்தது. ஒன்றரை மாதக் காலத்திற்குப் பிறகும் காலத்தை நீட்டித்துக் கொடுப்பது என்றால் அந்த ஆட்சியை வைத்துக்கொண்டு குற்றச்சாட்டுகளை விசாரிக்கமுடியாது. ஆகவே, காலகெடுவை நீட்டிக்கமுடியாத ஒரு நிலை ஏற்பட்டது.

அப்போது மாநில சுயாட்சிக் கொள்கை வெகு தீவிரமாக வலியுறுத்தப்பட்டு வந்தது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள





வில்லை என்றால் தனித் தமிழ் நாடு கோரிக்கை வளரும் என்று கோவை மாநாட்டில் பேசப்பட்டது. தஞ்சையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இம்மாதிரிப் பேச்சுக்கள் எவ்வளவோ பேசப்பட்டன. இம்மாதிரி பல்வேறு நிலைகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசுக்கு எதிரான நடவடிக் கைகளை மேற்கொண்டிருக்கிறது. அவை தேசிய ஒருமைப் பாட்டிற்கு விரோதமானது, அவை தேசிய ஒருமைப்பாட்டைக் கெடுத்து விடும் என்ற நிலை வளர்ந்து கொண்டிருந்த நிலையில், கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அமைச்சர்களை வைத்துக் கொண்டு விசாரிக்க முடியாது. அது சாத்தியம் இல்லை என்ற காரணத்தால் அந்த அமைச்சரவையைக் கலைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஏன் முழுக் காலத்திற்கு விட்டு வைத்திருக்கக்கூடாது என்ற கேள்வி எழுப்பப்பட்டது. சட்டசபையில் காலம் முடிவடைந்து விட்டால் அதற்கான தேர்தலை வைத்துவிடும் தேர்தல் கமிஷன். சட்டசபைக்கான தேர்தலை தேர்தல் கமிஷன் அறிவித்துவிட்டால் தேர்தல் நடத்துவதைத் தவிர வேறு வழி இல்லை. அப்போதைய நிலைமை பத்திரிகை சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பொதுக்கூட்டங்கள் நடத்துவது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் தேர்தலை நடத்த முடியுமா என்றால் நடத்த முடியாது. ஆகவே தேர்தல் கமிஷன் தேர்தலை அறிவிப் பதற்கு முன்னால் இந்த அரசைக் கலைத்து விடுவதைத் தவிர வேறு வழி கிடையாது. இது சட்ட பூர்வமான நிலை. ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டது. அப்படி கலைப்பதற்கு காரணங்கள் இருக்கின்றன. ஆளுநர் அவர்களுடைய ரிப்போர்ட்டில் அந்த குற்றச்சாட்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. ஆகவே அந்தக் குற்றச்சாட்டு களின் அடிப்படையில் கலைத்தார்கள். அது நியாயம் தான், எந்த விதமான ஜனநாயக படுகொலையும் அல்ல என்பதை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒன்றை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டது, ஜனநாயக படுகொலை என்று குறிப்பிட்டு பேசுகிறார்கள். பாராளுமன்ற தேர்தல் காலத்தில் அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவில் (ஆர்டிக்கிள்) மத்திய அரசு இஷ்டத்தின்படி மாநில

அரசு பயன்படுத்தப்பட மாட்டாது என்று பேசப்பட்டது. ஜனதா கட்சி சார்பில் இவ்விதம் பல தலைவர்கள் பேசியதை நாம் அறிவோம். அதற்குப் பிறகு என்ன நடந்தது?

ஒன்பது மாநிலங்களை எப்படி கலைத்தார்கள்? ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்காக இப்படி கலைக்கப்பட்டது சரியா? அவர்கள் ஒரு படுகொலை செய்தார்கள் என்றால், இவர்கள் ஒன்பது படுகொலை செய்தால் அது என்ன நியாயம்? இதற்கு காரணம் என்ன என்று கேட்டால், பாராளுமன்ற தேர்தல்களில் பெருவாரியான மக்கள் காங்கிரசுக்கு எதிராக வாக்களித்துவிட்டார்கள் ஆகவே, காங்கிரஸ் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சட்டசபையின் காலம் ஆறு ஆண்டுகள் என்று காலவரம்பு நீடித்தாலும், அதில் 7 அரசுகள் நீடித்து வந்தது, அதில்லாமல் உத்திர பிரதேசம், ஒரிசா இரண்டுக்கும் காலவரம்பு இருந்தது. இதையும் சேர்த்துத் தான் கலைத்தார்கள். மக்கள் எதிராக வாக்களித்துவிட்டார்கள் என்று சொல்லி படுகொலை செய்தார்கள். இதற்கு அடிப்படை காரணம் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு போதிய வாக்குகள் இல்லை. அதற்காக ஒன்பது மாநிலங்களை எதற்காக கலைக்கவேண்டும்? அங்கே ஆளுநர் அவர்களுடைய ரிப்போர்ட் ஏதாவது இருந்ததா? சட்டம் ஒழுங்கு பாதிக்கக் கூடிய அளவில் ஏதேனும் இருந்ததா? எதுவுமேயில்லை. அப்படியில்லாத நேரத்தில் கவர்னர் அவர்களுடைய ரிப்போர்ட் எதுவுமில்லாமல், தன்னிச்சையாக கலைத்தது மோசமான செயல் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் தோற்று விட்டது. ஆகவே தான் சட்டசபைகளை கலைத்தோம் என்று சொல்வது அவர்கள் சொல்வது போல் அது நியாயம் என்று வைத்துக்கொண்டாலும், சென்னை மத்திய தொகுதியில் வெற்றி பெற்ற மதிப்பிற்குரிய இராமச்சந்திரன் அவர்கள் இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கிறார். இப்போது சட்டசபை தேர்தலில் ஐந்து இடங்களில் அவர்கள் வரவில்லை என்பதற்காக மத்திய அமைச்சர் இப்போது ராஜினாமா செய்ய முடியுமா?





அதுபோல், ரேபரேலி தொகுதியில் வெற்றி பெற்றார் ராஜ்நாராயண் அவர்கள். அதே தொகுதியில் ஐந்து இடங்களில் இப்போது காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது, ஆகவே ராஜ்நாராயண் அவர்கள் இப்போது ராஜினாமா செய்து விட முடியுமா? இதை நீங்கள் தயவு செய்து சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 42-வது அரசியல் சட்டத்திருத்தம் அப்படியே கைவிடப்பட வேண்டும் என்று பேசப்பட்டது. அதில் பல குறைபாடுகள் இருக்கலாம். இப்போது இருக்கின்ற ஆட்சிக்கு அது விரோதமாக இருந்தாலும் கூட அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமே தவிர, அதை நாம் அறவே விட்டுவிடக் கூடாது. திரு. மதுலிமாயி அவர்களும் கூறியிருக்கிறார்கள். அப்படியே கைவிட வேண்டிய அவசியமில்லை, அதிலுள்ள நல்லவைகள் நமக்குத் தேவை. அதிலுள்ள தீமைகளை விட்டுவிடலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஒரேயடியாக 42-வது திருத்தத்தை கைவிட்டு விடவேண்டும், கைவிட்டுவிட வேண்டும் என்று சொல்வது சரியாகாது. அதில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம் . . .

உதாரணமாக. . . . Sovereign, socialist, secular, democratic, republic என்று சொல்லப்பட்டிருக்கிறது, அதை விட வேண்டுமா? Democratic என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் என்றிருப்பதை விட்டுவிட வேண்டுமா? இது அவசியம் என்பதை நாம் உணருகிறோம். இன்னும் Equal justice, free legal aid to poor. என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஃபண்டமென்டல் ட்யூட்டி" என்றிருக்கிறது. இப்படிப்பட்ட பல முக்கியமான அம்சங்கள் இருக்கின்ற காரணத்தால், இந்த 42-வது திருத்தத்தை அறவே எடுத்துவிட வேண்டும் என்று சொல்ல வேண்டிய தேவையில்லை. இதைப் பரிசீலனை செய்து, தீமைகளை விட்டுவிட்டு, நல்லவைகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் நான் எடுத்துச் சொல்லக்கூடிய கருத்து.

(பிற்பகல் 12-30)

அதோடு, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு வெளியிட்ட செய்தி ஒன்றைப் பத்திரிகையிலே பார்த்தேன். ஜனதா கட்சியும், திராவிட முன்னேற்றக்

கழகமும் சேர்ந்த கூட்டணியும் கலைந்துவிடாமல், நீடித்து நிலைத்திருக்குமானால் இன்னும் அதிகப்படியான இடத்தை இந்தச் சட்டமன்றத்திலே பெற்றிருக்கலாம் என்று தெரிவித்துள்ளதைப் பார்த்தேன். இது நூற்றுக்கு நூறு உண்மை.

ஜனதா கட்சியும், தி.மு.க. கூட்டணியும் நிலைத்து இருக்குமானால் நிச்சயமாக அதிகப்படியான இடத்தைப் பெற்றிருக்க முடியும். ஆனால், இந்தப் பாராளுமன்றத் தேர்தலிலே இருந்த மாதிரி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், காங்கிரஸ், சி.பி.ஐ. ஆகிய அவர்களது கூட்டணி நீடித்திருக்குமானால், இப்போது எதிர்த்தரப்பிலே இவ்வளவு உறுப்பினர்கள் நிச்சயமாக வந்திருக்க முடியாது. மிகக் குறைந்த அளவுக்குத் தான் வந்திருக்க முடியும். இதுவும் நூற்றுக்கு நூறு உண்மை.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு கூட்டணி சர்க்கார் அமைப்பது அவர்கள் நோக்கமல்ல என்பதைத் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். ஆகவே அந்த நிலையில் உள்ளவர்கள் கூட்டணி சேர்த்துக்கொள்ளத் தயாராக இல்லை. ஆகவேதான், நான் எங்கள் கணக்கை எடுத்துச் சொன்னேன். அப்படித் தயாராக இல்லாத நிலையில். ஜனதாவும், திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டணி சேர்ந்திருந்தால் சர்க்கார் அமைத்திருக்கலாம், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் என்று சொன்னேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நேற்றையத் தினம் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. உமாநாத் அவர்கள் இந்த அவையிலே பேசிய நேரத்திலே நான் இல்லை. அவர் காங்கிரஸ் கட்சியைப் பற்றி விமர்சிக்கலாம்; அதன் கொள்கையில் தவறு இருக்கிறது என்றுகூட சொல்லலாம். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அவர்கள் காங்கிரஸ் கட்சி ஒரு விஷப் பாம்பு; அந்த விஷப் பாம்பை அடித்துக் கொன்றுவிட வேண்டும் என்றெல்லாம் பேசியதாகக் கேள்விப்பட்டேன். இம்மாதிரியான வார்த்தைகளை அவர்கள் உபயோகித்தால், நாமும் அவ்வாறு பேச முடியும். பதில் சொல்ல முடியும். மார்க்சிஸ்ட் கட்சியும் ஒரு விஷப் பாம்பு; அதை விட்டுவைத்தாலே தீமை என்று சொன்னால், ஒருவருக்கு ஒருவர் திட்டிக்கொள்ளக் கூடிய வகையிலே அது





பயன்படுமே தவிர, வேறு ஒன்றுக்கும் உதவாது. ஆகவே, அம்மாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர் எங்களை விஷப் பாம்பு என்று சொன்னதற்காக, நான் தெருவிலே போனால் அடித்து விடப் போகிறார்களா; நாமும் அவர்களை அடித்துவிடப் போகிறோமா? அப்படி ஒன்றும் இடையாது. ஒருவர் பேசும்போது, கருத்துக்களைத் தெரிவிக்கலாமே தவிர, இவ்வாறு தவறான, கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தக் கூடாது. ஆகவே, ஒருவர் பேசும்போது கொஞ்சம் கண்ணியமாகப் பேசவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பலாத்காரத்தில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. ஆனால், அவர்கள் எப்படியோ, எனக்குத் தெரியாது.

தலைவர் அவர்களே, இந்தச் சட்டசபைத் தேர்தலுக்குப் பிறகு நடந்த சிலவற்றைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகின்றேன். பொதுவாக. சட்டசபை தேர்தல் அறிவிப்புகள் அறிவித்த உடனேயே அமைச்சர் அவை அமைப்பதுதான் பழக்கமாக இருந்து வருகிறது. பின்னாலே வருகின்றவர்கள், இந்த நல்ல முறையைப் பின்பற்ற வேண்டுமென்பதற்காகக் குறிப்பிடுகின்றேன். தேர்தல் முடிந்து, அறிவிப்புகள் அறிவித்த 15 நாட்கள் கழித்துத்தான் இந்த அரசு அமைச்சரவை அறிவிப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலதாமதம் ஏன் என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும் மத்தியிலே ஜனதா கட்சியின் தேர்தல் முடிவு 22-ம் தேதி அறிவிக்கப்பட்டது. அவர்கள் 26-ம் தேதியே அமைச்சர் அவை அமைத்தார்கள். நான்கு நாட்களிலே அறிவிப்பு வந்தது. ஆனால், இங்கே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தேர்தலிலே வெற்றி பெறுவோம் என்று நிச்சயமாக நம்பிக்கை இருந்தது. அதிலே சந்தேகமே கிடையாது. அப்படி இருந்தும் 15 நாட்கள் கழித்து அமைச்சர் அவைபற்றி அறிவிப்பு வந்தது. முதலிலேயே அவர்கள் 'லாப்ஸ்' ஆகியிருப்பதைக் காட்டுகிறது. இனி இவ்வாறு இருக்கக் கூடாது. காரியங்களை சுறுசுறுப்பாகவும், உடனடியாகவும் ஆற்றவேண்டும். இதிலே மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். காரியங்கள் ஆற்றுவதில் தாமதப்படுத்தக் கூடாது என்பதற்காக இதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1977 ஜூலை 14

அடுத்து, ஆளுநர் அவர்கள் உரை ஆரம்பத்திலேயும் சரி, இந்த அமைச்சர் அவை அமைக்கப்பட்ட பின்னரும் சரி, நம் முதலமைச்சர் அவர்களின் லட்சியங்களைக் கொண்ட ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது.

'நிர்வாகத்திலே லஞ்ச ஊழல் களையப்படும்; தூய்மையான, நாணயமான, திறமையான நிர்வாகத்தை அளிப்போம்' என்று கூறினார்கள். இது நாம் எல்லாம் வரவேற்கக்கூடியது. நிர்வாகத்திலே தூய்மை இல்லையென்றால், ஊழல் இருக்குமானால், லஞ்ச ஊழல் இருக்குமானால் நியாயம் கிடைக்காது. அது அத்தியாவசியமாகச் செய்ய வேண்டிய ஒன்று. இதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்கள் என்று மக்கள் எல்லாம் எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் லஞ்சம், ஊழல்களைக் களைவோம் என்றுதான் கூறினார்களே தவிர, யாரும் களையமாட்டோம் என்று இதுவரை கூறவில்லை. 1947-ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பிறகு அமைக்கப் பட்ட அரசில் இருந்து, மாநில அரசுகளாக இருந்தாலும் சரி, மத்தியிலுள்ள அரசாக இருந்தாலும் சரி, பொறுப்பேற்றவுடன் எல்லாவற்றையும் சரி செய்து விடுவோம் என்றுதான் கூறினார்கள். அன்றைய மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள் சபதமே கூறினார்கள் 'இந்த நாட்டில் லஞ்சத்தை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என்று. ஆனால் லஞ்சம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஊழல் இருந்து கொண்டு தான் இருக்கிறது. என்ன காரணம்? ஏன் அப்படி இருக்கிறது? ஏன் அதைக் களைய முடியவில்லை?

அடிப்படையில் இதற்கான காரணங்களைக் கண்டு பிடித்துக் களையாத வரையில் அதைச் செய்ய முடியாது. முன்பு ஊழல், லஞ்சத்தை ஒழிப்போம் என்று சொன்னவர்கள் அதற்கே பலியாகி விட்டதையும் நாம் பார்த்தோம். எவ்வளவோ கமிஷன்கள் எல்லாம் போட்டார்கள். அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் என்று மத்தியிலிருந்தும் மாநிலங்களிலிருந்தும் போட்டார்கள். நிர்வாகத்தைச் சீர்திருத்தி அமைத்தால்தான் லஞ்சத்தை ஒழிக்க முடியும் என்று அவர்கள் அறிக்கை வந்தார்கள். நிர்வாகத்தைச் சீர்திருத்த அவர்கள் வால்யூம் வால்யூமாக அறிக்கை தந்திருந்



1977 ஜூலை 14] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தார்கள். அதை அமலாக்குவதில் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. இருக்கின்ற அமைப்பை வைத்துக் கொண்டு அதைச் செய்வது சாத்தியமில்லை. அறிக்கைவிடுவது மட்டும் போதாது. எண்ணியதை எப்படி அமலாக்குவது, எப்படி செயற்படுத்துவது, செயல்படுத்துவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் என்ன என்பதைக் கண்டு பிடித்து அந்த நோயைப் போக்க நோயின் அடிப்படையைக் கண்டு பிடித்தால்தான் அது முடியும் என்று நான் கருதுகிறேன்.

இம்மாதிரி ஊழல் லஞ்சம் ஏற்படக் காரணம் இன்றைக்கு இருக்கிற நிர்வாக அமைப்புதான். இந்த நிர்வாக அமைப்பை அடியோடு மாற்றியமைக்கவில்லை என்றால் இதைப் போக்குவது ரொம்பச் சிரமம். இன்றைக்கு இருக்கின்ற அதிகாரிகள் அந்த நிலையிலே வளர்ந்து வந்தவர்கள்—நான் குறை கூறவில்லை. அடியோடு அமைப்பை மாற்றியமைத்தால்தான் இதைப் போக்க முடியும். இருந்தாலும் நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். அதற்கு எங்களுடைய ஒத்துழைப்பு பரிபூரணமாக இருக்கும். நீங்கள் அதிலே வெற்றி பெற வேண்டுமென்ற எங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பாசன வசதி. பாசன வசதியிலே தமிழகத்தைப் பொறுத்தவரை காவிரிப் பிரச்சினைதான் மிகப் பெரிய பிரச்சினை. காவிரி நீர்தான் தமிழகத்தின் தலையாய ஒன்று. இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டாக வேண்டும். இந்தப் பிரச்சினை 1974 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாமல் போய்க் கொண்டிருக்கிறது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம், தமிழகத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இருக்கும் ஒப்பந்தம் இருக்கிறதே அது காலாவதியாகிவிட்டதாக யாரும் சொல்லலாம். அதில் காலாவதி ஆகவில்லை. நீடித்திருப் பதாகத்தான் நான் கருதுகிறேன்.

அந்த ஒப்பந்த வாசகம் அப்படித்தான் இருக்கிறது. அந்த ஒப்பந்தத்திற்கு எதிராக தமிழகத்திற்கு எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டு விடக் கூடாது. இன்று வரை பாசனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலங்கள் தண்ணீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. அதை அமைச்சரவை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்போது இருக்கின்ற நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில் பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது.

பேச்சுவார்த்தை நடத்தும்போது இதை அடிப்படையாக வைத்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இதிலே, வேண்டிய கருத்துக்கள் இருக்கின்றன. அதை அடிப்படையாக வைத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு இதைக் காலதாமதமாக விடக்கூடாது. விரைவிலே இந்த ஒப்பந்தத்தை முடிப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். இதைக் காலதாமதம் ஆக விட விட ஆண்டு தோறும் நாம் எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள், எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்கக்கூடிய நிலைமைக்கு ஆளாகிவிடக்கூடும், அந்த நிலைமை வரவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்தபடியாக, இன்னொரு திட்டம் நீண்டநாட்களாகச் சொல்லப்படுகிற திட்டம், பாண்டியாறு—புன்னம்புழா திட்டம். மேற்குத் தொடர்ச்சிமலையிலிருந்து தண்ணீர் கேரள மாநிலத்தில் சென்று கடலிலே கலந்து வீணாகக்கூடிய நிலைமை ஏற்படாமல் அந்தத் தண்ணீரைத் திருப்பி தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்கிற ஒரு நல்ல திட்டம் ஆகும். நீண்டநாட்களாக கோவை மாவட்டத்திலே உள்ளவர்கள் இதற்காகப் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் பேச்சு வார்த்தை பேசிப் பேசி இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். இந்தத் திட்டத்தையும் விரைவிலே கொண்டுவருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும்.

அடுத்து, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது. நாம் ஆழ் குழாய்க்கிணறுகள் போடுகிறோம். பில்டர் பாயின்ட் போடுகிறோம். இந்த நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிற பகுதி தஞ்சைப் பகுதிதான். அங்கே வேகமாக இந்த நிலத்தடி நீர் பயன்படுத்தப் படுகின்ற திட்டம் கொண்டுவரப்படுமானால் அங்கே கோடை காலத்திலே 5 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் 2 போகம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படும். தஞ்சையிலே தான் நஞ்சை நிலம் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறபோது தமிழகத்திலே உள்ள மக்களுக்கு உணவுப்பொருட்களைக் கொடுக்கிற அந்த மக்கள் வருவாய் குறைவாகத்தான் இருக்கிறது, அவர்களுடைய வருவாயை உயர்த்தக்கூடிய முறையிலே ஒரு போகம் சாகுபடி



யாகிற நிலத்தை 2 போகமாக மாற்றக்கூடிய வழி இதன் மூலம் ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே 5 லட்சம் ஏக்கர் நிலங்களை இரண்டு போக சாகுபடிக்குக் கொண்டுவர இந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்தி நல்ல நிலைமைகளை ஏற்படுத்த முடியும். இதற்காகத் தேவைப் படுவது 10 கோடி ரூபாய்தான், அதிகமான தொகை கிடையாது. அதைக்கூட மூலதனமாகப் போட்டால் போதும், செலவிடுவது அல்ல, அதாவது ரெவின்யூ எக்ஸ்பென்டிச்சர் அல்ல, கேபிடல் தான். ஆகவே 10 கோடி ரூபாயை அரசாங்கம் ஒதுக்கினால் 5 லட்சம் ஏக்கர் நிலங்களை இரண்டு போகமாக்க முடியும். இதிலே பாராமுகமாக இருக்ககூடாது. இதை நான் பல ஆண்டுகளாகப் பேசி வருகிறேன். முன்னாலே இருந்த அரசும் இதிலே கவனம் செலுத்தி வேகமாகத் திட்டம் போட்டது. அதை விரைவு படுத்தவேண்டும். போர் வெல், பில்டர் பாயின்ட்ஸ் எல்லாம் போட்டால் போதும். 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகாது. இன்றைக்குக் காலையிலே ஒரு கிணற்றின் வேலை ஆரம்பித்தால் நாளைக்குக் காலையிலே தண்ணீர் எடுக்கலாம்.

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களுடைய கருத்து நம்முடைய மாநில நன்மைகளுக்குக் குந்தகமாகி விடக்கூடாது என்ற முறையிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே கர்நாடக மாநிலக்காரர்கள் எடுத்துச் சொல்கிற கூற்றும் அதுதான். தஞ்சை மாவட்டத்தில் அடி நீரைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் காவிரித் தண்ணீரைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள், அவர்களுடைய வாதத்திற்கு ஒத்துக்கொள்வதுபோல தஞ்சை மாவட்டத்தில் உள்ள அடி நீரை எடுத்துக் கொண்டு பயன்படுத்தலாம் என்று பேசுவது கர்நாடக மாநில அரசின் வாதத்தை வலுப்படுத்துவதாக அமையும். அந்த வாதம் சரியான வாதம் அல்ல. காவிரியில் நீர் இருந்தால்தான் சீப்பேஜ் ஏற்பட்டு அடி நீர் கிடைக்கமுடியும். காவிரி வறண்டுவிடுமானால் அடிநீர் எடுக்கமுடியாது. கர்நாடக அரசுக்கு அனுசரணையான முறையிலே நம்முடைய வாதத்தை எடுத்து வைக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அது சரியான வாதமும் ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றி, தொடர்ந்து காவிரியின் நீர் வந்தால்தான் தான் அது ஏரியில் ஆகுமே தவிர அது எடுக்க எடுக்கக் குறையாத வற்றாத சமுத்திரமல்ல, நான் சொல்வது கோடை காலத்திலே அதைப் பயன்படுத்த முடியும். இப்போது தண்ணீர் வரவில்லை என்றால் கோடை காலத்திலே தண்ணீர் எடுக்கமுடியாது. கர்நாடக அரசு இதை வைத்து வருஷம் பூராவும் சாகுபடி செய்ய வேண்டும் என்று கருதினால் அது தவறு.

அடுத்தபடியாக, இன்றைக்கு உணவுப் பிரச்சினை இருக்கிறது. உணவு உற்பத்தியிலே நாம் அதிக அக்கறை காட்டுகிறோம். உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டுக்குக்கூட நல்ல முறையில் 73 இலட்சம் டன் உணவு தான்யம் உற்பத்தியானது. அப்பொழுதே அரசுக்குப் பற்றுக் குறை, சங்கடங்கள் இருந்தன. அதற்குக் காரணம் என்னவென்றால், உற்பத்தியை அதிகமாகச் செய்தாலும்கூட சீரான முறையில் விநியோகிப்பதற்கான விநியோக அமைப்பு இல்லாத காரணத்தால், பதுக்கல் போன்ற காரியங்களால் செயற்கைப் பஞ்சம் ஏற்பட்டுவிட முடியும். இந்தச் செயற்கைப் பஞ்சம் ஏற்பட்டுவிட முடியாதபடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

உற்பத்திப் பெருக்கம் என்று செயல்பட்டால் மட்டும் போதாது. அதோடு சீரான விநியோகத்தையும் ஏற்க வேண்டும். இதிலே நியாய விலைக் கடைகளைத் திறக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கு நன்றி: நியாய விலைக் கடைகளை அதிகப்படுத்துவதை நான் பாராட்டுகிறேன். ஆனால் 16,000 கடைகள் திறக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்; அது போதாது. ஆரம்பத்தில் நீங்கள் அப்படிச் செய்யலாம். 5,000 பேருக்கு ஒரு கடை என்று வைத்தால்கூட 50,000 கடைகள் வேண்டும். 10,000 பேருக்கு ஒரு கடை என்று வைத்தால் (மணியடிக்கப்பட்டது) நான் 35 நிமிஷங்கள் பேசியிருக்கிறேன். எனக்கு 45, 50 நிமிடங்கள்கூடக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு 1 மணி நேரம்கூடக் கொடுக்கலாம். ஆகையால் 45 நிமிடங்களாவது கொடுக்க வேண்டும். ஒரு மணியோடு என்னை விட்டால் நான் பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்குப் போகிறேன். 10,000 பேருக்கு ஒரு கடை என்று வைத்தாலும் 25,000 கடைகள் திறக்கவேண்டும். அப்படியே



25,000 கடைகள் திறந்து விட்டோம் என்று சொன்னாலும் போதாது. அவை ஒழுங்கான முறையிலே நடப்பதற்கு வேண்டிய கண்காணிப்பும், ஏற்பாடும் செய்யவேண்டும். போதிய சாமான்கள், அத்தியாவசியப் பண்டங்கள் அந்தக் கடைகளிலிருந்து கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் வியாபாரி நம்மோடு போட்டிபோடுவார். தனியார் கடையை ஒழித்துவிட்டு நாம் கடை போடவில்லை. தனியார் கடைகளும் பக்கத்தில் இருக்கும். நாம் வாங்கி வைத்திருக்கும் சாமான் 9 ரூபாய் என்று வைத்தால், அவர்கள் 8 ரூபாய்க்கு கொடுத்தால் அங்கே போய் வாங்குவார்கள். நாம் 9 ரூபாய் என்று சொல்லி வாங்கி வைத்த சாமான் தூங்கும். இதுதான் அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் நடக்கக்கூடிய நிலைமை. ஆகவே கண்காணிப்போடு இருந்து, தனியார் விற்கும் விலையைவிடக் குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 25 ஆண்டுக்கால வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும்கூட வறுமைக் கோட்டுக்கும் கீழே 59 சதவிகிதம் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. இது உண்மை. இதைப்பற்றி ரொம்ப நாட்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். வறுமைக் கோட்டுக்கும் கீழே 59 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள், அந்த வறுமையைப் போக்க வேண்டும், உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் ரொம்பக் காலமாகப் பேசியாகிவிட்டது. ஆனால் எந்த அளவிற்குச் சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும்.

அந்தத் திட்டங்களெல்லாம், ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டனவே தவிர, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய், ஒரு இலட்சத்திற்கும் மேலான கோடி ரூபாய்களைச் செலவழித்திருந்தும் அடிமட்டத்திலே, கீழ் நிலையிலே வறுமை இருக்கிறது என்று சொல்கிறோம். ஏன் அந்த வறுமையைப் போக்க முடியவில்லை என்பதை ஆராய்ந்தாக வேண்டும். அதில் கோளாறு இருக்கிறது. எனவே மத்திய அரசு புதிய கிராமப்புற வளர்ச்சித் திட்டமாக வைத்துச் செய்ய வேண்டுமென்று

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1977 ஜூலை 14

முற்படுகிறது. அது நல்லது. அப்படிச் செய்தால் பலன் அதிகமாகக் கிடைக்கும்; நமக்கு உதவி கிடைக்கும். அதை வைத்து நாம் வளர வேண்டும்.

70 சதவிதம் பேர் கிராமங்களில் இருக்கிறார்கள். 59 சதவிதம் பேர் மிகேர பாவர்ட்டி லயனில் இருக்கிறார்கள். இதை எப்படிப் போக்குவது? வீட்டுக்கு வீடு போய், வறுமையிலே இருப்பவர்களிடம் மாதம் 500 ரூபாய் தருகிறோம், 1000 ரூபாய் தருகிறோம், வைத்துக்கொள்ளுங்கள், இதை வைத்துக்கொண்டு சாப்பிடுங்கள் என்று சொல்ல முடியுமா? வறுமையைப் போக்குவது என்றால் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும், நியாயமான ஊதியத்தைக் கொடுக்க வேண்டும், அதற்குட்பட்டு வாங்கக்கூடிய வகையில் அத்தியாவசியப் பண்டங்களைக் கொடுக்க வேண்டும். இவ்வளவுக்கும் உத்தரவாதம் செய்தாலொழிய வறுமையைப் போக்க முடியாது, வறுமைக் கோட்டிலிருந்து மேலே உயர்த்த முடியாது. படித்தவர்கள் ஏகப்பட்ட பேர்கள் இருக்கிறார்கள். படிக்காதவர்கள் அதைப்போல 10 மடங்குக்கு மேலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனக்கு வேலை கிடைக்கவில்லை, யாரிடம் போய்ச் சொல்வது என்று தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள உழைக்கக்கூடிய விவசாயக் கூலிகளுக்கு வருடத்தில் 6 மாதங்களுக்கு வேலை கிடையாது. அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கப் போகிறோமா? இதையெல்லாம் எப்படிச் செய்வது? எப்படிச் செய்வது என்றால் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை இருக்கின்ற நிலங்களை வைத்துத்தான் செய்ய முடியும். இருக்கின்ற நிலங்களை அதிகப்படியாக உற்பத்தி செய்யக்கூடியதாக ஆக்க வேண்டும். ஒரு போக சாகுபடி செய்யக்கூடிய நிலங்களை இருபோக சாகுபடி செய்யக்கூடிய நிலங்களாக மாற்ற வேண்டும், இருபோக சாகுபடி செய்யக்கூடிய நிலங்களை மூன்றுபோக சாகுபடி செய்யக்கூடிய நிலங்களாக மாற்ற வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். அங்கே விளைவுகளை அதிகப்படுத்த வேண்டும். அதற்கு இடையூறுகளாக இருப்பவைகளையெல்லாம் அகற்ற வேண்டும். அதுதான் கிராம வளர்ச்சித் திட்டம். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என்று மத்திய அரசிலே முன்னாலே ஒரு



1977 ஜூலை 14] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

திட்டம் கொண்டு வந்தார்கள். அது, இங்கே எங்கே அமுலாக்கப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. எங்கோ ஒரு பகுதியில் அமுலாக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போடப்பட வேண்டுமே தவிர, தமிழ்நாட்டிற்கென்று மொத்தமாகப் போட்டால் எல்லா பகுதிகளுக்குப் போய்ச் சேராது.

(பிற்பகல் 12.50)

ஒவ்வொரு கிராமத்திற்கும் திட்டம் போட்டு அங்கே வளர்ச்சி ஏற்பட காரியங்களைச் செய்ய வேண்டும். அந்தக் காரியங்களைச் செய்ய அங்கே இருக்கிற மனித சக்தியைப் பயன்படுத்தியாக வேண்டும். அந்த மனித சக்தியைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தை கிராம மட்டத்திலே போட்டால் மிக அதிகமான பொருளாதார வளர்ச்சியைப் பார்க்க முடியும். விளைவில் வளர்ச்சி இல்லாமல் விநியோகம் பண்ண முடியாது. உழைப்பில்லாமல் விளைச்சலைப் பெருக்க முடியாது. விளைச்சலைப் பெருக்காமல், பொருளாதார வளர்ச்சி காண முடியாது. பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருந்தால் எல்லோருக்கும் நலம் பயக்கும். அதற்காகத்தான் நகராட்சிகளையும், பஞ்சாயத்துக்களையும் அமைத்தோம். இருந்தாலும் பெரும் பயனைக் காண முடியவில்லை. அதிலே பயனே இல்லையென்று சொல்ல முடியாது.

விரைவாக நிறைவேற்றுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறல்ல. அதற்காக ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டன. அந்த ஊராட்சி மன்றங்கள் ஏதோ செயல்படுகின்றன என்ற நிலைமையிருக்கிறதே தவிர, திட்டங்களை நிறைவேற்ற அவர்களுக்குப் பொருளாதார வசதிகள் கிடையாது. சட்டபூர்வமாக அவர்களுக்கு அதிகாரமும் கிடையாது. ஆகையினாலே அதைச் செய்ய வேண்டும்.

அடுத்து, நகர்ப்புறங்களிலே மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் இருக்கின்றன. சென்ற வருடம் பொட்டல் காடாக கிடந்தது, இப்பொழுது போய் பார்த்தால், 7, 8 மாடி கோபுரங்களாக இருக்கின்றன. இதற்கெல்லாம் அனுமதி கொடுக்காமல் நிறுத்தி, அந்தத் தொகையை கிராமத்திலே செலவு செய்யுங்கள். கிராமப்புறங்களை வளர்த்தால், அங்கேயிருக்கிற வெற்றுக் கூட்டம் இங்கே வராது. அங்கே வேலை கிடைத்தால் அவர்கள்

அங்கேயே இருப்பார்கள். இப்பொழுது கூட எனது தொகுதியான பட்டுக்கோட்டையிலிருந்து ஒருவர் வந்தார். என்னவென்று கேட்டால், கூலி வேலை செய்ய வந்திருக்கிறேன் என்றார். இங்கே, கூலி வேலைக்கு ரூபாய் 2½ கொடுப்பார்களென்றால், வேண்டாமென்று திரும்பிப் போகிறார். இப்பொழுது கிராமப்புறத்திலே சரியான வேலையில்லை.

இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்குத்தான், நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்று கூறியது, காங்கிரஸ் அரசு. அந்த அளவிலே கிராம வளர்ச்சிக்காக சிறந்த நிர்வாக அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மக்களுக்குச் சமூக நல திட்டங்கள் இன்னும் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். இன்றைக்கு முதியோர் பென்ஷன் ரூபாய் 20 கொடுக்கிறார்கள். கேரளாவில் ரூபாய் 40 கொடுக்கிறார்களென்று கேள்விப்பட்டேன். அவ்வளவு கொடுக்க முடியுமா என்பதை ஆலோசிக்க வேண்டும். வயோதிக வயதில், உழைத்து, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வழியில்லாமல், ஒன்றுமேயில்லாமல் இருக்கிறவர்கள் அத்தனை பேருக்கும் கொடுக்கிறார்களா என்றால் கிடையாது. ஒரு தாலுகாவிலே 300 பேருக்குக் கொடுக்கிறார்களென்றால், மனு கொடுத்த பாக்கி பேர்களெல்லாம், யார் சாகப் போகிறான் என்று காத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே உயிரோடு இருப்பவர்கள்—பென்ஷன் வாங்கியவன் சாக வேண்டுமென்று எண்ணுகிற அந்த நிலை—வாங்காது மனு போட்ட மற்றவர்கள் மத்தியில் நிலவுகிறது. அந்த நிலையில்லாமல் அத்தனை பேருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாலே ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஊழியர்களுக்கு நல்ல திட்டத்தை உருவாக்கியது. அலுவலிலே இருக்கும்போது, வேலையில் இருக்கும்போது இறந்து போனால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 கொடுக்க வேண்டும் என்ற திட்டம் கொண்டு வந்தது. நல்ல திட்டம், ஆட்சேபனை இல்லை. ஆனால், கிராமத்திலே இருக்கிறவர்களுக்கு என்ன பாதுகாப்பு? யாராவது செத்தால் அதோடு சரி; யாரும் போய் என்டா செத்தாய் என்று கேட்பதில்லை.

(சிரிப்பு—குறுக்கீடு)





ஆகவே, அவர்களுக்கு இம்மாதிரியான பாதுகாப்பு எப்படி அளிப்பது? அவனும் உழைக்கின்றான். அரசு அலுவலில் இருந்து ரிட்டையர் ஆனால், அவனுக்கு பென்ஷன் கிடைக்கிறது. கிராமப் புறத்திலே கூலி விவசாயி உழைக்கிறான். 55, 60 வயதுவரைகூட உழைக்கிறான். உழைக்க முடியவில்லையென்றால், தெருவிலே பிச்சை எடுக்கிறான். அவனுக்குச் சமூகப் பாதுகாப்பு வேண்டாமா? உழைத்து, உழைத்து, உற்பத்தி செய்து, நாமெல்லாம் வாழ்வதற்கு, இந்த அவையிலே பேசுவதற்குக்கூட உணவு அளிக்கும் அவனுக்குப் பாதுகாப்பு வேண்டாமா?

முன்னாலே ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள், சமூகப் பாதுகாப்பு திட்டம் என்று. அதை நான் பூராவாகப் படிக்கவில்லை. அந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. அது சாதாரண மக்களுக்குப் பெரும் பயன் அளிக்கக்கூடியதாக இல்லை. அதை மாற்றி, மாதம் ரூபாய் 1 கொடுத்தால், ரூபாய் 10,000 கிடைக்கும் என்ற வகையில் செய்தால் நன்மை பயக்கும். நான் மேலெழுந்தவாரியாகச் சொல்கிறேன். ஆழ்ந்து சிந்தித்தால் அது கிராமப்புற மக்களுக்கு செய்கிற பேருதவியாக இருக்கும். உழைக்கும் மக்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் செய்யும் பேருதவியாக இருக்கும்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே சொன்ன கருத்து உயிரோடு இருக்கிறவரை, 60 வயதுக்குப் பின்னாலே பாடுபட முடியாத நிலையில் உதவி தேவை என்ற அடிப்படையிலேதான் கேட்டார்கள். அதிலே நியாயம் இருக்கிறது என்பதை உணர்கிறேன். அப்படிப்பட்டவர்கள் ஒருவேளை இறந்து போய்விட்டால், அவர் குடும்பத்துக்கு அளிக்கும் உதவி என்பது யாருக்குப் பாதுகாப்பாக அமையும் என்றால், அது குடும்பத்திலே உள்ள, உழைக்கக்கூடிய மற்றவர்களுக்குத்தான் பாதுகாப்பாக இருக்குமே தவிர, இறந்து போனதற்குப் பின்னாலே செய்யும் உதவி சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற அடிப்படையிலே, அமைவதல்ல. இறந்து போன பின்னாலே அரசு ஊழியர்கள் குடும்பத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அதே முறை இங்கும் கொண்டு வரப்படுமானால், முதலிலே அங்கத்தினரவர்கள் சொன்ன நோக்கம் நிறைவேறுவதற்கு இது வாய்ப்பளிக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் சொன்னது, அரசு ஊழியர் ஒருவர் இறந்து விட்டால், அவருடைய குடும்பம் பின்னால் சங்கடப் படாமல் இருக்கக் கொடுப்பதுபோல், கிராமத்திலே உழைக்கக் கூடிய விவசாயி, இறந்துவிட்டால், கொடுக்க வேண்டுமென்பது. விதவைத் தாயிருப்பாள், 4 வயது, 5 வயது குழந்தைகள் இருக்கும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற விதத்திலே இதைச் சொன்னேனே தவிர வேறு விதத்தில் அல்ல.

விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்திருக்கி றோம். அதை அமுல்படுத்துவது எப்படி? அது எங்கே செயல் படுத்தப்படுகிறது? எப்படி அமுலாக்கப்படுகிறது என்பதை கண்காணிக்கின்ற முறையிலே ஒவ்வொரு ஊரிலும் விஜிலன்ஸ் கமிஷன்ஸ் போல அதிகாரிகளைப் போட முடியுமா? நாம் சட் டத்தை இயற்றி விடுவது சுலபம். இயற்றப்பட்ட சட்டம் சரியாக அமுலாக்கப்படுகிறதா என்பதை அரசு கண்காணித்தாக வேண்டும். நிர்ணயம் செய்யப்பட்ட கூலியாவது அவர்களுக்குக் கிடைக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும். எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் அச்சட்டத்தினை அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசாங்கத்திலே மேல்நிலையிலே இருக்கிறவர்களுக்கு விவசாயிகளிடத்திலே நிறைய பணம் குவிந்திருப்பதாக எண்ணம். ஆகவே, டெவலப்மென்ட் வரியைப் போட்டு, அந்தப் பணத்தை வாங்கவேண்டுமென்று கருதுகிறார்கள். என்னுடைய அனுபவத் திலே, சட்டத்தை ஏமாற்றி வைத்திருக்கிறவர்களிடத்திலே வேண்டுமானால் அதிகப் பணம் இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 5 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நிலத்தின் பெயரால் வரிகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ரத்து செய்ய வேண்டும். புதிதாக, கடலை போட்டால் வரி போடுகிறார்கள். இந்த வரிகள் ரத்து செய்யப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்பேரிலே பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. முன்னாலே உறுப்பினர்கள் குறிப்பிட் டார்கள், இந்தக் குத்தகைக்காரர்களுக்கே நிலத்தைச் சொந்த





மாக்க வேண்டுமென்ற சட்டம் நிறைவேற்றப்பட்டதே. அது பல காரணங்களால் அமுலாக்கப்படவில்லை, அப்படியே நிறுத்தப்பட் டிருக்கிறதென்று. அந்தச் சட்டத்தைத் திரும்பக் கொண்டு வந்து, அமுலாக்குவதற்கான முயற்சியைச் செய்யவேண்டும். நிலச் சீர் திருத்தச் சட்டம் என்பது மிகத் தலையாய சட்டம். ஒரு நிலத்தின் பேரிலே இரண்டு பேர் உரிமை வைத்திருக்க முடியாது. உழுபவ னுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே குத்தகைதாரர் இருக்கக் கூடாது. குத்தகைதாரர் என்பதை மாற்றி உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கி, அரசு, உழுபவன் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அது எல்லோராலும் நீண்ட காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை. அந்தக் கொள்கையை அமுலாக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கோயில் சொத்து என்ற பாகுபாடே இருக்கக் கூடாது. தாங்கள் முன்னாலே கமிட்டியிலே போனபோது, பெரும் பகுதி யினர் எங்களுக்கு ஒன்றுமே வாவில்லை, நீங்கள் ஏதாவது கொடுத் தால் போதும். அதை வைத்திருப்பதால் பாரமாக இருக்கிறதே தவிர, வேறொன்றும் இலாபம் இல்லையென்று கூறினார்கள். அந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மனைக்கட்டுப் பட்டாக்கள் வழங்குவதிலே தாமதம் ஏற்படு கிறது. முனிசிபல் ஏரியா, டவுன் பஞ்சாயத்து ஏரியாவிலே இருந்தால் மனைக்கட்டு பட்டாக்கள் வழங்கப்படுவதில்லை. ஆகவே, அந்த ஏரியாவிலிருப்பவர்களுக்கும் மனைக்கட்டுப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்னும் அதிகப்படி யான கருத்துக்களைப் பேசவேண்டுமென்று இருந்தாலும் அடுத்த பட்ஜெட் உரையிலே இதைப்பற்றி கூறலாம் என்ற அளவிலே நிறுத்தி, என்னுடைய உரையை முடித்து, அமர்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனி பேச இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து 5 நிமிடங்களுக்குள் முடித்து விடுமாறு கேட்டுக்கொண்டு, திரு. டி. கே. கபாலி அவர் களைப் பேச அழைக்கிறேன்.

திரு. டி. கே. கபாலி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் பேசுகிற சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

பதினேழு மாத காலமாக நெருக்கடி நிலையின்போது நடந்த ஆட்சியிலே நடைபெற்றதைப்பற்றி இங்கே சொல்லாததற்கு நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். நெருக்கடியின்போது பெருமதிப்பிற்குரிய தேசியத் தலைவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அந்தக் கொடுமைகளைச் செய்த சர்க்காரைக் கண்டித்ததோடு மட்டுமல்லாமல், அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லிய ஒரே குரல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் அவர்களதுதான் என்பதை இந்த நாடு மறக்காது என்று கருதுகிறேன். அதைப்பற்றி யாராவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் 5-6 நாட்களாக இந்த விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. ஒருவர்கூட நன்றி சொல்லவில்லை. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அண்ணாவின் வழி வந்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள், அந்த அண்ணாவின் பண்பு வழியில் நன்றி சொல்ல மறந்ததற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள் அண்ணாவின் வழியில் ஊழல் அற்ற ஆட்சியை நடத்துவோம் என்று சொல்கிறார்கள். அதைப் பாராட்டுகிறோம். ஆனால் கடந்தகால வரலாற்றை மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக வருத்தப்படுகிறேன். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அவர்கள் ஆதரித்த முன்னாள் மத்திய அரசில் இருந்த அம்மையார் அவர்கள் இந்த நாட்டின் சுதந்திரத்திற்கும், பேச்சுரிமைக்கும் எழுத்துரிமைக்கும் மற்றும் பலவற்றிற்கும் தடை விதித்தார்கள். இந்த நாட்டில் அப்படிப்பட்ட உரிமைகள் அறவே இருக்கக்கூடாது என்று தடை விதித்த அந்த ஆட்சியை ஆதரித்த நண்பர்கள்தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து இருக்கிறார்கள். அண்ணாவின் வழியில், அண்ணாவின் பண்பின் வழி நடப்போம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஊழல் அற்ற ஆட்சியை அமைப்போம் என்று கூறும் அருமை நண்பர்களைக் கேட்கிறேன், உதாரணத்திற்காகக் கேட்கிறேன், அண்ணா அவர்கள் இருந்து இருப்பாரானால் உண்மையில் அன்றைக்கு என்ன செய்து இருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



காரணம், தந்தை பெரியார் அவர்கள் ஆகஸ்ட் 15-ம் நாளை இந்தியா சுதந்திரம் பெற்ற நாளை துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் அன்றையதினம் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சுதந்திரத்தை நாம் பல ஆண்டுகாலம் தியாகம் செய்து பெற்றோம். ஆகவே இதைத் துக்க தினமாகக் கொண்டாட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அண்ணா சொன்ன அந்தத் தத்துவத்தை இன்றையதினம் ஆளும் கட்சியாக இருக்கும் எங்களை விட்டுச் சென்ற நண்பர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த நாட்டில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. அந்த நேரத்தில் அந்தக் காரியத்தைச் செய்த ஆட்சியினருக்கு நீங்கள் ஆதரவைத் தந்து இருக்கிறீர்கள். இன்றைய தினம் தமிழக மக்களால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்று சொல்லக்கூடும். அதை நாங்கள் வரவேற்கிறோம். மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்குகிறோம். ஆனால், அண்ணாவின் அன்றைய கருத்துக்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியவில்லை என்று வருத்தப்படுகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அன்றையதினம் ஜனநாயகம் அழிக்கப்படவும், ஒழிக்கப்படவும் பாடுபட்டு இருக்கிறீர்கள். இன்றைக்கு புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறீர்கள். உங்கள் மீது இந்த நேரத்தில் நாங்கள் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்ல விரும்பவில்லை. எங்கள் தலைவர் மிக அருமையாகச் சொன்னார்கள். நீங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்து இருக்கிறீர்கள். இந்த நாட்டு மக்கள் உங்களிடமிருந்து அதிகமான பலனை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே நாங்கள் பொறுத்து இருப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதோடு அதை விட்டுவிட்டு ஒருசில கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நெருக்கடி நிலையின்போது பல ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்த ஊழியர்கள் எல்லாம் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஊழியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்களா இல்லையா என்பதை எதிர்த்தரப்பில் பேசுகின்ற நண்பர்கள் எவரும் பேசவில்லை. ஆகவே, அதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆளுநர் உரையில் இருக்கிறதா என்றால் அங்கேயும் காணப்படவில்லை.

சென்னையில் மூன்று மருத்துவ மனைகள் இருக்கின்றன. இந்த மூன்று மருத்துவ மனைகளும் மூன்று பகுதிகளில் இருக்கின்றன. ஆனால் தென்கோடியில் இருப்பவர்களுக்கு, அதாவது இப்போது வந்து இருக்கக்கூடிய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதல் அமைச்சர் இருக்கிற பகுதியில், ஏழை எளிய மக்கள் வாழ்கிற பகுதியில் அதைச் சுற்றியுள்ள கிராமத்தில் வாழும் மக்களுக்கு, வசதி ஏற்படுத்தித் தரும் வகையில் கிண்டியிலோ அல்லது வேளச்சேரியிலோ ஒரு புதிய மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கும் மருத்துவ மனைகளில் சென்று பார்த்தால் ஏழை எளிய சாமான்ய மக்கள் வெராண்டாவில்தான் படுத்து இருக்கவேண்டி இருக்கிறது. ஆகவே, அப்படி ஒரு மருத்துவ மனை ஏற்படுத்தும் திட்டத்தை வருகிற பட்ஜெட்டிலாவது சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் (மணியடிக்கப்பட்டது) தலைவரவர்களே, அடிக்கடி மணி அடிக்க வேண்டாம். சீக்கிரமே முடித்து விடுகிறேன்—ஸ்பீடாகத் தான்—ரெயில் மாதிரிப் போய்க் கொண்டிருக்கிறேன்—அப்படியும் முடியவில்லை.

மீனவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் தி.மு.க. அரசு—தகைமை வாய்ந்த தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் குடிசைமாற்று வாரியங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வந்தார். அதைத் தொடரப் போகிறீர்களா? அல்லது அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறீர்களா என்பது இங்கே காணப்படவில்லை, என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைமாற்று வாரிய அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் தயவுசெய்து நான் பேசுவதைக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு அட்கோ நிறுவனம் பணம் கொடுக்கிற காரணத்தால் அவர்கள் தருகிற வரைபடத்தின் அடிப்படையில் கட்டப்படுகிறது. இதை மாற்றி முன்பு இருந்த பிளான் மாதிரி கட்டப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இப்பொழுது கட்டப்படுகிற வீடுகளில் மக்கள் வாழ முடியவில்லை. எதிர் எதிரில் இரு வீடுகளுடைய வாசல்கள் அமைந்துள்ளன. ஒரு வீட்டு வாயில் கதவைத் திறந்தால், எதிர் வீட்டில் என்ன செய்கிறார்கள் என்று தெரியும். அதை மாற்றி, தி.மு.க. அரசு



கொடுத்த—குடிசைமாற்று வாரியம் கொடுத்த வரைபடத்தை—பிளானை அடிப்படையாகக் கொண்டு வீடுகள் கட்டப்பட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில், தென்கோடிக் கடற்கரையிலிருந்து வடகோடி வரை மீன் பிடிப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் பலருக்கு விசைப் படகுகள் தரப்பட்டிருக்கின்றன. விசைப் படகுகள் வைத்திருப்பவர்களுக்கு என்று சில விதிமுறைகள் உண்டு. மூன்று மைலுக்கு அப்பால் போய்த்தான் மீன் பிடிக்க வேண்டும் என்பது அந்த விதிகளில் ஒன்று. ஆனால் பலர் அந்த விதியைக் கடைப் பிடிப்பதில்லை என்று அறிகிறேன். மூன்று மைலுக்கு இப்பாலேயே மீன் பிடிக்கிறார்கள். இதனால், சாதாரண படகு வைத்துக் கொண்டு மீன் பிடிப்பவர்களுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இவர்களுக்குக் கிடைக்கின்ற அளவு குறைந்து விடுகிறது என்பதோடு, இவர்கள் போடுகின்ற வலைகள், விசைப் படகுகளால் கிழிக்கப்பட்டு விடுகிறது. எனவே, அரசு இதில் கவனம் செலுத்தி, இது சம்பந்தமான விதிகளை விசைப் படகினர் சரியான முறையில் கடைபிடிக்க வேண்டுமென உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது, கல்வித் துறையில் மூன்று ஆயிரம் ரூபாய்வரை வருமானம் உள்ளவர்களின் குழந்தைகளுக்குத்தான் இலவசப் புத்தகங்கள் தரப்பட்டு வருகின்றன. இந்த ரூ. 3 ஆயிரம் என்ற வரம்பை ரூ. 5 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளைப் பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். பச்சையப்பன் கல்லூரி அறங்காவல் தலைவராகவும், நான்கு ஆண்டு காலம் உறுப்பினராகவும் பணிபுரிந்திருக்கிறேன். அங்கே பேராசிரியர்கள் படும் தொல்லைகள் அதிகம். தனியார் கல்லூரிகளை விரிவுபடுத்தவும். அழகுபடுத்தவும்—நண்பர்—முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல—மேற்கொண்டு சாதனங்கள் தேவைப்படுவதால், கல்லூரியை நடத்திச் செல்லக் கூடிய நிலையில் கஷ்டம் இருக்கிறது. எனவே, இதில் சர்க்கார் தலையிட்டு, போதிய நன்மைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியான முறையில் கிடைப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) முடித்து விடுகிறேன்.

[திரு. டி. கே. கபாலி] [1977 ஜூலை 14

பச்சையப்பன் அறங்காவல் நிலையத்திற்கு நிறைய சொத்து இருக்கிறது. ஆனால் வருமானம் இல்லை. சொத்து இருந்தும் வருமானம் இல்லாத காரணத்தால் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்றும், நான்கைந்து மாதங்களாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாத ஒரு நிலை இருக்கிறது என்றும் தெரிய வருகிறது. ஆசிரியர்களுக்காகவே நாங்கள் வாழ்கிறோம் என்று இரண்டு தரப்பினரும் சொல்கிறோம். எனவே, இத்தகைய குறைகளைச் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பச்சையப்பன் கல்லூரியில் பல ஆசிரியர்களை விட்டுக்கு அனுப்புவதாகக் கூறப் படுகிறது. அவர்களுக்கெல்லாம் அங்கே ஆசிரியர் வேலை இல்லா விட்டாலும், சர்க்கார் கல்லூரியில் வேலை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.-க்களைப் பொறுத்தவரையில் மூன்றாவது சம்பளக் கமிஷன் நியமிக்கப்படுமா, மாட்டாதா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. அதுபற்றி ஆளுநர் உரையில் காணப்பட வில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில், நான் அங்கே பத்தாண்டுகள் பணிபுரிந்தவன்—கடந்த முறை நான் இல்லை—குறுக்கிடு செய்யவேண்டாம்—அந்த மாநகராட்சி எப்படிச் செயல் படுகிறது என்பதைப் பற்றி அரசு கூர்ந்து கவனிக்க வேண்டும். நேற்றைய தினம், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே சென்றதாகக் கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்ச்சி. அமைச்சர்

(பிற்பகல் 1-10)

மாநகராட்சியைப் பார்வையிடும்போது, மாநகரத்தின் விபரம் தெரிந்த உறுப்பினர்கள் எங்கள் பக்கத்தில் இருந்தாலும் அவர்கள் பக்கத்தில் இருந்தாலும் அழைத்துச் சென்று, மாநகராட்சியைப் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மாநகராட்சி நிர்வாகம் எந்த அளவுக்குச் சீர்கெட்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேர்தல் நடத்துகிறார்களா இல்லையா என்பது பிரச்சினை இல்லை.

நகரில் விளக்குகள் இல்லை. ரோடுகள் இல்லை. குடிதண்ணீர் வசதி கிடையாது. கக்கூஸ் வசதிகள் இல்லை. சாமான்கள் வாங்கப் பணம் இல்லை, பஞ்சம், பஞ்சம் என்கிறார்கள். இப்போது 6 மாதத்திற்குத்



1977 ஜூலை 14] [திரு. டி. கே. கபாலி]

தேர்தலை ஒத்திவைத்திருக்கிறார்கள். சென்னை நகரில் இருந்து மட்டும் 14 தொகுதிகளில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். இது முக்கியமான பிரச்சினை. நகரமன்ற அதிகாரிகளைக் கூப்பிட்டு உடனடியாக அழைத்து மக்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களை ஏன் உடனடியாகச் செயல்படுத்தக்கூடாது என்று கேளுங்கள். (மணியடிக்கப்பட்டது).

முடித்துவிடுகிறேன். குடிசைமாற்று வாரிய அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். குடிசைமாற்று வாரியத்தினால் கட்டித்தரப் படுகிற வீடுகளில் தண்ணீர் வசதி, விளக்கு வசதி, கக்கூஸ் வசதி யார் செய்து தருவது என்கிற இக்கட்டான நிலைமை இருக்கிறது. மேற்கண்ட வசதிகளை குடிசைமாற்று வாரியம் கண்காணிப்பதா, நகரமன்றம் கண்காணிப்பதா என்ற சர்ச்சை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருதரப்பினரையும் கூட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, எங்களை, நேரம் கொடுத்துக் கூப்பிடு கிறார்கள், கூப்பிட்டுவிட்டு வேறு யாருடனோ பேசிக்கொண்டிருக் கிறார்கள், இந்த நிலை இல்லாது உறுப்பினர்களோடு பேச வேண்டு மென்று குடிசைமாற்று வாரிய அமைச்சரைக் கேட்டுக்கொண்டு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. ஜி. கிட்டு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற முறையில் எனக்கு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். 1977 ஜூலைத் திங்கள் 7 ஆம் தேதி அன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நன்றி அறிவிப்புத் தீர்மா னத்தை ஆதரித்து, என்னுடைய நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் தம் உரையில் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி, பாசன வசதி, வேலைவாய்ப்பளிக்க சிறு தொழில்கள், மற்றும் பாதை வசதி போன்றவற்றை ஏற்படுத்தித் தர இந்த அரசு திட்டங்களை வகுக்கும் என்று ஆளுநர் உரையில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு மிகவும்

பிடித்தமான இந்த கிராம முன்னேற்றத் திட்டத்தை நான் மிகவும் வரவேற்றுப் பாராட்டுகிறேன். அந்த அளவுக்கு இந்தத் திட்டங்கள் இருக்கின்றன.,

கிராமங்களைப் பொறுத்தவரையில் இதுவரை எந்த அரசும் அறிவிக்காத நல்லபல திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கிறது. உள்ளபடியே கிராமங்களில் வாழ்கிற 70 சதவிகித மக்களும் இதை வரவேற்பார்கள். அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற முறையில், அவர்களுடைய கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கின்ற வகையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், எங்கள் தானைத் தலைவர், சேனைத் தலைவர், புரட்சித் தலைவர் கிராம முன்னேற்றத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து, முக்கியத்துவம் கொடுத்திருப்பதை உள்ளபடியே வரவேற்கிறேன்.

குடிநீரைப் பொறுத்து இதுவரை ஆண்ட அரசு எதுவும் செய்யவில்லை என்ற அளவுக்கு கிராமங்களுக்குச் செல்கிற நேரத்தில் மக்கள் எடுத்துச் சொன்னார்கள். அங்குள்ள சூழ்நிலை இதற்குமுன் இருந்த அரசு என்னதான் செய்தார்கள் என்று யோசிக்கின்ற அளவில் இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு கிராமங்களில் உள்ள மக்கள் வேறு எதையும் கேட்கவில்லை. எங்களுக்கு எந்தத் திட்டமும் வேண்டாம், மத்திய, மாநில சார்பில் தொழில்கள் அமைக்கப்படவேண்டும் என்று கூடக் கேட்கவில்லை. எங்களுக்குத் தண்ணீரைக் கொடுங்கள் என்றுதான் மிகத் தீவிரமாக வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்திருக்கிறது என்பதாக கவர்னர் பெருமகனார் வலியுறுத்திச் சொல்லியிருப்பதற்கு நான் உள்ளபடியே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். 16,000 நியாயவிலைக் கடைகள் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டு கிராம மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் மற்றப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு இந்த அரசு முயலும் எனக் குறிப்பிட்டிருப்பதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் விளைவிக்கிற விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதோடு இடைத்தரகர்கள் அடிக்கிற கொள்ளை லாபத்தைத் தடுத்து அவர்களுக்கு குறைந்த அளவிற்கு லாபம் கிடைக்கிற வகையில் விவசாயிகளுக்கு நல்ல விலையும் வாங்குபவர்





களுக்கு முறையான விலையிலும் கிடைப்பதற்கு இந்த அரசு முயலும் என்று கூறியிருப்பதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இருமொழிக்கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். அந்த இருமொழிக் கொள்கையைத் தன்னால் முடிந்த அளவிற்கு இந்த அரசு கடைப்பிடிக்கும் என்று அறிவித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜனங்கள், தாழ்த்தப்பட்டோர், மீனவர்கள், கைத்தறி நெசவாளர்கள், விவசாயக் கூலிகள் இவர்களின் நிலையை உயர்த்த இந்த அரசு முயல இருக்கிறது. அதற்காகவும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள். நகராட்சித் தலைவர்கள் இவர்களை மக்களே தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற திட்டமானது மிக மிக வரவேற்றுப் பாராட்ட வேண்டியதொரு திட்டமாகும். மக்களுக்கு அந்த உரிமையைக் கொடுப்பதன் மூலம் கிலபல ஊழல்கள்—இதற்கு முன்பு அரசு நடத்தியவர்கள் நகராட்சித் தேர்தல்களிலும், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களிலும் அதிகமான முறையில் லஞ்சம் கொடுத்து நகராட்சித் தலைவர்களையும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் உருவாக்குகின்ற மோசமானதொரு நிலையை ஏற்படுத்தியிருந்தார்கள்—அதனால் தமிழ்நாட்டில் நல்லதொரு சூழ்நிலை கெடுகிற அளவிற்கு முறைகேடுகள் நடந்து வந்தன, அவற்றை ஒழிக்கவேண்டுமென்ற முறையில்தான் நகராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட இந்த அரசு திட்டமிட்டிருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கதொன்றாகும்.

எனது தொகுதி பல்லடம் தொகுதியாகும். அங்குள்ள சிலபல குறைபாடுகளை நான் இங்கே சொல்லியாகவேண்டும். குடிநீர் பிரச்னை பல்லடம் தொகுதியில் மிக மோசமான நிலையில் இருக்கிறது. தமிழ்நாட்டில் அனைத்துத் தொகுதியிலும் அந்நிலை இருந்தாலும் என் தொகுதி மிக மிகப் புறக்கணிக்கப்பட்ட தொகுதியாக இருக்கிறது. என் தொகுதிக்கு பாண்டியாறு-புன்னம்புழா அல்லது பெரியாறு-ஆனியாறு திட்டத்தை, எதாவது ஒரு திட்டத்தை பல்லடம், அவிநாசி, கோவை ஆகிய மூன்று தாலுகாக்களுக்கும் சேர்த்து அந்தத் திட்டத்தை இந்த அரசு

நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் அவர்களின் இந்த உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. செ. வீ. சவுந்திரராஜன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி சார்பில் எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குடிநீர் பிரச்னை வறட்சிப் பகுதிகளில் மட்டுமல்லாமல் செழுமை நிறைந்த எங்கள் பகுதியிலும் இந்தப் பிரச்னை இருக்கிறது. நிதி வசதி இல்லாத பஞ்சாயத்துக்கள் தங்கள் தங்கள் கிராமங்களில் சரிவர குடிநீர் வசதி செய்து தர தேவையானதொரு திட்டத்தை அமல்படுத்தவேண்டும். ஒன்று குடிநீர் வாரியமே இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். அல்லது கிராம மக்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களே குடிநீர் வசதி செய்து தருவதற்குரிய வசதியைச் செய்து தரவேண்டும்.

லஞ்சத்தை ஒழித்து ஊழலற்ற ஒரு அரசை இயங்கச் செய்வதாக கூறப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் பேசியுள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நேர்மையாக நடப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள், அதாவது; அயோக்கியத்தனம் செய்தால்தான் இந்த நாட்டில் செழுமையாக வாழலாம் என்று பலர் எண்ணுகிறார்கள், அந்த எண்ணத்தைப் பரவலாக எண்ண ஆரம்பித்துவிட்டால் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நல்லதொரு அரசாங்கம் இயங்கமுடியாது; ஆகவே, தமிழக மக்களுக்கு அந்த எண்ணம் எப்படிப்படி விடக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள். அதனால் தான் காந்திஜியின் கொள்கையாகிய அன்பு, அகிம்சை, நீதி, நேர்மை முதலியவற்றைப் பட்டிதொட்டிகளில் எல்லாம் பரப்புகிறேன் என்றும் சொன்னார்கள். ஆகவே லஞ்ச ஒழிப்புத் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

அடுத்தபடியாக, மதுவிலக்குத் திட்டம். மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு பெர்மிட் முறையை ஒழிக்க வேண்டும். நான் தேர்தல் காலத்தில் கிராமங்களுக்குச் சென்ற போது பல கிராமங்களில் தாய்மார்கள், குறிப்பாக அரிசனத்



தாய்மார்கள், கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அதற்கு நிச்சயமாக முயற்சி எடுப்பேன் என்று அவர்களிடம் சொன்னேன். அதற்கு ஆதரவாக இப்போது இதில் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்த தீவிர முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதை நான் பாராட்டுகிறேன். இதற்கு வேண்டிய முயற்சி எடுப்பதோடு, கடுமையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். மதுவிலக்கு கொண்டு வரும்போது, இப்போதுள்ள போலீசாரிடம் இதை ஒப்படைக்கக் கூடாது. தனியாக இதற்கு ஒரு பிரிவு ஏற்படுத்தி, அதனிடம் இதை ஒப்படைத்தால்தான் மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்த முடியும்.

காவிரி நீர் பிரச்னையைப் பொறுத்த அளவில், இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண வேண்டும். ஏனென்றால், காவிரி டெல்டாப் பகுதிகளில், நிலத்தடி நீரைக்கொண்டு சாகுபடி செய்ய முடியாது. காரணம் அங்கேயிருப்பது உவர் சாயில், மலையில்லாத பகுதி. இதில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி சாகுபடி செய்தால் கண்டிப்பாக நஷ்டம் தான் ஏற்படும். ஆகவே இதற்கு நிரந்தர மான தீர்வு காண வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஒரு நெல் களஞ்சியம் என்று சொல்லப் பட்டது. நெல் களஞ்சியமாக இருக்கின்ற தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எங்கள் பகுதியில் பாய்கால் வடிகால் மிகவும் மோசமாக இருக்கிறது. எங்கள் பகுதியிலுள்ள கொங்கன் வாய்க்காலைச் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கிராமங்களில், அரிசனங்கள் வாழும் பகுதிகளில், கவனம் செலுத்தப்படாமல் இருந்து வருகிறது. குறிப்பாக மின்சார வசதியை எடுத்துக் கொண்டால், கிராமங்களில், ஜாதி இந்துக்கள் இருக்கும் இடங்களில் மின்சார வசதியிருக்கிறது. ஆனால் அரிசனங்கள் வாழும் இடங்களில் மின்சார வசதி கிடையாது. இதைப்பற்றிப் பல முறை வளர்ச்சி மன்ற கூட்டங் களில் பேசியபோதும். தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தக் குறைபாட்டை நீக்க இந்த அரசு உடனடியாக, அரிசனங்கள் வாழும் இடங்களில் மின்சார வசதி செய்து தரவேண்டும் என்று

[திரு. ரெ. வி. சவுந்திரராஜன்] [1977 ஜூலை 14

கேட்டுக்கொள்கிறேன். இது போலவே ரோடு வசதி, வீட்டு வசதி இவையெல்லாம் கிடையாது. அவர்களுக்கு சுடுகாட்டுக்குப் போவதற்கு வழி கிடையாது. இந்தக் குறைகளையும் நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. சாதாரணமாக பட்டதாரிகள் அனேகம் பேர்கள், 4-வது குரூப் அதாவது எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் எழுதக்கூடிய 4-வது குரூப் எழுதியும் பாஸ் செய்யவில்லை. வேலையும் கிடைக்கவில்லை. இப்போதுள்ள பட்டதாரிகள் வேலையின்றி இருக்கின்றார்கள். வாட்ச்மேனாக கூட வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். பட்டம் பெற்றவர்களுக்கு வயது வரம்பு கட்டுப்படுத்தாமல் வேலை வாய்ப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன ஆஸ்டல்களில், அதாவது மாணவர்களின் விடுதியில் சேரவேண்டும் என்றால் மாத வருமானம் அதிக பட்சம் 300 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். இப்போதுள்ள வருமானத்தை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையில் உள்ள பள்ளிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை நேரடியாகச் சர்க்கார் மூலமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அதிலே பல குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

பட்டதாரிகளின் சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை அமல்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல விஷயங்கள் பேசவேண்டியது இருந்தாலும், நேரமில்லாத காரணத்தால் இத்துடன் என் பேச்சை முடித்துக் கொண்டு, தங்களுக்கு என் வணக்கத்தையும் தெரிவித்து முடித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிற்கு விடுதலைப் பெற்றுத் தந்த, உலகப் புகழ்பெற்ற அண்ணல் காந்தி அடிகளின் உருவப்படம் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருப்பதுபோல், சமுதாயச் சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவுப் பாசறையை வகுத்துத் தந்தவருமான



1977 ஜூலை 14] [திரு. டி. சுப்பிரமணியம்]

தந்தை பெரியார் அவர்களுக்கும் இந்த மாமன்றத்தில் ஒரு உருவப் படம் வைக்கப்பட வேண்டுமென்பதை இந்த அமைச்சர் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. சுப்பிரமணியம் :** மேன்மை தங்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி கூற முன்மொழியப்பட்டுள்ள திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் தீர்மானத்தை ஆதரித்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் சில வார்த்தைகளைக் கூற விரும்புகின்றேன்.

தமிழ் நாட்டின் வாழ்விற்கும், வளத்திற்கும், வளர்ச்சிக்கும் வழி காட்டக்கூடிய வகையில், தமிழ்நாட்டில் வசிக்கக்கூடிய மக்கள் வாழ்க்கை உயரக்கூடிய வகையிலே பல முயற்சிகள் மேற்கொள்வதென்றும், அவ்வாறு வளம் பெறுவதற்கு ஆங்காங்கே சிறு தொழில் நிறுவனங்கள் நிறுவி, செயல்படுவதன்மூலம் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையிலும் ஆளுநர் அவர்கள் உரையில் அறிவித்திருப்பது நன்றியுடன் வரவேற்கக் கூடியது.

மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களின் உரையின்படி, எனது தொகுதி மக்களின் முக்கியப் பிரச்சினையாகிய குடிதண்ணீர் வசதி, சாலைப் போக்குவரத்து வசதி ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சிறு தொழில் நிறுவனங்கள் அதிகமாகக் கிடையாது. அங்கு முந்திரி அதிகமாகப் பயிரிடப்பட்டு, முந்திரிக் கொட்டை அதிகமாக உற்பத்தியாவதால் அதற்கான சிறு தொழில் நிறுவனங்கள் நிறுவினால், அந்தப் பகுதியிலுள்ள ஏழை மக்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும். அதிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு பயன்படக்கூடிய வகையிலும், அதனால் அந்தப் பகுதி மக்கள் வளம் பெறவும் வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.27 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

@ 4. The Second Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited for the year 1973-74. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

@ 5. The Third Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited for the year 1974-75. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).].

@ 6. The Fourth Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited for the year 1975-76. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. *Reports, Notifications and other papers.*

% 5. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officer) Amendment Ordinance, 1977. (Tamil Nadu Ordinance No. 1 of 1977).

% 6. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 2 of 1977).

---

@ Kept in the Legislature Library with reference to the proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

% Despatched to Members on 13th July 1977.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

வெள்ளிக்கிழமை, 1977, ஜூலை 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Unrest in T.V.S. Group of Companies.*

* 1—*S.N.Q.*—THIRU R. UMANATH
THIRU K. RAMANI
THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether there is unrest in T.V.S. Group of Companies in Madras City leading to a continued lock-out in one of its units;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken by the Government to lift the lock-out?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) ஆம். சென்னை பாடியில் உள்ள சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் நிறுவனம் 10—6—1977 முதல் கதவடைப்பு செய்துள்ளது.

(ஆ) வேலையில் மெத்தனம் காட்டி வந்ததாகக் கூறி சில தொழிலாளர்கள் மீது நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. இதனை எதிர்த்து தொழிலாளர்கள் 7—6—1977 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகு நிர்வாகம் 10—6—1977-லிருந்து கதவடைப்புச் செய்துள்ளது.

(இ) ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்படுத்தும் பொருட்டு முதலமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்பு கொண்டு ஆவன செய்யும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

**திரு. ஆர். உமாநாத்:** கனம் சபாநாயகர் அவர்களே, இது மேலும் பரவக் கூடிய நிலைமை இருப்பதால் இந்த ஹவுஸுக்கு உதவியாக இருக்கக்கூடிய முறையிலேதான் நான் இந்த

குவஸ்டினைப் போட்டேன். இதை செட்டில் பண்ணுவதற்கு முதலமைச்சர் அவர்களும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் முயற்சி எடுப்பதாகச் சொன்னார்கள், அதற்கு நன்றி.

எனக்குத் தெரிந்த வரையில் இதற்கு முக்கிய காரணம் அங்கேயுள்ள முதலாளி ஒரு குறிப்பிட்ட நிலையை எடுத்து இருக்கிறார். அங்கே தொழிலாளர்கள்தான் சந்தா கட்டவேண்டியது, ஆனால் தங்களுடைய தலைவரை முதலாளிதான் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், இப்படிப்பட்ட ஒரு ஸ்டிரேஞ் நிலைமை ஏற்பட்டதுதான் காரணம். இந்தக் கருத்தைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதையும் இந்த டிஸ்ப்யூட்டைத் தீர்ப்பதற்கு சிம்சனில் நடந்த மாதிரி லேபர் டிபார்ட்மெண்ட் மூலமாக டிரேட் யூனியன் தாங்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையைக் கொண்டுவர ஆவன செய்வார்களா என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இரு சாரரையும் அழைத்து முதலமைச்சர் அவர்கள் பேசவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். உமாநாத்:** என்னுடைய குவஸ்டினுக்கு ரிப்ளை வரவில்லை. சிம்சனில் நடந்தது போல லேபர் டிபார்ட்மெண்ட் மூலமாக எலக்ஷனை டெமாக்ரடிக் முறையிலே நடத்துவார்களா என்றுதான் கேட்டேன்.

Mine is a specific question and it has not been answered.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கப்பு.

**திரு. ஆர். உமாநாத்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, குவஸ்டின் அவரில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது என்று நம்முடைய பேரவை விதிகள் கூறுகின்றன.



THIRU R. UMANATH: Let the Hon. Minister give his reaction to my question.

THE HON. THIRU G. R. EDMUND: The Hon. Minister has asked that a specific question should be put properly.

THIRU R. UMANATH: The Hon. Minister has not replied to my question.

இந்த பாயிண்ட் ஆப் ஆர்டரில் எனக்கு ஒரு சப்மிஷன் இருக்கிறது. பாயிண்ட் ஆப் ஆர்டர், சபைக்கு முன்னாலே என்ன சப்ஜெக்ட் இருக்கிறதோ அதைப்பற்றி எழுப்பலாம். அந்த முறையிலேதான் நான் எழுப்பியிருக்கிறேன்.

I am quite legal and within my limits.

ஆகவே, செப்பரேட் குவஸ்டின் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. இதிலே சம்பந்தப்படாத விஷயமாக இருந்தால்தான் செப்பரேட் குவஸ்டின் போடும்படி சொல்லலாம். ஆனால் நான் இதிலே சம்பந்தப்பட்ட குவஸ்டினைத்தான் கேட்டிருப்பதால் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமே தவிர ஒவ்வொன்றுக்கும் செப்பரேட் குவஸ்டின், செப்பரேட் குவஸ்டின் என்று கேட்டுக்கொண்டிருந்தால் இங்கே எந்த குவஸ்டினும் கேட்கமுடியாத நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி அங்கே தேர்தல் வழக்கப்படி நடத்தப்படுமா அல்லது நடத்தப்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை மீண்டும் அமலாக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இருதரப்பாரையும் அழைத்துப் பேசவிருக்கிறோம் என்று சொல்லும்பொழுதே இதனைப் பற்றியும் உண்மை என்ன என்பதை நேரில் அறிந்து அவர்கள் எந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய அந்த வாய்ப்பைப் பயன்படுத்துவார்கள் என்பதை இதில் உள்ளடக்கியதாகப் பதில் இருக்கிறது. கேள்விக்கு நேரடியான பதில் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரின் விளக்கம் சரியாக இருக்கிறது.

[1977 ஜூலை 15

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவரவர்களே, அந்தத் தொழிலாளர்கள் மீது பிரிவு 307 ஐ.பி.சி. போன்றவற்றின் கீழ் சாட்டப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுக்களின் பேரில் போலீஸார் வழக்குகள் போட்டிருப்பதை வாபஸ் பெற வேண்டுமென்று ஆளுநரிடமும் முறையிட்டு அதை வாபஸ் பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டதாக அறிகிறேன். அது வாபஸ் ஆகிவிட்டதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, எந்த நிறுவனத் தொழிலாளர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கேட்கிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுகிறேன்.

**திரு. க. சுப்பு:** சுந்தரம் கிளேடனைப்பற்றித்தான் கேட்கிறேன். அமெரிக்காவிலே இருப்பதைப்பற்றியா கேட்கப் போகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மன்னிக்க வேண்டும்.

I would request the hon. Member to be circufspect is the choise, of his words.

அதாவது இதை நினைத்துக்கொண்டு சொல்கிறார்களா ? டைமண்ட் செயினை நினைத்துக்கொண்டு சொல்கிறார்களா ? பொதுவாகச் சொன்னால், உங்கள் பெயரிலே 41-வது விதியின் கீழ் டைமண்ட் செயின் பற்றி இருக்கிறது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** நான் கேட்பது சுந்தரம் கிளேடனைப்பற்றித் தான். இவர்கள் ஏன் செயினுக்குப் போகிறார்கள் ? சுந்தரம் கிளேடன் தொழிலாளர்கள் மீது பொய் வழக்குப் போட்டு ஐ.பி.சி. 307-ன் கீழ் கைது செய்யப்பட்டு, கண்டிஷனல் ஜாமீன் என்று அலைக்கழிக்கப்படுகிறார்கள். அந்த வழக்கை வாபஸ் பெறுவதாக வாக்குறுதிகூட அளிக்கப்பட்டிருக்கிறது. அது வாபஸ் பெறப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன். * * வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கிறதா அல்லது மேலும் பல வழக்குகள் போட வழிவகுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தனிக்கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (முற்பகல் 9-05—9-10-ல் சில பகுதிகள்)



1977 ஜூலை 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * என்று ஏன் சொல்லுகிறீர்கள் ? அவர் பதிலின் மேல் கேள்வியைக் கேளுங்கள், அதைவிட்டு * * என்று சொல்வது தப்பு. உறுப்பினர் இப்படியெல்லாம் பேசக் கூடாது.

**திரு. க. சுப்பு:** நான் போட்டிருக்கிற கேள்வி, சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றனவா என்பது. நான் ஸ்பெசிபிக்காகப் போட்டிருக்கிறேன். ஆனால் அதற்குத் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள் 'தகவல் இல்லை, மறு கேள்வி போடுங்கள்', என்று கேட்கிறார். ஆனால் நீங்கள் * * என்று சொல்லலாமா ?

**திரு. க. சுப்பு:** சொல்லலாம். ஏன் சொல்லலாம் என்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்டுப்பாடு, கட்சியிலே இருப்பதாக நான் நினைக்கவில்லை. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் தலைவருக்கு அறிவுரை கொடுக்கிறீர்கள்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த அவையிலே குறுகிய காலக் கேள்வி என்ற தலைப்பில் இந்தக் கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது உறுப்பினர் அவர்களால். இது சுந்தரம் கிளேடன் என்கின்ற நிறுவனத்தைப்பற்றிய கேள்வி. அதிலே நண்பர் திரு. உமாநாத் அவர்களின் கேள்வி முடிந்த பிறகு திரு. சுப்பு அவர்கள் அந்தத் தொழிலாளர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டனவா என்று கேட்கிறார். ஆனால் அமைச்சரவர்கள் எந்த நிறுவனத்தைப்பற்றிக் கேட்கிறீர்கள், டைமண்ட் செயின் நிறுவனமா என்று கேட்கிறார் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற குறுகிய காலக் கேள்வி டைமண்ட் செயின் பற்றிய கேள்வி அல்ல. குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தைப்பற்றியது, அந்தத் தொழிலாளர்கள் என்றால் அந்த நிறுவனத் தொழிலாளர்கள் என்றுதான் அர்த்தம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (முற்பகல் 9-05—9-10-ல் சில பகுதிகள்)

[1977 ஜூலை 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கின்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உறுப்பினர் * * என்று சொல்வது சரிதானா என்றால் சொல்வேன் என்று சொன்னால் அந்தக் கட்டுப்பாட்டை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, கேட்ட கேள்வி பாடியிலுள்ள சுந்தரம் கிளேடன் நிறுவனத்தில் கதவடைப்பு செய்யப்பட்ட பிரிவைத் திறப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் யாவை என்ற கருத்தில்தான் இருக்கிறது. அதைச் சொல்லிவிட்டு, இல்லாதது ஒன்றைக் கேட்டால் தனிக்கேள்வி போடச் சொல்கிறார்கள். எந்தச் செய்தியைக் கேட்டாரோ அதைக் கொடுத்திருக்கிறார்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, வேண்டுமானால் தாங்கள் அதை நீக்கிவிடலாம். என்றாலும் நாங்கள் பின்பற்றுவதற்கு அவைத் தலைவரவர்கள் எங்களுக்கு ஒரு முன்மாதிரியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தக் குறுகிய காலக் கேள்வியைப் போட்டாலும் அல்லது சாதாரண கேள்விகளை வினா-விடை நேரத்திலே போட்டாலும் ஒரு கேள்வியைத் தான் எழுப்பலாம் அல்லது தொடர்புடைய இன்னொரு கேள்வியை எழுப்பலாம், மற்றவை துணைக் கேள்விகளாக அமையும். பொதுவாக, நாங்கள் அந்தப் பொறுப்பிலேயிருந்த பொழுது எந்தெந்தத் துணைக் கேள்விகளை எழுப்பக் கூடும் என்று அறிந்து அந்தத் துணைக் கேள்விகளுக்கு நாங்கள் ஆயத்தமாக வருவது உண்டு. அதுபோன்ற பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விதி 31-ன் படி

It must not contain arguments, inferences, imputations ironical expressions or defamatory statements.

இது 'இம்ப்யூடேஷன்'. * * என்று சொல்வது, நான் உங்களைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு சொல்வது இம்ப்யூடேஷன், அதை எப்படித் தாங்கள் அனுமதிக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது. (முற்பகல் 9-11-ல் ஓர் பகுதி).



1977 ஜூலை 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதற்குக் கூட ஆமாம் என்று சொல்கிற அளவுக்கு, அவை நடவடிக்கைகளை பாதிக்கக் கூடிய அளவுக்கு, அப்படி ஒரு உறுப்பினர் வேண்டுமென்றே தொல்லைகள் கொடுக்கிறார் என்றால் மன்றத்தை எப்படி நடத்த முடியும்?

**திரு. க. சுப்பு:** நான் கேட்டதை தொல்லைகொடுப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் திரும்பப் பெறுங்கள். தயவு செய்து திரும்பப் பெற்றுக்கொண்டு மேற்கொண்டு கேள்வி கேளுங்கள். * * என்ற வார்த்தைகளைத் திரும்பப் பெறுங்கள்.

**திரு. க. சுப்பு:** நீங்கள் நான் சொல்வதை . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** எதிர்க் கட்சித் தலைவர் அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று ஏற்கனவே உங்களுக்குத் தெரிவித்துள்ளார் என்று ஞாபகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவரே நீக்கவேண்டுமென்று சொல்லுகிறார்.

**திரு க. சுப்பு:** நீக்குங்கள். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதையே பேசிக் கொண்டே இருப்பேன். நீங்கள் செய்வதைச் செய்யுங்கள் என்று சொல்லுகிறீர்கள். நான் இன்னும் உத்தரவிடவில்லை. நீங்கள் திரும்பப் பெறுங்கள். தயவு செய்து மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் இம்ப்யூடேஷன் என்றால் என்ன வென்று சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் கேள்வி கேட்பதா? ஒரு தலைவர் சொல்லுகிறேன். * * என்று உறுப்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது. (முற்பகல் 9-10—9-15-ல் சில பகுதிகள்)

பினர் சொல்லலாமா? அதைத் திரும்பப் பெறுங்கள் என்றால் நீங்கள் மீண்டும் நான் சொல்வேன் என்று சொன்னால், . . .

**திரு. க. சுப்பு:** ஒரு உண்மையை சொன்னால் அது டெஃப மேடரி அல்ல. இம்ப்யூடேஷன் அல்ல. இல்லாததைச் சொன்னால் தான் இம்ப்யூடேஷன். * * என்று நான் சொன்னால், அதிலே என்ன இம்ப்யூடேஷன் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து சொல்லுங்கள். மன்றத்திலே உறுப்பினராகப் பணியாற்றவேண்டுமென்று வந்திருக்கிறீர்களா? "நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக வந்திருக்கிறேன்" என்று சொல்லுகிறீர்களா? உங்களைப் போன்று மற்ற உறுப்பினர்களும் பேசினால் மன்ற நடவடிக்கைகள் என்ன ஆவது?

**திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** மாண்புமிகு தலைவரே உறுப்பினர் மீது இம்ப்யூடேஷன் குற்றம் சாட்டுவது சரியா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஒன்றும் நான் சொல்லவில்லை. என்ன இம்ப்யூடேஷன் சொன்னேன்? சொல்லுங்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள் என்று கேட்கிறேன். இந்த உறுப்பினர் கேள்வி கேட்பது மாதிரி, மற்ற உறுப்பினர்கள் எழுப்பினால் அவையை எப்படி நடத்துவது?

**திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குறிப்பை நீக்கிவிடலாம் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் மீண்டும் மீண்டும் உறுப்பினர் திரும்பப் பெறவேண்டும் என்று வற்புறுத்துவது சரியா?

**திரு. மு. கருணாநிதி:** அதை நீக்கிவிடவேண்டுமென்று யோசனை சொன்னேன். அவைக் குறிப்பிலிருந்து திரு. சுப்பு அவர்கள் பேசியதை ஆய்ந்து பார்க்கவேண்டுமென்றுத் தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சுந்தரம் கிளேட்டனைப் பற்றி இங்கு கேள்வி. அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்களா என்பது அடுத்த கேள்வி. ஆனால் அமைச்சர் அவர்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (முற்பகல் 9-10—9-15-ல் சில பகுதிகள்)





கேட்பது எந்தத் தொழிலாளர்கள்—டைடன்டு செயின் தொழிலாளர்களா என்று கேட்கிறார்கள். எனவே கேட்ட கேள்வியின் அடிப்படையில் தான் சுப்பு எழுப்பினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதற்கு அவைத் தலைவர் என்ற முறையில் எனக்குத் தெரிந்த வரையில் என்னென்ன விவரங்களை சேகரிக்கவேண்டுமோ, அவற்றை அமைச்சர்கள் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். ஒரு கேள்வியைக் கேட்டால் அதைச் சுற்றி இருக்கிற அத்தனை விவரங்களையும் சேகரித்துக் கொண்டு தான் அமைச்சர்கள் வர வேண்டுமென்பது தெரியும். இனிமேல் அமைச்சர்கள் எந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க வரும்போதும் சுற்றியிருக்கிற எல்லா விவரங்களையும் சேகரித்து பதில் அளிக்கின்ற முறையில் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்குத் தெரிவித்து, தயாரித்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபற்றி சொல்ல இருந்தேன். அதற்குள் அவர் * * என்று சொன்னால் அது என்ன நியாயம்? அது தவறு என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுகிறார். திரும்பப் பெறமுடியாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் வந்த தகவலைத் தான் தந்தார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** கேள்வியை நான் மீண்டும் படிக்க அனுமதி கோருகிறேன்:

(அ) சென்னை நகரில் உள்ள டி.வி.எஸ். குழுப் நிறுவனங்களில் அமைதியின்மை காரணமாக, அதன் பிரிவுகளில் ஒன்று தொடர்ந்து கதவடைப்பிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் யாவை?

(உ) கதவடைப்பினை நீக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையாது?

இதிலே மாண்புமிகு உறுப்பினர், போலீஸ் போட்டிருக்கிற வழக்கு, அதை வாபஸ் வாங்குவது பற்றிச் சொன்னார். நேரடியாக இரு சாராரும் பேசும்போது, அந்தப் பிரச்சினைகளை எழுப்பலாம். அதிலேயே அவர் போலீஸ் வழக்குப் போடப்பட்டிருக்கிறதா,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (முற்பகல் 9-10—9-15-ல் சில பகுதிகள்)

[திரு. எஸ். இராகவானந்தம்] [1977 ஜூலை 15

அது வாபஸ் பெறப்படுமா என்று கேட்டிருப்பாரானால் அந்த விவரங்களைச் சொல்ல முடியும். ஆனால் அதிலே இல்லை. நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தும்பொழுது அதைப் பற்றி பேச முடியும்.

வழக்குகளை வாபஸ் பெறுவது முதலமைச்சர் செய்ய வேண்டிய காரியம். அவர்தான் அது பற்றிப் பேச முடியும். நான் தகவலோடுதான் வந்திருக்கிறேன்.

I am posted with all information. I may submit this for your information.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் * * என்று பேசிய பேச்சினை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென உத்தரவிடுகிறேன்.

**திரு. கு. ரமணி:** சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் சுந்தாம் கிளேட்டன் கம்பெனியில் இன்று நடக்கும்படியான கதவடைப்பின் காரணமாக, அமைதி யின்மை ஏற்பட்டுள்ளது, என்ற விஷயம் இந்தக் கேள்வியிலேயே அடங்கியுள்ள விஷயம். அந்த அமைதியின்மைக்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டியது மிக அவசியமாக உள்ளது. அந்த அமைதியின்மையைத் தடுத்து சரியான முறையில் கம்பெனியை ஓட்டவேண்டியது அவசியமாகும். அமைதியின்மைக்கு மானேஜ்மெண்டு நடவடிக்கைதான் பிரதான காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அங்கே சுமார் 200 பேர்கள்—காக்கி டிரஸ் போட்ட ரௌடிகளை கதவடைப்பு செய்த கம்பெனியிலே, உட்கார வைத்திருப்பதற்குக் காரணம், தொழிலாளர்களை மிரட்டு வதற்கும், அவர்களைப் பலாத்காரமாகத் தாக்குவதற்கும், அவர்களைத் தூண்டிவிட்டு முன்னாள் சங்க உப தலைவர் குத்தப்படு வதற்கும் காரணமாயுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள். விளக்கம் தேவையில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (முற்பகல் 9-15-ல் ஓர் பகுதி)



1977 ஜூலை 15]

**திரு. கு. ரமணி:** அமைதியின்மை என்பது தொழிலாளர் பக்கத்திலே இருந்து வந்திருக்கின்றது என்று குற்றச்சாட்டு. பத்திரிகைகளிலே இன்றைக்கு அந்த மேனேஜ்மெண்டார் பெரிய விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அநாவசியமாகக் குற்றச்சாட்டுக்கு ஆளாவது தவறு. அதை எடுத்துக் காட்டத்தான் சொல்லுகிறேன். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாத விஷயமா என்று எனக்குத் தெரிய வேண்டும்.

ரௌடிகளை வைத்துக் கொண்டு தொழிற்சங்க உபதலைவர் குத்தப்பட்டு 2 விலா எலும்புகள் நீக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார். இன்னொருவர், சாம்பசிவம் என்பவர் தாக்கப் பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாக இருக்கட்டும். தகவல் கொடுக்கிறீர்களே, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. கு. ரமணி:** இந்த அடிப்படையில் சொல்லாமல் எப்படி அமைச்சர் பதில் சொல்வார், என்பதுதான் பிரச்சினை. இந்த நிலைமை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அந்த மேனேஜ் மெண்டார் ரௌடிகளைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு பலாத்காரத்திலீடுபடுத்தி, தொழிலாளர்கள் மீது பழி சுமத்துவதா? தொழிலாளர் தகராறினால் பலாத்காரம் வருகிறது என்று சொல்லுவதும் அது பத்திரிகையிலே வருவதும் அமைச்சருக்குத் தெரியாதா? அப்படியானால், போலீஸ் பாதுகாப்பு கொடுத்த பிறகு ரௌடிகளை வைத்துக் கொண்டு, ஒரு குட்டி சர்க்காரை அந்த கம்பெனி நடத்துகிறதா? அப்படியானால் ஏன் 'அந்தப் போலிசை' வாபஸ் வாங்கக் கூடாது என்று அமைச்சரிடத்திலே யிருந்து தெளிவான பதிலைப் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர் உடல்நலம் சரியாக இல்லாத காரணத்தால் அவர் இல்லத்திற்கே சென்று 2 முறை சென்று பேசியிருக்கிறேன். சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களுடன் பேசியிருக்கிறேன். முதல்வர் அவர்களும் அவர்களை அழைத்துப் பேச இருக்கிறார்கள். நேற்று முதலாளி

[திரு. எஸ். இராகவானந்தம்] [1977 ஜூலை 15

அவர்கள் ஊரில் இல்லை. எல்லாப் பிரச்சினைகளையும் பற்றிப் பேசலாம். என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டுமோ, அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இரு சாராரையும் அழைத்துப் பேசுவதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நேற்று இரவு முதல் டி. வி. எஸ். முதலாளிகளுக்குச் சாதகமான சைவல் யூனியனைக் கொண்டு அங்கே ரெளடிகளைக் கொண்டுவந்து தொழிலாளர்களைத் தாக்கி வேலையை நடத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன. ஆகவே, இதிலே தக்க நடவடிக்கை எடுக்க இரு சாராரையும் அழைத்துப் பேசி அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறந்து நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப் படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வியைத்தான் திரு. ரமணி அவர்களும் கேட்டார்கள். உறுப்பினர் கோதண்ட ராமன் அவர்களும் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நேற்று இரவு 9-30 மணி வரை திரு. சிந்தன் என்னுடன் இருந்தார். இரவு பத்து மணி வரை திரு. கோவிந்தராஜன் இருந்தார். இரண்டு பேரும் சி.ஐ.டி.யு. யூனியனைச் சேர்ந்தவர்கள். இந்தத் தகவலை அப்போது கொண்டு வரவில்லை. இன்று காலை 9 மணிக்குக் கூடச் சொல்லவில்லை. இப்போது சொல்லியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

THIRU R. UMANATH: I may put a question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள்

திரு. ஆர். உமாநாத்: முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டிருப்பது பற்றி மிக்க நன்றி; வரவேற்கிறேன். அவர் தலையிட்டால்தான் செட்டில் ஆகும்.

அப்படித் தலையிடுகிறபோது ஃபேவரபிளாக செட்டிலாக ஒரு யோசனையை முதலமைச்சர் அவர்களுக்கு வைக்கலாம் என்று கருதுகிறேன். அவர்கள் அதை கன்சிடர் பண்ணுவார்கள் என்று என்று கருதுகிறேன்.



1977 ஜூலை 15] [திரு. ஆர். உமாநாத்]

1975 ஏப்ரல் மாதத்தில் இருக்கக்கூடிய ஓர்க் லோடு—எஸ். என். நாராயணன் எதிர்த்த ஓர்க் லோடு அல்லது செப்டம்பர் 1975-ல் சம்பளம் ஒப்பந்தம் செய்யும்போது இருந்த ஒரு ஓர்க் லோடு, அல்லது 1975-ம் ஆண்டு சராசரி ஓர்க் லோடு இந்த மூன்றில் ஏதாவது ஒரு முறையில் ஓர்க் லோடை நிர்ணயிக்க வேண்டும். லேபர் கெப்ளசன்டேஷன் வைத்து யாரையும் பழி வாங்கக்கூடாது என்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இந்தக் கருத்தை மனதில் வைத்து முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தைகளை நடத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிந்தன் அவர்கள் எழுதிய கடிதத்தின்படி 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத ப்ரொடக்ஷன் அல்லது 1975 ஆம் ஆண்டு 12 மாதங்கள் சராசரி ப்ரொடக்ஷனை இலக்காக வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாத ப்ரொடக்ஷனை இலக்காக வைத்துக் கொள்ளுவது நல்லது என்கிறார்கள்.

இவைகளைப் பற்றியெல்லாம் விவாதித்து இருசாராரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே சிறப்பான முறையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அப்படி ஒரு முடிவை எடுக்க முதலமைச்சர் அவர்களே பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் நிச்சயம் நல்ல முடிவு ஏற்படும், அன்று அவர்கள் சொன்னது போல் "ஹெஸன் ஸ்லோவி" என்ற முறையில் செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### உரிமைப் பிரச்சினைகள் சிலவற்றின் மீதான தீர்ப்புகள் ஒத்தி வைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மெயில் பத்திரிகை, மாலை முரசு, மற்றும் மாலைமுரசு ஆகிய பத்திரிகைகளுக்கு விளக்கம் கேட்டு எழுதியிருந்தோம். மெயில் பத்திரிகை மட்டும் விளக்கம்

அளித்திருக்கிறது. மற்ற இரு பத்திரிகைகளும் அவகாசம் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, 20—7—1977 வரை அவற்றுக்கு அவகாசம் கொடுத்துவிட்டு, இவற்றின் மீது எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் தீர்மானத்தின் மீதும் எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அறிவிக்கிறேன்.

### (3) அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

> "சட்டமன்றப் பேரவையின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### (4) கவன ஈர்ப்பு

### (அ) மூன்றாவது ஊதியக்குழு அமைப்பது குறித்து

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—

> "மூன்றாவது ஊதியக் குழு அமைப்பதாக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றாவிடில் நேரடி நடவடிக்கையாக மீண்டும் கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அரசு ஊழியர்கள் கொடுத்துள்ள இறுதி எச்சரிக்கையின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து" என்ற

அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.



**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாநில சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல்களுக்கு முன்னர் அரசிதழ் பதிவு பெறாத அரசுப் பணியாளர்கள் சங்கம், தமிழ் நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம் முதலியன தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கிளர்ச்சி ஒன்றை நடத்தின.

அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படத்தக்க ஊதிய விதம், ஏனைய படிகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பதற்கு மூன்றாவது ஊதியக் ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கைகளில் முக்கியமான கோரிக்கையாகும். தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மேற்படி சங்கங்களின் பிரதிநிதிகளும் இதுபற்றி விவாதித்தனர். ஊதிய ஆணைக்குழுவின் நியமனம் பற்றி அறிவிக்க அரசு முடிவு செய்தது.

அவ்வண்ணமே, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பணியாளர்களுக்காக ஊதிய ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது குறித்து தங்களது முடிவை, அரசு, நிதித்துறையின் (ஊதியப்பிரிவு) 17—6—1977 ஆம் நாளிட்ட 555 ஆம் எண் அரசு ஆணையில் வெளியிட்டது.

அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும், உள்ளாட்சி மன்றங்கள், மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள், ஆசிரியரல்லா ஏனைய பணியாளர்கள் உட்பட உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள் அனைவருக்கும் 1—7—1977 ஆம் நாள் முதற்கொண்டு, அதாவது 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொடுக்கப்படத்தக்க ஊதியத்தில் மாதமொன்றுக்கு 10 ரூபாய் இடைக்கால நிவாரணமும் அரசு அளித்தது.

ஊதிய ஆணைக்குழுவின் அமைப்பும் செயல்வரம்பும் நாளடைவில் இறுதியாக முடிவு செய்யப்பட்டு தக்க நேரத்தில் அறிவிக்கப்படும்.

[1977 ஜூலை 15

**(ஆ). துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பெறுவதற்கு வசூலிக்கும் கட்டணத்தைச் சீராக்குவது குறித்து.**

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—

"மின் கட்டணம் கட்ட முடியாத நிலையில் இணைப்பு துண்டிக்கப்பட்டு மீண்டும் இணைப்புக் கொடுக்கும்போது தண்டக் கட்டணமாக ரூ. 6, 9, 12 என்றவாறு உயர்த்திக் கொண்டே போவதைத் தடுக்க ஒரே சீராக ஆறு ரூபாய்க்குக் கீழ் நிர்ணயிப்பது குறித்து". என்ற

அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது மின்சக்தியை பயன்படுத்துவோருக்கு துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பெறுவதற்கு மின்சார வாரியம் வசூலிக்கும் கட்டணங்கள் பின்வருமாறு—

1. 75 கிலோ வாட் வரை இணைக்கப்பட்ட திறன்

| | | ரூபாய். |
|---|---|---|
| (அ) இறுதி முனை இணைப்புகள் | (cut outs) | 6.00 |
| (ஆ) கம்பத்தின் மீதுள்ள இணைப்புகள் | | 12.00 |

2. 75 கிலோ வாட் திறனுக்கு மேலுள்ள இணைப்புகளுக்கு மேற்கண்ட கட்டணங்கள் இரு மடங்காகும்.

3. 12 மாத இடைவெளிக்குள் இரண்டாவது முறை மீண்டும் இணைப்புக் கொடுக்க நேரிட்டால் மேற்கண்ட கட்டணங்கள் மேலும் 50 சதவீதம் உயரும்.

2. மேற்கண்ட கட்டணங்கள் மின்சார வாரியத்திற்கு இணைப்புகளைத் துண்டிப்பதற்கும் மீண்டும் இணைப்புக் கொடுப்பதற்கும் ஏற்படும் பணிக்கான செலவை ஈடு கட்டுவதற்காகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேலும் இவை மின் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்தாமல் அடிக்கடி தாமதம் செய்வதை தவிர்க்கும் நோக்குடன் அமைந்ததாகும். இவை மின்வாரியத்தின் வருவாயை பெருக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. ஆகவே, இக்கட்டணங்களை குறைப்பது சாத்தியமல்ல.



1977 ஜூலை 15]

திரு. மா. மணிமாறன் : மின் இணைப்புத் துண்டிக்கிறபோது அங்கே இருக்கிற ப்யூஸ் காரியரைத்தான் எடுத்துவிட்டுப் போகிறார்கள். வேறு ஆக்கபூர்வமான வேலை எதுவும் இல்லை. இதற்கு 6 ரூபாய், 9 ரூபாய், 12 ரூபாய் என்று தண்டம் வசூலிப்பது, ஏற்கனவே தண்ணீர் வராமல் மிகவும் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு பாதகமாக இருக்கிறது. விவசாயத்தில் மிக அதிகமான செலவுக்கு உள்ளாகி கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு இந்தத் தண்டத் தீர்வையையாவது ஒரே சீராக ஆக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கட்டணத்தை உரிய நேரத்தில் கட்டிவிட்டால் அது கூட செலவு இல்லாமல் போய் விடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் மின்சாரக் கட்டணத்தை உரியநேரத்தில் கட்டிவிடவேண்டும் என்று சொல்வது நல்லது. ப்யூஸ்காரியரைத் தான் எடுக்கிறார்கள் என்றாலும், அதை எடுப்பதற்கு ஒரு ஆள் போக வேண்டியிருக்கிறது, திரும்ப எப்போது பணம் கட்டப்படுகிறதோ அப்போது மறுபடியும் அங்கே சென்று ப்யூஸ் காரியரைப் போடவேண்டியதாக இருக்கிறது.

(முற்பகல் 9.30)

திரு. மா. மணிமாறன் : வருமான பாக்கிகள் அதிகமாக இருக்கின்ற நேரத்தில், வசூலிப்பதற்கு அவசாசம் இருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகள் குறைவான 'பவரை' பயன் படுத்துகிற ஏழை விவசாயிகளின் கட்டணத்தைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : [illegible] மின் இணைப்பை வைத்து பயன்படுத்துகிறவர்கள் [illegible] ஏழைகள் அல்ல. எனவே அத்தகைய உத்தேசம் இல்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம், மட்டப், குளச்சல் வாய்க்கால்களில் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைக்காமை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சொ. [illegible] அவர்கள் சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. இரா. ஆதிசாமி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—" கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீர்ப்பாசனத்திற்கு உட்பட்ட இரட்டைக் கரைக் கால்வாய் கடை வரம்புப் பகுதிகளான ராஜக்கமங்கலம், முட்டம், குளச்சல் வாய்க்கால்களில் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைக்காமையால் பயிர் செய்யப்பட்ட நிலங்கள் காய்ந்து போகும் நிலையிலும் உள்ளபடியால் விவசாயிகள் மிக நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலை பற்றி விவாதிக்க—"

என்னும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பேச்சிப்பாறை, பெருஞ்சானி, சித்தாறு அணை-1, சித்தாறு அணை 2 ஆகிய நீர்த்தேக்கங்களில் தண்ணீரின் அளவு குறைவாக இருப்பதாலும், தென்மேற்குப் பருவக் காற்றினால் ஏற்படும் மழை இப்பகுதிகளில் இல்லாததாலும் மேற்கண்ட நீர்த் தேக்கங்களில் தண்ணீர் வரண்டும் குறைவாக இருப்பதாலும் கோதையாறு பாசன ஆயக்கட்டின் வாய்க்கால்களின் முறை வைத்து பாசனநீர் சிக்கனமாக வழங்கப்படுகிறது. அதன்படி இரட்டைக் கரைக் கால்வாய் 13 ஆம் தேதி காலையிலிருந்து மூடப்பட்டு மறுபடியும் 16 ஆம் தேதி காலை திறக்கப்பட இருக்கிறது. 13 ஆம் தேதிக்கு முன்னர் இரட்டைக் கரைக் கால்வாயின் ஆயக்கட்டு பூராவும் தண்ணீர் முழுமையாக விடப்பட்டது. பயிர்கள் எல்லாம் நல்ல நிலைமையிலேயே இருக்கின்றன. நல்ல மழை பெய்து மேற்படி நீர்த்தேக்கங்களில் தண்ணீர் வரத்து அதிகமானால் முறைப்பாசன முறை கை விடப்படும்.

திரு. இரா. ஆதிசாமி: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கோதையாறு அணையில் 20 அடி மட்டத்திற்கு தண்ணீர் இருக்கிறது. ஆனால், கால்வாய்கள் செப்பனிடப்படாததாலும், தூர் எடுக்கப்படாததாலும்தான் போதிய தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதாக அறிகிறேன். இதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தண்ணீர் இல்லாததால் தான் கால்வாயில் தண்ணீர் விடப்படவில்லை என்பது எனக்குக் கிடைத்திருக்கிற தகவல். கால்வாய்கள் செப்பனிடப்படாததால்தான் தண்ணீர் விடப்படவில்லை என்று உறுப்பினர் கூறுகிறார். அதுபற்றி அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. ஆதிசாமி: தலைவரவர்களே, கடந்த ஆண்டு சரியான முறையில் தண்ணீர் கிடைக்காததால், 500 ஏக்கர் கரிந்து போயிருக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு அறியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் என். கிட்டப்பா, எம். அம்பிகாபதி, ஆகியோர் பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(ஈ). மாயூரம் அருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன் போக்குவரத்துப் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் விபத்துக்குள்ளானது குறித்து.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, "கடந்த 9—7—1977 அன்று மாயூரம்—சீர்காழி நெடுஞ்சாலையில் மாயூரம் நகருக்கருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்தில் பயணம் செய்த பயணிகள் விபத்துக்குள்ளாகி 10 பேருக்கு மேல் மரணமடைந்து, பலர் காயமடைந்தது குறித்து விவாதிக்க—"

என்னும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கடந்த 9—7—1977 அன்று மாயூரம்-சீர்காழி நெடுஞ்சாலையில் மாயூரம் நகருக்கருகில் சேந்தங்குடி என்ற இடத்தில் சோழன்

போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்து விபத்து குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் மற்றும் சோழன் போக்கு வரத்து நிர்வாக இயக்குநரிடமிருந்தும் அறிக்கைகள் வந்துள்ளன.

சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த நகரப் பேருந்து எண். எம். எஸ். க்யூ. 114 தடம் என். 2 சீர்காழி—மாயூரம் மார்க்கத்தில் இயங்கி வந்தது. 9—7—1977 அன்று சீர்காழியை விட்டு இந்த பேருந்து மாலை 3.45 மணிக்கு கிளம்பியது. மாலை 4:15 மணி அளவில் மாயூரம் நகரத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேத்தங்குடி என்ற இடத்தில் வந்துகொண்டிருந்தபோது வண்டியின் முன்பக்க வலது டயர் வெடித்தது. இதனால் ஓட்டுநரால் வண்டியை கட்டுப்படுத்த முடியாமல் வண்டி ஒரு மரத்தின் மீது மோதி நின்றது.

விபத்து நேர்ந்தபோது பேருந்தில் நடத்துநர், ஓட்டுநர் உள்ளிட 81 பிரயாணிகள் இருந்தனர். ஓட்டுநரையும் நடத்து நரையும் தவிர 46 பிரயாணிகள் உட்கார்ந்தும், 40 பிரயாணிகள் நின்றுகொண்டும் செல்ல இப்பேருந்திற்கு அனுமதி உள்ளது. இவ்விபத்தின் விளைவாக பிரயாணிகளில் ஒருவரான திரு. வெங்கிட்டராமன் என்னும் பள்ளி ஆசிரியர் அதே இடத்தில் மரணம் அடைந்தார். காயங்கள் அடைந்த மற்ற 80 பிரயாணிகள் உடனே மாயூரம் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். மாயூரம் மருத்துவ மனையில் அனுமதிக்கும் சமயத்தில் தனியார் நிறுவனத்தில் குமாஸ்தாவாக பணிபுரிந்து வந்த திரு. கண்ணன் என்பவர் மரணமடைந்தார். கூலிவேலை செய்து வந்த திரு. சீனுவாச அம்பலக்காரர் மாயூரம் மருத்துவமனையில் மரணம் அடைந்தார். பலத்த காயம் அடைந்த 27 நபர்கள் மாயூரம் மருத்துவமனையிலிருந்து தஞ்சாவூர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தஞ்சை மருத்துவ மனையில் அமிர்தம் என்கிற 60 வயது பெண்மணி மரணம் அடைந்தார். காயம் அடைந்தவர்களில் தற்பொழுது 22 நபர்கள் மாயூரம் மருத்துவ மனையிலும், 21 நபர்கள் தஞ்சை இராஜா மிராசுதார் மருத்துவமனையிலும், 3 நபர்கள் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவ மனையிலும் ஒருவர் சென்னை ஸ்டேன்லி மருத்துவ நடவடிக்கை எடுக்குமா?



மனையிலும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். விபத்து நடந்த சமயத்திலிருந்து இதுவரையில் 30 நபர்கள் சிகிச்சை பெற்று வீட்டுக்கு திரும்பினர். தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இம்மூவரில் வண்டியின் நடத்துனர் திரு. நாகராஜன் என்பவரும் ஒருவர். வண்டியின் ஓட்டுநர் திரு. சதாசிவத்திற்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ. 1,000 உதவிப் பணமாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியுள்ளார். இப்பண உதவி இறந்தோர் குடும்பத்தினரிடம் சேர்க்கப்பட்டு விட்டது. சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்கு நரை சட்டப் படியான ஈட்டுத் தொகை உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமுற்றோர்களுக்கும் எவ்வளவு தர வேண்டுமோ அதனைத் தருவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிடைத்துள்ள விவரங்களிலிருந்து விபத்து நிகழ்வதற்கு முக்கிய காரணம் பேருந்தின் முன்பக்கச் சக்கரத்தின் டயர் ( Tyre ) வெடித்ததே ஆகும் எனத் தெரிகிறது. அதன் காரண மாக வண்டி ஓட்டுநர் தனது இயக்கும் திறமையை (control) இழந்திருக்கிறார். வெடித்த டயர் பழுது பார்க்கப்பட்டு புதிப் பிக்கப்பட்டது ( re-treated ) ஆகும், சாதாரணமாக டயர்கள் இரண்டு, மூன்று முறை புதுப்பிக்கப்பட்டு சீராக்கப்படுவது வழக்கம். டயர் வெடித்ததின் காரணம் என்ன என்று சரிவர இன்னும் தெரியவில்லை. இந்த விபத்துக்கான காரணத்தை தீர விசாரித்து இது குறித்து ஓர் அறிக்கையை உடனடியாக அனுப்பு மாறு நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார். அறிக்கை கிடைத்தவுடன் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

மேற்கூறியபடி உடனடியாக ஆவன செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

[1977 ஜூலை 15

**திரு. என். கிட்டப்பா:** இந்த பஸ் விபத்திற்குள்ளான காரணங்களை அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். பொதுவாக சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பேருந்துகளில் பயன்படுத்தப்படுகிற டயர்கள் பெரும்பாலும் தேய்ந்து போன—ரீட்ரீடெட்—டயர்களாக அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேருந்துகள் இத்தகைய விபத்துக்களுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு இந்தமுறை அங்கு அனுசரிக்கப்படுவதை மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

அதோடு கூட எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி அதிகமான ஓவர்லோட் ஏற்றியிருந்ததாக—அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள்—116 பேர்களை, பயணிகளை ஏற்றி இருந்ததாக அதில் பயணம் செய்த பயணிகளும், விபத்துக்குள்ளானவர்களும்—அவர்களை நான் அரசு பொது மருத்துவ மனையில் மாயவரத்தில் சந்தித்தபோது, என்னிடம் எடுத்துக் கூறினார்கள். ஒருவேளை இதில் எது சரியாக இருக்கும் என்று சொல்லமுடியாது. ஆகவே, இப்படி அதிகப்படியாக ஓவர்லோட் சோழன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஏற்றிச் செல்வதைத் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ரீட்ரீடெட் டயர்களைப் பயன்படுத்தும் முறையை மீண்டும் சீர்படுத்தி எவ்வளவு நல்ல முறையில் ஒழுங்குபடுத்த முடியுமோ அதை இந்த அரசு உறுதியாக எடுக்கும்.

உறுப்பினர் அவர்கள் கூறுகிற தகவல் சரியான தகவல் அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பேருந்தில் 81 பிரயாணிகள்தான் பிரயாணம் செய்தனர் என்று மாவட்ட கலெக்டர் அவர்களும், சோழன் போக்குவரத்து நிர்வாக இயக்குநரும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். இதை மீண்டும் விசாரிக்க நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்றும் கூறிக்கொள்கிறேன்.



1977 ஜூலை 15]

(முற்பகல் 9.40)

**திரு. என். கிட்டப்பா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓவர் லோடு சம்பந்தமாக நான் சரியான தகவலை கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். பெரும்பாலும் அந்தப் பகுதியிலுள்ள பஸ்களில், ஓவர் லோடு அதிகமாக இருக்கிறது என்று நான் ஆளும்கட்சி சட்ட மன்ற உறுப்பினராக இருந்த போதே இந்த அவையில் எழுப்பியிருக்கிறேன். ஆகவே, இங்கு இரு தரப்பிலிருந்தும் அளித்திருக்கின்ற விவரங்களை அரசாங்கம் ஆழ்ந்து பரிசிலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இந்தப் பேருந்தில் சரியான அளவுக்குத்தான் பயணிகளை ஏற்றிச்சென்றிருக்கிறார்கள் என்று தகவல் இருக்கிறது.

**திரு. மு. அம்பிகாபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சி.ஆர்.சி. பஸ் விபத்தில் இறந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு தலா ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த விபத்தில் இறந்து போனவர்களின் குடும்பத்தில் என். ஜி. ஓக்களின் குடும்பத்திற்கு வழங்கப் படுவது போல், 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்வதோடு, இந்த சி.ஆர்.சி. நிர்வாகத்தில் 1976-லிருந்து நிர்வாகத்தில் ஏற்பட்ட சீர்கேடு காரணமாக, தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ததன் காரணமாக, தொழிலாளர்களுக்கு வேலைப் பளு அதிகமாக ஏற்பட்டதின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து திசை திருப்பாதீர்கள். இதில் தொழிலாளர்கள் பழி வாங்கப் பட்டார்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது, நேரடியாக விஷயத்துக்கு வாருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு சோழன் போக்குவரத்து கழகத்திலிருந்து தனியாக காம்பன்ஸேஷன் கொடுக்கப்படும் என்று எற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக பேருந்துகளில், ரீடிரேட் செய்யப்பட்ட டயர்களை முன் பக்கத்தில் போடுவது வழக்கமல்ல, பின்புறத்தில் தான் போடுவது வழக்கம். அமைச்சர் அவர்கள் சொன்ன நேரத்தில், இந்த பேருந்தில் முன்புறத்தில் ரீடிரேட் டயர்கள் போட்டிருப்பதாக தெரிகிறது. ஆதலால், இந்தப் பேருந்தில் முன்புறத்தில இந்த ரீடிரேட் செய்த டயர்களை போடச் சொன்னது யார் என்பதை பரிசீலித்து அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட பொதுத்துறைகளை பாதுகாக்க சர்க்கார் முன்வரவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய வேண்டுகோள் நிச்சயமாக பரிசீலிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள், சட்டப் பேரவையின் விதி 41-இன் கீழ், பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**(2) அம்பத்தூர் டி.. ஐ. டைமண்ட் செயின் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது குறித்து.**

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

"அவசர நிலைமை அமுலில் இருந்த காலத்தில் பழிவாங்கப் பட்ட 21 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இது குறித்து மத்திய அரசு பிறப்பித்த ஆணைகளைச் செயல்படுத்த அரசு முழுமையாகத் தவறிவிட்டதென்றும், அம்பத்தூரில் உள்ள 'டி.ஐ. டைமென்ட் செயின்' தொழிலாளர் சங்கத்தின் தலைவர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து" விவாதிக்க என்று அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் டி.ஐ. டைமண்டு செயின் நிறுவனத்தில் சுமார் 480 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். வேலை நிறுத்தத்தைத் தூண்டுதல், வேலை செய்யுமிடத்தைவிட்டு அனுமதியின்றிச் செல்லுதல், கலகம் விளைவித்தல் அல்லது ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்ளுதல், கம்பெனி உடைமை களுக்குச் சேதம் விளைவித்தல் ஆகிய காரணங்கள் காட்டி, நிர்வாகத்தினர் 21 தொழிலாளர்கள் மீது குற்றச்சாட்டுகள் கொடுத்து விசாரணை செய்யப்படும் வரையில் 19—1—1976-லிருந்து அவர்களைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தனர். விசாரணைக்குப் பின்னர், அக்குற்றங்கள் மெய்ப்பிக்கப்பட்டன எனக் கூறி அத்தொழிலாளர்கள் 30—6—1976-லிருந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

சென்னை டி.ஐ. டைமண்ட் செயின் பொறுத் தொழிலாளர்கள் சங்கம், இந்த 21 தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்தது குறித்து சென்னை தொழிலாளர் நல அதிகாரி—மூன்று முன்னர் தொழில் தகராறு குறித்து பிரச்சினை ஒன்றை எழுப்பியது. உடன்பாடு எதுவும் சாத்தியமாக இல்லாததால் தொழிலாளர் நல அதிகாரி சமரச முறிவு அறிக்கை ஒன்றை அனுப்பினர். அரசு சமரச முறிவு அறிக்கையை ஆலோசித்துப் பார்த்த பின்னர், இப்பிரச்சினையை சென்னை தொழிலாளர் நீதி மன்றத்தின் நடுவர் தீர்ப்புக்கு (பார் அட்ஜுடிகேஷன்) விடுமாறு 7—7—1977 அன்று ஆணைபிறப்பிக்கப்பட்டது.

இத்தகராறை நடுவர் தீர்ப்புக்கு விடுமாறு அரசு ஆணை பிறப்பித்திருந்த போதிலும், தொழிற்சங்கத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்களும், வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களுள் ஒருவரான திரு. சுப்பையா செட்டியார் அவர்களும் தொழிற்சாலை வாயிலில் 8—7—1977-லிருந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். பின்னர் தொழிலாளர் நல அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் 12—7—1977 அன்று உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

நெருக்கடி நிலையின்போது பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வதற்காக இந்திய அரசு பிறப்பித்த கட்டளையைச் செயல்படுத்த இவ்வாசு தவறியது என்ற

குற்றச்சாட்டு சரியானதல்ல. அது பற்றி மூன்று வகையில் சொல்லப்பட்டு இருக்கிறது. (1) மிசா சட்டத்தின் கீழ் அல்லது இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (2) தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதன் காரணமாக அல்லது தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்ததன் காரணமாக (Banned Association) பணியிலிருந்து விடுவிக்கப் பட்ட அல்லது நீக்கப்பட்ட தொழிலாளர்கள் பொதுத் துறையில் இருப்பினும், தனியார் துறையில் இருப்பினும் அவர்கள் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (3) மேலும் சட்ட முறையையும் நிர்ணயிக்கப் பட்ட நடைமுறைகளையும் அனுசரிக்காமலும் இயற்கை நீதி நெறிமுறைகளைப் பின்பற்றாமலும் (அகென்ஸ்ட் தி பிரின்சிபில்ஸ் ஆப் நேட்சுரல் ஜஸ்டிஸ்) நெருக்கடி காலத்தில் தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டது குறித்த தகராறுகளை முடிவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர் தொழி லாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதால், மேற்கூறிய வகைகள் எவற்றின் கீழும் இந்தப் பிரச்சினை வரவில்லை.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழி லாளர்கள் மீது நிர்வாகத்தினர் கொடுத்த பொய்ப் புகார் பேரில் போலீசார் கூட பல வழக்குகளை போட்டு இருப்பதாகத் தகவல் எனக்குக் கிடைத்து இருக்கிறது. 16 வழக்குகள் போடப் பட்டு இருப்பதாகத் தெரிகிறது. போடப்பட்ட எல்லா வழக்குகளும் பொய்யான வழக்குகள் என்று நீதிமன்றம் நிரா கரித்து விட்டது.

இருந்தும் நீக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப் படவில்லை. நீதிமன்றத்தில் வழக்கும் நடந்து கொண்டு இருக் கிறது. ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது பாரபட்ச மான நிலையாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இதில் தலையிட்டு ஏதேனும் செய்து இருக்கிறதா? அதைப்பற்றி அமைச் சரிடத்தில் ஏதேனும் தகவல் இருந்தால் கொடுப்பார்களா?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தப் பிரச் சினையைப் பற்றி நான் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பி இருக்கிறேன். தொழில் நீதி மன்றத்தில் புதிதாக இணைக்கப்பட் டுள்ள இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் செக்ஷன் நெம்பர் 11-ஏ கீழ் நிர் வாகத்தினர் பிரிலிமினெரி என்கொயரி—விசாரணை நடத்தலாம் என்று கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.. எனவே, டொமஸ் டிக் என்கொயரி, இலாகா விசாரணை முறையாக நடக்கப்படவில்லை என்றால் அட்ஜுடிகேஷன் தொழில் நீதிமன்றத்தில் வரும்போது நீங்களே கூட வாதாடலாம். அங்கே உடனே பிரிலிமினரி அப்ஜெக்ஷன் எழுப்பி நீங்கள் விசாரணை செய்யவேண்டுமென்று சொல்லிக் கொள்ளலாம். மத்திய அரசாங்கத்தின் அறிவிப்பில் கூட இந்த மாதிரி மூன்றாவது பிரிவுகளில் அட்ஜுடிகேஷன் செய்ய வேண்டுமென்று சர்குலர் இருக்கிறது. நான் 7-ம் தேதியே அப்படி செய்து இருக்கிறேன். உண்ணாவிரதம் 8-ம் தேதி என் பதையும் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரி வித்துக்கொள்கிறேன். அட்ஜுடிகேஷன் விடப்பட்டு இருக் கிறது என்று தகவல் கொடுத்து இருக்கிறார்கள். அது எவ்வளவு ஆண்டுகாலமாகும் என்பது அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள். அது வரையில் அந்தத் தொழிலாளர்களுக்கு, நீக்கப்பட்ட எல்லாத் தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசு கூறியும் எடுத்துக்கொள்ளாது இருக்கும் தொழிலாளர்களுக்கு, இடைக் கால நிவாரணம் ஏதாவது தருவதற்கு புரட்சித் தலைவர் சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மத்திய அரசின் அறிக்கையின் நகலை வேண்டுமானாலும் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு நான் காண்பிக்க விரும்புகிறேன். மூன்று வகையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

1. மிசா, டி.ஐ.ஆர். இவைகள் சம்பந்தப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள்.

2. ( Banned Association ) பான்ட் அசோசியேஷன் தொடர்பு கொண்டு வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தால் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

3. மற்றும் சட்டப்படி முறையாக விசாரணை செய்யப்படாமல் இருந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். முறையான விசாரணை என்றால் என்ன என்பதைப் பற்றி சுப்ரீம் கோர்ட்டில் நடந்த அயர்ன் அண்டு ஸ்டீல் கேஸ் 1961-ல் சொல்லப்பட்டு இருக்கிறது. அதில் 4 முறைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்த முறையில் ஏதாவது ஒரு முறை பின்பற்றப்படாமல் இருந்தால் அதை அட்ஜூடிகேஷனுக்கு விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்யாமல் கூட 7-ம் தேதியே அட்ஜூடிகேஷனுக்கு விட்டிருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் அதற்குப் பாராட்டுவார்கள் என்று கூட நான் எதிர்பார்த்தேன்.

(முற்பகல் 9.50)

திரு. க. சுப்பு : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். இப்படியே சந்தேகம் கேட்டுக் கொண்டே போகக் கூடாது. உட்காருங்கள்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (6) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : பேரவைத் தலைவர் அவர்களே,

“நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறை நுதலும் தரித்த நறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!”

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையிலே இந்த மன்றத்திலே பேசுவதற்குத் தான் வாய்ப்பு உண்டு. பாடுவதற்குக் கூட அனுமதி உண்டா? அப்படி என்றால், நான்கூட ஒரு பாட்டுப் பாடலாம் என்று நினைக்கிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்றத்தின் கடந்த கால நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும். பேசுவது போல், இதற்கு முன்பு பாடியும் இருக்கிறார்கள்.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, பாடுவதுபோல் நடிக்கலாமா என்பதையும் அறிய விரும்புகிறேன். முத்தமிழில் நாடகமும் ஒன்று. எனவே, நடிக்க அனுமதி உண்டா? (சிரிப்பு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய ரசனையைப் பொறுத்து நடிப்பதை தடை செய்வதா, வேண்டாமா என்று முடிவு செய்யவேண்டும். (பலத்த சிரிப்பு.)

**திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் :** சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த சட்ட மன்றத்தில் முதன்முதலாக உரையாற்ற வந்திருக்கின்றேன் என்ற அடிப்படையில், முதலில் தமிழ்த் தாய்க்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காகப் பாடினேனே தவிர, நான் என்னுடைய வல்லமையைக் காட்டிக் கொள்வதற்காக வரவில்லை. அப்படி தமிழ்த் தாய்க்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, தந்தை பெரியார் அவர்கள் வழியில், எங்களை எங்கோ முகவரி தெரியாமல் மூலைமுடுக்குகளில் இருந்த பலரை, நாட்டுக்குத் தலைவராகவும், நல்லறிவு பெற்ற அமைச்சர்களாகவும், தன்னுடைய பேச்சின் வலிமையாலும், எழுத்தின் தன்மையாலும் எங்களையெல்லாம் உருவாக்கிய எங்கள் சமுதாயத்தின் ஒளிச் சுடராக விளங்கிய பேறிஞர் அண்ணா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தப்பித்து வந்தான் அம்மா, பாவம் தனியாக வந்தான் அம்மா, காலம் கற்பித்த அடி தாங்க முடியாமல் தப்பித்து வந்தான் அம்மா என்பதுபோல் இல்லாமல், லஞ்ச லாவண்யங்களை வேட்டையாடும் வேட்டைக்காரனாக, அரச கட்டளையை ஒழுங்காக நிறை வேற்றும் காவல்காரனாக, காகித ஓடம் கடல் அலை மேலே போனதுபோல் போகாமல், நின்று நிதானித்து, அண்ணாவின் வழியில் நினைத்ததை முடிப்பவனாக, மக்கள் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றவராக, ஐந்தாண்டு காலம் எரிமலை என வெடித்துக் கிளம்பிய இன வெறிச் கூச்சலுக்கு மத்தியில், பொங்கும் கடலலை என உடனுக்குடன் வந்த அதிகார அடக்கு முறைகளுக்கு ஈடுகொடுத்து, கால் எங்கே கண் எங்கே என்ற கசாப்புக்கடை கொடுமைகள் பலவற்றிற்கு ஈடுகொடுத்து, வாலிபர்கள் பலரை களபலி தந்து, எங்களைப் போன்ற தொண்டர்களைத் தயார்ப்படுத்தி, புயல்போன்று கிளம்பிய அதிகார அடக்கு முறைகளை தன்னந் தனியாக நின்று சமாளித்து, தன் போர்க் கரங்களால் அண்ணா ஏற்றிய லட்சிய தீபத்தை அணையாது



[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

இன்றைக்கு நாட்டுக்கு கொண்டுவந்து, ஏழை எளியவர்களின் ஒளிவிளக்காக திகழ்கின்ற திராவிட சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்தச் சட்ட மன்றத்திலே நான் முதன்முதலாகப் பேசுகின்றேன். ஏற்கனவே இந்த சட்ட மன்றத்தில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவைகளைப் பற்றி நான் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். நான் பேரவைத் தலைவர் அவர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், எங்களுடைய காலம் வரையிலும் நீங்கள் மைக்கைப் பிடுங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எதிர்க் கட்சித் தரப்பிலே இருந்தாலும் சரி, ஆளும் கட்சித் தரப்பிலே இருந்து பேசுகின்றவர்களாக இருந்தாலும் சரி, அப்படிப் பேசுகின்றவர்களுக்கு முறையான வகையிலே பதில் சொல்வதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள்.

ஆகவே, சென்ற தடவை நடந்தது போல் மைக்கைப் பிடுங்குகிற கதைகள் எல்லாம் இல்லாமல் உண்மையான முறையில் ஜனநாயகத்தைக் காப்பாற்றித் தரவேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே எப்படிப் பேசவேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கெல்லாம் முன்னோடும் பிள்ளைகளாக, உதாரண புருஷர்களாக, எனக்கு முன்னாலே இருந்து கொண்டு எதிர்த்தரப்பில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும், சபையினுடைய முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்தச் சபை ஒழுங்காக, அமைதியாக நடைபெறுவதற்கான உத்தரவாதத்தை உங்களுக்குத் தந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் ஒரு வார காலமாக நடக்கின்ற நிகழ்ச்சிகளை நீங்களும் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள், நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் எல்லாம் ஆளுநர் உரைமீது பேசினார்கள். 17 மாத காலம் நடைபெற்ற சம்பவங்களை, அடக்குமுறைகளை, வன்முறைகளை எல்லாம் ஆளுநர் உரையிலே கொடுக்கவில்லை என்று

[1975 ஜூலை 15

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

எதிர்த்தரப்பில் இருக்கிறவர்கள் ஒருவர் பின் ஒருவராகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் அந்தப் 17 மாத கால சம்பவங்களைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை.

அந்தப் 17 மாதத்திற்கு முன்னால் 50 மாதங்கள் இந்த நாட்டிலே நடந்த அராஜகங்கள், நடந்த அடக்கு முறைகள் ஆகியவைகள் எல்லாம் இணைந்ததாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருப்பார்களானால் மெச்சத் தகுந்ததாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அப்படி அந்த 50 மாதங்கள் நடந்த அடக்கு முறைகளையும் சேர்த்து நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அருமைச் சகோதரர், உடன்பிறப்பு, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆளுநர் உரையில் புரட்சி இல்லையென்று சொன்னார்கள். புரட்சி இல்லை என்று சொன்ன அவர் ஒரு பத்திரிகையில் புரட்சிக் கதை படித்தேன் என்று சொன்னார்கள். அவர் படித்த பத்திரிகையை நானும் பார்த்தேன். அந்தப் பத்திரிகையில் அந்தப் புரட்சிக் கதைக்குப் பக்கத்திலே இரண்டு பக்கங்களைத் தள்ளிப் பார்த்தால் நிர்மலா என்ற கதை வருகிறது. அந்தக் கதையில் ஒரு புரட்சி வருகிறது. அந்தப் புரட்சிக் கதை நிர்மலாவில் என்ன இருக்கிறது என்று சொன்னால்—நிலா காய்கிறது; அந்தி மயங்குகிற வேளை; ஆடற்கலையில் சிறந்த நாயகியார் வரவுக்கோ காத்திருக்கிறாள். பாங்கியரை வெளியே அனுப்பி 'வருகிறாரா பார்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறாள். நாயகன் வருகிற வேளை; இரண்டு நிமிஷத்தில் நாயகன் வந்தான்; மங்கை—ஆடற்கலையில் சிறந்த மங்கை ஓடிப்போய் நாயகனைத் தழுவி மண்டபத்திற்கு அழைத்துச் செல்லுகிறாள்.

அவன் வந்து 10 நிமிடம் கழித்து கலையரசியின் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. நாயகி கதவைத் திறந்தாள்; கதவைத் திறந்தால் ஆச்சரியம் காத்திருக்கிறது. என்ன வென்றால் நாயகனுடைய தந்தை வந்து நிற்கிறார். நாயகியின் அன்றைய கதைக்கு யார் நாயகன், அவரா அல்லது அவரது அபிமான மகனா என்று புரியாத நிலையில் நாயகி கொல்லைக் கதவு வழியாக ஓடிவிட்டாள். இரண்டு நாட்கள் கழித்துப் பார்த்தால் கலை அரசி அவள் வீட்டில் இறந்து கிடந்தாள். எப்படி இறந்தாள்?



1977 ஜூலை 15]

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

கொலையா? தற்கொலையா? கொலை செய்யப்பட்டதாக ஊரிலே பேசப்படுகிறது இல்லை—தற்கொலை என்று சொன்னார்கள். ஆடற்கலை அரசி எப்படி இறந்தாள்? அடுத்த இதழில் காண்க என்று முடித்திருக்கிறார்.

அதிலே வருகிற புரட்சியைப் போல இதிலே எதிர் பார்க்கிறாரா என்று தெரியவில்லை.

'நீங்கள் பதவி ஏற்றபோது பெரிய ஆடம்பரமாகப் பதவி ஏற்றீர்கள்' என்று சொன்னார்கள். ஆடம்பரமாக ஒன்றும் பதவி ஏற்கவில்லை. அண்ணா அவர்கள் சிலைக்கு முன்னால் ஒரு மேடை அமைத்திருந்தோம். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலேயே குறிப்பிட்டார்கள். அந்த உரையைத் தான் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து ஆற்றினார்கள். 'நாங்கள் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனால் மீண்டும் உங்களிடம் சொல்லிவிட்டு வெளியே போவோம்; எப்படியாவது 'ஃபுல் டர்ம்'—முழு காலவரையறை தீரும் வரை இருக்க மாட்டோம்' என்று கூட அறிவித்தார்கள்.

புரட்சித் தலைவர் 1972 அக்டோபர் மாதம் வெளியே வந்தார்கள். அதற்குப் பின்னால் ஐந்தாண்டுக் காலம் இவர்கள் எப்படி ஆடம்பரமாக விழாக்களை நடத்தினார்கள் என்பதை ஒரு கணம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 10.00)

சென்னை மெரினா கடற்கரையில் சீரணி அரங்கில், புரட்சித் தலைவர் அவர்கள் வெளியே வந்தபிறகு, நடத்திய அத்தனை நிகழ்ச்சிகளையும் பார்த்தால் எம்.எஸ். விஸ்வநாதன் இல்லாமல் டி.எம். சௌந்திரராஜன் இல்லாமல் நடந்திருக்காது என்பதை நன்றாக அறிவீர்கள். அங்கேயுள்ள அறுபது மரங்களில் கத்தரிக்காய் பல்புகள் என்று சொல்வார்களே, அந்த பல்புகளை பல லட்சக்கணக்கான வண்ண விளக்குகளைப் போட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா உட்பட அத்தனை விழாக்களையும் நடத்தியிருக்கிறார்கள். கடற்கரையில் போட்ட அந்த விளக்குகளுக்காக 2 லட்சம் ரூபாய் வரையில் பணம் செலவு செய்து நடத்தினார்கள், ஆடம்பரமாக நடத்தினார்கள்.

[1975 ஜூலை 15

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

அவ்வளவு ஆடம்பரமாக விழாக்களை நடத்தியவர்கள், நாங்கள் அண்ணா சிலைக்குப் பக்கத்திலே ஒரு சிறிய மேடையை அமைத்ததற்காக எங்களை ஆடம்பரமாக நடத்தினீர்கள் என்று சொல்கிறார்கள்.

* *

இது மாதிரிப் பேசுவதற்கு நம் பக்கத்திலேயும் எங்கள் பகுதியிலேயும் இருக்கிறார்கள். இன்னும் ஒரு மாத்திரை கூடவே இழுப்பார்கள். ஆனால் நாங்கள் அவைத் தலைவர் அவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்ற முறையிலே நடந்துகொள்கிறோம். எப்படி இங்கே நடந்து கொள்ளவேண்டுமென்பதற்கு எடுத்துகாட்டாக முன்னோடியாக இங்கே நடந்து கொண்டவர்களும் முன்னே இருக்கிறார்கள். உணர்ச்சி வசப்பட்டுப் பேச எங்களுக்கும் தெரியும். *

என்று சொல்லித்தான் பொதுமக்கள் எங்களை உள்ளே அனுப்பினார்கள் உள்ளே இருந்தவர்களை வெளியே அனுப்பினார்கள் என்றால் அது அந்த அடிப்படையிலே கூட இருக்கலாம். * என்று சொல்வீர்களானால் இப்போது வந்திருப்பவர்கள் கூட வர முடியாத நிலைமை ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த முறையிலே அவர்கள் சொல்லாமல் வேறு முறையிலே * *

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கன்னிப்பேச்சிலே குறுக்கிட்டு விளக்கம் தரவேண்டிய அவசியமில்லை என்று நான் கருதினேன். ஆனால் ஒரு விளக்கம் சொல்லித் தீரவேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். * * என்று சொன்னது அவைக்குறிப்பிலே இடம் பெற்றிருக்கக்கூடாது. அவைத் தலைவர் அவர்களும் அதற்கு அனுமதியளித்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த மன்றத்திலே அவ்வாறு பேசப்பட்டதாக அவைக் குறிப்பிலே ஏறுவது நல்லதல்ல. தனிப்பட்ட முறையிலே ஒருவருக்கொருவர் அப்படிப் பேசக்கூடாது என்று சொல்லாமே தவிர. மாண்புமிகு அங்கத்தினரும் அதை சொல்லி சட்ட மன்றக் குறிப்பிலே இடம்பெற்றுவிடச் செய்யவேண்டுமென்ற

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-00—10-05ல் சில பகுதிகள்)



1977 ஜூலை 15]

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

முறையிலே பேசுவது சரியல்ல, ஆகவே அவைத் தலைவர் அவர்கள் இதிலே ஒரு முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நான் மேலும் ஒரு விவாதப் பொருளாக்க விரும்பவில்லை. அவர்கள் சொல்வது குறிப்பிலே இல்லை என்று சொன்னாலும் திரு. சுப்பு அவர்கள் சொன்னதை என் காதாலேயே கேட்டேன். அது குறிப்பில் இல்லாவிட்டாலும் அவர் சொன்னார், ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் தங்கள் உறுப்பினர்களைக் கொஞ்சம் அடக்கி வைத்திருந்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நான் பொதுவாக நல்ல நோக்கத்தோடு தான் சொன்னேன், ஆனால் தாங்கள் குறிப்பாக ஒரு பெயரையும் இணைத்துச் சொல்வது இன்னும் வருந்தத்தக்கது. அன்றைய தினம் 5, 6 பேர்கள் எழுந்து நின்று அந்தப் பக்கத்திலேயும் இந்தப் பக்கத்திலேயும் ஏதோ பேசிக் கொண்டார்கள். அந்த நேரத்திலே எதிர்கட்சித் தலைவரும் முதல்வரும் அவர்களை அமைதிப்படுத்தினார்கள். ஆனால் இப்போது சட்டமன்றத்திலே, * *

என்று சொன்னதாகச் சொல்வது அது அவைக் குறிப்பிலே இடம்பெற்று அச்சிலே ஏறிவிடும், அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். ஏற்கனவே பேசியதை உணர்ந்துதான் நான் சொன்னேன், தாங்களும் ஏற்கனவே இங்கே இருந்து அதை உணர்ந்திருக்கிறீர்கள். ஆகவே இந்தக் கட்டத்திலே அவைகள் அவைக்குறிப்புகளிலே இடம்பெற்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைச் சொல்லவில்லை. எனக்குள்ள கவலையெல்லாம் தங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அடிக்கடி இந்த அவையின் விதிகளை/மரபுகளை மீறுகின்ற முறையிலே நடந்து கொள்கிறார்களே, தாங்கள் சொல்லியும்கூட

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது. (முற்பகல் 10-00—10-05ல் சில பகுதிகள்)

[பேரவைத் தலைவர்] [1975 ஜூலை 15

ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்களே, அவைத் தலைவர் பல முறையும் சொல்லியும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார்களே.

அது மட்டுமல்ல, அவர்கள் பேசுகிற பேச்சே சில நேரங் களிலே மன்றத்தைப் பொருட்படுத்தாத நிலைமையிலே மன்றத் திலே உள்ளவர்களையே தாக்கியெறிந்து பேசக்கூடிய நிலைமையிலே இருக்கிறது. அந்த முறையை அவர்கள் தொடர்ந்தால் இந்த மன்றம் மன்றமாக இருக்காது. அதனாலேதான் நான் பேராசிரியர் அவர்களுக்கு அப்படிச் சொன்னேன். அவர்கள் சொன்னது என் காதிலே விழுந்தது. அது நடவடிக்கைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்காது. அப்படியும் அது நடவடிக்கைக் குறிப்பிலே இடம் பெற்று இருந்தால் நான் அதைப் பார்த்து நீக்கிவிடுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அதோடு விடுங்கள். நான் பொதுப்படையாக எதிர்க்கட்சித் தலைவர்களுக்குச் சொன்னேன்.

(திரு. எ. ரகுமான்கான் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அவர் பேச உரிமை உண்டு. நீங்கள் ஏன் நிற்கிறீர்கள். அவரும் நிற்கிறார், நீங்களும் நிற்கிறீர்கள். இது என்ன மரபு? அவர் சொல்லும்பொழுது தாங்கள் எழுந்திருக்கலாமா? அவரை அனுமதிப்பதும் அனுமதிக்காததும் என்னுடைய பிரச்னை. அவர் நிற்கும்பொழுது நீங்கள் நிற்கலாமா?

**திரு. க. சுப்பு :** ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார். என்னைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்களைப்பற்றிக் குறிப் பிட்ட பின்னால் தாங்களும் அந்தக் குறிப்பை ஏற்றுக் கொள்வதைப் போல் சொல்லியிருக்கும்பொழுது நான் என்னைப் பற்றிய விளக்கத்தைச் சொல்ல வேண்டாமா?



1977 ஜூலை 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களைப் பற்றி அவர் பெயர் சொல்லவில்லை. நான்தான் சொன்னேன். தயவு செய்து என்னுடைய முடிவைக் கேளுங்கள். நான் தலைவர்களிடம் சொன்னேன். எனக்கே வேதனையாக இருந்ததைச் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை. தாங்கள் நடந்து கொள்ளும் முறையை எதிர்க்கட்சித் தலைவர்களிடத்திலே சொன்னேன்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், இப்பொழுது பேசியவர் சொன்னார், அப்பொழுது நான் எழுந்திருக்கவில்லை, என்னைப்பற்றியோ அல்லது வேறு யாரைப்பற்றியோ சொல்லியிருக்கலாம். ஆனால் பேரவைத் தலைவரவர்கள் குறிப்பாக என்னைச் சொல்லுகிறீர்கள். அவர் சொன்னதிலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்று பேரவைத் தலைவருக்கே அப்படி அர்த்தம் வருகிறது என்றால் மன்ற உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் அந்த அர்த்தம் வருவதில் ஆச்சரியமில்லை.

நான் கருத்துக்களை வலியுறுத்துவதற்காகக் கொஞ்சம் வேக மாக இருப்பேனே தவிர மன்ற மரபுகளை ஒரு சந்தர்ப்பதிலாவது மீறியிருக்கிறேன் என்று சுட்டிக்காட்டினால் நான் வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். மரபுகளுக்கும், விதிகளுக்கும் உட்பட்டுத்தான் நான் பேசுகிறேன். ஒருமுறையாவது நான் அவற்றை மீறியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்களா? சுட்டிக் காட்டியிருக்கிறீர்களா?

பேரவை விதிகளுக்கும், மரபுகளுக்கும் நான் கட்டுப்பட்டவன். ஆனால் என்னுடைய உரிமைகளை யாராவது பறிக்க முயன்றால் நான் என்ன செய்ய முடியும், நீங்கள்தானே பாதுகாப்பு கொடுக்க வேண்டும், நீங்களே இப்படிச் சொன்னால் என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் சுப்பு அவர்கள் விதிகளுக்குப் புறம்பாகவோ, பாராளுமன்ற முறைகளுக்கு மாறாகவோ பேசுவதாக நான் சொல்லவில்லை. (ஆரவாரம்) எல்லா வற்றிற்கும் ஆரவாரம் செய்யலாமா? இதைத்தான் நான் சொல் கிறேன். மன்றத்தில் முறையான, ஒழுங்கான, அமைதியான நடவடிக்கைகளை நடத்துகின்ற அளவிற்கு ஒத்துழைக்க வேண்டும். அதிலே திரு. சுப்பு அவர்கள் கொஞ்சம் வேகம்

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 15

காட்டுகிருர்கள், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொஞ்சம் சுமுகப் படுத்தி ஒழுங்குமுறையைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டேன். அது தானே தவிர வேறென்றுமில்லை.

திரு. சுப்பு அவர்களது அறிவுரை எனக்குத்தான் என்று எடுத்துக்கொண்டு. விதிகளுக்குப் புறம்பாக இல்லாமல், பாராளு மன்ற வார்த்தைகளுக்குப் புறம்பாக இல்லாமல். கேலியும் கிண்டலும் இல்லாமல் இந்த மன்றத்திற்குத் தர வேண்டிய மரியாதையைத் தந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நாட்டு மக்கள் நம்மை இங்கே அனுப்பியிருப்பது நாட்டுக்கு நன்மை செய்ய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் :** நல்ல திட்டங்களை நிறைவேற்றவே தவிர இதுபோல வாக்குவாதங் களுக்காக அல்ல. இன்றையதினம் சட்டம் என்பது, நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய சட்டம், ஒழுங்கு என்பது திருக்குறள் என்று சொல்லலாம். உலகத்திலேயே மிகச் சுருக்கமாக ஒரு நாட்டினுடைய சட்டம் எவ்வளவு என்று கேட்டால் 50 கிலோ, 100 கிலோ இருக்கும் என்று சொன்னுல் அங்கே ஒழுங்கு நியதிகள் சரியாக இல்லை என்று சொல்வார்கள். எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகச் சட்டங்கள் இருக்கின்றனவோ அந்த நாட்டிலே நீதி இருக்கிறது, அமைதியிருக்கிறது என்று தான் அர்த்தமாகும். இந்தத் தெருவிற்கு மூன்று காவல் நிலையங்கள் இருக்கின்றன என்று சொன்னுல் அந்த அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டிய அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்ற பொருளிலே இருக்குமே தவிர வேறென்றுமில்லை.

காவல் துறையைப் பற்றியெல்லாம் சொன்னுர்கள். காவல் துறை மிகச் சரியாக நடக்கவில்லை என்ற அளவிற்கெல்லாம் சொன்னுர்கள். காவல் துறையினர் எப்படி எப்படியெல்லாம் கடந்த காலத்திலே பயன்படுத்தப்பட்டார்கள் என்பதனை நாம் அறிந்திருக்கிறேம்.



1977 ஜூலை 15]

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

(முற்பகல் 10.10)

சென்னை நகரிலே உங்களுக்குத் தெரியும்—ஒரு இரவு லீலா ராணி என்கிற நடிகை கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை வழக்கு எப்படி பயன்பட்டது என்று சொன்னுல் ஒரே இரவில் பெரும் தலைவர் பக்கமிருந்த ஒரு பத்திரிகை ஆசிரியர் மறுநாள் விடியற்காலை வேறு ஒரு அரசியல் கட்சிக்குப் போகிற அளவிற்கு பயன்படுத்தப்பட்டது. நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள் வதெல்லாம், அந்த லீலாராணி கொலை வழக்கு சம்பந்தமாக முறையாக என்ன நடந்தது என்பதனை, அந்த வழக்கினை மீண்டும் பரிசிலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இன்னென்று, ஆடற்கலையிலே சிறந்தவர் மலேசியா மகாலிங்கம். அவர் ஆடுகிற ஆட்டத்தை நீங்கள் பார்த்திருப் பீர்கள். அதை வெஸ்டர்ன்ஸ்டைல் என்று சொல்வார்கள். மேற்கத்திய நடனம், வடக்கத்திய நடனம், பரத நாட்டியம் எல்லாம் தேறிக் கற்றவர். அந்த ஆடற்கலை மகாலிங்கம் ஒரு நாள் நுங்கம்பாக்கம் தெருவிலே பிளாட்பாரத்திலே இறந்து கிடந்தார். அதற்கு என்ன காரணம் என்றுல், ஒரு தரப்பிலே சொல்லப்பட்டது, அவர் எங்கோ வராண்டாவிலே நின்று கொண்டிருந்தவர் கீழே விழுந்து இறந்து விட்டார் என்று சொன்னுர்கள்.

அவர் ஆடலிலே வல்லவர். எந்த அளவுக்கு உறுதியாகத் தன்னுடைய கால்களை நிறுத்தி ஆட வேண்டுமென்பது தெரிந்த அவர் சாதாரணமாக வராண்டாவிலே எந்த அளவிலே நிற்க வேண்டுமென்று தெரியாமல் கூட இறந்து போனுர் என்று சொன்னுர்கள். அவர் எப்படி இறந்து போனுர், அதற்குப் பின்னுலே என்ன நடந்தது, அதற்குப் பின்னுலே என்ன இருந்தது என்பதை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை—அதுவும் தமிழ் நாட்டுக் காவல் துறை இந்தியத் துணைக் கண்டத்திலே பெயர் பெற்ற காவல் துறை. நீங்கள் எல்லாம் நன்றுகத் தெரிந்து வைத்திருப்பீர்கள். நான் மாணவனுக இருந்தபொழுது ஒரு வழக்கு. திருநெல்வேலி-செங்கோட்டை பாசஞ்சர் வண்டியில் ஒரு டிரங்கு பெட்டியில் ஒரு முண்டம் இருந்தது. அது சென்னையிலே ஏற்றப்பட்டு திருநெல்

[1977 ஜூலை 15
[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிப்புத்தன்]

வேலிக்குப் போய் சேர்ந்தது. அதே போல் ராயபுரம் கடற்கரையில் ஒரு தலை கடலிலே மிதந்து வந்தது. அந்தத் தலையை எடுத்தார்கள். அந்தத் தலைக்கு யார் சொந்தக்காரர் என்று தெரியாது. திருநெல்வேலி செங்கோட்டை பாசஞ்சரில் இருந்த அந்த முண்டத்திற்குச் சொந்தக்காரர் யார் என்று தெரியாது. நம்முடைய தமிழ்நாடு காவல்துறை நம்முடைய துப்பறியும் துறையை லாவகமாகப் பயன்படுத்தி, அந்தத் தலை யாருக்குச் சொந்தம். அந்த செங்கோட்டை பாசஞ்சரில் கண்டுபிடிக்கப் பட்ட முண்டம் யாருக்குச் சொந்தம்—இரண்டும் ஒருவருக்கே சொந்தம் என்று கண்டுபிடித்தார்கள். சென்னையிலே பேனா கடை வைத்திருந்த ஆளவந்தார் தான் அது என்று * அந்த வழக்கை நடத்தினார்கள். அவ்வளவு திறமை பெற்ற காவல் துறை. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவைத் தலைவர் அவர்களே, * என்ற வார்த்தை, முறைதவறுனது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிப்புத்தன் : அவ்வளவு வலிமை படைத்த காவல் துறையினர் கடந்த காலங்களில் எப்படிப் பயன்படுத்தப்பட்டார்கள் ? அவர்களெல்லாம் மொபைல் ஆடியன்ஸாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்பதையெல்லாம் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் அப்படிப் பட்ட வழக்குகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினையிலே எதிர் தரப்பில் இருப்பவர்கள் வேகமாகப் பேசினார்கள். மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டபோது பல கோடி ரூபாயைக் கடைகளுக்குக் கட்டவேண்டிய தீர்வை யாகக் கட்டாதவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டு வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது. (முற்பகல் 10-10—10-15ல் சில சொற்கள்)



[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிப்புத்தன்]
1977 ஜூலை 15]

யார் யார் எவ்வளவு பணம் தரவேண்டியவர்கள் என்பதை எல்லாம், அவர்களிலே முக்கியமானவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம், முதலமைச்சர் அவர்கள் விசாரித்து அப்படிப்பட்டவர்கள் எல்லாம் அந்தத் தொகையைத் திருப்பிக் கட்டுவதற்கு வகை செய்யவேண்டும்.

அதுபோல சென்னை நகரில், இன்றையதினம் சாராயக் கடைகளைப் பற்றியும், கள்ளச் சாராயம் எந்த அளவுக்கு விற்கப் படுகிறது என்பதை எல்லாம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இது எந்தத் தரப்பிலே ?

சென்ற 2 மாதங்களுக்கு முன்னாலே ஒரு சம்பவம் நடந்தது. மைலாப்பூரிலே உள்ள ஒரு உணவு விடுதியில் யாரோ சாப்பிட வந்தார்கள். சாப்பிட வந்தவர்கள் தட்டிலே பாதி சாப்பிட்டு விட்டு வேறு கொண்டு வா என்று கேட்டிருக்கிறார்கள். பாதி சாப்பிட்ட பிறகு எப்படி கொண்டுவருவது என்று கேட்டதற்கு அந்த ஓட்டல் தொழிலாளியை அடித்திருக்கிறார்கள். அடித்தது மட்டுமல்ல. ஒரு நிமிடம் தொலைபேசியிலே தொடர்பு கொண்டார்கள். உடனே 12 டாக்சிகளில் அடியாட்கள் வந்திறங்கினார்கள். காவல் துறையில் 100-ம் நம்பருக்குப் போன் செய்தால் கூட வருவதற்குத் தாமதம் ஆகும். ஆனால் 10, 12 வண்டிகளிலே வந்து இறங்கி அந்தக் கடையைச் சூறையாடினார்கள். அந்த அளவுக்கு மிக வலிமை பொருந்தியவர்களாக கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது மிகக் கடுமையாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே ஆற்றிய உரையினை நான் மனமாரவுடன் வரவேற்றுப் பேசுவதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அரசு பேரறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழ்

உணர்வில் மிகுந்த பற்றுக் கொண்டிருக்கிறது, என்பதை உரையினில் காணும்போது ஆளுநருடைய உரைக்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உரையை விவசாயப் பெருங்குடி மக்கள் இதயம் குளிர வரவேற்கிறார்கள் என்பதை ஆளுநர் உரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரிய காலத்தில் பாசன வசதி தருவதற்கு உறுதி தந்திருப்பதை நான் வரவேற்பதோடு நானும் ஒரு விவசாயி என்ற முறையில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதோடு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குத் தகுந்த வருவாய் கிடைக்க உறுதி தந்திருப்பதை மகிழ்வோடு வரவேற்கிறேன். வாங்கி உபயோகிக்கின்ற பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கும் என்ற உரைகேட்டு சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் மீது இந்த அரசு எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதை எண்ணும் போது நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இப்போது இருக்கிற 9,300 நியாயவிலைக் கடைகளை 16,000 கடைகளாக உயர்த்தியிருப்பதைக் காணுகின்ற நேரத்தில் தமிழகம் முழுவதுமே இந்த அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றது.

கிராம மக்களின் அன்றாட பிரச்சினைகளில் இந்த அரசு கொண்டுள்ள நல்ல எண்ணத்தை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆளுநருடைய உரையைக் கேட்கிற நேரத்தில் ஒவ்வொரு பகுதியிலும் பேரறிஞர் அண்ணாவின் கனவுகள் நனவாக்கப்படுகின்ற சூழ்நிலையை உணர்கிறோம்.

ஒரு சமயம் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். "இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் மதுவிலக்கைக் கைவிட்டாலும் தமிழகத்தில் நான் மதுவிலக்கைத் தீவிரப் படுத்துவேன்" என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் இந்த அரசு அண்ணாவின் இதயக்கனி புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவோம் என்ற உரைகேட்டு தமிழக தாய்மார்கள் இந்த அரசைப் பாராட்டுவதோடு அண்ணாவின் உண்மையான தம்பிகள் யார் என்று அடையாளம் கண்டு கொண்டார்கள்.





'மக்கள் தீர்ப்பே, மகேசன் தீர்ப்பு' என்றார்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதை உறுதிப்படுத்துகிற வகையிலே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், நகராட்சித் தலைவர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வகை செய்வோம் என்று குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

கல்வித் துறையில் விசேஷ அக்கறையை இந்த அரசு காட்டும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருந்தாலும் இந்த அரசு ஏ, பி பிரிவுகள் இணைப்புப் பிரச்சினையில் அக்கறை காட்டி. பெரும்பான்மையான 'பி' பிரிவினர்களின் நீண்ட கால கோரிக்கையான 'ஏ, பி' பிரிவுகள் இணைப்பை ஏற்படுத்துமென உறுதியோடு நம்புகிறேன்.

சில தனியார் கல்லூரிகள் நிர்வாகம் சீராக செயல்படாமல் வருடக்கணக்கில் ஆசிரியப் பெருமக்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் ஆசிரிய சமுதாயம் வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள். ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமான புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசு, ஆசிரியர்கள் அவலநிலையைப் போக்குவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என்று உளமார நம்புகிறேன்.

(முற்பகல் 10.20).

சுதந்திரம் கிடைத்து முப்பது ஆண்டுகள் ஆகியும் எனது தொகுதியான ஆலங்குளத்தைப் பொறுத்தவரையில் இன்னும் சாதாரண பிரச்னைகளே தீர்க்கப்படாமல், சாலை வசதி இல்லாமல், குடிதண்ணீர் வசதி, மின் வசதி, பஸ் வசதி இல்லாமல், ஏழ்மையால் மக்கள் வாடிக்கொண்டு இருக்கின்ற காட்சியைப் பார்க்கிறேன். அந்த நிலைகளெல்லாம் இந்த அரசின் சீரிய திட்டங்களால் மாற்றியமைக்கப்படும் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

எனது தொகுதி ஆலங்குளத்தில் இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கும் முன்னாள் முதல் அமைச்சர் அவர்களால் பஸ் நிலையம் கட்ட நாட்டப்பட்ட அடிக்கல் நாலாண்டுக்காலம் ஆகியும் அடிக்கல் அளவில் தான் இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த பஸ் நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. கருப்பசாமி பாண்டியன்] [1977 ஜூலை 15

அதற்குப் பிறகு, வற்றாத சிற்றாறு என்று சொல்வார்கள். அது இன்றைக்கு வறண்டு போய் விட்டது. நெல்லை மாவட்டத்திலேயே கடம்பா குளத்திற்கு அடுத்த பெரியகுளம் மானூர் குளம். அந்தப் பெரிய குளத்திற்கு சிற்றாற்றில் அணைகட்டி பாசன வசதி எடுத்தால் 10,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி கிடைக்கும். முப்பது ஆண்டுக்காலமாக அதைப்பற்றி தெரிவித்தும், எந்த விதமான நடவடிகையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவலமான நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய ஏழை மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அரசாவது நிச்சயமாக அந்த ஆலங்குளம் மக்களின் அவல நிலையைப் புரிந்து கொண்டு, அந்தப் பகுதி மக்களின் வறட்சி நிலையைப் போக்க அக்கறை காட்டும் என்று உளப்பூர்வமாக நம்புகிறேன். கோடகன் கால்வாயில் இருந்து கங்கைகொண்டான் குளத்திற்குக் கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்தில் இந்த உரையில் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், விவசாயிகளின் வேதனையை நீக்கவும், தொழிலாளிகளின் துயர் துடைக்கவும், கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரை நிறுத்துவதற்கும், கிராம மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், நகரங்களின் குடி தண்ணீர், மருத்துவ வசதிகளைப் பெருக்கவும், இல்லாமையைப் போக்கவும், கல்லாமையைக் களைந்தெறிவதற்கும், தமிழ் மக்களின் மொழி உணர்வு இம்மியளவும் பாதிக்கப்படாமல் பேணவும், தமிழறிஞர்களின் ஏழ்மை நீங்கிடவும், தமிழ் மொழி இனம், கலாச்சாரம் புகழுடன் ஓங்கவும், ஒட்டு மொத்தத்தில் அண்ணா காட்டிய வழியில் தமிழக மக்கள் புதுவாழ்வு பெறவும் ஆளுநரின் உரையில் உள் அர்த்தங்கள் நிரம்ப இருப்பதை நான் உணர்வதால் மேதகு ஆளுநரின் உரையை உளமார வரவேற்று, இந்த வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி கூறி உரையை முடித்து அமருகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சிகாமணி. 10-30 மணிக்கு குறிப்பாக முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பொ. சிகாமணி :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது



1977 ஜூலை 15] [திரு. பொ. சிகாமணி]

பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரை பாராட்டுதற்குரிய ஒன்றாகும். இங்கே நடந்து முடிந்துள்ள தேர்தலை அடுத்து மக்களாட்சி மலர்ந்து இருக்கிறது என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பது மிகவும் பொருத்தமாகும். லஞ்ச, லாவண்யம் ஒழிப்பு, நீதித் துறையில் நேர்மை இவைகளையெல்லாம் கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நீதித் துறையில் நேர்மை இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கடமைகளில் ஒன்று என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் வசிக்கும் ராயபுரம் பகுதியில் ஒரு கொலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்து இருக்கிறது. அந்தக் கொலையைப் பற்றி எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் உறுப்பினர் பொன்னுரங்கம் கூட அறிவார்கள். ஒரு இஞ்சினியரின் மனைவி கொலை செய்யப்பட்டு இருக்கிறார். அந்த இஞ்சினியரின் பெயர் துரைராஜ். அந்தக் கொலை போலீஸ் நிலையம் அருகாமையிலேயே நடந்து இருக்கிறது. அந்த விவரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அது பத்திரிகைகளில் வந்து அல்லோலகல்லோலப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக 'அலை ஓசை' பத்திரிகையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வந்து இருக்கிறது. அந்தக் கொலை போலீஸ் துறைக்கு ஒரு சவாலாக இருக்கும் வகையில் நடந்து இருக்கிறது. இதுவரையில் அந்தக் கொலை பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கொலையைப் பற்றி நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லை. இதற்கு முன்னாள் போலீஸ் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொலையைப் பற்றி விஷயம் எதுவுமே தெரிய வராத காரணத்தால், இன்றையதினம் காவல் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கொலையைப் பற்றி மறு பரிசிலனை செய்து நீதி வழங்க வேண்டும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில், மத்திய—மாநில உறவுகள், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே சுமுகமான உறவு இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில்

[திரு. பொ. சிகாமணி] [1977 ஜூலை 15

கருநாடக மாநிலத்திற்குச் சென்று குடிநீர்ப் பிரச்சினைக்கு முடிவு கண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது.

இந்த உரையில் மொழிப் பிரச்னை பற்றி குறிப்பிட்டிருப்பதும் வரவேற்கத் தக்கதாகும். இந்த பிரச்சினையில், ஒரு விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய சர்க்கார் வேலைகளுக்கு வரும் விளம்பரங்களில் "ஹிண்டி நோயிங் வில் பி கிவன் ஃபிரபரன்ஸ்" — இந்தி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் — என்று இருப்பதால் இம்மாநில மக்களுக்கு அந்த வேலைகளுக்கு வாய்ப்புக் குறைந்து விடுகிறது. எனவே, இதில் தக்க கவனம் செலுத்தி, மத்திய சர்க்காருக்கு இது பற்றி ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினை பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். எங்கள் திருவொற்றியூர் பகுதியில், தண்ணீர் என்ற நிலையில், விஷத்தைத் தான் அருந்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்பது ஆண்டுகால சாதனைகள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற முந்தைய அமைச்சரவை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன்., எனவே, தற்போதைய புதிய முதலமைச்சர் அவர்கள்—புரட்சித் தலைவர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் உண்மையிலேயே பாராட்டுவதற்கு உரிய ஒன்றாகும்.

ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் அமைய இருக்கின்றன என்பதையும் இந்த கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுவதற்கு உரிய ஒன்றாகும். ஆக, இந்த மேதகு கவர்னர் உரையில் முக்கியமான பிரச்சினைகளான, குடிநீர்ப் பிரச்சினை, மாநிலங்களுக்கிடையே உறவுகள், இந்திப் பிரச்சினை போன்ற முக்கியமான பிரச்சினைகள் இடம் பெற்றிருப்பது பாராட்டுவதற்குரிய ஒன்று என்பதைக் கூறி, இந்த கவர்னர் உரையைப் பாராட்டி, விடை பெறுகிறேன்.

* திரு. எம். ஏ. ஜெயவேலு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரை மீது இங்கே சில வார்த்தைகளைக் கூற அனுமதித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 ஜூலை 15] [திரு. எம். ஏ. ஜெயவேலு]

ஆளுநர் அவர்களுடைய உரையிலே ஒவ்வொரு வார்த்தையிலும் ஒவ்வொரு சொற்றொடரிலும் மறைந்த அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளும், எண்ணங்களும் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்திருக்கிறது என்பதும், தமிழ்நாட்டை நோக்கியுள்ள ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு காண்கின்ற வகையிலேயும் அமைந்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, அண்டை மாநிலங்களோடு இருக்கின்ற தொடர்புகளைப் பற்றி இங்கே அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள், அவர் இந்த உரையை ஆற்றிச் சென்ற சில நாட்களுக்குள்ளாகவே, புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, சொன்னதைச் செய்து காட்டி முடித்திருக்கிறார்கள். ஆனாலும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், இதை வரவேற்பதற்குப் பதிலாக, கர்நாடக மாநிலத்தோடு ஒரு தற்காலிக ஏற்பாட்டைச் செய்து கொண்டதை வரவேற்பதற்கு பதிலாக, எதிர்ப்பதற்காக, நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கொடுக்கின்ற தண்ணீருக்குப் பதிலாக, நாம் ஓரளவு மின்சாரத்தைத் தருகிறோம் என்ற அந்த இலாபகரமான ஏற்பாட்டை உணர்ந்தும்கூட, அந்த நல்ல செயலை புரட்சித் தலைவர் அவர்கள் செய்து விட்டார்களே, அவர் செய்யக் கூடாது என்ற நிலையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் பேசியிருக்கிறார்கள். "மகன் இறந்தாலும் பரவாயில்லை. மருமகள் தாலி அறுக்க வேண்டும்" என்ற உதாரணத்திற்கேற்பத்தான் அவர்களுடைய எண்ணம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.30)

அடுத்தபடியாக, நமது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர் அவர்கள் பேசும்போது மதுவிலக்கைப் பற்றி அண்ணல் காந்தியார் அவர்கள் இங்கே பிரச்சாரம் செய்தார்கள். அதற்குப் பிறகு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அதற்குப் பிறகு அமரர் அண்ணா அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அதற்குப் பிறகு வந்த தலைவர் என்ன செய்தார் என்று சொல்லாமல் விட்டு விட்டார்கள். அமரர் அண்ணா அவர்களுக்குப் பிறகு வந்தவர் மதுவிலக்கைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அதைச் செயலற்றதாக்கி விட்டார்கள். இன்றையதினம் அதற்குப் பிறகு வந்துள்ள புரட்சித் தலைவர் அவர்கள் தான் மதுவிலக்குப்

பிரச்சாரத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள் என்பதனால் அன்று அவர்களின் கொள்கையைப் பிரதிபலிக்கிறவர் புரட்சித் தலைவர் தான் என்பதை எதிர்க்கட்சி மெம்பர் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டுமானால் இங்கே அடிக்கடி பேசுகின்ற திரு. சுப்பு அவர்கள் கூட, பேரவைத் தலைவரைப் பார்த்து, '(புரட்சித் தலைவர் கூட அனுமதி அளிக்கிறார். என்மீது பரிவு காட்டுகிறார், நீங்கள் தான் அனுமதிக்கவில்லை' என்று ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். இப்படி அன்று அவர்களின் உண்மையான வாரிசு புரட்சித் தலைவர் தான் என்பதை அந்த அளவு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது நோட்டமும், நாட்டமும் புரட்சித் தலைவர்பால் சென்றுவிட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள், குதிரைப் பந்தயம் என்ன ஆயிற்று என்று. அதைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். குதிரை முன்னால் போனால் அடிக்கும், பின்னால் வந்தால் உதைக்கும் என்ற வகையில் அது பற்றி வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றுவிட்டது. இன்றைக்கு அதைப்பற்றிய முடிவு அங்கே இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்து எந்த வித அதிகாரமும் இல்லை என்பது தெரிந்தும் எந்த அளவு பொறுப் பாகப் பேசுகிறார்கள் என்பதை அறிந்து உண்மையிலே வருத்த மாக இருக்கிறது.

அதற்கடுத்தபடியாக, இங்கே ஜனநாயகம் கொலைசெய்யப் பட்டது என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட தொளாயிரம் கொலை வழக்குகளை நான் நடத்தியுள்ளேன். ஆனால் இங்கேயும் வந்து கொலை, கொலை என்று பேசுகிறார்கள் என்று வியந்து போனேன். அந்த அளவு ஜனநாயகம் கொலை இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றத்தைப் புரிந்த ஒருவரைக் கைது செய்ய, சம்மன் அனுப்புவது வாரண்டு அனுப்புவது என்ற நிலை இருக்கிறது. கொலைக்குற்றம் செய்தவர்களைக் கூட போலீஸ்காரர்கள் கைது செய்யலாம், கைது செய்யாமல் இருக்கலாம். குற்றத்தின் தன்மையைப் பொறுத்து நோட்டீஸ், சம்மன், வாரண்டு போன்ற வைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் சமீபத்தில் நடந்த வரலாற்றைப் பார்த்தால் புரட்சித் தலைவர் அவர்கள்





அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து, நிர்வாகத்தில் இருந்தவர்கள் எந்த அளவுக்கு லஞ்ச லாவண்ய ஊழலை நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி வந்தார்கள். அதற்குப் பிறகும் நிலைமை மோச மான உடனே குடியரசு தலைவரின் ஆட்சி இங்கே பிரகடனப் படுத்தப்பட்டது.

உடனடியாக அந்த முடிவை மேற்கொள்ளாது நோட்டீஸ் கொடுத்து கேட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? * ,

திரு க. அன்பழகன்: ஒரு வழக்கறிஞராக இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர் பேசும்போது * *
என்று சொல்லலாமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் இந்த அவையில் ஏற்கனவே உறுப்பினராக இருந்தவர்தான். அந்த நிலையா இருந்தது? இந்தக் கருத்து அவைக் குறிப்பில் இடம் பெறுவதை அவைத் தலைவர் அனுமதிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *

திரு. எம். ஏ. ஜெயவேலு : *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் பொறுப்புடன், ஆதாரத்துடன் பேச வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். *
என்று உறுப்பினர் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட ஆணையிடுகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: அதை இருந்திருக்காது. ஏதோ ஏதோ செய்திருப்பார்கள் என்றுதான் சொன்னேன்.

நோட்டீஸ் கொடுப்பதா இல்லையா என்பது குற்றத்தைப் பொறுத்திருக்கிறது. கோதுமை பேர ஊழல் மீது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மீது இன்றுகூட அவர்கள் கைது செய்யப் படவில்லை. ஏனென்றால் அவர் நியாதி ஆகிவிடமாட்டாரா என்ற எண்ணம்தான். ஆகவே, அவர்கள் கைது செய்யப்படவில்லை. நோட்டீஸ் கொடுப்பது என்பது நிலைமையைப் பொறுத்துத்தான் கொடுக்கப்படுகிறது. நோட்டீஸ் கொடுப்பதா இல்லையா என்பது

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது [முற்பகல் 10-30—10-35-ல் சில பகுதிகள்].

குற்றத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்று கூறி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். முறையாக, பாராளுமன்ற முறைப்படிப் பேசுவதால் நம்முடைய மன்ற மரபும், பண்பாடும் காப்பாற்றப்படும் என்பதோடு அடிக்கடி நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிற முறைகளைக் கையாண்டால் நிச்சயமாக அது வேதனைக்குரிய விஷயமாக இருக்கும் என்பதால் உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒழுங்காகவும் பாராளுமன்ற முறைப்படியும் பேசவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பெற்ற ஆளுநர் அவர்களுடைய உரை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க முன்வந்துள்ளேன்.

அதற்கு முன்பு என்னுடைய நண்பர்கள் பலர் ஆளும் கட்சியில் அமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். திருமண வீட்டில் மணமக்களை வாழ்த்தும்போது கூட, அழைப்பு பெற்றவர்கள் அனைவரும் வருவார்கள், வாழ்த்திவிட்டுச் செல்வார்கள். ஆனால் மணவீட் டாரின் அண்ணனோ தம்பியோ, உற்றார் உறவினரோ வாழ்த்திய பிறகும் அந்தக் குடும்பம் எவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருக் கிறது என்பதில் மிகுந்த அக்கறையோடும், சில நேரங்களில் ஒழுங்கு தவறுமேயானால் மணமக்கள் நல்ல முறையில் இல்வாழ்வு நடத்திட வேண்டும் என்று எடுத்துச் சொல்கிற அறிவுரை கூறுகிற போது பண்போடும்,

"நகுதற் பொருட்டன்று நட்டல்மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்பொருட்டு".

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கொப்ப நடந்து கொள்வதும் உண்டு. வாழ்த்திய நெருங்கிய உற்றார் உறவினர்கள் எப்படி அந்த மண மக்களின் வாழ்க்கை நடைபெறுகிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிப்பார்களோ அதேபோல்தான் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி ஆளும் கட்சி எவ்வாறு



இயங்குகிறது என்பதை உன்னிப்பாக திராவிட முன்னேற்றக் கழ கத்தின் சார்பாகக் கவனித்து ஆக்கபூர்வமான யோசனைகளை ஆளும் கட்சிக்குத் தெரிவிக்கிற கடமை உணர்ச்சியோடு எதிர்க்கட்சியி னுடைய பொறுப்புக்களை இங்கு நிறைவேற்றுவோம் என்பதை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சரவையை வரவேற்று, மக்கள் தீர்ப்பை ஏற்று அமைச் சரவையில் வீற்றிருக்கிற என்னுடைய இனிய நண்பர்கள், பழைய நண்பர்கள் பலரை வாழ்த்துகிற அதே நேரத்தில் உரையாற்றிய ஆளுநர் அவர்களையும் நான் தனிப்பட்ட முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால நெருக்கடிக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர் களில் ஒருவர் இன்றையதினம் தமிழகத்தினுடைய ஆளுநராகப் பொறுப்பேற்றிருக்கிற பெருமை தங்கிய பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் ஆவார்கள். இந்தியாவிலே நடைபெற்ற இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் தன்னையும் ஒரு வீரராக இணைத்துக் கொண்டு இந்தியா பெற்ற சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக குரல் கொடுத்த காரணத் திற்காக அவர் பரோடா வெடி குண்டு வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்டு, நல்லவேளையாக இந்திரா காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்து இருக்குமேயானால் ஆயுள் தண்டனை பெற்ற கைதியாக இருக்க வேண்டியவர், அது தொடராத காரணத்தால் நமக்கு ஆளுநராகக் கிடைத்திருக்கிறார். எனவே அவரையும் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

(முற்பகல் 10-40)

ஆளுநர் அவர்களை வாழ்த்துகின்ற நேரத்தில், அரசாங்கத் தினுடைய கொள்கை எது என்று கருதப்படுகின்ற ஆளுநர் உரையைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை எடுத்துக்கூறுவது என்னுடைய தலையாய கடமையாகும். ஆளுநர் உரை எப்படியிருக்கிறது என்று கேட்கிற நேரத்தில் முதல் தோற்றத்தைப் பற்றி சொல்லுகின்ற கருத்துக்கும். அதன் பிறகு ஆழ்ந்து கவனித்து அதில் இருக்கின்ற கருத்துக்களைப்பற்றி சொல்லுகின்ற கருத்துக்கும் ஓரளவு வேறுபாடு இருக்கலாம்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாவற்றையும் பாராட்டிக் கொண்டேயிருப்பார்கள் என்று ஆளும் கட்சியினர் எதிர் பார்ப்பதும், எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டேயிருக்க

வேண்டும் என எதிர்க்கட்சியினர் எண்ணிக்கொண்டிருப்பதும் தவறு. பாராட்ட வேண்டியதை பாராட்டி ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துச்சொல்லி, எவை எவை தவறு உடையவை, திருத்தப்பட வேண்டியவை என்பதை கூறுகின்ற பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்கின்றது.

அந்தவகையில் ஆளுநர் அவர்களுடைய உரையில் மத்திய மாநில உறவைப்பற்றி கூறப்பட்டிருக்கின்ற கருத்து வரவேற்கத் தக்க ஒன்றாகும். "மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ் நாட்டினை வளம் கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்" . . . இது ஆளுநர் உரையில் உள்ள பகுதியாகும்.

ஆளுநர் உரையின் இப்பகுதி இருப்பதற்கு வரவேற்பு தெரிவிக்கின்ற அதேநேரத்தில் நம்முடைய உரிமைக்குரல், மேலும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு, கல்வி, மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்குச் செல்லுகின்ற சங்கடமான சூழ்நிலையும், மத்திய போலீசாரை மாநில அரசை கேட்காமலேயே தன்னுடைய விருப்பப்படி மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுப்பி வைக்கலாம் என்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

ஆளுநர் உரையில் மத்திய மாநில உறவுபற்றி இவ்வாறு கூறப் பட்டிருப்பதற்குப் பதிலாக வேறு ஒன்றையும் குறிப்பிட்டு இருப்பார்களேயானால் நாங்கள் மெத்தவும் மகிழ்ச்சி அடைந் திருப்போம். 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ம் நாள் இம்மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டு ஏப்ரல் 20-ம் நாள் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சி தீர்மானத்தை நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த தீர்மானத்தில் உள்ள வாசகங்கள் இன்றைக்குக் குறிப்பிடப்பட்டிருக்கின்ற வாசகங்களை விட கடுமை



யானவை என்று சொல்ல மாட்டேன். நம்முடைய உரிமைகள் எப்படி வலியுறுத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தன என்பதைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அப்போது இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகம் . . . "பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றி செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாக திருத்தப்படவேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது . . ." என்கின்ற தீர்மானம் 1974-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் நாள் இந்த மாமன்றத்தில் நிறைவேறியது.

அந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்த பிறகு, தொடர்ந்து பேசியவர் திரு. ஆலடி அருணா அவர்கள். இன்றைக்கு நாடாளு மன்ற உறுப்பினராக இருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த நேரத்தில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு கருத்துக்களை நான் இங்கே கூறிட விரும்புகிறேன். 1945-ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில், மாநில சுயாட்சி கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், 1947-ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் பண்டித நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தைப்பற்றி பேசுகையில், "மாநிலப்பகுதிகள் என்று சொல்லப்படுபவை அரசியல் சட்டத்தில் தனித்து, சுயாட்சி உள்ள பகுதியாக, சுதந்திரமாக செயல்படும், இதற்கான அதிகாரங்களும் அளிக்கப்படும்", என்பதை பண்டித நேரு அவர்கள் சுட்டிக்காட்டியதையும் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அப்போது எதிர்க் கட்சி வரிசையிலே இருந்த அன்றைய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லுங்கள்.

திரு. மு. கருணாநிதி: அப்போது நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகத் தான் இருந்தீர்கள். எனவே, முதல்வர் அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். அன்றைக்கு இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற நண்பர் எட்மண்ட் அவர்களை (பழகிய தோஷத்தால் பெயர் சொல்லும் உரிமை எடுத்துக் கொள்கிறேன்) துணைத் தலைவராகக் கொண்ட அந்தக் கட்சியின் சார்பில் பேசியவர்கள் மாநில சுயாட்சிக் கொள்கையை எதிர்த்தார்கள் என்றாலும், ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்து என்னவென்றால், 'மாநிலத்திலே இருக்கின்ற ஆட்சி நல்ல ஆட்சியாக இருந்தால், மாநில சுயாட்சி கேட்பதற்கு உரிமை இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக மாநில சுயாட்சி கேட்போம். அப்போது கொடுக்க வேண்டுமென்பதில் சந்தேகம் கிடையாது' என்று சொன்னார்கள்.

அப்படி அவர்கள் சொன்னவுடனே, அப்போது அவருக்கு நான் ஒரு உத்திரவாதம் கொடுத்தேன். 'அப்படி நீங்கள் மாநில சுயாட்சி கேட்கும்போது ஒருவேளை நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தால் நிச்சயமாக அதை ஆதரிப்போம்' என்ற பரந்த மனப்பான்மையோடு அப்போது எடுத்துச் சொன்னேன். நீங்கள் இப்போது ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள். எனவே, இப்போது நான் ஆளுங்கட்சிக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 'எந்தக் கட்சி கேட்கிறது, எந்தக் கட்சி ஆளுங் கட்சியாக இருந்து கேட்கிறது என்றில்லாமல், இன்றுள்ள ஆளுங்கட்சி மாநில சுயாட்சியை, இந்தக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றினாலும் அல்லது அந்தக் கோரிக்கையை டில்லியை நோக்கி வற்புறுத்த வேண்டுமென்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம், கேட்பது யார் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், கேட்கப்படும் விவகாரம் என்ன என்பதிலே தன்னுடைய தனிக் கவனத்தைச் செலுத்தி, மற்ற எந்தப் பிரச்னைகளிலும் ஈடுபடாமல், நீங்கள் அல்லவா கொண்டு வந்திருக்கிறீர்கள், உங்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து விடுவதா என்றெல்லாம் தேவையற்ற பிரச்னைகளுக்கெல்லாம் செல்லாமல் நிச்சயமாக அந்தத் தீர்மானத்தை 'ஆதரிப்போம், ஆதரிப்போம், ஆதரிப்போம்' என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள அத்தனை பேருக்கும், ஆளும் கட்சிக்கும் உறுதி கூறுகின்ற வகையிலே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (ஆரவாரம்)



பேறிஞர் அண்ணா அவர்கள், 1968 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில், இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். "மேல் அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்திருக்கிறது. மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர, அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல". இது 1968 ஆம் ஆண்டு மாநில சுயாட்சி மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கூறிய கருத்தாகும்.

அது மாத்திரமல்ல; மேலவையில் கவர்னர் உரையின் மீது 1967 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகின்றபோது கூட ஒரு அழகான விளக்கம் அளித்தார்கள். இதுதான் அது. "மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் உள்ள தொடர்பு பற்றி நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு சில முறைகளில் ஐயப்பாடுகள், அச்ச உணர்ச்சிகள் தோன்றியுள்ளன. அவை தேவையற்றது. அதே நேரத்தில், மத்திய சர்க்கார், , மாநில சர்க்கார் சரியாக நடக்கிறதா என்று பார்த்துக் கொள்வதற்காக இருக்கிற சட்டாம்பிள்ளை என்ற மனப்பான்மையை விட்டுவிட வேண்டும். இந்த மனப்பான்மை இருக்கின்ற வரையிலே மாநில சர்க்கார் உள்ளத்திலே அருவருப்பு உணர்ச்சி நிச்சயமாகத் தோன்றும். இதையெல்லாம் சொல்கிறபோது, சிலர் இவன் விட்டுவிட்டதாக வெளியே சொல்கிற திராவிட நாட்டை மறைத்து, இப்போது கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் சந்தேகப்படுகிறவர்கள், அவர்களே நிலைக்கண்ணாடி முன் நின்றுகொண்டு இது என்ன பயங்கர உருவம் என்று அவர்களே சொல்லிக் கொள்ளக் கூடும்" என்று அண்ணா குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல், அளவுக்கு மீறிய அதிகாரக் குவியல்கள் இன்றையத் தினம் மத்திய சர்க்காரிலே நிறைந்து கிடக்கின்ற காரணத்தினாலேதான், அவர்கள் எந்த நேரத்திலும், எந்த ஆட்சியையும் கவிழ்த்து விடலாம் என்கின்ற எண்ணம்கொண்டு, அந்த அடிப்படையிலே இயங்கிக் கொண்டு வருகின்றார்கள். நான் எந்தெந்த ஆட்சிகள், எப்போது கவிழ்க்கப் பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களுக்குள் நுழைய விரும்ப வில்லை. மத்திய சர்க்கார் தற்போது தனக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு, எந்த மாநில அரசைக் கவிழ்த்தாலும், அதை திராவிட

முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளாது என்பதை பல நேரங்களில் நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பீகார் மாநிலத்திலே போராடிய நேரத்திலே கூட, நாங்கள் அந்தப் போராட்டத்தின் தன்மையை வரவேற்றோமே தவிர, ஆதரித்தோமே தவிர, மத்திய அரசு பீகார் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று கொண்டுவந்த கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லை; ஏற்றுக்கொள்ளவில்லை.

(முற்பகல் 10-50)

காரணம், இப்படி மத்திய அரசிடத்தில் போய் சொல்லி மாநில அரசைக் கவிழ்க்கின்ற வேலையை நாம் ஊக்கப்படுத்தி விடுவோமானால், மேலும் மேலும் மத்திய அரசு இஷ்டம் போல் மாநில அரசுகளைக் கலைக்கின்ற உரிமையை மிக வலிவோடு பெற்று விடுகிறது. அந்த வகையிலேதான் அன்றைக்கே அந்தக் கருத்துக்கு மாறுபட்டவர்களாக இருந்திருக்கிறோம்.

கவர்னர் அவர்களுடைய உரையில் இன்னொன்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. "தமிழ்நாட்டில் 17 மாத காலம் நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று. . ." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 'நீண்ட' என்பதற்குப் பிறகு 'கமா' போட்டிருப்பதைப் பல உறுப்பினர்கள் சரியாகப் பார்க்காமல்,"17 மாத காலம் நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி" என்ற வகையில் வைத்துக் கொண்டு இரண்டொருவர் வியாக்கியானம் செய்தார்கள். "நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி" என்று உள்ள கவர்னர் உரையில், தமிழ்ப் புத்தகத்தில் கூட மிக எச்சரிக்கையாக ''17 மாத காலம் நீண்ட" என்ற அந்தச் சொல்லுக்குப் பிறகு 'கமா' போடப்பட்டு, 17 மாத காலம் என்பது நீண்ட காலம் என்ற அர்த்தத்தில் போடவில்லை, என்றாலும் 17 மாத காலமாக இருந்த குடியரசுத் தலைவருடைய ஆட்சி என்கின்ற வகையிலே கவர்னரின் உரையிலே அது குறிப்பிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆனால் ஏன் அந்த 17 மாத காலம் நீண்ட அந்த குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கே உருவாயிற்று? என்ன காரணம்? இங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தன்னுடைய பதவிக் காலத்தை மக்கள் தந்த தீர்ப்பின் அடிப்படையிலே, ஜனநாயக அடிப்படையிலே பதவிக் காலத்தை இழக்க வேண்டியிருப்பதற்கு 50 நாட்கள்தான் மிச்சம் இருந்தது. அதற்குள்ளாக அவ்வளவு அவசரப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கே பிரகடனப்படுத்தப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது.



அதற்கு அடிப்படையான காரணம் என்ன என்று இங்கே பேசிய சில நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் கூட சில காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். இந்த அவையைப் பொறுத்தவரை ஆளும் கட்சிக்கும் எங்களுக்கும் இருக்கும் வேறுபாடு—ஆளும் கட்சியை ஆதரித்துப் பேச ஏராளமான கட்சிகள் இருக்கின்றன. அதே நேரத்தில் எதிர்க்கட்சியாகவுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், தோழமைக் கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சியானாலும், அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானாலும், அல்லது தோழமைக் கட்சியாக இல்லாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானாலும், வேறு ஆளும் கட்சி தோழமைக் கட்சிகளானாலும், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, பேச்சுவாக்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு தட்டுத் தட்டி விட்டுத்தான் இந்தக் கவர்னர் உரையிலே தங்களுடைய பேச்சை நடத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, நான் சொல்ல வேண்டுமானால்—ஏதோ ஜனதா இன்னும் எங்களைத் தாக்க ஆரம்பிக்கவில்லை இந்த மன்றத்தில். அதுவரையில் மகிழ்ச்சி. நாங்கள் தன்னந்தனியாக நின்று எங்களுடைய கொள்கைகளை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் நாங்கள் ஏற்றிருக்கின்ற ஆயுதம் அறிஞர் அண்ணா அவர்கள் தந்த வலிவான கொள்கை ஆயுதம் என்ற உணர்வோடு எங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம்.

கழக ஆட்சி கலைக்கப்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் 27—6—1975-ல் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய ஒரு தீர்மானம். நாங்கள் அந்தத் தீர்மானத்தை கழக வரலாற்றிலேயே மிக மிக முக்கியமானது என்று கருதுகிறோம். இன்று இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் அந்தத் தீர்மானம் ஒரு முக்கியமான இடத்தைப் பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிச்சயமாக இருக்கிறது.

1975 ஜூன் திங்கள் 26-ம் தேதி காலை இந்திரா காந்தியம்மையார் இந்தியத் திருநாட்டில் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது செய்திப் பத்திரிகையில் வந்தவுடன், மறுநாள் காலை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய

செயற்குழு கூடியது. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தின் வாசகங்களின் ஒரு பகுதியை இங்கே நான் எடுத்துச் சொல்லுவது மிகப் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.—

"உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு—பொய்யின் நிழலில் நின்று கொண்டு—எதிர்க்கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து—அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களைத் தேடி அலைந்து—வீண் அபவாதங்களை வாரி இறைத்து—எடுத்ததற்கெல்லாம் "சதி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்குவாதிகள்" என்ற சொற்களைப் பொழிந்து—காலாகாலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திருமதி இந்திராகாந்தி அவர்கள் நேற்றையதினம் (26—6—1975) அதிகாலையில் சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை நடத்தியிருக்கிறார்.

வெளிநாட்டார் பகையிலிருந்து நாட்டை மீட்க அணி திரண்டு நின்றவர்களையெல்லாம் இன்று 'உள்நாட்டைப் பாதுகாக்கிறேன்' என்ற பெயரால் சிறைக் கொட்டடிகளில் தள்ளியிருக்கிறார்.

இந்திய மண்ணின் விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்ற பழம்பெரும் தேசபக்தர்கள், 'கைதிகள்' என்ற பரிசினை இந்திரா ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள்.

வெள்ளையர் ஆட்சியின்போதும் இல்லாத கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசத் தலைவர்களின் மீது ஏவிவிடப்பட்ட அடக்குமுறை கண்டு நாடு குமுறி எழுந்துள்ளது. எல்லாச் செய்திகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன. அப்படி ஒரு சட்டம் பாய்ந்துள்ளது இப்போது வையம் புகழ் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தியைக்கூட வானொலி வெளியிடவில்லை. 'சிலர் கைது' என்று கூறி—நாட்டின் நாயகர்களை—நபர்களில் சிலராக வானொலி வர்ணித்துள்ளது.

தணிக்கை செய்யப்பட்ட பிறகே பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரவேண்டுமாம்.

விடுதலை பெற்ற இந்தியாவில் எத்தனையோ முறை எதிர்க்கட்சிகளின் எழுச்சிமிக்க கிளர்ச்சிகள் எரிமலைகளாக வெடித்திருக்கின்றன. அப்போதெல்லாம், ஜவகர் காலத்திலோ, லால்பகதூர் காலத்திலோ பாயாத உள்நாட்டுப் பாதுகாப்பு அவசரச் சட்டம் இன்று முதன்முறையாகப் பாய்வானேன்?





சதி நடத்துவோர்—வன்முறையில் ஈடுபடுவோர்—தகாத முறையில் பேசுவோர்—எழுதுவோர் தண்டிக்கப்பட ஏற்கனவே எத்தனையோ சட்டங்கள் இருக்கும்போது நாட்டைச் சர்வாதிகாரப் பாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வருவது தேவைதானா?

இவைகளையெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் சிந்தித்துப் பார்த்து, அவசரகாலப் பிரகடனத்தினை திரும்பப் பெற்றுக் கொண்டு—நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்திட முன்வரவேண்டும்.

பத்திரிகையாளர்களின் கைக் கட்டுக்களை அவிழ்த்து விட்டு—பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்கிடவேண்டும். அதுவே, "இந்திய ஜனநாயகத்துக்குப் பெருமை சேர்க்கும் காரியமாகும்" என்று தி.மு.க. செயற்குழு சுட்டிக்காட்டுவதோடு—

ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்த செயற்குழு தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் வெற்றிபெற இந்திய நாட்டு மக்கள்—சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் காந்தியடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சின்னமாம் அறிஞர் அண்ணாவின் பாதையிலிருந்து தவறாமலும் தமக்கே உரிய தனிப் பண்பாட்டுடன்—அமைதியான முறையில்—வன்முறை தவிர்த்த வழியில்—சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேரா வண்ணம், நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது."

இது முன்னேற்றக் கழகத்தினுடைய தீர்மானமாகும். இது அண்ணா அவர்களுடைய வழிநின்று போடப்பட்ட தீர்மானமாகும் இது அண்ணா அவர்கள் வழிநின்று போடப்பட்ட தீர்மானம் என்பதற்கு ஒரு சான்று சொல்லவேண்டுமானால் இன்று பொதுப் பணித் துறை அமைச்சர் பண்ருட்டி திரு. இராமச்சந்திரன் அவர்கள்' பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சுக்களையெல்லாம் தொகுத்து "Anna speaks in Rajya Sabha (1962-1966). " என்ற தலைப்பிலே ஒரு புத்தகம் வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலே 1966 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் அண்ணா அவர்கள் ராஜ்ய சபாவிலே- டெல்லி மாநிலங்கள்

[திரு. மு. கருணாநிதி] [1977 ஜூலை 15

அவையிலே ஆற்றிய உரையிலே—அப்போது பிரதமராக இந்திரா காந்தி அவர்கள் வீற்றிருந்தார்கள்—அப்போது அவசர காலச் சட்டம், வெளிநாட்டுப் பாதுகாப்பு என்ற பெயரால் போடப்பட்டு அது நீக்கப்படாத சூழ்நிலை—அப்போது அண்ணா அவர்கள் பேசுகிறார்கள் :

" This Government and those who are running this Government should not arrogate to themselves the monopoly of patriotism and consider that others do not have patriotic instincts at all. Therefore I would demand of this Government that they should fothwith lift this emergency and this D.I.R. and release those who are kept in jail for long number of years. And unless and until they do that they would not have a clain to decency and democracy. "

'இந்த அரசும், அரசை நடத்துவோரும் தான் தேசப் பற்றுள்ளவர்கள் என்றும் மற்றவர் தேசப்பற்று இல்லாதவர் என்றும் நினைக்கக் கூடாது. எனவே, மத்திய அரசு உடனடியாக நெருக்கடி நிலையை நீக்கியும், பாதுகாப்புச் சட்டத்தை அகற்றியும் சிறையில் நீண்ட நாட்களாக இருப்போரை விடுவிக்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையேல் அவர்கள் நாகரிகமான ஜனநாயக வாதிகள் என்று கூறிக் கொள்ள முடியாது. என்று அண்ணா அவர்கள் 1966 ஆம் ஆண்டிலிருந்த, இவ்வளவு கொடுமைகள் இல்லாத, அந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று மாநிலங்கள் அவையிலே வாதாடினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா அவர்கள் வழியிலே நின்று ஒரு தீர்மானத்தைப் போட்ட பிறகு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய செயற்குழுவைக் கூட்டி அவசர கால நிலை குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

" அரசியல் கட்சிகளாலும், மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தியக் குடியரசு சட்டத்தின் விதிகளின்படிதான் அவசரகாலச் சட்டம், அமல் படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியக் குடியரசுச் சட்டத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டோ அல்லது மக்களின் மீது புதியதொரு சட்டத்தைத் திணித்தோ எந்தச் சட்டமும் சர்வாதிகார முறையில் அமலாகவில்லை. எனவே, இன்று சர்வாதிகாரம் ஏற்படுத்தப்பட்டு விட்டது என சில கட்சிகள் சொல்வதை இந்தச் செயற்குழு ஏற்றுக் கொள்ளாததோடு கண்டிக்கவும் செய்கிறது."



1977 ஜூலை 15] [திரு. மு. கருணாநிதி],

1975 ஆம் ஆண்டு ஜூலை 11-12 ஆகிய நாட்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அவசர காலச் சட்டத்திற்கு நியாயம் கற்பிக்கின்ற முறையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அவசரகாலச் சட்டம் எவ்வளவு கொடுமையானது என்பதை அட்டர்னி ஜெனரல் திரு. நிரண் டே அவர்களே, ஒரு நீதிமன்றத்திலே குறிப்பிட்டுள்ளார்.

(முற்பகல் 11-00)

"விரும்பியவரைக் காவலில் வைக்கவும், விரும்பியவரைக் கொல்லவும், பட்டினி போட்டுச் சாக அடிக்கவும் அவசரச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. அதற்கு மாற்று நிவாரணமே இல்லை" என்று இந்தியப் பேரரசினுடைய அட்டர்னி ஜெனரல் நிரண் டே நீதிமன்றத்திலே வாதாடினார்கள்.

அப்படிப்பட்ட அவசரக் காலச் சட்டத்தைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்துத் தீர்மானத்தை நிறைவேற்றியது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நெருக்கடியை ஆதரித்தது.

ஆனால் அண்மைக்காலத்திலே எனக்கு ஒரு ஆறுதல். ஏனென்றால், இப்பொழுது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கருத்தை மாற்றிக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரிய நீதிபதியே அறிவுரை கூறியிருப்பதாக நான் கருதுகின்றேன். அந்த அறிவுரையில் அந்த நீதிபதி சொல்கிறார்—" 1967-லேயே தமிழக மக்கள் காங்கிரஸ் கட்சியை முழுமையாக நிராகரித்து விட்டார்கள். இன்னும் காங்கிரசில் ஒரு கோஷ்டிதான் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்றும், மீண்டும் இந்திரா காங்கிரசுக்கு உயிர் அளித்தால் அது ஜனநாயகத்தைப் பாழ்படுத்தி விடுமென்றும் தமிழக மக்கள் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார்கள். மீண்டும் அந்தக் கட்சியிடத்தில் அதிகாரத்தை ஒப்படைப்பது தனி நபர் சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்து, மக்கள், உரிமைகளை இழந்து பரிதவிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். மீண்டும் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வருமானால் ஜனநாயகத்தை நிலைநிறுத்தப் போராடியவர்களையும், நீதித்துறை சுதந்திரத்திற்குப் போராடியவர்களையும்,

அச்சமற்ற வாழ்க்கைக்காக வாதாடியவர்களையும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் அது ஈடுபடவே செய்யும். 'நெருக்கடி நிலை' என்கிற தீய சொப்பனத்தை நினைத்துப் பார்ப்பதே ஒரு பயங்கரமான அனுபவம். உரிமை பறிக்கப்பட்ட சூழலை எண்ணிப் பார்த்தாலே உணர்ச்சிகள் செயலற்றுப்போகின்றன. ஆகவே தமிழக வாக்காளர்கள் ஒருபோதும் இனிமேல் இந்திரா காங்கிரசுக்கு வாக்களிக்கமாட்டார்கள்".

திரு. துரை. முத்துசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். இந்திய தேசிய காங்கிரஸ் என்றுதான் இருக்கிறதே தவிர, இந்திரா காங்கிரஸ் என்று அல்ல.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மீண்டும் காங்கிரஸ் தலையெடுக்க விடக்கூடாது என்று இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பேசியநேரத்தில் அதற்குப் பதிலளித்து நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் நேற்றையதினம் அதே பாணியிலே தங்கள் பதிலை வழங்கினார்கள். நான் அந்தச் சொற்களுக்குள்ளே புகுந்திட விரும்பவில்லை. அந்தக் கருத்தைத்தான் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவசர காலச் சட்டத்தை ஆதரித்து தீர்மானத்தை நிறைவேற்றியதோ அந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டு இந்தியாவில் நடைபெற்றது ஒரு சர்வாதிகார ஆட்சிதான், இந்தியாவில் நடைபெற்றது நீதித்துறையையும் சுதந்திரத்தையும் பாதிக்கக்கூடிய ஒரு ஆட்சிதான், மீண்டும் அதே காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வருவார்களேயானால் அச்சமற்ற வாழ்க்கைக்காக வாதாடியவர்களையும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவே செய்வர். நெருக்கடி நிலை என்ற தீய சொப்பனத்தை நினைத்துப் பார்ப்பதே ஒரு பயங்கர அனுபவம்—இப்படிச் சொன்னவர் யார் என்றால் நம்முடைய சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு கே. என். முதலியார் அவர்கள்—நாராயணசாமி முதலியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுது என்றால் 9—6—1977 அன்று. ஜூன் திங்களில் சொல்லியிருக்கிறார்கள். ஆதாரம் என்னவென்றால் நம்முடைய முதலமைச்சரவர்களை ஆசிரியராகக் கொண்டிருந்த



அன்று பத்திரிகையிலேயே அந்தக் கட்டுரை வெளியாகி யிருக்கிறது. "நெருக்கடி நிலை என்ற தீய சொப்பனம்" என்று இன்றைய சட்டத் துறை அமைச்சரவர்கள், முதலமைச்சரவர்களை ஆசிரியராகக் கொண்டிருந்த பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதைப் படித்துப் பார்த்த நேரத்தில் ஒரு பெரிய மாற்றம், நெருக்கடி நிலையைப்பற்றி ஒரு புதிய மாற்றம், நல்ல சிந்தனை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்ற வகையிலே நான் ஆறுதல் அடைகின்றேன்.

ஒரு முன்னாள் நீதிபதி தன்னுடைய கருத்தை அழுத்தந் திருத்தமாகச் சொல்லி எந்த அளவிற்கு அவசரகாலச் சட்டத்தால் நீதித்துறை பாதிக்கப்பட்டது, எந்த அளவுக்கு மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டன என்பதை எடுத்துச் சொல்லி, அதற்காக வாதாடியதற்காக, எத்தனையோ அவசர நிலைக் காலத்திற்கு ஆதரவாகத் தீர்மானம் போடப்பட்டிருந்தாலும், அப்படித் தீர்மானம் போடப்பட்டது தவறு என்று உணரத் தக்க அளவில், அந்தத் தீர்மானம் எதை ஒரு நல்ல கனவு என்று கருதிக் கொண்டிருந்ததோ, நல்ல எதிர்காலத்திற்கான ஒரு வழி என்று கருதிக்கொண்டிருந்ததோ அதை, "அல்ல அல்ல ஒரு தீய சொப்பனம், கெட்ட கனவு", என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்ன இன்றைய சட்ட அமைச்சரவர்களை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சியை எந்த வகையிலே கலைத்தார்கள் என்பதைப்பற்றி யெல்லாம் இங்கே நெடிய வாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. 1976 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் தேதி மாலை ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அது வரையிலே தமிழகத்திலே கவர்னராக இருந்த மேதகு கே. கே. ஷா அவர்களுக்கு அந்தச் செய்தி தெரியுமா என்றால் தெரியாது. அரசியல் சட்டம் 356-வது பிரிவின்படி கவர்னர் ஒரு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். அந்த ரிப்போர்ட்டின் மீது மத்தியிலே உள்ளவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் 1976-ம் வருஷம் ஜனவரி திங்கள் 31-ம் நாள் காலையில், அவர் கிண்டியிலே உள்ள காந்தி மண்டபத்திலே பேசும்பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசு காந்தியடிகளுடைய அடிச்சுவட்டை

யொட்டி நடைபெறுகிற அரசு என்று பாராட்டிப் பேசுகிறார். ஆனால் மாலையிலே ஆட்சி கவிழ்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பற்றி கவர்னராக இருந்த கே. கே. ஷா அவர்கள் பல விபரீதமான அறிக்கைகளைத் தருகிறார். ஊழல் உள்ள அரசு, நிர்வாகத்திலே குறுக்கிட்ட அரசு, பண்பற்ற அரசு என்கின்ற வகையிலேயெல்லாம் அன்றைய கவர்னர் அறிக்கை வெளியிடுகிறார். ஆனால் நடந்தது என்னவென்று கருதப் படுகின்றதென்றால், இங்கிருந்து அவர் அனுப்புகிற அறிக்கை கூட டெல்லியிலே உள்துறை அமைச்சகத்திலே தயாரிக்கப்பட்டு அதற்கு முன்னே, ஆட்சியைக் கலைத்துவிட்டு அதன் பிறகு ஆளுநரிடத்திலே கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள்; அல்லது பிரகடனப்படுத்துவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள் என்ற தகவல்தான். . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கவர்னரைப் பற்றி அவர்பேரிலே ஒரு குற்றம் சுமத்தக்கூடிய வகையிலே அவர் செயல்படாமல் இருந்தார் என்ற வகையிலே குற்றம் சாட்டினால், அது சரியானதல்ல.

* திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படியெல்லாம் பாராளுமன்றத்திலே கூட இப்பொழுது பேசப்படுகிறது. அந்த விவகாரங்கள் எல்லாம் இப்பொழுது பேசப்படுகிறது என்பது மாத்திரம் அல்ல, நான் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது உள்துறை அமைச்சர் சரண் சிங் அவர்களிடத்திலே கூட அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த விவரங்களை ஆராய்ந்து கண்டு பிடிப்பதாக, அதுபற்றிய விவரங்களைச் சேகரிப்பதாக உள்துறை அமைச்சர் கூட என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். எனவே தான் சொல்கிறேன், இப்படி ஒரு ரிப்போர்ட் ஏற்கனவே உள்துறை அமைச்சகத்தில் தயாரிக்கப்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு கையெழுத்து வாங்கப்பட்டது என்பது என்னுடைய புகார். அதை உள்துறை அமைச்சகம் கவனிக்க வேண்டுமென்பது எங்களது கோரிக்கை.

கலைத்ததற்கு முக்கியமான காரணத்தை நண்பர் மாரிமுத்து அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

விசாரணைக் கமிஷன் போட வேண்டாமா? விசாரணைக் கமிஷன் இருக்கின்ற நேரத்திலே ஒரு அரசு இயங்கினால் உண்மை வெளி வருமா? என்வே விசாரணைக் கமிஷன் அமைக்க வசதியாக





அரசைக் கலைத்து விட்டோம், அல்லது கலைத்து விட்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வாதத்தையே கொஞ்சம் நீட்டிப் பார்த்தால் இப்பொழுது கர்நாடக மாநிலத்து முதலமைச்சர் மாண்புமிகு தேவராஜ் அர்ஸ் மீது விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. ஆந்திரத்து முதலமைச்சர் மாண்புமிகு வெங்கல் ராவ் மீது விசாரணைக் கமிஷன் போடப் பட்டிருக்கிறது. இரண்டும் காங்கிரஸ் கட்சியினுடைய முதலமைச் சர்கள் பதவியேற்றிருக்கிற மாநிலங்கள். ஆனால் அந்த மாநில அரசுகள் விசாரணைக் கமிஷனுக்காகக் கலைக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், கலைக்கப்படவில்லை.

அது மாத்திரமல்ல, அவரவருக்கு என்று ஒன்று ஏற்பட்டால் தான் உரிமை முழக்கங்கள் எல்லாம் வருகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் சரியா என்று நான் விவரங்களைச் சொல்லி விவாதத்தை விரிவாக்க விரும்பவில்லை.

சில புகார்கள் குடியரசுத் தலைவரிடத்திலே கொடுக்கப்பட்டு, அவைமீது விளக்கம் கேட்டு, பிரதமர் அவர்கள் தமிழக அரசுக்கு அப் புகார்களை அனுப்பி வைத்தார்கள். அப்படி அனுப்பி வைத்த நேரத்திலே நான் அதற்கான விளக்கங்களை அனுப்பிவிட்டு பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு அனுப்பிய கடிதத்தில் ஒன்றைக் குறிப்பிட்டேன். அந்தக் கடிதம் அனுப்பப்பட்ட தேதி 11-12-1972. அதில் என்ன குறிப்பிட்டேன் என்றால், ". . . . நம் அரசியல் சட்டத்தின் அமைப்பு ஒற்றையாட்சி முறையில் அன்றி கூட்டாட்சி முறையில் உள்ளது. மாநில உறுப்பினங்கள் ஒவ்வொன்றும் மத்திய அரசுக்குக் கீழ்ப்பட்ட நிலையின்றி, வரம்புக்குட்பட்ட தன்னுரிமையுடன் இயங்குவதாகும்.

மாநில அரசின் அமைச்சரவை அம்மாநிலத்தின் சட்டப் பேரவைக்குப் பொறுப்பானது என்ற முறையில் இயங்குகிறது. இதுவே "பார்லிமெண்டரி" ஜனநாயக முறையாகும், கூட்டாட்சி அமைப்பின் சாரமுமாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும், மாநில அமைச்சரவை மத்திய அமைச்சரவைக்குக் கட்டுப்பட்டு இயங்குவதாக அரசியல் சட்டத்தில் எங்கும் கூறப்படவில்லை. எனவே, மத்திய அரசு நியமிக்கும் விசாரணைக் குழுவிற்கு மாநில அமைச்சரவையைக் கட்டுப்பாடு செய்யும் முயற்சி நம்

அரசமைப்பு முறைக்கு ஒவ்வாத செயலாகும் . . ."

இது நான் எழுதிய கடிதம் ஆகும்; மிகுந்த கண்டனத்திற்கு ஆளாகிய கடிதம்.

(முற்பகல் 11-10).

ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் இவ்வளவு ஆணவத்தோடு மத்திய அரசுக்கு ஒரு மடல் எழுதுவதா என்றெல்லாம் எதிர்க் கட்சிக்காரர்கள் மார் தட்டிக் கேட்ட காலம்--கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ் உட்பட அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட அனைவரும் மார் தட்டிக் கேட்ட காலமது.

ஆனால் இன்றைக்கு இதே தேவராஜ் அர்ஸ் அவர்கள் மீது விசாரணைக் கமிஷன் அறிவிக்கப்பட்டதும், திரு. மொரார்ஜி தேசாய்க்கு—இந்தியப் பிரதமருக்கு—அவர் என்ன கடிதம் எழுதியிருக்கிறார்? மே மாதம் 13 ஆம் தேதி—4,000 வார்த்தைகள் கொண்ட கடிதமாம்—பத்திரிகைகள் எல்லாம் புகழ்ந்து பாராட்டுகின்றன. கருணாநிதி எழுதினால்தான் வார்த்தைகளை எண்ணிக்கூட அல்ல. வாசகங்களைப் பற்றியே கூடக் கண்டனங்கள். இப்போது வார்த்தைகளையே எண்ணிக் கூட பத்திரிகையில் போடுகிறார்கள். 4,000 வார்த்தைகள் கொண்ட மிக விரிவான கடிதத்தை மொரார்ஜி தேசாய்க்கு—இந்தியப் பிரதமருக்கு தேவராஜ் அர்ஸ் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியை மாத்திரம் படிக்க விரும்புகிறேன்.

"மாமூல் சூழ்நிலையில் ஒரு மாநிலத்தில் இயங்கும் மந்திரி சபை சட்டசபையில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றிருந்தால் மாநில அதிகார வரம்புக்கு உட்பட்ட விஷயங்களில் மாநில அரசின் மீது மத்திய அரசு கட்டுப்பாடு கொள்ள முடியாது", என்று அர்ஸ் கடிதம் கூறுகிறது. மாநில சட்ட சபைக்குப் பொறுப்பான மந்திரி சபையின் செயல்கள்மீது கட்டுப்பாடு செலுத்த மத்திய அரசு அதிகாரம் பெற முடியாது. மாநிலத்தின் ஏகபோக அதிகார வரம்பு சம்பந்தப்பட்ட விஷயங்களில் மத்திய அரசு நீதி விசாரணை நடத்துவது அனுமதிக்கப்பட்டால், அரசியல் சாசனம் கூறும் சமஷ்டி அமைப்பை அழிப்பதாகிவிடும். அந்த நிலையில் அரசியல் நிர்ணய சாசனம் நேரடியாகத் தடுப்பதை மறைமுகமாக மத்திய அரசு செய்ததாக வேண்டும்.

அர்ஸ் அவர்கள் எடுத்து வைத்த அந்த அருமையான வாதத்திற்கு இன்று அட்வகேட் ஜெனரலாக இருக்கும் வி. பி. இராமன் அவர்கள்தான் வாதாடுகிறார் என்று கேள்விப்பட்டு மகிழ்ச்சி



அடைந்தேன். ஏனென்றால் அவரேதான் மத்திய சர்க்கார் நம் மீது அமைத்த கமிஷன் நியாயம்தான் என்று வாதாடிக் கொண்டிருக்கிறார். ஆனால் வழக்கறிஞர்கள் இந்தத் தரப்பிலும் வாதாடலாம்; அந்தத் தரப்பிலும் வாதாடலாம். நான் அதிலே குறைகூற விரும்பவில்லை. நான் செய்தியைத்தான் சொல்கிறேன்—விமர்சனம் செய்யவில்லை.

அர்ஸ் கொடுத்திருக்கிற வாக்குமூலம் சரியானதுதான்—அவர் எழுதிக்கொடுத்த வாக்குமூலம் சரியானதுதான் என்று நம்முடைய அட்வகேட் ஜெனரல் வி. பி. இராமன் அவர்கள் அர்ஸுக்காக வாதாடுகிறார் என்ற செய்தியைப் பார்க்கிற நேரத்தில், அன்றில்லாவிட்டாலும் இன்றைக்காவது மாநில உரிமைகளுக்காகப் பரிந்து பேசுகிற ஒரு அட்வகேட் ஜெனரல்—ஒரு வழக்கறிஞர் தமிழகத்திலே இருந்து கர்நாடகத்திற்குச் செல்கிறார் என்கிற நேரத்தில்—இந்திய நாட்டிலேயே மாநில உரிமைகளுக்காகப் போராடுகின்ற வலிமையும் திறமையும் படைத்த ஒரு மாநிலம் தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை எண்ணி எண்ணி நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசு கலைக்கப்பட்டது—பிறகு, விசாரணைக் கமிஷன்—வழக்குகள்—சென்னைச் சிறைச்சாலை சித்திரவதைகள் இத்தனையும் நடைபெற்றன. இவைகளெல்லாம் 17 மாதக் கொடுமைகள்.

சென்னை சிறைச்சாலையிலே என்னென்ன நடைபெற்றன என்பதை எல்லாம் ஆராய ஒரு குழு இப்போது தனது பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் நாட்டுக்குத் தெரிந்த காரியங்கள் தான்.

நமது முதலமைச்சரவர்கள் டெல்லிப் பட்டணத்திற்கு . . .

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையில் குறுக்கிடுவதற்காக அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஒரு விளக்கத்தை மாத்திரம் இந்த மன்றம் உங்கள் மூலம் பெறவேண்டுமென்று கருதி ஒரு விளக்கத்தை நான் அவரிடத்திலே பெற முயலுகிறேன்.

1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தைப்

பற்றியும் அதற்குப் பின்னாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியும் எடுத்து விளக்கினார்கள்.

அதைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் தேதி நிகழ்ச்சிக்கு அவர்கள் வந்து விட்டார்கள். அப்பொழுதிருந்த அரசைக் கலைத்த நிகழ்ச்சிக்கு அவர்கள் வந்து விட்டார்கள். இடையிலே 7 மாத காலத்தை அவர்கள் தாண்டி விட்டார்கள். அந்த 7 மாத காலத்திலே என்ன நடைபெற்றது என்று அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அவசர நிலைப் பிரகடனத்தை மிகக் கடுமையாக அன்றே அவர்கள் வழியிலே நின்று எதிர்த்த ஆற்றலை எடுத்துக் காட்டிய அவர்கள்தான் அதற்குப் பின்னாலே ஆட்சியிலே 7 மாதங்கள் இருந்தார்கள்.

அந்த அவசரநிலைப் பிரகடனம் தந்த உரிமைகளை வைத்துக் கொண்டு 7 மாத காலத்தில் அவர்கள் எப்படி ஆட்சி நடத்தினார்கள், யார் யாரைக் கைது செய்தார்கள், யார், யாரைக் கைது செய்ய வேண்டுமென்று அதிகாரிகளை வற்புறுத்தினார்கள், யார் யாரைக் கைது செய்ய அதிகாரிகள் மறுத்தார்கள் என்பது போன்ற தகவல்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களிடத்திலே பரவலாகப் பேசப்படுகின்றது. அந்த 7 மாதகால ஆட்சியில் அவசர நிலையை ஒத்துக்கொண்டு அவர்கள் ஆட்சியிலே இருந்து என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள், யார் யாரை கைது செய்தார்கள், யார், யாரைக் கைது செய்ய விரும்பினார்கள்; அப்படிக் கைது செய்ய என் அதிகாரிகள் மறுத்தார்கள் என்ற தகவல்களை எல்லாம் பேரவைத் தலைவர் மூலம் இந்த மன்றத்திற்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவித்தால் அது உதவியாக இருக்கும். (ஆரவாரம்).

திரு. மு. கருணாநிதி: விளக்கம் கேட்டதற்கே இவ்வளவு பெரிய ஆரவாரமா? தலைவரவர்களே, ஏழு மாதகாலத்தை விரிவாகச் சொல்வதற்கு நீங்கள் எனக்கு நேரம் அளிக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் ஒன்று இரண்டு சொல்ல விரும்புகிறேன்.

7 மாத காலத்தில் இங்கே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அவசர காலச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டே தான் இங்கே இருந்தது. அது மாத்திரமல்ல. அவசர காலச் சட்டத்தை எதிர்த்துக்கொண்டு இருக்கிற ஆட்சி இங்கே இருக்க



லாமா என்று சட்டமன்றத்திலே கூட கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்ற வில்லை என்ற பெயரால் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப் பட்டது.

நான் அப்போது அளித்த பதிலுரை தான் 'வாளும் கேடயமும்' என்ற தலைப்பில் தமிழிலும், "ஸ்வோர்டு அண்ட் ஷீல்ட்" என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகம் கூட குடியரசுத் தலைவரின் ஆட்சிக்குப் பிறகு பறிமுதல் செய்யப் பட்டு விட்டது.

அப்படிப் பறிமுதல் செய்யப்பட்ட புத்தகம், என்ன புத்தகம் என்றால், சட்டசபையில் ஒரு முதலமைச்சர் ஆற்றிய உரை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தப் பறிமுதல் உத்தரவை ரத்து செய்து, அந்தப் புத்தகம் வெளியே வர அனுமதிப்பார்களானால், அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அதிலே இருக்கிறது என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நான் வெளியிடப்பட்ட வரலாற்றைக் கேட்கவில்லை. இப்போது நீங்கள் சொன்னீர்களே ஆளுநர் அவர்கள் இடத்தில் எப்படி எப்படி எல்லாமோ கையெழுத்து வாங்கிவிட்டார்கள். இப்போது அந்தத் தகவலை சொல்ல உரிமை இருக்கிறது என்று, அப்படி 7 மாத காலத்திலே மறைக்கப்பட்ட வரலாற்றை உங்கள் மூலம் சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர்களே, நெருக்கடி நிலை பற்றி விவாதிப்பது என்றால், 17 மாதம் அல்ல, அதற்கு முன்பு இருந்த 9 மாதத்தையும் சேர்த்து விவாதிக்க நாங்கள் இந்த அவையிலே பட்ஜெட் நேரத்திலே ஒரு மூன்று மணி நேரத்தை ஒதுக்கித் தருவீர்கள் என்றால், நம்முடைய அலுவல் ஆய்வுக்குழுவில் அது பற்றிக் கலந்து ஆலோசித்து ஒதுக்கித் தந்தால், வசதியாக இருக்கும். அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு எடுத்து, விவாதிக்க நேரம் ஒதுக்கினால் அந்த விவாதத்தை நடத்தலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் இரண்டாம் தேதி அன்று உள் துறை அமைச்சர் சரண்சிங் அவர்களைச் சந்தித்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. அப்போது திரு. சரண் சிங் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னதாகவும் தகவல் சொல்லப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன. நெருக்கடி நேரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடைபெற்ற அக்ரமங்கள், அதிக்ரமங்கள் பற்றி உள் துறை அமைச்சர் திரு. சரண் சிங் முதலமைச்சர் அவர்களிடத்தில் குறிப்பிட்டு அவைகளைக் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்ததாகவும் இந்த விஷயத்தில் மாநில அரசுக்கு எந்தவிதமான உதவியையும் மத்திய அரசு வழங்கும் என்று கூறியுள்ளார் என்று ஆங்கில ஏடுகள் அனைத்திலும் வந்த செய்தியாகும்.

அதை நான் படித்து இருக்கிறேன். அது மாத்திரமல்ல, ஒரு சீனியர் அதிகாரியின் தலைமையில் அதிகாரிகளின் துணையோடு அமைக்கப்பட்டுள்ள 'ஷா கமிஷன்' இந்த அத்து மீறிய நடவடிக்கைகள் பற்றி 'ஷா கமிஷன்' விசாரணை செய்ய கோஆர்டினேட் செய்வது என்ற தன்மையில் குழுக்களை ஒவ்வொரு மாநிலத்திலும் அமைத்து, மத்திய அரசுக்கு மாநில அரசு எப்படியெப்படி அனுப்பவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுக்குக் கூறி இருப்பதாகவும் ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

இந்தக் குழுக்கள் பொதுமக்களிடத்திலிருந்து வரும் புகார்களை எல்லாம் ஆராய்ந்து, பார்த்து எவை எவை ஷா கமிஷனின் ஆய்வுக்கு செல்ல வேண்டியவை என்கிற கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து தெளிவான புகார்களை மாநில குழுக்கள் மூலம் பெற்று ஷா கமிஷனுக்கு மாநில அரசுகள் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் ஏடுகளில் நான் செய்தி பார்த்தேன். அதனுடைய உண்மையான தகவல் அரசிடம் இருப்பதால் நாங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. மாநிலங்கள் ஷா கமிஷன் விசாரணையில் ஒத்துழைப்பது தவிர்க்க முடியாதது ஆகும் என்று உள் துறை அமைச்சர் திரு. சரண் சிங் குறிப்பிட்டு இருப்பதாகவும் ஏடுகளில் செய்தி பார்த்தேன்.

அதற்கு ஏற்ப அரியானாவில் இரண்டு விசாரணைக் கமிஷன் போடப்பட்டு அத்துமீறிய நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்கப் போவதாகவும் அறிகிறோம். அதே போல் உத்திரப் பிரதேசத்திலும்





இரண்டு விசாரணைக் கமிஷன் போடப்பட்டு அத்துமீறிய நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்க இருப்பதாகவும் ஏடுகளின் மூலம் அறிகிறோம்.

(முற்பகல் 11-20).

இங்கே கூட, ஆளுநர் ஆட்சியிலே, மேதகு பட்வாரி அவர்களாலே, சென்னை சிறைச்சாலைக் கொடுமைகளைப் பற்றி விசாரிக்க ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இன்னும் விசாரிக்கப்பட வேண்டிய கொடுமைகள் பல இருக்கின்றன. அக்ரமங்கள் பல இருக்கின்றன. அவைகளுக்கும் குழு அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக்குழு சென்னைச் சிறைச்சாலைக் கொடுமைகளுக்காக மாத்திரம்தான் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, முதல்வர் அவர்கள், திரு. சரண்சிங் அவர்கள் கூறிய அந்த வேண்டுகோளை ஏற்று அப்படிப்பட்ட குழுக்களை இங்கே அமைப்பார்களேயானால் நிரம்பப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறிய சிறிய விவகாரங்களில் எல்லாம், அதிகார வர்க்கத்தினர் செய்த கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் மேலவையில் பல உறுப்பினர்கள் மற்றும் மேலவை எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு மேலவையில் முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள்.

பாடப் புத்தகங்களிலெல்லாம், நாம் பல ஆண்டு காலமாக எடுத்துச் சொல்லி வருகின்ற கருத்துக்களை கடந்த கால கழக ஆட்சியில் மாணவர்கள் உள்ளத்தில் பதியத்தக்க வகையிலும், ஒரு சமுதாய சீர்திருத்த நோக்கம் மாணவர்களுக்கு வரவேண்டும் என்கிற, எண்ணத்தோடு வெளியிடப்பட்ட பாடங்களெல்லாம் இந்த ஓராண்டுக் காலத்திலே அகற்றப்பட்டிருக்கின்றன. பெரியார் வழி — பேரறிஞர் அண்ணா பாதை என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறோம். நான் இந்த அரசைக் குறை கூறவில்லை.

பதினேழு மாத காலத்திலிருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1976-ம் ஆண்டு முதல் பதிப்பு என்று வெளியிடப்பட்ட பத்தாம் வகுப்பு தமிழ்ப் பாட புத்தகம். அதிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரைப்பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார்கள்.

அந்தக் கட்டுரை அந்தப் புத்தகத்திலே இடம் பெற்றிருக்கிறது. அதிலே யாருடைய மனமும் புண்படாத வகையில் பெரியாரைப் பற்றி என்ன சொல்ல வேண்டுமோ — சமுதாயத்தைப் பற்றி என்ன சொல்ல வேண்டுமோ — தன்மான உணர்வு எப்படித் தழைத் தோங்க வேண்டும் என்பது குறித்து என்ன சொல்ல வேண்டுமோ, அடித்தளத்து மக்களின் நல்வாழ்வுக்கு எப்படிப் பாடுபட வேண்டும் என்பதைப்பற்றி எவ்வாறு சொல்ல வேண்டுமோ — எப்படி தமிழகம் பகுத்தறிவுபுரியாக இருக்க வேண்டும் என்பது பற்றி எப்படிச் சொல்ல வேண்டுமோ அவைகளை அண்ணா அவர்கள் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கட்டுரையுடன் 76 ஆம் ஆண்டு ஒரு புத்தகம் போடுகிறார்கள். 77 ஆம் ஆண்டிலே அந்த தமிழ் பாடப் புத்தகம் மாணவர்களுக்கு இருந்திருக்கக்கூடாதா? இல்லை.

ஏன் புதிதாக வேறொரு புத்தகம் போட்டார்கள் என்றால் அந்தப் பாடத்தை மாத்திரம், பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா எழுதிய அந்தப் பாடத்தை மாத்திரம் தனியாக எடுத்தால் தெரிந்துவிடும் என்பதற்காக அந்தப் புத்தகத்தையே தூக்கி எறிந்துவிட்டு அதற்குப் பதிலாக புதிய புத்தகம் போட்டார்கள். அதற்கு எத்தனை லட்சம் செலவாயிற்றோ? 10 ஆம் வகுப்பிற்கு புதிய தமிழ் பாடப் புத்தகம் தயாரித்தார்கள். அதில் நாலு ஐந்து கட்டுரைகள், மிக முக்கியமானவை. நமச்சிவாய முதலியாரைப் பற்றிய கட்டுரை, நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதிய கட்டுரை, பேரறிஞர் அண்ணா பெரியாரைப் பற்றி எழுதிய கட்டுரை இவை அத்தனையும் அகற்றிவிட்டு அந்தப் புத்தகத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இது அக்கிரமமா, கொடுமையா என்று கேட்பீர்களேயானால் இது சமுதாயத்திற்குச் செய்யப்பட்ட கொடுமை.

எதிர்காலத்திலே தமிழ்நாட்டு மாணவன், தமிழ்நாட்டினுடைய வரலாற்றை உணர்ந்து தமிழகத்திலே பெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்ட உணர்ச்சிகளை மறந்து, அவன் அடிமைப்புழுவாக ஆகவேண்டுமென்ற நோக்கத்தோடு இப்படிப்பட்ட உணர்வுகள் தலையெடுப்பதே தவறு என்கிற எண்ணத்தோடு அந்தப் பாடப் புத்தகம் மாற்றப்பட்டதாகத்தான் நான் கருதுகிறேன். இவைகள் விசாரிக்கப்பட வேண்டும்.

மேலவையிலே முதல்வர் சொன்னதைப் புரிந்துகொண்டிருக்கிறேன். அவர்கள் அண்ணா எழுதிய அதே கட்டுரையை இன்னொரு அனுபந்தமாக அச்சடித்து அதே புத்தகத்தில் இணைக்க உத்தேசித்





திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்றாலும் கூட, மாற்றப்பட்டது ஏன் என்பதை விசாரித்து அறிந்து அப்படிப் பட்ட மாறுதலுக்கு காரணமான அதிகாரவர்க்கத்தினர் யார் என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பதினேழு மாத காலத்தில் நடைபெற்ற கொடுமைகளை வரிசைப்படுத்திச் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமே சோதனைக்கு ஆளாக்கப்பட்டது; வருமான வரி சோதனைக்கு. வேறு எந்தச் சோதனைக்கும் அல்ல. வருமான வரி அரசியல் கட்சிகளுக்கு இல்லை என்ற நிலை இருந்தாலும்கூட வருமான வரிப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைச் சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகச் செயலகம் அன்பகம் ரெயிட் செய்யப்பட்டது. கணக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன. அதுமாத்திரம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மினிட்ஸ் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அதற்குப் பிறகு நடந்த பொதுக்குழு கூட்ட நடவடிக்கைகள், செயற்குழு கூட்ட நடவடிக்கைகள் புதுப் புத்தகங்களில் எழுதப்படுகின்றன. பழைய புத்தகங்கள் எங்களிடத்தில் இல்லை. இது ஒரு கட்டத்தில், நெருக்கடி காலத்தில் அதிகாரவர்க்கம் நடந்துகொண்ட முறையாகும்.

என்னோடு யார் யார் நான்கு நாட்கள் காரில் வந்தாலும் ஐந்தாம் நாள் மிசா கைதியாக கைது செய்யப்படுகிற பரிசு அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. முன்னாள் அமைச்சர் திரு. கண்ணப்பன் இரண்டு நாட்கள் என் காரில் என்னுடன் வந்தார்கள். அடுத்த நாள் அவர் மிசா கைதியானார். முன்னாள் மேயர் திரு. சா. கணேசன் அவர்கள் இரண்டு நாட்கள் என்னுடன் காரில் வந்தார்கள். மறுநாள் மிசா கைதி. தென் சென்னையைச் சேர்ந்த திரு. டி. ஆர். பாலசுப்பிரமணியம் என்னோடு இரண்டு நாட்கள் காரில் வந்தார்கள். மறுநாள் மிசா கைதி. திரு. கருவிவேல் இரண்டு நாள் வந்தார்கள். மறுநாள் மிசா கைதி.

கழகத்தின் வழக்கறிஞர் திரு. கணபதி அவர்களது வீடு சோதனையிடப்பட்டது. எதுவும் கிடைக்கவில்லை. என்றாலும் சில டாக்குமெண்டுகள் கிடைத்திருப்பதாக, எடுத்துச் செல்லப்பட்டு சி.பி.ஐ. விசாரணை நடைபெற்றது. முரசொலி அலுவலகம் காலை

9 மணி முதல் இரவு 1 மணி வரை சோதனையிடப்பட்டது. எனக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்லவில்லை என்பதற்காகப் பல பேர்கள் மிசா கைதிகளாக ஆக்கப்பட்டார்கள். வேடிக்கைக்கு சொல்கிறேன், என்றாலும் வேதனையோடு சொல்கிறேன்.

நான் தலைமைப் பதவியில் இருக்கக்கூடாது என்று சில பேர் அறிக்கைவிட்டார்கள். அந்த அறிக்கையை மறுத்து தந்திகள் வந்தன. 14—3—1976 அன்று திரு. செபாஸ்டியன் என்பவர் எனக்கு ஒரு தந்தி கொடுத்தார். தந்தி வாசகம் என்ன தெரியுமா?

"We condemn S.S.R. statement. You are our esteemed Leader for ever."

"நாங்கள் ராஜேந்திரன் அறிக்கையைக் கண்டிக்கிறோம். நீங்கள் தான் எங்களுக்கு என்றைக்கும் தலைவர்" என ஒரு தந்தி கொடுக்கிறார். அதற்குரிய கட்டணம் 6 ரூபாய் 50 காசைக் கட்டிவிட்டார். 14 ஆம் தேதி தந்தி கொடுக்கப்பட்டது. 19 ஆம் தேதி அவருக்கு அண்ணாசாலை டெலிகிராபிக் சூப்பர்வைசரிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. என்ன தெரியுமா? அந்தத் தந்தி அப்ஜக்ஷனபிள் (Objectionable), அந்தத் தந்தி ஆட்சேபகரமானது. ஆகவே, உங்கள் பணத்தைத் திரும்பி வாங்கிப்போங்கள் என்று பணத்தைத் திரும்பிக் கொடுக்கிறார்கள். "உங்களையே தலைவராக ஏற்றுக் கொள்கிறோம்" எனக் கொடுக்கப்பட்ட தந்தி நெருக்கடி நேரத்தில் ஆட்சேபகரமானது. ஐந்து நாள் கழித்து, அந்த அதிகாரி தந்தி கொடுத்தவரை திரும்ப அழைத்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறார்.

திருத்துறைப்பூண்டியில் இருந்து ஒருவர் 13—3—1976 அன்று தந்தி கொடுக்கிறார்.

'Lakhs and lakhs of volunteers like myself have got absolute confidence and faith in your leadership. Please continue to guide and lead us. Don't get disheartened by some betrayals and some traitors.'

"நீங்கள் மனம் தளராமல் இருங்கள். உங்கள் பின்னால் நாங்கள் இருக்கிறோம்" என கழகத்தின் செயல்வீரர்கள் என்ற முறையில் தந்தி கொடுக்கிறார். அவர் ஒரு வழக்கறிஞர். கழகத் தொண்டர். பன்னீர்செல்வம் என்பது பெயர். அன்று மாலையே அந்தத் தந்தி பற்றி விசாரிக்கிறார்கள். மறுநாள் அந்த வழக்கறிஞர் கைது செய்யப்படுகிறார்.





மன்னார்குடி நடராசன் — என்னிடம் 30 கோடி ரூபாய் இருப்பதாக டெல்லியிலேயே இருந்து நோட்டீஸ் அச்சடித்துக் கொடுத்தார்களே—அதற்காக மன்னார்குடி நடராசனை அழைத்து, நாகப்பட்டினம் காவல் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்து, 'எங்கே தங்கம், எங்கே தங்கம்' கொடுத்திருக்கிறார் என்று கேட்டு அவர் 'இல்லை இல்லை' என்று சொல்லி, மறுத்த பிறகு அவரை விடுவித்திருக்கிறார்கள்.

சீர்காழியில் ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். குமாரசாமி என்கிற நண்பர்—வெற்றிலை வியாபாரி—ஒரு நாளைக்கு ஐயாயிரம் டர்ன்ஓவர் வரும்—தம் வீட்டிற்கு சாப்பிட அழைத்தார். நான் அப்போதே ஆபத்து வரும் என்று சொன்னேன். இல்லை வந்தே தீர வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது எம்.எல்.ஏ. ஆக உள்ள சுப்ரவேலுவும் பூம்புகார் கணேசனும் என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றார்கள். அவர் வீட்டில் சாப்பிட்டு விட்டு இரவு ரெயில் ஏறி நான் மறுநாள் சென்னை வருகிறேன். அடுத்த நாள் அந்த குமாரசாமி கைது செய்யப்பட்டு, கையில் விலங்கிடப்பட்டு சீர்காழி கடைத்தெரு வழியாக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். திருச்சி சிறைச்சாலையில் 9 மாத காலம் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறார்.

அதேபோல சேலத்தில் ஹால் மீட்டிங். அப்போது பொதுக் கூட்டங்கள் நடத்த முடியாது. அந்த ஹால் மீட்டிங்கிற்கு திரு. ரத்தினசபாபதி தலைமை தாங்குவதாக இருந்தார். முதல் நாளே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

(முற்பகல் 11-30)

ஆலத்தம்பாடி எம்.எல்.ஏ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றிருந்தேன். மறுநாள் அவர் மிசாவின் கீழ் கைது செய்யப்படுகிறார்.

செட் ஹில்ஸ்-ல் ஏழுமலை என்பவர் மீட்டிங் நடத்த அவர்களது மில்லைக் கொடுத்தார்கள். மறுநாள் அவர் மிசாவின் கீழ் கைது செய்யப்படுகிறார்.

குடந்தை தமிழ் மாறன் சகோதரி திருமணத்திற்குச் செல்கிறேன். திருமணம் கழிந்த மறுநாள் குடந்தை தமிழ் மாறன் கைது செய்யப்படுகிறார்.

[திரு. மு. கருணாநிதி] [1977 ஜூலை 15

திண்டிவனத்திற்கு ஒரு திருமணத்திற்குச் செல்கிறேன். அங்குள்ள நகரச் செயலாளர் துரை வரவேற்புக்கு ஏற்பாடு செய்தார்கள். முதல் நாளே அவர் மிஸாவில் கைது செய்யப்படுகிறார்.

திருவாரூரில் ஒரு கூட்டத்தில் பேசுகிறேன். நகரச் செயலாளர் என்னோடு பேசுகிறார். மறுநாள் அவர் மிஸாவில் கைது செய்யப்படுகிறார்.

விருத்தாசலத்தில் ஒரு திருமணத்தில் கலந்து கொள்ளச் செல்கிறேன். அந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த ராஜு என்பவர் முதல் நாள் மிஸாவில் கைது செய்யப்படுகிறார்.

இதைவிட பெரிய அக்கிரமம் ஒன்றைச் சொல்கிறேன். திருச்சி சிறைச்சாலையில் நடைபெற்றது. ஆரம்பக் கட்டத்தில் எனக்கும் சந்தேகம் இருந்தது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிந்து கொண்டால் நல்லது என்று இதைச் சொல்கிறேன். சுப்பிரமனியம் என்ற நண்பர். அரியலூரைச் சேர்ந்தவர். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. அவரையும் சிறையில் அடைத்துவிட்டார்கள், மிஸா கைதிகளில் ஒருவராக, ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு. அவர் எழுதியிருக்கிறார். நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்று. என்னை ஏன் சிறையில் அடைத்துவிட்டீர்கள் என்று கேட்டு எழுதியிருக்கிறார். அதற்குப் பதில் வரவில்லை. சிறைக்குள்ளே வந்ததுதான் வந்து விட்டோம், இனி தி.மு.க. ஆகிவிடுவோம் என்று தி.மு.க. ஆக ஆகிவிட்டார். அவர் சிறைச்சாலைக்குச் செல்வதற்கு முன்னால் திருமண ஏற்பாடு ஆகியிருக்கிறது. அந்தத் திருமணத்திற்காக அவர் பரோல் கேட்டிருக்கிறார். பரோல் கொடுக்கப்பட்டிருக்கிறது, இரண்டு நாட்கள். முதல் நாள் இரவு வரவேண்டும். மறுநாள் காலை திருமணம். அதற்கு மறுநாள் காலை திரும்பிவிட வேண்டும். சுப்பிரமண்யம் போலீஸாரோடு செல்கிறார். முதல் நாள் இரவு போலீஸாரோடு பேசிக்கொண்டிருக்கிறார். காலையில் திருமணம். அன்றிரவு முதல் இரவு நிகழ்ச்சியை நாள் பார்த்து வைத்திருக்கிறார்கள், கொஞ்சம் வைதிகத்தில் நம்பிக்கை உள்ள அவரது பெற்றோர்கள். சகோதரிகள் என்னை மன்னிக்க வேண்டும். போலீஸார் சொல்கிறார்கள். முதல் இரவு அன்று நாங்களும் அந்த அறையில் இருப்போம் என்று போலீஸார் சொல்கிறார்கள்.



1977 ஜூலை 15]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையில் நான் குறுக்கிடு செய்கிறேன் என்று அருள்கூர்ந்து கருத வேண்டாம். அவரே என்னிப் பார்க்க நான் கேட்டுக் கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலிருந்து தொலை தூரத்திற்கு அவர்கள் அகன்று சென்றிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: திருச்சி 200 மைல்தான், தொலைதூரம் அல்ல.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திருச்சிபற்றிச் சொல்லவில்லை. இவ்வளவு புரியாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. நான் ஆளுநர் உரைபற்றிச் சொன்னேன். (ஆரவாரம்.)

திரு. மு. கருணாநிதி: ஆளுநர் அவர்களது உரையில் நெருக்கடி நிலைபற்றி பேசவேண்டியது மிக அவசியம் என்பதை அவை முன்னவர் அவர்கள் அறியாமல் இருப்பதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். (ஆரவாரம்).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நெருக்கடி நிலை பிரகடனத்தைப் பற்றி தனியாக விவாதம் வைத்துக்கொள்ளலாம் என்று முன்னால் கூறியிருக்கிறார்கள். அதை நினைவுபடுத்திக்கொண்டு அவர்கள் மேலே தொடர்வது விரும்பத்தக்கதுதானா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: நானும் இந்தக் கட்டத்தோடு முடித்து விட்டு அடுத்த கட்டத்திற்கு வரலாம் என்று இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணி நேரமாகிவிட்டது. அவர்களும் நீங்களும் பகிர்ந்து பேச நேரமில்லை. இன்னும் 15 நிமிடங்கள்தான் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அரை மணி நேரம்தான் கொடுத்திருப்பேன், கணக்குப்படி பார்த்தால். அவர்களது நேரத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு விட்டீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 15 நிமிடங்களில் முடித்துவிட்டால் முதல் அமைச்சர் அவர்கள் பிறகு பேசுவதற்கு சரியாக இருக்கும். பிறகு வோட் எடுப்பு எல்லாம் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: ஆகவே, இந்த திருச்சி சிறைச் சம்பவத்தையும் முதல் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக் கொண்டு அந்தக் குழு போட வேண்டிய அவசியத்தை அவர் உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஏனெனில் 2 ஆம் தேதி கூட டெல்லியில் அவர்களிடம் சொல்லப்பட்ட கருத்துக்களை யொட்டித்தான், ஆளுநர் அவர்கள் உரைமீது பொதுவாகச் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்ற மரபு இருக்கிறது என்பதால் சொன்னேனே தவிர வேறு அல்ல.

அடுத்து, ஆளுநர் அவர்கள் உரையில் வரவேற்கத்தக்க அம்சமாக இருப்பது, 16 ஆயிரம் கிராமங்களில் நியாயவிலைக் கடைகளை அமைத்து, அதன் மூலம் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற பிற உணவு தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்றவை. புளி, எண்ணெய் இதுபோன்ற இன்றியமையாத பொருட்களை வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருப்பது பாராட்டுக்குரியதொன்றாகும். அதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே 9,000 கடைகள் திறக்கப்பட்டிருந்தாலும், அவைகள் சொஸைட்டிகள் மூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கடைகள் ஆகும். இப்போது 16,000 ரெவின்யூ கிராமங்களில் கடைகள் திறப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், இங்கே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரப் பட்டியல் புத்தகத்தைப் பார்த்தால், 17 ஆயிரத்து சொச்சம் ரெவின்யூ கிராமங்கள் இருப்பதாக இருக்கிறது. ஆகவே இன்னும் ஆயிரம் கிராமங்களைச் சேர்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். 16 ஆயிரம் கிராமங்கள் என்று வைத்துக்கொண்டாலும் கூட சில விவரங்களை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமை. ஏனென்றால் ஆக்க பூர்வமான யோசனைகளைச் சொல்வதாக தொடக்கத்திலேயே நான் சொன்னேன். அந்தப் பொறுப்பின் காரணமாக சொல்ல விரும்பு கிறேன்.

ஒரு நியாயவிலைக் கடைக்கு மூன்று பேர்களாவது அலுவலர் களாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால், நமது தொழிலாளர் நல அமைச்சர் திரு. ராகாவனந்தம் அவர்கள் விட மாட்டார்கள்.





அப்படி மூன்று பேர்களை அதாவது ஒரு பேக்கர், ஒரு சேல்ஸ் மேன், ஒரு கேஷியர் என்ற வகையில் மூன்று பேர்கள், அந்த இடங்களுக்கான வாடகை முதலிய செலவும், சாமான்கள் வாங்கி விற்பதற்கான முதலுக்கான வட்டி இவைகளை எல்லாம் கணக் கிட்டுப் பார்க்கிற நேரத்தில், மொத்தம் ஒரு கடைக்கு மாதந் தோறும் ஆகின்ற நிர்வாகச் செலவு என்ற வகையில் ஒரு ஆயிரம் ரூபாயாவது ஆகும் என்று நான் கருதுகிறேன்.

இப்படி ஆயிரம் ரூபாய் ஆகிற நேரத்தில் ஒரு நாளைக்கு 330 ரூபாய்க்காவது அந்த நியாயவிலைக் கடையிலே விற்பனை நடந்தால்தான் மாதம் சுமார் 10,000 ரூபாய்க்கு ஏறத்தாழ வியாபாரம் நடந்தால்தான் 10 சதவிகித லாபம் என்று வைத்துக் கொண்டால் கூட, ஒரு கடைக்கு ஆயிரம் ரூபாய் லாபத்தின் மூலமாக நிர்வாகச் செலவு கட்டுப்படியாகக் கூடிய நிலைமையை நாம் உருவாக்க முடியும். அதாவது ஒரு கடையில் நாள் ஒன்றுக்கு 330 ரூபாய்க்கு விற்பனையாக வேண்டும். இதை நான் டிஸ்கரேஜ் செய்வதாக தயவு செய்து எண்ணக் கூடாது. இதை கணக்கிடுகின்ற நேரத்தில் ஒரு கடைக்கு ஆயிரம் ரூபாய் என்றால், 16 ஆயிரம் கடைகளுக்கு ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய், அதாவது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 18 கோடி ரூபாய் ஆகிறது. இந்த 18 கோடி ரூபாய் விற்பனை மூலமாக நாம் ஈடு செய்கிற நேரத்தில், ஒரு எட்டு கோடி ரூபாய் துண்டு விழக்கூடும். அப்படி துண்டு விழுந்தாலும் பரவாயில்லை என்ற முடிவோடு இந்த 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை திறக்க முன் வந்த இந்த அரசை நான் பாராட்டுவதோடு, இதிலே விட்டுப்போன 1,039 ரெவின்யூ கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் சொன்ன ஆலோசனையை நிதித் துறையோடு கலந்து பேசி இந்த ஆயிரம் ரூபாய் நிர்வாகச் செலவை குறைப்பதற்கு ஏதாவது வழிவகை காணவேண்டும்.

இப்போது இளைஞர் அணியிலிருந்து பல பேர்கள், 175 ரூபாய் ஊதியம் பெற்றவர்கள் எல்லாம் அகற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக, மாதம் ஆயிரம் ரூபாய் நிர்வாகச் செலவு என்பதை குறைத்துக்கொள்ள இயலுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சம், ஊராட்சி ஒன்றியங்கள், நகரசபைகளின் தலைவர்களை மக்கள் நேரடியாக தேர்ந்தெடுப்பர் என்கின்ற ஒரு அம்சமாகும். இதை பரிசிலிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியிலிருந்து ஒரு உறுப்பினர் கேட்டுக்கொண்ட போது, ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர், இதில் எதிர்கட்சித் தலைவரின் கருத்து என்ன என்று கேட்டார். அதற்கு நான் 15-ம் தேதி சொல்வதாக சொன்னேன். சொன்னபடி நான் இன்றைக்குச் சொல்கிறேன். 15-ம் தேதி என்று நான் சொல்வதாக சொன்ன வாக்குறுதியை நான் நிறைவேற்றிவிட்டேன். இக்கருத்தை நான் கொள்கை வடிவத்தில் வரவேற்கிறேன். இதில் உள்ள நடைமுறை சிக்கல்களை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஏற்கனவே எதிர்க்கட்சி வரிசையில் அன்று அவர்கள் இருந்த காலத்தில் அன்று அவர்கள் இந்த மன்றத்தில், இந்தக் கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் கழக ஆட்சியில், முதல் கட்டமாக ஊராட்சி மன்றத் தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது. அதை பரிட்சார்த்தமாக வைத்துப் பார்த்துக்கொண்டு, அடுத்து ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி தலைவர்கள் தேர்தலைகளை வைத்துக்கொள்ளலாம் என்று யோசிக்கப்பட்டது. அது பரிசிலனையில் இருந்தது. அது புறக் கணிக்கப்பட்டதோ அலட்சியப்படுத்தப்பட்டதோ—ஆகாது.

இங்கே காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும், மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்களும் இதிலுள்ள சங்கடங்களை சொன்னார்கள். ஒரு தலைவரை நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்த ஒன்றியத்தில் பிற ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவ்விதம் உறுப்பினர்களான பிறகு தலைவர் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரை மாற்ற முடியாது. இந்தப் பிரச்னை ஏற்படும்.

அதே நேரத்தில் ஒரு கேள்வி எழாமல் இல்லை. ஏற்கனவே ஊராட்சி மன்றத்தில் இப்படிப்பட்ட தகராறுகள் இல்லையா என்ற கேள்வி எழாமல் இல்லை. ஆனால் ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை மிகக் குறைவான எல்லைகளைக் கொண்டவை. ஊராட்சி மன்றத்தில் நடைபெறுகின்ற நடைமுறையைப் பார்த்





தால், ஊராட்சி மன்றத் தலைவர்களே கூட, உறுப்பினர்களின் வீடுகளுக்கெல்லாம் போய் கையெழுத்து வாங்கிக்கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வது என்பது கிராமங்களில் இருக்கின்ற வழக்கமாக இருக்கிறது.

(முற்பகல் 11.40)

ஆனால் யூனியன் நிலைமை அப்படியில்லை. தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால், துணைத் தலைவரோ மறைமுக மாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருக்குப் பக்கத்திலே கவுன்சிலர்கள் எல்லாம் உட்கார்ந்துகொண்டு இருக்கும்போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் தகராறு ஏற்படும் சூழ்நிலை உருவாக முடியும். அந்த நிலையிலே இதுபோன்ற சிக்கல்களையெல்லாம் ஆராய்ந்து எப்படிப் பரிகாரம் காணலாம் என்று யோசிப்பதற்கு, எதிர்க் கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு காரியமாற்றுவது சிலாக்கியமானது என்றே கருதுகிறேன். அந்த வகையிலே, இந்த அரசு பஞ்சாயத்து யூனியன் நிர்வாகிகளை எப்படித் தேர்ந் தெடுப்பது என்கின்ற அறிவிப்பைச் செய்வதற்கு முன்பு, அனைத்துக் கட்சியினரையும் கலந்துகொண்டு செய்வது நல்லது என்று கூறி கொள்கை வடிவிலே இதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

கடைசியாக, இந்த கவர்னர் அவர்களுடைய உரையிலே நான் வரவேற்கின்ற மிக முக்கியமான ஒரு அம்சத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தியைப் பொறுத்தவரையில், இரு மொழிக் கொள்கை உறுதியானது என்று உறுதிப்படுத்தி இருப்பதை வரவேற்கிறேன். இதைச் சொல்வதில், உணர்ச்சி பூர்வமாக எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், எனக்கு ஒன்று அச்சமாக இருந்தது. இன்றைய தமிழக அரசின் நிதி அமைச்சரும், இந்த அவையின் முன்னவருமான திரு. மனோகரன் அவர்கள். இந்த தமிழக அரசு கலைக்கப்பட்ட வுடன், 10—3—1976 என்று கருதுகிறேன், டெல்லியிலே, பாராளு மன்றத்தில் பேசிய காலத்தில், தமிழக அரசு கலைக்கப்பட்டது எவ்வளவு நியாயமானது என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறும் அளவிற்கு, என்னை எவ்வளவு கண்டிக்க முடியுமோ, அந்த அளவுக்கு அவர்களுக்கே உரிய அருமையான மொழியில்,

அவருடைய பாணியிலே முழங்கிய அந்தப் பேச்சு ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'He' என்றால் கருணாநிதி

'He (Karunanidhi) raked up the Hindi issue. We are for Hindi. The Hindi language must flourish and must be nourished, for each and every language has a hoary tradition. But Karunanidhi very cleverly raked up the issue and said that the Central Government was imposing Hindi on the unwilling people of the South. By doing it, he thought that the people as well as the student community would rally behind him and give him full support. . . .'

என்று அன்றைக்கு இன்றைய அவை முன்னவரும் என்னுடைய அருமை நண்பருமான மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மனோகரன் அவர்கள், அன்றைக்குப் பாராளுமன்றத்திலே பேசியபோது "We are for Hindi" என்று சொல்லியிருக்கிறார். (பலத்த ஆரவாரம்).

திரு. துரைமுருகன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதற்கு * * என்று சொல்வது? இதை சபை குறிப்பிலேயிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் நாடாளுமன்றத்தில் பேசும்போது, இந்தியை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கின்றது என்று பேசியதாக இங்கே குறிப்பிட்டார்கள். எனது முழுப் பேச்சை எடுத்து வைத்துக்கொண்டு, அந்தப் பேச்சில் நான் என்ன குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை எடுத்துச் சொன்னால் தான், எனது பேச்சின் நிறைவை இந்தச் சபை புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் குறிப்பிட்டது, இந்தி மொழிக்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்ற கருத்தை வலியுறுத்தி, அனைத்து மொழிகளுக்கும் சம உரிமை உண்டு என்பதையும் வலியுறுத்திச் சொல்கின்ற நோக்கில்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன. (முற்பகல் 11-40—11-45-ல் சில சொற்கள்.)



நீங்கள் இன்றைக்குச் சொல்லுகின்ற இந்தப் போக்கைப் பயன்படுத்தி திரு. கருணாநிதி அவர்கள் இந்தப் பிரச்சினையை நாட்டு மக்கள் மத்தியிலே வைத்து, அதன் மூலம் ஒரு கிளர்ச்சியை, கொந்தளிப்பை, குழப்பத்தை உண்டாக்கி விடுவார் என்கின்ற கருத்தை அவைத் தலைவருக்கு எடுத்துச் சொன்னேன்.

(முற்பகல் 11-50)

இன்றைக்கும் சொல்லுகிறேன். நண்பர் கருணாநிதி அவர்கள் அதை விட்டு விட்டார்கள். நான் இதை பய உணர்ச்சியோடு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சொல்லுகிறேன்— 'மாணவர்கள் தன் பக்கத்தில் அதன் மூலம் அணி திரண்டுவிடக் கூடும் என்று கருதுகிறார்,

"But the discredited Chief Minister of Tamil Nadu has been rejected by the people of Tamil Nadu lock, stock and barrel.

என்று கூடக் குறிப்பிட்டிருக்கிறேன். அதை அவரது நலன் கருதி விட்டது பற்றிக் கவலையில்லை. ஆனால் எந்த நேரத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் இந்தி ஒன்றுதான் இந்தியாவை ஆளுகின்ற மொழி என்று சொன்னேன் என்று எனது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நிரூபிப்பார்களானால் எந்தத் தண்டனைக்கும் நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : மன்னிக்க வேண்டும். நான் அவை முன்னவர் அளவு ஆங்கிலம் படித்தவன் அல்ல. 'நாங்கள் இந்திக்கு எதிரி அல்ல' என்ற கருத்தை எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சொல்வதானால்— 'We are for Hindi' என்றுதான் சொல்லியிருப்பேன். என்னைவிட அதிக ஆங்கிலம் படித்தவர் அவர். அவர்— 'We are not against Hindi' என்று கூறியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னித்துக் கொள்ள வேண்டும். சொல்லுவதில் முறைகள் இருக்கின்றன. அவர் பின்பற்றுகிற முறை அது; நான் பின்பற்றுகிற முறை இது.

திரு. மு. கருணாநிதி : அவர்கள் அப்படிப் பேசிய பிறகு எனக்கு வந்த பயம் எல்லாம் அன்று உள்துறை அமைச்சர்— நான் இங்கே பார்லிமென்ட் ப்ரொசீடிங்கை வைத்துக் கொண்

டிருக்கிறேன்—பிரம்மானந்த ரெட்டி அவர்கள், இன்று அவை முன்னவராக இருப்பவரை அல்ல, அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் மனோகரன் அவர்களைப் பாராட்டிப் பேசுகிறார். மனோகரன் பாராளுமன்ற உறுப்பினராக ஆங்கிலத்தில் பேசியதைத் தமிழில் சொல்லுகிறேன்—

"அவர் இந்திப் பிரச்சினையைத் தூண்டிவிட்டார். நாங்கள் இந்தியை ஆதரிக்கிறோம் (அல்லது) நாங்கள் இந்திக்காக இருக்கிறோம். இந்தி மொழி செழிப்பாக்கப் படவேண்டும், வளர்க்கப்பட வேண்டும்; ஏனெனில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு புராதன மரபு உண்டு. ஆனால் கருணாநிதி மிகவும் புத்திசாலித்தனமாக இந்தப் பிரச்சினையைத் தூண்டி விட்டார். மத்திய அரசு, விருப்பமில்லாத தென்னக மக்கள் மீது இந்தியைத் திணிப்பதாகக் கூறினார். அப்படிச் சொல்வதால் மக்களும் மாணவர் சமுதாயமும் தனக்குப் பின்னால் ஒன்று திரண்டு முழு ஆதரவை அளிக்குமென்று அவர் நினைத்தார்".

இவர் இப்படிக் குறிப்பிட்டதற்குப் பிரம்மானந்த ரெட்டி சொல்லுகிறார்—

"I am glad that Mr. Manoharan has said that they stand for the development of Hindi throughout the country. It is a very good thing he is against all actions of rank parochialism, that is a very good thing. I welcome that statement, and I would request him and his leader. Mr. M. G. Ramachandran to repeat it *ad nauseum,* as many times as they like, in every nook and corner of Tamil Nadu. Youth of Tamil Nadu must grow with a better sense of responsibility, with better notions of All India with a better sense of national unity, national integrity. They should not be frogs in the well. That will act to your deteriment in the long run. . .'

"நாடு முழுவதும் இந்தி வளர்க்கப் பாடுபடுவதுதான் தங்களது நிலை என்று திரு. மனோகரன் சொன்னதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இது மிகவும் நல்ல காரியம். வெறுக்கத்தக்க குறுகிய மனப்பான்மை கொண்ட நடவடிக்கைகளுக்கு அவர் எதிரானவராக இருக்கிறார். இது மிகவும் நல்ல காரியம். நான் அந்த அறிவிப்பை (ஸ்டேட்மெண்ட்) வரவேற்கிறேன். அதைத் திரும்பத்



திரும்ப சலிப்புத் தட்டுமளவிற்குச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். அவர்கள் விரும்புகிற வரைக்கும் திரும்பச் சொல்ல வேண்டும்; தமிழ்நாட்டில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சொல்ல வேண்டும் என்று அவரையும், அவரது தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனையும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் நமது தமிழ்நாட்டு இளைஞர்கள் நல்ல பொறுப்புணர்வோடு நல்ல அகில இந்திய கருத்தோடு, தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு குறித்து நல்ல உணர்வோடு வளர்ந்தாக வேண்டும். அவர்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கக்கூடாது. காலப் போக்கில் அது உங்களுக்குத் தீமையான காரியமாகிவிடும்".

என்று ரெட்டி பாராட்டிச் சொன்னார். அதனால் எனக்கு அச்சம் ஏற்பட்டது. கவர்னர் உரையைப் படித்த பிறகு அந்த அச்சம் நீங்கிவிட்டது. அது மாத்திரமல்ல, நேற்று ஜேம்ஸ் அவர்களைப் பார்த்து அவை முன்னவர் 'இரு மொழிக் கொள்கைக்கு ஆபத்து வந்தால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போராடும். நீங்கள் எங்களோடு சேர்ந்து போராடத் தயார் தானா' என்று கேட்டவுடனேயே பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சால் எனக்கு ஏற்பட்ட அச்சமும், பிரம்மானந்த ரெட்டி பாராட்டியதால் ஏற்பட்ட பயமும் நேற்றுக் காலையிலேயே நீங்கிவிட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எனது பெயரைக் குறிப்பிட்ட காரணத்தால் ஒரு கிளாரிபிகேஷன் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தபோது, பிரம்மானந்த ரெட்டி அவர்கள் பேசும்போது 'நண்பர் மனோகரன் நாடு முழுவதும் இந்தி பரவுவதை ஆதரிக்கிறேன் என்று கூறினார். மனோகரன் அவர்கள் தமிழ் நாட்டிலும் அதைப் பரப்ப வேண்டும்' என்ற கருத்தைச் சுட்டிக்காட்டிப் பேசியபோது பாராளுமன்றத்தில் அதற்கு மனோகரன் எதிர்ப்புத் தெரிவித்தாரா? நேற்றையதினம் நான் கூறிய கருத்தைத்தான் அவர்களே பாராளுமன்றத்தில் அன்று இருந்த அரசுக்கு எதிராகக் கூறி

யிருக்கிறார்கள் என்பதை இப்போதாவது ஒப்புக் கொள்ளுகிறார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

* திரு. மு. கருணாநிதி: அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே இந்த மொழிப் பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'இந்தி திணிப்பு எந்த உருவத்தில் வந்தாலும் அதை முழு மூச்சுடன் எதிர்ப்போம். மறைந்த பிரதமர் ஜவகர்லால் நேரு கொடுத்த உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம் பெற பாடுபடுவோம்'

என்று 22—5—1977 அன்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் "மேக்னா கார்ட்டா" என்று தலைப் பிட்டு வெளியிடப்பட்ட தேர்தல் பிரகடனத்தில் கூறியுள்ளார்கள். நேரு அவர்களின் உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெறவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவும், செயற் குழுவும் தீர்மானங்களை நிறைவேற்றியிருக் கின்றன. நேரு அவர்களின் உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெறத் தக்க முறையிலே ஆளுங்கட்சி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஒத்துழைப்பையும் இந்த மன்றத்திலே தரும் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து சில வேண்டுகோள்களோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

அதே தேர்தல் அறிக்கையில் "சில பெரும் தொழில்களுக்கு மின் கட்டணச் சலுகை தந்தும், அதே நேரத்தில் வேளாண் மைக்கும் வீட்டிற்கும் பயன்படுகிற மின்சாரத்துக்கு அதிகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அதைப் பரிசீலனை செய்து உணவு உற்பத்தி பெருகிட வேளாண்மைக்கு விதிக்கப் பட்டுள்ள கட்டணத்தைக் குறைப்போம்" என்று சொல்லப் பட்டுள்ளது.

நலிந்து போன தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்தும், அதற்கேற்ப சட்டத்தை உருவாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லப்படுகிறது.





பயிர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்களிப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் உடனடியாக உருவாக்கவும், படிப்படியாக ஆனால் உறுதியாக நிறைவேற்றவும் முன்வரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்வேன்.

அதுபோலவே மூன்றாவது சம்பளக் கமிஷன் தேவை என்று கூறப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு மேதகு ஆளுநர் அவர்கள் 3-வது சம்பள கமிஷன் வரும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதுவும் வருகின்ற வரவு-செலவுத் திட்டத்திலே அரசு அலுவலர்களுக்கு இனிய அறிவிப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 29—12—1972 அன்று தென்னகம் ஏட்டிலும், 31—12—1972 அன்று ஆனந்தவிகடன் ஏட்டிலும் அருமையான ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் என்ன என்ன என்று சொல்லும்போது

'இன்று தினப்பத்திரிகை ஒன்றில் தமிழக அரசு ஒரு குழுவை நியமித்திருப்பதாகப் படித்தேன். விவசாயிகளுக்கு அன்றாடக் கூலியை எந்த அளவுக்கு உயர்த்தலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்து கருத்துக் கூறவே அந்தக் குழு நியமிக்கப் பட்டிருப்பதாக அதில் விளக்கப்பட்டிருக்கிறது.

தினக்கூலி என்பதை அறவே அகற்றியே ஆகவேண்டும். மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் போக லாபத்தில் பங்கும் தரப்பட்டே தீரவேண்டும்.

வாயில்லாப் பூச்சிகளான விவசாயிகளை அவ்வப்போது ஒரு சில ரூபாய்களை அதிகப்படுத்துவதுபோல பாவனைகாட்டி அவர் களைப் புகழ்ந்து பாராட்டி பேசியே நெடுங்காலத்திற்கு ஊமை களாகவே அழுத்திவிடலாம் என்று யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம்.

[திரு. மு. கருணாநிதி] [1977 ஜூலை 15

விவசாய சமூகம் இனிமேலும் பொறுத்திருக்குமென்று வீண் கற்பனையில் யாரும் மூழ்கி இருக்க வேண்டாம். விவசாயிகளின் நியாயமான கோரிக்கைக்கு அடிப்படையான நியாய உரிமைக் குரல் அன்று தி.மு.கழகத்தின் வாயிலாக ஒலித்து விட்டது. மேலும் தொடர்ந்து அன்று தி.மு.கழகம் விவசாயிகள் பிரச்சினையை நல்லதோர் அறவழியில் மக்கள் முன் விளக்கி அவர்களின் ஆதரவைப் பெற்று விவசாயிகளின் துயர் துடைக்கும் உண்மைத் திட்டத்தை நிறைவேற்ற உழைக்கும்' என்று இன்றைய முதலமைச்சர் 1972 ஆம் ஆண்டில் விகடனிலே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தினக்கூலியை அகற்றிவிட்டு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்பது கொள்கை அறிவிப்பாக வெளிவரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கடைசியாக, கவர்னர் உரையிலே தொடக்கத்திலேயும் இறுதியிலேயும் லஞ்சலாவண்யமற்ற ஊழலற்ற அரசமைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளுக்குத் தன்னுடைய முழுமையான ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கிறது. ஆனால் ஒன்றே ஒன்று. ஊழல் பேர்வழிகள் என்று புகார் சொல்லப் பட்டவர்கள் பலபேர் இன்றைக்கு அவர்களுடைய நிழலிலே இருந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களைக் கண்காணிக்கத் தவறி விடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலமைச்சரை குறைசொல்லவில்லை, "இவர்கள் எல்லாம் இருந்தால் கருணாநிதிக்கு ஆபத்து" என்று யார் யாரை அடையாளம் காட்டிச் சொன்னார்களோ அவர்களில் சில பேர்கள் அல்ல, பெரும்பாலோர் அவர்களுடைய நிழலிலே நின்றுகொண்டு ஊழலைப்பற்றி உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நானும் முதலமைச்சராகிய அவரும் நீண்டகாலம் பழகியவர்கள், நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டவர்கள். அவரைப்பற்றி எனக்குத் தெரியும், என்னைப்பற்றி அவருக்குத் தெரியும். கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரம் என்று அவருடைய கரத்தைப்பற்றி வர்ணிப்பார்கள். அது கொடுத்துச் சிவந்த கரம்



1977 ஜூலை 15] [திரு. மு. கருணாநிதி]

என்று ஒத்துக்கொள்ளும் அதேநேரத்தில், அவர்கள் ஒன்றை ஒத்துக்கொள்ள வேண்டும். "கருணாநிதியின் கரம் கட்சிப் பணத்தை எடுத்துச் சிவந்த கரம் அல்ல" என்பதை ஒத்துக் கொள்வார் என்று நம்பிக்கொண்டு, இந்த ஆளுநர் உரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் கூறிய ஆக்க பூர்வமான யோசனைகளையெல்லாம் கவனித்து, அதற்கேற்ற வகையில் இந்த அரசு நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுவரையிலே வாய்ப்பு அளித்த அவைத் தலைவரவர்களுக்கு நன்றிகூறி அமர்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறத்தாழ 95 பேர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலிலே நான் குறிப் பிட்டுச் சொல்ல வேண்டிய கடமைக்கு ஆளாக்கப்பட்டிருக் கிறேன்.

எனக்கு ஒரு அச்சம் இருந்தது. நாங்கள் பதவியேற்ற பிறகு ஆளுநர் உரையை, இங்கே உறுப்பினர்கள் முன்னால் ஆளுநரைக் கொண்டு ஓர் உரையைப் படிக்கச் செய்து, அதைப்பற்றிய கருத்துக்களை வெளியிட வேண்டிய வாய்ப்பு கிடைத்தபொழுது அதை மறுத்து அதைப்பற்றி நாம் எதற்காக திறனாய்வு செய்ய வேண்டும் அல்லது யோசனைகள் சொல்ல வேண்டுமென்று கருதி அலட்சியப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் இருந்தது. அப்படியில்லாமல் அவரவர்கள் என்னென்ன கருதினார்களோ, எதையெதை சொல்ல வேண்டுமென்று விரும்பினார்களோ, எந்த நோக்கத்தில் எதைக் கண்காணிக்க வேண்டும், கவனிக்க வேண்டு மென்று ஆசைப்பட்டார்களோ அந்தந்த வகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள், வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே யாருக்கும் விட்டுக் கொடுக்காமல், தயவு தாட்சண்யம் பாராமல் வெளியிட் டிருப்பதற்காக நான் உண்மையிலேயே இந்த அமைச்சரவையின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சிக்குப் புதிதாக வந்திருக்கின்ற நாங்கள் மக்களுக்கு என்ன சொல்லிக் கொண்டிருந்தோமோ, என்னென்ன செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டோமோ, அவைகளை நிறைவேற்று

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 15

இன்ற வாய்ப்பினைப் பெற்று, புதிதாக அமைச்சர்களாக ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிறோம். இங்கே மாமன்றத்திலே இருக்கின்ற பல உறுப்பினர்களுக்கு சட்டமன்ற நிகழ்ச்சி எப்படி இருக்கவேண்டும், எப்படித் தங்கள் கருத்தினை எந்த வகையிலே வெளிப்படுத்த வேண்டுமென்று கூடப் பழக்கம் இல்லாதவர்கள், பலர் என்று சொல்லமுடியாவிட்டாலும் ஒரு சிலராவது புதிதாக வந்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

இதுவரையில் நடந்த விவாதத்தில் எந்த நோக்கத்திலே, எந்த எண்ணத்திலே, எந்தக் கருத்திலே வெளியிடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றவர்கள் சொல்லியிருந்தாலும், வார்த்தைக்கு வார்த்தை சிங்காரம் என்பதைப்போல, ஒருவருக்கொருவர் இங்கே மறுப்பு கூறி, ஏதோ போராட்டம் நடப்பது போன்ற நிலைமைகளையெல்லாம் உருவாக்கி, இந்த மாமன்றம் தொடர்ந்து ஒழுங்காக நடக்காதோ என்று ஐயப்படுகின்ற அளவிற்குக்கூட விவாதங்கள் கொஞ்சம் காரசாரமாக இருந்தாலும் இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவரவர்களின் பேச்சுக்குப் பிறகு உண்மையிலேயே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற நாம் அனைவரும் மக்களுடைய வாழ்வைப் பற்றியும், அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தரக்கூடிய சூழ்நிலைகள் அமைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் ஆர்வத்தைக் கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களுடைய பேச்சு நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

(நண்பகல் 12.00)

இங்கே பல்வேறு கட்சியினர், பல்வேறு கொள்கைகளிலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள், மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். ஒரு சாராருக்கு இந்த நாட்டில் பொதுவுடைமைத் தத்துவம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற விருப்பம் இருக்கலாம். இன்னும் வேறு ஒரு கட்சியைச் சேர்ந்த தலைவருக்கு—பிரதிநிதிகளுக்கு—இந்த நாட்டில் மதச் சார்புள்ள நம்பிக்கையுள்ள சமுதாயம் இருந்தாக வேண்டுமென்ற நம்பிக்கையிலே அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இருக்கலாம். நான் ஒரு கூட்டத்திலே



1977 ஜூலை 15] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பேசும்பொழுது வற்புறுத்தியது போல், எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் நேர்ந்தது போல், ஆஸ்திகத்தை மதம் என்று சொல்லும்போது, நாஸ்திகத்தையும் மதம் என்று சொல்வது ஒரு காலத்தில் வழக்கத்தில் இருந்தது என்று நான் குறிப்பிட்டதை நினைவில் வைத்துக்கொண்டு அப்படிப்பட்ட வெவ்வேறு நம்பிக்கை உடையவர்கள் இந்த மன்றத்தில் இருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்.

அந்தைப் போலவே, இந்தி மொழியிலே நாட்டம் உடையவர்கள் அல்லது இந்தி ஆட்சி மொழியாக வந்தால் தமிழுக்கு எந்த ஆபத்தும் வந்து விடாது என்று கருதுகின்றவர்கள் கூட ஒரு வேளை இருக்கலாமோ என்று நான் ஐயப்பட காரணம் உண்டு என்று கருதுகிறேன். அதைப்போல் வேறு எந்த மொழியும் ஆட்சி மொழியாக, இந்திய துணைக் கண்டத்தின் ஆட்சிமொழியாக அமுல்படுத்தப்படுகிற நிலைமை ஏற்படுமானால், தமிழகத்திற்குச் சொந்தமான தமிழ் அழிக்கப்படும், பண்பாடு குலைந்து விடும், கலாச்சாரம் நசிந்து விடும் என்கிற நம்பிக்கையுள்ளவர்கள் இங்கே இருப்பார்கள் என்பதிலே யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

அப்படிப்பட்ட பல்வேறு நம்பிக்கையுடையவர்களாகிய நாம் இங்கே ஒருமித்த எண்ணத்தோடு, ஒருமனதாக அனைத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை வராமல் போய்விட்டாலும் ஒரு சிலவற்றிலாவது, பலவற்றிலாவது நாம் நம்முடைய கருத்துக்களிலே இணைந்து இந்த நாட்டிற்கு நமது தொண்டினைச் செய்வதற்கு ஏற்றவாறு சூழ்நிலை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணி நான் மகிழ்கின்றேன்.

நான் ஒரு கணக்கு போட ஆசைப்பட்டேன். இங்கே எத்தனையோ மைலுக்கு அப்பாலிருந்தும் சென்னை நகர்ப்புறத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாக வந்திருக்கிற நாம் ஒவ்வொரு விநாடியையும் செலவழிக்கும்போது யாருக்காக அதைப் பயன்படுத்த விழைகின்றோம் என்பதை எண்ணிப் பார்ப்பதற்காக ஒரு கணக்கை நான் கேட்டேன். எனக்குக் கிடைத்த பதில்—ஒரு மணி நேரத்திற்கு ரூ. 3,500 மக்களின் பணம் இங்கே—செலவழிக்கப்படுகிறது சபை நடக்கும்போது—என்று எனக்குக் குறிப்புத் தந்தார்கள். இலட்சக்கணக்கில் ஆண்டிற்கு

என்று கணக்கு வந்தாலும் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 3,500 இங்கே செலவழிக்கப்படுகிறது. நாம் பேசுகிற பேச்சுகளின் விலை இதுவா என்று கேட்க முடியாது. நாம் சொல்லுகின்ற கருத்துக் களுக்கு ரூ. 3,500 விலையா என்று யாரும் மதிப்பிட்டு விட முடியாது.

ஆனால், மக்களின் வரிப்பணம், நம்மை நம்பி நாம் செலவழிக்க அந்த அளவிற்கு அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது இங்கே எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களைப் போன்றவர்களும் மற்றைய, ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களும் இங்கே பேசும்பொழுது கருத்துக்களை வெளியிடுகின்றார்களே, அந்தக் கருத்துக்கள் எப்படிப்பட்டனவாக அமைய வேண்டுமென்பதற் காக நான் இதை இங்கே பேசுபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நினைவுபடுத்துவதற்காக இந்தக் கணக்கினை சொல்ல ஆசைப் பட்டேன்.

வீண் விவாதங்கள் நடத்தும்போது இங்கே நேரம் போகிறதே என்று கவலைப்பட்டேன் என்பதையும் நான் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைத் தவறாகக் கருதிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த ரூ. 3,500 ஒரு மணி நேரத்திற்குச் செலவழிக்கப்படுகிறதென்றால் மக்களுடைய வரிப்பணம் செலவழிக்கப்படுகிறதென்றால், மக்களுக் காக நடைபெறுகிற இந்தச் சட்டப் பேரவையில் அந்த ஒரு மணி நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் எத்தகைய கருத்தினை, நாட்டு மக்களுக்குப் பயன்தரக்கூடிய கருத்தினை, கொள்கை விளக்கத்தை, திட்டங்களை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித்தர அமைத்துக் கொள்ள வேண்டு மென்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக, என்னையும் உள்ளிட்டு அதை மனதிலே பதிய வைத்துக்கொள் வதற்காகத்தான் இந்தக் கணக்கை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டிலே பல பிரச்சினைகள் அங்கங்கே இருந்து கொண்டிருக் கின்றன. குறிப்பாக நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவசரகால சட்டத்தைப் பற்றியும், அந்த அவசா காலச்



சட்டம் அமலில் இருந்தபோது என்னென்ன கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதையும் எல்லாம் வரிசையாகப் படித்துக் காண்பித்தார்கள். நான் அதிகமாகப் பேசி விவாதத்திலே மீண்டும் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்றாலும், ஒன்றை இந்த மன்றத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த அவசர காலச் சட்டத்தினால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் தான் சங்கடத்திற்கு ஆட்பட்டது என்று யாரும் கருதிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நான் தெளிவுபடுத்த வேண்டியவனாக உள்ளேன்.

எதிர்க் கட்சித் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் யார் யார் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்கு அவர்களுடைய பெயர்களைப் படித்துக் காட்டினார்கள். அத்தகைய நீண்ட பட்டியலை நான் சொல்ல விரும்பாவிட்டாலும், இரண்டொரு பெயர்களை நான் சொல்லியாக வேண்டும். தமிழகத்திலே இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்த போது, மிசா பயன்படுத்தப்பட்ட விதம் எப்படி இருந்தது, யார் யார் எல்லாம், எப்படியெல்லாம் பழி வாங்கப்பட்டார்கள், குறிப்பாக எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தொல்லைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த வேண்டியவனாக இருக்கிறேன்.

அந்த மிசா சட்டம், கல்யாணம் செய்து கொண்ட ஒரு ஆணும் பெண்ணும் அவர்கள் தனித்திருக்கக் கூடிய இடத்தில் கூட போலிசார் இருப்பார்கள் என்று சொல்லக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிற்று என்று அவர்கள் சொன்னதுபோல அனைத்திந்திய அண்ணா திமுக-விலிருந்து நீ வெளியே விலகி வந்தால், அந்தக் கட்சியிலே இருந்து விலகினால், மிசாச் சட்டத்தின் கீழ் கைதாகாமல் விடுதலை கிடைக்கும் என்று சொன்ன அதிகாரிகள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் பெயர் பட்டியலை, அவர்கள் யார் யார் என்பதை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 15

யெல்லாம் நாங்கள் இன்னமும் கையிலேயே வைத்துக் கொண்டு தான் இருக்கிறோம் என்பதையும் சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைப்போல எத்தனையோ அட்டூழியங்கள், அக்கிரமங்கள், கொடுமைகள் இந்த நாட்டிலே மிசாச் சட்டம், அவசர காலச் சட்டம் இல்லாத நேரத்திலும் நடந்திருக்கின்றன. இந்த வேதனைகள் ஒன்றிரண்டை நான் இங்கே குறிப்பிடக் கூடிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகத் தோன்றிய பிறகு, எங்களை ஆதரித்ததற்காக மாணவர்களை காவல் நிலையத்தில் எப்படித் தாக்கினார்கள், எப்படி அடித்தார்கள்— அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் என்னை மன்னிக்க வேண்டும்—போலீஸ் துறை காவல்காரர்கள் பூட்ஸ் காலாலே மலத்தை மிதித்து அதை மாணவர்கள் முகத்திலே வைத்துத் தேய்த்து அதை நக்க வேண்டுமென்று சொல்லி, அவர்களை அடித்து வதைத்திருக்கிறார்கள். இந்தக் கொடுமைகள் நடைபெற்றிருப்பதை எல்லாம் நாங்கள் மறந்து விடவில்லை. அதைப் பற்றிய விவரங்களை நான் இங்கே சொல்லும்போது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன்.

மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அவர்கள் 'மிசா' சட்டத்தின் கீழ் தமிழகத்திலே யார் யார் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, அந்த விசாரணைக் குழுவுக்கு இந்த அரசு உதவ வேண்டும் என்று சொன்னார்கள். அதை நிச்சயமாக நாங்கள் செய்வோம். அதுமட்டுமல்ல, அதற்கு முன்னாலே 3½ ஆண்டுக் காலம் தமிழகத்திலே நடந்த கொடுமைகள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி மற்றவர்கள் துன்பப்படுத்தப்பட்டது, கொடுமைப்படுத்தப்பட்டது, இளைஞர்கள் கொலை செய்யப்பட்டது ஆகிய விஷயங்களை எல்லாம் நிச்சயமாக விசாரணைக் குழு வைத்து விசாரணை செய்வோம் என்பதை எனது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லிக் கொள்ளுகிறேன்.



1977 ஜூலை 15] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(பிற்பகல் 12.10)

நான் இவைகளை வெளியிட்டதற்கு என் மேல் வழக்கு போடப் பட்டது எனக்கு நினைவுக்கு வருகிறது. மாணவர்கள் நேரடியாக வந்து பத்திரிகை நிருபர்களுக்கு முன்னால் சொன்னதையும், நான் சொன்னதையும் சேர்த்து நீங்கள் இல்லாததைச் சொன்னீர்கள் என்று என் மீது வழக்கு போடப் பட்டது. வழக்கு விசாரணைக்கு வர வேண்டிய நிலையில் ஆட்சி மாற்றப்பட்டதன் விளைவாக சில மாதங்கள் கழித்து பரிசிலித்து அதை பின்வாங்கிக் கொண்டார்கள். வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால், என்னைப் பொறுத்தவரையில், எங்களைப் பொறுத்த வரையில் மாணவர்களை, தொண்டர்களை, பெண்களை—எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமல்ல, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை எல்லாம்—கொடுமைப் படுத்தியதை ஆதாரத்தோடு எங்களுக்குக் கிடைக்கின்ற அந்த உண்மைகளையும் வைத்து நிச்சயமாக விசாரணைக்கு அதை ஆட்படுத்துவோம் என்பதை நான் மீண்டும் அழுத்தம் திருத்த மாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் அவசர காலச் சட்டத்தை ஆதரித்தோம் என்று எங்கள் மீது குறை கூறப்பட்டது. இங்கேயும் குறை கூறப்பட்டது. முன்னாலும் குறை கூறினார்கள். எங்கள் அமைச்சரவையில் இருக்கிற சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அது தவறு என்று எழுதியதை எதிர்க் கட்சித் தலைவர் படித்துக் காண்பித்து மிக நல்ல விளக்கத்தைத் தந்தார்கள். நாங்கள் மாறிவிட்டோம். மாற்றிக் கொண்டு விட்டோம் என்பதை எண்ணி அவர்கள் மகிழ்ந்தார்கள் என்பதை நான் உணர்ந்தேன்.

யாருக்கும் காயப்படும்போது வேதனை பிறக்கத்தான் செய்யும். அந்தக் காயத்திற்கு என்ன காரணம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்வேன்.

3½ ஆண்டுகள் நடந்த கொடுமைகள் எங்களுக்கும் எங்கள் கட்சிக்கும் மக்களுக்கும் இழைத்த கொடுமைகள், தொல்லைகள் இவைகளின் வாயிலாக, இந்த அதிகாரிகள், அரசு இத்தகைய கொடுமைகளைச் செய்கிறார்களே ஒரு அரசியல் கட்சியை நியாய உணர்வோடு வன்முறை இன்றி நடத்தக்கூட அனுமதிக்க முடியாத சூழ்நிலை இல்லாது இருக்கிறதே என்று வேதனைப் பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், கொலை செய்தவர்கள் கும்மாளம் அடித்துக் கொண்டு, பெண்களை கற்பழித்தவர்கள் வீதியில் அதிகாரிகளின், பெரிய பெரிய பதவியில் இருந்தவர்கள் துணையோடு திரிந்து கொண்டிருந்த நேரத்தில், இப்படியெல்லாம் இருக்கிறதே இதற்கு ஒரு விடிவுகாலம் ஏற்படாதா என்று எண்ணிக்கொண்டு இருந்த நேரத்தில், இந்த அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்ற நிலைமை ஏற்பட்ட உடனே ஒரு விடுதலை பெற்ற உணர்ச்சியில் தான் அதை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி :** ஆட்சி கலைக்கப்பட்டது 76 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி. அவசர நிலை பிறப்பிக்கப்பட்டது 75 ஆம் ஆண்டு. 75 ஆம் ஆண்டில் ஏன் அவசர கால நிலையை ஆதரித்தீர்கள் என்பது தான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அவசர கால நிலையை ஆதரித்தோமென்றால் பீகாரில் நடந்த வன்முறைகள் எங்களுக்கு ஒத்துப்போகக் கூடிய கருத்தாக இல்லாததால் தான் நாங்கள் ஆதரித்தோம்.

இந்த நேரத்தில் தான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது கூட தமிழகத்திலே முயற்சிக்கிறார்கள். எந்தத் தரப்பிலே இருப்பவர்களானாலும் இந்த அமைச்சரவையை யார் பொறுப்பு ஏற்று நடத்துகிறவர்களாக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மக்களிடம் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும்.

அவர்கள் எண்ணுவதைச் சொல்ல உரிமை இருக்க வேண்டும். அதிலே நாங்கள் குறுக்கிடவில்லை.





அதே நேரத்தில் வரியைக் குறைக்க வேண்டும் என்று யாராவது கேட்க விரும்பினால் அவர்களுக்கு அந்த உரிமை இருந்தாக வேண்டும். அதிலேயும் நாங்கள் குறுக்கிடவில்லை.

அதேபோல் தொழிற் சங்க போராட்டங்களில் வன்முறை அற்ற போராட்டங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று யாராவது கேட்டார்களானால் அது அவர்களுடைய உரிமை நாங்கள் அதிலே குறுக்கிட தயாராக இல்லை.

ஆனால், சில இடங்களில் போராட்டங்கள் என்று சொல்லிக் கொண்டு, உரிமைப் பிரச்சினை என்று சொல்லிக் கொண்டு வரி கொடுக்காதீர்கள் என்று சொல்லுகின்ற, ஒரு சிலர்---ஒரு கட்சியினர்—இங்கே பணியாற்றுகிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப் பற்றி என்ன முடிவு சொல்வீர்கள் என்பதை உங்கள் உள்ளத்தில் பதிலாகப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வரி கொடுக்காதீர்கள் என்று யாராவது சொல்வார்களேயானால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, எதிர்க் கட்சித் தலைவருக்கு, முன்னாள் அனுபவம் இருக்கிறது என்ற காரணத்தால், முதலமைச்சராக ஏழாண்டுக் காலம் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த காரணத்தால், அவருக்கு, இது எப்படி அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு -- இது மட்டுமல்ல — இன்னும் அதிகக் காரணங்கள் அவருக்குத் தெரிந்திருக்கக் கூடும் என்ற வகையில் சொல்கிறேன். அந்த வகையில் பீகாரில் நடந்த சில காரியங்கள் எங்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய எண்ணங்களுக்கு, எங்களுடைய நம்பிக்கைகளுக்கு, நாங்கள் நம்புகின்ற அண்ணாவின் வழிமுறைகளுக்கு ஒத்ததாக அவை இருக்கவில்லை.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடிய சூழ்நிலையை உருவாக்கக்கூடாது ; போராட்டங்களில் ஈடுபடுத்தக் கூடாது, அவர்கள் வன்முறையைத் தூண்டும்படியான சூழ்நிலைக்கு ஆளாக்கக்கூடாது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்வோம் என்பதில் ஐயமில்லை.

படிக்க வேண்டிய மாணவர்கள் போராட்டங்களில் இறங்குவதை யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதே நேரத்தில் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய

கடமை, அவர்களுக்குப் பின்பலமாக இருக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆனால், மாணவர்களைத் தூண்டிவிட்டு, மாணவர்களை வன்முறையில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளி விட்டு, ஒரு தலைவர் அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த, நாடு முழுவதிலும், குறிப்பாக, அந்த மாநிலத்தில், என்ன நடந்தது என்பதை ஏடுகளில் படிக்கும்போது, அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மாணவர்கள் பள்ளிக்குப் போக வேண்டாம். இரண்டாண்டுகள் பள்ளிக்குப் போவதை நிறுத்தி விடுங்கள் என்று கூறுவது அண்ணா வழிக்கு உகந்தது தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு மாணவன்—அவன் பெயர் புருஷோத்தமன் என்று கருது கிறேன்—பெயர் சரியாக நினைவில்லை—அந்த மாணவன் அண்ணா விடம் வந்து, நான் செகரடரியேட்டுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன், போராடப் போகிறேன் என்று சொன்ன போது, அண்ணா அவர்கள் சொன்ன வார்த்தைகள் எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. நான் அந்த நேரத்தில் அங்கே இருந்தேன். அண்ணா அவர்கள் சொன்னார்கள். "நான் திராவிட நாடு வேண்டுமென்று கேட்கிறேன். திராவிடநாடு வேண்டு மென்று கேட்கின்ற நாம் எத்தனை ஆண்டுகள் உயிரோடு இருப்போம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்க ளுக்குப் பின்னால் நாங்கள் திராவிட நாட்டைப் பெற்று விட்டால், யாரிடம் அதனை ஒப்படைத்துச் செல்வோம் என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள். எங்களுக்குப் பின்னால் வருகின்ற நீங்கள், திறமை படைத்தவர்களாக, படித்தவர்களாக, விவரம் தெரிந்தவர்களாக, பல துறைகள் தெரிந்தவர்களாக, பொறி இயல் துறையில் திறமையுள்ளவர்களாக, வழக்கறிஞர்களாக, இப்படி எல்லா வகைகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்று, அறிவுள்ளவர்களாக, ஆற்றலுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, இந்த வாழ்க்கையைப் பாழ்படுத்திக்கொண்டு இந்தப் போராட்டத்தில் இறங்குவீர்களானால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்னிடம் விட்டுவிடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நாங்கள் இல்லை என்று ஆகிவிட்டால், இது தான் கடைசியான போராட்டம் என்ற கட்டத்திற்கு வருமானால்,





நீங்கள் முயற்சி செய்ய முன்வாருங்கள். அதுவரையில் படிப்பை கவனியுங்கள், படிப்பில் கவனம் செலுத்துங்கள்" என்று அண்ணா அவர்கள் சொன்னதை நினைவில் வைத்திருக்கிறேன்.

ஆனால் பீகாரில், இரண்டாண்டுகள் நீங்கள் கல்லூரிக்கோ, பள்ளிக்கோ போக வேண்டாம் என்று யாராவது சொல்கிறார்கள் என்று கேள்விப்பட்டால், அதை எப்படி ஆதரிக்க முடியும்? படிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கே கல்வியைப் பற்றிப் பேசும்போது பெரியவர்கள் — மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் — 12 வருடம், 13 வருடம், 10 வருடம் படிப்பு என்று சொல்லும்போதெல்லாம், மாணவர்களுக்கு எதை எல்லாம் சொல்ல வேண்டும் என்பதை எல்லாம் விளக்கமாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் இங்கே படித்துக் கூட காண்பித்தார்கள். ஐயா — பெரியார் அவர்களைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதியக் கட்டுரையை நீக்கியது சரியா? அந்த உணர்வுகளை, உணர்ச்சிகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டாமா, வரலாறுகளைப் புரிந்து கொள்ள வேண்டாமா, அது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டாமா, என்றெல்லாம் கேட்டார்கள். அப்படி, அவர்கள் படிக்கின்ற ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு மணி நேரமும், புதிய, புதிய எண்ணங்களை, கடந்த வரலாறுகளைத் தெரிந்து கொண்டு இந்த நாட்டை, நமக்குப் பின்னால் ஆளத் தகுதி படைத்தவர்களாக ஆக வேண்டாமா? அத்தகைய இளைஞர்களை, பள்ளிக்குப் போகா தீர்கள் என்று தடுப்பார்களேயானால் அதை எங்களால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

நான் கொஞ்ச நேரத்திற்கு முன்பு சொன்னேன். வரி கொடுக்கா தீர்கள் என்ற வாதத்தைக் குறிப்பிடும்போது, அந்த வாதத்தை, அமைச்சரவையிலே இருக்கின்ற, பொறுப்பிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்களால் அனுமதிக்க முடியுமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கும்போது, நீங்களும் மாறுபட்ட கருத்தைக் கொள்ள மாட்டீர்கள் என்று நிச்சயம் நம்புகிறேன்.

(பிற்பகல் 12.20)

அதே நிலையில், பீகாரிலே, வரி கொடுக்காதீர்கள் என்று சொன்னதை ஏடுகளிலே படித்தேன். வரி கொடுக்காதீர்கள் என்று மக்களை, ஒரு முறை பழக்கப்படுத்தி விட்டால், அந்த

மாநிலம், அந்த நாடு நிச்சயமாக கட்டுப்பாட்டை இழந்து, ஒரு புரட்சிக் கனலை உள்ளத்தில் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கக் கூடிய அளவுக்கு தூண்டிவிடப்பட்ட நிலைமையில், எப்போதும் அமைதி காண முடியாது. ஆட்சியை ஒழுங்காக, சீராக நடத்த முடியாத நிலை நாட்டில் தோன்றிவிடும் என்பதை நான் இங்கே, கொஞ்சம் வேக உணர்வோடு வெளியிட விரும்புகின்றேன்.

ஒரு நாட்டில், ஒரு பகுதி மக்களை, அது எந்தப் பகுதி மக்களானாலும் சரி — அவர்களை, வரி கொடுக்காதீர்கள் என்று சொல்லி, அந்தப் பகுதி மக்கள் அதை ஏற்றுக்கொண்டு செயல்பட ஆரம்பித்து, அந்த நிலை இன்னொரு பகுதிக்கும் பிரிவுக்கும் பரவுமேயானால், நாட்டிலே ஒழுங்கின்மை--சட்டத்தைக் கெடுக்கின்ற நிலைமை—உருவாகி, தங்களுடைய கடமையை நிறைவேற்றுகின்ற உணர்வு அற்றுப்போகும் என்பதில் எங்களுக்கு அச்சம் இருக்கிறது. ஆகவே தான், வரி கொடா இயக்கம் என்று சொல்லப்படுவதை நாங்கள் எதிர்த்தோம்.

அது மட்டுமல்ல. அந்தப் பெரியவர் மேலும் என்ன சொன்னார்? வரியைக் கொடுக்காதீர்கள் என்று மட்டும் சொல்லவில்லை. வரியை என்னிடம் கொடுங்கள் என்று கேட்டார்கள் என்றால் அதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? நடைபெற்றுக்கொண்டிருந்தது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி. இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஒரு சட்டமன்றத்திற்கு, பெரும்பான்மையான ஆதரவு இருக்கும்போது, எப்படி அதை டிஸ்மிஸ் செய்வது நியாயம் என்று கேட்டார்கள். நான் வேறு வகையில் கேட்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு பதவியில் இருக்கும்போது, யாரோ ஒரு பெரியவர் — எவ்வளவு பெரியவரானாலும், எவ்வளவு நேர்மையானவரானாலும், மக்களைப் பார்த்து, வரி கொடுக்காதீர்கள் இந்த அரசுக்கு, என்னிடம் கொடுங்கள் என்று சொன்னால் அது எப்படி நியாய உணர்வாகும்? எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியுமா? நிச்சயம் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏடுகளில் வந்த செய்தியைக் கண்ட பிறகு நான் பல கூட்டங்களில் பேசியிருக்கிறேன். அந்தப் பெரியவர் இங்கே—தமிழகத்திற்கு—வந்தபோது, இவைகளையெல்லாம் உள்ளடக்கிய கேள்வியை





அவருக்குக் கொடுத்து அனுப்பினேன் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மறைமுகமாக நான் சொன்ன சொல் அல்ல.

இப்படிப்பட்ட நிலைமைகள் இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றும் நிலைமை ஏற்படுமானால், இந்திய நாட்டின் வளர்ச்சியைப் பற்றி அக்கறை கொள்கின்ற நாம், இந்திய நாட்டிற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு இருக்கின்ற பண்பாட்டைப் பாராட்டுகின்ற நாம், அப்படிப்பட்ட பண்பாட்டைப் பாழாக்காமல் காப்பாற்ற வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், கெட்டவைகளில், எது குறைந்த அளவுக்கு கெடுதலைத் தருகின்றது, எது அதிகமான கெடுதலைத் தருகின்றது என்று இரண்டையும்தான் பார்க்க வேண்டும். வேறு வழியில்லை என்ற நிலையில், குறைந்த அளவுக்குக் கெடுதலைத் தருகின்ற ஒன்றை ஏற்றுக்கொள்வதன் மூலம் பெரிய கெடுதலைத் தடுத்து நிறுத்திவிட முடியாதா என்று பார்ப்பது போல, வேறு வழியின்றி, இப்படி நாட்டிற்குக் கேடு விளைவிக்கும் நிலைமை நாட்டில் பரவ விடக்கூடாது என்ற உணர்வோடு அன்று அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற உணர்வை, நம்பிக்கையைக் கொண்டு, நான் அதைச் சொன்னேன்.

அதே நேரத்தில், நாட்டில், பத்திரிகையில் எதையெதைப் பற்றியெல்லாம் எடுத்துச்சொல்லி இருக்கிறோமோ, அவற்றை எல்லாம், எங்கள் பிரதிநிதியாக, இப்போது நிதி அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு மனோகரன் அவர்கள் நாடாளுமன்றத்தில், அவசரகாலச் சட்டம், பத்திரிகைகளை எப்படி முடக்குகிறது என்பதையும், பத்திரிகைகள் எப்படித் தடைப்படுத்தப்படுகின்றன என்பதையும், பத்திரிகைச் சுதந்திரத்தில் எப்படியெல்லாம் தலையீடு இருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால், நான், ஒரு நடிகன் என்ற முறையில், நடிப்புத் தொழிலைத் தொழிலாகக்கொண்டவன் என்ற முறையில், தணிக்கை என்ற பேரால் அதிகக் கெடுதலான விளைவுகளுக்கு ஆளாகியிருக்கிறேன். ஆளாக வேண்டியிருந்தது என்பதை சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். நான் இருந்த தொழிலுக்கு அதிகமான கேடுகள், குழப்பங்கள், ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு அது காரணமாக இருந்தது. நான் அதைப்பற்றிக் கவலைப்படாமல், என்னுடைய தொழில் பாதிக்கப்படுகிறதே

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 15

என்பதைக்கூடக் கருதாமல் ஒட்டுமொத்தமாக நாட்டிலுள்ள அத்தனை மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில் நல்ல உணர்வுகளை, கடமை உணர்வுகளை, கண்ணியமாக வாழக் கூடிய உணர்வுகளைக் காப்பாற்றுவதற்காக இதைச் செய்தால் பரவாயில்லை என்றால்—இந்தச் சிறிய தீங்கைத் தாங்கிக் கொள்வோம், இதனால் நாட்டிற்கு ஏற்பட இருக்கிற பெரிய தீமைகள், கேடுதல்கள் ஏற்படாமல் போனால் நல்லது என்றுதான் எண்ணினேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இன்னொன்றையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன் என்று அவசரகாலச் சட்டம் இருந்தபோது நடைமுறைக்கு வந்து செயல்பட நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று யாரும் சொல்லவில்லை. யார் யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது வழக்கு போடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இந்தத் தேர்தலின்போதும் நான் பகிரங்கமாக பல கூட்டங்களில் பேசினேன். குற்றம் செய்திருந்தால் சஞ்சய் காந்தியின் மீது வழக்குபோடப்பட்டு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். குற்றம் செய்திருப்பதை நிரூபிப்பதற்கு ஆதாரம் இருந்தால் அவர்கள் மீது வழக்குப் போடுவதில் எங்களுக்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன். அப்படிக் குறிப்பிட்டதற்குக் காரணம், ஒரு கட்சியை ஆதரித்தால்தான் எங்களுக்கு லாபம் கிடைக்கும் என்பதற்காக நிச்சயமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் யாரையும் ஆதரிக்கவில்லை என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான்.

நியாய உணர்வோடு பார்த்தால் தெரியும். மிகவும் கஷ்டப்பட்டு இந்த நாட்டிலுள்ள நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். ஜனநாயக அடிப்படையில் உலகமெங்கும் இல்லாத அளவுக்கு அதிகமான வாக்காளர்களைக் கொண்டது நமது இந்தியத் துணைக்கண்டம். இங்கே ஜனநாயகம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதற்காக நாங்கள் அன்றைக்கு அதனை ஆதரித்தோமே தவிர, ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லாத நிலைமையில் அதனை ஆதரித்தோமே தவிர எல்லோரையும் அடக்கி அடிமைப்படுத்தக்கூடிய சட்டம் வேண்டும். அது இந்த நாட்டைக் குட்டிச்சுவர் ஆக்க வேண்டும், பாழ்படுத்த வேண்டும்



1977 ஜூலை 15] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்பதற்காகச் செய்யவில்லை என்கிற இந்த அளவு விளக்கம் அதற்குப் போதுமானது என்று கருதி நான் நிறுத்திக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்வேன். அவசர காலச் சட்டம் நாட்டில் இருந்தபோது தமிழகத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு எல்லாக் கட்சிகளும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. நான் மறுக்கவில்லை. ஆனால், அதற்கு முன்னால் புள்ளிவிவரத்தோடு, வாய்ப்பு ஏற்படுகிறபோது நான் எடுத்துச் சொல்லத் தயாராய் இருக்கிறேன். எத்தனைமுறை எங்கள் கட்சிக் கூட்டங்களை நடத்துகின்றபோது கத்திக் குத்துக்கள் நடைபெற்று, சோடா புட்டிகளும் கற்கள் வீசப்பட்டு கூட்டங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன, கூட்டங்களை நடத்த முடியாதபடி, போலீஸ் பாதுகாப்பு இல்லாமல் நாங்கள் அவதிப்பட்டிருக்கிறோம் என்பதை என்னால் எடுத்துக்காட்ட முடியும். அவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருக்கிற நேரத்தில், எந்த அளவுக்கு எங்கள் கட்சித் தொண்டர்கள், தோழர்கள் மாற்றுக் கட்சிகளால் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, சிறிது கெடுதல் இருந்தாலும் நல்லவற்றுக்காக அவற்றைப் பொறுத்துப்போக வேண்டுமென்று எதிராக எந்தக் காரியத்திலும் இறங்கவில்லை என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன்.

நான் உதாரணத்திற்காக உங்களிடம் ஒன்றை வைக்கிறேன். அவசரகாலச் சட்டம் வந்தவுடன் ஏடுகளில் படித்தோம். ஆங்காங்கு தொழிற்சாலைகள் ஒழுங்காக வேலை செய்கின்றன, தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்கள், அலுவலகத்தில் இருக்கின்றவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்கு வருகிறார்கள், கோப்புகள் ஒழுங்காக ஒரு இலாகாவில் இருந்து இன்னொரு இலாகாவிற்கு விரைவாகச் செல்கின்றன. அதுமட்டுமல்ல போக்குவரத்துக்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இப்படியெல்லாம் சொல்லப்பட்டதை நானும் பார்த்துச் சொல்கிறேன். சொல்லப்பட வேண்டிய கருத்தைச் சொல்வது தவறு என்று யாரும் கருதிவிட முடியாது. அப்படி நடந்ததற்காக இனியும் அவசர காலச் சட்டம் வேண்டுமென்று

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன் [1977 ஜூலை 15

யாரும் விரும்பமாட்டார்கள் என்று சொல்கிறேன். எனினும் நாம் இன்னமும் நம் கடமையைச் செய்யக்கூடிய அளவுக்கு பக்குவப்படவில்லையோ என்று ஐயப்படுகிறேன்.

விஷயம் தெரிந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் இங்கே இருக்கிறார்கள். இந்த முறைதான் மக்கள் சுயேச்சை யாரையும் தேர்ந்தெடுத்து அனுப்பவில்லை. இது மிகப் பெரிய நல்ல முன்னேற்றம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஒவ்வொருவரும் ஒரு கட்சிக் கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக இங்கு வந்திருக்கிறார்கள், மக்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எல்லாம் நிச்சயமாகத் தெரியும், நம் கொள்கைகளுக்கு, நம் எண்ணங்களுக்கு அவசர காலச் சட்டம் துணையாக இருக்காது, தடையாக இருக்கும் என்று கருதினால் அதில் குறுக்கிட நான் தயாராயில்லை, அதையும் வரவேற்பேன்

நான் ஒன்றைப் பணிவன்புடன் சொல்லிக்கொள்வேன். எவ்வளவு மாணவர் போராட்டங்கள் இந்த நாலைந்து நாட்களில்? எங்கெங்கு மறியல்கள்? ஆனால், மிகப் பெரிய தொல்லைகளை விளைவித்து அமைதியைக் கெடுக்கிற சூழ்நிலை உருவாகவில்லை என்றாலும் ஆங்காங்கு மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வந்தவுடன் என்ன, என்ன என்று கேட்கவேண்டிய நிலையில் கோரிக்கைகள் விடுக்கிறார்கள்.

நான் பணிவன்போடு சொல்வேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றக்கட்சித் தலைவர்களுக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் சொல்வேன். நான் சில மாணவர்களைச் சந்தித்தேன். அவர்கள் வந்தார்கள். முன்பு பாதி அளவு கட்டணம்தான் இருந்தது. முழுக்கட்டணம் அவசர காலச் சட்டம் இருந்தபோது, அப்போதிருந்த ஆட்சிக்காலத்தில் முழுக் கட்டணமாக ஏற்றிவிட்டார்கள், அதை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டார்கள். நான் உறுதி சொன்னேன். அது மாற்றியமைக்கப்படக் கட்டளை இடப்பட்டுவிட்டது, உங்களுக்கு பாதிக் கட்டணம்தான் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். அவர்களும் மகிழ்ச்சியோடு சென்றார்கள்.



1977 ஜூலை 15] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இதை எல்லாம் நான் சொல்லக் காரணம் எந்த அளவிற்கு மாணவர்களுடைய குறைகளைப் பற்றிக் கவனிக்கிறோம் என்பதையும், மக்களுக்கு தொல்லைகள் வரக்கூடாது என்பதையும், நிதி நிலை அறிக்கையில் சொல்லக் கூடாதவற்றை, வெளியிடக் கூடாதவற்றை, சொல்லமுடியாமல் இருப்பதைச் சொல்லாமல், எதைச் சொல்லலாமோ அதை மட்டும் சொல்கிற அளவிற்கு இப்போது இடைக் காலத்தில் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிற நிலைமையில் நாங்கள் அவற்றைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் சொல்வதற்காகத்தான் இதை வெளியிடுகிறேன்.

அப்படி சரி என்று போன மாணவர்கள் பேசாமல் இருக்கிறார்களா? மாணவர்கள் கோரிக்கைகளை யாரிடம் வைக்கிறார்கள்? நிர்வாகத்தினரிடம், நிர்வாகத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களிடத்தில் ஒப்படைக்கப்படுவதை அவர்கள் கவனிக்கவில்லை என்றால் அல்லது கேட்கவில்லை என்றால் அடுத்த நடவடிக்கை என்ன? அரசினரைச் சந்தித்துக் கேட்கலாம். ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களைச் சந்தித்துக் கேட்கலாம். இல்லை, அரசியல் கட்சி தொடர்புள்ளவர்களாக இருந்தால் அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியைக் கொண்டு கேட்கச் செய்யலாம். ஆனால் நடைபெறுவது என்ன? ஆங்காங்கு கண்ணாடிகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கு தொல்லைகள், வன்முறைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. விடியற்காலை ஐந்து மணியானாலும் நள்ளிரவு பன்னிரண்டு அல்லது ஒரு மணியானாலும் எனக்குத் தொலைபேசியில் செய்திகள் வருகின்றன. ஆங்காங்கு சிறு சிறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன, பின்னால் இருந்து யாரோ தூண்டி விடுகிறார்கள் என்ற தகவல்கள் எனக்குத் தரப்படுகின்றன. நான் அதற்குரிய யோசனையை ஆளுநர் அவர்களிடமும்; சொல்லியிருக்கிறேன், அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன், அலுவலர்களிடமும் சொல்லியிருக்கிறேன்.

இதை இங்கு வெளியிடக் காரணம், எப்படி மாணவர்களை எந்த நேரத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று காத்திருந்து சிலர் அதைச் செயல்படுத்த முனைகிறார்கள் என்றால் ஆட்சியில் இருப்பவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், அதுபற்றிச் சரியான முடிவு எடுக்க வேண்டியவர்கள் எந்தக்

484



கோணத்திலிருந்து அதைப் பார்க்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து சொல்ல மாட்டார்கள் யாரும் என்று கருதுகிறேன்.

தொழிலாளர்கள் பற்றிப் பேசுகிறார்கள். தொழிலில் முடக்கம் ஏற்பட்டிருக்கிறது, தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, அவற்றை எப்போது திறக்கப் போகிறீர்கள், நீங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லவில்லையா, அந்தச் சட்டத்தை எப்போது போடப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். எப்படி சட்டம் போடுவது என்பது தெரியாமல் அவர்கள் கேட்கவில்லை. எந்த நேரத்தில் சட்டம் போட வேண்டும் என்று தெரிந்துதான், என்ன சொல்கிறார்கள் பார்ப்போம், இவர்களை மாற்றுவிக்க முடியுமா என்ற நிலையில் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறார்கள், என்பதை நாம் அறிவோம்.

ஒன்று மட்டும் சொல்வேன். எங்களால், மாநில அரசால் செய்யக்கூடியது அனைத்தையும் நாங்கள் செய்வோம். மத்திய அரசால் செய்யக்கூடியவைகளைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்வோம். வேறு வழி இல்லை என்றால்—இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், சில கொள்கைகளுக்கு நாங்கள் உங்களுக்குத் துணையாக இருப்போம், உங்களுடன் ஒன்றுபட்டிருப்போம் என்று சொன்னதுபோல்—அவர்களது கொள்கைகளில் அவர்கள் நம்புவது உண்மையானால்—அந்தக் கொள்கைகளை நாம் நிறைவேற்றுவதற்காக ஒரு போராட்டத்தில் ஈடுபட வேண்டிய அவசியத்தில், அந்தச் சூழ்நிலை உருவாக்கப்படுமானால், நான் நம்புகிறேன், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எங்கள் பக்கத்தில் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு அதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்.)

மொழிப் பிரச்சினையானாலும் சரி, பொருளாதாரப் பிரச்சினையானாலும் சரி, 16,000 நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்றால் எவ்வளவு செலவாகும் என்பதை நிதி அமைச்சராக இருந்த அனுபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு சில கருத்துக்கள் சொன்னார்கள்.

ஒன்றை நான் சொல்லிக்கொள்ள முடியும். சில எண்ணங்களை வெளியிடும்போது, அதில் பணியாற்றுகின்ற செயலர்களையும் அலுவலர்களையும் கலந்து விவரங்களைப் பரிமாறிக்கொண்டு,



485



அதிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களை வைத்துக்கொண்டு தான், அதன் பிறகு எங்கள் எண்ணங்களையும் அதில் சேர்த்து பரிசீலித்த பிறகுதான் இப்படிப்பட்ட எண்ணங்களை இந்த ஆளுநர் உரையில் வைத்திருக்கின்றோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நியாயவிலைக் கடைகளை இந்த நாட்டில் அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் இன்னும் ஆயிரத்து சொச்சம் கிராமங்களை சேர்த்துக்கொள்ள கூடாதா என்று கேட்டார்கள். அதுபற்றி நிச்சயமாக இந்த அரசு சிந்திக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சூசகமாகச் சொன்னார்கள். 15-ம் தேதி தான் சொல்லுவதாகச் சொன்னேன், அதை நான் சொல்லிவிட்டேன். ஆனால், எனக்கு முன்னால் இருக்கின்ற ராமச்சந்திரன் 15-ம் தேதி சொல்லுவதாகச் சொன்னதை சொல்லுவதற்கு அவர்கள் தயாராய் விட்டார் என்று நான் கருதுகிறேன் என்று அவர்கள் சொல்லாமல் சொன்னதை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை.

அவர்களே, சொன்னார்கள், என்னைப்பற்றி முதலமைச்சருக்கும் தெரியும், அவரைப்பற்றி எனக்கும் தெரியும் என்று அவர் சொன்னதைத்தான் நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னைப்பற்றி அவர் புரிந்து கொண்டிருக்கிறார், அவரைப்பற்றியும் நான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். ஒருவருக்கொருவர் இடையில் கொஞ்ச காலம் பிரிந்திருந்தோம் என்றாலும் ஒருவருக்கொருவர் புரியாமல் இல்லை. இங்கு கனம் உமாநாத் அவர்கள் கூட சொன்னார்கள், ஏன் ஒருவருக்கொருவர் பெயரைக் கூடச் சொல்லுவதில்லை என்று கேட்டார். பெயர் சொல்லுவது மட்டுமல்ல ஒருவருக்கொருவர் ஆண்டவனே என்று கூப்பிட்டுக் கொள்வது உண்டு. பெயரைச் சொல்வது முக்கியமல்ல, பொதுத் தன்மையில், பொதுப் பிரச்சினையில், மொழிப்பிரச்சினை போன்ற பிரச்சினைகளில், நாங்கள் நிச்சயமாக அண்ணா அவர்களின் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருப்போம் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு இதன் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்)

அப்படிப்பட்ட நிலைமையில், படியரிசித் திட்டத்தைப்பற்றி கூறுவதற்கு நான் மறந்துவிடவில்லை, வெட்கப்படவும் இல்லை, விட்டுவிடவும் இல்லை. எங்கள் தேர்தல் அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறேன். அதில் எங்குமே படியரிசித் திட்டத்தைக்

கொண்டுவருவோம் என்று நாங்கள் சொல்லியது கிடையாது. வானொலியிலும் சரி, டி.வி. யிலும் சரி, என்ன சொல்லப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். படியரிசித் திட்டத்தைப்பற்றி அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்குச் சொன்னார்கள். கொண்டு வருவேன் என்று சொன்னதை அண்ணா அவர்கள் நிறைவேற்றும் வரையிலும், தானும் தனது நண்பர்களும் சம்பளம் வாங்கிக் கொள்ளாமல் காத்திருந்து, ஒன்றிரண்டு மாவட்டங்களில் அமல் நடத்திய பின்னால் தான் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டார்கள், என்பதை நான் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசியிருக்கிறேன்.

படியரிசித் திட்டத்தை எப்படிக் கொண்டு வருவது அரசின் கையில் முழு கொள்முதலும் இருந்தாக வேண்டும், எல்லா விநியோகமும் அரசின் கையில் இருந்தாக வேண்டும். இந்த நிலைமை ஏற்பட்ட பிறகு, இதைப்பற்றி யோசிக்க முடியும். கொள்முதல் செய்கின்ற நிலைமை ஆட்சியாளர் கையில் இருக்க வேண்டும். இதற்கான திட்டங்களை நாம் யோசனை செய்யலாம். இரண்டு மாவட்டங்களில் தொடர்ந்து நடத்துவதாக இருந்தாலும் 15 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு அப்துல் லத்திப் அவர்கள் இதில் எத்தனை செலவானாலும் பரவாயில்லை, படியரிசித் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். இதற்காக கணக்கிட்டுப் பார்த்தோம். கணக்கிட்டுப் பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லை. இதிலுள்ள விவரங்களைத் தெரிந்து கொள்வதிலும் எந்தவித தவறும் இல்லை. அந்த வகையில் பார்த்தபோது, மூன்று, நான்கு மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) மட்டும் படியரிசித் திட்டத்தைக் கொண்டு வருவதாக இருந்தால், சற்றேறக்குறைய ஆண்டுக்கு 72 கோடி ரூபாய் நஷ்டமாகும். இந்த நிலைமையை நாங்கள் உணர்ந்திருப்பதின் விளைவாக, நாங்கள் சொல்லாத ஒன்றைச் சொல்லியதாகக் குற்றம் சுமத்துவதற்காகச் சொல்லுகின்றார்கள். இதில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புவது இடைத்தரகர்கள் இடையில் இல்லாமல் இருந்தால், அரசே கொள்முதல் செய்வதாக இருந்தால், அரசே விநியோகம் செய்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், அந்த அளவுக்குத் தேவையான உபரி ஏற்பட்டு, அப்படிப்பட்ட நிலையில் தேவைப்படுகின்ற பொருட்கள் உற்பத்தியானால் நாங்களும் நீங்களும் சேர்ந்தே இதை அமலாக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன்.





ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்வேன், நமக்கென்று சில கடமைகள் உண்டு. மக்கள் அந்தக் கடமைகளை நம் மீது சுமத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டு, அந்த உணர்வோடு நாம் அனைவரும் செயல்படுவதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி உண்டு. அதோடு இங்கே ஊழல், ஊழல் என்று பேசுகிறார்கள், லஞ்சம் லஞ்சம் என்று பேசுகிறார்கள். குற்றச்சாட்டை எடுத்துக் கூறினார்கள் என்னவென்று கேட்காமலேயே கூட வெளியிட்டு விட்டார்களே என்று சொன்னார்கள். கவர்னர் கே. கே. ஷா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு மிக மிக நெருங்கிய நண்பராக இருந்தார் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

(பிற்பகல் 12-40)

அரசியல் இப்படியும் போகும், அப்படியும் போகும் என்று நான் இதுவரையில் நினைத்ததில்லை. நிலைமைகளுக்கான போராட்டங்கள், கொள்கைகளுக்கான போராட்டங்கள் ஆகியவைகளில் நம்பிக்கை வைத்துக்கொண்டு, போராடுகின்றவர்கள் நாட்டிலே இருக்கலாம். அவர்கள் நண்பர்களாக இருக்க முடியாவிட்டாலும், விரோதிகளாக இருக்கமாட்டார்கள். அப்படிக் கொள்கைப் போராட்டங்களை நடத்தி, அப்போராட்டங்களை மக்களிடையே வைத்து, மக்களுடைய அன்பைப் பெறுவதுதான் நாகரிகமான அரசியல் என்பதைத்தான் நான் இதுவரைக் கேள்விப்பட்டிருந்தேன்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிறகு, எது நடக்கும் எது நடக்காது என்று சொல்ல முடியாத அளவிற்கு இருக்கிறது. தமிழக முன்னாள் ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள், எதையும் சொல்லாமல் வைத்துவிட்டு, மறுநாள் குற்றம் சுமத்தினார்கள் என்பதைக் கேட்கும்போது, உண்மையிலேயே வேதனையாகத்தான் இருக்கிறது.

ஆனால், அதோடுமட்டும் விட்டுவிடாமல், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். உண்மையான நண்பர்களாக இருப்பவர்கள் நண்பர்கள் செய்யும் தவறை இடித்துக் கூறுபவர்களாக இருப்பார்கள். போலி நண்பர்கள் இப்படி இடித்துக் கூற மாட்டார்கள். புகழ்ந்து கொண்டே, அடியில் குழிதோண்டுபவர்களாக இருப்பார்கள். 'செய்கின்ற தவறை இடித்துக் கேட்கின்றவர்கள் தான் நல்லவர்கள்' என்பதை என் தாய் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள், போலி நண்பர்கள் சிரிக்கச்

சிரிக்கப் பேசி, நம்மைப் புகழ்ந்து கொண்டிருப்பார்கள். உண்மையான நண்பர்கள் செய்கின்ற தவறைத் துணிவுடன் இடித்துரைப்பார்கள். அப்போது இப்படி நம் நண்பர் கூறுகின்றாரே என்று ஆத்திரப்படாமல், கோபப்படாமல், அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். உனக்கு அந்தக் கருத்து பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் சிந்தித்தாவது பார்க்க வேண்டும் என்றெல்லாம் என் தாய் எனக்கு அடிக்கடி சொல்லித் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் என்கிற காரணத்தினாலோ, எதிர் வரிசையிலே இருக்கின்றவர்கள் என்கிற காரணத்தினாலோ, நீங்கள் சொல்லும் திட்டங்களை, லட்சியங்களை, கருத்துக்களை, கொள்கைகளைப் பற்றி, நீங்கள் பேசிய பேச்சுக்களைப் பற்றி நம்பிக்கை வைத்து, அவர்கள் இடித்துக் கூறியிருந்தாலும், அவைகளை நான் நிச்சயமாக சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வேன். (பலத்த ஆரவாரம்) இதிலே கொஞ்சம்கூடக் கோபப்பட மாட்டேன், வருத்தப்பட மாட்டேன் என்பதை மட்டும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

இதை நான் முதலிலேயே இந்த மாமன்றத்திலே சொன்னேன். நீங்கள் என்ன சொன்னாலும், எனக்குக் கோபம் வராது. ஏன்? நீங்கள் சொல்லக்கூடிய நூற்றில், ஒன்று நன்மை பயக்கக்கூடியதாக இருக்கலாம். அதை ஏற்றுக் கொள்வதற்கு நான் கடமைப்பட்டவன் ஆவேன். அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தனக்குள்ள அனுபவத்தின் காரணமாக, இந்த அவையிலே சில கருத்துக்களையும், புள்ளி விவரக் கணக்குகளையும் எடுத்துச் சொன்னார்கள். இப்படித்தான் இருக்க வேண்டும். அவைகளையெல்லாம் நான் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

இந்த நாட்டிலே பற்றாக்குறை எங்கே இருந்தது? எந்த வழியில் இது உருவாக்கப்பட்டது என்பதை முயன்றால் கண்டு பிடித்து விடமுடியும். கண்டுபிடிக்க முடியாத காரியமல்ல. யார் இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள், அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது என்பதுதான் பிரச்சினை. நாம் வெவ்வேறு கட்சிகளாகப் பிரிந்திருக்கின்ற காரணத்தினாலே, ஒவ்வொரு கொள்கைகளை வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இவர் அங்கே இல்லை என்றால் இங்கேயும், இங்கே இல்லை என்றால்





அங்கேயும், யாரைக் கை வைத்தால், யாருக்கு வருத்தம் வரும் என்பது போன்ற நிலைமைகளால் அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

ஒன்றை மட்டும் நான் அமைச்சரவையின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஆங்காங்கே "மக்கள் குழு"-வை நாங்கள் அமைத்து நிச்சயமாக மக்களுடைய கண்காணிப்பை ஆங்காங்கே ஏற்படுத்தி, இப்படிப்பட்ட குற்றம், தவறுகள் செய்பவர்கள்மீது, அவ்வப்போது குற்றஞ் சாட்டி, தண்டனை கொடுக்கக்கூடிய வகையில் செயல்பட வேண்டுமென்கின்ற ஆசை எனக்கு உண்டு.

நான் இந்த நாட்டு மக்களைச் சந்திக்கும் போதெல்லாம், அவர்கள் என்னிடம் கொடுக்கக்கூடிய ஆதாரங்கள், புள்ளி விவரங்கள், இதோ பாருங்கள் மாளிகை, இதோ பாருங்கள் கூட கோபுரங்கள், அவைகள் எல்லாம் எவ்வாறு சரிந்து கிடக்கின்றன, இதோ பாருங்கள் இந்தத் தொழிற்சாலையை, இது எவ்வளவு மோசமாக வைக்கப்பட்டிருக்கின்றன, இந்தத் தொழிற்சாலைக்கு வாங்கிய பணத்தை வேறு தொழிற்சாலைக்குப் பயன்படுத்தியதால், இந்தத் தொழிற்சாலை மூடுகின்ற அளவுக்கு உள்ளது என்றெல்லாம் எடுத்துச் சொல்வார்கள்.

அதே எண்ணத்தோடு அலுவலகத்திலே உட்கார்ந்து செயலாளரைக் கூப்பிட்டு விசாரிக்கும்போது 100-க்கு 99 உண்மையாகிவிடுகிறது என்பதை நான் இந்தச் சில நாட்களிலேயே கண்டிருக்கிறேன்.

இதையெல்லாம் சொல்லக் காரணம், திரு. உமாநாத் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள், மூடப்பட்ட ஆலைகள் எப்போது திறக்கப்படும் என்று கேட்கிறார்கள். ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அமைச்சரவையைப் பொறுத்த வரை எந்தெந்த வகையில் அவைகளைச் செய்வதற்கு எங்களால் நடவடிக்கை எடுக்க முடியுமோ அதிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல. இன்னொன்றையும் சொல்வேன். "நிர்வாகத்திலே தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்; அதை நிறைவேற்ற வேண்டும்" என்றார்கள். தொழிலாளர்களே தொழிற்சாலையை நடத்த வேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள தொழிற்சங்க அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் துணிவு கொள்ள வேண்டும்.

தொழிலாளர்கள் ஒரு ஆலையை நிர்வகிப்பது மட்டுமல்ல, அதற்கு உரிமையாளராகக்கூடிய சூழ்நிலை வரவேண்டுமென்பது தான் எங்களுடைய ஆசை. அரசு ஆலையை எடுத்துக்கொள் ளட்டும், அரசே நடத்தட்டும் என்று சொல்லுவதைவிட, "நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். நாங்கள் நடத்துகிறோம்" என்று அந்தந்த ஆலைத் தொழிலாளர்கள் முன்வருவார்களானால் அதை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்று, எந்தெந்த வகையில் உதவி புரிய முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் நிச்சயமாக இந்த அரசு தொழிலாளர் வர்க்கத்திற்கு, ஆக்கம் தரும் என்பதை உத்தரவாதமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுபோலவே ஊழலைப் பற்றிப் பேசினால் சிலருக்குக் கோபம்வர நியாயம் உண்டு. தவறு செய்யாதவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள் என்று சொல்லலாம். அதிகமாக நான் சொல்லக்கூடாது. இத்தனை பைல்களையும் நான் இங்கே கொண்டு வந்திருப்பது இதுபோன்ற குற்றச் சாட்டுக்களைப் பற்றிச் சொல்ல வேண்டு மென்ற நிலையில்தான். ஆனால் நேரம் இல்லாத காரணத்தால் அறநிலையத்தைப் பற்றி, அந்த இலாகாவைப் பற்றி மட்டும் ஒன்றிரண்டாவது சொல்லலாம் என்றால் சொல்ல மனம் வரவில்லை; சொல்லாமலும் இருக்க முடியவில்லை. எத்தனை நண்பர்களுடைய பெயர்கள், என்னால் மதிக்கப்படக்கூடியவர்கள் பெயர்கள் அதிலே குறிப்பிடப் பட்டிருக்கின்றன என்பது என்னும்போது— விசாரணைக்குப் பிறகு சொல்லுவது நியாயமாக இருக்குமோ என்று கூட இன்னமும் நான் கருதுகிறேன்—நான் அறிந்துள்ள எத்தனையோ நல்ல நண்பர்கள் பெயர்கள் இருக்கின்றன. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது எனக்கு நெருங்கிய அண்ணன் தம்பிகளைப் போல் இருந்தவர்கள், தொண்டர்கள், தியாகம் செய்தவர்கள், நண்பர்கள், பொதுவாகப் பெரிய மனிதர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் பெயர்கள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றை நான் சொல்லக்காரணம்—அறநிலையத்துறையில் ஆங்காங்கு என்னென்ன நடந்திருக்கின்றன, சிலைகள் எப்படி எப்படி காணாமல் போயிருக்கின்றன என்பதைப் பற்றி இங்கே இப்பொழுதே எடுத்துப் பேசவேண்டுமென்றால் நேரம் காணாமல் போகும் என்பதோடு அதைப் பற்றி வழக்குகள் இருப்பதால் சொல்ல விரும்பவில்லை. இவைகளை எல்லாம் கண்காணிக்கக்





கூடிய மிகப் பெரிய பொறுப்பை மக்கள் நமக்குத் தந்திருக் கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'எங்களுக்கு' என்று சொல்லாமல் 'நமக்கு' என்று சொன்ன தற்குக் காரணம், ஆட்சியிலே இருப்பவர்கள் மட்டுந்தான் இதற்குப் பொறுப்பானவர்கள் என்று யாரும் கருதிவிட வேண்டாம்; உங்களுக்கும் அதிலே பங்குண்டு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ மெஜாரிடியைப் பற்றி, பெரும்பான்மையைப் பற்றி மதிப்பிற்குரிய, நான் அன்னாரும் மதிக்கின்ற புலவர் மாண்புமிகு கோவிந்தன் அவர்கள் 'நவக்கிரகம்' என்று சொல்லி ஒரு கிரகம் இன்னொரு கிரகத்திற்கு மாறினால் என்னாகும் என்று கேட்டார்கள். ஐந்து கிரகம் ஒன்றாகச் சேரும் போதே தமிழ்நாடு தமிழ்நாடாகத் தான் இருந்தது. ஆட்சியைப் பற்றி, ஆட்சியிலிருந்தவர்கள் பற்றி வெளியே இருந்த ஜோதிடர்கள் நாலைந்து கிரகங்கள் சேருவதால் என்ன ஆபத்து வருமோ, இந்த நாட்டின் ஆட்சி என்ன ஆகுமோ என்றெல்லாம் சொன்னார்கள். அப்போதே பெரிய மாற்றம் ஒன்றும் காணவில்லை. காமராஜர் அவர்கள் அதற்குப் பிறகும் பல ஆண்டு காலம் முதலமைச்சராக ஆண்டு கொண்டிருந்தார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். நவக்கிரகம் என்றால் ஒன்பது கிரகங்கள். அது அதற்குள்ளேயேதான் சுற்றுமே தவிர, வெளியே போய்ச் சுற்றாது. ஆகவே, எனது மதிப்பிற்குரிய அண்ணனுக்கு, மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களுக்கு—சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்; "இது அங்கே போய்விட்டால் என்ன ஆகும்?" என்ற அச்சம் உங்களுக்கு வேண்டாம், அந்த அச்சத்தை ஏற்படுத்தித் தர மாட்டோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, நான் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். நான் அப்போதே சொன்னேன். ஒரு கட்சி சார்பில் நின்று வெற்றிபெற்றவர்கள், அந்தக் கட்சியை விட்டு வேறு கட்சிக்குப் போகக்கூடாது, அப்படி மாறுவதைத் தடுப்பதற்கு சட்டத்திலே வழிசெய்ய வேண்டுமென்று சொன்னேன். மாறக்கூடாது என்ற நல்ல

எண்ணத்தின் அடிப்படையிலே தான் நான் தெரிவித்தேன் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே சொன்னார் என்றாலும் வார்த்தையிலே, "மாறிவிட்டால் என்ன ஆகும்" என்று சொன்னார்கள். நீங்கள் எல்லாம் தெரிவித்ததைப்போல் அடிப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர வழியிருந்தால் அதற்குத் தயாராக இருந்தால் நிச்சயமாக கொண்டுவரலாம். . . .

**திரு. மு. கருணாநிதி:** அங்கேதான் கொண்டுவரவேண்டும், இங்கே கொண்டு வரமுடியாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** 'இருந்தால்' என்று தான் சொன்னேன். தேர்தல் வருவதற்கு முன்பெல்லாம் சொன்னார்கள், இப்படி யெல்லாம் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று. இப்போது அங்கெல்லாம் கட்சிமாறுவதைத் தடுப்பதற்குப் பதிலாக மனமாற்றம் ஏற்பட்டுவிடாமல் தடை செய்யக்கூடிய நாட்களாக இருக்கின்றன.

மதுவிலக்கைப்பற்றி நான் இங்கே சொல்லியாக வேண்டும். காவல் துறையினர் இதிலே எந்த அளவிற்குப் பங்குகொண்டிருக்கிறார்கள் என்று இந்த மாமன்றத்திலே பலர் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதை நான் அலட்சியத்தோடு கவனிக்காமல் இருந்துவிட்டேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். நீங்கள் சொன்ன வார்த்தைகளை எழுத்துக்கு எழுத்து என்னுடைய மனதில் பதியவைத்துக்கொண்டிருக்கிறேன், கருத்துக்களையும் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கடந்தகால அனுபவத்தில் சிலர் சில பழக்கங்களுக்கு அடிமைப்பட்டுவிட்டதன் காரணமாக கையூட்டுப் பெறுவதிலோ, தவறுசெய்தவர்களைத் தண்டிப்பதிலோ, அதிகாரி என்று சொல்லிக் கொள்வதிலோ பழக்கம் ஏற்படுவது பழக்கதோஷத்தில் இருந்து இருக்கலாம். அது மாறுவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். கைவிலங்கு பூட்டி அழைத்துச் சென்றார்கள் என்று சொன்னார்கள். இது மகிழ்ச்சிதரக்கூடியது அல்ல. ஆனால் மதுவிலக்கைப்



பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில், எங்கள் அமைச்சரவையைப் பொறுத்தவரையில், எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இதிலே கண்டிப்பான நிலைமையை மேற்கொள்வதாக இருக்கிறோம். சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மிகப் பெரிய தண்டனை அளிக்கக்கூடிய சட்டம் இருந்தாக வேண்டும். அதைப் போலவே சாராயம் விற்பவர்களையும் கடுமையாகத் தண்டிக்கக் கூடிய சட்டம் இருந்தாக வேண்டும். தவறு செய்யாதவர்கள் தவறு செய்கிறார்கள், நல்லவர்கள்கூட சில சமயங்களிலே தவறு செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது.

குடிப்பழக்கத்தைப் பிரச்சாரத்தின் மூலமாகக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்திவிடலாம். அதே நேரத்திலே மதுவிலக்கு இந்த நாட்டிலே சரியாகச் செயல்படவேண்டுமென்றால் முதலில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படக்கூடிய முறையிலே ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும். இப்போதுள்ள நிலைமையில் நீதிபதிகள் சரியான தண்டனை கொடுப்பதில்லை என்று என்னிடத்திலே சொல்லப் பட்டது. இரண்டாயிரம் ரூபாய் அபராதம் போடலாம் என்றால் 200 ரூபாய், 300 ரூபாய்தான் அபராதம் விதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள், அந்தச் சட்டத்தை மாற்றித்தான் இதற்கு வழி காணவேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக அதை அரசு செய்யும்.

எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய தினம் அதைப்பற்றிப் பேசாவிட்டாலும் இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டார்கள், மதுவிலக்கை ஒத்திவைப்பதை நான் ஆதரித்தேன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவிலே அதை நான் ஆதரித்தேன் என்று சொன்னார்கள். அவருக்கு ஒன்று சொல்வேன். இந்த மன்றத்திலே நாம் இருவரும் பேசமுடியாத பல அரசியல் பிரச்னைகளைப் பேசிமுடித்தவைகளை எல்லாம் இங்கே சொல்ல முடியாவிட்டாலும், மதுவிலக்கு ஒத்திவைப்பைக் கொண்டு வரா விட்டால் அண்ணாவால் அமைக்கப்பட்ட அரசைக் காப்பாற்ற முடியாத நிலைமை இருக்குமானால் இடைக்காலத்தில், ஆட்சியிலே இருக்கின்ற முதலமைச்சர் விரும்பினால் வேறு வழியில்லை என்று கருதுவார்களானால் அவர் இஷ்டத்திற்குக் கொண்டுவரட்டும் என்று சொன்னபோது, மதுவிலக்குப் பிரச்சாரத்தை உடனடியாகத் தொடங்கியாக வேண்டும், தொடங்கப்பட வேண்டும் என்று சொல்லி, என்னை அந்தக் குழுவிற்குத் தலைவராக, இதோ

என் முன்னால் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரவர்களே நியமித்தார்கள் என்பதையும், அது அமலுக்கு வரும் நேரத்தில் அண்ணா சாலையிலிருந்து நான் புறப்பட்டு சில நண்பர்களோடு அண்ணா சமாதி அருகே சென்று அந்தச் சதுக்கத்திலே நாங்கள் உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம் என்பதையும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அப்படிச் சொல்கின்ற நேரத்தில், மதுவிலக்கை ரத்து செய்வதை நான் முழுக்க, முழுக்க எதிர்ப்பவன் என்றாலும், அண்ணாவால் ஒப்படைக்கப்பட்ட ஒரு கட்சி இருக்கும்பொழுது அந்தக் கட்சி இந்த ஒரு காரணத்திற்காக அழிந்துபட்டு விடக் கூடாது, மற்றைய நல்ல தன்மைகள், சமதர்ம எண்ணங்கள், சமூக சீர்திருத்தங்கள், விவசாயிகளுக்குப் பாதுகாப்பு, மின்சார உற்பத்தி, அதற்காக என்ன செய்ய வேண்டுமென்பதற்காகப் பாடு படுவது, மொழிப் பிரச்னை இவையனைத்தையும் உள்ளிட்ட சமுதாய சீர்திருத்தத்தில் அக்கறை கொண்டு, சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட வேண்டுமென்று கருதுகிற கட்சி அழிந்து விடக்கூடாது என்பதற்காகப் பலகாலம் என்றில்லாமல் இந்த அளவில், சில நாட்களுக்கு, சில மாதங்களுக்கு, ஓரளவிற்கு மாற்றி வைக்கலாம் என்ற நிலைமையில்தான் அதை ஒப்புக்கொண்டேன் என்பதை, இந்த அடிப்படையில்தான் ஒப்புக்கொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மக்கள் மத்தியில் குடிப் பழக்கம் கூடாது என்பதைப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்பதற்காக குழு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது என்பதையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் மது அருந்துகின்ற பழக்கத்தை அறவே ஒழித்தால்தான் இந்த நாட்டில் நல்ல காரியங்கள் செயல்பட முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன். எத்தனையோ தொழிலாளர்கள், ஊக்கத்தோடு உழைக்கின்ற தொழிலாளர்கள், அதுபோல விஞ்ஞான அறிவு படைத்த மேதைகள், அதுபோல பட்டம் பெற்றவர்கள், அதுபோலக் கவியிலே உள்ளவர்கள், இவர்களையெல்லாம் இந்த மது இப்பொழுது தாக்கியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். சிலர் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். பர்மிட் கொடுக்க மாட்டோம், திரும்பப் பெற்றுக்கொள்வோம், ரத்து செய்வோம் என்று சொன்னால் அதற்காக வழக்காடுவோம் என்று சொல்லு





கின்ற அளவிற்கு நாகரிகம் அந்தப் பக்கத்தில் போய்க்கொண் டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். தமிழ்ப் பண்பு, தமிழ்க் கலாச்சாரம், தமிழர்களுக்கு என்று இருக்கின்ற பாரம்பர்யம், இவைகள் இருக்கின்றன என்று பெருமை கொண்டிருக்கிறோம். நாம் இந்த மதுவை எதிர்த்துப் போராடி நிச்சயமாக அந்த மதுவை ஒழித்துவிட முடியும். அதை ஒழிக்க வேண்டுமென் பதற்காக இந்த மாமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும், தலைவர்களும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக்கொள் கிறேன். அத்தகைய வாய்ப்பு இன்றையதினம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்று கருதுகிறேன்.

நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். 15-ஆம் தேதியன்று எதிர்க்கட்சித் தலைவரும் நானும் பேசப்போகிறோம் என்ற வகையில் நாளையதினம் எத்தனை பத்திரிகைகளில் எந்தெந்த விதத்தில் தலைப்பிட்டு எவ்வளவு அதிகமாக விற்பனையாகப் போகின்றன என்பதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றம் அடையப் போகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்வேன். ஏதோ பெரிய தகராறுகள் வரும், போராட்டங்கள் கிளம்பும், ஒருவரையொருவர் கிண்டல் செய்வார்கள், ஒருவர் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் போகப் போகிறது. ஆகவே குழியைப் பிடித்துக்கொண்டிருப்பார்கள் (சிரிப்பு) என்று சொல்லும் அளவிற்கு பசல்களை மற்றவர்கள் பரப்பி வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள வேண்டிய கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆகவே, அவர்கள் நாளையதினம் எப்படிப்பட்ட ஏமாற்றத்தை அடையப்போ கிறார்கள். இந்த [illegible] தன்னுடைய பொறுப்பை உணர்ந்து, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, இங்கே வர முடியாமல் வெளியே இருக்கின்ற ஒருசிலர், இங்கே நம்பிக்கையோடு [illegible] யாராக இருந்தாலும் அவர்களுக்கு, பொதுவாக நேர்மையான வழியில் செயல்படும் என்பதை நான் சொல்லி [illegible] ஆதரவு கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை இங்கே உறுதிப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அமரர் அண்ணா அவர்கள் சொன்ன [illegible] எதிர்க்கட்சித் தலைவர் [illegible] முன்றல் பேரியதை இங்கே நான் வைக்க விரும்புகிறேன், "ஒரு

சில உறுப்பினர்கள் கவர்னர் உரையில் இன்னின்ன இல்லை என்று குறிப்பிட்டு, இதில் தொழிலாளர்களைப் பற்றி இல்லை, இதில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி இல்லை, பிற்படுத்தப்பட்ட மக்களைப் பற்றி இல்லை, கைத்தறி நெசவாளர்களைப் பற்றி இல்லை, இப்படி ஒரு உரையைத் தயாரிப்பதா, கவர்னர் அவர்கள் இவைகளை மறந்து விட்டாரா என்றெல்லாம் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-00)

"கவர்னர் உரையில் விடுபட்டுப்போன விஷயங்களெல்லாம் சர்க்காருடைய நினைவிலிருந்து விடுபட்டுப் போனது என்று பொருள் அல்ல. அவைகளெல்லாம் சர்க்காருடைய நினைவில் இருந்தாலும் இரண்டொரு விஷயங்களைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம் மற்ற விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் தயாரிக்கப்பட்டதே தவிர, அதில் சில விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படாததால் அவைகளில் சர்க்காருக்கு நாட்டம் இல்லையென்று யாரும் அவசரப்பட்டு முடிவுக்கு வரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்." என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்களுடைய உரையிலே ஆளுநர் உரைக்குப் பதில் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை அப்படியே உங்கள் முன் வைக்கவிரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் சிலவற்றைப் பற்றி நாங்கள் சொல்லாமல் போய் விட்டோமானால் அவைகளை எல்லாம் நாங்கள் மறந்து விட்டோம் என்று யாரும் தயவுசெய்து கருதிட வேண்டாம். தாழ்த்தப்பட்டோர்களைப் பற்றி, பிற்படுத்தப்பட்டோர்களைப் பற்றி, மலைவாழ் மக்களைப் பற்றி, தொழிலாளிகளைப் பற்றி, வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்பவர்களைப் பற்றி, கல்வியைப் பற்றி, இவைகள் அனைத்தையும், நாங்கள் சொல்ல மறந்து விட்ட மற்றவற்றையும் நாங்கள் நிச்சயமாகச் செயல்படுத்த ஆசைப்படுகிறோம். அவைகளைப் பற்றி, நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் கூறப்படும் என்று கூறி, இந்த அளவிற்கு அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி, புதிதாக வந்த அமைச்சரவைக்கு உதவி செய்கின்ற வகையில் நாங்கள் தவறான பாதையில் போய்விடாமல் எங்களை நேர்வழியிலே அழைத்துச் செல்ல விரும்புகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், நல்லவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு, சில இளைஞர்கள் ஏதாவது பேசி இருப்பார்களானால், அவைக் குறிப்பிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும் என்





மனதிலே இடம் பெறாது என்று சொல்லி, இங்கே திருத்தங்கள் கொண்டு வந்திருப்பவர்கள் தயவுசெய்து வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டு நான் அமர்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு முதல்வர் மாநில அதிகாரத்திற்கு உட்பட்டவற்றைச் செய்வேன் என்று சொன்னார். மூன்றாவது பே கமிஷன் அமைப்பது மாநில அதிகாரத்திற்கு உட்பட்டதே, அதுபற்றி ஒன்றும் சொல்லவில்லையே. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் சொல்லாதது மறந்துவிட்டதல்ல, நாங்கள் நீக்கி வைத்து விட்டதல்ல என்று மாத்திரம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. உமாநாத்: மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பற்றி நீங்கள் முன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறோமே, அதுபற்றி ஸ்தூலமாகத் தெரிவித்தால் நல்லது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே நாங்கள் அதுபற்றி குறிப்பிட்டிருக்கிறோம். அந்த அளவில் நீங்கள் அதுபற்றி படித்துப்பார்த்து, என்னோடு விவாதிக்கலாம். எங்களோடு ஒத்துழைக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திருத்தங்கள் வலியுறுத்தப்படவில்லை.

திருவாளர்கள் மா. மணிமாறன், வி. கே. கோதண்டராமன், என். கிட்டப்பா, எஸ். கணேசன், தாழை மு. கருணாநிதி, என். வரதராஜன், எம். அம்பிகாபதி, கே. சுப்ரவேலு, ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் முன்மொழிந்த கீழ்க்கண்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

"ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரையைத் தெரிவிக்க வேண்டும் :—

'1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7 ஆம் தேதி அன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்கள் ஆவர்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. அலுவல் ஆய்வுக்குழுவில் தீர்மானித்தபடி எல்லா அலுவல்களும் நிறைவேறிவிட்டபடியால், பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும், 23-7-1977, சனிக்கிழமையன்று காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.04 மணி அளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

### 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### A. Statutory Rule and Orders.

7. The Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1976 [Laid on the Table of the House in pursuance of sub-section (2) of section 8 of the Representation of People Act, 1950.]

(The Delimitation of Parliamentary and Assembly Constituencies Order No. 31 of 1976 relating to dilimitation of Parliamentary and Assembly constituencies iin the State of Tmil Naidu was circulated to Members on 9th January 1975 and on entry made in the Agnda for 21st February 1975.)

@ 8. The first Annual Report of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1973-74. (Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. *Reports, Notifications and other papers.*

@ Kept in the Legislative Library with reference to the proviso to Rule 2(5) of The Tamil Nadu Legislative Assembly Rules.

Nil.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-16.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street,

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.